


# ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸரின்
# பாகவத 10ம் ஸ்கந்தம்
# பூர்வார்த்த கீர்த்தனைகள்
## (தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)

தமிழில்

**'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்**
89044 58276. haridasa.vijayam@gmail.com
jagannathakesava.blogspot.com

# ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸரின்
# பாகவத 10ம் ஸ்கந்தம்
# பூர்வார்த்த கீர்த்தனைகள்
**(தமிழில் அர்த்த விளக்கங்களுடன்)**

ஸ்ரீஹரிவாயு குருகளின் அருளால் பராபவ நாம ஸம்வத்ஸர தக்ஷிணாயன பாத்ரபத கிருஷ்ண த்வாதசி 23-09-2026 வெள்ளிக்கிழமை ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸரின் ஆராதனை நாளன்று வெளியிடப்பட்டது.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து

**தமிழில் அர்த்தங்களை எழுதி வெளியிட்டவர்:**

‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
பெங்களூரு
Ph: 89044 58276
haridasa.vijayam@gmail.com

# பொருளடக்கம்

முன்னுரை 1 - ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸர் - 6
முன்னுரை 2 - பாகவத 10ம் ஸ்கந்தம் - 9

## 67 கீர்த்தனைகளின் பட்டியல்


| # | பாடல் வரி | 10ம் ஸ்கந்தத்தில், அத்தியாய # | பக்கம்# |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீதேவியாள்த | 1 | 8 |
| 2 | ஸ்ரோதவ்யவு இதே | 1 | 8 |
| 3 | ஸ்ரீகிருஷ்ணன லீலாவதார | 1 | 10 |
| 4 | த்யுஸ்த நிம்மங்கிரஜ | 1 & 2 | 12 |
| 5 | ஸ்ரீவல்லபனந்திஸித | 3 | 14 |
| 6 | அந்தரிக்ஷாத்புத நோடித | 4 | 16 |
| 7 | கெணகி கெட்டளு பூதனியு | 6 | 21 |
| 8 | புத்ரங்கே எரடாரனேய தின | 7 | 22 |
| 9 | ரங்ககெ நமோ | 7 | 24 |
| 10 | ஏதத்பூர்வதி மதுரெலி | 8 | 26 |
| 11 | ஈ தம்மனெ பரபொம்ம | 8 | 27 |
| 12 | லலிதலீலெய தோருவெனெந்து | 8 | 29 |
| 13 | கரசரணங்கள ஸ்பருஶதி | 11 | 30 |
| 14 | ஜோஜோ நந்தன்னகந்த | 11 | 33 |
| 15 | த்யானவிது மௌனி த்யானவிது | 11 | 34 |
| 16 | நந்தன்னர்தாங்கிய பளிகெ | 11 | 36 |
| 17 | தாளெலாரெவம்மா உபடளவ | 11 | 37 |
| 18 | லீலெ கன ஹரிலீலெ | 8 | 42 |
| 19 | மொஸரு கடெதளம்ம | 11 | 44 |
| 20 | ரங்க கோகுலதொளகாடித | 11 | 45 |
| 21 | ஸாரி ஸாரிகெ கோவிந்த | 10 | 47 |
| 22 | தெரத மேலேயிந்தலி | 11 | 48 |
| 23 | பாஹி கோவிந்த பாஹி | 11 | 49 |
| 24 | ஹரி ஹரி கோவிந்த கள | 15 | 51 |
| 25 | ஸ்வர்ககெ ஸம வ்ருந்தாவனவு | 15 | 53 |
| 26 | தன்ய தன்ய யமுனெ | 15 | 56 |
| 27 | ஸ்ரீமாதவ பலராமர | 15 | 59 |
| 28 | காளியபணிமதஹரண | 16, 17 | 62 |
| 29 | கால கால துரித | 18 | 68 |
| 30 | நாகேஶன வனவீ | 18 | 69 |

| | | | |
|---|---|---|---|
| 31 | வ்ருஷ்ணிவர்ய க்ருஷ்ணனங்க்ரி | 20 | 74 |
| 32 | வேணுகோபாலன வேணு | 21 | 78 |
| 33 | ஹைமந்தத ப்ரதமமாஸதி | 22 | 80 |
| 34 | வர்ணிப கவிகளிந்த | 22 | 83 |
| 35 | மஹா பாஹுஶாலி கேளு | 23 | 85 |
| 36 | நித்யோத்ஸவ புண்யஸங்குல | 24, 25 | 88 |
| 37 | ஹரிப்ரவணரு கோபாலகரு | 28 | 90 |
| 38 | காமனய்யன காமினியர | 29 | 93 |
| 39 | ஶ்ரீக்ருஷ்ண ஒம்மிந்தோம்மிருளெ | 30 | 99 |
| 40 | ஜயவ்ரஜகே நீ ஜன்மிஸதிகவு | 30, 31 | 102 |
| 41 | ஈ பரி கோபிசமூபரேலாபிஸெ | 32 | 105 |
| 42 | தோரிதா தன்ன தோரிதா | 32 | 106 |
| 43 | நெரெதரு ஹரிய கௌதியரு | 32 | 107 |
| 44 | ஆ ஸகியர ஸுகக | 32, 33 | 107 |
| 45 | பாத ந்யாஸங்களிந்தா | 33 | 113 |
| 46 | ராஸ க்ரீடெயலாஸகர்கெ | 33 | 115 |
| 47 | கோஷ்டத ஜனகெல்ல | 34 | 121 |
| 48 | அவரே ஸுகிகளு | 34, 35 | 123 |
| 49 | ஜாணெ கோபேரொந்துகூடி | 35 | 125 |
| 50 | க்ருஷ்ணாஸ்ரித ஶிஷ்டரெல்லரு | 36 | 133 |
| 51 | க்ருஷ்ணாஸ்ரிதரிக்யெதேஷ்ட | 37, 38 | 135 |
| 52 | **ஹரிய பாதாப்ஜ** | 37 | 141 |
| 53 | ஸுஜ்ஞாரத த்ரிகாலஜ்ஞ | 38 | 144 |
| 54 | வாஸுதேவன அடிதாவரெய | 37 | 146 |
| 55 | ஹரிபடரிகெ லவ பயவில்ல | 39 | 148 |
| 56 | ஶ்ரீயரமண ஶ்ரீக்ருஷ்ணனாத | 40, 41 | 157 |
| 57 | ஹிரிதுஸுக பூர்ண | 40 | 167 |
| 58 | ஶ்ரீகிருஷ்ணபாத **ஸரோருஹ** | 40 | 175 |
| 59 | பில்லஹப்பவ நோடுதைதலு | 41 | 178 |
| 60 | பாக்யவனெணிஸிதெரெணிகில்ல | 42 | 184 |
| 61 | முக்கண்ணன வரதனுவனு | 42 | 187 |
| 62 | ராமகிருஷ்ணர த்ரோஹதபல | 42 | 190 |
| 63 | கஜபால அஷ்டதிக்கஜபால | 43 | 193 |
| 64 | மதுகைடபமர்தகனொளு | 43 | 198 |
| 65 | ஜாத: கம்ஸவதார்த்தானு | 44 | 206 |
| 66 | அம்மம்மச்சரிய விசித்ர சரித்ர | 44 | 214 |
| 67 | ஜயஜய ரங்ககெ ஜய | 44 | 216 |


***

# ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கட தாஸர்
# வாழ்க்கை வரலாறும் ஆன்மீகப் பெருமையும்

ஸ்ரீஷாத்ப்ராப்த ஸுவிக்ஞானம் ஸ்ரீஷைல நிரதம் ஸதா |
பிரஸன்ன வெங்கடார்யோமே பூயாத் ஸர்வார்த்த ஸித்தயே ||

ப்ரஸன்ன சாரித்ர ப்ரஸன்ன ஸோபன வக்த்ர
ப்ரஸன்ன பாங்க நேத்ர ப்ரஸன்ன காத்ர |
ப்ரஸன்ன வெங்கட க்ருஷ்ண ப்ரஸன்னனாதரெ நித்ய
ப்ரஸன்ன தரோக்தி பாஹொவு பக்தஜனகெ ||

ப்ரஸன்ன வரதம் த்யாயேத் ப்ரஸன்ன குண பூர்ணம் |
ப்ரஸன்ன வேங்கடம் வந்தே குரு பாவம் பதாஸ்ரயே ||

அத்திகெய பிருநுடிகளிந்த நொந்து பெந்து
ஹத்தி வெங்கடகிரி வெங்கடன முந்தெ நிந்து
குத்திகெயு பிகியெ ப்ரார்த்தனெய மாடலந்து
பித்திஹ பீஜாக்ஷர பிரஸன்ன வெங்கடனெந்து
மத்தெ ஹரிதாஸரெனிஸி ஹிந்திருகி பந்து
பக்திலி கன்னட பதபத்ய ரசனெகெய்து
யுக்திலி ஸ்ரீ மங்களாங்க ஹரிவிட்டலனெந்து
முக்தராதரு பாத்ரபத ஷுத்த த்வாதஷியந்து ||

***

ஹரிதாஸ பாரம்பரியத்தில் 'ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கட தாஸர்' மிக முக்கியமான மற்றும் போற்றத்தக்க ஒரு ஹரிதாஸர் ஆவார். கன்னட தாஸ ஸாஹித்ய உலகில் தனது எளிய, பக்தி ரசம் சொட்டும் கவிதைகளாலும் கீர்த்தனைகளாலும் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்தவர். ஸ்ரீ புரந்தரதாஸர், ஸ்ரீ கனகதாஸருக்குப் பிறகு, தாஸ ஸாஹித்ய உலகிற்கு அரிய தொண்டாற்றியவர்களில் இவரும் ஒருவர்.

**பிறப்பும் ஆரம்பகால வாழ்க்கையும்**

ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கட தாஸர் 1680–ஆம் ஆண்டு கர்நாடகாவின் தார்வாட் மாவட்டத்தில் உள்ள 'பாகலகோட்டை' (Bagal kot) என்ற கிராமத்தில் ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் காகண்டகி வெங்கண்ணா.

சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த இவர், படிப்பறிவோ அல்லது முறையான கல்வியோ இன்றி, மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தார். ஊராரின் ஏளனத்திற்கும் வறுமைக்கும் ஆளானார்.

## திருப்பதி பயணம் & குருவருள் பெற்ற நிகழ்வு

தன்னுடைய அறியாமையினாலும் வறுமையினாலும் மனம் நொந்த வெங்கண்ணா, பகவான் ஸ்ரீவெங்கடேஶ்வரரின் அருளைப் பெற எண்ணித் திருப்பதிக்குக் கால்நடையாகப் பயணம் மேற்கொண்டார். அங்கே திருமலையில் பகவானைக் குறித்துக் கடுமையான தவம் மற்றும் ப்ரார்த்தனையில் ஈடுபட்டார். இவரின் தூய்மையான பக்தியைக் கண்டு மகிழ்ந்த ஸ்ரீ வெங்கடவன், இவருக்கு நேரில் காட்சி அளித்து இவருடைய நாவில் 'ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கட' என்ற முத்திரையை பொறித்து ஞானத்தை வழங்கி அருளினார். அந்த நிமிடமே, படிப்பறிவில்லாத வெங்கண்ணா, ஹரிதாஸராக மாறி பகவானின் லீலைகளை, கீர்த்தனைகளாக பாடத் தொடங்கினார்.

## தாஸ ஸாஹித்யத் தொண்டு & படைப்புகள்

இவர் "ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கட" என்ற அங்கிதத்தை தனது பாடல்களின் முத்திரையாகப் பயன்படுத்தினார்.

* பாகவத தஶம ஸ்கந்த பாடல்கள்: ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாவது ஸ்கந்தத்தில் உள்ள ஸ்ரீகிருஷ்ணனின் பிறப்பு, கோபியர்களுடனான லீலைகள், கம்ச வதம் போன்ற நிகழ்வுகளை, மிகவும் எளிய, இனிமையான கன்னட கவிதைகளாகப் பாடினார்.
* ஸமஸ்த நாம மணிகண ஷட்சரண பத்யமாலா : ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை அப்படியே கன்னடத்தில் இயற்றி அருளினார்.
* நாராயண பஞ்சர : நாராயண நாமத்தின் பல்வேறு அர்த்தங்களை ஒரு தீர்க்க க்ருதியாக இயற்றிக் கொடுத்திருக்கிறார்.
* கீர்த்தனைகள் & ஸுளாதிகள்: ஆயிரக்கணக்கான கீர்த்தனைகள், ஸுளாதிகள் மற்றும் உகாபோகங்களைப் பாடி த்வைத வேதாந்த கருத்துக்களைப் பரப்பினார்.

## முடிவுரை

ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கட தாஸர் தனது வாழ்நாள் முழுவதையும் ஸ்ரீஹரியின் புகழ்பாடவே அர்ப்பணித்தார். 1752-ஆம் ஆண்டு இவர் ஹரிபாதம் அடைந்தார். இன்றும் இவரது கீர்த்தனைகள் கர்நாடக சங்கீதத்திலும், ஹரிதாஸ பாரம்பரியத்திலும் மிகவும் மரியாதையுடன் பாடப்பட்டு வருகின்றன. அறியாமையில் இருந்த ஒரு எளிய மனிதன், பகவானின் அருளால் எவ்வாறு மாபெரும் ஆன்மீக ஹரிதாஸராக மாற முடியும் என்பதற்கு ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கட தாஸரின் வாழ்க்கை ஒரு சிறந்த உதாரணம் ஆகும்.

***

# பாகவத 10ம் ஸ்கந்தம்
# பூர்வார்த்த கீர்த்தனைகள்

பாகவதத்தைப் பற்றி கர்னாடக ஹரிதாஸர்கள் பலரும் பல க்ருதிகளை இயற்றியிருக்கின்றனர். ஸ்ரீவாதிராஜரின் பாலகிருஷ்ண லீலெ, ஹரிதாஸினி அம்பாபாய் அவர்களின் பாலகிருஷ்ண லீலெ ஆகியவை தீர்க்க க்ருதிகளாக இருந்தால், மற்ற ஹரிதாஸர்கள், பாகவத 10ம் ஸ்கந்தத்தின் பல்வேறு நிகழ்வுகள், சிறப்புகள், ஸ்ரீகிருஷ்ணனின் லீலைகள் என அனைத்தைப் பற்றியும் அனேக கீர்த்தனைகளை இயற்றியிருக்கின்றனர்.

இதில் ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸர் இயற்றியுள்ள இந்த ‘பாகவத 10ம் ஸ்கந்தம் - பூர்வார்த்த கீர்த்தனைகள்’ தொகுப்பில் இருக்கும் 67 கீர்த்தனைகள் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஸ்ரீஶுக மஹரிஷிகள், பரீக்ஷித் ராஜனுக்குக் கூறிய இந்த பாகவதத்தின் இந்த பகுதியில், மூல புராணத்தில் உள்ள நிகழ்வுகள் அனைத்தையும் அப்படியே இந்த 67 கீர்த்தனைகளாக, கன்னடத்தில், நமக்கு இயற்றி அருள் புரிந்திருக்கிறார் ஸ்ரீதாஸர்.

இந்த பாடல்களின் பட்டியல், அவை பாகவதத்தில் எந்த அத்யாயத்தில் வரும் விஷயம் என்பதை, புத்தகத்தின் துவக்கத்தில் இருக்கும் ‘பொருளடக்கத்தில்’ கொடுத்திருக்கிறேன். அந்தந்த பாகவத அத்யாயங்களுடன் பொருத்தியும், இந்த கீர்த்தனைகளை படித்து, மேலதிக அர்த்தங்களை புரிந்து கொள்ளலாம்.

இந்த கீர்த்தனைகளின் சுருக்க வடிவிலான அர்த்தமே இந்த புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. மிகவும் விரிவாக விளக்கி எழுதினால், புத்தக அளவு மேலும் பெரியதாகிவிடும் என்னும் அச்சமே இதற்கு காரணம். ஆனாலும், இந்த கீர்த்தனைகளை, திருமதி. பரிமளா ராகவேந்த்ரன் அவர்கள் யூட்யூபில், 111 காணொளிகளில் மிகவும் விரிவாக உபன்யாஸம் செய்துள்ளார். அதனைக் கேட்டும் இவற்றை புரிந்து கொள்ளலாம். அவரது உபன்யாஸத்தினை கேட்க இங்கே செல்லவும். https://l1nq.com/z0q2hd6 . இந்தப் புத்தகத்தில் அர்த்தத்தை எழுத, அவரது மேற்சொன்ன உபன்யாஸங்களும் பெரும் அளவில் உதவி செய்துள்ளன. அதற்காக அவருக்கு அனந்த நன்றிகளை சொல்லிக் கொள்கிறேன்.

ஸ்ரீதாஸரின் இந்த தொகுப்பினை தமிழில் எழுதி வெளியிட ஊக்குவித்த, ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸரின் அமைப்பின் தலைவரான ஸ்ரீஸுபாஷ் காகண்டகி அவர்களுக்கு மிக்க நன்றிகள். பல கீர்த்தனைகளை சரிபார்த்து, பிழைகளை சரிசெய்ய உதவிய திரு.முரளிதரன், கோவை அவருக்கும் அனந்த நன்றிகள். இதில் ஏதேனும் தவறுகள், பிழைகள் இருந்தால், அவற்றை எனக்குத் தெரியப்படுத்தவும்.

இந்த அனைத்து கீர்த்தனைகளையும், அவற்றின் அர்த்தங்களையும் படித்துப் புரிந்து கொண்டு, ஸ்ரீப்ரஸன்ன வெங்கட தாஸரின், அவரது அந்தர்யாமியான ஸ்ரீப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணனின் அருளையும் அனைவரும் பெறுவோமாக.

ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து.

**‘ஜகன்னாத கேசவ’ சத்ய நாராயணன்**
**8904458276.**

**23.08.2026**

## பாகவத-த3ஶமஸ்கந்த4 பூர்வார்த4

**ராக3 :நாடி | தாள :ஜம்பே**

**ஶ்ரீதே3வியாள்த ஶ்ரீ வேதை3கவேத்3ய ஜய**
**வேத3க3ர்ப4னுத ஶ்ரீபாதா3ப்3ஜயுக்3ம ஜய**
**யாத3வகுலாப்3தி4கா3ல்ஹாத3கர சந்த்3ர ஜய**
**ஶ்ரீதே4னுகி3ரீஶ ஸனகாதி3 முனிவந்த்3ய ஜய ஜய || 1 ||**

**பூ4ஸதிய பா4ரகே வினாஶகாரணனெ ஜய**
**போஷகாதா4ரக பரேஶ கேஶவனெ ஜய**
**ஶேஷஶயன வைகுண்ட2நந்தாஸன ஜய**
**ஈஶேந்த்3ர ஸுரமுனிப ஸம்ஸேவ்ய ப4வ்ய ஜய ஜய || 2 ||**

**தா3ஶரதி2 தா3ஶார்ஹ வாஸிஷ்டக்ருஷ்ண ஜய**
**கோ3ஸமூஹ த்3விஜ தே3வத்3வேஷி குலஹரண ஜய**
**தா3ஸ கபிவர பீ4ம ஶ்ரீஸுக2முநீஶ ஜய**
**பேஶலசரித்ர ஶ்ரீ ப்ரஸந்வேங்கடேஶ ஜய ஜய || 3 ||**

1.
ஶ்ரீதேவியின் தலைவனே, வேதங்களால் மட்டுமே அறியப்படுபவனே, வேதகர்ப்பனான ப்ரஹ்மதேவர் வணங்குவதான, இரு பாத கமலங்களை கொண்டவனே, யாதவ குலத்தில் பிறந்தவனே, அனைவருக்கும் குளிர்ச்சியைத் தரும் சந்த்ரனே, கோவர்த்தன மலையை தூக்கியவனே, ஸனகாதி முனிவர்களால் வணங்கப்படுபவனே, உனக்கு ஜய ஜய ||1

பூமாதேவியின் பாரத்தை குறைக்க காரணம் ஆனவனே, அனைவருக்கும் போஷகன் (காப்பவன்), ஆதாரகன் (ஆதாரமாக இருப்பவன்), தேவர்களின் தலைவனே, கேஶவனே, பாம்புப் படுக்கையில் படுத்திருப்பவனே, வைகுண்டனே, அனந்தாஸனத்தில் இருப்பவனே, ருத்ரதேவர், இந்த்ரர், தேவ முனிவர்கள் என அனைவராலும் வணங்கப்படுபவனே, உனக்கு ஜய ஜய ||2

தாஶரதியான ஶ்ரீராமனே, யதுகுல கிருஷ்ணனே, வாஸிஷ்ட கிருஷ்ணனே (ஶ்ரீவேதவ்யாஸரே); பசுக் குழுக்கள், ப்ராஹ்மணர்கள், தேவர்கள் ஆகியோரின் த்வேஷிகளான அஸுரர்களின் / கெட்டவர்களின் குலத்தை அழிப்பவனே, கபிவரனான ஹனும, பீமஸேனதேவர் மற்றும் ஶ்ரீமத்வரின் தலைவனே, பவித்ரமான சரிதத்தைக் கொண்டவனே, ஶ்ரீப்ரஸன்ன வெங்கடேசனே, உனக்கு ஜய ஜய ||3

*****

**1. ராக3 :ஸாரங்க3நாடி | தாள :ஏகதாள**

**ஶ்ரோதவ்யவு இதெ3 மந்தவ்யவு இதெ3**
**த்4யாதவ்யவு நமகே3 பூதவு ஹரிகு3ணகா3தே2யு**
**முகுதிய பாதே3யவு நமகே3 || ப ||**

**ஶ்ரீமத் த3ஶமஸ்கந்த4 பா4க3வத பூ4மிப பரீக்ஷிதனு**
**தீ4மஜ்ஜனகு3ரு ஶுகமுனிகே3 நமிஸி ப்ரேமதி3 கேளித3னு**
**ஈ முகுதிய பத2 ஸாத4னவு க2ளபாமரரிகே3 தூ3ர**
**ஶ்ரீ மஹாலகுமிய ரமணன தா3ஸர ஸ்தோமகெ ஸௌக்2யகர || 1 ||**

**கர்ணபுடக3ளிகே3 நைரந்தரத3லி பூர்ணஸுதா4ரஸவு**
**நிர்ணாயக ஶ்ரீத3ஶப்ரமதி ஶாஸ்த்ரார்ணவஜ்ஞர ஹிதவு**
**சூர்ணிக்ருத பாபாசல வஜ்ரவு ஸ்வர்ண விபக3 கதே2யு**
**வர்ணாவர்ணக3ளிம் கீர்திபராப4ர்ண ஸுக2த3 ததியு || 2 ||**

**எனகி3ந்தொந்தீ3ர்கு3ண ஜேஷ்ட2ர க்ரமவனு ப3லகொ3ண்ட3பு3ஜா**
**ஸநபர்யந்தர கு3ருக3ளிகெ3ரகு3வெ அணு பா3லிஶமனுஜ**
**எணிஸத3லென்னய நுடி தப்புக3ளனு மனுஜோத்தம முக்2யரு**
**கனடுக்கி3 (ப3ணகு3)க3ளிவு என்னதே3 கேளிரி க4னரு த3யாபரரு || 3 ||**

**சித்3கு3ணக3ணநிதி4 சின்மயரூப ஸச்சித் க்3ருஹத்ரய தானு**
**ஹ்ருத்3கு3ஹநிலய ஸதா3ஶ்ரித ஜன ஸுக2தோ3க்3தா4மரதே4னு**
**வாக்3தே3வியரஸ வனஜாஸனனுத து3க்3தா3ப்3தீ4ஶ்வரனு**
**அக்3ரேஸர ப4க3வஜ்ஜன ஸஜ்ஜனருக்3குடி3ஸுவரித3னு || 4 ||**

**ஆரித3 பேளுவரு கேளுவரு முராரிய சரிதெய**
**கீருதி வ்யாஸகுமாரனு வர்ணிப சாரு முகுதி க3திய**
**ஈரேளு ஜக3த3க4 ஹரிபுது3 கர்ணாபூரித பீயூஷவு**
**நாராயண ப்ரஸன்வேங்கடக்ருஷ்ணன தோரிகொடு3வ ரஸவு || 5 ||**

2. ஶ்ரீஹரியின் குணங்களின் கதையானது நமக்கு கேட்கத்தக்கது, மனனம் செய்யத் தக்கது, த்யானிக்கத் தக்கது, அது மிகவும் பவித்ரமானது, அதுவே முக்திக்கான பாதையும் ஆகிறது நமக்கு | ப

அரசனான பரீக்ஷித், தேவர்களின் குருவான ஶுக முனிவரிடம் சென்று, அவரை வணங்கி, மிகவும் அன்புடன் / பக்தி / மரியாதைகளுடன், ஶ்ரீமத் பாகவத 10ம் ஸ்கந்தத்தின் கதையை கேட்டான். இவ்வாறு பாகவத கதையைக் கேட்பது என்பது முக்திக்கு செல்வதான பாதைக்கான ஸாதனமே ஆகும். ஆனால், இது கெட்டவர்களுக்கு / அக்ஞானிகளுக்கு கேட்பதற்கு இல்லை. பாகவத ஸ்ரவணம் என்பது ஶ்ரீமஹாலக்ஷ்மி ரமணனின் தாஸர்களின் குழுவினருக்கு (பக்தர்களுக்கு) தக்க நலன்களையே தரும். || 1

கேட்பவர்களின் காதுகளுக்கு, இது (பாகவதம் என்பது) நிரந்தரமாக, அற்புதமான அமிர்த ரஸமாக இருக்கிறது. ஶ்ரீமத்வாசார்யரின் சாஸ்த்ர நிர்ணய க்ரந்தமானது, அக்ஞானிகளுக்கு ஹிதத்தை தருவதாகும். பாவங்களின் மலையை பொடிப்பொடியாக்கும் வஜ்ரம் (கதை) போன்றதாகும். இது ஶ்ரீவிஷ்ணுவின் கதையாகும். எழுத்துக்களாலும் / பதங்களாலும் அந்த ஶ்ரீவிஷ்ணுவின் புகழைப் பாடும் கடல் இது. அனைவருக்கும் சுகத்தைத் தருகிறது. ||2

என்னைவிட ஒன்று இரண்டு நற்குணங்கள் அதிகமாக பெற்றிருப்பவர்களிடமிருந்து துவங்கி, ப்ரஹ்ம தேவர் வரையிலான அனைத்து குருகளையும் நான் வணங்குகிறேன். நான் அணுவை விட சிறியதான (அல்பமான) மனிதன். என்னுடைய பேச்சினை, அவற்றில் உள்ள தவறுகளை கவனிக்க வேண்டாம். மனுஷ்யோத்தமர்களான முக்யஸ்தர்கள் இது தவறான பேச்சு என்று எண்ணாமல், தயவு செய்து இதனை கேளுங்கள், கருணை உள்ளவர்களே. || 3

பரிபூர்ண ஆனந்த குணநிதி, சின்மய ரூப, யதார்த்த ஜ்ஞானத்தைக் கொண்டவன், ஸ்வேதத்வீப, அனந்தாஸன, வைகுண்ட என்னும் மூன்று இருப்பிடங்களைக் கொண்டவன், அனைவரின் ஹ்ருதயத்தில் வசிப்பவன். தன்னை எப்போதும் வணங்கும் பக்தர்களை காக்கும் காமதேனு, வாக்தேவியான சரஸ்வதி பாரதியரின் தலைவனான, ப்ரஹ்ம வாயுதேவர்களால்

வணங்கப்படுபவன், பாற்கடலில் படுத்திருப்பவன், அனைத்து தேவர்களின் தலைவன், பக்தர்களை காப்பவன் என்று (அந்த ஸ்ரீஹரியை) ஸஜ்ஜனர்கள் இவ்வாறு வணங்குகின்றனர். || 4

இத்தகைய முராரியின் சரிதத்தை, அதன் புகழினை, யாரொருவர் கூறுகிறார்களோ, கேட்கிறார்களோ, அந்த வ்யாஸரின் மகனான ஶுக ரிஷிகள் வர்ணிப்பதான, சரியானதான முக்தியின் வழியை, கேட்பதால் ஈரேழு பதினான்கு உலகங்களின் துன்பங்கள் விலகுகின்றன. காதுகளுக்கு இனிமையான அமிர்தம் அதுவே. நாராயண ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணனின் மகிமைகளை அவர் (ஶுக முனிவர்) சொல்லிக் கொடுக்கிறார். ||5

****

**3. ராக3 :கன்னட3காம்போ3தி4 | தாள :அட்ட**

**ஶ்ரீக்ருஷ்ணன லீலாவதார க4ன்ன || ப ||**
**கொண்டா3டு3வெ ஶ்ரவண மனன மாடு3வெ || அ.ப ||**

**ஆதி3நாராயணாகில ஜக3த்காரண**
**மோத3ஜ்ஞான ப3லபூர்ண ஏகார்ண ந்ய**
**க்3- ரோத4 பத்ராஸன க்3ரஸித விஶ்வாஸன**
**வேதா3னந்தாவேத்3ய விஷ்ணு தானே**
**காத்3ய வேத3க3ர்ப4ன ஶதவத்ஸரனித்3ராவி-**
**நோதி3 ஏகேஶ்வர நாராயணீத4ர**
**ஸாத4ன ஸாத்4யபர ஆனந்த3ஶோத4க ஹ்ருக்3கோ3சர**
**முக்தாமுக்த பே4த3ஜ்ஞஜன மோஹர || 1 ||**

**ஶ்ரீ பூ4 து3ர்கா3ரூபி ஶ்ரீபதியெதெ3யப்பி**
**தா ப3ந்தீ3தெர நிந்து ஸ்தோத்ர மாட3லு இந்து**
**ஶோப4ன நுடி3கே3ள்து ஸ்வாமி தானெத்3து3 ஶௌ**
**ன்யா- பி4த4னாத3னு பஞ்சாத்ம த்3விஷடா3த்ம**
**ஶ்ரீ ப4க3வான் த3ஶஶதஸஹஸ்ராம்ஶதி3**
**ஶோபி4பானந்த ஸ்வரூபவ ப்ரகடிஸி**
**தா ப்ரக்ருதிய க்3ரஹிஸி பொ3ம்மாதி3**
**வைபு3த4ரனு ஸ்ருஜிஸி**
**ஸூக்ஷ்ம ஸ்ருஷ்டிய ப்3ரஹ்மாண்ட3வ ஹுட்டிஸி || 2 ||**

**பொ3ம்மாண்ட3 (தி3ப்பொக்கு?)வன்னளெது3 பொ3ம்மனொளகே3 இத்3து3**
**உம்மயதி3ம் விஶ்வ உத்3ப4வ மாடு3வ**
**ஹம்மின அம்ஹகார ஹரன பொக்குஹரிஸுவ**
**ரமேயரஸ விஷ்ணு ராஜீவனாப4னு**
**அம்மித அவதார அகி2லபூ4பா4ரஹர**
**அம்மர கார்யகத்4யக்ஷ ஆஶ்ரிதபக்ஷ-**
**த4ர்மாத்ம க2ளஸம்ஹார த4ரையொளு த4ர்மோத்3த4ரணதத்பர**
**ஸந்தத ப்3ரஹ்மண்யதே3வவர || 3 ||**

**ப்ரணதரிச்சனுஸார பொரெவ க்ருபாகர**
**க4னஶ்ருதிஹரனொத்3த3 க3ஹனாப்3தி4 மதி2ஸிதா3-**
**வனியகத்3த3ன ஸீள்தமரவரரிபுமர்த3**
**முனிகஶ்யபன கந்த3 மெத்தெநிருபரகொந்த3**
**அநிமிஷாபத்3ஹர அர்ஜுனஹிதகர**
**த3னுஜமோஹனகர து3ருளகலிமலஹர**
**அனந்தானந்தவதார அஶுப4தூ3ர அனுதி3ன முத3தா3தார**
**அப்ராக்ருத சினுமய ஸுச்சரீர || 4 ||**

**ஹிந்தெ$^{3}$ ஸுராஸுரர்ஹிந்தின ஸங்க$^{3}$ர-**
**த$^{3}$ந்த$^{3}$பஜய ஹொந்தி$^{3}$த$^{3}$ ஸுரரு த$^{4}$ரெகை$^{3}$தி$^{3}$**
**நொந்து து$^{3}$:ஶ்சிதராகி$^{3}$ ந்ருபகுலோத்$^{3}$ப$^{4}$வராகி$^{3}$**
**வ்ருந்தா$^{3}$ரகம்ஶத$^{3}$வனிபர வ்யதி$^{2}$ஸித$^{3}$-**
**ரந்து$^{3}$ பூ$^{4}$பா$^{4}$ரிஸெ ரஸெகு$^{3}$ந்தி$^{3}$ ரோதி$^{3}$ஸெ**
**ப$^{3}$ந்து நிர்ஜரராகே$^{3}$ ப$^{3}$ளலி ஹேளலாகே$^{3}$**
**ஸிந்து$^{4}$ஶயனன ப$^{3}$ளிகே$^{3}$ பொ$^{3}$ம்மப$^{4}$வேந்த்$^{3}$ரரு ஹோகி$^{3}$ ப்$^{3}$யாகே$^{3}$**
**ப்ரஸன்னவேங்கடமந்தி$^{3}$ரன துதிஸிலாகே$^{3}$ || 5 ||**

3. ஸ்ரீகிருஷ்ணனின் லீலாவதாரம் அபாரமானது || ப
அதனை நான் தொடர்ச்சியாக கொண்டாடுவேன், அதைப் பற்றிய ஸ்ரவண, மனனங்களை செய்வேன். || அப

ஆதி நாராயணன், அகில ஜகத் காரணன், ஆனந்தம், ஜ்ஞானம், பலம் ஆகியவற்றை பரிபூர்ணமாக கொண்டவன், ப்ரளய ஜலத் தண்ணீரில், ஆல இலையில் படுத்திருப்பவன், அனந்த வேதங்களாலும் அறியப்பட முடியாதவன், விஷ்ணு, ஸர்வோத்தமன், ஸ்ருஷ்டிக்கு முன்னரும் இருந்தவன், ப்ரஹ்ம தேவரின் நூறு ஆண்டுகள் வரை அதில் படுத்திருக்கும் வினோதன். அவன் ஒருவனே ஈஸ்வரன். நாராயணியின் தலைவன். ஸாதனங்களால் அடையப்படக்கூடியவன். அனைவருக்கும் மகிழ்ச்சியை கொடுப்பவன். அனைவரின் இதய குகையில் தெரிபவன். முக்தர்கள், அமுக்தர்கள், அஜ்ஞானிகள் என அனைவரையும் விட வேறானவன் (பேதம்). || 1

ஸ்ரீ, பூ, துர்கா ரூபியான லக்ஷ்மிதேவி, ஸ்ரீஹரியின் இருப்பிடத்தை அடைந்து, தான் மற்றும் இதர தேவர்களுடன் அங்கு நின்று, அந்த ஸ்ரீஹரியை ஸ்தோத்ரம் செய்ய, இத்தகைய மங்களகரமான நுடிகளை கேட்டு, ஸ்வாமியான ஸ்ரீஹரி தான் எழுந்து, ஶூன்ய நாமகனான அந்த ஸ்ரீஹரி, பஞ்சாத்மன் (அனிருத்த, ப்ரத்யும்ன, ஸங்கர்ஷண, வாஸுதேவ, நாராயண), த்வாதஶாத்மன் (விஷ்ணு, மதுஸூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷிகேஷ, பத்மனாப, தாமோதர, கேசவ, நாராயண, மாதவ, கோவிந்த), அந்த ஸ்ரீ பகவான், 10, 100, 1000 என்னும் பற்பல அம்ஶத்தில், ஒளிர்வதான ஆனந்தமயமான தன்னுடைய ஸ்வரூபத்தை வெளிப்படுத்தி, தான், ப்ரக்ருதியான மஹாலக்ஷ்மியின் மூலமாக, ப்ரஹ்மதேவரே முதலான தேவர்களை படைத்து, ஸூக்ஷ்ம ஸ்ருஷ்டி எனப்படும் ப்ரஹ்மாண்டத்தை படைத்து... ||2

இந்த ப்ரஹ்மாண்டத்தை படைத்த பின், சதுர்முக ப்ரஹ்ம தேவரின் அந்தர்யாமியாக இருந்து, மிகவும் உற்சாகத்துடன், உலகத்தை படைத்து, பிறகு, அஹங்கார தத்வத்திற்கு அபிமான தேவதையான ருத்ரதேவனை படைத்து, ஸ்ரீதேவியின் தலைவனான விஷ்ணு, பத்மனாபன், பற்பல அவதாரங்களை எடுப்பவன், அகிலத்தின் பாரத்தினை குறைப்பவன், தேவர்களின் காரியங்களுக்கு தலைவன், அனைவருக்கும் ஆஸ்ரயமாக (அடையக்கூடியவனாக) இருப்பவன். தர்மாத்மா. அஸுரர்களை கொல்பவன். பூமியில் தர்மத்தை காப்பவர்களை காப்பவன். எப்போதும் ப்ரஹ்ம தேவரைவிட உயர்ந்தவன் / உத்தமன். || 3

வணங்குபவர்களின் இச்சைக்கு ஏற்ப அவர்களை காக்கும் கருணைக் கடல். வேதங்களை கவர்ந்த ஹிரண்யாசுரனை கொன்று (மத்ஸ்யாவதாரம்); (பாற்கடல் கடையும் சமயத்தில்) மந்தர மலையை தூக்கியவன் (கூர்ம); இந்த உலகத்தை கவர்ந்தவனை கொன்றான் (வராஹ); சாகாவரம் பெற்ற அஸுரனைக் (ஹிரண்யகசிபு) கொன்றவன் (ந்ருஸிம்ஹ); கஸ்யபரின் மகனான வாமனன்; அனைத்து அரசர்களையும் கொன்ற பார்க்கவ; (ராவணனைக் கொன்று) தேவர்களை காத்தவன் (ஸ்ரீராமன்); அர்ஜுனனுக்கு உதவியன் (ஸ்ரீகிருஷ்ணன்); அனைவரையும் மயக்கியவன் (பௌத்த);

கலியைக் கொன்றவன் (கல்கி); இவ்வாறாக அனந்தானந்த அவதாரங்களை எடுத்தவன். எவ்வித அஶுபங்களிலிருந்து விலகியிருப்பவன். எப்போதும் மகிழ்ச்சியை கொடுப்பவன். அப்ராக்ருதன். சின்மய சரீரம் கொண்டவன் || 4

முன்னர் ஒரு முறை, தேவ, அஸுரர்களுக்கு இடையே நடந்த போரில் தோல்வி அடைந்த தேவர்கள், பூமியில் இறங்கி, நொந்து, கவலைப்பட்டவாறு, மனித குலத்தில் பிறந்து, கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். இந்த பூமியோ, (அஸுரர்களின் தொல்லையால்) மிகவும் பாரம் அடைந்து, களை இழந்து அழுதவாறு, வாலிப வயதிலேயே இருந்து, பாற்கடலில் படுத்திருப்பவனை அடைந்து, ப்ரஹ்ம தேவர், ருத்ர தேவர், இந்த்ரர் ஆகியோருடன் சென்று, விரைவாக, ப்ரஸன்ன வெங்கடனை துதிக்கத் துவங்கினர். || 5

***

**4. ராக்3 :ஸாரங்க3 | தாள :ஜம்பே**

**த்3யுஸ்த2 நிம்மங்கி4ரஜ மஸ்தகதி3 த4ரிஸுத நி-**
**ராஸ்தக4ராவு சிந்தாக்3ரஸ்தராகி3ஹெவு க3ட3**
**ப்ரஸ்துத வஸுதே4யு அந்தஸ்தாபவிடி3து3**
**அஸ்வஸ்த2மனத3லி உஸுரலு**
**விஸ்தரிஸப3ந்தெ3வு ஸமஸ்த ஸுரரிந்தீ3க3**
**து3ஸ்தரத3 தை3த்யருத்4வஸ்தரெந்தெ3ந்தி3கு3 ப்ர –**
**ஶஸ்தோக்தியிந்த3ப4ய ஹஸ்தவம் நீடெ3ந்து3 த்வத் ஸ்தோத்ரவம் மாள்பெவு ||1**

**நீனு பரதை3வ நின்னன்னு ஹொந்தி3தே3வாவு**
**நீனெ நின்னிந்த3லவதரிஸி து3ஷ்டர ஸெதெவெ**
**நீனெ நினகாகி3 ஸத்3த4ர்மபத்3த4திதோ3ர்வெ நின்ன தெ3ஸெயிந்தெ3ல்லர**
**ஜ்ஞானோத3யவு நின்ன விஜ்ஞானப4குதியனு**
**நீநித்து நின்னல்லி விஶ்வாஸவம் ப3ளெஸு**
**ஸானுராகதலி ஹொரெ ஹே தா3த ஹே த்ராத ஹே நாத2னே நமோ நமோ || 2**

**ஶிஷ்டரெல்லரு ஹீகே3 ஸாஷ்டாங்க3தி3ம் நமிஸெ**
**ஹ்ருஷ்டமுக2நாகி3 ஶ்ரீவிஷ்ணு நுடி3த3னெலெ நி-**
**ர்து3ஷ்ட மதிக3ளிரா நா க்ருஷ்ணாபி4தா4னத3லி வ்ருஷ்ணிகுலவஸுதே3வன**
**இஷ்டக்3ருஹிணிய உத3ர ஶ்ரேஷ்ட2தி3ந்து3தி3ஸுதிஹெ**
**து3ஷ்ட தை3த்யரகுலவ நஷ்டமாடு3வெ நிம்ம**
**இஷ்டபூரணமாகே3 துஷ்டிபடு3வளு பூ4மியு கஷ்டபி3டி3 ஸுகி2ஸிரெனலு ||3 ||**

**ஈ ஸுரர மொத3லெ ஹரித்3வேஷி காலனேமி போ4-**
**ஜேஶ மது4ராபுரதி3 தா ஸ்வகீய யாத3வர**
**தே3ஶாந்தரகெ அட்டி வஸுதே3வ தே3வகிய லேஸாகி3 மது3வெமாடெ3**
**ஈ ஸதிய ப3ஸிரெண்டு மோஸ நினகெ3ந்து3 ஆ**
**காஶவாணியு நுடி3யலாஸமயகஞ்ஜி ப3லு**
**ரோஷத3லி தே3வகிய கா4ஸிஸலு ஶௌரி ப்ருத்2வீஶனம் திளிது3ளுஹித3 ||4**

**ஆக கொலது3ளுஹித3னு யோகி3 நாரத3ன நுடி3-**
**காக3ஞ்ஜி பாபி காராக்3ருஹதி3 ப3ஸிராரு**
**தா காதிஸித3 ஏளனே க3ர்ப4 நில்லதே3 பதநாகே3 க2ளஸும்மனாத3**
**பே3க3 து3ர்கே3யு ரோஹிணீ க3ர்ப4த3லி இட3லு**
**நாகே3ஶனவதார ஶ்ரீகோ3ப்த (ஶ்ரீநாத2?) னாவேஶ**
**நீகே3ளு திங்க3ளிகே3 ஆ கோ3குலத3லி ஶுப4யோக3த3லி ஜனிஸித3 க3ட3 ||5**

**ஹரியாஜ்ஞெ வஹிஸி தா ஸிரிது3ர்கே3 யஶோதே3யள**
**வரக3ர்ப4த3லி நிந்து த4ரெகி3ளித3ளாபா3லெ**
**புருஷோத்ம தே3வகிய பரமஜட2ரதி3 நிஜைஶ்வரியத3லி க்ரீடி3ஸுதிரெ**
**ஸுரர ஸமூஹகெ அமித ஹருஷவாயிது க2ளநி-**
**கரகெ உத்பாத ஸந்து3ருஶனவு ப2லபுஷ்ப**
**ப4ரித தருலதேயவனி சிரப4த்3ரமயவாகே3 கரத3வாவு கொ3ட3வால்க3ண || 6 ||**

**தே3வர்களெல்ல பரதே3வதேய ஆஜ்ஞெயலி**
**தீவித3 ஸந்தோஷத3லி பூ4வலயத3லி ஹுட்டி**
**கோவித3தெ பை3சிட்டு தாவு து3ர்ப3லரந்தெ தே3வரிபுக3ளிக3ஞ்ஜலு**
**மாவ கம்ஸன கொலுவ பா4வத3லி தந்தெ3 வஸு-**
**தே3வனங்க3னெ தாயி தே3வகிய ஜட2ரத3லி ஶ்ரீவாஸு**
**தே3வாவிர்பா4வனாத3னு ஸ்வச்சே2 ஶ்ரீவர ந்ருஸிம்ஹனந்தெ ||7**

**ஶ்ராவணத3 ப3ஹுளாஷ்டமி விது4பி3ம்போ3த3யதி3**
**தா3வ ரோஹிணி கூடி3த3வேளெ பொ3ம்மாதி3-**
**தே3வர்களம்ப3ரதி3 தீவி ஸ்தோத்ரவ மாடெ3 ஶ்ரீ வனஜநயன க்ருஷ்ண**
**ஶ்ரீவத்ஸமணிகிரீட கௌஸ்துப4குண்ட3லவலய**
**பீவர சதுர்பு4ஜ க3தா3 வனஜ சக்ரத4ர**
**ப்ராவ்ருட்-பயோதா3ங்க3 ஸுவர்ணவஸநாதி3 தே3வனத்3பு4த பா3லனு ||8**

**ஸாஸிர முங்குருள முக2 வாஸுதே3வன கண்டு3**
**ஸ்த்ரீ ஸஹானகது3ந்து3பி4 ஸ்துதிஸெ ஶ்ரீக்ருஷ்ண**
**ஶைஸ்வரூபதி3 த்3விபு4ஜ லேஸாகி3 மோஹிஸித3 ஶ்ரீஶ ஜனனீஜனகர**
**ஈ ஸுதன கண்டு3 கோ3ஸாஸிரத3ஶதக3ளனு**
**பூ4ஸுரரிகி3த்தனு ஸந்தோஷத3லி வஸுதே3வ**
**பூ4ஸதிகெ மாங்க3ல்யராஶி கைவஶவாய்து3 ஶ்ரீப்ரஸன்வேங்கடேஶனந்தி3ஸெ ||9**

4. த்யு லோகத்தில் இருப்பவனே, உங்கள் பாத தூளிகளை எங்கள் தலையில் ஏந்தியவாறு, நாங்கள் வந்துள்ளோம். நாங்கள் கவலையில் இருக்கிறோம். இந்த உலகமானது (பூமாதேவியானவள்), உள்ளுக்குள்ளே புகைந்து கொண்டு, கவலை கொண்ட மனதுடன், பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்க, அனைத்து தேவர்களும் சேர்ந்து இங்கு அதனை விளக்க வந்துள்ளோம். உன்னுடைய புகழ் பெற்றதான வகையில், அபய ஹஸ்தத்தை அளிப்பாயாக என்று உன்னுடைய ஸ்தோத்திரத்தை செய்ய வந்துள்ளோம். || 1

நீயே பரதெய்வம். உன்னையே நான் சரணடைந்துள்ளோம். நீயே, உன்னாலேயே, அவதாரம் செய்து, துஷ்டர்களை நீ அழிக்கிறாய். நீயே உனக்காக ஸத் தர்ம பத்ததிகளை விலக்குகிறாய் (உன் இஷ்டப்படியே செய்கிறாய்). உன்னுடைய இஷ்டத்தினாலேயே (ப்ரஸாதத்தினாலேயே) அனைவருக்கும் க்ஞான உதயம். உன்னைப் பற்றியதான விஜ்ஞான பக்தியை, நீயே அளித்து, உன்னிடம் நம்பிக்கையை அனைவரிலும் எப்போதும் வளர்ப்பாயாக. ஹே தந்தையே. ஹே காப்பவனே. ஹே தலைவனே. நமோ நமோ. || 2

ஸிஷ்டர்கள் (தேவர்கள்) அனைவரும் இவ்வாறு ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்க, சிரித்த முகத்துடன் ஸ்ரீவிஷ்ணு இவ்வாறு கூறத் துவங்கினான். தோஷம் அற்ற மதிகளை கொண்டவர்களே. நான் கிருஷ்ணன் என்னும் பெயரில், வ்ருஷ்ணி குலத்தில் இருப்பவனான வஸுதேவனின் பிரியமான மனைவியின் வயிற்றில், சிறப்பாக அவதாரம் செய்து, துஷ்டர்களின், தைத்யர்களின் குலத்தினை நான் அழிப்பேன். உங்களின் விருப்பம் நிறைவேறும். பூமாதேவியும் மகிழ்வாள். ஆகவே, உங்கள் கஷ்டங்களை விடுங்கள். சுகமாக இருங்கள் - என்றான். || 3

இந்த தேவர்கள் இவ்வாறு வந்து ஸ்ரீஹரியின் விண்ணப்பிக்கும் முன்பாகவே, ஹரி த்வேஷியான காலநேமி, போஜ வம்சத்தில் வந்தவன், மதுரா நகரில், தான் தன்னுடையவர்களான யாதவர்களின் இடத்திற்கு சென்று, அங்கு வஸுதேவ தேவகியின் திருமணத்தை மிகவும் விமரிசையுடன் செய்ய, இந்த தம்பதிகளின் எட்டாவது குழந்தையே உன்னுடைய எதிரி என்று

ஆகாசவாணி கேட்டது. அந்த கம்ஸனோ, அந்த எட்டாவது குழந்தைக்காக பயந்து, மிகவும் கோபத்துடன், தேவகியை துன்புறுத்துவதற்காக, அந்த அரசன், சூரஸேன அரசனின் மகனான வஸுதேவனை சிறையில் அடைத்தான். || 4

அப்போது, வஸுதேவ தேவகியை கொல்லாமல் நிறுத்தி வைத்தான். யோகியான நாரதரின் நுடிக்கேற்ப, பாவியான கம்ஸன், அவர்களை சிறைச்சாலையில் அடைத்து, அந்த சிறையில் பிறந்த ஆறு குழந்தைகளை தான் கொன்றான். ஏழாவது கர்ப்பம் தான் நிற்காமல் தப்பிக்க, அஸுரன் எதுவும் செய்யாமல் அமைதியானான். அந்த கர்ப்பத்தில் வந்த துர்க்கை, ரோஹிணியின் கர்ப்பத்தில் வைக்க, ஶேஷனின் அவதாரமான, ஶ்ரீநாதனின் ஆவேஶத்துடன், பலராமன், அந்த கோகுலத்தில் ஒரு நல்ல யோகத்தில் பிறந்தான். || 5

ஶ்ரீஹரியின் ஆணைப்படி, ஶ்ரீதுர்க்கையானவள், யசோதையின் கர்ப்பத்தில் நின்று, பூமிக்கு வந்தாள். புருஷோத்தமன், தேவகியின் உத்தமமான வயிற்றில் மிகவும் சிறப்பாக க்ரீடை செய்து கொண்டிருக்க, தேவர்களின் குழுவிற்கு அபாரமான மகிழ்ச்சி உண்டாயிற்று. அஸுர குலத்திற்கு இந்த அவதாரமானது கெட்ட பலன்களை கொடுப்பதாக இருக்கிறது. செடி, கொடிகள் அனைத்தும், பூ, பழங்களால் நிரம்பியதாக, இந்த பூமியானது பசுமை நிரம்பியதாக ஆயிற்று. || 6

தேவர்கள் அனைவரும் பரதேவனின் ஆணையில், அபாரமான மகிழ்ச்சியுடன், பூமியில் வந்து பிறந்து, தங்களுடைய சிறப்பினை மறைந்து, தாங்கள் எதுவும் தெரியாத / செய்யாத துர்பலர்களைப் போல, அஸுரர்களுக்கு பயந்தாற்போல வாழ்ந்து வந்தனர். தாய்மாமனான கம்ஸனை கொல்லும் நோக்கத்தில், தந்தையான வஸுதேவ, தாய் தேவகியின் வயிற்றில் ஶ்ரீவாஸுதேவன் தோன்றினான் தன்னுடைய இஷ்டப்படியே, ஶ்ரீவரனான ந்ருஸிம்ஹனைப் போல தோன்றினான். || 7

ஸ்ராவண மாதம் பகுள அஷ்டமியன்று, சந்த்ரன் உதயத்தில் ரோஹிணி நக்ஷத்திரம் இருந்த வேளையில், ப்ரஹ்மதேவரே முதலான தேவர்கள் அனைவரும் வானில் நின்று, ஶ்ரீஹரியை ஸ்தோத்ரம் செய்ய, தாமரைக் கண்ணனான ஶ்ரீகிருஷ்ணன், ஶ்ரீவத்ஸத்துடன், அழகான கிரீடத்துடன், கௌஸ்துப, குண்டலங்களை தரித்தவனாகி, புஷ்பங்களை தரித்து, நான்கு புஜங்களுடன், கதை, தாமரை, சக்ரத்தை பிடித்து, மழைக் காலத்தில், அழகான தேகத்துடன், அற்புதமான குழந்தையாக ஶ்ரீஹரி அவதரித்தான். || 8

அனந்தமான முன் நெற்றியில் விழும் சுருள் முடிகளுடன் முகத்தைக் கொண்டவனான வாஸுதேவனைக் கண்டு, தன் மனைவியான தேவகியுடன் சேர்ந்து வஸுதேவர் வணங்க, ஶ்ரீகிருஷ்ணன், ஒரு குழந்தையின் ரூபத்தில், இரு தோள்களுடன் அனைவரையும் மயக்கினான். தாய், தந்தையர் இந்த குழந்தையைக் கண்டு, மகிழ்ந்து, ப்ராஹ்மணர்களுக்கு ஆயிரக்கணக்கான பசுக்களை தானம் அளித்தனர். உன்னுடைய மாங்கல்ய ராசியானது இன்று பலன் அளித்தது. ஶ்ரீப்ரஸன்ன வெங்கடேசன் இன்று அவதரித்தான் என்று வஸுதேவன், தேவகியிடம் கூறினான். || 9

***

**5. ராக்3 :ஸாரங்க3 | தாள :ஏகதாள**

**ஶ்ரீவல்லப4னந்தி3ஸிதா3 க்ஷணதி3 து3ர்கா3-**
**தே3வி ஹுட்டித3ளு கோ3குலதி3 || ப ||**

**வனஜ ப4வேஶேந்த்3ராத்3யரு நெரெத3ரரு**
**வனஜநாப4வன ஸ்துதிமாடி3த3ரு**
**அநிமிஷராக3 ஹூவின மலைக3ரெத3ரு**
**க4னக3ந்த4ர்வரு பாட3த3ரு || 1 ||**

**தே3வது3ந்து3பி4 மொளகி3த3வம்ப3ரத3லி**
**தே3வநாரியர்ஹாடி3த3ரல்லி**
**பு4வனத்ரய மங்க3லமயவாயிது3**
**தே3வாரிக3ள ப3லவௌதா3யிது3 || 2 ||**

**காவலித்3த3வரிகெ காவள கவியிது3**
**தாவாகி3 புரத்3வாரவு தெரெத3வு**
**பாவன சரிதன மாயதி3 நித்3ரேயு**
**தீவிது க2ளரனு மோஹிஸிது3 || 3 ||**

**போ4ஜபதிய ப4யகானகது3ந்து3பி4**
**ராஜீவநேத்ரன்னொய்த3னு வ்ரஜகெ**
**ஶ்ரீ ஜக3தீ3ஶன மேலம்ருதவ நீ-**
**ராஜிஸத3வு மேகா4ளிக3ளு ||4**

**ஸாஸிரப2ணி ப2ணச2த்ரவ மாடி3த3**
**தா3ஶரதி2கெ முன்னம்பு3தி4யு**
**தோஷதி3 தா3ரியனித்தந்த்யமுனேயு**
**ஶ்ரீஶகெ மார்க3வநித்தளு ||5**

**வஸுதே3வ கோ3ஷ்ட2கெ ப3ந்த்3 யஶோதே3யள**
**ஶிஶு து3ர்கே3ய தந்து3 ஸுதநிட்3ட3**
**ஶஶிமுகி2 தே3வகிர்தே3விகெ கொட்டனு**
**ப்ரஸுத ஸுத்3தி4ய கேளித3 கம்ஸ ||6**

**பி3ட்ட மண்டெ3யலெத்3து3 ப3லு லவலவகிய**
**கட்டுக்3ரகோபதி3 நிஶித2த3லி**
**ஹுட்டித3 ஸ்த2லகை3தி3 ப4கி3னிய கையிந்த3**
**து3ஷ்டனு ஸௌத3னு து3ர்கே3யனு ||7**

**அண்ணன கால்பிடி3த3ளுத தே3வகிதே3வி**
**ஹெண்ணுமக3ளு இது3 புருஷல்ல**
**புண்யஸந்தானவனுளுஹெந்தெ3ரெ அகா-**
**ருண்யதி3 கொலலிக்கெ அநுவாத3 ||8**

**ஜக3ஜ்ஜனனியி கால்பிடி3த3ப்பளிஸலு**
**முகி3லிகெ ஹாரித3ளு நகெ3மொக3தி3**
**விக3ட3 கம்ஸனு பெ3த3ரித3 எதெ3தி3கி3லலி**
**க2க3க3ம ப்ரஸந்வேங்கடநியமவிது3 ||9**

5.

ஸ்ரீவல்லபன் இங்கு சிறைச்சாலையில் பிறந்த அதே வேளையில், துர்காதேவி, கோகுலத்தில் பிறந்தாள்.

ப்ரஹ்ம தேவர், ருத்ரர், இந்த்ராதி அனைத்து தேவர்களும் வந்து சேர்ந்தனர். தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனை துதித்தனர். தேவர்கள் வானிலிருந்து பூமழையை பொழிந்தனர். கந்தர்வர்கள் கீதங்களை பாடினர். || 1

வானிலிருந்து தேவ துந்துபி முழங்கியது. தேவ பெண்கள் அனைவரும் பாடல்களை பாடினர். மூன்று உலகங்களும் மங்களமயமாக ஆயிற்று. தேவர்களின் எதிரிகளின் வலிமை குறைந்ததாக ஆயிற்று. || 2

அந்த சிறைச்சாலையில் காவல் இருந்தவர்களுக்கு, இருட்டு பரவியது. அந்த சிறையின் கதவுகள் தானாகவே திறந்தன. பவித்ரமான சரித்திரங்களைக் கொண்டவனான ஸ்ரீகிருஷ்ணனின் மாயையினால் (இச்சையினால் / விருப்பத்தினால்) அவர்கள் அனைவருக்கும் தூக்கம் வந்தது. அஸுரர்களை மயக்கம் கொள்ளச் செய்தது. || 3

போஜ அரஸனான கம்ஸனுக்கு பயத்தை தருவதான துந்துபியை, தாமரைக் கண்ணன் முழங்கினான். ஸ்ரீகிருஷ்ணனின் மேல், மேகங்கள், அமிர்தத்தைப் மழைகளாகப் பொழிந்தன. ||4

ஆயிரம் தலைகளைக் கொண்ட ஶேஷன், தன்னையே குடையாக ஆக்கினான். தாஶரதியான ஸ்ரீகிருஷ்ணனுக்கு, சந்த்ரன் மிகவும் மகிழ்ச்சியுடன் வழியைக் காட்ட, யமுனையானவள் அந்த ஸ்ரீயின் தலைவனுக்கு பாதையை ஏற்படுத்திக் கொடுத்தாள். || 5

வஸுதேவன், ஸ்ரீகிருஷ்ணனுடன் கோகுலத்திற்கு வந்து, யசோதையின் குழந்தையான துர்கையை கொண்டு வந்து, அந்த இடத்தில் தன் குழந்தையை வைத்தான். துர்கையை தன் மனைவி தேவகியிடம் கொண்டு வந்து கொடுத்தான். இத்தகைய குழந்தை பிறந்த செய்தியை பிறகு கம்ஸன் கேட்டு அறிந்தான். || 6

தன் தலை மேல் இருந்த கூந்தலை இழுத்து கட்டிக் கொண்டு, உடனடியாக எழுந்து, அதிக ஆர்வத்துடன், உக்ரமான கோபத்துடன், அர்த்த ராத்திரில் பிறந்த அந்த குழந்தை இருந்த இடத்தினை அடைந்து, தன் சகோதரியின் கையிலிருந்த துர்கையை, துஷ்டனான கம்ஸன் பிடித்து இழுத்தான். || 7

தேவகிதேவியோ, தன் அண்ணனான கம்ஸனின் கால்களை பிடித்து அழுதவாறு, இது பிறந்திருப்பது பெண் குழந்தை, ஆண் குழந்தை அல்ல. புண்ய ஸந்தானமான இந்த குழந்தையை விட்டுவிடு என்று வேண்டினால், கருணை இல்லாதவனான கம்ஸன், அந்த குழந்தையை கொல்வதற்கு தயாரானான். || 8

ஜகத் ஜனனியான துர்கையின் கால்களைப் பிடித்து, அவளை ஒரு பாறையில் அடிக்க தயாரானபோது, அவளோ வானில் தாவி ஏறினாள். புன்னகை பூத்த முகத்துடன் அவனைப் பார்க்க, கம்ஸனோ பயந்தான். விஷ்ணுவான ப்ரஸன்ன வெங்கடனின் நியமமே (ஏற்பாடே) இது ஆகும். || 9

***

**6.** ராக$^{3}$: தெலுகு காம்போதி | தாள: அட்டதாள

**அந்தரிக்ஷாத்$^{3}$பு$^{4}$த நோடி$^{3}$த$^{3}$ ப$^{3}$ஹு-**
**காந்திமையள கண்டு$^{3}$ பா$^{3}$டி$^{3}$த$^{3}$ || ப**

**காந்தெ மாதாதா$^{3}$டி$^{3}$த$^{3}$ளவனொளு ஈ**
**ப்$^{4}$ராந்தியு நினக்$^{3}$யாகெந்த$^{3}$ளு || அப**

**கம்ஸகேளபராதி$^{4}$ நானல்ல நன்ன**
**ஹிம்ஸெ நினகே ஶக்ய தானல்ல**
**பும்ஸனொப்$^{3}$ப$^{3}$ந்யத்ர இஹனு நின்ன**
**த்$^{4}$வம்ஸக்கெ காரணனஹனு || 1 ||**

ப்3ரஹ்மாதி3வந்த்3யளு கன்யளு ஆ-
ஹம்மின க2ளகி3ந்தெந்த3ளு
து3ம்மானத3லி சிந்தெ பி3ட்டனு ப3ந்த4-
நம்மோசனவ மாடி3பி3ட்டனு ||2

வ்யர்த2 நிம்மிப்3பர நோயிஸிதெ3 ஸுஹு-
ஹத்யெகெ காரணனெனிஸிதெ3
ப்ரார்த2னெ மாடு3வெ க்ஷமிஸெந்து3 ஸ-
மர்த2 ஸுஶீலரு நீவெந்து3 || 3 ||

ஶௌரி நுடி3த3னு சிந்த்யாதகெ நீ
காரணனல்லொ ஸுக2து3:க்க2கெ
ப்ரேரக நேமக ஹரிதானு ஸ்ரு-
ஷ்டார பாதார ஹந்தாரனு ||4

கோபவ ஜரிது3 மனெகெ3 ப3ந்து3 பஶ்சா-
தாபதி3 களெத3 யாமவனொந்து3
தா புனரபி பாபக்கௌஸித3 து3ஷ்ட
பாபாத்ம மந்த்ரிகள்ளரெஸித3 ||5

மொத3லந்தெ து3ர்கே3 பா3லிகெயாகி3 தாயி
ப3தி3 மலகி3த3ளு ஹாஸிகெஹொந்தி3
முத3வனித்தளு தாயி தந்தெ3கெ ஶ்ரீ-
யது3கலேந்த்3ரன ப்ரியளெந்தீ3கெ3 || 6 ||

கன்யள மாது மந்த்ரிகளிகெ கம்ஸ
சென்னாகி3 பேளெ பாபிக3ளிகெ
சின்னர ஹிம்ஸெகெ நடெ3த3ரு தை3த்ய-
மன்யேரு ஹிம்ஸாக்ரீடா3பரரு || 7 ||

நந்த3வ்ரஜதி3 நந்த3னராணி நித்3ரெ
ஹொந்தி3ரெ ஸுதன படெ3த3 வாணி
அந்தி3ன ராத்ரிலி கேள்தரு ஆ
நந்தா3ப்3தியலி ஓலாடி3த3ரு || 8

ஆனந்த3ஸாந்த்3ராப்ரமேயனு சது-
ரானன ஹரன ஸ்ருஷ்டாரனு
ஆனந்த3னு யஶோதே3யு தம்ம ஈ
ஸூனுயெந்தெ3ரு நோடி3 அம்மம்ம || 9

தை3வஜ்ஞரு நெரெகொண்டரு பர
தை3வ பா3லகனெந்து3 கண்ட3ரு
தே3வேஶ்வரகெ ஜாதகர்மவ மாடி3த3-
ரு விஶ்வகர்மஜ்ஞ மாத4வகெ ||10

மஹோத்ஸவதி3 நந்த3கோ3பனு அமித
கோ3வு ஹிரண்யரத்நக3ளனு
ஸுவஸ்த்ர அன்ன பூ4தா3னவ பூ4-
தே3வரிகி3த்தனு நிதா4னவ || 11 ||

**ஸுப்ரபா4தத3லி ஒப்பித3 பா3லஸூ-**
**ர்ய ப்ரபா4நந்தனந்தர செல்வ**
**ஸுப்ரீதிகாரணனு ஜனகெதை**
**த்யப்ராணஹரணனு த்ரிபு4வனகெ || 12 ||**

**ஸிங்க3ரிஸித3ர்கோ3பர்கோ3க3ளு கோ3-**
**பாங்க3நேர்மங்க3ள ஸ்வனக3ளு**
**ரங்க3பூர்ணேந்தூ3த3யவாய்து3 அந்த-**
**ரங்க3 தோஷாப்3தி4லி உப்3பி3து3 || 13 ||**

**பங்கஜநேத்ரேரு கோ3பேரு வஸ்தா2-**
**லங்காரவிட்டரு நலித3ரு**
**குங்குமரஸதோ3குளியாட ஶ்ரீ-**
**பங்கஜநாப4 ஹுட்டித3 மாட || 14**

**ப்ரத்யப்3த3 கீவ கப்பவகொண்டு நந்த3**
**ப்ருத்2விபதி கம்ஸன கண்டு3**
**அர்த2வனவனிகொப்பிஸித3னு தன்ன**
**ப்4ராத்ரு வஸுதே3வன கண்ட3னு ||15 ||**

**யமுனிந்த3 ப3ந்து3 கப்பவ தந்து3கொட்டு**
**க3மனகுஜ்ஜுகி3ஸெ ஶௌரஜனந்து3**
**அமிததோத்பாதவு ப்3ருஹத்3வனகெந்த3 கேளி**
**யமன தங்கிய தீரகெ ப3ந்த3 ||16**

**அன்னக்கெ மொத3லெ கம்ஸன தா4த்ரிதே3வ**
**கன்னிகெயந்தெ ஸோகி3ன கா3த்ரி**
**சின்ன புருஷோத்மனித்3த3ல்லிகெ நந்-**
**த3ன்ன வஸ்த்ரத3 க்3ருஹ பொக்காகெ3 || 17**

**ஶிஶுரூப ஹரிய மாயத3லாகே3 தாயி**
**யஶோதே3கெ நித்3ரேயு கவிதா3கே3**
**விஷமரக்கஸி மொலெகொட்டளு ஆகெ**
**யஸு ஸஹ ஹீரித3 த்ருடியொளு || 18 ||**

**ம்ருதளர்த3ளுஸார்த4யோஜனவனு**
**க்ஷிதியன்னு வ்யாபிஸெ வ்ரஜஜன**
**அதியாஶ்சர்யவப3ட3லாகே3 கோ3-**
**பதிப3ந்து3 கண்ட3 ப்3ருஹத்3வனதா3கே3 || 19**

**த்ரைகாலதர்ஷி நம்மண்ணனு அ**
**நேக உத்பாதவ பேள்தனு**
**நா கண்டெ ப்ரஸன்வெங்கடேஷன லீ**
**லாகௌதுகவெந்த நந்தனு || 20**

6. அந்தரிக்ஷத்தில் தாவி நின்ற துர்க்கையை, கம்ஸன் பார்த்தான். ஒளி பொருந்திய தேகத்தைக் கொண்டவளை பார்த்து கலங்கினான். || ப

அந்த துர்க்கையானவள், கம்ஸனிடம் இவ்வாறு பேசினாள். இந்த மயக்கம் (கர்வம் / கோபம்) உனக்கு எதற்கு என்றாள். || அப

ஹே கம்ஸனே கேள். உன்னைக் கொல்லப் போகிறவள் நான் அல்ல. என்னுடைய இம்சை உனக்கு ஏற்றதல்ல. (உன்னால் தாங்க முடியாது). ஆனால், புருஷன் ஒருவன் இன்னொரு இடத்தில் இருக்கிறான், உன்னுடைய த்வம்ஸத்திற்கு (அழிவிற்கு) அவனே காரணமாக இருக்கிறான். || 1

துர்க்கையானவள் ப்ரஹ்மாதி தேவர்களால் வணங்கப்படுபவள். அந்த துஷ்டனான அஸுரனைப் பார்த்து இவ்வாறு (மேற்கூறியவாறு) கூறினாள். இதனைக் கேட்ட கம்ஸன், (அவனிடம் ப்ருகு ரிஷிகளின் ஆவேசம் இருந்ததால், அவ்வப்போது ஸாத்வீகனாகவும் இருந்தான்), தன் கவலைகளை விட்டான். (உடனடியாக தேவகி வஸுதேவர்களிடம் வந்து, அவர்களை சிறையில் அடைத்ததற்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டு) அவர்களை சிறையிலிருந்து விடுவித்தான். || 2

நான் வீணாக உங்கள் இருவரையும் கஷ்டப்படுத்தினான். குழந்தைகளை கொலை செய்ததற்கு நானே காரணம் என்று ஆனேன். நான் உங்களிடம் ப்ரார்த்தனை செய்கிறேன் - என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் நல்ல குணம் படைத்தவர்கள் - என்று கம்ஸன், தேவகி வஸுதேவர்களிடம் கூறினான். || 3

இதைக் கேட்ட வஸுதேவன் இவ்வாறு கூறினார். ஹே கம்ஸனே, ஏன் கவலைப்படுகிறாய்?. எதற்கும் (எந்த சுக துக்கத்திற்கும்) நீ காரணம் அல்ல. அனைத்தையும் ப்ரேரணை செய்பவன், நடத்துபவன், ஸ்ரீஹரியே. ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயங்களுக்கு அவனே காரணம். || 4

பிறகு கம்ஸன் தன் கோபத்தினை குறைத்துக் கொண்டு, வீட்டுக்கு திரும்பி வந்து, அடுத்த ஒரு நாழிகையை பச்சாதாபத்துடன் கழித்தான். பிறகு மறுபடி பாவச் செயல்களை செய்வதற்காக, துஷ்டனான, பாபாத்மனான கம்ஸன், தன் மந்திரிகளை அழைத்தான். || 5

துர்க்கையானவள், கம்ஸனை திட்டியபிறகு, மறுபடி சிறிய குழந்தையாக மாறி, தாயான தேவகியிடம் வந்து படுத்துக் கொண்டாள். தேவகியும் அவளுக்கு தன் படுக்கையில் இடம் கொடுத்து, பால் கொடுத்து அரவணைத்தாள். இந்த துர்க்கையானவள், யதுகுலேந்த்ரனான ஸ்ரீகிருஷ்ணனின் ப்ரியத்திற்கு காரணம் ஆனவள். || 6

துர்க்கை தனக்குக் கூறிய வாக்குகளை, கம்ஸன் தன் மந்திரிகளிடம் கூறி, நன்றாக விளக்கி, ஊரில் உள்ள அனைத்து குழந்தைகளையும் கொல்வோம் என்றான். அவ்வாறே அனைத்து தைத்யர்களும், அனைவருக்கும் இம்சையைக் கொடுப்பதற்காக, குழந்தைகளை கொல்வதற்காக ஊருக்குள் சென்றனர். || 7

நந்தகோகுலத்தில், நந்தகோபனின் மனைவி தூக்கத்தில் இருக்க, அவளுக்கு குழந்தை பிறந்த சத்தத்தினை, அன்று இரவில் அனைவரும் கேட்டனர். அனைவரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். || 8

ஆனந்தமயனானவன், அப்ரமேயன், ப்ரஹ்மதேவர், ருத்ரர் ஆகியோரை படைத்தவன்- என இத்தகைய மஹிமைகளைக் கொண்டவனை, அந்த நந்தகோபன் மற்றும் யசோதை இருவரும் இவன் தங்களின் குழந்தை என்று கூறி மகிழ்ந்தனர், அம்மம்மா (இது என்ன வியப்பு!)?. || 9

தேவர்கள் அனைவரும் மகிழ்ந்தனர். பரதெய்வமே குழந்தையாக வந்து பிறந்துள்ளான் என்பதை பார்த்தனர். அத்தகைய தேவேஶ்வரனுக்கு, ஜாதகர்மத்தை செய்தனர். நந்தகோபன் அந்த மாதவனுக்கு ஜாதகர்மத்தை செய்தான். || 10

மிகவும் விமரிசையாக நடந்த அந்த விழாவில், நந்தகோபன், ஏராளமான பசுக்கள், தங்கம், ரத்னங்களை, மிகவும் மகிழ்ச்சியுடன் தானம் அளித்தான். அன்னம், பூமி, ஆகிய தானங்களை ப்ராஹ்மணர்களுக்கு விதிப்படி அளித்தான் நந்தகோபன். || 11

விடியற்காலையில் ஒளிரும் பால சூரியனைப் போல ஸ்ரீகிருஷ்ணன் ஒளிர்ந்தான். அழகானவன். அனைவரின் மகிழ்ச்சிக்கு காரணன். மூன்று உலகங்களில் இருக்கும் தைத்யர்களின் ப்ராணனை அழிக்கும் காரணன். || 12

கோபனின் பசுக்கள் அலங்கரிக்கப்பட்டன. கோகுலத்து பெண்களின் முகங்கள் பற்பல வண்ணங்களால் அலங்கரிக்கப்பட்டன. அனைவரின் மனதும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியது. || 13

தாமரைக் கண்களைக் கொண்ட கோபிகைகள், வஸ்த்ர அலங்காரங்களை அணிந்து நடமாடினர். ஸ்ரீபத்மனாபன் பிறந்த செய்தியைக் கேட்ட அனைவரும், சிவப்பு நிற தண்ணீர் இறைத்து மகிழ்ச்சியுடன் விளையாடினர். ||14

ஒவ்வொரு ஆண்டும் செலுத்துவதான கப்பத்தைக் கொண்டு, நந்தகோபன் ஊருக்கு சென்று, கம்ஸனைக் கண்டு, அந்த செல்வத்தை அவனிடம் ஒப்படைத்தான். தன்னுடைய சகோதரரான வஸுதேவனையும் அங்கு சந்தித்தார். || 15

யமுனா நதிக்கரையிலிருந்து (நந்த கோகுலத்திலிருந்து) வந்து கப்பம் கட்டிய நந்தகோபனைப் பார்த்து, வஸுதேவர், எனக்கு பல அபசகுனங்கள் தோன்றுகின்றன. நீ இங்கிருந்து உடனடியாக புறப்படு - என்று கூறினார். அதனைக் கேட்டு, நந்தகோபன், யமதேவரின் தங்கையான யமுனையின் தீரத்திற்கு வந்தார். || 16

குழந்தையின் அன்னப்ராஸனத்திற்கு முன்னர், கம்ஸனின் தாஸியான பூதனி என்பவள், தேவகன்னிகையைப் போல தன்னை அலங்கரித்துக் கொண்டு, பெரிய தேகத்தைக் கொண்டவளான அவள், குழந்தையான புருஷோத்தமன் படுத்திருந்த இடத்திற்கு வந்து, நந்தகோபனின் வீட்டிற்குள் நுழைந்தாள். || 17

குழந்தை வடிவான ஸ்ரீஹரியின் மாயையினால் (இச்சையினால்) தாயான யசோதைக்கு கடும் தூக்கம் வந்திருந்தது. கெட்ட எண்ணத்துடன் வந்தவளான அரக்கியான பூதனி, அந்த குழந்தைக்கு தன் முலைப்பாலை கொடுத்தாள். அந்த கிருஷ்ணனோ, தன் உதட்டினால், அவளுடைய உயிரையே அந்த முலை வழியாக இழுத்தான் || 18

இதனால் பூதனியானவள் இறந்து, தன் உண்மையான உருவத்தில் கீழே விழுந்தாள். பார்வதியின் வரம் பெற்றிருந்த பூதனி மலையைப் போல விழுந்திருந்தாள். ஊர் மக்கள் அனைவரும் மிகவும் வியப்புடன் ஓடி வந்து அவளை பார்த்துக் கொண்டிருக்கையில், கோபதியான நந்தகோபன் வந்து இவ்வளவு பெரிய உருவத்துடன் கிடந்தவளை பார்த்தான். || 19

மூன்று காலங்களையும் அறிந்தவனான நம் அண்ணன் (வஸுதேவன்) பல கெட்ட சகுனங்களைக் கண்டு, நடக்கப் போவதை கூறினான். ஆனால், இங்கு நான் கண்டதோ, ப்ரஸன்ன வெங்கடேசனின் லீலா வினோதங்களையே - என்றான், நந்தகோபன். || 20

***

**7. ராக்3 : காந்தாரி | தாள :அட்ட**

**கெணகி கெட்டளு பூதனியு ஹரிகெ3**
**ஸ்தனவ கொட்டு கொல்வெனெம்ப3 ஹவணிகெயிம் || ப ||**

**வனஜப4வாண்ட3 நுங்கு3வன ஹ்ருத்3-**
**வனஜதி3 முனிக3ளிகோ3ளெது3 தோருவன**
**நெனெத3வரக4குலஹரனப4க3வ-**
**ஜ்ஜனரு ஸஜ்ஜனரிகெ ஸுலப4னெநிபன || 1**

**ஸ்ரீலோலனவளெதெ3மேலெ பா3ல-**
**லீலெய தோர்து3 இக்கித3னு சப்பாளெ**
**ஸைலேந்த்3ரனந்தெ பி3த்3த3வள கண்டு3**
**கோ3லிட்டதாக3 கோ3பாலர மேள || 2**

**எத்திகொண்ட3ப்பித3ளு மக3ன கோ3ப-**
**கர்த ஸோஜிக3வெந்து3த்பாத கெ3லித3ன**
**புத்ரங்கே3 க3வ்யாம்ருதத3லி ஸேசி-**
**ஸுத்த கோ3கு²ரபாம்ஸு இட்டு பணெயலி || 3**

**ஸத்பாத்ரரிகெ ஸர்வஸ்வவனு கொட்டு**
**ஸூக்தக3ளிந்தா3ஶீர்வோக்தி படே3த3னு**
**முக்தாமுக்தர ஒடெ3யநிகெ யோகி3-**
**ஹ்ருதீபீட²த3லி ராஜிஸுவ மஹிமகெ || 4**
**ரக்கஸிக3க்3னிய கொட3லு ஆகெ-**
**யக்காய தூ4மாமோத3வாகி3ரலு**
**சிக்க ரங்க3ன பா3யி முட்டிஇ-**
**த3க்காரண ப்ரஸன்வேங்கடந ஸ்ருஷ்டி || 5**

7.
தன்னுடைய கெட்ட எண்ணத்தால் பூதனி கெட்டாள். ஸ்ரீஹரிக்கு முலைப்பால் கொடுத்து கொல்லுவேன் என்னும் நோக்கத்தில் வந்திருந்தாள். || ப

ப்ரளய காலத்தில் அனைத்தையும் விழுங்குபவனின், முனிவர்களுக்கு அவர்களின் இதய கமலத்தில் காட்சியளிப்பவனை, அவனை நினைப்பவர்களின் துன்பக் கூட்டத்தையே அழிப்பவனை, பகவத் பக்தர்கள் மற்றும் ஸஜ்ஜனர்களுக்கு அவன் அடைவதற்கு மிகவும் சுலபம் என்று நினைப்பவனை... || 1

ஸ்ரீலோலலான ஸ்ரீகிருஷ்ணன், அந்த பூதனியை கொன்றபின், தன் பால லீலையை காட்டியவாறு, கை தட்டி சிரித்தான். இமாலய பர்வதத்தைப் போல பெரியதாக விழுந்து கிடந்தவளைப் பார்த்து, கோபாலகர்களின் குழு (கூட்டம்) மிகவும் மகிழ்ச்சியடைந்தது. || 2

தன் குழந்தையை, யசோதையானவள் தூக்கி கொஞ்சினாள். அனைவரின் வியப்புக்கு காரணமாகி, தனக்கு வந்த ப்ரச்னையை வென்றவனை, தன் மகனை, பால் கொண்டு தெளித்து, ஆனந்தக்கண்ணீர் விட்டவாறு நெற்றியில் முத்தமிட்டாள். || 3

நல்ல ப்ராஹ்மணர்களுக்கு அனைத்தையும் தானம் அளித்து, வேத மந்திரங்களால் அவர்கள் அளித்த ஆசிர்வாதங்களை ஏற்றான் நந்தகோபன். முக்தர்கள், அமுக்தர்களின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு, யோகிகளின் இதய கமலத்தில் வீற்றிருக்கும் மஹாமஹிமை கொண்டவனுக்கு.. || 4

அரக்கியான பூதனிக்கு ஸ்ரீகிருஷ்ணன் அக்னியைக் கொடுக்க, அவளின் தேகமானது தூம (புகை) மண்டலமாக மாறியது (அவள் எரிந்தாள்). சிறிய ரங்கனின் வாயை அவள் (தன் முலையால்) தொட்டிருந்த காரணத்தால், அவள் இறந்தாள். இதுவே ப்ரஸன்ன வெங்கடனின் ஸ்ருஷ்டி (முதலான அஷ்ட கர்த்ருத்வங்களின் செயலாகும்). || 5

***

**8. ராக்³ : மோஹன கல்யாணி | தாள :அட்ட**

**புத்ரங்கே³ எரடா³ரனேய தின கோ³பி**
**முத்தைதை³யர கெரெத³ளா தி³ன || ப ||**

**மித்ரேந்துகோடிகளாத்மகெ ம்ருக³-**
**நேத்ரேரலங்கரிஸித³ராகே³ || அ.ப ||**

**முத்துமோரெய முங்குருளாளிய ஸ**
**த்வத்³மராக³த³ அரளெலெய**
**மத்³தி³காயி மகர குண்ட³லகர்ண ஸ்நேஹ**
**ஹொத்³தி³த³ கர்ண காடி³கெக³ண்ண || 1**

**ஸுதே⁴ய ஸெஸுவனாகி³ கூஸிகெ ரத்ன-**
**பத³க ஹாரக³ளொப்பெ ஶ்ரீஶகெ சது³ரேரிட்டரு**
**தம்ம மனோஹர அங்-**
**க³த³ ஹுலியுகு³ரு முத்தினஸர || 2**

**கொரள கௌஸ்துப⁴ முங்கை முரிகெய ஸண்ண**
**பெ³ரளுங்கு³ரத³ முராரிய**
**கிரிக³ண்டெ உடு³தா³ர பு³ல்லிகாயிய ஶ்ரீ-**
**சரணத³ந்துகெ³ கெ³ஜ்ஜெகாயிய || 3**

**தரளனப்பிகொண்ட³ரு தரளெயரு நீல**
**மரிப³ண்டு³ணியர குருளெயரு**
**ஹரிய ஹரிமணி தொட்டிலலிட்டரு ப³லு**
**ஹருஷவார்தி⁴லி ஜோகு³ளிட்டரு || 4**

**ஜோஜோ ஜஷகுலோத்தர கர்ம ஜோஜோ**
**ஜோஜோ ஜலதி⁴ மந்த²ன கூர்ம**
**ஜோஜோ வஸுதே⁴ ஸ்தா²பக கோல ஜோஜோ**
**ஜோஜோ க²லவிதாரண ஶீல || 5**

**ஜோஜோ ப³லிவிதாரக ப்⁴ராத ஜோஜோ**
**ஜோஜோ ஸுரபி⁴ பூ⁴ஸுரநாத²**
**ஜோஜோ வனசராந்வயசர ஜோஜோ**
**ஜோஜோ நவநீதத³ சோர || 6**

**ஜோஜோ ஜிதக²ள பதிவ்ரத ஜோஜோ**
**ஜோஜோ மதிஹீன கலிஹர்த**
**ஜோஜோ த்³ருஹிண ஶங்கர கோ³ப்த ஜோஜோ**
**ஜோஜோ நிகி²ள பு⁴வன வ்யாப்த ஜோஜோ || 7**

**மதிர நயனெயரு ஹாடிதர்ஹீகெ அதி**
**ம்ருது ஸ்வனதிந்தெ ஒப்பிதராகெ**
**யதுகுலதரஸங்கெ ஹஸுளரிகெ வி**
**ஸ்வதலி பூரணெண்டனெயரஸங்கெ || 8**

**மங்க$^3$ள நாமங்க$^3$ளிட்டரு ஸ்ரீ**
**மங்க$^3$ளாக்ஷிதேய ஹணெகி$^3$ட்டரு**
**மங்க$^3$ளாரதிய பெ$^3$ளகி$^3$த$^3$ரு கோ$^3$**
**பாங்க$^3$னேயரு பா$^3$கி$^3$ன ஹிடி$^3$த$^3$ரு || 9**

**அந்தி$^3$ன பா$^4$க்$^3$யக்கெ எணெயில்ல ஸ்ரீ**
**மந்த$^3$ரத$^4$ரவிஷ்ணு கோ$^3$பால**
**நந்த$^3$னெனிஸிகொண்ட$^3$ ஸ்ரீபால நித்யா-**
**நந்த$^3$ ப்ரஸன்வேங்கட நிஜலீல || 10**

8.

குழந்தை பிறந்து 2*6= 12வது நாளன்று, கோபியான யசோதை, அனைத்து சுமங்கலிகளையும் தன் இல்லத்திற்கு அழைத்தாள். || ப

ஆயிரம் சூரியன், ஆயிரம் சந்திரர்களின் ஒளியைக் கொண்டவனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு, மான் போன்ற கண்களைக் கொண்டவர்கள் அலங்காரம் செய்தனர். || அப

அழகான முகம் கொண்டவனுக்கு, சுருள் முடி கொண்டவனுக்கு, ரத்னங்களால் இழைக்கப்பட்ட அரைஞாண் கயிறு கட்டினர். ஆபரண விஸேஷங்களை, மகர குண்டலங்களை அவனது காதில் அழகாக அணிவித்தனர். கண்ணுக்கு மை தடவினர். || 1

அமிர்தத்தை பொழிவதைப் போல, குழந்தைக்கு ரத்ன பதக்கங்கள், மாலைகளை அணிவித்தனர். ஸ்ரீஶனுக்கு பெண்கள் அனைவரும் சேர்ந்து, தங்களுக்கு மிகவும் பிடித்தமானவனுக்கு, புலி நகம் பதித்த முத்து மாலையை அணிவித்தனர். || 2

கழுத்தில் கௌஸ்துப மாலை; கையில் பாம்பு வடிவிலான வளை; சிறிய விரல்களில் மோதிரங்களை முராரிக்கு அணிவித்தனர். சிறிய மணிகள் கட்டிய அரைஞாண் கயிறு. ஸ்ரீசரணங்களில் கொலுசுகளை அவன் அணிந்திருந்தான். || 3

பெண்கள் அனைவரும் வந்து அந்த குழந்தையை எடுத்து அணைத்துக் கொண்டனர். நீல வண்ண சிறிய தேனீக்களைப் போல இருந்தவர்கள், அந்த குழந்தையை கொஞ்சினர். ஸ்ரீஹரியை, பச்சை மணிகள் கட்டிய தொட்டிலில் வைத்தனர். அபாரமான மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியவாறு, குழந்தையை தொட்டிலில் வைத்தனர். || 4

மீன் குலத்தில் பிறந்த சிறந்த செயலை செய்தவனே – ஜோஜோ; தண்ணீரில் பாற்கடல் கடையும்போது உதவிய கூர்மனே – ஜோஜோ; பூமியை மறுபடி தன் இடத்தில் நிறுத்திய வராஹனே – ஜோஜோ; ஹிரண்யகசிபு என்னும் அஸுரனை கொன்றவனே, வீரனே – ஜோஜோ. || 5

பலியை பாதாளத்திற்கு தள்ளிய வாமனனே; காமதேனு வைத்திருந்த அரசர்களின் தலைவனே, பரசுராமனே; கபிகளின் குலத்தவர்களுடன் வனத்தில் ஸஞ்சரித்தவனே, ஸ்ரீராமனே; வெண்ணையை திருடியவனே, ஸ்ரீகிருஷ்ணனே – ஜோஜோ.|| 6

அஸுரர்களின் மனைவிகளின் பதிவிரதத்தை அழித்தவனே, அவர்களை வென்றவனே, பௌத்தனே; மதியில்லாத கலியை கொன்றவனே, கல்கியே; ப்ரஹ்மன், ருத்ரர் ஆகியோர் காப்பவனே; அனைத்து உலகங்களிலும் வ்யாப்தனே – ஜோஜோ. || 7

மயக்கும் கண்களை உடைய பெண்கள் இவ்வாறு பாடியவாறு, மிகவும் ம்ருதுவான ஸ்வரத்துடன் அங்கு நடனமாடினர். யதுகுலத்தின் அரசனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு, அந்த குழந்தைக்கு, உலகத்தில் ஸர்வோத்தமனான அந்த பரமாத்மனை (அவர்கள் கொஞ்சினர்). || 8

மங்கள நாமங்களை அவனுக்கு வைத்தனர். ஸ்ரீமங்கள அக்ஷதையை அவனது நெற்றில் வைத்தனர். மங்களராதியை அவனுக்கு எடுத்தனர். கோபர்களின் மனைவிகள், முறத பாகிணவை பிடித்தனர். || 9

அன்றைய மகிழ்ச்சிக்கு இணையே இல்லை. ஸ்ரீமந்தரதரனான விஷ்ணு கோபால நந்தன் என்று அழைத்துக் கொண்டு, ஸ்ரீயின் தலைவனான, நித்யானந்தனான, ப்ரஸன்ன வெங்கடன் தன்னுடைய உண்மையான லீலையை காட்டினான். || 10.

**

**9. ராக$^{3}$ : சங்கராபரண | தாள :அட்ட**

**ரங்க$^{3}$கெ நமொ பாண்டு$^{3}$ரங்க$^{3}$கெ நமொ || ப ||**

**ரங்க$^{3}$கெ நால்கனேய திங்க$^{3}$ளொளு ஜன்ம ருக்ஷ**
**ஸங்க$^{3}$வாத$^{3}$ தி$^{3}$வஸ ப$^{3}$ஹிர் நிஷ்க்ரமணவு**
**அங்க$^{3}$னெ கோ$^{3}$பெம்ம தன்ன ஸிங்க$^{3}$ன கூடி$^{3}$ மிந்த$^{3}$ளு**
**மங்க$^{3}$ளார்தி பெ$^{3}$ளகி$^{3}$ ரங்க$^{3}$நேயரெல்ல ||1**

**ப$^{3}$ஹலன்ன பானவஸன மஹீஸுரரிகெ இத்து**
**ப$^{3}$ஹு புண்ய கு$^{3}$ணஶீல நந்த$^{3}$கோ$^{3}$பால**
**அஹஸ்யனுத$^{3}$யத$^{3}$லி மஹோத்ஸவ காளிந்தி$^{3}$யலி**
**அஹிஶயன ஶகடத$^{3}$ நெளலினல்லி ||2**

**மலகி$^{3}$ரெ கம்ஸப்ருத்யரொளு ஶகடாக்$^{2}$ய தை$^{3}$த்ய**
**ஔபொக்கு ப$^{3}$ண்டிய தளத$^{3}$லாதன**
**கொலுவெனெம்ப$^{3}$ன காங்க்$^{4}$ரி தளத$^{3}$லவன ஒத்$^{3}$த$^{3}$ பா$^{3}$ல-**
**குளுகுளிஸி ஶகடவு ப$^{4}$க்னவாகி$^{3}$ரெ || 3**

**ப$^{3}$ண்டிகாலி வ்யஸ்தவாத$^{3}$வு துண்டு$^{3}$ துண்டு$^{3}$வாத$^{3}$வு காஷ்ட**
**கண்ட$^{3}$ரு ஜநரு ஆஶ்சர்யகார்யவ**
**பாண்டு$^{3}$ரங்க$^{3}$நெளெய பாத$^{3}$ ப$^{3}$ண்டிய கண்டி$^{3}$புது$^{3}$ண்டெ உ-**
**த்$^{3}$த$^{3}$ண்ட$^{3}$ ம்ருத்யு கெ$^{3}$த்$^{3}$த$^{3}$னெந்த$^{3}$ நந்த$^{3}$தி$^{3}$ நந்த$^{3}$ ||4**

**ஶங்கிஸி கந்த$^{3}$ன்ன அப்பிகொண்ட$^{3}$ளு கோ$^{3}$பெம்ம**
**பங்கஜாக்ஷிகெ$^{3}$ரெத$^{3}$ளு காளிந்தி$^{3}$யல்லி**
**ஸங்க்$^{2}$யெயில்லாதா$^{3}$ஶீர்வோக்தி மாடி$^{3}$ஸி மொலெகொட்டளு**
**ஹுங்கரிஸி க$^{3}$ர்ஜிஸித$^{3}$ கோ$^{3}$ப கோ$^{3}$பிகெ ||5**

**உத்ஸாஹத$^{3}$லி மரெதெ$^{3}$ அச்யுதன்ன என்து$^{3}$ கோ$^{3}$பி**
**வச்சேரேக$^{3}$ங்க$^{3}$ளெ நந்த$^{3}$னங்கீ$^{4}$ரெக$^{3}$கி$^{3}$**
**பஶ்சாத்தாப ஹொந்தி$^{3}$ நாநின்னெச்செத்தெனெந்த்யஶோதெ$^{3}$**
**ஹொச்சி மலகி$^{3}$ஸெ நித்$^{3}$ரெமுத்$^{3}$ரெ ஹொந்தி$^{3}$த$^{3}$ || 6**

**ஶைஶு லீலெய முகுந்த$^{3}$ தா ஶயன மாடி$^{3}$த$^{3}$னு**
**ஶாஶ்வத விஶ்வேக ப்ரஸந்வேங்கட நாத$^{2}$**
**குஶல தி$^{3}$னவல்லி ஶேஷநவதார அச்யுதா-**
**வேஶ ப$^{3}$லராம தோஷத$^{3}$ல்லித்$^{3}$த$^{3}$ ஸமர்த$^{2}$ || 7**

9.
ரங்கனுக்கு நமோ; பாண்டுரங்கனுக்கு நமோ. || ப

ரங்கனுக்கு நான்காம் மாதத்தில், ஜன்ம நக்ஷத்ரத்துடன் ஸங்கமான நாளில், பஹிர்நிஷ்க்ரமண நிகழ்ச்சி நடைபெற்றது. (அந்த குழந்தையை முதன் முறையாக வீட்டை விட்டு வெளியே கோயிலுக்கு அழைத்துச் செல்வது). மனைவியான யசோதை, தன் தலைவனுடன் சேர்ந்து சென்றாள். அனைத்து பெண்களும் சேர்ந்து மங்களாரத்தி எடுத்தனர். || 1

அபாரமான எண்ணிக்கையில், அன்ன, பான, உடை ஆகியவற்றை ப்ராஹ்மணர்களுக்கு தானம் அளித்து, அபாரமான புண்ணியத்தை பெற்றான் நற்குணங்களைக் கொண்டவனான நந்தகோபாலன். அன்று சூர்யோதய காலத்தில், அந்த நிகழ்ச்சி காளிந்தி நதிக்கரையில், பாம்பின் மேல் படுப்பவனான ஸ்ரீஹரியை (ஸ்ரீகிருஷ்ணனை) ஒரு வண்டியின் நிழலில்.. || 2
படுக்க வைத்தனர். கம்ஸனின் சேவகர்களில் ஒருவரான ஶகடாஸுர என்னும் தைத்யன் அந்த வண்டியில் புகுந்து, அந்த வண்டியினால் அந்த குழந்தையை நான் கொல்வேன் என்று வந்தான். ஆனால், அந்த கிருஷ்ணனின் கால் பட்டு, அதனால் தள்ளப்பட்டு, வண்டி சுக்கு நூறாக உடைந்தது. வண்டியின் ரூபத்தில் இருந்த ஶகடாஸுரன், தன் உண்மையான ரூபத்தில் அங்கேயே விழுந்து உயிர் விடுகிறான். ||3

வண்டியானது உடைந்தது. துண்டு துண்டானது. உடைந்து விழுந்த கட்டையை கண்டு மக்கள் மிகவும் வியப்படைந்தனர். பாண்டுரங்கனின் சிறிய பாதமானது, வண்டியை இவ்வாறு உடைக்க முடியுமா? என்று வியந்தனர். கொடூரமான மரணத்தை இவன் வென்றான் என்றான் நந்தகோபன் மிகவும் மகிழ்ச்சியுடன். || 4

பல்வேறாக கேள்விகளை கேட்டுக் கொண்டு, கோபம்மாவான யசோதை, தன் குழந்தையை எடுத்து கட்டிக் கொண்டாள். தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு காளிந்தியில் குளிப்பாட்டினாள். வேத அறிஞர்களால் பல்வேறு வேத மந்திரங்களை சொல்ல வைத்து, ஆசிர்வாதம் பெற்று, குழந்தைக்கு முலைப்பால் ஊட்டினாள். ஆனால், கோபம் கொண்டிருந்த கோபன், யசோதையை, குழந்தையை தனியாக விட்டதற்காக திட்டினான். || 5

அதிக உற்சாகத்தில் இருந்த நான், நம் அச்யுதனை மறந்துவிட்டேன் என்றவாறு யசோதை, கண்ணீர் விட்டவாறு, நந்தனின் கால்களில் விழுந்து வணங்கினாள். மிகவும் பச்சாதாபம் கொண்டு, நான் இனி எச்சரிக்கையுடன் இருக்கிறேன் என்றவாறு யசோதை, அந்த குழந்தையை தூங்க வைக்க, குழந்தையும் தூங்கத் துவங்கியது. || 6

குழந்தையாக தன் லீலையை காட்டிய முகுந்தன், தான் படுத்து உறங்கினான். நிரந்தரமானவன். உலகத்தில் ஒரே நாயகனான ப்ரஸன்ன வெங்கடநாதன், அந்த மங்களமான நாளில், ஶேஷனின் அவதாரமான, அச்யுத ஆவேசம் கொண்ட, பலராமன், மிகவும் மகிழ்ச்சியில் இருந்தான். || 7

***

**10. ராக்3 :கன்னட3கௌ3ள | தாள :ஏகதாள (ஜக்கணி)**

**ஏதத்பூர்வதி மது3ரெலி மஹா**
**பாதகி கம்ஸ யோஜனெயல்லிஹா**
**பூஜெ தே3வகி க3ர்ப்ப4ஜாதர தா**
**கா4திஸுவெனெம்ப ஸத்வர || 1**

**வஸுதே3வ தே3வகியிப்ப3ர ஶ்ருங்க்2ரு**
**ளிஸி உளித ஶௌரி ஹெண்டி3ர**
**ப3ஸிரு பல்லடிப அஞ்ஜிகெயல்லி ஆ அ**
**ரஸி ரோஹிணியனிட்ட தூ3ரத3லி || 2**

**வரரோஹிணி க3ர்பி4ணி த4ந்யெ ஶ்ரீ-**
**புருஷோத்மநவதாரத3 முந்நெ**
**வரகோ3குலதி3 த்ரிமாஸகெ ஹரி**
**க்3ஹிரிய புத்ரந படெ3த3ளு ஆகெ ||3**

**பூரணேந்து3 களெய ஶ்ரீ ப3லப4த்3ரஸா-**
**ஸிரப2ணநவதார கு3ணஸாந்த்3ர**
**வர ஶுக்லகேஶாவேஶனு க3ட3 நித்ய**
**ஹருஷதி3 பெ3ளெத3ரிப்3ப3ரு க3ட3 || 4**

**ரோஹிணி தே3வகி வஸுதே3வ முந்நெ**
**மஹா தபவ மாடெ3 வாஸுதே3வ**
**ஶ்ரீஹரி ப்ரஸந்வேங்கட க்ருஷ்ண ஸேவெ**
**கை3 ஹிரியனு த்3விதியங்கே3ஷ்ட ||5**

10.
இதற்கு முன்பாக, மதுரையில் மஹா பாதகியான கம்ஸன், பெரும் யோசனையில் இருந்தான். தேவகியின் கர்ப்பத்தில் பிறந்தவர்களை நான் கொல்வேன் என்று சபதம் செய்தான். || 1

வஸுதேவ தேவகி இருவரின் வேண்டுகோள்களை கேட்டு, அவர்களை விட்டு வைத்தான். வசுதேவனின் மனைவியின் கர்ப்பத்தை வேறு இடத்தில் மாற்றிவிடுவானோ என்ற பயத்தில், வஸுதேவனின் முதல் மனைவியான ரோஹிணியை அவர்களிடமிருந்து பிரித்து தூரமாக வைத்தான், கம்ஸன். || 2

சிறந்தவளான ரோஹிணி, கர்ப்பிணியான அவள், ஸ்ரீபுருஷோத்தமனின் அவதாரம் ஆவதற்கு முன்னர், கோகுலத்தில் ஸ்ரீஹரி பிறப்பதற்கு முன்னர் (ஸ்ரீகிருஷ்ணனின் அவதாரம் ஆவதற்கு முன்னர்), தன் புத்திரனை (பலராமனை) பெற்றாள். || 3

ஸ்ரீபலராமன், பூர்ண சந்திரனின் களையைக் கொண்டிருந்தான். ஆயிரம் தலைகளைக் கொண்ட பாம்பின் அவதாரம் அவன். நற்குணங்களின் இருப்பிடம். வர ஶுக்ல கேச ஆவேஶம் கொண்டவன். இவ்வாறு பிறந்த இவர்கள் இருவரும் (கிருஷ்ண பலராமர்கள்) மிகவும் மகிழ்ச்சியுடன் வளர்ந்து வந்தனர். || 4

ரோஹிணி, தேவகி, வஸுதேவ ஆகியோர் மிகச் சிறந்த தவத்தினை செய்திருக்க, வாஸுதேவனான ஸ்ரீஹரி ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணன், அவர்களின் சேவையை பெற்றுக் கொண்டான். ||5

**

**11. ராக்$^3$ : தெலுகு காம்போதி | தாள : அட்ட**

**ஈ தம்மநெ பரபொ$^3$ம்ம**
**ஈ தம்மந மக$^3$நேவெ பொ$^3$ம்ம || ப**

**ஒம்மாநொம்மெஅம்மியுணுதாகளஸித$^3$**
**ரம்யவத$^3$நதி$^3$ கண்ட$^3$ளுதாந்யஸோதெ$^3$**
**ஸமஸ்த பு$^4$வன கண்ட$^3$ளாஸ்சர்ய**
**பொ$^3$ம்மாண்ட$^3$தெள$^3$லக$^3$ண ஹொரக$^3$ண ஸ்தி$^2$திய ||1**

**ப்$^3$ரஹ்மஸேந்த்$^3$ர ரவிமுக்$^2$ய நிர்ஜரர**
**ஸமூஹகதி$^4$க த்$^3$வீபக$^3$ள விஸ்தார**
**தம்மாநந்த$^3$மய ஸ்வரூபவனு**
**ரமேயரஸ தாயிகெ தோரித$^3$னு ||2**

**அம்ம கண்முச்சி பெ$^3$த$^3$ரித$^3$ளு தாநு**
**தா மத்தெ ப$^3$ச்சிட்டனு ப்ரபஞ்சவனு**
**அம்மா அம்மேயெந்து$^3$ மாயத$^3$ளித$^3$னு**
**ஸும்மனஸரநாள்வ ஸர்வஜ்ஞ தாநு || 3**

**மகன மாயதி மோஹிஸிதளு கோபம்ம**
**மகுவெ பாயெந்து லாலிஸிதளம்மம்ம**
**ஜகதீஸ்வரன தன்ன தொடெய மேலிட்டு**
**பகெ பகெயாடிஸிதளு முதபட்டு || 4**

**தாயிய தொடெய மேலாடுவ பஸுளெ**
**ஸைலகூடத பாரதந்தாகெ அபலெ**
**ஆயாஸதிந்திளெகிளுஹிதளாகெ**
**வாயு சக்ரோத்பாதவு பரலிக்கெ || 5**

**ஏனாயிது மககெனுதஞ்ஜுதிரலு**
**ஸ்ரீநாதகளுகில்ல குளித ஜடதொளு**
**ஹீன த்ருணாவர்த்தனவ கம்ஸப்ருத்ய**
**தாஎனத்தி ஒப்பனு அணுகனா தைத்ய || 6**

**கனசக்ரவாததொளவனஞ்ஜிஸுத**
**தனயன ஒய்யிரலஞ்ஜுத அளுத**
**வனவில்லத மொனதந்தாவு வத்ஸ**
**வனு காணதந்தெ மருகிதளத்யந்த || 7**

**களகந்தரிக்ஷதி மாடித ஸிக்ஷா**
**இளெய ம்யாலெ கெடவ்யாதன வக்ஷ**
**தலி ஆடுதித்தனிருத்தாம்புஜாக்ஷ அ**
**சலதந்தெ பித்தனு ருக்ஷாங்க கக்ஷா || 8**

**ஹிண்டு கோபரு இத கண்டாஸ்சரியதி**
**புண்டரீகாக்ஷன கொண்டாடி ஸுகதி**
**கண்டஹெண்டிரு மகனப்பிதராக உ**
**த்தண்ட உத்பாத கெலிதனு ரங்க || 9**

**அஹோ பாபியிந்து ஹதனாதனெந்து**
**மஹா விஸ்மயெந்து வ்ரஜாந்தஸ்தரந்து**
**பஹூ புண்ய நந்தயஶோதெயதெந்து**
**அஹல்யாதவார்த்தி லோலாடிதரந்து || 10**

**ஸ்ருஷ்ட்யாதி$^{3}$ காரணக$^{3}$ச்சரியல்ல**
**ஶிஷ்டஜன ப்ரதிபால ஶ்ரீநல்ல**
**து$^{3}$ஷ்டகுலாந்தர ப்ரஸந்வேங்கடலீல வி-**
**ஶிஷ்டாநந்த$^{3}$ ஸமுத்$^{3}$ரகல்லோல ||11**

11.
இந்த குழந்தையே பரப்ரஹ்மன்; இந்த குழந்தையின் மகனே சதுர்முக ப்ரஹ்மதேவர். || ப

ஓரிரு முறைகள், முலைப் பால் உண்டவாறு, கொட்டாவி விட்டுக் கொண்டான். இதையே யசோதையானவள், மிகவும் மகிழ்ச்சி கொண்ட முகத்துடன் / மனதுடன் பார்த்தாள். அந்த சிறிய வாயில், மொத்தமான உலகினை மிகவும் வியப்புடன் பார்த்தாள். ப்ரஹ்மாண்டத்தையும், அதன் அக / புற நிலையையும் அவன் வாயில் பார்த்தாள். || 1

ப்ரஹ்ம, ருத்ர, இந்த்ர, சூர்ய மற்றும் பல முக்கியமான தேவதைகளின் கூட்டத்தையும், அனைத்து த்வீபங்களையும் (தீவுகள்), ஆனந்தமய ஸ்வரூபனான, ஸ்ரீரமாதேவியின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணன், தன் வாயில், தன் தாய்க்கு காட்டினான். || 2

தாயான யசோதை, இதனை பார்த்து, கண் மூடியவாறு பயந்தாள். ஸ்ரீகிருஷ்ணன் மறுபடி தான் காட்டிய ப்ரபஞ்சத்தை மூடி வைத்தான். அம்மா, அம்மா என்று மாயையுடன் அவளை கூப்பிட்டான். அனைத்து தேவதைகளையும் ஆள்பவனான ஸர்வஜ்ஞன் தான் இவ்வாறு லீலைகளை செய்தான். || 3

தன் மகனின் மாயையினால் கோபம்மாவான யசோதை மயங்கினாள். குழந்தையே, இங்கு வா என்று அவனை படுக்க வைத்தாள் அவள். ஜகதீஸ்வரனான ஸ்ரீகிருஷ்ணனை தன் துடையின் மேல் வைத்து, மிகவும் மகிழ்ச்சியுடன், பற்பல வகைகளில் கொஞ்சி விளையாடினாள். || 4

தாயின் துடையின் மேல் விளையாடும் குழந்தை, ஒரு பெரிய மலையை போன்ற பாரம் கொண்டவனாக ஆகிவிட, அந்த தாய், மிகவும் சோர்வடைந்து, அவனை கீழே இறக்கி வைத்தாள். சுற்றி அடிக்கும் வாயு காற்றைப் போல தலை சுற்றியது அவளுக்கு. || 5

குழந்தைக்கு என்ன ஆயிற்றோ, என்று பயம் கொண்டாள். ஸ்ரீநாதனானவன், பூமியில் அமர்ந்தான். அப்போது கம்ஸனின் ஸேவகனான த்ருணாவர்த்த என்னும் அஸுரன் அங்கு வருகிறான். அந்த குழந்தை தூக்கிக் கொண்டு, அந்த அஸுரன் மேலே செல்கிறான். || 6
அபாரமான சூறாவளியின் ரூபத்தில் வந்து குழந்தையை தூக்கிக் கொண்டு மேலே செல்கிறான். அனைவருக்கும் பயம் காட்டியவாறு அவன் சென்றான். தன் மகனை காணாமல், தாயானவள் பயந்தவாறு, அழுகிறாள். தண்ணீர் இல்லாத மீன் போல அவள் துடிக்கிறாள். தன் மகனை காணாமல், கடுமையாக கவலைப்படுகிறாள் யசோதை. || 7

ஸ்ரீகிருஷ்ணன், அந்த அஸுரனுக்கு வானில் தக்க தண்டனையை கொடுத்தான். அந்த அஸுரனை பூமியில் தள்ளி, அவனைக் கொன்று, அவனின் மார்பில் ஏறி நின்று விளையாடிக் கொண்டிருந்தான், அனிருத்தன். தாமரைக் கண்ணன். அந்த அஸுரனோ, மலை போல விழுந்தான். அவன் க்ரூரமான அஸுரன். || 8

அனைத்து கோபாலகர்களும் இந்த சம்பவத்தைக் கண்டு மிகவும் வியப்புடன், புண்டரீகாக்ஷனை மகிழ்ச்சியுடன் கொண்டாடினார்கள். கணவன் மனைவியான நந்தகோப, யசோதை, தங்களின் குழந்தையை இழுத்து அணைத்துக் கொஞ்சினர். மிகப்பெரிய துன்பத்தை, ப்ரச்னையை மிகவும் சுலபமாக வென்றான் ரங்கன். || 9

அஹோ பாபி, இவன் இறந்தான் என்று அனைவரும் கூவினர். இது மிகப்பெரிய அதிசயம் என்று அனைத்து மக்களும் கூறினர். இத்தகைய குழந்தையைப் பெற்றது நந்தன், யசோதை செய்த மிகச் சிறந்த புண்ணியம் என்றனர். இவ்வாறாக தொடர்ந்து இந்த செய்தியை (தகவலை) அனைவரும் பேசிக் கொண்டிருந்தனர். ||10

ஸ்ருஷ்ட்யாதிகளுக்கு காரணனான இவனுக்கு இந்தச் செயல் என்பது வியப்பே இல்லை. தன் பக்தர்களை காப்பவன் இவன். ஸ்ரீதேவியின் தலைவன். துஷ்டர்களின் குலத்தையே அழிப்பவன். ப்ரஸன்ன வெங்கடனின் லீலைகள் நமக்கு சிறப்பான ஆனந்தத்தை கொடுப்பவை. சமுத்ரத்தின் அலைகளைப் போல அவை (அந்த ஆனந்தம்) தொடர்ச்சியாக நமக்கு கிடைக்கின்றன. ||11

**

**12. ராக்3 :மேச்சபௌ3ளி | தாள :ஏகதாள**

**லலிதலீலெய தோருவெநெந்து3 தா**
**ப3லநிந்த3 கூடி3 ப4குதப3ந்து4**
**பெ3ளெத3ந்தெ தோரி கோகுலதொளகெ**
**எளெ கெ3ளெயரிந்த3வ ப3லுப்யாகெ3 ||1**

**நவநீதஸாரநாத3வ சோர**
**நவயுவதியரிகெ மநோஹர**
**அவரவர்யோக்3யதேயநுஸார**
**ஸவிதோரிதா3 நந்த3குமார ||2**

**கெலவு கோ3பியரதி முத்3தி3பரு**
**கெலவு கோ3பியரொம்மெ க்ருத்3தி4பரு**
**பெ3ளதி3ங்க3ள நீல மையவரு**
**செலுவிகெயலி த2ளத2ளிஸிஸுவரு ||3**

**வீர யாத3வர புரோஹிதனு**
**ஶௌரி களுஹலல்லிகா3தனு**
**தீ4ர முநீந்த்3ர க3ர்க3நுப4யரிகெ க்ஷ-**
**த்ரேர ஸம்ஸ்கார மாடி3த3நாகெ3 ||4**

**நின்ன மக3னு ஸாக்ஷாத்3விஷ்ணு**
**நின்ன புண்யப2லதாயிஷ்டு**
**நின்ன மக3நெம்பௌவ மோஹவ பி3டு3**
**த4ன்யநாதெ3 கோ3பதி கேளு ||5**

**ஈதஶஔரஜ தே3வகிஜாத அ-**
**ஜாதகெ ஜாதநெம்பு3து3 மித்2ய**
**ஈதநிந்த3 ஸர்வபூ4தகெ ஸ்ருஷ்டி**
**ஈதநெ பு4வனவ்யாப்தனு க3ட்டி ||6**

**ஈத நாராதி4பர்பொ3ம்மாதி3கரு**
**ஈத ப்ரஸந்வேங்கட ஜக3த3கு3ரு**
**ஈ தெர உபதே3ஶிஸி நடெ3த3**
**ஆதுரத3லி தன்ன ஸ்தா2னகெ ஹோத3 ||7**

12

அற்புதமான லீலைகளை காட்டுவேன் என்று சொல்லிக் கொண்டு, தான் பலராமனுடன் கூடி, பக்தர்களை காப்பவனான ஸ்ரீகிருஷ்ணன், தான் விரைவாக உயரமாக வளர்ந்ததாக காட்டிக் கொண்டு, கோகுலத்தில், தன் உற்றார், உறவினர், நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். || 1

வெண்ணெய் முதலியவற்றை திருடி, 'சோர' என்று பெயர் பெற்றான். இளம் பெண்களின் மனதினை கவர்ந்தவன். அவரவர்களின் யோக்யதைக்கு ஏற்ப, அவரவர்களுக்கு நந்தகுமாரனான ஸ்ரீகிருஷ்ணன், மகிழ்ச்சியை கொடுத்தான். || 2

சில கோபிகைகள் அவனை கொஞ்சுவார்கள். சில கோபியர்கள் அவனை வெறுப்பார்கள். பூர்ண சந்த்ரனைப் போல நீலமான வண்ணம் கொண்டவர்களான கிருஷ்ண, பலராமர்கள், அழகில் மிகச் சிறந்தவர்களாக இருந்தனர். || 3

வீர யாதவர்களின் புரோஹிதர் - முனிவர்களில் சிறந்தவரான கர்காசார்யார். அவரை வஸுதேவன் அழைத்து, ஸ்ரீகிருஷ்ண பலராமர்கள் இருவருக்கும் க்ஷத்ரியர்களுக்கு உண்டான ஸம்ஸ்காரங்களை செய்ய வேண்டும். இந்த விஷயம் கம்ஸனுக்கு தெரியக்கூடாது என்று கூறினார். அதன்படியே கர்காசார்யரும், கோகுலத்திற்கு விரைந்து, அந்த ஸம்ஸ்காரங்களை செய்தார். || 4

கர்காசார்யார், நந்தகோபனிடம் சொல்கிறார். உன்னுடைய மகன் ஸாக்ஷாத் விஷ்ணுவே ஆகிறான். உன்னுடைய புண்யத்தின் பலன்களால் இவ்வாறு ஆகியிருக்கிறது. அவன் உன்னுடைய மகன் என்னும் மோஹத்தை விட்டுவிடு. இவனை பெற்றதால், நீ மிகவும் தன்யன் ஆகியிருக்கிறாய், நந்தகோபனே, கேள் - என்றார். ||5

இவன் வஸுதேவனின் மகன்; தேவகியில் பிறந்தவன் (என்றெல்லாம் கூறக்கூடாது). பிறப்பே இல்லாதவனுக்கு, பிறப்பு வந்தது என்று சொல்வது மித்யை (உண்மை இல்லை). இவனாலேயே அனைத்து பூதங்களுக்கும் ஸ்ருஷ்டி வந்திருக்கிறது. இவனே புவனம் முழுக்க வ்யாப்தனாக இருக்கிறான். ||6

இவனையே ப்ரஹ்மனே முதலான அனைவரும் ஆராதனை செய்கின்றனர். இவனே ப்ரஸன்ன வெங்கடன். இவனே ஜகத்குரு. இவ்வாறாக உபதேசம் செய்து, கர்காசார்யார் அங்கிருந்து மறுபடி தன்னுடைய இருப்பிடத்திற்கு திரும்பினார். ||7

**

13. **ராக்$^{3}$ :மோஹனகல்யாணி | தாள :ஏகதாள**

**கரசரணங்க$^{3}$க$^{3}$ள ஸ்பருஶதி$^{3}$ கோ$^{3}$ஷ்ட$^{2}$வ பரமபவித்ரவ மாடி$^{3}$ ஸம்-**
**சரிபரு நலினலிதா$^{3}$டி$^{3}$ ஸ்ரீ ஹரிப$^{3}$லரீர்வரு கூடி$^{3}$**
**ஹரிஹரிதை$^{3}$தி$^{3}$ கெஸரினலி சிலிபிலி ப$^{3}$ரிமைய்யர்ப$^{4}$க$^{3}$ர நோடி$^{3}$ ||1**

**அகடகடென்னுது ஸகி$^{2}$ ரோஹிணி கோ$^{3}$பிகுமாரரனப்புவளு பா$^{3}$-**
**லகர ஸெரகிலொரஸுவரு அவர்முக$^{2}$வ நோடி$^{3}$ நகு$^{3}$திஹரு**
**ஸுக$^{2}$பூர்ணரு ஜனனிகராக்$^{3}$ரதி$^{3}$ தாவ் களகள நகு$^{3}$திஹரு ||2**

**ஹரி தாய் நிரியலி ஹருஷதி³ நிந்து³ சப்பரித³ம்மியனும்பு³வனு தன்ன-**
**கிரினகே³ ஜொல்பாயியனு பாய்தெ³ரேயென பல்தோருவனு**
**பரமபுருஷ பெத்தரிகுபகரிஸூத சிரஸுக²வம் பீருவனு ||3**

**தனயர உலுஹிலி மனெகெ³லஸங்க³ளு இனிது நடெ³யலில்லாக³ ஆ-**
**ஜனநேரு மோஹிபராக³ தம்ம தி³ன தக்காட்டத³லீக³**
**அணுஅணு கரிஶாவகத³ந்த³தி³ ரிங்க²ணவிடு³வர் ப்³யாக³ ப்³யாக³ ||4**

**இருகளுபஶு நீருரிக³ஞ்ஜரு க்ஷண க்ஷணக்ஹரிதா³டு³வரல்லி அஸி-**
**யரு ஹிடி³ஹிடி³ தஹரல்லி தாயரிகொப்பிபரு நகு³தலி எளெ**
**க³ருக³ள பா³லவ ஜிகி³ஜிகி³தெ³ளெவரு நடெ³வரு அர்தி²யலி ||5**

**புச்ச²விடி³யெ பெ³த³ர்வத்ஸக³ளோட³லு அச்யுத கூகி³ அஞ்ஜுவனு ஜன**
**கச்சரியவ தோருவனு தா ஸ்வேச்ச்²ஏகலீலான்விதனு**
**ஒச்செரெக³ங்க³ள்யஶோதே³யு பி³கி³த³ப்பெ பெ³ச்சித³ந்திஹ கேஶவனு ||6**

**ஸரிய தரளரொளு ஹிரியக்³ரஜனொளு பரிபரி க்ரீடெ³யநாடெ³ அல்லி-**
**ஹரிணாக்ஷியர்ப³ந்து³ நோடெ³ க⁴ன ஹருஷதி³ ரங்க³ன கூடெ³**
**ஸரஸவனாடி³ ஸோத³ர மாவனணுகே³ரு உருஸுக²வார்தி³லீஸாடெ³ ||7**

**தனுமன ஸூரெய க்ஷணக்ஷணகித்தரு வனஜநாப⁴வன பத³ரதரு ஆ-**
**மனஸிஜ மார்க்³க³ணஹதரு மத்தினிகோ³லன ஸந்மதரு**
**அனுதி³ன நந்த³ன ஸுதன நெனஹினலி முனிபரி த்⁴யானங்க³தரு ||8**

**தொத³லு ம்ருது³லனுடி³ வதி³ஸுவ மெல்லனெ வேத³வேதா³ந்த விக்²யாத த-**
**ன்னுத³ரதி³ந்த³ஜன பெத்தாத ம்ருது³ பத³ந்யாஸவ கலித**
**ஹதி³னால்கு பு⁴வனவ வத³னதி³ தோரித³ பத³சேஷ்டக ஹ்ருந்நாத² ||9**

**பட்டஸாலெயலி த³ட்டஸாலிக்கிஸி த³ட்டடி³ நோடி³ ஹிக்³கு³வளு நன்ன**
**புட்ட த³ணிதெ³யெம்பு³வளு மொலெகொட்டு மை தடு³வுவளு த-**
**ன்னுட்ட ஸீரெய மேலெ க்ருஷ்ண குணிஸித³ள் அட்டஹாஸதி³ யஶோதே³யளு ||10**

**இந்து³வத³னெ தன்ன கந்த³கே³ மொலெகொ³ட³லொந்த³ம்மியுண்டு³ சப்பிரிவ ம-**
**த்தொந்த³ம்மிலி கையிடு³வ கோ³விந்த³ மோரேய நோடி³ நகு³வ**
**நந்த³ன ராணிய நந்த³கெ³ ஸரியில்ல ஹிந்த³ண ஸுக்ருத ஸுபா⁴வ ||11**

**கால நாமகனிகெ கால்ம்யால்மலகிஸி பால்பெண்ணெய நீடு³வளு ஶ்ரீ-**
**லோலகெ நித்³ரெ பே³டு³வளு தொட்டில்லொளிட்டு ஜோகு³ள்ஹாடு³வளு**
**பா⁴ள்வவ் ப³ருதிவெ கந்த³ முகுந்த³ பா³லக மலகெம்பு³வளு ||12**

**பா³லக்ரீடெ³யலஜாண்ட³வாளுவ ஶ்ரீலலனெய வல்லப⁴னு தா-**
**ஓலாடி³ ஆனியாடு³வனு சப்பாளி ஹொன்னுகு³ப்³பியாடு³வனு விஶ்வ-**
**பாலக ஶிக்ஷக ஜோகி³கெ அஞ்ஜி கோ³பாலர பா³லனந்திஹனு ||13**
**தோளந்நாடு³வ தோள்ஜக³த³ம்பெ³ய லாலிஸுவ தலெகி³ம்பு³ அம்பே³**
**கா³லின தவக விட³ம்பு³ மத்தாலலதெ³லெய லயத³ம்பு³**
**ஆலயத³வனிகெ தொட்டில நித்³ரெய ஹேளுவுதே³ ப்⁴ரமெகி³ம்பு³ ||14**

**ஆ ப்ரளயதி³ து³ர்கா ப்ரார்தி²ஸி ஶ்ருதிரூபதி³ கடெ³கா³ணளந்தெ அ**
**தே³ பரப்³ரஹ்மனிவனந்தெ ஸுரதாபஸரிகெ ப்ரபு⁴வந்தெ**
**ஶ்ரீ ப்ரஸந்வேங்கட உபநிஷத்³வேத்³யகே³ கோ³பிய ஜோகு³ளவந்தெ ||15**

13

தன்னுடைய கர, சரணங்களின் ஸ்பர்ஶத்தினால், ஸ்ரீகிருஷ்ணன் கோகுலத்தினை பரம பவித்ரமாக ஆக்கினான். ஸ்ரீகிருஷ்ண, பலராமர்கள், குதித்து ஆடியவாறு அங்கு ஸஞ்சரித்தனர். வனங்களில், சேற்றினில், விளையாடிக் கொண்டிருக்கும் இந்த இரு சிறுவர்களை பார்த்து.. ||1

திட்டுவதாக சொல்லிக் கொண்டு முணுமுணுத்தவாறு, ரோஹிணியானவர், கோபி குமாரர்களை அடிப்பதாக நடிக்கிறாள். சிறுவர்கள் சேற்றினை அவளது புடவைத் தலைப்பில் துடைத்துக் கொள்கிறார்கள். அவளுடைய முகத்தை பார்த்து இவர்கள் சிரிக்கிறார்கள். எப்போதும் மகிழ்ச்சி நிரம்பியவர்கள். தாயின் கையில் வந்து சேர்ந்து, எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். || 2

ஹரியானவன் தான் தண்ணீரில் நின்றுகொண்டு விளையாடுகிறான். வாயினை மென்றவாறு, பால் குடிக்கிறான். புன்னகை பூத்த முகத்துடன் சில சமயம் வாய் திறப்பதில்லை. சில சமயம் பல் காட்டுகிறான். பரமபுருஷனான ஸ்ரீகிருஷ்ணன், பெற்றவர்களுக்கு இவ்வாறு மகிழ்ச்சியைக் கொடுத்தவாறு அபாரமான சுகத்தை அளிக்கிறான். || 3

இந்த சிறுவர்களின் குறும்புகளில், வீட்டு வேலைகள் எதுவுமே சரியாக நடைபெறாததால், அந்த கோகுலத்து தாய்மார்கள், மந்திரத்தால் கட்டுப்பட்டவர்களைப் போல அதில் மயங்கி நிற்க, அந்த சிறுவர்களோ, தினமும் நடப்பதைப் போலவே, குட்டி யானைகளைப் போல அடி மேல் அடி வைத்து நடந்து சென்றனர் வேகவேகமாக. || 4

எருது, பசு, தண்ணீர் என எதற்கும் இவர்கள் பயப்படுவதில்லை. ஒவ்வொரு நொடியும் ஓரிடத்தில் நிற்காமல், வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறார்கள். பெண்கள் அவர்களை துரத்திப் பிடித்து, மறுபடி தாயிடம் கொண்டு வந்து ஒப்படைக்கிறார்கள். சிரித்தவாறு சிறிய கன்றுக்குட்டியின் வாலினை பிடித்து இழுக்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சியுடன் அங்கும் இங்குமாக நடக்கிறார்கள். || 5

வாலினை இவர்கள் பிடித்து இழுக்கையில், பயந்த கன்றுக்குட்டிகள் ஓட, அச்யுதன் அதற்கு பயந்தாற்போல காட்டிக் கொள்கிறான். மக்களுக்கு ஆச்சரியத்தை காட்டுகிறான். தன்னுடைய இஷ்டப்படியே தன் லீலைகளை செய்பவன் அவன். யசோதை திட்டுவதைப் போல செய்து, இழுத்துக் கட்டிக் கொண்டால், கேசவன், அவளுக்கு நடுங்குவதைப் போல நடிக்கிறான். || 6

தன்னுடைய சம வயது சிறுவர்களுடன், தன் அண்ணனுடன், விதம் விதமான விளையாட்டுகளை விளையாடுகிறான். அப்போது மான் விழிகளைக் கொண்ட பெண்கள் வந்து, மிக்க மகிழ்ச்சியுடன் அவனை பார்க்கிறார்கள். அவனுடன் விளையாடுகிறார்கள். தாய் மாமனின் சேவகர்கள் அபாரமான சுகக் கடலில் மூழ்குகிறார்கள். ||7

அனைவரும் தங்களின் உடல், மனம் ஆகியவற்றை ஒவ்வொரு நொடியும் அந்த பத்மனாபனின் பாதங்களிலேயே வைத்தனர். முனிவர்கள் எவ்வாறு பரமாத்மனின் த்யானத்தில் ஈடுபட்டிருக்கிறார்களோ, அவ்வாறே கோபியர்கள் காமத்தின் கூரான அம்புகளால் அடிபட்டு, எப்போதும் கிருஷ்ணனின் த்யானத்தையே செய்து கொண்டிருக்கிறார்கள். ||8

அந்த கிருஷ்ணனின் உதடுகள் மெதுவாக ம்ருது நுடிகளை பேசத் துவங்கியது. வேத வேதாந்தங்களால் அறியப்படுபவன், மெதுவாக நடக்கத் துவங்கினான். இதனைக் கண்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர். அவன் மெதுவாக நடக்க கற்றுக் கொண்டான். 14 உலகங்களையும் தன் வாயில் காட்டிய கிருஷ்ணன், தன் பாதங்களால் சேஷ்டைகளை செய்யத் துவங்கினான். அவன் அனைவரின் ஹ்ருதயத்தில் வசிப்பவன். || 9

தன் வீட்டு முற்றத்தில், சிறிய காலடிகளை வைத்து நடக்கும் கிருஷ்ணனைப் பார்த்து யசோதை மகிழ்கிறாள். என் சிறிய குழந்தை என்கிறாள். தன் முலைப்பால் கொடுத்து உடம்பு முழுக்க தடவிக் கொடுக்கிறாள். தன் உடுத்திய புடவையின் மேல் ஸ்ரீகிருஷ்ணன் அட்டகாசத்துடன் குதித்து விளையாடுவதைப் பார்க்கிறாள் யசோதை. ||10

சந்த்ரனைப் போல முகம் கொண்ட யசோதை, தன் குழந்தைக்கு ஒரு முலையில் பால் குடித்தவாறு, உதடுகளை சத்தம் செய்தவாறு, மற்றொரு முலையில் கை வைக்கும் கோவிந்தனின் முகத்தை பார்த்து, நந்தனின் ராணி சிரிக்கிறாள். அவளது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவளது பூர்வ ஜன்மத்து ஸத்கர்மங்களே தற்போது அவளது ஸ்வபாவமாக வந்திருக்கிறது. || 11

கால என்னும் பெயர் கொண்டவனை, தன் கால் மேல் படுக்கச் செய்து, பால், வெண்ணைகளை பார்க்கிறாள். ஸ்ரீலோலனுக்கு தூக்கம் வரவேண்டும் என்று வேண்டுகிறாள். அவனை தொட்டிலில் வைத்து, தாலாட்டு பாடல்களை பாடுகிறாள். பூச்சாண்டி வருகிறது கந்தனே, முகுந்தனே, குழந்தாய் தூங்குவாயாக என்கிறாள். || 12

தன்னுடைய பால-க்ரீடைகளால் இந்த உலகத்தையே ஆள்கிறான். ஸ்ரீலக்ஷ்மிதேவியின் தலைவன். யானையாக விளையாடுகிறான். கைதட்டி, ஓடியாடி விளையாடுகிறான். உலகத்தையே காப்பவன். அஸுரர்களுக்கு தண்டனை கொடுப்பவன். பூச்சாண்டிக்கு பயந்து கொண்டு, மற்ற கோபாலகர்களின் சிறுவர்களைப் போல இருந்தவாறு, நடிக்கிறான். || 13

தோள்களை ஆட்டி விளையாடுகிறான். தான் தூங்காமல், தன் தாயினை தூங்க வைக்கிறான். மெல்ல காலடிகளை வைத்து, ஓடுகிறான். ஆல இலையின் மேல் படுப்பவனுக்கு, தொட்டிலில் தூங்குமாறு செய்வதே ப்ரமை ஆகும். ||14

அந்த ப்ரளய காலத்தில், துர்காதேவி ஸ்ருதி ரூபத்தில் ப்ரார்த்தனை செய்ய, அவனது மகிமைகளைப் பற்றி எல்லைகளே காண்பதில்லை அவள். அதே பரப்ரஹ்மனே இவன் (ஸ்ரீகிருஷ்ணன்) என்று அவளுக்கு தெரிவதில்லை. தேவர்கள், மனிதர்கள் என அனைவரும் இவனே ப்ரபு (தலைவன்). ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கடன் இவனே. உபநிஷத்களால் அறியப்படுபவன் இவனை, கோபியானவள், தாலாட்டு பாடி படுக்கச் செய்கிறாள். || 15

**

**14. ராக்3 :பை4ரவி | தாள :த்ரிபுட**

**ஜோஜோ நந்த3ன்னகந்த3 கோ3விந்த3**
**ஜோஜோ ஜோஜோ ஸத்3கு3ணஸாந்த்3ர**
**ஜோஜோ நிக3மானந்த ஸுவேத்3ய**
**ஜோஜோ ஜோஜோ பு4வனைகாத்3ய ஜோஜோ ||ப**

**த்ருவி த்ருவி வடபத்ரஶயன காலாத்ம**
**த்ருவி த்ருவி த்ருவி த்ருவி ஸ்ரீபரமாத்ம**
**த்ருவி த்ருவி சதுர்த3ஶ பு4வனாந்தராத்ம**
**த்ருவி த்ருவி த்ருவி த்ருவி ஸ்ரீபரமாத்ம ஜோஜோ ||1**

**லாலி பராத்பர ப்3ரஹ்ம பரம்ம**
**லாலி லாலி க்ஷீராம்பு3தி4 ராம**
**லாலி வைகுண்ட2 முகுதஜனகே3ய**
**லாலிலாலி அம்ருதமய கே3ஹா லாலி ||2**

**ஹோயிஹோயி ஹஸுளெ முத்3து3 மக்க3ல மரியே**
**ஹோயிஹோயி ஹோயிஹோயி அமரர ஸிரியே**
**ஹோயிஹோயி நினகொ3ப்3ப3 சேதன ஸரியே**
**ஹோயிஹோயி ஶ்ரீப்ரஸந்வேங்கட தொ3ரேயே லாலி ||3**

14

ஜோஜோ நந்தனின் கந்தனே, கோவிந்தனே, நற்குணங்களின் கடலே, அனந்த நிகமங்களால் மட்டுமே அறியப்படுபவனே, உலகத்தின் ஆதியே, ஸர்வோத்தமனே. || ப

ஜோஜோ ஆல இலையில் படுத்திருப்பவனுக்கு, கால நாமகனுக்கு, ஶ்ரீபரமாத்மனுக்கு, ஈரேழு பதினான்கு உலகங்களிலும் அந்தர்யாமியாக இருப்பவனுக்கு, ஶ்ரீபரமாத்மனுக்கு ஜோஜோ || 1

லாலி லாலி பராத்பரனுக்கு, ப்ரஹ்மனுக்கு, ஸர்வோத்தமனுக்கு, பாற்கடலில் படுத்திருப்பவனுக்கு, வைகுண்டத்தில் அனைவருக்கும் முக்தியை அளிப்பவனுக்கு, அவர்களால் வணங்கப்படுபவனுக்கு, அமிர்தமயமான இருப்பிடங்களைக் கொண்டவனுக்கு, லாலி. || 2

ஜோஜோ குழந்தைக்கு, அழகான சிறு குழந்தைக்கு, தேவர்களின் தலைவனுக்கு, நீயே ஸர்வோத்தமன். இதுவே சரியான விஷயம். ஶ்ரீப்ரஸன்ன வெங்கட தலைவனே. உனக்கு லாலி. || 3

**

**15. ராக்3 :ரேகு3ப்தி | தாள :அட்ட**

**த்4யானவிது3 மௌனி த்4யானவிது3**
**மானவர்க3ம்ருதத3 பானவிது3 ||ப**

**மொளெவல்லொகு3வ ஜொல்ப3ட்டுபாய**
**பல்லவாத4ரதெ3டெ3 க3ல்லத3 சாய**
**செல்வ முந்த3லெயல்லி அளகத3 ஸொம்பு**
**சல்லெக3ங்க3ளு நோடு3வரிகெ இம்பு ||1**

**தித்3தி3த3 ஹுப்3பு3 காமன பி3ல்லு மாட**
**ஸ்னிக்3த4 பா4லவே ஸுக2வாரிதி4 மாட**
**க3த்3த3வெம்பு3து3 ஸவிமுத்3தி3ன க3ண்டு3**
**முத்3தி3ன முக2 மோக்ஷத3 ஜன நண்டு3 ||2**

**கொரளொளொப்புவ த்ரிரேகெ2யு ஸுந்த3ர**
**உரத3 விஸ்தர ஶ்ரீயளிகெ மந்தி3ர**
**கரயுக3 கரிஶாவகத3 ஶுண்டி3லவு**
**கரதளத 3ங்கு3லி பீயூஷ ப2லவு ||3**

**அதி அதி ம்ருது3டொ3ள்ளு த்ரிவளி ஶோபெ4யு**
**ஸதத க3ர்பி4த பு4வனநாபி4யு**
**அதுல வர்துல ஊரு ஜங்கெ4க3ளிரவு**
**மதிகெ மங்க3ளவு பு3ல்லிகாயி லிங்க3வு ||4**

**ஸிரிகெ ஸிங்க3ரவாத3ருண பாதா3ப்3ஜ**
**அரித்4வஜாங்குஶ வஜ்ராங்கித பாதா3ம்போ4ஜ**
**ஶரதி4ஜாதன கெ3லுவ ஆங்கு3லி நக2வு**
**தரளன்ன நோடி3 நலிவள ஸுக்ருதவு ||5**

**அர²லெளெ தலெ ரன்னகுண்ட³லகர்ண**
**கொரள பத³க ஹார கௌஸ்துப⁴ சின்ஹ**
**ஸரபணி மணி ஸுப்பாணி ஸூஸரவு**
**கரவலய உடி³தா³ர கால்பெண்டெ³ ப்ரபெ⁴யு ||6||**

**கி⁴லிகி⁴லி கி⁴லிகெம்ப அந்து³கெ³ கெ³ஜ்ஜெ**
**எளெநீலஹவள முத்தின ஹுலிகெ³ஜ்ஜெ**
**பெலெயில்லத³ங்க³கெ பெலெயித்³தா³ ப⁴ரண**
**நளினநாப⁴ன லீலெ லோகானுகரண || 7**

**த²ளத²ளிஸுவ இந்த்³ரநீலத³ பி³ம்ப³**
**ஜலதி⁴ஶயனனந்த ஜீவத³ பி³ம்ப³**
**நளினமுகி²யு கோ³பி நோடி³ த³ணியளு**
**லலித ஶ்ரீ க்ருஷ்ணலாவண்யாப்³தி⁴ரதளு || 8**

**கோ³பி நோம்பி பா⁴க்³ய நோடி³ நிர்ஜரரு**
**ஶ்ரீபதியம்மன ப³லுகொண்டா³டி³த³ரு**
**ஈ பரி ஶுகமுனி பேள்த பூ⁴பதிகெ³**
**ஶ்ரீ ப்ரஸன்னவேங்கடக்ருஷ்ண ப⁴க்தனிகெ³ ||9**

15

இதுவே த்யானம். முனிவர்கள் செய்யும் / கூறும் த்யானம் இதுவே. மனிதர்களுக்கு இதுவே அமிர்த பானம் ஆகிறது. ||ப

பால் பற்கள் எனப்படும் சிறிய பற்கள் பிறப்பதான (வளர்வதான) மிகச் சிறந்த வாய். ஒரு முளை வளர்வதைப் போல அழகாக தெரியும் கன்னம். அழகாக தெரியும் முன் நெற்றியில், சுருள் முடிகள் ஒரு கட்டு போல தெரிகிறது. இவ்வளவு அழகான கண்களைக் கொண்ட முகத்தை பார்ப்பவர்களுக்கு மனம் மிகவும் மகிழ்ச்சி கொள்கிறது. ||1

அழகான புருவங்கள், காமனின் வில் போல தெரிகிறது என்கிறார்கள். இந்த பாலகனை பார்ப்பதே, அப்படி பார்ப்பவர்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது. அவனது தாடை என்பது இனிப்பு பதார்த்தம் போல இருக்கிறது. அழகான முகம் என்பது, மோக்ஷம் செல்ல விரும்பும் மக்களின் விருப்பமே ஆகும். ||2

கழுத்தில் தெரியும் மூன்று ரேகைகள் மிகவும் அழகாக இருக்கின்றன. விரிந்ததான மார்பு, ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு இருப்பிடமாக இருக்கிறது. அவனது இரு கைகளும், சிறிய யானைக் குட்டியின் தும்பிக்கை போல இருக்கிறது. அவனது கரங்கள், விரல்கள் ஆகியவை நமக்குத் தெரிவதும்கூட அமிர்தத்தின் பலன் என்பதாலேயே ஆகிறது. || 3

மிகவும் ம்ருதுவான வயிறு, அதில் மூன்று ரேகைகள் அழகானவை. எப்போதும் புவனத்தையே தனக்குள் அடக்கிக் கொண்டிருப்பதான நாபி. வட்ட (உருளை) வடிவமான தொடைகள் மற்றும் கணுக்கால்கள். மற்றும் அந்த குழந்தையின் ஆண் குறியானது மதிக்கு மங்களத்தை தரக்கூடியது. அது அந்த உறுப்பினை மறைக்கும் ஆபரணத்தைக் கொண்டுள்ளது. ||4

ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு மங்களத்தை தரக்கூடியது அவனுடைய சிறிய பாத கமலங்கள். த்வஜ, அங்குஶ, வஜ்ர, அங்கித, ஆகிய சின்னங்களைக் கொண்டதான அந்த பாத கமலங்கள் உள்ளன. கங்கையை இந்த உலகில் கொண்டு வந்தவனின் பாதங்களில் உள்ள விரல்களின் நகங்கள்

ஆகியவற்றை பார்த்து மகிழ்கிறாள் தாயான யசோதை. இத்தகைய பாக்கியம் கிடைத்தது அவளது பூர்வ ஜென்ம ஸுக்ருதமே (ஸத்கர்மங்களே). ||5

நெற்றில் ஆபரணம் அணியப்பட்ட தலை. ரத்ன குண்டலங்கள் அணியப்பட்ட காதுகள். கழுத்தில் பதக்கம், மாலை மற்றும் கௌஸ்துப சின்னம். சரங்கள், மணி மாலைகள், மிகவும் உத்தமமான சங்கிலி மாலைகள், அரை ஞாண் கயிறு, காலில் கட்டப்பட்ட தண்டைகள் ஒளிர்வதாக இருக்கின்றன. ||6

நடக்கையில் கலகல என்று சத்தம் செய்வதான கொலுசு, சலங்கைகள், இள நீல பவழம், முத்து ஆகியவற்றைக் கொண்ட கொலுசுகள். விலைமதிப்பு அற்றவனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு, விலை உள்ளதான ஆபரணங்கள். இத்தகைய பத்மனாபனின் லீலைகள், உலகிற்கு மிகவும் மகிழ்ச்சியை தரக்கூடியதாக இருந்தன. || 7

பளபளப்பதான இந்த்ரநீல (sapphire) கல்லின் பிம்பம்; பாற்கடலில் படுத்திருப்பவனின் பிம்பத்தைப் போல இருக்கிறது. இத்தகைய அழகான குழந்தையை, தாயான யசோதை பார்த்து மகிழ்ந்தாள். அவள், ஸ்ரீகிருஷ்ணனின் அழகினைப் பார்த்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினாள். ||8

இத்தகைய கோபிகையின் யசோதையின் பாக்கியத்தைப் பார்த்து, தேவர்கள், ஸ்ரீபதியின் தாயினை (யசோதையின்) மிகவும் கொண்டாடினர். இவ்வாறு ஶுக முனிவர், அரசனான பரீக்ஷித்திற்கு கூறினார். அவன் ஸ்ரீப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணனின் பக்தன் ஆவான். ||9

***

16. ராக³ :ஸாவேரி | தாள :அட்ட

**நந்த³ன்னர்தா⁴ங்கி³ய ப³ளிகெ³ ப³ந்து³**
**இந்து³ முகி²யயர்ர்க⁴ளிக⁴ளிகெ³ நின்ன**
**கந்த³ து³ருளனெம்பு³வரு நம்ம**
**மந்தி³ர பி³ட³னெம்பு³வரு ||1**

**எளெயனந்தொப்பித³ தாயிகெ³ ப்ராண-**
**கெ³ளெயனந்தப்பித³வரிகெ³**
**லலிதசரிதன சரித்ரெ கோ³-**
**வளெயரு பேள்வுதொ³ந்த³ர்த² ||2||**

**அனந்த கர்மானந்த நி-**
**த்யானந்த பூர்ண அனந்த**
**அனந்த நிக³மக்கெ நிலுக ஸ-**
**தா³னந்த ப்ரஸன்னவேங்கட தோக ||3**

16.
நந்தகோபனின் மனைவியான யசோதையிடம், சந்த்ரமுகத்தைக் கொண்ட கோபியர்கள் அடிக்கடி வந்து, உன்னுடைய குழந்தை மிகவும் குறும்புகளை செய்கிறான். நம் வீட்டை விட்டு வருவதேயில்லை - என்றனர். ||1

பெற்ற தாய்க்கு அவன் சிறிய குழந்தையாக தெரிந்தான். மற்றவர்களுக்கு (கோபிகைகளுக்கு) உயிர் நண்பனாக தெரிந்தான். பரமாத்மன் பால லீலைகளை காண்பிப்பதில், ஒவ்வொரு லீலைகளும் அதிகமான கற்பனைக்கு இடம் கொடுப்பதாக இருந்தாலும், அதைப் பற்றி அறியாதவர்களான

கோபியர்கள், அந்த ஒவ்வொரு லீலைகளுக்கும் வேறு ஏதோவொரு அர்த்தத்தை புரிந்து கொள்ள முயற்சித்தார்கள். || 2

அனந்த கர்மங்களுக்கு சிக்காதவன், நித்யானந்தன், பூர்ணன், அனந்தானந்த ஆகமங்களாலும் அறியப்பட முடியாதவன், ஸதானந்தன். இந்த சிறுவன், ப்ரஸன்ன வெங்கடன். ||3

***

17. ராக³ :பந்துவராளி | தாள :ஏகதாள

**தாளெலாரெவம்மா உபடளவ நந்த³ன்ன ராணி**
**ஹேளபா³ரத³ ஆடவனாடு³வ ||ப||**

**கெனெவாஸொரனு மனத³ணி மெலுவ**
**தனயர நிகரக்கெ உணலித்து நலிவ**
**நின மக³ நம்மெல்லரணுக³ரப³டி³வ**
**வனிதெரிக³ணகிஸி மனெகோ³டி³ ப³ருவ ||1||**

**எளெக³ரு ஆவின மொலையுண பி³டு³வ**
**கெ³ளெயர ஸஹ சப்பளி இக்கி குணிவ**
**கெலெதெ³ர கண்ணு முச்சி குலகி தா நலிவ**
**பால் பெண்ணெ கு³ண்டி³கெ³க³ளனொடெ³ப³டி³வ ||2||**

**ஒரளின மேலொண்டொ³ரள நிலிஸுவ**
**தரளர ஹெக³லேரி ஒரளட³ருவ**
**கரத³லி கோல்விடி³து³ரு க⁴ன பாலதி⁴**
**ஹரவியனொடெ³து³ க³வ்யாம்ருத ஸுரிவ ||3||**

**நாரேரு நெரதீ³ சோரன ஹிடி³யெனெ**
**ஸாரி ஸாரிகெ³ பூத்காரவ மாடு³வ**
**மோரெய மேலுகு³ள்ளாருவ ஹிடி³த³ரெ**
**ஜாருவ நடு³கு³வ தோருவனொம்மெ ||4||**

**அந்தகாரத மந்திர மணிகண**
**திந்தப்ரகாஶிஸி பந்த கோபாலக**
**வ்ருந்தகே கோரஸ சந்ததிந்துணிஸுவ**
**கொந்தணிகிக்குவ தாம் தணியூணுவ ॥5॥**

**கண்டிவனாடவ தண்டிபேவனுதலி**
**துண்டஸியரு பந்தண்டலிதரே ஒள**
**கொண்டேயனிக்கி பௌகண்டர நம்ம பெ³ள –**
**கிண்டலி ஸிலுகிஸி புண்ட நோடிதனௌ ॥6॥**

**ம்ருஷ்டான்னவனட்டிட்டரெ மேஸலு**
**ஜட்டிகராயகெ கொட்டேவனுதிரெ**
**புட்ட கோவளரொளு க்ருஷ்ணனு பந்த**
**த்ருஷ்டிகெ தோரதந்தஷ்டு ஸவிதனௌ ॥7॥**

**ஹட்டிய தேவர கட்டி ஹங்கடதலி**
**கட்டிளெதொய்யனு பட்ட பயலினலி**
**இஷ்டேய தேவரனிட்டஹ ஜகுலிலி**
**விஷ்டிஸி ஓடித அட்டஹாஸதலி ॥8॥**

க்ருஷ்ணனாடுவ துஷ்டாடகே பலு
கஷ்டபட்டு ஆ விஷ்டேய தெகெதெவெ
விஷ்டாமோத விஸிஷ்ட கஸ்துரிகிரிம்
புஷ்டாயிது இன்னெஷ்டு ஸுருவெவெ ॥9॥

முத்தின மோஹியொளித்த முகுந்தன
கத்தவிடிது நாவ் முத்தநீடிதரெவெ
லித்த நிபிட குச ஹொத்தப்பி பிடனௌ
மத்திகாய மகுவிகே புத்தியிதொளிதே ॥10॥

நினகிது தரவல்லெனுத ஹிடிதரே
கொனெவல்லிலி கல்லவனு கச்யோடுவ
தின தினகோஜியு க$^{4}$னவாயிது சிக்க
வனிதெயரொளு சுன்ன க்ஷண க்ஷணகாடுவ ॥11॥

கரெவ ஸமய ரங்க பருவலனு ஆவ்கள
தொரெத மொலெய கரவிடிது உண்ணுவனு
கருவேனோ நீ ஹரியெந்தரே பாய்
தரதில்லெம்புவ ப$^{3}$ரி ஹுஸியவனு ॥12॥

கரெதிட்ட பதினோரெஹால்கடிகெய
த்வரிததி ஒய்தக்கரஜகெ கொடுவ
ஸரிதோகரிகிவ உரெ ஸூர்யாடுவ
மரிகருகள துப்பிரிதெத்திருவ ॥13॥

ஶஶிமுகெருதயகெ மொஸர மதி$^{2}$ஸுதிரெ
ஹஸங்கோபரு ப$^{3}$லன ஸஹித ப$^{3}$ருவ
நஸுனகெ நகுதலி ஹொஸ நவநீதவ
அஸியரஞ்சிஸி கொண்டஸுராரி ஸவிவ ॥14॥

மீஸலு முரியதிரோ ஸர்வோத்தம
மோஸப்ப தெய்வாகாஶத பொம்மனு
காஸியாகுவியெனெ ஆகாஶதவகெ நன்ன
மீஸலு புல்லியு லேஸெந்தெனுவ ॥15॥

எளெஹாவின மரிகள தந்தபலெர
களகிக்குவ நேவியொளு பிடுவ மங்-
கள மூருதி ஹெங்களு வஸனங்கள
களெது நில்லலு ஹரி களகள நகுவ ॥16॥

கடிகெ ஸஹஸ்ரகளொடெவ நிரந்தர
துடுகிலி பல்லித ஹுடுகேர கெடிஸித
அடிகடிகடகுவ ஹுடுகி ஹிடிதுதரெ
மடதேர படனடுவடரதெ படிவ ॥17॥

ஒம்மே நின்ன மகன்ஹம்மிலி கட்டிதே-
வம்மு இவ பரபொம்மனெந்தரியதே
நம்ம மக்கள நாவே மத்தே கட்டிதே
வம்மம்ம மோஹனனிவனம்ம ॥18॥

ஶிஶுகள ஶிகவனு பஶுகள பாலகெ
ஹொஸெது கண்டனு மிஸுளிஸி கட்டுவ
நஸுனகியலி நமகுஸுருவ நிம்மய
ஹஸுளர படிபாடல நோடெனுவ ॥19॥

**நந்தனராணிய கந்தனெ நினகிது
சந்தவே மக்கள அந்தகெடிஸுவது
எந்தெனெ கொலுதில்லெந்தெனுதலி தாம்
கொந்தோடதே பிட மந்தரதரனு ॥20॥**

**கெனெ கெனெ மொஸரனுதின துடு திம்பனு
நின தோள் மொஸரிலி முளுகிதே கள்ள
எனலு நம்மெளெகரு முளுகிதே படகதி
தணி ஹுடுகிதே நா தினலில்லெம்ப ॥21॥**

**ரஸபரிதோக[2]ணி ஹஸுளன ஹுஸிகேளி
ஶஶிவதனெயர்முத்திஸி அப்பிகொண்டரெ
எஸெவ நிரிய ம்யால் ஶிஶுவர குணிவனு
அஸியர வஸனவ பிடிஸிதா நகுவ ॥22॥**

**மத்தொந்தின நின்ன புத்ரன கட்டிதே
வர்த்திலி நின்னெடெ தர்த்திரெ நடுவேப்ர-
மத்த கோ[4]ளிய தெர சித்ரதிந்தஞ்சிஸே
ஸத்வர பிட்டோடி ஸத்துளிதேவே ॥23॥**

**புட்டர செதுரிஸி அட்டத ம்யால் ஜெயி-
சிட்ட பெண்ணெய சட்டிகெகள தெகெ-
தஷ்டனு ஸவிதனு எஷ்டு மெத்தெந்தரெ
பட்ட குசவ பிடிதிஷ்டே எனுவ ॥24॥**

**கட்டிதேகள்ளனு க்ருஷ்ணனெனுத கை
கட்டிதரஞ்சதே பிட்டுகொண்டனு நம்ம
ஜட்டிகனாணெயனிட்டோடிதனவ
நட்டுளி கனவின்னெஷ்டுஸுருவெவெ ॥25॥**

**திளிதுப்பிட்ட பிஸுளிகெயளகெ தன்ன
நெளலனு நோடிதனெ எளெயரரஸனு
கெளெயனொப்படகிஹ ஔகென்னுத க-
ல்லிலி கடிகொடதனு நளினநயனனு ॥26॥**

**ஹரிபலரீர்வரு உரு மாய்காரரு
சிரருசிரரு ஸுந்தரவரிவரு
புருஷோத்தமர ஸுசரிதெய பேள்வெவு
ப்ரஸன்வெங்கட கிரிவரனிலய[ந] ॥27॥**

17.
நந்தனின் ராணியே, எங்களால் இவனின் குறும்புகளை தாங்க முடியவில்லை. சொல்லிக் கொள்ள முடியாத அளவிற்கு இவன் விளையாட்டுகளை விளையாடுகிறான். ||ப

நுரை / ஆடை நிரம்பிய தயிரை இவன் திருப்தி அடையும்வரை தின்கிறான். தம்பிகளின் கூட்டத்திற்கு இவற்றை உண்ணவைத்து திரிகிறான். உன் மகன், நம் அனைவரின் மக்களையும் போட்டு அடிக்கிறான். பெண்களை மயக்கிவிட்டு, பிறகு தன் வீட்டை நோக்கி ஓடி வந்துவிடுகிறான். ||1

கன்றுக்குட்டிகளை, தாயிடம் பால் குடிக்க விடுகிறான். நண்பர்களுடன் கை தட்டியவாறு ஆடி விளையாடுகிறான். பெண்களை கண்களை மூடி, குதித்து தான் விளையாடுகிறான். பால், வெண்ணெய், பானைகளில் இருந்தால், அவற்றை அடித்து உடைக்கிறான். ||2

உரல் (அல்லது தானியம் வைக்கும் பாத்திரம்) ஒன்றின் மேல் இன்னொரு உரலினை வைக்கிறான். சிறுவர்களின் தோள்களின் மேல் ஏறி, மேலே கட்டியிருக்கும் உரலினை

உடைக்கிறான். கையில் கோலினை பிடித்து, சுவையான பால், தயிர், ஆகியவற்றின் பானைகளை உடைத்து, பால் மழையை பொழிகிறான். ||3

பெண்கள் வந்து இந்த பால் திருடனை பிடிக்க, வெவ்வேறான சமாதானங்களை சொல்கிறான். அப்படியும் அவனை பிடித்தால், பாய்ந்து தப்பித்து விடுகிறான். சில சமயம் பயந்து நடுங்குவதைப் போல நடிக்கிறான். ||4

இருட்டாக இருக்கும் வீட்டின், ஜன்னல்களில் வரும் ஒளியின் உதவியால் வந்த கோபாலகர்களின் குழுவிற்கு / கூட்டத்திற்கு, மிகவும் மகிழ்ச்சியாக பால் குடிக்கக் கொடுக்கிறான். தன் நண்பர்கள் குழுவிற்கு அதனை கொடுக்கிறான். தானும் தன் பசியை ஆற்றிக் கொள்கிறான். ||5

இவனுடைய குறும்புகளை பார்த்து, இவனை நான் தண்டிப்பேன் என்று கூறியவாறு, சிறிய இடை கொண்ட கோபியர்கள் ஒரு கூட்டமாக வந்து புகார் கூறுகின்றனர். நம் வீட்டு தாழ்ப்பாளை நீக்கி, இவனின் நண்பர்களான மற்ற சிறுவர்களை நம் ஜன்னலில் / கதவுகளில் காவலுக்கு வைத்துவிட்டு, உங்கள் சிறுவன் (கிருஷ்ணன்) பால் / வெண்ணைகளை திருடுகிறான். ||6

நல்ல சுவையான அன்னங்களை சமைத்து வைத்திருந்தால், வீட்டு தலைவனுக்காக அவனுக்கு கொடுப்பதற்காக வைத்திருந்தால், சிறுவனான கோபாலர்களுடன் ஸ்ரீகிருஷ்ணன் வந்து, எதையும் மிச்சம் வைக்காமலேயே அனைத்தையும் தின்றுவிடுகிறான். ||7

க்ராம தேவதையை (அதன் சிலைகளை) கட்டி, வீட்டு அங்களங்களில் (அதனை கயிறால் கட்டி), எல்லா இடங்களுக்கும் அதனை இழுத்துக் கொண்டு போகிறான். இஷ்ட தேவதையை கட்டி தூக்கி எறிந்துவிட்டு, அட்டகாசமாக சிரித்துக் கொண்டு ஓடுகிறான். ||8

இவ்வாறாக ஸ்ரீகிருஷ்ணன் ஆடும் துஷ்ட ஆட்டங்களுக்கு அனைவரும் மிகவும் கஷ்டப்படுகின்றனர். ஆனால், அவன் செய்யும் இந்த விஸர்ஜனங்களை சுத்தம் செய்ய வேண்டுமே என்று அதனை செய்தால், அந்த இடங்களில், கஸ்தூரியைவிட அதிகமான மணம் வீசுகிறது. ||9

மயக்குவதான ரூபத்தில் இருப்பவனான முகுந்தனின், கன்னங்களை பிடித்து நாங்கள் அவனை கொஞ்சினால், அவனோ எங்களின் இரு மார்புகளையும் அழுத்தமாக பிடித்துக் கொண்டு விடமாட்டேன் என்கிறான். இத்தகைய சிறிய குழந்தைக்கு, புத்தி இருக்கிறதா என்று தெரியவில்லை. ||10

கிருஷ்ணனே, நீ செய்வது சரியல்ல என்று மறுபடி அவனை பிடித்தால், அவன் எங்கள் கன்னங்களை கடித்துவிட்டு ஓடுகிறான். ஒவ்வொரு நாளும் அவன் செய்யும் குறும்புகள் / சேஷ்டைகள் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கின்றன. இவ்வாறே அவன் சிறிய வயதுடைய பெண்களுடன் ஒவ்வொரு நொடியும் விளையாடிக் கொண்டிருக்கிறான். ||11

நாமாக அழைத்தால், அப்போது எங்களிடம் ரங்கன் வருவதில்லை. கன்றுகள் குடிக்காமல் விடும் பசுவின் முலைகளை இவன் பிடித்து பால் குடிக்கிறான். நீ கன்றுக்குட்டியா, (ஏன் இப்படிக் குடிக்கிறாய்?), நீ ஹரி ஆயிற்றே? என்று கேட்டால், அதற்கு எந்த பதிலும் சொல்லாமல், வாய் திறக்காமல், சும்மா அப்படியே நிற்கிறான். || 13

நாங்கள் கறந்து வைத்திருக்கும் நுரை பாலினை குடிக்கிறான். வேகமாக அந்த பாலை எடுத்து, தன் அண்ணனுக்கு (பலராமனுக்கு மற்றும் தோழர்களுக்கு) கொடுக்கிறான். கூரையிருந்து கட்டியிருக்கும் பானைகளை இவன் சூரையாடுகிறான். சிறிய கன்றுக்குட்டிகளை இவன் ப்ரியமாக தூக்கிக் கொள்கிறான். ||13

சந்த்ரன் போன்றவர்கள் உதய காலத்தில் எழுந்து தயிர் கடைந்து கொண்டிருந்தால், இவன் சிரித்துக் கொண்டு, தன்னுடைய தோழர்களுடன் அங்கு வருவான். அழகான புன்னகையுடன், புதிதாக எடுத்ததான வெண்ணையை, அப்படியே எடுத்து, அஸுரர்களைக் கொல்பவனான ஸ்ரீகிருஷ்ணன் அதனை சுவைக்கிறான். ||14

எவ்வித தோஷங்களும் அற்றவனான ஸர்வோத்தமன், அவன் ஸ்வாமி. பரப்ரஹ்மன். இவ்வாறு இருப்பவனைக் கண்டு (அவன் செய்யும் செயல்களைக் கண்டு) கவலைப்படுவாயா?. என்னுடைய தோஷம் நிறைந்ததான புத்திதான் அனைத்திற்கும் காரணம் என்கிறான் அவன். ||15

தாய்ப் பசுவின் கன்றுகளை கூட்டிக் கொண்டு வந்து, பெண்களை துன்புறுத்தச் செய்வான். அவர்களின் புடவைத் தலைப்பில் விடுவான். மங்கள மூர்த்தியான கிருஷ்ணன், பெண்களின் ஆடைகளை மறைத்து வைத்து, அவர்கள் ஆடைகளை இழந்து நிற்பதைப் பார்த்து, அவன் கலகலவென சிரிப்பான். ||16

ஆயிரக்கணக்கான பானைகளை உடைக்கிறான். நிரந்தரமாக குறும்புகளை செய்து கொண்டிருக்கிறான். அவன் உடன் இருக்கும் சிறுவர்களையும் கெடுக்கிறான். அவனை பிடித்து நிறுத்தினால், அமைதியாக நிற்கிறான். பெண்களின் சிறிய இடையில் அவர்களுக்கு வலிக்காமல் அடிக்கிறான். ||17

இவன் பரப்ரஹ்மனே என்று அறியாமல், ஒரு முறை உன்னுடைய மகனை அம்மியில் (உரலில்) கட்டினேன். (அவன் செய்த மாயையால்) மறுமுறை என்னுடைய மக்களை நானே கட்டினேன். இவன் மோஹனன் (அனைவரையும் மயக்குபவன்) அம்மா. ||18

சிறுவர்களின் ஶிகைகளை பசுக்களின் வாலில் கட்டி, முடிச்சு போடுகிறான். அந்த முடிச்சுகளையும் நன்றாக சுற்றி, இறுக்கி கட்டுகிறான். முகம் முழுக்க புன்னகையுடன் சிரித்துக் கொண்டே இருக்கிறான். உங்களின் பசுக்களின் கஷ்டங்களை பாருங்கள் என்று எங்களிடமே சொல்கிறான். ||19

நந்தகோபனின் ராணியின் மகனே, உனக்கு இது சரியா?. மக்களின் அழகினை குறைப்பது / அழிப்பது என்றால், அவனோ, நான் அவர்களை கொல்லவில்லையே? என்று கூறியவாறு, அவர்களை அடித்து துரத்தாமல் இவன் விடுவதில்லை. இவன் மந்தர மலையை தாங்கியவன். ||20

நுரை நிரம்பிய தயிர்களை குறும்புக்காரன் இவன் தினமும் திருடி தின்கிறான். உன் தோள் வரைக்கும் தயிரில் மூழ்கியிருக்கிறது கிருஷ்ணா என்றால், என்னுடைய எருமைகள் இந்த பானைகளில் மூழ்கியிருக்கின்றன, அவற்றைத் தேடவே நான் வந்தேன், நான் தயிரை குடிக்கவில்லை என்கிறான். || 21

இனிமையான அந்த சிறுவனது மழலைப் பேச்சுகளைக் கேட்டு, சந்த்ரமுகியர்கள் அவனை தூக்கிக் கொஞ்சியவாறு, அணைத்துக் கொண்டால், அவர்கள் மேல் தண்ணீர் இறைத்துவிட்டு, அந்த சிறுவன் மகிழ்ச்சியில் குதிக்கிறான். அந்தப் பெண்களின் ஆடைகளையே குறும்பாக பிடித்து இழுக்கிறான். ||22

இன்னொரு நாள் உன் மகனை நாங்கள் கட்டினோம். அவனை உன்னிடம் அழைத்து வரும்போது, ஒரு வரைபடத்தை (diagram) பார்த்து எருது எப்படி பயந்து மருண்டு ஓடுமோ, அது போல இவனும் எங்களை விட்டு (பயந்தாற்போல் நடித்து) ஓடிவிடுகிறான். ||23

சிறுவர்களை குனிய வைத்து, அவர்கள் மேல் ஏறி நின்று, அங்கு மூடி வைத்திருந்த வெண்ணை பானைகளை எடுத்து, அந்த அனைத்தையும் சுவைக்கிறான். அவனை பிடித்து, எவ்வளவுதான் தின்றாய் கிருஷ்ணா? என்று கேட்டால், எங்களின் மார்புகளை பிடித்து, இவ்வளவே தின்றேன், என்கிறான். ||24

கிருஷ்ணா, உன்னை கட்டுகிறேன் பார் என்று கூறி, அவன் கைகளை கட்டினால் அவன் பயப்படுவதில்லை. நம் பசுக்களின் ஆராத்ய தேவதையின் மேல் ஆணை என்றாலும், அவன் ஓடிப் போய் பசுக்களை விடுவித்து துரத்தி விடுகிறான். இத்தகையவனின் அபாரமான மகிமைகளைப் பற்றி நான் என்னவென்று சொல்வேன்?. ||25

தெளிவான நெய் வைத்திருந்த பாத்திரத்தில், தன்னுடைய நிழலினை இந்த சிறிய அரசன் பார்க்கிறான். தன் நண்பன் ஒருவனை காவலுக்கு வைத்துவிட்டு, அந்த பாத்திரங்களை

(பானைகளை) கல்லால் அடித்து உடைத்துவிடுகிறான், இவன் ஸஞ்சலமான கண்களை உடையவன். ||26

ஸ்ரீகிருஷ்ணன், பலராமன் என்ற இந்த இருவரும் பயங்கரமான மாயக்காரர்கள். ஒருவரை விட்டு ஒருவர் எப்போதும் பிரியாதவர்கள். இருவரும் மிகவும் அழகானவர்கள். புருஷோத்தமனின், அந்த ப்ரஸன்ன வெங்கட கிரிவர நிலயனின் ஸுசரிதத்தை கூறுகிறோம், கேளுங்கள். ||27

**

18. **ராக :மோஹனகல்யாணி (பந்துவராளி) தாள :த்ரிபுட**

**லீலெ க$^{4}$ன ஹரிலீலெ க$^{4}$ன ஈ**
**பாலகனிவ ஜகத் பால க$^{4}$ன ॥ப॥**

**ஸ்ரீலலனெய மதிஜாலகொதககிஹ**
**மௌளிய சித்குணஶாலி க$^{4}$ன ॥அ.ப॥**

**அப்ரதிமல்லரு ஆ கோகுலதி**
**ஸுப்ரதீகனந்தே ரஞ்சிபரு**
**தா ப்ராக்ருத அர்பகரந்தெ லீலெய**
**ஆ ப்ரஜரிகெ தாவ் தோருவரு ॥1॥**

**வ்ரஜத வீதி$^{2}$யலி ஆடுதலாடுத**
**நிஜ ஸகரெதுரு ம்ருத்திகெ மெலலு**
**ஆ ஜனனி யசோதேகெ ப்ரஜர்ஹேளலு**
**அஜனய்யன தா கேளிதளு ॥2॥**

**அம்மா நா மெலலில்லவே ம்ருத்திகெயனு**
**ஸும்மனெ ஹுஸி ஹேள்யாடுவரு**
**ஆ மாடுவே நோடேந்து புட்ட பாயொளு**
**பொம்மாண்டவ ஹரி தோரிதனு ॥3॥**

**தம்மந்தஸ்த$^{2}$ பாஹ்யாந்தஸ்த$^{2}$ தோரி**
**தம்மம்மனு பெதருவளெந்தெனுத**
**தா மத்தே பைசிட்டனு பாயோளு பர-**
**ப்ரஹ்மாத்மைக்ய ஶக்த்யாத்மகனு || 4**

**தாயிய வஶதி மக்களு இஹ பரியலி**
**ஸ்ரீயரஸனு மாயவ தளெது**
**பாய தெரெது அம்மிய சப்பரிமண**
**லீயச்சரியனு நெனெநெனெது ||5**

**என்னெய புத்திய ப்ரமேயோ ஸ்வப்னவோ**
**அன்னிமிஷர மாயாத்புதவோ**
**தன்னெய ஸன்னுத சின்னன குணகீ-**
**ர்தன்னெய மாடிதளந்தவ்வே ॥6॥**

**எந்தின தெர மனோவாக்காயதி யது-**
**நந்த வ்ரஜதவர மோஹிஸித**
**கந்தன லீலானந்தாம்புதியலி**
**நந்திஸிதரு கோகுலௌகஸரு ॥7॥**

**ஶ்ரீக்ருஷ்ண பகவான் லோகேஸ்வரனு தா**
**நாகத ஜீவர ஶோகஹர**
**வைகுண்டாலய ஏகானேக தி-**
**வாகர கோடி நிஶாகரபா ll8ll**

**லெக்ககெ நிலுகத லக்குமியரஸனு**
**குக்கியொளாளுவ புவனகளு**
**ரக்கஸரளிவனு பக்தர பெளெவ கோ**
**வர்க்களொளிஹ ப்ரஸன்வெங்கடன || 9**

18.
இந்த ஸ்ரீஹரியின் லீலை என்பது அபாரமான லீலையாகும். இந்த பாலகன், உலகத்தையே காப்பவன். || ப

அபாரமான மகிமைகளைக் கொண்டவளான ஸ்ரீலக்ஷ்மிதேவியின் புத்திக்கு முழுவதுமாக அறியப்பட முடியாதவன். சித் ஸ்வரூபன். பூர்ண ஸத்குணங்களைக் கொண்டவன் இவன். || அப

யாருக்கும் இணையில்லாத அவர்கள் (கிருஷ்ண பலராமர்கள்), அந்த கோகுலத்தில் ஸுப்ரதீகத்தைப் போல (திக் கஜங்களில் ஒரு யானையைப் போல) சுற்றி வருகிறார்கள். அப்ராக்ருதனாக இருந்தாலும், அவர்கள், ஒரு ப்ராக்ருத சிறுவர்களைப் போல, அந்த ஊர் மக்களுக்கு தங்களின் லீலைகளை காட்டுகிறார்கள். ||1

அந்த ஊர் வீதியில் விளையாடியவாறே அவர்கள் வர, தன் நண்பர்கள் எதிரில் ஸ்ரீகிருஷ்ணனானவன், மண்ணினை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். அங்கிருந்த மக்கள், இந்த செய்தியை, யசோதையிடம் சென்று சொல்ல, ப்ரஹ்ம தேவனின் தந்தையான அவனிடம் யசோதை இவ்வாறு கேட்கிறாள். || 2

அதற்கு ஸ்ரீகிருஷ்ணன் சொல்வது - அம்மா, நான் மண் தின்னவில்லை. இவர்கள் சும்மா உன்னிடம் புகார் கூறுகிறார்கள். வாயினை 'ஆ' என்று காட்டுகிறேன், பார் என்று தன் சிறிய வாயினை திறந்து, அதில் ப்ரஹ்மாண்டத்தை ஸ்ரீஹரியானவர் காட்டுகிறான். || 3

தன் வாயில், வெளியே இருக்கும் பதார்த்தங்கள் அனைத்தையும் காட்டி, பின், தன் தாயானவள் அதனை பார்த்து பயப்படுவாள் என்று கூறியவாறு, தன் வாயினை மூடிக் கொண்டான். இவன் பரப்ரஹ்மன். ஸர்வோத்தமன். அபாரமான சக்திகளை தன்னில் கொண்டவன். || 4

குழந்தையானவன் தாயின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது என்னும் பழக்கத்திற்கு ஏற்ப, ஸ்ரீஹரியானவன், தன் மாயையினால், தன் வாயினை திறந்து, தன் தாயிடம் பால் குடிக்கிறான். ||5

யசோதை இவ்வாறு நினைக்கிறாள். நான் இதுவரை பார்த்தது, என்னுடைய புத்தியில் ஏற்பட்ட ப்ரமையோ, கனவோ?. தேவதைகளின் மாயச் செயல்களில் ஒன்றோ?. தன்னுடைய ப்ரியமான குழந்தையின் குண கீர்த்தனையை செய்யத் துவங்கினாள். || 6

என்றும் செய்வதைப் போலவே, ஸ்ரீகிருஷ்ணன், தன் மனோ, வாக், காயத்தினால் அந்த ஊர் மக்களை விரும்பினான். அந்தக் குழந்தையின் லீலைகளால் ஆன ஆனந்தக் கடலில், அந்த ஊர் மக்கள் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தனர். || 7

ஸ்ரீகிருஷ்ணன் பகவான். உலகத்தை காப்பவன். அனைத்து ஜீவர்களின் சோகங்களையும் பரிஹரிப்பவன். வைகுண்டத்தையே ஆலயமாகக் கொண்டவன். கோடி சூர்யங்களின் ஒளியைக் கொண்டவன். ||8

யாருடைய சிந்தனைக்கும் உட்படாதவனான ஸ்ரீலக்ஷ்மிதேவியின் தலைவன், அவனின் வயிற்றில் அனைத்து புவனங்களும் அடங்கியிருக்கின்றன. அஸுரர்களை அழிப்பவன். பக்தர்களை காப்பவன். இவனே கோகுலத்தில் இருப்பவனான ப்ரஸன்ன வெங்கடன். || 9

**

19.
**ராக :தேசாக்ஷி தாள :ஏகதாள**

**மொஸரு கடேதளம்ம தனயகெ**
**ஹொஸ பெண்ணேகாக அம்ம ॥ப॥**

**பிஸஜஸக$^2$னு தயவாகத முன்னெ**
**ஶஶிமுகி கோபி தன்னனு ஸிங்கரிஸி ॥அ.ப॥**

**ஹொந்தி நித்ரெய தேவ நந்தாதீபவ**
**அந்து ப்ரஜ்வலிஸுத மிந்துட்ட**
**பொந்தட்டெய மணிவ்ருந்தத பூஷண**
**ஸிந்தூர ஸீமந்ததலிட்டு ॥1॥**

**கந்த கஸ்துரியிட்டு மந்திரதெய்வகெ**
**வந்திஸி முடிகெ மல்லிகெ முடிது**
**இந்துகாந்தியபாண்டதி ததிதம்பி**
**தும்தும் துடுகெம்ப சந்ததலி ॥2॥**

**பவளத கடகோலு பிடிது பெள்ளிய**
**நவநேணுவ ஸுத்தி ஸ்வரதெகெது**
**குவலயப்ரிய குலோத்பவன குணங்கள**
**ஸவியிந்தொலிது பாடுவளந்து ॥3॥**

**சரசர கிரிதர தரோத்தர நரஹரே**
**வரவடு பரஶுகரா ரகுப**
**நரஸக ஸுரமோஹகர ஹரிசர**
**ஸுரவர பராத்பர ஹரேயெனுத ॥4॥**

**அடிகடிகலெயலு படனடு பளுகலு**
**முடிய மல்லிகெ மாலெ ஸடிலுதுரே**
**நடுகலிட்டெதெமொலெ நிடுகந்த கஸ்துரி**
**கடு பெவரிடெ கடலொடெயன அவ்வேயு ॥5॥**

**கொரளபதக முத்தின் ஹார தோகாடலு**
**கரிகரபகரகங்கண ஸரியே**
**சிரருசிரத்ன நூபுர ஜணத்கரிஸலு**
**பரமபுருஷ நம்ம ஹருஷதலி ॥6॥**

**மதன ரவகெ நவநீத பேடி ஹரிதாள்**
**கதியிந்தே குணியெ கோபதியரஸி**
**ஸுத ப்ரஸன்வெங்கடபதிகெ ஹையங்கவீ-**
**நித்யப்பிதளிதிதோஷிதெயாகி ॥7॥**

19.
யசோதையானவர், தயிர் கடைந்தார். தன் மகனுக்கு வெண்ணெய் வேண்டும் என்பதற்காக. ||ப

தாமரையின் நண்பனான ஸூரியன் உதயம் ஆவதற்கு முன்னரே, சந்த்ரனைப் போல முகத்தைக் கொண்ட யசோதை, தன்னை அலங்கரித்துக் கொண்டு தயிர் கடைகிறாள். ||அப
குழந்தை தூங்கிக் கொண்டிருக்கையில், நந்தா தீபத்தை மேலும் சிறிது வெளிச்சம் கூட்டியவாறு, ஸ்னானம் செய்து, தங்கமயமான மணிகள் கட்டப்பட்ட ஆபரணங்களை அணிந்தவாறு, தன் நெற்றியில் ஸிந்தூரம் இட்டுக் கொள்கிறாள். ||1

வீட்டு தெய்வத்திற்கு சந்தனம், கஸ்தூரிகளை சமர்ப்பித்து, வணங்கி, பின்பு, தலையில் மல்லிகை சூட்டிக் கொண்டு, சந்திரனைப் போல ஒளி பொருந்தியவளாக, பாத்திரத்தில் தயிர் நிரப்பி, தம், தம், தடக், தடக் என்னும் சந்தத்தில் தயிர் கடைகிறாள். || 2

பவழத்தால் அலங்கரிக்கப்பட்ட கடைக்கோல் (மத்து) பிடித்து, புதியதான கயிறுகளால் கட்டப்பட்ட அந்த மத்தினை, ஸ்வரங்களை எழுப்பி, உலகத்தில் அனைவரின் ப்ரியனான, குலத்தையே உத்தாரம் செய்ய வந்தவனின் நற்குணங்களைப் பற்றி பாடியவாறு, தயிர் கடைகிறாள். || 3

ஶரசர = கடலில் வசிப்பவன் (மத்ஸ்யாவதார); கிரிதர = மந்தர மலையை தூக்கியவன் (கூர்ம); தரோத்தர = பூமியை தூக்கி நிறுத்தியவன் (வராஹ); நரஹரெ = ந்ருஸிம்ஹ அவதார; வரவடு = வாமன; பரஶுகரா = பரசுராம; ரகுப = ஶ்ரீராம; நரஸக = ஶ்ரீகிருஷ்ணன்; ஸுரமோஹகர = அனைவரையும் மயக்கியவன்; ஹரிசர = குதிரைகளில் பயணிப்பவன் (கல்கி); தேவர்களால் வணங்கப்படுபவன். பராத்பரனே, ஶ்ரீஹரியே, என்றவாறு, தயிர் கடைகிறாள். || 4

அடிக்கடி இங்கும் அங்குமாக அலைந்ததால், அவளுடைய மெலிதான இடையானது துவண்டது. தலையில் சூடிக் கொண்டதான மல்லிகை, அங்கங்கு உதிர்ந்தது. நெற்றியில் வைத்ததான சந்தனம், கஸ்தூரி ஆகியவை அவளுக்கு வந்ததான வியர்வையினால் அழியத் துவங்கின. இவை அனைத்தும் பாற்கடலில் படுத்திருப்பவனான ஶ்ரீகிருஷ்ணனின் தாய்க்கு நடந்த விஷயங்கள். || 5

கழுத்தில் பதக்கத்துடன் கூடிய முத்து மாலை அல்லாடிக் கொண்டிருந்தது. யானையின் தும்பிக்கை போன்றதான கையில் இருந்த கங்கணங்கள் நழுவத் துவங்கின. தங்கமயமான, ரத்னமயமான, கொலுசுகள் ஒளிவீசி சத்தம் செய்து கொண்டிருந்தன. இவ்வாறு அலங்காரம் செய்து கொண்டிருந்தவனான பரமபுருஷனான ஶ்ரீகிருஷ்ணன் மிகவும் மகிழ்ச்சியுடன் அந்த இடத்திற்கு வந்தான். ||6

தயிர் கடையும் இடத்திற்கு, வெண்ணையை வேண்டியவாறு, ஶ்ரீஹரியானவன், தாள லயத்துடன் ஆடிக் கொண்டிருக்க, கோபியானவள், மகனான ப்ரஸன்ன வெங்கடபதிக்கு, வெண்ணையை கொடுத்து, மிகவும் மகிழ்ச்சியுடன் அவனை கட்டி அணைத்துக் கொள்கிறாள். || 7

**

**20. ராக :ஆனந்தபைரவி தாள :அட்ட**

**ரங்க கோகுலதொளகாடித பலு**
**ஶ்ருங்கார சேஷ்டெய மாடித ||ப ||**

**மங்களமஹிம கொண்டாடித பக்த**
**ஜங்குளிகெ முக்தி நீடித ||அ.ப ||**

**மத்தொந்துதின மொஸர்கடெவாக ரங்க**
**ஹஸ்து பந்தனு கோபி பளிகாக**
**தா ஸ்தனபான பேடிதனாக ததி[4]**
**மந்தனதண்ட பிடித ப்யாக ||1 ||**

**கடெவ கெலஸவனு இட்டளு தன்ன**
**தொடெயனெரிஸி மொலெகொட்டளு**
**படகத பாலோளகுக்கலு மொலெ**
**பிடிஸி மந்திரதொளு பொக்களு॥2॥**

**த்ருபுதியாகத ப்ராக்ருதரந்தெ நித்ய**
**த்ருபுதனு தானு ரோதிஸி மத்தே**
**குபிதனாகுத கல்லுவிடிதனு பெண்ணே**
**ய படகவாக்ஷண ஓடெதனு॥3॥**

**ஹருஷதி பெண்ணெய குளிகெய ஒய்து**
**ஒரள் மேலே மேலுதித்தஜனய்ய**
**அரஸி கோபம்மனு ஹாலிகெ நீர**
**நெரெது பந்து கண்டளீ பகெ॥4॥**

**கோபதி கோலு தக்கொண்டளு நோடி**
**ஶ்ரீ ப்ரஸன்வெங்கட நோடலு த-**
**யாபர மெலமெல்லனைதலு கண்டு**
**கோபம்ம ஸிக்கிதெயெந்தளு॥5॥**

20

கோகுலத்தில் ரங்கன் ஆடினான். மிகவும் அழகான செயல்களை செய்தான். ||ப

மங்களமஹிமனான ஶ்ரீகிருஷ்ணன் பக்தர்களை கொண்டாடினான். அத்தகைய பக்தர்களுக்கு முக்தியையே அளித்தான். ||அப

அன்று ஒரு நாள், தயிர் கடைந்து கொண்டிருந்தபோது, ரங்கன், எழுந்து தன் தாயான கோபியிடம் வந்தான். வந்து தனக்கு முலைப்பால் கொடுக்க வேண்டும் என்று வேண்டினான். தயிர் கடைவதான அந்த மத்தினை தன் கைகளால் பிடித்தான். ||1

தாயானவள், தயிர் கடையும் தன் செயலை நிறுத்தினாள். கிருஷ்ணனை தன் துடையின் மேல் ஏற்றி, பால் கொடுத்தாள். அடுப்பில் வைத்திருந்த பால் பொங்கி வழிவதான நேரத்தில், கிருஷ்ணனையும் தூக்கிக் கொண்டு அவள் வீட்டிற்குள் சென்றாள். ||2

ப்ராக்ருத குழந்தைகளைப் போல, த்ருப்தி அடையாதவனாக, நித்யத்ருப்தனான ஶ்ரீகிருஷ்ணன், அழத் துவங்கினான். பின், கோபம் கொள்கிறான். ஒரு கல் தூக்கி, அதனால், வெண்ணெய் நிரம்பியதான பாத்திரத்தை அடித்து உடைத்தான். ||3

மிகவும் மகிழ்ச்சியுடன் வெண்ணெய் நிரம்பிய பாத்திரத்தை உடைத்து, உரல் மேலே ஏறி நின்று அதனை சுவைத்துக் கொண்டிருந்தான். தாயான கோபி, கொதித்த பாலினை அணைத்துவிட்டு, வெளியே வந்து இந்த அமர்க்களங்களை பார்க்கிறாள். ||4

கோபத்துடன் கையில் கொம்பு எடுத்துக் கொண்டு வருவதைப் பார்த்த, கருணைக் கடலான, ஶ்ரீப்ரஸன்ன வெங்கடன், மெல்ல மெல்லமாக தப்பிக்க பார்க்கையில், கோபம்மா அவனை பிடித்து, பிடித்துவிட்டேன் என்றாள். ||5

**

**21. ராக :பந்தாரவ தாள :ஏகதாள**
**ஸாரி ஸாரிகெ கோவிந்த மஹா**
**காருணிகஜபவஸுரவந்த்ய ||ப ||**

**தாயி பளலுவது மக்களிகெ ஸம்-**
**ந்யாயவல்லவென்னுதெ ப்யாகெ**
**ஆயஸபடிஸி ஸிலுகித தன்ன**
**மாயதி தா வர்திஸுவ முகுந்த ||1 ||**

**க்ருஷ்ணன கட்டலுகுந்தரதனெ ய-**
**தேஷ்ட கண்ணிகளிந்தா ஜனனெ**
**அஷ்டு தாமவு ஸாலதாகெ ஹரி**
**கட்டிகொண்டனு வத்ஸதாமதாகெ ||2 ||**

**ஒரளனெளெதுகொண்டு ஹோகி மத்தி**
**மரகள முரித சென்னாகி**
**ஸுரரிஷி ஶாபதி நளகூபரன்னு உ-**
**த்துரிஸித ஸிரிவர அதிப்யாகெ ||3 ||**

**திவ்ய புருஷரு இளெயல்லி ஸுர-**
**ஸேவ்யன பாதக்கெருகுதலி**
**பவ்யசரிதன கொண்டாடிதரு பஹு**
**த்ரவ்யாதிபன ஸுதர் பக்திரதரு ||4 ||**

**நின்ன குணகதனெகெ வாணிகளு ஹரி**
**நின்ன கதெகெ ஸ்ரவணகளு**
**நின்ன ஸேவேகம்ம ப்ராணகளு ஹரி**
**நின்ன ஸ்ம்ரிதிகெ மனவிரலி தயாளு ||5 ||**

**நின்ன பாதாப்ஜகெ தலெயெரகி ஹரி**
**நின்ன நோடுவே த்ருஷ்டிகாகி**
**நின்னவர ஸங்கதி இத்து ஹரி**
**சென்னாகி நம்ம ரக்ஷிபுதே ஸம்பத்து ||6 ||**

**அவரு ஸ்தோத்ர மாட்யேதிதரு ம-**
**த்தவர காணுதா வ்ரஜதவரு**
**இவ பரஞ்சீவனெந்தரிதரு ப்ரஸ-**
**ன்னவேங்கடன ஸ்தவிஸி ஸுகிபரு ||7 ||**

**21.**
கோவிந்தன், மஹா கருணையைக் கொண்டவன், ப்ரஹ்ம ருத்ர தேவர்களால் வணங்கப்படுபவன்.. என்று திரும்பத் திரும்ப சொல்லுங்கள் (நினையுங்கள்)... ||ப

தாய் கஷ்டப்படுவதை எந்தவொரு குழந்தைக்கும் சகித்துக் கொள்ளாது என்று சொல்வதைப் போல, ஸ்ரீகிருஷ்ணன் வேகமாக தன் தாயிடம் தானே வந்து சிக்கிக் கொண்டான். தன் மாயையினாலேயே (இச்சையினாலேயே) இவ்வாறு செயல்களை செய்கிறான், அந்த முகுந்தன். || 1

கிருஷ்ணனை கட்டுவதற்காக, மல்லிகை மொக்குகளைப் போல பற்களைக் கொண்டவளான தாய், ஏராளமான கயிறுகளைக் கொண்டு அவனை கட்ட முயற்சி செய்கிறாள். எவ்வளவு கயிறு கொண்டு வந்தாலும், அது அவனை கட்டுவதற்கு போதாமல் போக, கடைசியில், ஸ்ரீஹரி தன்னைத் தானே கட்டிக் கொள்கிறான், அவனே பக்தவத்ஸலன். ||2

தன்னைக் கட்டிய கயிறை, அதில் கட்டப்பட்ட உரலுடன் சேர்த்து, இழுத்துக் கொண்டு, ஸ்ரீகிருஷ்ணன், தோட்டத்தில் இருந்த இரு அர்ஜுன மரங்களின் நடுவே இழுத்துச் சென்று, அந்த மரங்களை முறித்தான். தேவரிஷி நாரதரின் சாபத்தினால் அங்கு மரமாக நின்றிருந்த நள, கூபர்கள் என்னும் இருவரை (குபேரனின் மக்களை), ஸ்ரீகிருஷ்ணன் மிகவும் விரைவில் அருளினான். ||3

அந்த நள கூபர்கள் இருவரும் தேவர்கள் வணங்குபவனான ஸ்ரீகிருஷ்ணனின் பாதங்களில் விழுந்து வணங்குகின்றனர். அற்புதமான சரிதங்களைக் கொண்டவனான ஸ்ரீகிருஷ்ணனை கொண்டாடுகின்றனர். அனேக த்ரவ்யங்களைக் (நற்குணங்களைக்) கொண்டிருப்பவனான ஸ்ரீகிருஷ்ணனை, தேவர்கள், பக்தர்கள் கொண்டாடுபவனை, இவர்கள் வணங்குகிறார்கள். ||4

உன்னுடைய குணங்களை பாடுவதற்காகவே எங்களின் குரல்கள் இருக்கின்றன. ஸ்ரீஹரியே, உன்னுடைய கதைகளை கேட்பதற்கே ஸ்ரவணாதிகள் இருக்கின்றன. உன்னுடைய சேவையை செய்வதற்கே எங்களுடைய ப்ராணங்கள் இருக்கின்றன. ஸ்ரீஹரியே, உன்னைப் பற்றி சிந்திக்கவே, எங்களுக்கு மனஸ் இருக்கட்டுமே, ஹே கருணைக்கடலே. || 5

உன்னுடைய பாதங்களில் தலைவணங்கிக் கொண்டிருக்கிறோம், ஸ்ரீஹரியே, உன்னைப் பார்ப்பதற்கே எங்களின் த்ருஷ்டி இருக்கிறது. உன்னுடைய பக்தர்களின் சங்கத்தை எங்களுக்கு அளித்து, ஸ்ரீஹரி எங்களை நன்றாக காத்தால், அதுவே எங்களுக்கான செல்வம். ||6

இவ்வாறு நள கூபர்கள் ஸ்ரீகிருஷ்ணனை ஸ்தோத்ரம் செய்தனர். அவர்களை பார்த்தவாறு அந்த ஊர் மக்கள், நம் ஸ்ரீகிருஷ்ணனே பரமாத்மன் என்பதை அறிந்து, அந்த ப்ரஸன்ன வெங்கடனை வணங்கி மகிழ்ச்சி அடைந்தனர். ||7

**

**22.**
**ராக :ரேகுப்தி தாள :ஜக்கணி (?) [ஆதிதாள]**
**தெரத மேலேயிந்தலி கரெதளு கந்தன**
**பரித ப்ரேமதிந்த அரஸி கோபம்ம ||ப||**

**பரமலோபிகெ தன தொரகிதந்தே தானொந்-**
**தரகளிகெயு பிட்டரலாரளம்ம ||அ.ப||**

**எஷ்டு ஹொத்தாயிது அடஹோகி ராம**
**க்ருஷ்ணரு பரலில்லவேகீகளெந்து**
**துஷ்டிலி கரெதள் ஸ்ரீக்ருஷ்ண ஹே பலபத்ர**
**இஷ்டொந்தாடவு பேட பிட்டுபன்யெந்து ||1||**

**தாஶார்ஹருண பன்னிரே ஸம்ப்ரமதிந்தே**
**ஸோஸிலி ப்ரஜநாத[2] மீஸல பாயஸ**
**நீ ஶிஶுகள் கரெதா ஸகியெந்துண-**
**லேஸு ஜன்னவ தாரெ ஸ்ரீஹ நினகெனுத ||2||**

**பாஸுர மை தொளிதூஸரவாகிதே-**
**ளே ஶிஶுகளிரா மிந்து ஶுசியாகி**
**பூஷணாம்பரகளிம் பூஷிதராகி நீவ்**
**கோஸாஸிர தான பூஸுரர்கீயிரை ||3||**

**நிஜஜனகன ஸஹ த்விஜஜனபங்க்திலி**
**போஜனவ மாடிரோ ஸுஜன ப்ரியரிர**
**ஸுஜலவு முகவாஸ ரஜதாபா[4] தாம்பூல**
**வ்யஜன மால்ய கந்த பஜகராகிரெந்து ||4||**

**நிம்மொரிகெயலித்த கோமக்களிந்தீக**
**நம்மனெலிரியெந்து அம்ம கரெதோய்து**
**ஸூம்மானதலி பரபொம்ம ப்ரஸன்வெங்கட**
**ஸன்மந்திரன யஶோதெம்ம பூஜிஸிதளு ॥5॥**

**22**
நிறைந்த முலைகளுடன் தன் மகனான ஸ்ரீகிருஷ்ணனை, அந்த இடத்தின் அரசியான கோபியானவள், மிகவும் அன்புடன் அருகில் அழைத்தாள். ||ப

கடும் கஞ்சனுக்கு அபாரமான செல்வம் கிடைத்ததைப் போல, தான் அந்த குழந்தையைவிட்டு ஒரு நொடிகூட பிரியாதவளாக அவள் இருக்கிறாள். || அப

ராம க்ருஷ்ணர்கள் விளையாடப் போய் எவ்வளவு நேரம் ஆகிவிட்டது?. இன்னும் திரும்பி வரவில்லையே என்று கவலைப்படுகிறாள். உடனடியாக வெளியே சென்று அழைக்கிறாள், ஹே கிருஷ்ணா, ஹே பலபத்ரனே, இவ்வளவு நேரம் விளையாடத் தேவையில்லை. விட்டுவிட்டு திரும்பி வாருங்கள் - என்றாள். ||1

தாயான கோபியானவள் மேலும் இவ்வாறு ஸ்ரீகிருஷ்ண பலராமர்களை அழைக்கிறாள். தாஸர்களை (பக்தர்களை) காப்பவனான ஸ்ரீகிருஷ்ணனை ஸம்பரத்துடன் அழைத்து வாருங்கள். அவனுக்காக நான் மிகவும் பாசத்துடன் பாயஸத்தை செய்திருக்கிறேன். நீங்கள் சென்று ஸ்ரீகிருஷ்ணனை அழைத்து வாருங்கள் என்று தன் தோழிகளிடம் சொல்கிறாள். அவன் வந்து இந்த உணவினை உண்டால், அடுத்தடுத்த பிறவிகளே உனக்கு வருவதில்லை - அத்தகைய அருள் புரிபவனான ஸ்ரீஶனை அழைத்து வாருங்கள்.

ஒளிமயமானவனே, ஜ்ஞானானந்த மயமான தேகத்தைக் கொண்டவனே, உடம்பு முழுக்க தூசியால் மூடப்பட்டிருக்கிறது. ஹே சிறுவர்களே, வந்து குளித்து சுத்தம் ஆகி, பூஷணங்களால், ஆடைகளால் அலங்காரம் செய்து கொண்டு, நீங்கள் ஆயிரக்கணக்கான பசுக்களை, ப்ராஹ்மணர்களுக்கு தானம் கொடுப்பீர்களாக. ||3

தங்களின் தந்தையுடன், ப்ராஹ்ம மக்களுடன் பங்க்தியில் (உணவு உண்ணும் வரிசையில்) அமர்ந்து, உணவு உண்ணுங்கள். ஸஜ்ஜனர்களுக்கு ப்ரியமானவர்களே. நல்ல தண்ணீரை குடியுங்கள். முகம் (வாய்) நன்றாக வாசமாக இருக்கும் பொருட்டு, தாம்பூலம் மெல்லுங்கள். விசிறியால் வீசிக் கொண்டு, மாலை, சந்தனம், ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு அனைவராலும் வணங்கப்படுபவர்கள் ஆவீர்களாக. ||4

உங்கள் கொட்டகையில் இருக்கும் கன்றுக்குட்டிகளைப் போல நீங்கள் நம் வீட்டில் வந்து இருங்கள் என்று அம்மா அழைக்க, அதிக குறும்புகளை செய்பவனான பரப்ரஹ்மனான ப்ரஸன்ன வெங்கடன், தன் வீட்டினை அடைந்தான். அவ்வாறு வந்தவனை, தாய் யசோதை பூஜித்தாள். || 5

***

**23. ராக :ரேகுப்தி / ஸ்ரீராக     தாள :ஏகதாள**
**பாஹி கோவிந்த பாஹி முகுந்த**
**பாஹி பாஹி நித்யானந்த உபேந்த்ர ॥ப॥**

**வ்ருந்தாவனகெ பயணோத்யோகதிந்த**
**நந்தனந்தன தனுருஹ க்ருபெயிந்த**
**அந்தகனு (அந்து வ்ருகள?) படெதா வ்யாக்ரவ்ருந்த**
**மந்திய பாதிஸே நடெதனு நந்த ॥1॥**

**பக்ஷ்ய பாய்ஸன்ன போஜனவ மாடிதரு**
**ஸூக்ஷ்மாம்பர அலங்கார தரிஸிதரு**
**கோக்ஷீர ததி பாண்ட தும்பிதரு**
**லக்ஷோபலக்ஷ ஶகடவ ஹொடெஸிதரு ||2||**

**பண்டிய மேலே பாஜன ஹேரி ஹத்தி**
**புண்டரீகாக்ஷ ஸங்கர்ஷணரெத்தி**
**கொண்டரு தாய்களந்தாயிது அர்த்தி**
**ஹிண்டு கோவ்கள கோவளரனு பெம்பத்தி ||3||**

**கும்புகுசககளதகதிப செல்வெயரு**
**அம்புஜாக்ஷன குணகீர்த்தி மாடிதரு**
**கொம்பு கொளலுதாள தப்பட பேரி**
**ஸம்ப்ரமதிந்த வ்ருந்தாவன ஸாரி ||4||**

**அர்த்தசந்த்ராகார ஶகடவ நிலிஸி**
**அத்ரிதப்பலுகூல யமுனெய பளஸி**
**ஸத்ரத்னனிப புலினஸ்தளவிடிது**
**உத்ரேகதிந்தலி நேலெகொண்டரந்து ||5||**

**உச்சஶைல கோவர்தன தளதி**
**அச்யுத பலராமராதிவர் முததி**
**ஸ்வேச்சேகலீலனந்தந்து லாவண்ய**
**வத்ஸகள காய்தத்து நந்தன புண்ய ||6||**

**கருகள காய்தரு ஹரி ஸங்கர்ஷணரு**
**ஸரி கெளெகோவளர்வெரஸி ஸுந்தரரு**
**வர கலோச்சாரதி வ்ரஜபாதி ஜனகெ**
**ஹருஷாம்ருதாப்திலிட்டரு க்ருஷ்ணகெ ||7||**

**ஒம்மொம்மெ முன்ஜுள கொளலனூதுவரு**
**ஒம்மொம்மே மல்லராடவனாடுவரு**
**ஒம்மொம்மே வ்ருஷபிகதனியனெஸகுவரு**
**ஒம்மே பூருஹராட நீராடவாடுவரு ||8||**

**ஶ்ரீகாந்தேயன்னாள்வ வைகுண்டதாம**
**தோகவேஷத ஶ்ரீக்ருஷ்ணனெ பரபோம்ம**
**அகளகாய்வர கூடிஹ கீர்தி**
**ஶ்ரீகர ப்ரஸன்வெங்கட சரணார்தி ||9||**

**23.**
ஹே கோவிந்தனே, ஹே முகுந்தனே, ஹே நித்யானந்தனே உபேந்த்ரனே, எங்களை காப்பாயாக.

தன் பயணத்தின் காரியமாக வ்ருந்தாவனத்திற்கு புறப்பட்ட நந்தனின் நந்தனான கிருஷ்ணன், அனைவரையும் அங்கிருந்து புறப்படச் செய்வதற்காக, தன் தேகத்தின் ரோமங்களால், அனேக புலி (அல்லது ஓநாய் / wolf) ஆகியவற்றை படைத்தான். அந்த ஓநாய்கள், அங்கிருந்த மக்களுக்கு துன்பத்தைக் கொடுக்க, அனைவரும் அந்த துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், உடனே அங்கிருந்து புறப்பட்டு விடுவோம் என்ற முடிவுக்கு வந்தனர். அதனால் நந்தகோபனும் ஶ்ரீகிருஷ்ணன் கூறியதை ஒப்புக் கொண்டு, தன் பயணத்தை தொடங்கினான். || 1

அவ்வாறு புறப்பட்ட கிருஷ்ணனுக்கு, சுவையான பக்ஷ்ய, பாயஸங்களுடன் கூடிய போஜனங்களை செய்து சமர்ப்பித்தனர். மெலிதான ஆடைகளைக் கொண்டு அவனுக்கு அலங்காரங்களை செய்தனர். பசும்பால், தயிர், நெய் ஆகியவற்றை பெரிய பாத்திரங்களில் நிரப்பினர். லக்ஷிக்கணக்கான வண்டிகளை தயார் செய்தனர். ||2

அந்த வண்டிகளின் மேல் அந்த பாத்திரங்களை ஏற்றி வைத்தனர். தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணன் மற்றும் பலராமன், அந்த வண்டியில் ஏறினர். இதனைப் பார்த்து தாய்களுக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாயிற்று. பசுக்கள் மற்றும் பசுக்களை மேய்ப்பவர்கள் அனைவரும் அந்த வண்டிகளை சுற்றி நின்றிருந்தனர். ||3

கும்பத்தைப் போல மார்புகளைக் கொண்ட அழகான பெண்கள், அங்கு நின்று தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனின் குண கீர்த்தனைகளை பாடினர். கொம்பு, குழல், தாள, தப்பட்டை, பேரி, ஆகிய இசை வாத்தியங்களை வாசித்தவாறு அனைவரும் வ்ருந்தாவனத்தை நோக்கி நடந்தனர். ||4

கோவர்த்தன மலைக்கும், யமுனா நதிக்கும் நடுவில் இருந்த இடத்தில், பாதி - நிலவு போன்றதான ஒரு வடிவத்தில், அனைவரும் தங்களின் வண்டிகளை நிறுத்தினர். இவ்வாறான, சந்த்ரனின் ஒளியால் ஒளிர்வதான ஒரு தூய்மையான இடத்தை பிடித்து, அனைவரும் மிகவும் உற்சாகத்துடன் அங்கு இறங்கி அமர்ந்தனர். ||5

மிகவும் உயர்ந்ததான கோவர்த்தன மலையடிவாரத்தில் அச்யுத, பலராமர்கள் மிகவும் உற்சாகத்துடன் விளையாடினர். தங்களுடைய இஷ்டப்படி, மிகவும் அழகாக இருந்த கன்றுக்குட்டிகளை அவர்கள் காத்து வந்தனர். இது நந்தன் செய்த புண்ணியமே. ||6

கிருஷ்ண, பலராமர்கள் கன்றுக்குட்டிகளை காத்து வந்தனர். நண்பர்களான கோபாலகர்களுடன் கூடி, அவர்கள் மிகவும் உயர்ந்த குரலில் பாடல்களை பாடியவாறு, அந்த க்ராமத்து மக்களை ஒவ்வொரு நொடியும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர். ||7

சில சமயம் இனிமையாக குழல் ஊதுவார்கள். சில சமயம் மல்லராட்டம் (மல்யுத்தம்) ஆடுவார்கள். சில சமயம் எருது, குயில், பசுக்களை விரட்டுவார்கள். சில சமயம் மரங்களில் ஏறியும், தண்ணீரில் குதித்து ஆடியும் விளையாடுவார்கள். ||8

ஸ்ரீமஹாலக்ஷ்மியை ஆள்பவனான, வைகுண்டத்தில் வசிப்பவனான, சிறுவனின் வடிவத்தில் இருப்பவனான ஸ்ரீகிருஷ்ணனே, பரப்ரஹ்மன். பசுக்களை காத்தவன் என்னும் புகழ் பெற்றவனான ஸ்ரீகர ப்ரஸன்ன வெங்கடன், தன்னை வணங்குபவர்களை காக்கிறான். ||9

**

**24. ராக :ரேகுப்தி தாள :ஏகதாள**
**ஹரி ஹரி கோவிந்த கள**
**ஹரண பூர்ணதரானந்த ॥ப॥**

**குத்ஸிதமதி கம்ஸன படனொப்பனு**
**வத்ஸாக்ருதியலி பந்த**
**அச்யுதராமர கொலுவ உத்யோகவ**
**நிஷ்சைஸ்யவரொளு நிந்த ॥1॥**

**வ்ருக்ஷித துதிகோகெதவன மடுஹெ பக-**
**பக்ஷீய தெர களனோர்வ**
**வ்ருக்ஷிதி பாய்தெரெதெத்திதகோணிலி**
**பக்திஸலிக்கவ பந்த ॥2॥**

**ஹரி கரபல்லவ அவன வதனதலி**
**துருகலு உரிது காரிதனு**
**துருளன சஞ்சுபுடெரடனு மாடித**
**த்வரிததி நகுதெ அச்யுதனு ॥3॥**

**ஸரஸிஜ பவ ஸுரவரரம்பரதலி**
**நெரெது நுதிஸி பூமளெய**
**கரெதரு அண்ணன வெரஸி முகுந்தனு**
**மரளித கோபதி பளிகெ ॥4॥**

**வ்ரஜனாதனு மக்கள பிகிதப்பித**
**பஜிஸி ஸ்தோத்ரவ மாடிதனு**
**த்விஜவர கர்கனு ஹேளித நுடிகளு**
**நிஜஉத்பாத கெலிதனு ॥5॥**

**எனுதலி ஸுகதலி வனதலி மங்கள**
**தினதின வர்திஸுதல்லி**
**வனஜனயனன குணஸங்கீர்தனெ**
**கனஜன பொகளுவரல்லி ॥6॥**

**கோபரு கோபியராவ்களு தருலதெ**
**தேவாம்ஶரு ப்ரஜரெல்ல**
**ஶ்ரீவர ப்ரஸன்வெங்கட க்ருஷ்ணரேயன**
**பாவுகர் மானவரல்ல ॥7॥**

**24**

ஹரி ஹரி கோவிந்தன். அவன் துஷ்டர்களை அழிப்பவன், தன்னை வணங்குபவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுப்பவன். ||ப

கெட்ட புத்தி உடைய கம்ஸனின் சேவகன் ஒருவன், ஒரு முறை, கன்றுக்குட்டி உருவத்தில் வந்தான். கிருஷ்ணன், பலராமர்களை கொல்வதற்காக, அவன் அங்கிருந்த பசுக்களின் கூட்டத்தில் ஒருவனாக நின்றான். ||1

மரத்தில் ஏறி விளையாடிக் கொண்டிருந்த கிருஷ்ண பலராமர்களை கொல்வதற்காக, பக பறவையின் (நாரை) உருவத்தில் பகாஸுரன் வந்து அமர்ந்திருந்தான். மரத்தில் வாய் திறந்து வைத்துக் கொண்டு, இவர்களை தின்ன வேண்டும் என்பதற்காக பகாஸுரன் வந்தான். ||2

ஸ்ரீகிருஷ்ணனோ தன் கைகளால் அந்த அஸுரனின் அலகுகளை பிடித்து, இழுத்து, முறித்துப் போட்டான். அஸுரனை இரண்டு துண்டுகளாக ஆக்கி, சிரித்தவாறு நின்றிருந்தான் ஸ்ரீகிருஷ்ணன். இவ்வாறு பகாஸுர வதம் ஆயிற்று. ||3

ப்ரஹ்மதேவர் மற்றும் அனைத்து தேவர்களும் வானத்தில் நின்று ஸ்ரீகிருஷ்ணனை வணங்கி, பூமழைகளை பொழிந்தனர். முகுந்தன், தன் அண்ணனுடன், தங்களின் தந்தையிடம் சென்று நின்றான். ||4

நந்தகோபன் தன் மக்களை மகிழ்ச்சியுடன் இழுத்து அணைத்துக் கொண்டான். அவர்களை வணங்கி, ஸ்தோத்ரம் செய்தான். ப்ராஹ்மணரில் சிறந்தவரான கர்காசார்யார் கூறிய வார்த்தைகள், இன்று உண்மையானது என்பதை நினைத்து மகிழ்ந்தான். ||5

இவ்வாறு கூறியவாறு / நினைத்தவாறு, வனங்களில் தினமும் மகிழ்ச்சியுடன் அனைவரும் காலத்தை கழித்தனர். தாமரைக் கண்ணனின் குண ஸங்கீர்த்தனைகளை அங்கிருந்த அனைத்து மக்களும் கூடி நின்று புகழ்ந்து பாடினர். ||6

கோபாலகர்கள், கோபிகைகள், பசுக்கள், செடி, கொடிகள் என அங்கிருந்த அனைவரும் / அனைத்தும் தேவாம்சம் பொருந்தியவர்கள். ஸ்ரீவர ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணனின் அத்யந்த பக்தர்கள்; அவர்கள் யாரும் சாதாரண மனிதர்கள் அல்ல. ||7

**

**25. ராக :தேலுகுகாம்போதி தாள :ஏகதாள**
**ஸ்வர்ககெ ஸம வ்ருந்தாவனவு**
**வெக்களிஸிது ஸௌக்யதீவனவு ॥ப ॥**

**ஹரி ஸங்கர்ஷணரீர்வரு**
**ஹருஷதிசரிஸிதராகள காயுதலி**
**வர கோவர்தனகிரிய தப்பலினலி**
**நிருததி யமுனெய தீரதலி ॥1 ॥**

**அல்லித்த லோகங்களு நாகலோகவு**
**அல்லித்த தேனுகளு ஸுரதேனு**
**அல்லிஹ வ்ருக்ஷங்களு கல்பவ்ருக்ஷவு**
**அல்லிஹ நாரியரப்ஸரெரு ॥2 ॥**

**சிண்ணி போகரே செண்டு கும்முகுஸகுஹிடி**
**அண்ணேகல்லு ஹல்லே கஜக பல்லே**
**கண்ணுமுச்சள மரனேராட நேராட**
**ஸண்ணவரொளு ஸோலு கெலவ ஆட ॥3 ॥**

**ஸம்மோஹன மாடுத ரங்க ரங்கா**
**ஸம்மோஹிந்தெம்பரு ரங்க**
**நந்தாப்தியலி கோபியரந்தரங்க**
**நந்திஸிதானந்தசந்த்ர ரங்க ॥4 ॥**

**ஜலஸேதுபந்தனதாட நிலயன**
**பலாயனதாட கபிப்லவன**
**கலஹம்ஸோச்சர அளிகள ஜேங்கார**
**கிளிஶிகியுச்சர பிகோச்சார ॥5 ॥**

**கஜஸிம்ஹகர்ஜனெ கோவ்ருஷ கர்ஜனெ**
**ஸுஜலத கோஷணே பேகரவ**
**ஸுஜன கோவளரிகெ ஶிக்ஷிப த்விஜவர-**
**த்வஜ நிகமேஶ்வரஅஜனபித ॥6 ॥**

**லோலா க்ஷி யரொளு நோட பேட வி-**
**ஶால குணாட்ய ஸுரேட்ய ஹரி**
**நீலாம்புதஶாமல பஶுகள ப்ரதி-**
**பாலிஸிதனு கோபாலரொளு ॥7 ॥**

**வ்ருந்தாவனதி கோவிந்த வேணுஸ்வர-**
**திந்த ஸ்வயஶோ விக்யாத கட**
**இந்திரெயரஸ கோவ்ருந்தவ காய்தனு**
**ஹிந்தண புண்ய வஸுந்தரெகெ ॥8 ॥**

**நளினகந்தவும்ப அளிகளகோஷ மஞ்-**
**ஜுளவாகிரெ விஹங்ககள**
**பளக ம்ருகாவளிகள க்ரீடெயொப்பிது**
**பலு குஸுமாகர ஸ்தானதலி ॥9 ॥**

**எலே பல நோடிவு எளெதளிரு குஸுமகள கொஞ்சல பலபாரிடுத**
**தலெபாகி நலிவிலி நிமகொந்திஸுதிவே**
**எளெயெலர் ஸோங்கி அலருதுருதிவே ॥10॥**

**பலவதி புஷ்பிணியரு தும்பித உடி-**
**யலி ஹிரியரிகெ வந்திப தெரதி-**
**இளே ஸாகித பெளெஸித உபகாரகே**
**லலிதலதாத்ரும நதிஸுதிவே ॥11॥**

**ஸ்தாவர ஜீவத யோக்யதே நோடண்ண**
**தேவ நிம்மர்சனெ மாடுதிவே**
**ஈ உருதருலதே ஜன்மவெ தன்யவு**
**தேவமுனிகளிர்பர் நிஷ்சயவு ॥12॥**

**ஹரியக்ரஜனிகே மானவனித்து ஸம்-**
**சரிஸுவ ஸௌபாக்யகே மெச்சி**
**தரதர பருஹிகள் கரிகெதராடல்**
**எரளெவெயிக்கதே நோடிதவு ॥13॥**

**ஹரிய ஸௌந்தர்யாம்புதிலீஸாடுவ**
**ஹரிணாக்ஷியரக்ஷிமீனகளு**
**மருளிட்டு நிந்தவு பரவேனுனாதகே**
**ஹரிநோடஸ்மரஶரபீடிதரு ॥14॥**

**குடிதெகண் மடதியர முடி நுடி பல் மேலே**
**நடு நடெத்ஹரிண மயூர கீர**
**தாடிமேப ஹரியஞ்செயடவிகிட**
**மடுவிடிதவு நாசிகே ஹிடிது ॥15॥**

**கோபியர் கானவ போல்வ பிருங்காவளி**
**கோபியர் நோடவு குரங்காளி**
**கோபியர் நடெய பரிய ஹம்ஸாளிகள்**
**ஶ்ரீபதிஸேவேகொப்பிதவல்லி ॥16॥**

**வ்ருந்தாவனவது நந்தனோத்யானவு**
**நந்தன மனெயமராவதியு**
**இந்திரெயரஸ ப்ரஸன்வெங்கட உ-**
**பேந்த்ர எல்லரு வ்ருந்தாரகரு ॥17॥**

**25**
வ்ருந்தாவனம் ஸ்வர்க்கத்திற்கு சமமானது. இந்த வனம் ஸௌக்யங்களால் (அனைத்து வித நலன்களால்) நிரம்பியது. ||ப

ஶ்ரீகிருஷ்ணன், பலராமர்கள் இருவரும் பசுக்களை மேய்த்தவாறு மிகவும் மகிழ்ச்சியுடன் அங்கு திகழ்ந்தனர். சிறப்பான கோவர்த்தனகிரியின் அடிவாரத்தில். அங்கேயே யமுனையின் நதிக்கரையும் இருந்தது. ||1

அங்கிருந்த லோகம் - நாகலோகம். அங்கிருந்த தேனுக்கள் - காமதேனு. அங்கிருந்த மரங்கள் - கல்பவ்ருக்ஷங்கள். அங்கிருந்த பெண்கள் அனைவரும் அப்ஸரஸ்கள். ||2

கில்லி, பந்து, கண்ணாமூச்சி, ஓடிப் பிடித்தல், கற்களை வைத்து விளையாட்டும் விளையாட்டுக்கள், நீரில் விளையாட்டும் ஆட்டங்கள், சிறிவர்களை தோற்கடித்து வென்று விளையாட்டும் விளையாட்டுக்களை அனைவரும் ஆடினர். ||3

பசுக்களை மேய்த்தவாறு, ரங்கன், அந்த பசுக்களின் சமூகத்துடன் (கூட்டத்துடன்) மற்றும் தன் க்ராம மக்கள் சமூகத்துடன் அங்கு இருக்கிறான். அனைத்து கோபியர்களையும் அவர்களின் அந்தரங்கத்தில் மிகவும் மகிழ்வித்தான். ஆனந்தசந்த்ரனான இந்த ரங்கன். ||4

தண்ணீரை நிறுத்தி அணை கட்டி விளையாடுதல், கண்ணாமூச்சி விளையாடுதல் விளையாடிக் கொண்டிருக்க; அங்கு குரங்குகளின் கூச்சல், பறவைகளின் சத்தம், கிளி, மயில் ஆகியவற்றின் சத்தமும் அங்கு கேட்டுக் கொண்டிருந்தன. || 5

யானை, சிங்கங்களின் கர்ஜனை, பசு, எருமைகளின் சத்தம், தண்ணீர் பாயும் சத்தம் கேட்டுக் கொண்டிருக்க, அங்கு (தவறுகளை செய்யும்) தன் இடைய நண்பர்களுக்கு தண்டனைகளை கொடுகிறான், ஸர்வோத்தமனான, ஆகமங்களால் அறியப்படுபவனான, ப்ரஹ்ம தேவரின் தந்தையான, கிருஷ்ணன். || 6

அசையும் கண்களைக் கொண்ட பெண்களைப் பார்த்தவாறு, அவர்களுடன் விளையாடியவாறு, அபாரமான நற்குணங்களைக் கொண்டவனான, தேவர்களின் தலைவன், ஸ்ரீஹரி, தண்ணீரில் மலரும் நீலத் தாமரை போன்ற கண்களைக் கொண்டவன், தன்னுடன் வந்த கோபாலகர்களுடன் கூடிக் கொண்டு, அங்கு மேய்ந்து கொண்டிருந்த பசுக்களை பாதுகாத்தான். || 7

வ்ருந்தாவனத்தில், கோவிந்தன், தன் புல்லாங்குழல் ஊதிக்கொண்டு, தன்னைப் பற்றி முழுமையாக அறிந்தவன், இந்திரையின் அரசன், பசுக் கூட்டங்களை காத்தான். இது அந்த ஊர் மக்கள் செய்த பூர்வஜென்ம புண்ணியமே ஆகும். || 8

மலர்களில் உள்ள தேனைக் குடிக்கும் தேனீக்கள் செய்யும் ரீங்காரம் கேட்டுக் கொண்டிருக்க, மேகக் கூட்டங்களைப் போல, மிருகங்கள் வரிசையாக வந்து விளையாடி கொண்டிருக்க, அந்த நறுமணம் மிக்க இடமே மிகவும் அருமையாக இருந்தது. || 9

ஹே பலராமனே, இங்கு பார். இலை, தளிர், இவற்றிலிருந்து பரவும் அற்புதமான வாசம். பழங்கள் மேலே தொங்குகின்றன. தலை குனிந்தவாறு மகிழ்ச்சியுடன் உங்களை வணங்குகின்றன. காற்று வீசி, அதனால், பூக்கள் மேலிருந்து உதிர்கின்றன (என்று தோழர்கள் கூறுகின்றனர்). || 10

பழங்கள் நிறைந்ததான, பூக்களுடன் கூடிய மரக்கிளைகள், மடி நிறைய பொருட்களை கட்டிக் கொண்டு பெரியவர்களை வணங்குவதைப் போல தலை குனிந்து நின்றன. பூமியில் வந்த விதைகளால் வளர்ந்ததால், அதற்கு நன்றி கூறும் வகையில், அழகான, செடி கொடிகள் ஆடிக் கொண்டிருந்தன. || 11

ஸ்தாவர (மலை போன்ற அசையாத பொருட்கள்) ஜீவர்களின் யோக்யதையை பார் அண்ணா. தேவனான உன்னுடைய அர்ச்சனையை செய்கின்றன. இந்த சிறந்ததான செடி, கொடிகள் இவற்றின் ஜன்மமே தன்யம். இவர்களில் தேவ, முனிவர்கள் இருக்கின்றனர் - இது நிச்சயமே. || 12

ஸ்ரீஹரி, தன்னுடைய அண்ணனுக்கு மரியாதை கொடுக்கும் விதமாக, அந்த காடுகளில் ஸஞ்சரிக்கிறார். இந்த ஸௌபாக்யத்தை மெச்சி, மான்கள், மயில்கள் ஆகியவை அங்கு வரிசையாக வருகின்றன - ஆடிக் கொண்டே வந்து ஸ்ரீகிருஷ்ணனை பார்க்கின்றன. || 13

ஸ்ரீஹரியின் அழகு என்னும் கடலில் நீச்சல் அடிக்கும், மான் போன்ற அசைந்தாடும் கண்களைக் கொண்ட பெண்கள், அவன் வாசிக்கும் குழலின் இனிமையான இசைக்கு மயங்கி நின்றனர். ஸ்ரீஹரியின் பார்வை என்னும் அம்பில் அடிபட்டு அப்படியே நின்றனர். || 14

குவிந்த கண்களை உடைய அந்த கோபிகையர்களின் முடி, நடை, பல், முலை, இடை, நடை ஆகிய அனைத்தும் ஸ்ரீகிருஷ்ணன் மேல் பக்தியை பொழிந்தவாறே இருந்தது. மான், மயில், கிளி, மாதுளை, யானை, சிங்கம், ராஜஹம்ஸ பறவை என முறையே இவை அனைத்தும் கோபிகைகளின் முன்கூறிய ஒவ்வொரு அவயவங்களை பார்த்து, அதனை தங்களுடன் ஒப்பிட்டுக் கொண்டு வெட்கம் அடைந்தன. || 15

கோபியர்களின் கானம், தும்பிகளின் ரீங்காரம் போல இருந்தது. அவர்களின் பார்வை படபடக்கும் மானின் பார்வை போல இருந்தது. அவர்களின் நடை அன்னப்பறவை போல இருந்தது. இவற்றுடன் அவர்கள் அனைவரும் ஸ்ரீபதியின் சேவையில் ஈடுபட்டிருந்தனர். ||16

அந்த வ்ருந்தாவனம், நந்தனின் உத்யானமாக (தோட்டம் / பூங்காவனம்) இருந்தது. நந்தனின் வீடு, ஸ்வர்க்கம் போல இருந்தது. இந்திரையின் தலைவன், ப்ரஸன்ன வெங்கடன், உபேந்த்ரன் என இவர்களுடன் இருந்த அனைவரும் வ்ருந்தாரகரும், ஸ்வர்க்கவாசிகள் போலவே இருந்தனர். ||17

***

**26. ராக :கன்னடகௌள தாள :அட்ட**

**தன்ய தன்ய யமுனெ கோவர்தன்ன கிரிபதி**
**சின்மயாங்க ஸ்வருஷ பாவன்ன மூருதி ||ப||**

**எளெதளிரு சாவந்திகே நீலோத்பல பொங்க்யாதகெய**
**நளின சம்பக பாடல பகுள மொல்லெ மல்லிகெய**
**அலரு துளஸி பருஹிபருஹ கௌெயரீவரு கெளெயரிகெ**
**ஒலிது இத்து தானிடுவனு சேலுவரஸனு ||1||**

**முகுதபளகதொடனெ ஸந்தத லகுமி பூஜிபளு**
**முகுத குஸும கந்தாலங்கார ஸ்ரீகாந்தெ தானஹளு**
**முகுதாமுகுதரிகெ துர்லப வ்யக்தாவ்யக்தனு**
**ஆகளகாய்வர மக்களு அர்சிஸெ ஸ்வீகரிஸுதிஹனு ||2||**

**ஶுகபிககளு ம்ருதுத்வனிய ஜேங்காரவதிம் கரெவந்தே**
**ப்ரகடிஸுதிவே க்ருஹமேதிகளாகி பகுதி வினயரந்தே**
**ஸுகிகளவரெ ஸாதுகுல ஸேவகரு பாவுகரு ஜீவன்-**
**முகுதரவரெ பரோபகாரதி முகுதி படெவரு ||3||**

**மதுகரகள கூடி ஜேங்காரத முததி மாள்பரு**
**ஹ்ருதத ஹம்ஸ ஸாரஸ ரம்ஹஸ வதிஸி நகுவரு**
**கெதரிதகம்பருஹிகளொடனெ முததி குணியுவரு**
**பெதரு ஹுல்லெகளந்தெ நோடி கதலி ஜிகியுவரு ||4||**

**ஹரிபலரீர்வரு ஸரிகோவளரோள் பெரஸி திருகுத**
**தருலதெகள ம்ருக பக்ஷிகளச்சரிய நோடுத**
**ஸரஸவசன நுதிதரெலெலெ திர்யக்ஜாத்யர**
**பரமதர்மவ நோடி அத்யந்த ஹருஷ தோருவரு ||5||**

**சகோர குரரி க்ரௌஞ்ச தித்திரி ஶகுந்த காரண்ட**
**பககளு பாராவத கெலவிங்க சக்ரவாககள**
**ஸுகளோச்சாரவ மாடுத பாடுத ஆகள காய்தனு**
**ஸக கோவளர நிகரக்கக்ஷய ஸுகவனுணிபனு ||6||**

**மேககம்பீரரவதி தொரித்த கோகள கரெயுவனு**
**ம்ருகப வ்யாக்ரஜகள த்வனிகெ திகிலு தோருவனு**
**ஜகத ப்ரபு முகுந்த தணித பகெயெ பல்லவவ**
**நகுத கோவளர்ஹெகலினலி பாஹுகளன்ஹேருவ ||7||**

**ஸகர தொடெய தலெகிஞ்பினலி முகவன்னெ இடுவ**
**பகுதவத்ஸல நித்ரெய மாடுவ ஸுகதி தருமூல**
**ஸுகஸமுத்ர நித்ராமுத்ர ஸுகலெதோரித**
**ஆகளகாய்வர கையிந்தங்க்ரி கமலகளோதிதிஸித ||8||**

**லகுமி பஜிப பாத சதுர்முகனர்சிப பாத**
**லோககளளெவ பாத கங்கேய ப்ரகடிஸித பாத**
**முகுத வ்யகத பாத காளிங்க பகுதோத்தர பாத**
**ஶகடவனொத்த பாத கோவளஸகரோத்துவ பாத ॥9॥**

**குணிது குணிது தணிது நடெது தனுவு பெவரித**
**வனஜனயன பணிஶயனனு மணிது மலகித**
**கனயரொடனெ யுத்ததி காயனதி ஶாந்தனு**
**தனுஜமதன புண்யகதன ஸூனித்ரெயாந்தனு ॥10॥**

**கதனசௌபட மதனஜனக வதனதி பாடிதனு**
**ஸதனத்ரயனு ஆ தன காய்தன்யஶோதன பூரணனு**
**ஹதினால்கு லோகாத்யதன கர்மஜ்ஞ ஸூதனரொடியனு**
**ஈ தேனுபள்ளிய பதி நதிவனதி தத்யோதன ஸவிதனு ॥11॥**

**அணுகர கரவிடிது நகுத தணெதர்பகரந்தெ**
**தணிர மரதே நௌலிக்யேதி கனஸ்யாமல க்ருஷ்ண**
**தணிரு கஸெபு தொடி தலெகிம்பு கெணெயரு மாடிதரு**
**வனஜனாபன குணஸங்கீர்த்தனெ நெனெது பாடிதரு || 12**

**வனமாலி கந்தவ்யஜன பாத ஸம்ஹன சாமரகளிம்**
**வனஜாஸனன பிதன ஒலிஸிதரணுக கோவளரு**
**கன கோமள ஸ்ருதிகள மனகே நிலுகத ஸனகாதிஸ்வரனு**
**வனகோசரர குணக்ராஹியாத முனிஜனெட்யனு ॥13॥**

**தாமஸகார்ச்சித க்ராம்யர கூடாடி வ்யாமோஹிப விஸ்வ**
**பூமிலதாத்ரும யமுனா பர்வத ஸ்தோமதி சரிஸூவ**
**கோமல த்ருண குஸூமாவளிகள தா மாடுவ தன்யர**
**ஶ்ரீமனோஹர ஸ்ருஜனோபகார காமிததாதார ॥14॥**

**கரஜாகரபல்லவ ஆலிங்கன சரணாம்புஜகளிம்**
**ஸ்வருஶனதிந்த கருண நோடதி ஹொரெவ பெண்ணுகள**
**ஸ்வரத ஸ்ருஷ்டிய பரமபுருஷ பராத்பர க்ருஷ்ண**
**வர கோபியர ஸூரதேனு கல்பதரு ப்ரஸன்வெங்கட ॥15॥**

**26**

யமுனை எத்தகைய பாக்கியம் கொண்டவளோ?. கோவர்த்தன கிரியின் தலைவனான, சின்மய தேகம் கொண்டவனை, பாவன மூர்த்தியின் ஸ்பர்ஶ பாக்கியத்தை பெற்றாள். || ப

இலை, தளிர்கள், சாமந்தி, நீலோத்பல, க்யாதி, அழகான சம்பக, பாடல, பகுள, முல்லை, மல்லிகை, துளஸி தளம், உதிரிப் பூக்கள் ஆகியவற்றை தோழர்கள் மற்ற தோழர்களுக்கு சமர்ப்பிக்க, ஶ்ரீகிருஷ்ணனும் மகிழ்ந்து, தானும் அவற்றை மற்றவர்களுக்கு வைத்து அழகு பார்க்கிறான். இவன் அழகானவர்களுக்கு அரசனாக இருக்கிறான். || 1

எப்போதும் அவனுடனேயே இருக்கும் நண்பர்களுடன் இருக்கையில், ஶ்ரீலக்ஷ்மி தேவி அவனை பூஜிக்கிறாள். நல்ல நறுமணம் மிக்க சந்தன அலங்காரங்களை ஶ்ரீகாந்தையான ஶ்ரீமஹாலக்ஷ்மி இவனுக்கு சமர்ப்பணம் செய்கிறாள். முக்தர்களும், அமுக்தர்களுக்கும் இவன் துர்லபன் (சுலபமாக கிடைக்கக்கூடியவன் அல்ல). இவன் வ்யக்த - அவ்யக்தன். பசுக்களை மேய்க்கும் சிறுவர்கள் இவ்வாறு மேற்கண்ட பூக்களால் ஶ்ரீகிருஷ்ணனை அர்ச்சனை செய்தால், அவன் அவற்றினை ஏற்றுக் கொள்கிறான். ||2

கிளிகள் மற்றும் இதர பறவைகள், தங்களின் மதுரமான த்வனிகளால் ஶ்ரீகிருஷ்ணனை அழைப்பது போல பாடுகின்றன. ஒரு பக்தி, வினயம் நிறைந்த க்ருஹஸ்தரைப் போல இவையும் தங்களின் பக்தியை வெளிப்படுத்துகின்றன. ஸாது குலத்தில் வந்தவர்களுக்கு மகிழ்ச்சியுடன்

சேவையை செய்பவர்களே ஸுகிகள். மற்றவர்களுக்கு பரோபகாரம் செய்பவர்களே ஜீவன் முக்தர்கள். இத்தகையவர்களே முக்தியை அடைவார்கள். || 3

பூக்களில் சென்று, தும்பிகளானது ரீங்காரம் செய்தவாறு தேன்களை சேகரிப்பது போல, இவர்களும் பிறருக்கு மகிழ்ச்சியுடன் சேவை செய்கிறார்கள். அங்கிருந்த ஏரிக்கரையில் ஹம்ஸ பறவைகள் பல இருக்க, ஸ்ரீகிருஷ்ண பலராமர்கள் அங்கு மிகவும் சத்தமாக கூவிக்கொண்டு, சிரித்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்த பெரிய மரங்களிலிருந்து, பூக்களை பறித்துக் கொண்டு, மகிழ்ச்சியுடன் குதித்து விளையாடுகிறார்கள். மான் குட்டிகளைப் போல இவர்களும் அங்கும் இங்குமாக ஓடாடி விளையாடுகிறார்கள். ||4

ஸ்ரீகிருஷ்ண பலராமர்கள் இருவரும், தமது தோழர்களான கோபாலகர்களுடன் விளையாடியவாறு, அங்கிருந்த இலை தழைகளை, மிருக பறவைகளை மிகவும் வியப்புடன் பார்த்தவாறு, நட்புடன் பேசிக் கொண்டவாறு, அங்கு திரிந்து கொண்டிருந்தனர். அங்கிருந்த பசுக்களின் & மற்ற மிருகங்களின் பரம தர்மங்களை பார்த்தவாறு மிகவும் மகிழ்ச்சியுடன் தென்பட்டனர். || 5

சகோர பறவை, க்ரௌஞ்ச பறவை, கௌதாரி, ஷகுந்த, நீர்ப்பறவை, பக பறவைகள், பாரிவாள, குருவி, சக்ரவாக போன்ற பறவைகளின் இனிமையான ஸ்வரங்களை போல இவர்களும் பாடியவாறு, பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்தனர். ஸ்ரீகிருஷ்ணன், தன்னுடைய நண்பர்கள் குழுவிற்கு எல்லையில்லாத மகிழ்ச்சியை அளித்தான். || 6

மேகங்களைப் போல கர்ஜித்தவாறு, தூரத்தில் இருந்த பசுக்களை ஸ்ரீகிருஷ்ணன் அழைக்கிறான். சிங்கம், புலி, யானைகளைப் போல சத்தம் போட்டு மற்றவர்களை பயமுறுத்துகிறான். ஜகத்ப்ரபுவான, முகுந்தன் அவனுக்கு சோர்வு என்பதே இல்லாதிருந்தது. எப்போதும் சிரித்தவாறு தன் தோழர்களின் தோள்கள் மேல் ஏறிவிடுகிறான். ||7

நண்பர்களின் துடை மேல், தன் தலையை வைக்கிறான். பக்தவத்ஸலனானவன் அப்படியே சுகமாக படுத்து உறங்குகிறான். ஒரு நல்ல மரத்தடியில் தலை சாய்த்து அப்படியே படுக்கிறான். அவனே சுகங்களின் கடல். பசுக்களை மேய்க்கும் தன் நண்பர்களின் கையால், தன் பாதங்களை அமுக்கி விடச் செய்து சுகமாக படுத்திருக்கிறான் ஸ்ரீகிருஷ்ணன். || 8

அந்த ஸ்ரீகிருஷ்ணனின் பாதங்கள், ஸ்ரீலக்ஷ்மி தேவி பஜிக்கும் பாதங்கள். சதுர்முக ப்ரஹ்மதேவர் அர்ச்சனை செய்த பாதங்கள். உலகத்தையே அளந்த பாதம். கங்கையை பாய வைத்த பாதம். முக்தர்களுக்கு தோன்றிய பாதம். காளிங்கனை ஏறி மிதித்த பாதம். ஶகடாஸுரனை மிதித்த பாதம். அந்த பாதங்களை இப்போது கோபாலகர்கள், அமுக்கி விட்டுக் கொண்டிருக்கின்றனர். || 9

இவ்வாறாக ஸ்ரீகிருஷ்ணன் குதித்தாடி, ஓடியாடி, நடந்து, உடலில் வியர்வை வடிய வந்தான். தாமரைக் கண்ணன். பாம்பின் மேல் படுத்திருப்பவன். கீழே சோர்வுற்று படுத்தான். தன் நண்பர்களுடன் சண்டை போட்டு, அதனால் சோர்வு கொண்டு படுத்தான். இவ்வாறு அஸுரர்களைக் கொல்பவன், புண்ய சரித்திரத்தைக் கொண்டவன், நல்ல தூக்கத்தில் ஆழ்ந்தான். || 10

ப்ரளயத்தில் ப்ரபஞ்சத்தை நாசம் செய்பவன், மன்மதனின் தந்தை, தன் வாயினால் பல்வேறு சத்தங்களை செய்து பாடினான். ஸ்வேதத்வீப, அனந்தாஸன, வைகுண்ட என்னும் மூன்று ஸதனங்களில் இருப்பவன். அந்த பசுக்களை மேய்ப்பவனான ஸ்ரீகிருஷ்ணன், புகழ், தனங்களால் பூர்ணன். 14 உலகங்களில் ஒரு நாள் உண்ணக்கூடியவன். கர்மங்களின் ரகசியங்களை அறிந்தவர்களுக்கு அவன் தலைவனாக இருக்கிறான். இவ்வாறு, பசுக்களை மேய்க்கும் இடத்தில், அந்த தோழர்களுடன் ஸ்ரீகிருஷ்ணன், தயிர் சாதம் உண்டு கொண்டிருந்தான். || 11

தன் நண்பர்களின் கைகளை பிடித்துக் கொண்டு, சிரித்தவாறு, சோர்ந்து போன குழந்தைகளைப் போல, அங்கு ஓங்கி வளர்ந்திருந்த மரங்களின் நிழல்களில், ஶ்யாம வர்ணனான ஸ்ரீகிருஷ்ணன் வந்து அமர்ந்தான். அந்த மரங்களிலிருந்து இலைகள், தழைகள் ஆகியவற்றை பறித்து, அவனுடைய தோழர்கள், அவற்றை (ஸ்ரீகிருஷ்ணன் படுப்பதற்கான) ஒரு

தலையணையாக ஆக்கினர். பின், அனைவரும் சேர்ந்து, அந்த பத்மனாபனின் குண ஸங்கீர்த்தனைகளை ஸ்மரணை செய்தவாறு, அவனை போற்றிப் பாடத் துவங்கினர். அவனது சேவைகளை செய்ய துவங்கினர். || 12

அந்த ஸ்ரீகிருஷ்ணனின் தோழர்கள், ஸ்ரீகிருஷ்ணனுக்கு வனங்களில் இருந்த பூக்களால் செய்த மாலையை அணிவித்தனர். சந்தனம் பூசினர். விசிறியால் காற்று வீசினர். அவனது பாதங்களை பூஜை செய்தனர். சாமரங்களால் காற்று வீசினர். இவ்வாறு பல்வேறு உபசாரங்களால் சதுர்முக ப்ரஹ்ம தேவரின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணனை அங்கிருந்த கோபாலகர்கள் அனைவரும் மகிழ்வித்தனர். அபாரமான வேத மந்த்ரங்களுக்கும் எட்டாத, அவற்றிற்கும் அப்பாற்பட்டவனான, அந்த ஸனகாதிகளுக்கும் ஈஸ்வரனானவன், அந்த வனத்தில் இருந்தவர்களின் குண கானங்களை ஏற்றுக் கொண்டான். அவன் முனிவர்களால் வணங்கப்படுபவன். || 13

தன் ஊரில் இருக்கும் நண்பர்களால் அர்ச்சனை செய்யப்பட்டவன், அந்த க்ராம மக்களுடன் சேர்ந்து கொண்டு, விளையாடுவதால், இந்த ஸ்ரீகிருஷ்ணனும் நம்மைப் போல ஒரு ஜீவனே என்று அவர்கள் நினைக்குமாறு அவர்களை மயக்கினான். இவ்வாறே அவன் அந்த உலகத்தில், பூமியில் இருந்ததான செடி, கொடிகள், யமுனா, கோவர்த்தன கிரி இருந்ததான அந்த ஊரில் ஸஞ்சாரம் செய்தான். இவ்வாறு ஸஞ்சாரம் செய்து, அந்த மிருதுவான புல், மலர்களின் வரிசைகளான அந்த செடி, கொடி, மரங்கள் அனைத்தையும் அவர்கள் தன்யர்கள் என்று ஆக்குகிறான். அவனே ஸ்ரீமனோஹரன், தன் பக்தர்களுக்கு அனைத்து வித உபகாரங்களையும் செய்பவன். தன் பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றுபவன். ||14

அந்த ஸ்ரீகிருஷ்ணன் அங்கிருந்த அனைத்து மக்களின் ஆலிங்கனங்களையும் ஏற்றுக் கொண்டிருந்தான். சிலருக்கு ஸ்பர்ஶம் செய்து, சிலருக்கு தன் கருணைப் பார்வையினாலேயே மட்டற்ற ஆனந்தத்தை தந்து கொண்டிருந்தான். தனக்குத் தானே ஆனந்தம் அடைபவன், தன்னை தானே ப்ரியம் கொள்பவன், பரம புருஷன், பராத்பரன், கிருஷ்ணன், தன்னை வேண்டும் அந்த கோபியர்களின் ஸுரதேனுவாக, கல்பதருவாக இருந்தான். அவனே ப்ரஸன்ன வெங்கடன். || 15

***

**27. ராக :முகாரி தாள :ஏகதாள**

**ஸ்ரீமாதவ பலராமர ஸக ஸ்ரீதாம சின்னவிஸித ஹரிகெ**
**தாமஸ தேனுகனு மதமத்தனு ஈ மஹாதாள்வனதொளகே ||ப||**

**கரனாக்ருதியலி கலநிகரத கூடிருவனு பரகொடொப்பரிகெ**
**ஸுரபி ஸுரஸபல துருகமவாகிவே ஹரி நீ கருணிஸு நமகே ||1||**

**ஸுகமய மூருதி ஸகன நுடிகே நகேமுகிதலி கூடி கோவரனு**
**குகளன தால்வன அக்கரதி பொக்கு தருநிகரகல்லாடிதனு ||2||**

**இத்தெணிகில்லத கத்தேபளகதொளு ஷத்ருதேனுக கொலபந்த**
**க்யாத்கரிஸுத கிவி எத்தி ஹிங்கால்களலொத்யொதேயுதலவநிந்த ||3||**

**ஹேஸரகத்தெய தா ஸத்வரதலி பீஸி வ்ருக்ஷாக்ராகெ ஒகெத**
**வாஸுதேவ மத்தா ஸங்கர்ஷண ராஸபகளனெல்ல ஸிகித ||4||**

**துருளரு தமஸிகே தெரளலு துந்துபி அரளுமல்லிகெய ஸூஸிதரு**
**தரள முகுந்தன ஸரள விக்ரமகள மரளி மரளி ஸுரர்ஹொகளிதரு ||5||**

**ஸுரபி ஸத்ருஶதிம் பரித பலங்கள ஹரி சிரகோவரிகுணிஸிதனு**
**ஹருஷதி எல்லரு ஹரிய குணங்கள ஸ்மரிஸுத கோகள மேஸிதரு ||6||**

**நளினதளாம்பக பளகோவளரிம் பலகள புஞ்ஜிஸி முததி**
**தலெயலி பர்ஹே பொகள முடிதாகுகளுகள கூடி பருதிஹ வனதி ||7||**

**ஸிங்கரவாகிரெ முங்குருளோளிகே மங்கள கோகுர தூளி**
**ஹெங்கள கோபெர கங்கள மதுகரகரங்கஸ்யாப்ஜத கேளி ॥8॥**

**ம்ருகஶாபாக்ஷெர பகெகொளுதீக்ஷிப முகுளுனகெய ஸவிநோட**
**ஜகஜகிபாரணகளிகெ பூஷணத்யுகரம் மோஹிப மைமாட ॥9॥**

**ஹெங்கள விஸ்தர கங்கள ஹஸிவேகே ரங்கன வதனவே அப்யாயன**
**பொங்கொளலு ஸ்ரவணங்கள க்ஷுதெகெ க்ஷணங்களிகெல்ல அப்யாயன ॥10॥**

**நளினாக்ஷன முகபெளிதிங்களினலி லலனெர நயனசகோர**
**நலிதவு நாபிய ஸலிலாஶயதலி ஹொளெவக்ஷிமீனவிஹார ॥11॥**

**செலுவ பாதாம்புஜகள ரஸவும்புவ அளிகள ஸரியுக்ஷிப்ருங்க**
**கேளதி கோபியர ஸுலலித மனதலி ஹொளெவுது ஹரிய ஸர்வாங்க ॥12॥**

**ஸவி ஹரிநாமகள ஸவியதம்ருத கண யுவதெர ஜிஹ்வெகானந்த**
**நவபக்திய ரஸ நவகத செலுவேயரு டவடவிபரு முகிதிந்த ॥13॥**

**ஶ்ரீகோவிந்தனு கோகள ஸஹ வ்ரஜகாகி பரலு ஜனனியரு**
**பேகப்பலு வனதாகின வார்தெய ஆ கோவரு ஹேளிதரு ॥14॥**

**களர வதிஸி பலு பளல்லிரெனுத பரிமளஜலதைலதலெரெது**
**கலதெளதாம்பர மலயஜ வ்யஜன ஸ்ருக்கள ம்ருஷ்டோதனதிந்த ॥15॥**

**நிஜஸுகிபூர்ணன பஜிஸே ஸுஜபவனு ஸுஜனனி தா மாடிஸலந்து**
**த்ரிஜகபதி முக்கஜனவந்திதபத ரஜனியலொப்பிதனந்து ॥16॥**

**ப்ரஸன்னதர சரித ப்ரஸன்னயஶோங்கித ப்ரஸன்னமூருதி தீனபந்து**
**ப்ரஸன்னவேங்கடக்ருஷ்ண ப்ரஸன்னகதிப்ரத ப்ரஸன்னாகலி நமகிந்து ॥17॥**

**27.**
ஶ்ரீமாதவ, பலராமர்களின் தோழனான ஶ்ரீதாம என்பவர் ஶ்ரீஹரியிடம் வந்து இவ்வாறு வேண்டிக் கொள்கிறார். இங்கு அருகில் இருக்கும் வனத்தில், தாமஸ ஜீவனான தேனுகன் என்பவன் இருக்கிறான். அவனின் தொந்தரவினால், அந்த வனத்தில் யாருமே செல்ல முடிவதில்லை. அங்கிருக்கும் பூ, பழங்களை அனுபவிக்க முடியவில்லை - என்றார். || ப

அவன் கழுதை ரூபத்தில் இருக்கிறான். தன்னுடன் பலரையும் வைத்துக் கொண்டிருக்கிறான். அந்த வனத்தில் நம் யாரையும் விடுவதில்லை. நல்ல சுவையான, நறுமணம் மிக்க பழங்கள் அந்த வனத்தில் நிறைய இருக்கின்றன. ஆனால், நம்மால் அவற்றை சுவைக்க முடியவில்லை. ஶ்ரீஹரியே நீயே எங்களை அருள வேண்டும். அந்த வனத்தில் நாங்கள் நுழையுமாறு செய்ய வேண்டும். || 1

ஸுகபூர்ண மூர்த்தியைக் கொண்டவனான ஶ்ரீகிருஷ்ணன், தன்னுடைய நண்பனின் பேச்சினை புன்னகையுடன் கேட்டுக் கொண்டான். பிறகு தன் கோபாலகர்களுடன் கூடியவாறு, அந்த கெட்ட அஸுரன் இருக்கும் அந்த தால்வ வனத்தை அடைந்து, அங்கிருந்த மரம், செடிகளை பிடித்து ஆட்டினான். அங்கு விளையாடினான். || 2

இதற்குள் எண்ணிக்கை இல்லாத (அதாவது, பற்பல எண்ணிக்கையில்) கழுதைகள் அங்கு வந்தன. அவற்றுடன் தேனுகாஸுரனும் இவர்களை கொல்வதற்காக வந்தான். சத்தம் போட்டவாறு, தன் காதுகள் தூக்கியிருக்க, தன் பின்னங்கால்களால் இவர்களை மிதிப்பதற்காக அவற்றை தூக்கியவாறு வந்தான். || 3

இவ்வாறு தங்களை மிதிப்பதற்காக வந்த கழுதைகளை, ஸ்ரீகிருஷ்ண பலராமர்கள் தூக்கி வீசினர். அது மரங்களின் உச்சி வரை செல்லுமாறு வீசினர். வாஸுதேவன் மற்றும் ஸங்கர்ஷண (பலராமன்) இருவரும், அந்த அனைத்து கழுதைகளையும் இவ்வாறே கொன்றனர். || 4

இவ்வாறு கழுதை வடிவில் இருந்த அஸுரர்கள் அனைவரும் தமஸ்ஸிற்கு சென்றனர். தேவர்கள் வானிலிருந்து துந்துபி இசைத்தனர். மல்லிகை மலர்களின் மழையை பொழிந்தனர். சிறுவனான முகுந்தனின் அபாரமான வீரத்தை, மகிமைகளை தேவர்கள் அனைவரும் திரும்பத் திரும்ப கொண்டாடினர். ||5

அமிர்தத்திற்கு ஒப்பான சுவையைக் கொண்ட அந்த பழங்களை, ஸ்ரீஹரி, தன்னுடைய நண்பர்களான கோபாலகர்களுக்கு உண்ணக் கொடுத்தான். அந்த பழங்களை உண்ட மகிழ்ச்சியில், அனைவரும் ஸ்ரீஹரியின் குணங்களை போற்றிப் பாடியவாறு, பின், பசுக்களை மேய்க்கும் செயலை செய்தனர். || 6

தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீகிருஷ்ணன், தன் நண்பர்களான கோபாலகர்களுடன் கூடி, அவர்களுக்கு அந்த பழங்களை உண்வித்து, மிகவும் மகிழ்ச்சியுடன், தன் தலையில் மயில் தோகைகளை, பூக்களை சூடிக் கொண்டு, பசுக்களுடன் அந்த வனத்தில் சுற்றி வந்தான். ||7

நெற்றியில் புரளும் சுருள் முடியுடன், மற்றும் மங்களகரமான பசுக்களின் நடையால் எழுந்த தூசிகளின் நடுவில் ஸ்ரீகிருஷ்ணன் நடந்து வருவது மிகவும் அழகாக இருந்தது. ஸ்ரீகிருஷ்ண பலராமர்கள் வருகிறார்கள் என்ற செய்தியைக் கேட்டு, அவர்களின் கால் சலங்கை சத்தத்திலிருந்து அவர்களின் வருகையை அறிந்த பெண்களின், அந்த கோபிகைகளின் கண்களில் மகிழ்ச்சி பொங்கியது. || 8

மான் போன்ற கண்களைக் கொண்ட கோபியர்கள் ஸ்ரீகிருஷ்ணனை ஆர்வத்துடன் எதிர் நோக்கியிருக்க, ஸ்ரீகிருஷ்ணனும் தன் புன்னகையை அவர்கள் மேல் வீசினான். ஸ்ரீகிருஷ்ணனின் பளபளவென ஒளிர்வதான ஆபரணங்களால் கூடிய அவனுடைய தரிசனத்தைக் கண்ட தேவதைகளுக்கே அவன் மேல் ஆசை (மோகம்) வருகிறது. || 9

அந்தப் பெண்களின் விஸ்தாரமான கண்களின் பசிக்கு, ஸ்ரீரங்கனின் முகமே, அதன் தரிசனமே திருப்தியை அளிக்கிறது. அவனுடைய புல்லாங்குழல் இசையினை கேட்டதாலேயே, அவர்களின் தாகம் தீர்ந்து அவர்களுக்கு திருப்தி உண்டாயிற்று. ||10
தாமரைக் கண்ணனின் முகமானது, பௌர்ணமி நிலவினைப் போல இருக்க, அந்தப் பெண்களின் கண்கள் சகோர பறவை போல அந்த முகத்தையே பார்த்து, அதன் அழகினை பருகியவாறே இருந்தது. அழகான, பரந்த அந்த ஸ்ரீகிருஷ்ணனின் நாபி என்னும் தடாகத்தில், அந்தப் பெண்களின் கண்கள், மீன்களைப் போல விழுந்து நீந்திக் கொண்டிருந்தன. || 1

அழகான அந்த ஸ்ரீகிருஷ்ணனின் பாதத் தாமரைகளின் ரஸத்தை உண்ணும் தேனீக்களைப் போல, அந்த மான் விழிகளைக் கொண்ட பெண்கள் ஸ்ரீகிருஷ்ணனையே பார்த்துக் கொண்டிருந்தனர். இவ்வாறு, அந்த கோபிகைகளின் அழகான பக்தி நிறைந்த மனதில், ஸ்ரீஹரியின் ஸர்வாங்கங்களும் ஒளிர்ந்தவாறு இருந்தது. || 12

ஹரி நாமங்களின் சுவையை அந்தப் பெண்கள் சுவைத்துக் கொண்டிருந்தனர். இதனால், அந்தப் பெண்களின் நாக்குகளுக்கு ஆனந்தம் பெருகியது. நவ வித பக்தியின் ரஸத்தை, அந்த அழகான பெண்கள் தங்கள் முகத்திலிருந்து பொழிந்து கொண்டிருந்தனர். || 13

ஸ்ரீகோவிந்தன், அந்த பசுக்களுடன், தன் க்ராமத்தை நோக்கி வர, தாய்மார்கள் அனைவரும் வனத்தில் என்ன நடந்தது என ஸ்ரீகிருஷ்ண பலராமர்களை, கோபாலகர்களை கேட்டனர். தேனுகாஸுரனின் ஸம்ஹாரம் ஸ்ரீகிருஷ்ணனால் ஆனது என்று அந்த கோபாலகர்கள் கூறினர். || 14

அந்த தேனுகாஸுரனைக் கொன்று, நீ மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறாய். அதனால் ஸ்னானம் செய்வாயாக என்று, தாயானவள், ஸ்ரீகிருஷ்ணனுக்கு நறுமணம் மிக்க தண்ணீர், எண்ணெய் ஸ்னானம் ஆகியவற்றை செய்வித்தாள். பிறகு அவனுக்கு பட்டாடைகளை உடுத்தி, சந்தனம்

பூசி, காற்று வீசி, பூமாலைகளை சூட்டி, ஸ்ரீகிருஷ்ணனுக்கு சுவையான அன்னத்தை உண்வித்தாள். || 15

எந்த துக்கத்தின் வாசனைகூட இல்லாத, சுகபூர்ணனான இந்த ஸ்ரீகிருஷ்ணனை வணங்கி, அந்தத் தாய், பகவந்தனைக் குறித்து ஜபங்களை செய்தாள். மூன்று உலகங்களின் தலைவனான, முக்தர்களால் வணங்கப்படும் பாதங்களைக் கொண்டவனான ஸ்ரீகிருஷ்ணன் அன்று, முழு நிலவினைப் போல ஒளிர்ந்து கொண்டிருந்தான். || 16

அனைவருக்கும் மகிழ்ச்சியை தரக்கூடிய சரிதம் கொண்டவன். புகழினை எப்போதும் தன்னுடனே வைத்துக் கொண்டிருப்பவன். ப்ரஸன்ன மூர்த்தி. பக்தர்களை காப்பவன். ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ண. அவனுடைய பாதங்களே, பக்தர்களின் கதி. இத்தகைய ப்ரஸன்ன வெங்கடன், நமக்கு இன்று மகிழ்ந்து தரிசனம் அளிக்கட்டும். || 17

***

**28 . ராக :ஸௌராஷ்ட்ர தாள :அட்ட**

**காளியபணிமதஹரண க்ருபாளுஸுஜனராபரண**
**ஸ்ரீலாலித மங்களசரண மத்த கூளதனுஜஸம்ஹரண ॥ப ॥**

**யமுனெயொளேகதேஶதலி அஹிரமண கபடி ஹொந்திரலி**
**அமலஜலவு விஷவாகி தீர க்ஷமெகெ ஹத்திதந்தெ ப்யாகி ॥1 ॥**

**தீரத த்ருண வ்ருக்ஷ குல்ம ஶகே ஸாரி ஸுட்டரெ அல்லிகோம்மெ**
**வீர கருட நம்மிரிதத கும்ப ஹேரி கதம்பனுளுஹித ॥2 ॥**

**ஒந்து தினவு கோவிந்த பல பாந்தவனுளிதல்ஹோத**
**சந்ததி கோவளரிந்த கோவ்ருந்தவ சரிஸுத நிந்த ॥3 ॥**

**ஆகலே நீரடிஸிதரு தாவு பேக யமுனெகைதிதரு**
**கோகோவரு விஷஜலவ குடிதாகளெ நீகிகரஸுவ ॥4 ॥**

**யோகேஸ்வரநாத ரங்க தயாகுண கருணாபாங்க**
**பேகனெப்பிஸலாகவரு ஹரிகோவிந்தனெந்தெத்தவரு ॥5 ॥**

**பாஹி பாஹி கருணாளோ பாஹி பாஹி தப்புகளன்னு தாளோ**
**தைஹிக சிந்தாமணியெ கிளதாஹக ஸத்குணிகணியே ॥6 ॥**

**பஹள ஸ்துதிய மாடிதரு மஹாமஹிமன மொரெ ஹோகலவரு**
**அஹிவரஶயன முராரி எனலு வஹிளதெ ஸலஹித ஶௌரி ॥7 ॥**

**கட்வினமர துதிகேரி காட நடுபிகிதம்பர ஹரி**
**குடுகுடிஸுத துமுகிதனு விஷமடுவனு ஹரி கதடிதனு ॥8 ॥**

**ஸங்க்ஷோபிஸி ஜலவுப்பெ ஹார்யாக்ஷண ஶததனு ஹப்பே**
**அக்ஷயவிக்ரம ஹரிகெ மத்தீக்ஷுத்ரபலவேனவகே ॥9 ॥**

**பேஷண தெரகளெத்தாடெ மத்தாஶிவிஷனிதனோடெ**
**வாஸஸ்தானகெ இல்லி பந்து ஈ க்லேஶனித்தவனாரெந்து ॥10 ॥**

**ரோஷதி எத்தவனாகா விஷஶ்வாஸவனுகுளுதலாக**
**வாஸுதேவன கச்சபந்த கொந்து பாஸிஸுவேனெந்த மந்த ॥11 ॥**

**அஹிபக்ஷகவாஹநன ஈ அஹி கட்டித பிகிதவன**
**தஹிஸுத மைஸுத்திதனு ஹரி பஹுதப்பனு தாளிதனு ॥12 ॥**

நீலநீரதசரீர ஸ்ரீ லோல ஸுந்தர ஸுகுமார
காலாஹிவேஷ்டித தானு தன்ன லீலெயிந்த நிஸ்சேஷ்டிதனு ||13||

ரக்ஷஸஹரணன கண்டு அதி துக்கதி கோகள ஹிண்டு
ஸக்யத ஸககோவளரு சித்தகேததி ரோதிபரு ||14||

ஸ்ரீவத்ஸத லாஞ்சனனு ஹா ஸாவ லோகத சென்னிகனு
ஸ்ரீவக்த்ரதி தோரிதனு ஸர்வாவேஷ்டிதனொப்பிதனு ||15||

இத்தலீகோகுலதொளகே பஹு உத்பாதவ காணுதாகே
ஹ்ருத்தாபதி பளலிதரு பலனுக்திய கேளதலவரு ||16||

பந்தரு ஹரியிட்டெடெ கோபி நந்தாதி கோவரு ப்யாகே
கந்தக்ருஷ்ணன நோடிதரு மனனொந்து ஶோகார்ணவதிஹரு ||17||

பலனாஸ்ரயிஸி பந்திஹர கோவளரார்தவ பரிஹாரா
களபக்தனுக்கனு முரித அவன தலெயலி தாண்டவனாடித ||18||

சித்ரவிசித்ராண்டவனு நக்ஷத்ரகுலபநாடிதனு
தாத்ராத்யரு ஸ்துதிஸிதரு தேவஸ்த்ரீயரு நடிஸிதரு ||19||

கந்தர்வரு பாடிதரு ஸுரதுந்துபிகள நுடிஸிதரு
அந்ததி பூமளெகரெதரு ஆனந்தாப்தியலி நலிதரு ||20||

துஷ்டாஹிய பணகளலி ஸ்ரீக்ருஷ்ணனு நர்திஸுதிரலி
கஷ்டிஸிதனு காளிங்க முதபிட்டனு நிர்விண்ணாங்க ||21||

நெத்தவனு காரிதனு பஹு வக்த்ரதலா ஆஶிவிஷனு
பக்தனுளுஹி நந்தஸூனு பதந்ருத்யகுட்டண நிலிஸிதனு ||22||

காயதி பலு குந்திஸித தா ஸாயலு நிஶ்சயிஸித
ஆயஸதிந்த துக்கபட்ட நாராயணநலி சித்தவிட்ட ||23||

கண்டரு அஹிராஜனனு பஹு ஹெண்டிரு நிர்விஷனன்னு
கொண்டாடிதரு ஜகத்குருவே பணி தண்டார்ஹனு அஹுதேவ ||24||

தண்டிஸித்துசித நம்மொளு புதமண்டலகெல்ல தயாளு-
தண்டனெ தப்புகள தாளு நம்ம தண்டப்ரணமகுதி கேளு ||25||

நின்னிந்துதுபவ ஸ்திதியு ஹரி நின்னிந்த ஜககப்பயவு
நின்னிந்த பந்தன மோக்ஷ ஹரி நின்னிந்த ஸுரரபரோக்ஷ ||26||

பந்த நின்ன தாஸியர நோடோ நமகிந்தைதெதனவனு நீடோ
பந்தெனலவர நோடிதனு பதத்வந்த்வகுட்டண நிலிஸிதனு ||27||

துஷ்டண மதவிளுஹிதனு ஸ்ரீ க்ருஷ்ணவனனுகுளுஹிதனு
நஷ்டேந்த்ரிய ப்ராணாதவனு ஒந்திஷ்டு ஸ்வஸ்தனாதவனு ||28||

வந்திஸிதனு வினயதலி ஸலஹெந்தர்சனெயலி விதியலி
அந்தவ மாடலு க்ருஷ்ண ஸ்தள ஸிந்துவினலி மாடிட்ட ||29||

கருடன பய நீகிஸித தன்ன சரணாம்புஜதலி சிஹ்னிஸித
உரகன பெடெய ஶோபிஸித நிஜசரணஶரணன ஸலஹித ||30||

**அபயவ கொட்டவனட்டி ஈ த்ரிபுவனகொப்பனெ ஜட்டி**
**அபலெ யமுனெயம்புவனு ஸுதேனிப மாடிதனு மஹிமனு ॥31॥**

**சுகமுனி ந்ருபக்ஹேளிதனு ந்ருப பகுதிபரித கேளிதனு**
**ஆகளகாவன சரிதெயனு சதுர்முகபவரு பேள்வதனு ॥32॥**

**ஹரியாச்சரிய கர்மகள உச்சரிஸுத கோவர மேள**
**ஹருஷதலா ராத்ரியலி ஸுஸ்தெரராதரு யமுனெயலி ॥33॥**

**நந்தனஸதி ஸுகிஸிதளு தன்ன கந்தன பிகிதப்பிதளு**
**நந்தாத்யகிள கோவளரு அல்லியொந்த்யாமினிய நூகிதரு ॥34॥**

**ஆ நிஶி தாவாக்கியனு நுங்க்யானிகிளர ஸலஹிதனு**
**ஸ்தானகெ ஸுகதி ஐதிதரு தயாநிதி தயாபூரணரு ॥35॥**

**இந்தாமரமுனிகேய அனந்தாத்புத ஶுபசரிய**
**ஸந்தஸவிபுத ஸம்ப்ரிய விஸ்ராந்திரஹித குணகேஹ ॥36॥**

**ஈ காளிய உத்தரண பாபாகரஷண ஸுககாரண ஶ்ரீகர ப்ரஸன்வெங்கடேச ஸர்வதா**
**கருணிபனு ஸர்வேஶ ॥37॥**

காளிங்க பாம்பின் கர்வத்தை அடக்கியவனே, கருணாளுவே, ஸஜ்ஜனர்களின் ஆபரணனே (அவர்கள் விரும்புபவனாக இருப்பவனே). ஸ்ரீதேவியானவள் பூஜிப்பதான மங்கள பாதங்களைக் கொண்டவனே, துஷ்டர்களான அஸுரர்களை ஸம்ஹாரம் செய்பவனே. || ப

யமுனா நதியில் ஒரு பாகத்தில், பாம்புகளின் தலைவனான துஷ்டனான காளிங்கன் தங்கியிருக்க, அதனால், அந்த நதியின் தூய்மையான நீரே, விஷமாக மாறி, அதனால் அதன் கரையில் (பூமியில்) இருக்கும் மரம், செடிகள் கூட பாதிக்கப்பட்டன. || 1

கரையில் இருக்கும் புல், மரம், புதர்கள் ஆகியவை அந்த விஷத்தின் பாதையால் சுட்டு (பட்டுப்) போனால், அங்கிருந்த ஒரு கதம்ப மரமானது, ஒரு முறை கருடனால் கொண்டு வரப்பட்ட அமிர்த கலசத்திலிருந்து விழுந்த ஒரு துளி அமிர்தத்தால் வாடாமல், தப்பிப் பிழைத்தது. || 2

ஒரு நாள், கோவிந்தன், தன் அண்ணன் பலராமன் மற்றும் நண்பர்களுடன் சேர்ந்து அந்த இடத்திற்கு சென்றான். மிக்க மகிழ்ச்சியுடன் அந்த கோபாலகர்களுடன் அங்கு பசுக்களை மேய்த்தவாறு நின்றிருந்தான். || 3

அப்போது அனைவரும் தண்ணீர் தாகம் எடுக்க, அவர்கள் அருகில் இருந்த யமுனைக்கு சென்றனர். பசுக்களும், கோபாலகர்களும் அந்த விஷம் கலந்த தண்ணீரை குடித்த உடனேயே மயங்கி கீழே விழுந்தனர். ||4

யோகேஸ்வரனான ரங்கன், கருணை உள்ளம் கொண்டவன், பக்தர்கள் மேல் கருணையை பொழிபவன், அவனே அவர்களை தொட்டு எழுப்ப, அவர்களும், ஹரி, கோவிந்த என்று கூறியவாறே எழுந்து நின்றனர். || 5

பாஹி பாஹி கருணாளோ, பாஹி பாஹி - எங்களுடைய தவறுகளை மன்னிப்பாயாக. மனித உருவில் வந்திருக்கும் சிந்தாமணியே, துஷ்டர்களை அழிப்பவனான நற்குணங்களின் கடலே (என்று அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனை போற்றிப் பாடினர்). || 6

இவ்வாறு அவர்கள் அனைவரும் அபாரமாக ஸ்துதிகளை செய்ய, மஹாமஹிமனின் சரணத்தை அடைந்தனர் (வணங்கினர்). பாம்புப் படுக்கையின் மேல் படுத்திருப்பவனே, முர அஸுரனைக் கொன்றவனான முராரியே, என்று அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனைப் போற்ற, பகவந்தனான ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை காப்பாற்றினான். || 7

அங்கிருந்த வாடாத அந்த கதம்ப மரத்தில் ஏறி, ஸ்ரீகிருஷ்ணன் அதன் உச்சிக்குச் சென்று, ஸ்ரீஹரி, கடகடவென கர்ஜித்தவாறு, அந்த விஷம் நிறைந்த மடுவில் குதித்தான். அந்த தண்ணீரை கலக்கினான். || 8

அமைதியாக இருந்த அந்த தண்ணீர் பொங்கி மேலே வந்தது. ஸ்ரீகிருஷ்ணன் அதில் பாய்ந்ததும் அந்த தண்ணீர் பொங்கி வெளியில் வந்தது. நாசம் இல்லாத, வெற்றியாளனான ஸ்ரீஹரிக்கு, இத்தகைய சிறியவனான காளிங்கனின் பலமானது (வலிமையானது) என்னதான் செய்ய முடியும்? (அவனுக்கு ஈடாகுமா?. ஆகாது என்று பொருள்). ||9

பயமுறுத்துவதான காளிங்கன் தன் தலைகளை எடுத்து ஆடியவாறு, அங்கிருந்த தண்ணீர் இவ்வாறு பாய்வதை பார்க்கிறான். தன்னுடைய இருப்பிடத்திற்கு இங்கு வந்து, இவ்வாறு துன்பங்களை செய்பவர் யார் என்று பார்க்கிறான். ||10

மிகவும் கோபத்துடன் எழுந்து வருகிறான். விஷம் நிறைந்த மூச்சுக் காற்றினை விடுகிறான். வாஸுதேவனை கடிக்க வருகிறான். அவனைக் கொன்று அழித்துவிடுவேன் என்று கூறுகிறான், மந்த புத்தி கொண்ட காளிங்கன். || 11

பாம்பை தின்னும் கருடனை வாகனமாகக் கொண்டவனை, இந்த காளிங்க பாம்பானது இறுக்கி கட்டியது. அவனை துன்பப்படுத்தியவாறு ஸ்ரீகிருஷ்ணனின் உடம்பினை சுற்றிக் கொண்டான். ஸ்ரீஹரி, அவனுடைய இந்த மிகப்பெரிய தவறினை தாங்கிக் கொண்டான். || 12

நீலமயமான சரீரம் கொண்டவன். ஸ்ரீலோலன். ஸுந்தர ஸுகுமாரன். காளிங்க சர்ப்பத்தினால் கட்டப்பட்டிருந்த ஸ்ரீகிருஷ்ணன், தன் லீலையினால் எதையும் செய்யாமல் அமைதியாக சிறிது நேரம் நின்றிருந்தான். || 13

அஸுரர்களை கொன்றவனான (இப்போது அமைதியாக இருப்பவனான) ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டு, அந்த கோபாலகர்களின் குழுவானது, அபாரமான துக்கம் கொண்டனர். தோழர்களான அந்த கோபாலகர்கள், என்ன செய்வது என்றே தெரியாமல், மதி மயங்கியவாறு அனைவரும் அழுது கொண்டிருந்தனர். || 14

என்ன ஆச்சரியம்?. இதயத்தில் ஸ்ரீவத்ஸத்தை தரித்தவன், அந்த யம லோகத்தில் (யமதேவர் தம்பதிகளால்) எப்போதும் பூஜிக்கப்படுபவன், ஸ்ரீதேவியின் முகமான வேதங்களால் மட்டுமே அறியப்படுபவனான இந்த ஸ்ரீகிருஷ்ணன், இப்போது சர்ப்பத்தினால் சுற்றப்பட்டு காணப்படுகிறான். || 15

இதற்குள் அங்கு கோகுலத்தில், பலராமன் வந்து கூறிய இந்த செய்தியினால், மிகவும் துன்பம் கொண்டனர். மனதில் அபாரமான தாபத்தைக் கொண்டு அவர்கள் கஷ்டப்பட்டனர். ||16

கோபி, நந்தன் என அனைத்து கோகுலத்தவர்களும், உடனடியாக ஸ்ரீஹரி இருக்கும் இடத்திற்கு விரைந்து வந்தனர். அங்கு தங்கள் மகனான ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டனர். அனைவரும் மனம் நொந்து, சோகத்தில் விழுந்தனர். || 17

பலராமனைத் தொடர்ந்து அங்கு வந்திருக்கும் கோபாலகர்கள் அனைவரின் துன்பத்தை பரிஹாரம் செய்பவனான, ஸ்ரீகிருஷ்ணன், தன் பக்தனே ஆன இந்த துஷ்டனின் கர்வத்தை முறித்தான். அவனின் தலை மேல் ஏறி நின்று தாண்டவம் ஆடினான். || 18

பலவிதமாக, அற்புதமாக தாண்டவம் ஆடினான். நக்ஷத்ரர்களின் தலைவனான சந்த்ர குலத்தில் பிறந்தவன் ஆடினான். பூமியே முதலான அனைவரும் ஸ்ரீகிருஷ்ணனை துதித்தனர். தேவதா பெண்கள் நடனமாடினர். || 19

கந்தர்வர்கள் பாடினர். தேவ துந்துபிகளை முழங்கினர். வானிலிருந்து பூமழை பொழிந்தனர். அனைவரும் ஆனந்தக்கண்ணீர் விட்டனர். || 20

கெட்டவனான காளிங்கனின் தலையில் ஸ்ரீகிருஷ்ணன் ஆடிக் கொண்டிருக்க, கஷ்டப்பட்டவனான காளிங்கன், தன் கர்வத்தை விட்டான். மிகவும் துன்பப்பட்டான் / கவலைப்பட்டான். அப்படி துன்பம் கொண்ட அங்கங்களைக் கொண்டவன் ஆனான், காளிங்கன். || 21

தன் பற்பல வாயிலிருந்து (முகங்களிலிருந்து) இரத்த வாந்தி எடுத்தான். தன் உடம்பு முழுக்க விஷத்தைக் கொண்டவன். தன்னுடைய பக்தனே ஆன காளிங்கனை, நந்தகுமாரனான ஸ்ரீகிருஷ்ணன் காப்பாற்றுவதற்காக, தான் நாட்டியம் ஆடிக் கொண்டிருந்ததை நிறுத்தினான். || 22

தேகத்தில் மிகவும் அடிபட்டு, அதனால் கஷ்டப்பட்டவனான காளிங்கன், தான் இறந்து விடுவேன் என்றே நிச்சயித்தான். மிகவும் சோர்வுற்று, துக்கப்பட்டு, நாராயணனிடமே தன் மனதை வைத்து ப்ரார்த்தனை செய்தான். || 23

அப்போது அந்த காளிங்கனின் பற்பல மனைவியர் அனைவரும் அங்கு வந்து, காளிங்கனின் நிலையைக் கண்டனர். விஷம் அனைத்தும் நீங்கி இருப்பவனைக் கண்டனர். ஸ்ரீகிருஷ்ணனை அவர்கள் கொண்டாடினர். ஹே ஜகத்குருவே, இந்த சர்ப்பத்திற்கு சரியான தண்டனையையே நீ அளித்திருக்கிறாய். (அவனுக்கு அருளியிருக்கிறாய்). || 24

எங்கள் கணவரான காளிங்கனை நீ தண்டித்தது சரியே. அனைத்து ஜ்ஞானி மண்டலங்களுக்கும் கருணையுடன் அருள்பவனே (ஜ்ஞானிகளை விரும்புபவனே / அருள்பவனே). எங்களின் தண்டனை, தவறுகளை நீ பொறுத்துக் கொள்வாயாக. நம் ஸாஷ்டாங்க ப்ரணாமங்களை நீ ஏற்றுக் கொள்வாயாக. || 25

உன்னாலேயே இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டி, ஸ்திதி ஆகிறது. உன்னாலேயே இந்த ஜகத்தின் லயம் ஆகிறது. உன்னாலேயே அனைத்து ஜீவர்களின் ஸம்ஸாரம் மற்றும் அவர்களுக்கு மோக்ஷம் கிடைக்கிறது. ஸ்ரீஹரியே, உன்னாலேயே தேவர்களுக்கு (ஜ்ஞானிகளுக்கு) அபரோக்ஷ ஜ்ஞானம் ஏற்படுகிறது. ||26

இங்கு வந்திருக்கும் உன்னுடைய தாஸியர்களை (காளிங்கனின் மனைவியர்களை) பார்ப்பாயாக. எங்களுக்கு சுமங்கலி பாக்கியத்தை அருள்வாயாக. என்று இவ்வாறு கூறியவர்களை ஸ்ரீகிருஷ்ணன் பார்த்தான். உடனடியாக, தன் இரு கால்களால் காளிங்கனை மிதித்துக் கொண்டிருந்ததை நிறுத்தினான். || 27

துஷ்டனான காளிங்கனின் கர்வத்தை இறக்கினான். ஸ்ரீகிருஷ்ணன் அவனை கொல்லாமல் அப்படியே விட்டான். ஸ்ரீகிருஷ்ணனின் தண்டனையால் காளிங்கனின் இந்த்ரியங்கள் சிறிது

நஷ்டம் அடைந்தாலும், ப்ராணன் இருந்தது. சிறிது பெருமூச்சு விட்டுக் கொண்டு, தன் நிலைக்கு தான் திரும்பி வந்தான். ||28

அப்போது காளிங்கன் ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டு பக்தி, மரியாதையுடன் வணங்கினான். என்னை காப்பாற்றுவாயாக என்று வேண்டினான். விதிப்படி அர்ச்சனை செய்தான். என்று அந்த காளிங்கன் கேட்டுக் கொள்ள, ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்காக ஸமுத்ரத்தில் ஒரு இடம் செய்து (அவனை அங்கு அனுப்புவதற்காக) கொடுத்தான். || 29

ஸர்ப்பத்திற்கு கருடனில் இருந்த பயத்தினை ஸ்ரீகிருஷ்ணன் நீக்கினான். காளிங்கனின் தலைமேல் தன் கால் பாதங்களால் சின்னத்தை பதித்தான். இவ்வாறு செய்து, ஸர்ப்பத்தின் தலையை அலங்கரித்தான். தன்னை உண்மையாக இவ்வாறு வணங்கியவனை (சரணடைந்தவனை) அருளினான். ||30

ஸ்ரீகிருஷ்ணன் காளிங்கனுக்கு இவ்வாறு அபயம் அளித்தான். இந்த மூவுலகிற்கும் அவனே கதி. அபலையான (விஷம் நிறைந்ததாக மாறியிருந்த) யமுனைக்கு அபயம் அளித்து, அவளில் இருந்த விஷத்தை நீக்கி, அமிர்தக்கடல் ஆக மாற்றினான் ஸ்ரீகிருஷ்ணன். || 31

சுக முனிவர் இவ்வாறு பாகவத கதையை பரீக்ஷித் ராஜனுக்கு கூறினார். அதனை அந்த அரசன் மிகவும் பக்தியுடன் கேட்டான். பசுக்களை மேய்த்தவனின் சரிதையை சதுர்முக ப்ரஹ்ம தேவரும் ஒரு முறை உபதேசம் செய்திருக்கிறார். || 32

அங்கிருந்த கோபாலகர்கள் அனைவரும் இதனைக் கண்டு மிகவும் வியந்தவர்களாக, தங்கள் செயல்களை செய்தவாறு, மிகவும் மகிழ்ச்சியுடன், அந்த இரவில், அங்கேயே யமுனைக்கரையில் இருந்து பொழுது போக்கினர். || 33

நந்தனின் மனைவியான கோபி மகிழ்ந்தாள். தன் மகனான ஸ்ரீகிருஷ்ணனை கட்டி அணைத்துக் கொண்டாள். நந்தனே முதலான அனைத்து கோபாலகர்களும் அந்த இடத்திலேயே ஒரு இரவினை கழித்தனர். || 34

அந்த இரவில், காட்டுத் தீயினை விழுங்கியவனான ஸ்ரீகிருஷ்ணன், அங்கு இருந்த அனைவரையும் காத்தான். பிறகு அனைவரும் (அடுத்த நாள்) தங்களின் இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றனர். இவை அனைத்தும் தயாநிதியான, தயாபூரணனான ஸ்ரீகிருஷ்ணனின் அருளால் நடந்தது. ||35

இவ்வாறு, அமரர்களான முனிவர்களால் வணங்கப்படுபவன், அனந்த அற்புதமான நல் சரிதையைக் கொண்டவன், அறிஞர்களால் கொண்டாடப்படுபவன், ஓய்வு / சோர்வு ஆகியவை இல்லாதவன், நற்குணங்களின் கடலான ஸ்ரீகிருஷ்ணன்... || 36

இவ்வாறாக காளிங்கனை காத்தான். அவனுடைய பாவங்களை போக்கினான். அவனின் சுகத்திற்கு காரணன் ஆனான். ஸ்ரீப்ரஸன்ன வெங்கடேசன் எப்போதும் கருணையே வடிவானவன். அவனே ஸர்வேஶன். || 37

**

**29. ராக :பைரவி தாள :அட்ட**

**கால கால துரித கோலாஹலதிம் ப்ரஜா ஜகத்**
**பால பாலிஸுதித்த நந்தனாத்மஜ॥ப॥**

**ஜனகெ துஷ்டியில்லதிஹ க்ரீஷ்மருது பரல்**
**வனஜனாபனாஜ்ஞெயிம் வஸந்தகாலதோல்**
**தினதினக்கெ அதிக ஸௌக்யதோரி ஸகலர**
**மனஸிகுல்லாஸவாய்து க்ருஷ்ணராமர॥1॥**

**ஒம்மிந்தொம்மெ விஷத காளியல்லி பீஸிது**
**தும்மனதிந்துபத்ர ஜனவினாஶ மாடிது**
**பொம்மனிந்தவத்யவரவனைதி உக்ரனு**
**அம்மஹியல்லி தைத்ய வ்ருக்ஷுருபிலித்தனு॥2॥**

**வ்ருக்ஷ கந்தாகாளிஸோகி ஸகல தருகளு**
**கக்ஷதஹனவாகி ஹோகி காடகிச்சிநொளு**
**ஆ க்ஷணக்கெ ஒணகிஹோகே பத்ரபூபல**
**அக்கிகோசரவில்லதாகே பஹளமங்கள॥3॥**

**அதர காளி பீஸி கோகளு நரரு கோவரு**
**பெதருபத்ர பந்து பித்தரு பலமுகாத்யரு**
**ஸுதருஶனதரனு ஸீளித விஷத தருவனு**
**முதவனித்து ஹொரெத அக்ரஜ கோவு ப்ரஜரனு॥4॥**

**ஸகலராரோக்ய பாகவ்யந்தராதரு**
**முகுதவந்த்யனங்க்ரி ஸோங்கி ஶாந்தபூர்ணரு**
**பகுதி ஜ்ஞான வைராக்யுகுதராதரு ஜீவன்-**
**முகுதராகி அஜன லோகதந்தே பாள்தரு॥5॥**

**ஸிட்டினேளு கோளிகளனு ஶீக்ர ஸதேதனு ஶ்ரீ-**
**க்ருஷ்ண கும்பகன்ன கன்னிகெயாள்த தீரனு**
**துஷ்டமதன புண்யகதன யஶோதெயண்ணன**
**ஶிஷ்டதனுஜெ நீலாதேவியரஸ மோஹன॥6॥**

**ஹிகே ஶ்ரீக்ருஷ்ண ராமராசரணெகளு நித்ய-**
**யோகி ஜனர ஹ்ருதய த்யான ஜ்ஞானகொப்பலு**
**பூகணெயனாட புண்யகோவளெயரொளு பூர்ண-**
**போகி ப்ரஸன்வெங்கடக்ருஷ்ண ஆஜ்ஞே மெரெயேளு॥7॥**

இவ்வாறு காலம் வேகமாக சுழன்றது. மிகவும் மகிழ்ச்சியுடன், அந்த கோகுலத்தின் தலைவனான நந்தகோபன், தன் ஆட்சியை நன்றாக செய்து, மக்களை காத்து வந்தார். || ப

மக்களுக்கு மகிழ்ச்சி இல்லாததான (வெயில் கடுமையாக இருப்பதால் பிடிக்காததான) க்ரீஷ்ம ருது வருகிறது. பத்மனாபனான ஸ்ரீகிருஷ்ணனின் ஆணையின் பேரில், சென்ற வஸந்த ருதுவில், ஒவ்வொரு நாளும், அதிகமான நலன்கள் உண்டாகி, அனைவரின் மனதிலும் மட்டற்ற மகிழ்ச்சி நிறைந்திருந்தது. ||1

இப்போது க்ரீஷ்ம ருதுவிலோ, விஷக்காற்று (அதிக வெப்பம் கொண்ட காற்று) வீசியது. இதனால் மக்களுக்கு தொந்தரவுகள், கவலைகள் ஆகியவை தோன்றின. சதுர்முக ப்ரஹ்ம தேவர் மூலமாக, யாராலும் வெல்லப்பட முடியாதவன் என்னும் வரத்தினை பெற்று, அஸுரனானவன் இந்த பூமியில் ஒரு பெரிய மரத்தின் வடிவில் தோன்றியிருந்தான். || 2

இந்த அஸுர மரத்தின் விஷக்காற்று பட்டு, அருகில் இருந்த அனைத்து மரங்களும் அவற்றின் கிளைகளும் எரிந்து / பட்டுப் போய், அதனால் தோன்றிய காட்டுத் தீயில், அனைத்து மரங்களும் காய்ந்து போய், அந்த மரங்களில் இருந்த இலைகள், பூக்கள், பழங்கள் என அனைத்தும் கருகி, கண்ணிற்கே தெரியாதவாறு அந்த இடமே அமங்களமாக ஆகியது. || 3

அந்த அஸுர மரத்தின் விஷக்காற்று பட்டு, பசுக்கள், மக்கள், கோபாலகர்கள் ஆகிய அனைவருக்கும் பெரும் தொந்தரவு ஏற்பட்டது. மயங்கி விழுந்தனர். வலிமை இழந்தனர். ஸுதர்ஶன சக்ரதரனான ஸ்ரீகிருஷ்ணன், அந்த விஷ மரத்தை பிடுங்கி எறிந்தான். இதனால் ஊர் மக்களை, அங்கிருந்த பசுக்களை அவன் காத்தான். || 4

இதனால், அனைவரும் அனைத்து வித ஆரோக்யத்தையும் கொண்டவர்கள் ஆயினர். முக்தர்களால் வணங்கப்படுபவனான ஸ்ரீகிருஷ்ணனின் பாதங்களில் சரணடைந்து, அனைவரும் வணங்கினர். அனைவரும் ஜ்ஞான, பக்தி, வைராக்யத்தைக் கொண்டவர்கள் ஆயினர். ஜீவன் முக்தர்கள் என ஆகி, ப்ரஹ்ம லோகத்தில் இருப்பதைப் போல அனைவரும் சுகமாக இருந்தனர். || 5

ஆவேசமாக இருந்த ஏழு எருதுகளை ஸ்ரீகிருஷ்ணன் விரைவில் அடக்கினான். இதனால் அரசனான கும்பகனின் (நக்னஜித்) மகளை திருமணம் செய்த வீரன் இவனே. துஷ்டர்களைக் கொல்பவன். புண்ய கதைகளைக் கொண்டவன். யசோதா தேவியின் அண்ணனான கும்பகனின் மகளான நீலா தேவியின் தலைவன். மோஹன கிருஷ்ணன் இவனே. || 6

இவ்வாறாக, ஸ்ரீகிருஷ்ண, பலராமர்களின் தினப்படி செயல்கள், நித்ய யோகி மக்களின் ஹ்ருதயத்தில் த்யானம் செய்கிறபோது தெரிய வருகிறது. ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணனின் ஆணையின் பேரில், மன்மதனின் விளையாட்டு, புண்யம் செய்த கோபாலகர்களில் இருக்க, அவர்களும் அவனின் கட்டுப்பாட்டில் இருந்தனர். || 7.

***

**30. ராக :கன்னடகோள தாள :ஏகதாள**

**நாகேஶன வனவீ வ்ருந்தாவன**
**கோகுலப்ரஜரெ நாகஜரு**
**ஈ காளிந்தியே ஸ்வர்த்துனி ஸ்ரீபல-**
**ஸ்ரீக்ருஷ்ணரு வாஸவாகிஹரு ॥1॥**

**ஶுஷ்க லதாதரு வர்ஜ்யவு வனதலி**
**புஷ்கரில்லத நீரில்ல**
**புஷ்கள கரெவவு அவு மஹிஷியஜ**
**துஷ்க்ருதஹரஹரி ஸிரினல்ல ॥2॥**

**ஶுக பிக ஶிகி ஹம்ஸகள கலோச்சர**
**நிகிளவன ஸுஸ்தளதல்லி**
**ஸகல குஸும பல ஸதத ஸுபூர்ணவு**
**லக்ஷ்மிய ரமணனித்தல்லி ॥3॥**

**கக்ஷாஸனனாடவெ நடேயது கம-**
**லாக்ஷன பாதஸ்பர்ஶதலி**
**தீக்ஷ்ணகரேந்துகரகளெ தோரவு**
**பக்ஷிகமனன ஸுளஹினலி ॥4॥**

**நிர்ஜர ஜலஸங்கீர்ணவு ஜரிகள**
**கர்ஜனெ ஸ்ராவ்யவாகிஹவு**
**பர்ஜன்யாபேக்ஷேயு தோரது ஸ்ரீ**
**நிர்ஜரபதிய ஸஞ்சரவு ॥5॥**

கஞ்ஜ பகுள கல்ஹாரோத்பலரஜ
வ்யஞ்ஜகதாமோததலி
மஞ்ஜுள மதுகர ஜேங்கார மனோஹர
கஞ்ஜாக்ஷன அடணெயலி ॥6॥

குஸுமாமோதத ஸஹ ஸஞ்சரிஸுவ
நஸுயெளெயெலரின ஸுளிவு
எஸெவ விசித்ர ம்ருகாளிய க்ரீடெயு
ஶஶிகுலதரஸன நலினலிவு ॥7॥

ஹீகிருதல்லிய ஸ்ரீகரவனதலி
கோகோபரனு பெரஸிஹனு
பூகொஞ்சலவு ப்ரவாள பருஹிகரி
ஸ்ரீகோவிந்தனு முடிதிஹனு ॥8॥

கோகள சரிஸுத அதி அதி ம்ருதரவ
ராகத வேணுஸ்வனதிந்தா
யோகிஜனேஸ்வர மோஹிப புவனஜ-
னெளகவ விதிபவஸுரவந்த்ய ॥9॥

மோத தக்ஷிண பக்ஷவு கட ப்ர-
மோதவு உத்தரபக்ஷ
மோதாத்மன கிவிமேலொப்பிது வி-
நோதகெ ஸ்ரீகாகபக்ஷ ॥10॥

ஸ்ரீகஞ்சோத்பவ விபஹிப புரஹர
நாகேஶன நாடகனீகெ
ஈ கானனதாடவு நடவேஷவு
யாகின்னிவு பேகின்னவகே ॥11॥

ஹாராடவு கோவர்துள தண்டிகே ஏராடவு
ப்ரமணத ஆட
ஹாரவத்ஹாஸ்யவு பலகளனொகெயுத
சீராடவு கண்முஸுகாட ॥12॥

சுண்டு சிண்ணி வதகளி போகரெகளு
குண்டெத்தாடவு மரதாட
ஹிண்டுகோவளர்ஹரி பலராமரு ப்ருதக்
மண்டல மாட்யாடுவ ஆட ॥13॥

யமுனெய தீரதி கிரிதப்பல பதி
ரமணேரு குஞ்ஜ புளினஸ்தளதி
அமித க்ரீடேயனாடலு நோடுவ
ரமரரு தாவ் ஸுகஹொந்தி ॥14॥

அல்லல்லாகளுகள காயுத ஸக
கொல்லர வெரஸி முகுந்த
உல்லாஸதலிரெ தைத்ய ப்ரலம்பனு
கொல்லர வேஷதி தா பந்த ॥15॥

தாஸார்ஹர கொளபேகேனுதலி கள
த்வேஷதி கெளெதனவிடித
ஸ்ரீஸர்வஜ்ஞ ஶிகாமணியவனொளு
தா ஸக்யவனு பெரஸித ॥16॥

பாண்டீரவனத வடதள கோகள
ஹிண்டனு அகலிரெ முரமதன
மண்டலவெரடனு மாடித தாமன
தண்டகெ தாமா வ்ருஷபரனு ॥17॥

மேளயிஸித ஸோதவ வாஹக
ஸோல்லவனெ வாஹ்யனு எந்தெனுத
ஹேளித பத்ரஸேனாதி ஸகல கோ-
பாலரரிகெ ஜகத்கர்த் ॥18॥

ஸோலு கெலுவினலி வாஹகவாஹ்யகெ
ஸாலுகோவளராட்யெந்து
ஶ்ரீலோலனு தா அஸுரன ஸஹ கோ-
பாலகரோடனெ பேரித்து ॥19॥

பக்ஷித்வயவனு மாட்யாடலு கள
ராக்ஷஸ கம்ஸன பட்டனு
ருக்ஷபலன எத்தோய்தனு தானந்த
ரிக்ஷகெ பருதிரெ பலனு ॥20॥

பெதருத ஹரிஸ்துதி மாடலு ஸாஸிர
வதனன ஸமவு பலபந்து
மதமத்தவனிகெ நித்ராணாயிது
குதரன கௌரவவ கண்டு ॥21॥

குடில களன அலங்காராகாஶதி
தடித த்யுமணியந்தே ஜ்வேலிஸே
படுபலனொப்பத துஷ்டன ப்ருஷ்டத
தடதி ஶஶிவோல் தளதளிஸே ॥22॥

ரோஷதி த்ருடமுஷ்டியலி குத்தித
த்வேஷிய  நெத்திய மேலே
வாஸவன்வஜ்ரதி கிரிகெடெவோல் ஶிர
ஸாஸிர ஶீர்ணாக்யவ பீளெ ॥23॥

நெத்தரு காருத கிரியோல் பித்திரெ
ஸுத்தண கோவருகளு நோடி
ஸ்தோத்ரவ மாடிதர் ஸாது ஸாது பல
ஶத்ருஹனன கொண்டாடி ॥24॥

ஸுமன வ்ருஷ்டியனு ஸுமனஸர்கரெதரு
அமித துந்துபி வாத்யவனு
கமலனயன பல பலஶாலிகளு தம்ம
ரமணீய க்ருஹகைரிதரு ॥25॥

ப்ரேமதி நந்த யஶோதே ரோஹிணி
ஈ மக்களனப்பிதரு
ஆ மஹாதோஷகெ எணெயுண்டெ பல
ராம ஶ்ரீஹரிகெ ஸமருண்டெ ॥26॥

கந்த மால்யாம்பர பூஷிதராகிஹ
ஸுந்தரவரரு ஒப்பிதரு
வ்ருந்தாரகவந்தித ப்ரஸன்வெங்கட
மந்திரதரஸுகளிவரு ॥27॥

30

இந்த வ்ருந்தாவனமானது நாகேஶனின் வனம் (ஶ்ரீகிருஷ்ணனின் வனம்). இது நாகலோகமே ஆகிறது (ஸ்வர்க்கத்திற்கு ஸமானமாகவே இருக்கிறது). கோகுலத்து மக்களே நாக லோகத்து மக்கள். இங்கு பாயும் காளிந்தி நதி, கங்கைக்கு ஸமானமாக இருக்கிறது. ஏனெனில், ஶ்ரீகிருஷ்ண பலராமர்களே இங்கு வசிக்கின்றனர். || 1

இந்த வ்ருந்தாவனத்தில், உலர்ந்து போன செடி, கொடிகள் ஆகியவற்றை இங்குள்ள வனத்தில் பார்க்கவே முடியாது. தாமரைகள் இல்லாத குளங்களே இங்கு இல்லை. அபாரமான அளவில் அங்கிருந்த பசுக்கள், எருமைகள் மற்றும் ஆடுகள் பால் கொடுத்தன. இவ்வாறான விஷயங்கள், நம் அனைவரின் துஷ்க்ருதங்களை (கெட்ட செயல்களின் பலன்களை) அழிப்பவனான ஶ்ரீகிருஷ்ணன் இருந்த ப்ருந்தாவனத்தில் நடந்தன. அவன் ஶ்ரீதேவியின் தலைவன். || 2

ஶ்ரீலகுமி ரமணன் இருந்த இடத்தில், ஶுக, கிளி, மயில், ஹம்ஸ ஆகிய அனைத்து பறவைகளும் இனிமையாக சத்தமாக குரல் கொடுத்து இருந்தன. அந்த பூரணமான வனம் இருந்த இடத்தில், அனைத்து பூக்கள், பழங்கள் என அனைத்தும் பூர்ணமாக இருந்தன (நன்கு செழித்து வளர்ந்தன). ||3

தாமரைக் கண்ணனின் பாதம் பட்ட இடங்களில், நெருப்பின் ஆட்டமே இருக்காது (காட்டுத்தீ பரவாது). அனைவருக்கும் குத்துவதாக, கூர்மையான ஒரு புல் வகை இருக்கிறது. அந்த புல்லானது, இந்த வனங்களில் வளரவே வளராது. ஏனெனில், கருட வாகனனான ஶ்ரீகிருஷ்ணன் இங்கிருக்கிறான். அவனது சமீபத்தில் மற்றவர்களுக்கு துன்பம் கொடுக்கும் புல் கூட வளராது. || 4

ஶ்ரீதேவி மற்றும் தேவதைகளின் தலைவனான ஶ்ரீகிருஷ்ணன் ஸஞ்சாரம் செய்யும் இடமான இந்த வ்ருந்தாவனத்தில், அருவிகளிலிருந்து விழும் தண்ணீர் நிலைகள், பல ஆறுகளுடன் சேர்ந்து பாயும்போது, அதன் சத்தம் / கர்ஜனை கேட்பதற்கு அருமையாக இருக்கிறது. இந்த தண்ணீருக்கு மழையின் தேவையே இல்லை. எப்போதும் பாய்ந்து கொண்டேயிருக்கின்றன. || 5

தாமரைக் கண்ணனான ஶ்ரீகிருஷ்ணன் இருக்கும் இடமான இந்த வ்ருந்தாவனத்தில், தாமரை, பகுள, கல்ஹார, நீலத் தாமரை ஆகியவை நன்றாக வளர்ந்து அந்த இடத்தில் செழிப்பினை காட்டுகிறது. அந்த மலர்களில், தேனீக்கள் ரீங்காரம் செய்தவாறு அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கின்றன. ||6

இனிமையான நறுமணத்துடன் கூடி ஸஞ்சரிக்கும், அங்கு கிடக்கும் இலைகளின் ஆட்டம், இவற்றை இவ்வாறு பறக்கச் செய்யும் அந்த காற்றின் விளையாட்டு, ஆகியவை, சந்த்ர குலத்தில் பிறந்தவனான ஶ்ரீகிருஷ்ணன், வ்ருந்தாவனத்தில் ஓடாடிக் கொண்டிருக்கிறான் என்பதையே காட்டுகிறது. ||7

இவ்வாறு பல்வேறு காட்சிகளைக் கொண்ட அந்த ஶ்ரீகர வனத்தில், ஶ்ரீகிருஷ்ணன் மற்ற கோபாலகர்களுடன் சேர்ந்து அவனும் அவர்களின் செயல்களையே செய்து கொண்டிருந்தான். பூச்செண்டு, மயில் தோகை ஆகியவற்றை தன் தலையில் சூடிக் கொண்டு, ஶ்ரீகோவிந்தன் சுற்றிக் கொண்டிருந்தான். || 8.

பசுக்களை மேய்த்தவாறு, மிகவும் இனிமையான இசையில் தன் புல்லாங்குழலை ஊதியவாறு, யோகி மக்களின் ஈஸ்வரனான கிருஷ்ணன், அனைவரையும் (பக்தர்களையும்) தன்னை விரும்ப வைக்கிறான். சதுர்முக ப்ரஹ்ம தேவர், ருத்ரதேவர் ஆகியோரால் வணங்கப்படுபவனான ஶ்ரீகிருஷ்ணன் அங்கு இருந்தான். || 9

ஶ்ரீகிருஷ்ணனுக்கு (ஆனந்தமயனுக்கு) மோத என்னும் ஆனந்தம் வலது பக்கமாக இருக்கிறது. உத்தமமான (விஸேஷமான) ஆனந்தம் (ப்ரமோத) என்பது இடது பக்கமாக இருக்கிறது. ஆனந்தாத்மனான ஶ்ரீகிருஷ்ணனின் காதுகளின் மேல், அவனுடைய தலையிலிருந்து சுருள் முடிகள் அழகாக வந்து விழுந்தன. || 10

(மோத என்றால் விஷய ஸம்பந்தமான சுக விசேஷம். ப்ரமோத என்றால் பரலோக சுகம். மேலதிக விவரங்களுக்கு : ஹரிகதாம்ருதஸார பிம்போபாஸன ஸந்தி 18-25ம் பத்யம் பார்க்கவும்).

சதுர்முக ப்ரஹ்மதேவர், கருட, ஸேஷ, ருத்ரதேவர்கள் என இவர்கள் அனைவரும் ஸ்ரீ நாகேஶனின் நாடகத்தில் பாத்திரர்களாக இருக்கையில், இத்தகைய ஸ்ரீஹரிக்கு, இந்த காட்டில் நடத்துவதான நாடகம் எதற்கு?. இந்த நாடகத்தில் அவனும் ஸ்ரீகிருஷ்ணனாக நடிப்பது ஏன்?. இது ஏன் அவனுக்குத் தேவையாக இருக்கிறது?. || 11

பசுக்கள் சுற்றி சுற்றி வந்தவாறு விளையாடும் ஆட்டம். தும்பிகள் ஒவ்வொரு பூக்களிலும் சென்று அமரும் ஆட்டம். ஒவ்வொரு மரங்களிலிருந்தும் பழங்களை பறித்து இன்னொருவர் மேல் எறியும் ஆட்டம். உரக்க சத்தம் போட்டு ஆடும் ஆட்டம், கண்ணாமூச்சி ஆட்டம் (ஆகியவற்றை ஸ்ரீகிருஷ்ணன் அங்கு விளையாடிக் கொண்டிருந்தான்). || 12

பந்து, கில்லி, குண்டுகளை எறிந்து விளையாடுவது, மரங்களின் மேல் ஏறி விளையாடுவது, கிருஷ்ண பலராமர்கள் இருவரும் நண்பர்களை இரு அணிகளாக பிரித்து அவர்களுக்குள் விளையாடும் ஆட்டம் (ஆகியவற்றை ஸ்ரீகிருஷ்ணன் அங்கு விளையாடிக் கொண்டிருந்தான்). || 13

கோவர்த்தன கிரியின் அடிவாரத்தில், யமுனா நதி தீரத்தில், நன்றாக ம்ருதுவான மண் இருக்கும் இடத்தில், அனைவரும் அபாரமான (நிறைய / பலப்பல) விளையாட்டுகளை ஸ்ரீகிருஷ்ணன் விளையாட, இதனை வானிலிருந்து பார்த்து, தேவர்கள் அனைவரும் அபாரமான சுகத்தை அடைந்தனர். || 14

அங்கங்கு பசுக்களை மேய்த்தவாறு, சக கோபாலகர்களுடன் விளையாடியவாறு, முகுந்தன், இவ்வாறாக மகிழ்ச்சியுடன் இருக்க, தைத்யனான ப்ரலம்பன், தானும் ஒரு இடையனாக அந்த கூட்டத்தில் சேர்ந்து கொண்டு, ஸ்ரீகிருஷ்ண பலராமர்களை எதிர்ப்பதற்காக வந்தான். || 15

ஸ்ரீகிருஷ்ண பலராமர்களை கொல்ல வேண்டும் என்று அந்த அஸுரன் த்வேஷத்துடன், நண்பன் வேடத்தை தரித்தான். அனைத்தையும் அறிந்தவனான, ஸ்ரீஸர்வஜ்ஞ சிகாமணியான ஸ்ரீகிருஷ்ணன், தானும் அந்த ப்ரலம்பனுடன் நட்பினை வளர்த்தான். || 16

அரச மரங்கள் நிறைந்திருந்த வனத்தில், ஒரு அரச மரத்தடியில், பசுக்களின் கூட்டமானது ஓய்வெடுத்துக் கொண்டிருந்தன. அந்த வேளையில், முர அஸுரனைக் கொன்றவனான ஸ்ரீகிருஷ்ணன், அந்த கோபாலகர்களை இரு குழுக்களாக (ஸ்ரீகிருஷ்ணன் ஒரு குழுவில் & பலராமன் இன்னொரு குழுவில் இருந்தனர்) பிரித்தான். அந்த கூட்டத்தில் பலசாலியாக இருந்தவர்களை பலராமன் இருக்கும் குழுவில் சென்று சேர்த்தான். ||17

அந்த விளையாட்டில் தோற்றவர், வென்றவரை தூக்கிக் கொண்டு செல்ல வேண்டும். என்று விதியை, பத்ரஸேனனே முதலான அனைத்து கோபாலகர்களுக்கும், ஜகத் கர்த்தனான ஸ்ரீகிருஷ்ணன் கூறினான். || 18

வெற்றி-தோல்வி என்பதான, இந்த வாகன - வாகன ஓட்டி என்பதான இந்த ஆட்டத்தில், வரிசையாக நின்றவாறு கோபாலகர்கள் அனைவரும் விளையாடுங்கள் என்று கூறி, ஸ்ரீலோலனான ஸ்ரீகிருஷ்ணன், அந்த அஸுரனுடன் மற்றும் அனைத்து கோபாலகர்களுடனும் விளையாடத் துவங்கினான். ||19

இவ்வாறாக இரு அணிகளை செய்து கொண்டு, அனைவரும் விளையாடத் துவங்க, துஷ்டனான அஸுரன், அவன் கம்ஸனால் ஏவப்பட்டவன். அந்த போட்டியில் தோற்ற அஸுரன், பலராமனை தன் முதுகில் ஏற்றிக் கொண்டு போய், பின்னர் (பலராமனை கொல்லும் முயற்சியில்) வானில் பறக்கத் துவங்கினான். ||20

பலராமனோ இதைக் கண்டு பயம் கொண்டு, ஹரி ஸ்துதி செய்யத் துவங்கினான். உடனடியாக அந்த ஆயிரம் வதனங்களைக் கொண்ட ஸேஷ தேவரின் அபாரமான வலிமை பலராமனுக்கு

வந்தது. (பலராமன் ஸேஷ தேவரின் ஆவேஶ அவதாரம் ஆகிறார்). கர்வம் கொண்டு தூக்கி வந்த அஸுரனுக்கு, பலராமனின் எடையால் சோர்வு உண்டாயிற்று. || 21

கெட்டவனான அஸுரனின் உருவமானது, வானத்தில் ஒளிரும் சூரியனைப் போல தென்பட்டால், அந்த துஷ்டனின் முதுகில் இருந்த பலராமன், அனைவருக்கும் தண்மையைக் கொடுக்கும் சந்த்ரனைப் போல ஒளிர்கிறான். || 22

அப்போது பலராமன், மிகவும் கோபத்துடன் தன்னுடைய திடமான முஷ்டியினால் அந்த அஸுரனின் / எதிரியின் நெற்றியில் குத்தினான். ஒரு பெரிய மலை போல வளர்ந்திருந்த, ஆயிரம் தலை கொண்ட ஸேஷனின் அவதாரமான பலராமன் இவ்வாறு குத்த, அந்த அஸுரன் கீழே விழுந்தான். || 23

உடலிலிருந்து ரத்தம் கொப்பளிக்க, ஒரு பெரிய மலை போல அந்த அஸுரன் விழுந்திருக்க, சுற்றி நின்று அனைத்து கோபாலகர்களும் அவனை பார்த்தனர். பலராமனே, எதிரியை வென்றவனே, வாழ்க வாழ்க என்று பலராமனைக் குறித்து ஸ்தோத்ரம் செய்து, அவனை கொண்டாடினர். || 24

வானிலிருந்து தேவர்கள் பூமழை பொழிந்தனர். துந்துபி வாத்தியங்களை முழங்கினர். தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணன், பலராமன், மற்றும் மற்ற பலசாலிகள் (கோபாலகர்கள்) என அனைவரும் தத்தம் அழகான வீடுகளுக்கு திரும்பிச் சென்றனர். || 25

நந்தகோபன், யசோதை, ரோஹிணி என அனைவரும் மிகவும் பாசத்துடன் இந்த மக்களை (ஸ்ரீகிருஷ்ணன் & பலராமனை) அணைத்துக் கொண்டனர். அவர்களின் மஹா ஆனந்தத்திற்கு இணை இருக்கிறதா?. ஸ்ரீஹரி மற்றும் பலராமனுக்கு சமம் என யாரும் உண்டோ? (இல்லை என்று அர்த்தம்). || 26

சந்தனம், மாலை, பட்டாடைகள் என ஸர்வ அலங்காரங்களும் செய்து கொண்டவர்களாகி, இருவரும் அழகாக ஜொலித்தனர். அனைத்து தேவர்களாலும் வணங்கப்படுபவனான ப்ரஸன்ன வெங்கடன், அந்த வீட்டின் (அரணமனையின் / ஊரின்) அரசர்கள் இவர்கள் (ஸ்ரீகிருஷ்ணன் & பலராமன்). || 27

***

**31. ராக :மோஹனகல்யாணி தாள :ஏகதாள**

**வ்ருஷ்ணிவர்ய க்ருஷ்ணனங்க்ரி ஸ்ருஷ்டவாத கோஷ்டகெல்ல**
**துஷ்டியாயிது வ்ருஷ்டிகால கஷ்டதோரது**
**துஷ்டவாக்யதேஷ்டவாரி புஷ்ப பைர்களஷ்டு பெளெயெ**
**மிஷ்ட அஶன ஸ்பஷ்டஜ்ஞானனுஷ்டான்ஹெச்சிது ||1**

**நீல நீரதாளி ஸிடில்களா கெந்தூளிகள**
**ஏளிகெயு கோலுமிஞ்சு மேலே மேலேயே**
**லோலைஸே ஸ்தூலதாரே ஜால முஸுகி பஹள வர்ஷ**
**கால ஒப்பே ஸ்ரீலலனெய லோலனித்தல்லி ॥2॥**

**கெரெபாவிகளு தோரெகளு புஷ்கரணிகளு பரித ஜலதி**
**ஹொரசல்லிதவிரதே யமுனெ பெரஸி நடெவுதவு**
**தரு வீருத உரு புஷ்பாகெ வரஜம்பு கர்ஜூர த்ராக்ஷ**
**பரிபக்வதி மரெதவல்லி ஹரிய வனதலி ॥3॥**

**மானவர்கே கோனிகர நானாஜாதி ப்ராணிகளிகே**
**ப்ராண காய நயன நந்தஸூனுவித்தல்லி**
**ஸ்ரீனாத ஸக நிகடதி வனத நவீன ஜம்பு**
**வனு கர்ஜூரனுண்டனு ஆனந்தாத்னு ॥4॥**

கெச்சல பாரதி சரிப சொச்சிலாவ்களுச்சணலு
நிச்ச கரெதனச்சரிய உச்சாரங்களிம்
பச்சவர்ணெ ஸச்சரூபே அச்சநீலே ஹெச்சினம்ம
மச்சினம்ம உச்சகுணியெ ஹச்சகிணியெ பா ॥5॥

கங்கெகௌரி துங்கபத்ரெ மங்களெ தூம்ராங்கே கோவே
ரங்கெ பீமே ஸிங்கரெ ஸுஸங்கே த்ரிவேணி
ப்ருங்கே சிஞ்சி பிங்கெ ஹண்டே ஸ்ருங்கி க்ருஷ்ணெரங்கு முத்தெ
பிங்களே ஹேமாங்கியெந்து ரங்க கரெதனு ॥6॥

வாருணே கரவேரகுவரெ நேரதாங்கே நீரஜாக்ஷி
ஸாரஸ்வதியே பீருநேத்ரெ சாருவதனெ பா
ஸ்ரீரமண கபீரரவதி ஸாரி கரெயெ துரதிந்தம்-
பாரவதி தோரிபந்தவு வீரவேகதி ॥7॥

பந்து பதிய ஹொந்தி ஹரிய ஸ்கந்ததலி ஸ்கந்தவிட்டா-
நந்ததி ஆனந்தாத்மன இந்துலேஹிபவு
மந்தஹாஸதிந்த க்ருஷ்ண ஒந்தொந்தாவ ஸுந்தர கை-
யிந்த துரிஸே அந்து மோக்ஷானந்ததோரிது ॥8॥

இரஸல்மளெயுகரெயலாகெ ஹரிபலகோவரரு ஹொக்கு
கிரிகுஹ்யதி சரவிஸிதரு கந்தமூலவ
பரம பலகள வரதத்யான்ன சிரவ்யஞ்சன ஹரியமேலே
ஹருஷதிந்தும்பரு கூடே நிருத க்ருப்தரு ॥9॥

எளெய ஹுல்லு மெலுவாக கங்களன்னு முச்சி கோவு
நளினாக்ஷன செலுவ மூருதி ஹொளெவு நோடிதவு ॥10॥

ஶரதகால பரவாயிது நிருமலதி ஸரகளொப்பெ
விரஹிதாப்ர ஶார்வரீஶ ஸர்வரிகிஷ்டனு
பரமதிதிக்மகிரணதாப ஸரிதுஹோகெ இருளினல்லி
ஸ்மரன பாண ஸரஸிஜாக்ஷெர்கெரகுதித்தவு ॥11॥

ரங்கனங்கஸங்ககெ கோபாங்கனேரு ஸங்கடிஸி
ஸங்கீததி மங்கள குணங்கள்ஹேள்வரு
அங்கனேரு அங்கஜன்ன ஸங்கர முத்தாங்கியரு
ஸிங்கர வனங்களல்லி ஹிங்கதிப்பரு ॥12॥

குஸுமனாப குஸுமித வனப்ரஸரதல்லி பஶுகாயுத்த
மிஸுனிகொளல ரஸதும்பி நாதிஸுதலிர்தனு
ஹொஸப்ராயத அஸியரு பரவசஶராகுல்லஸதி ரதி-
ரஸிகெரெல்ல ரஸிகன இச்சிஸுதலிர்தரு ॥13॥

வரவர்ணேரு விரஹதெரெய ஶரதிலிஸுதிரலு கண்டு
ஸ்மரனய்யனுத்தரிஸிதனு கருணவாரிதி
இருளு ஹகலு ஹரியலீலே ஸ்மரிஸுதிப்பரஸியரு
பரம பக்திபரிதராகி ஹரிண நேத்ரேரு ॥14॥

அஹோராத்ரி ஸ்ரீஹரிய ரூஹுத்யான மோஹிதரு
தேஹேந்த்ரிய கேஹ ப்ராண ஸ்நேஹவனல்லி
பாஹ்யவிஷயரஹிதேயரு ஆ ஹெங்கள மோஹரவு
மஹாபுருஷரா ஹோலிகெயலிஹரு வ்ரஜதி ॥15॥

**கண்ணிலி ரங்கன்ன மூர்தி கரணகளிகே அவன வார்தி**
**மன்னவு த்யானான்வித கீர்தன்ன ஜிஹ்வெகெ**
**கன்னெயரு தன்யரு பாவன்னெயரு சின்மய ப்ர- ஸன் வேங்கடமான்யெயரு**
**புண்யஶாலேரு ॥16॥**

வ்ருஷ்ணி குலத்தில் சிறந்தவனான ஸ்ரீகிருஷ்ணனின் பாதங்கள் நடந்த அனைத்து இடங்களிலும், (அவனின் பாதங்களில் விழுந்து சரணடைந்த அனைவருக்கும்), மிகவும் மகிழ்ச்சியே உண்டாயிற்று. அப்போது அங்கு வர்ஷ கால (வர்ஷ ருது) துவங்கியது. மகிழ்ச்சி கொடுக்கக்கூடிய அபாரமான மழை பொழிந்து, பூக்கள், பயிர்கள் அனைத்தும் அதிகமாக விளைந்தது. இதனால் மக்களுக்கு சுவையான உணவு, தெளிவான ஜ்ஞானம் மற்றும் அதனால் நல்ல அனுஷ்டானங்கள் ஆகியவை கிடைத்தன / வளர்ந்தன. || 1

நீலமான (கார்மேகங்கள்) நீர் நிறைந்த மேகங்கள் வரிசையாக இருந்தன. அவை ஒன்றுக்கொன்று இடித்துக் கொண்டு இடியாக இடித்தன. சிவப்பான மின்னல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தன. அந்த சமயத்தில், மிகவும் அடர்த்தியான மழை பெய்து, மழைக்காலம் சிறந்தது. ஸ்ரீதேவியின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணன் இருந்த இடத்தில் இவ்வாறாக நடந்தன. || 2

ஏரி, கிணறுகள், குட்டைகள், குளங்கள் நீரினால் நிரம்பின. யமுனை நதியானது முழுவதுமாக நிரம்பி பாய்ந்தோடியது. செடி, கொடிகள் வளர்ந்து, நாகப்பழம், கர்ஜூர, த்ராக்ஷை ஆகிய பழங்கள் நன்றாக கனிந்து வளர்ந்து நின்றன, ஸ்ரீஹரியின் வனத்தில். || 3

மனிதர்களுக்கு, பசுக்களின் குழுவிற்கு, பற்பல ஜாதியை சேர்ந்த ப்ராணிகளுக்கு, அவரவர்களின் ப்ராணன், தேகம், கண் ஆகியவை நன்றாக இருந்தன (அவர்களுக்கு மட்டற்ற ஆனந்தம் உண்டாயிற்று). - இவை அனைத்தும் நந்தகுமாரனான ஸ்ரீகிருஷ்ணன் இருந்த இடத்தில் நடந்தன. ஸ்ரீநாதனான ஸ்ரீகிருஷ்ணன், தன் நண்பர்களின் குழுவினருடன், அந்த வனத்தில் திகழ்ந்து, அங்கிருந்த நாவல் பழங்கள், கர்ஜூர ஆகியவற்றை உண்டு மகிழ்ந்தான். அவன் ஆனந்தமே உருவானவன். || 4

மடி நிறைய பாலுடன் புதிதாக கன்று ஈந்த பசுக்களை, தன்னிடம் (தன் அருகில்) வருமாறு ஸ்ரீகிருஷ்ணன் அழைக்கிறான். தினமும்கூட ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறே பசுக்களை அழைப்பது வழக்கம். இது ஆச்சரியமான விஷயம்தானே?. பச்சை வண்ண கண்களைக் கொண்டவளே, தூய்மையான வெண்மையான ரூபத்தைக் கொண்டவளே, நீல வண்ண கண்களைக் கொண்டவளே, அதிகமான பால் கொடுப்பவளே அம்மா, அற்புதமான அம்மா, உச்சமான நற்குணங்களைக் கொண்டவளே, பச்சைக் கிளி போன்றவளே வா (என்று ஸ்ரீகிருஷ்ணன் தன் பசுக்களை அழைக்கிறான்). || 5

கங்கா, கௌரி, துங்கபத்ரா, மங்களத்தை அருள்பவளே, வெண்மையான உருவம் கொண்டவளே, பீமா, அழகானவளே, நல் ஸங்கத்தை அடைந்தவளே, த்ரிவேணியே, ப்ருங்கே, பழுப்பு நிறத்தில் இருப்பவளே, மான் போன்ற கண் கொண்டவளே, கிருஷ்ணே, அழகான உருவம் கொண்டவளே, மஞ்சள் நிறத்தவளே, தங்கமயமானவளே என்றெல்லாம் தன் பசுக்களைக் குறித்து, ஸ்ரீகிருஷ்ணன் அழைத்தான். || 6

வாருணியே, வீரனின் மகளே, மேகம் போன்ற வண்ணம் கொண்டவளே, கருமையான கண்கள் கொண்டவளே, ஸாரஸ்வதியே, படபடக்கும் கண்களைக் கொண்டவளே, அழகான முகம் கொண்டவளே - வா. ஸ்ரீரமணனான ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறாக கம்பீரமான குரலில் உரக்க அழைக்க, தூரத்தில் இருந்த பசுக்கள் அனைத்தும், தாங்களும் குரல் கொடுத்தவாறு, பாய்ந்து ஓடி வேக வேகமாக அவனிடம் வந்தன. ||7

இவ்வாறாக ஓடோடி வந்த பசுக்கள், ஸ்ரீஹரியின் தோள்களில் தங்கள் தோள்களை (கழுத்தினை) வைத்து, மிகவும் மகிழ்ச்சியுடன், அந்த ஆனந்தாத்மனின் சங்கத்தை அடைந்தன. அவனின் கழுத்தை நக்கி, தங்களின் அன்பினை காட்டின. புன்னகை பூத்த முகத்துடன் ஸ்ரீகிருஷ்ணன் தன்னுடைய அழகான கைகளால் அந்த ஒவ்வொரு பசுக்களையும் தடவ, அவைகளுக்கு அன்று மோக்ஷ ஆனந்தமே தோன்றியது. || 8

இவ்வாறு அங்கு அனைவரும் மகிழ்ச்சியுடன் இருக்க, திடீரென்று பலத்த மழை பெய்யத் துவங்கியது. ஸ்ரீகிருஷ்ணன், பலராமன், மற்றும் அனைத்து கோபாலகர்களுடன் அங்கு கோவர்த்தன மலையில் இருந்த ஒரு குகையில் சென்று ஒதுங்கினர். அங்கிருந்த மூலிகைகள், சுவையான பழங்கள், சுவையான தயிர் சாதம் இவற்றுடன் காய்கறிகள் ஆகியவற்றை அனைவரும் மகிழ்ச்சியுடன் உண்டனர். பின் அனைவரும் அதனால் மிகவும் த்ருப்தி அடைந்தனர். || 9

அங்கிருந்த பசும்புற்களை மெல்லும்போது, அந்த பசுக்கள் தம் கண்களை மூடிக் கொண்டு, தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனின் அழகான மூர்த்தியை தங்களுக்குள் நினைத்துப் பார்த்தன. ||10

இவ்வாறாக மழைக்காலம் முடிந்து, அடுத்து ஶரத் ருது துவங்கியது. செடி கொடிகள் அனைத்தும் பசுமையாக வளரத் துவங்கின. அனைவருக்கும் தலைவனான, ஸர்வோத்தமனான, அனைவருக்கும் இஷ்டனான ஸ்ரீகிருஷ்ணன் அங்கிருந்தான். அப்போது சந்த்ரன் தன் கிரணங்களால் அனைத்து இடங்களிலும் பரவினான். அதனால் இருட்டில், மன்மதனின் பாணம் பாய்ந்ததைப் போல, தாமரைக் கண்களைக் கொண்ட கோபிகைகளுக்கு தாபம் உண்டாயிற்று. || 11

ஸ்ரீகிருஷ்ணனுடன் அங்க ஸங்கம் செய்ய வேண்டும் என்று நினைத்து, அனைத்து கோபிகைகளும், இனிமையான சங்கீதத்துடன், அவனின் மங்கள குணங்களை பாடிக் கொண்டிருந்தனர். இவ்வாறாக அவர்கள் தலைவனின் சங்கத்தை விரும்பி, அந்த அடர்ந்த வனங்களில் அவனை பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர். || 12

பத்மனாபனானவன், அத்தகைய வன ப்ரதேசங்களில், தன் பசுக்களை மேய்த்தவாறு, தன் புல்லாங்குழலால் இனிமையான நாதத்தை இசைத்துக் கொண்டிருந்தான். இளம் பெண்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் இருந்தனர். ரதியின் ரசிகைகள் அனைவரும் தங்களின் தலைவனை (மன்மதனை) விரும்பியவாறு இருந்தனர். || 13

இவ்வாறாக சிறந்த பெண்கள் அனைவரும் விரக தாபத்தில் தவித்துக் கொண்டிருக்க, அதைக் கண்டு, மன்மதனின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை காத்தான். இரவும் பகலுமாக கருணாநிதியான ஸ்ரீஹரியின் லீலைகளையே அவர்கள் அனைவரும் நினைத்துக் கொண்டிருந்தனர். இவ்வாறாக, மான்விழிகளைக் கொண்ட அவர்கள், ஸ்ரீகிருஷ்ணன் மேல் பரம பக்தியைக் கொண்டிருந்தனர். || 14

இரவும் பகலுமாக ஸ்ரீஹரியின் ரூபத்தின் மேல் சிந்தனை வைத்து த்யானத்தில் ஈடுபட்டனர். தங்களின் தேகம், இந்த்ரிய, வீடு, ப்ராணன் என அனைத்தையும் மறந்து, அவனையே நினைத்தனர். புற விஷயங்கள் அனைத்தையும் மறந்தனர். இத்தகைய அந்தப் பெண்களின் குழுவானது, அங்கிருந்த ஆண்களின் பக்தியை ஒப்பிட்டால், அதையே மீறுவதாக இருந்தது. || 15

கண்களில் அவனின் மூர்த்தியையே எப்போதும் பார்த்தனர். தங்கள் கரணங்களில் (வாயில்) எப்போதும் அவனைப் பற்றியே பேச்சு. மனம் எப்போதும் அவனைப் பற்றியே த்யானம் செய்தது. நாக்கு அவனின் கீர்த்தனையே எப்போதும் செய்தது. இவ்வாறான அந்த கன்யைகள் மிகவும் தன்யர்கள். பவித்ரம் ஆயினர். அவர்கள் அனைவரும் ஸ்ரீப்ரஸன்ன வெங்கடனால் அருளப்பட்டவர்கள். புண்யம் செய்தவர்கள். || 16

***

**32. வேணுலீலே**
**ராக :கன்னடகோள தாள :அட்ட**

**வேணுகோபாலன வேணு வர்ணிபரு ஜாணே கோபேரெல்ல கானாம்ருதவுண்டு**
**பாணபஞ்சகன பாணதட்டுகளிகே ப்ராண டெண்டெணிஸி த்யானிபரு ॥ப॥**

**எளெனேஸர்கள பளகதந்திப்ப ஹொளெவ ரத்ன மௌளி குண்டல்கள**
**பௌகிலிஹ கபோலத காந்தி பவளதுடியல்லி பிம்பிஸலு**
**நளினதளவ போலுவ நேத்ர ப்ரூ விலாஸாபாங்கதி கொளலனாதிப**
**தளிரு பருஹ மல்லிகேதண்டே கொஞ்சலுகள குஞ்ஜிதோங்கலின ॥1॥**

**வாமபாஹுவினலி வாமகண்டவிட்டு ஹேமவேணுரந்த்ரவ முட்டியங்குலி**
**நேமதலி ஸரிகமபதனியா மஞ்ஜுள ஸ்வர நுடிஸலு**
**ராமெயம்பாதர ஸோமரஸவன்னு ப்ரேமதி ஸவித ஶ்ரீமத்வேணுவிலி**
**ஈ மஹாபாக்யவ காமினெர் நோடிரெந்து மாதனாடுவர்ஜராமேயரு ॥2॥**

**ப்ரஹ்மகந்தர்வகானம்மீருவா கீத அம்மர கந்தர்வரம்மர நாரேரு**
**உம்மயதிம் கேளிஸம்மோஹிஸிதரு ஈம்மஹிய வ்ரஜரம்மணேரு**
**ப்ரஹ்மகச்சரிய ரம்மேயரஸன்ன ஸன்மார்கியா வேணுஸும்மூர்சேயிம் கேளி**
**ஸும்மக பக்ஷிகள் தாம்மருளிட்டவு ரம்யாரண்யதி தந்தம்மொளு ॥3॥**

**சூத ப்ரவாள பர்ஹோத்பல தாவரே ப்ரீதிலி முடித நாதகோபாலன**
**கீதகே பூருஹவ்ராத லதெகளு ஸோது அஸ்ருமோக்ஷவாதவவு**
**ஆதன நீல ஜீமூதாங்க வீக்ஷிஸி பூத நவில்கள யூதவு நர்திஸே**
**ஸ்ரோதரகம்ருதவாத ஹுல்லுகளு ஜாதானந்ததிந்த கூதவந்து ॥4॥**

**கோவிந்தாடவிலி கோவிண்டுகளனு காவுத ஸ்வர்ணமய வேணுனாதிஸே**
**ஆவு கிவிகொட்டு யாவஸவம் கச்சி தா வத்ஸவம் பிட்டு ஹுச்சநிட்டு**
**ஆ விக்ஷிஸி க்ருஷ்ணலாவண்யஸுதேய ஸேவிஸி நேத்ரதி தீவிதானந்ததி**
**தாவஸ்ருகரெவவு பாவுக ஜனர பாவதி லாங்கூல்க்ரீவவத்தி ॥5॥**

**தேவனாரியர நீவி ஸடில்துவு பாவேர முடிய பூவு செல்லதவு**
**பாவஜனம்பிகெ ஆவெங்கள்ஹுச்சிட்டு ஶ்ரீ வேணுவின ரஸவஸுண்டு**
**கோவேர ஸுக்ருத தாவுதோ ரங்கன்ன ஸேவகே ஸன்னத்தளாவேளெ காளிந்தி**
**தா வேக பிட்டோர்மி பாஷ்விந்தலப்பிதள் தேவனங்க்ரி வனஜவனந்து ॥6॥**

**ஶ்ரீவர ஶ்ரீக்ருஷ்ணாடிவிய ஸஞ்சரிஸுவாக பாதராஜீவத கந்தவு**
**பூவிய த்ருணதி ஸவ்யாபிஸிரலு தேவபுளிந்தெயர்தாவதனு**
**க்ரீவ குசதளிட்டு வாஸுதேவன பாவன சரித்ர பாவபரிதரா**
**காவளி மார்கதி கோவிதெர்ஹேளிதர் தேவகந்தர்வர டீவியலி ॥7॥**

**மேக ஶ்யாமலன ராகரஸாம்ருத பூககன தும்பலாக தேவர்களு**
**ஆகஸதிம் பூமளெகரேதரர்தியாகிரெ ஸாதுகளெளக கண்டு**
**மேகாளி ரங்கன மேகாதபத்ரங்களாகிர்தவல்லிய கோகோப கோவேரு**
**ஆ கோவர்தனாத்ரி பாகதேயேகெ தலேதூகிதரு ஸ்வர்காரெந்து ॥8॥**

**அனந்த பொம்மாண்டவன்னாள்த தேவ கோ கானனதடனெ கோனீக ரக்ஷணே**
**மானவ லீலெகதேனு பூஷணவோ தானண்ணநோடனெ வினோதகே**
**ஆ நந்த்ய ஸோதெய ஸூனவெனிஸித ஆனந்த ஶதகனாதி ஜனக**
**ஶ்ரீநாத கோபகாமினெயராள்வ தயானிதி ப்ரஸன்வெங்கட க்ருஷ்ண ॥9॥**

வேணுகோபாலனின் குழல் மற்றும் அதன் இசையை, அதனை அறிந்தவர்கள் மட்டுமே வர்ணிக்க முடியும். (யாராலும் வர்ணிக்க முடியாது - என்று அர்த்தம்). கோபிகைகள் அனைவரும் அங்கிருந்து கொண்டு, அதன் கானாம்ருதத்தை கேட்டவாறு, மன்மதனின் பாணங்களால்

கஷ்டப்படும் அந்தப் பெண்கள், தங்களின் ப்ராணனான ஸ்ரீகிருஷ்ணனை மிகவும் வியப்புடன் (அடுத்து என்ன ஆகப் போகிறதோ என்ற ஆனந்த சிந்தனையில்) த்யானம் செய்தவர்களாக இருந்தனர். || ப

உதய சூரியனைப் போன்றதான ஒளியைக் கொடுக்கக்கூடியதாக, ஒளிர்வதான ரத்னங்கள் நிறைந்த கிரீடத்தை அணிந்திருந்தான். குண்டலங்களை அணிந்திருந்தான். பரந்திருந்த அவனது கன்னத்தின் ஒளியானது, அவனது பவழம் போன்ற உதடுகளில் பட்டுத் தெறித்தது. அவனது குழல் வாசிப்பால், மலர்ந்த பூக்களைப் போன்ற கண்கள், அவனின் புருவங்கள் மேலே கீழே அசைந்தன. அப்போதே மலர்ந்த மல்லிகைப் பூக்களின் செண்டுகள் ஆகியவற்றையும் ஸ்ரீகிருஷ்ணன் சூடிக் கொண்டிருந்தான். || 1

ஸ்ரீகிருஷ்ணன், தனது இடது தோளில், தனது இடது புறமாக குனிந்து தலையை வைத்து, தங்கமயமான தன் புல்லாங்குழலின் துளைகளைத் தொட்டு, தன் விரல்களால் ஸரிகமபதநி என்றவாறு அழகான ஸ்வரங்களில் குழலை இசைத்தான். அந்தப் புல்லாங்குழலில் இருப்பவளான ஸ்ரீதேவியின் உதடுகளில் இருப்பதான ஸோம-ரஸத்தை அவன் மிகவும் அன்புடன் சுவைக்கிறான். இத்தகைய புல்லாங்குழலில் இந்த மஹா பாக்கியத்தை அந்தப் பெண்கள் (கோபிகைகள்) பார்க்கின்றனரே, என்ன ஆச்சரியம்? (இவர்கள் மஹா பாக்யஸாலிகள்) என்று தேவலோகப் பெண்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். || 2

பாடல்களை மிகவும் சிறப்பாக பாடுபவர்களான ப்ரஹ்ம கந்தர்வர்களின் பாடலை விட மிகவும் சிறந்ததாக ஸ்ரீகிருஷ்ணன் இசைத்த குழலிசை இருந்தது. தேவலோக கந்தர்வர்கள், தேவலோக பெண்கள் மிகவும் இஷ்டப்பட்டு, ஆசையுடன் கேட்டு மயங்கிய அத்தகைய இசையை, இப்போது இந்த நந்தகுல கோபிகைகளும்கூட கேட்டு மகிழ்ந்தனர். இத்தகைய வேணுவின் இசையைக் கேட்டு ப்ரஹ்ம தேவருக்கு வியப்பு உண்டாயிற்று. அவர், தன்னையே தான் மறந்தார். அந்த வனத்தில் இருந்த மிருகங்கள், பறவைகள் என அனைத்து ப்ராணிகளும், அந்த அழகான வனத்தில், அந்த இசையைக் கேட்டு, மயங்கி நின்றன. 3

மா, பவழ போன்றதான மரம், செடி, கொடிகள் ஆகியவற்றால் அன்புடன் செய்யப்பட்ட மாலைகளை சூடிக் கொண்டு, வேணுகோபாலன் வாசித்த இசைக்கு, இந்த பூமியில் வளர்ந்த கொடிகள் மயங்கி நின்றிருந்தன. தங்களிடமிருந்து மலர்ந்த பூக்களை ஸ்ரீகிருஷ்ணன் தரித்திருக்கிறானா என்று எண்ணி, அவை கண்ணீர் விட்டன. அத்தகைய ஸ்ரீகிருஷ்ணனின் நீலமான கார்மேகம் போன்ற அங்கத்தினை பார்த்து, இறைக்கைகளை விரித்த மயில்கள் நடனமாட, மற்றும் அவனின் இசையைக் கேட்டு அங்கிருந்த மான்கள், தாங்கள் கேட்டதிலிருந்து ஆனந்தம் பொங்கியவாறு ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்து அமர்ந்தன. || 4

கோவிந்தன் இருக்கும் அந்த இடத்தில், குழுக்களாக இருந்த பசுக்கள், தங்கமயமான அந்த புல்லாங்குழலின் இசையில் மயங்கி, அவை தங்களின் காது கொடுத்து கேட்டன. புற்களை தின்பதற்கு கூட மறந்து, தங்களின் கன்றுகளையும் விட்டு விலகி, மயங்கி நின்றன. அந்த ஸ்ரீகிருஷ்ணனின் அழகு என்னும் அமிர்தத்தை பருகியவாறு, கண்களில் தெரிவதான ஆனந்தத்துடன் அவை கண்ணீர் விட்டன. மகிழ்ச்சி கொண்ட மக்களைப் போலவே அந்த பசுக்களும் ஆனந்தத்தை காட்டியவாறு, தங்கள் வால்களை ஆட்டிக் கொண்டு நின்றன. || 5

தேவலோகப் பெண்கள் கட்டியிருந்த புடவைகளில் இருந்த மடிப்புகள் அவிழ்ந்தன. அவர்கள் சூடியிருந்த பூக்கள் உதிர்ந்தன. மன்மதனின் அம்பிற்கு வசப்பட்டவர்கள் ஆகி, அந்தப் பெண்கள், ஸ்ரீவேணுவின் அமிர்தத்தை பருகிய இத்தகைய கோபிகைகளின் ஸுக்ருதம் (புண்ணியம்) எத்தகையதோ?. ரங்கனின் சேவையில் இவ்வாறாக இவர்கள் அனைவரும் ஈடுபட்டிருந்த வேளையில், ஸ்ரீகிருஷ்ணனின் மனைவியான காளிந்தியும், அதுவரை அமைதியாக பாய்ந்து கொண்டிருந்தவள், வேகமாக பாயத் துவங்க, அந்த தண்ணீர் வந்து ஸ்ரீகிருஷ்ணனின் பாதம் என்னும் தாமரையை தொட்டுப் பாய்ந்தது. || 6

ஸ்ரீவரனான ஸ்ரீகிருஷ்ணன், அந்தக் காட்டில் ஸஞ்சரிக்கும்போது, அவனது பாதத் தாமரையின் வாசம், பூமியில் இருந்த புல்லில் சென்று வ்யாபித்திருக்கையில், தேவலோகப் பெண்களான அந்த கோபிகையர்கள், அந்த ம்ருத்திகையை தங்களின் மார்பில் வைத்து, அந்த வாஸுதேவனின் பவித்ரமான சரித்ரத்தை, மிகவும் ஆனந்தத்துடன் பாடியவாறு, பசுக்கள்

செல்லும் மார்க்கத்திலேயே சென்றவாறு, அனைத்தையும் அறிந்தவர்களான அவர்கள், தேவ கந்தர்வர்கள் எவ்வாறு அற்புதமாக பாடுவார்களோ, அவ்வாறே பாடிக் கொண்டு சென்றனர். ||7

கார்மேகங்களின் வண்ணத்தில் இருப்பவனான ஶ்ரீகிருஷ்ணனின் ராக ரஸாம்ருதமானது, பூமி, வானம் ஆகிய அனைத்தையும் நிறைத்தது. தேவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் பூமழையை பொழிந்தனர். இதைக் கண்ட ஸாதுக்களின் குழுவானது மகிழ்ந்தது. மேகக் கூட்டங்கள் அனைத்தும் பகவந்தனின் சேவை செய்வதற்காக, குடையாக வந்து நின்றன. அங்கிருந்த பசுக்கள், கோபர்கள், கோபியர்கள் என அனைவரும் கோவர்த்தன மலை இருக்கும் அந்தப் பகுதியில், ஶ்ரீகிருஷ்ணனைப் பார்த்து தலை வணங்கி நின்றனர். இதுவே ஸ்வர்க்கம் என்று நினைத்தனர். || 8

அனந்த ப்ரஹ்மாண்டங்களை ஆள்பவனான, தேவர்களை, பசுக்களை, ப்ராஹ்மணர்களை காப்பவனான, இந்த மானவனான ஶ்ரீகிருஷ்ணனின் லீலைகள்தான் என்னவோ?. தான் தன் அண்ணனுடன் விளையாட்டாக அனைத்தையும் செய்தான். அந்த நந்தன், யசோதையின் மகன் எனப்பட்டான். ப்ரஹ்ம தேவரின் அனாதியான தந்தையானவன் இவன். இவனே ஆனந்த ஸ்வரூபன் மற்றும் அனாதி ஜனகன். ஶ்ரீநாத கோபாலன், அந்த கோபிகைகள் அனைவரையும் ஆண்டான். அவன் தயாநிதி. அவனே ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணன். || 9

***

**33. வஸ்த்ராபஹரண**
**ராக :ராமக்ரியா தாள :அட்ட**

**ஹைமந்தத ப்ரதமமாஸதி ஶ்ரீ ஸோமஸேகரனர்தாங்கிய ஹொந்தி**
**ஸீமந்தினியரர்ச்சிஸிதரந்து நித்ய யமுனெய வாரிலி மிந்து ||1||**

**மளலகௌரிய மாடி நோந்தரு மங்கள ஹவ்யான்னவனுண்டு காந்தேரு**
**பலபுஷ்ப கந்தமாலேகளிந்த கெந்தளிலு தூபதீப பலியிந்த ||2||**

**நந்தனாத்மஜ தம்ம பதியாகபேகெந்துமேயனு பேடிதராக**
**ஸுந்தர காத்யாயனியர்சனெ பக்தியிந்த ப்ரதக்ஷிணே வந்தனெ ||3||**

**உச்ச பாடி ஹரிகுணகீர்த்தி மத்தே நிச்ச நிச்சம்பிகெயள ப்ரார்த்னி**
**அத்யந்த யாச்னிய திளிதனு ஈ அச்யுதனல்லிகே பந்தனு ||4||**

**யோகிஜனேச்வர கண்டனு அவர் நிகிதம்பரவெத்திகொண்டனு**
**பாக்யெயர் மிந்து பாஹன்னக க்ருஷ்ணவேகதி நேபவடரி நக்க ||5||**

**மோகவ பாலெர நோடி நகுதித்த பலு ஸுகுணேரு பன்னிரில்லிகேயிந்த**
**தெகெதுகோள்ளிரி நிம்மாம்பரவெந்த நர்மங்கள மாதிலி ஶ்ரீ கோவிந்த ||6||**

**நிம்ம நிம்முடிகெயனு நிமகீவெ பன்னி ஸ்ரமவேகெ நீரொளகெ நீவே**
**ஹிமவு வ்ரதஸ்தெயரிகெ கஷ்ட அக்ரமவின்னு அககடாயிந்தனு க்ருஷ்ண ||7||**

**காமஜனகன நர்மகெ நாசி ஆ காமினியரிகெ காமவு ஹெச்சி**
**ஶ்யாமஸுந்தர நின்ன தாஸேரு ஏலே ஸ்வாமி நாவு விவஸ்தெயரு ||8||**

**அச்யுத நம்முடுகேய நீடை நிம்மிச்சானுகெயரு கன்யெரு நோடை**
**ஸச்சிதானந்த நந்தஜ ஸாகு ஶ்ரீவத்ஸலாஞ்சன பின்னஹ பராகு ||9||**

**கோமலெயரு பலு தோதெவு தர்மதாம சளிகே முட்டிகாதெவு**
**ஸ்வாமி நந்தகே ஹேள்வெவு கேளை நிம்ம காமிஸுவேவு வஸ்த்ரவ நேடை ||10||**

**தாஶார்ஹ கன்யெரிகெந்தனு வ்ரஜே ஶகே ஹேளி மாடுவுதேனு**
**தாஸேராதரே பன்னி பளிகிகெ நிம்ம வாஸங்களனு கொடுவேனு ப்யாகே ||11||**

**ஶீததிந்தெரடு அங்கை ஹச்சி ரதினாதன ஸதனத கதமுச்சி**
**ஸோது லஜ்ஜெயனீகி முகதலி காளிந்திதீர்த்த உளிது ஹரியித்தல்லி ॥12॥**

**பந்து பூருஹதெடெ நிந்திஹ பந்த ஸூந்தரியர பாவ திளிதிஹ**
**இந்துமுகியர திவ்யாம்பர தன்ன ஸ்கந்ததலிட்ட விஶ்வேஶ்வர ॥13॥**

**ஸ்நேஹாவலோகதி நோடிதா வஸ்த்ரதேஹிகரொளு மாதனாடித**
**ஹே ஹரிணா க்ஷீரே கேளிரெ அம்பிகாஹேலனவ மாள்ப செலுவேயரெ ॥14॥**

**நக்ன மிந்தபராத க்ஷமிஸெந்து கரயுக்மவ முகிது பேடிரி பந்து**
**விக்னேஶனம்மகெ பேடலு நிம்மனர்க்யாம்பரவீவே ஈகலு ॥15॥**

**கேளி கெலதெரொந்து கரதலி இந்து மௌளியர்தாங்கிகே நமிஸலு**
**ஶ்ரீலோலனவதிரஸ்கரிஸித எரடு தோளெத்தி நமிஸி ப்ராஞ்சலிலெந்த ॥16॥**

**எந்த மாதிகே லஜ்ஜிஸிதரு பாஹூ த்வந்த்வவெத்யபி வந்திஸிதரு**
**இந்திரேஶகே வஸ்த்ர பேடலு ப்ரீதியிந்தித்த பேரெ பேரெ தயாளு ॥17॥**

**தமதம்யாம்பரவனு உட்டரு ஶ்ரீகமலாக்ஷனலி த்ருஷ்டியிட்டரு**
**ஸூமுகவ லஜ்ஜெயிந்தீக்ஷிஸி ஶ்ரீரமணன ஸங்கவபேக்ஷிஸி ॥18॥**

**நவஸங்கமதோரெ நோடதி அங்க்ரிவனஜ ஸ்பர்ஶேச்செயனு ஹொந்தி**
**த்யுவதே வ்ரதஸ்தர நோடி ஸம்நவரஸவார்திலி ரமிஸித ॥19॥**

**வேதோக்தியந்தே காமினியர்காமவித்த வேதேஶ்வரனு பூர்ணகாம**
**போதிஸிதனு தன்னர்ச்சனெ பல ப்ராப்தவாதுது நடேயிரெந்த ஶ்ரீலோல ॥20॥**

**நந்தஜனாக்ஞுதி பந்தரு தம்ம மந்திரகெ சந்த்ரமுகியரு**
**ஸூந்தர ப்ரஸன்வெங்கடேசன நம்பி நந்திஸிதரு கன்யைரனுதின ॥21॥**

ஹேமந்தருதுவின் முதலாம் (மார்கஶிர) மாதத்தில், ஶ்ரீ ஸோமஶேகரனின் மனைவியான பார்வதியை (தம் மனதில்) அடைந்து (காத்யாயினி பூஜையை / விரதத்தை), அவளைக் குறித்து பூஜை செய்பவர்களாகி, இந்த கோபிகையர்கள், தினமும் யமுனா தீரத்தில், குளித்துவிட்டு, அங்கேயே, இத்தகைய பூஜையை செய்தனர். || 1

மணலில் கௌரியை செய்து, அந்தப் பெண்கள் சுவையான அன்னத்தை படைத்து, அந்த நைவேத்யம் செய்யப்பட்ட அன்னத்தையே அங்கு உண்டு வந்தனர். பழ, புஷ்ப, சந்தனம், மாலை ஆகியவற்றால் பூஜை செய்து, தூப, தீப ஆகியவற்றை சமர்ப்பித்தனர். || 2

நந்தகுமாரனான ஶ்ரீகிருஷ்ணன் தம்முடைய கணவன் ஆகவேண்டும் என்று அவர்கள் வேண்டிக் கொண்டவர்களாகி, அழகான காத்யாயனி அர்ச்சனையை பக்தியுடன் செய்து, அங்கு ப்ரதக்ஷிணை செய்தார்கள். ||3

ஶ்ரீஹரியின் குண கீர்த்தனைகளை உச்ச ஸ்வரத்தில் பாடியவாறு, இந்த கோபிகையர்கள் செய்த ப்ரார்த்தனையை, அவர்களது அத்யந்த பக்தியை ஶ்ரீகிருஷ்ணன் கேட்டான். இந்த அச்யுதன் அங்கு வந்தான். ||4

யோகிகளின் தலைவனான ஶ்ரீகிருஷ்ணன் அங்கு வந்து அவர்களின் பூஜையை கண்டான். அவர்கள் அவிழ்த்து வைத்திருந்த ஆடைகளை கவர்ந்து கொண்டான். அங்கிருந்த கதம்ப மரத்தில் ஏறி நின்று சிரித்தான். ||5

ஸ்னானம் செய்து கொண்டிருந்த அந்தப் பெண்களின் முகத்தை பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான். அழகான பெண்களே, இங்கு வாருங்கள் என்றான். உங்கள் ஆடைகளை எடுத்துக் கொள்ளுங்கள் என்றான். ஸ்ரீகோவிந்தன் இவ்வாறு தன் மங்கள (மெதுவான) வார்த்தைகளால் அவர்களிடம் இவ்வாறு கூறினான். ||6

உங்கள் ஆடைகளை உங்களுக்கே தருகிறேன் வாருங்கள். ஏன் தண்ணீரில் இருந்து சிரமப்படுகிறீர்கள்?. விரதம் செய்பவர்களுக்கு பனி / குளிர் என்பது மிகவும் கஷ்டமானது. உங்கள் விரத க்ரமத்தையே அது கெடுத்து விடும் - என்றான் ஸ்ரீகிருஷ்ணன். ||7

காம ஜனகனான ஸ்ரீகிருஷ்ணனின் பேச்சைக் கேட்டு வெட்கப்பட்டு, அந்தப் பெண்களுக்கு காமம் (அன்பு / பக்தி) அதிகரித்தது. ஹே ஶ்யாம ஸுந்தரனே, உன்னுடைய தாஸியர்கள் நாங்கள். ஹே ஸ்வாமி. நாங்கள் தற்போது ஆடையின்றி இருக்கிறோம் - என்றனர். ||8

ஹே அச்யுதனே, எங்களின் ஆடைகளை அளிப்பாயாக. உன் இஷ்டத்திற்கு ஏற்றபடி நடக்கும் இந்தப் பெண்களை பார்ப்பாயாக. ஸச்சிதானந்தனே. நந்தகுமாரனே. போதும் ஸ்ரீவத்ஸ லாஞ்சனனே, எங்கள் ப்ரார்த்தனைகளை நீ கேட்பாயாக. ||9

ஹே கிருஷ்ணனே, நாங்கள் மிருதுவான குணம் கொண்ட பெண்கள். .. குளிருக்கு ஆளாகியிருக்கிறோம். ஸ்வாமி, உன்னுடைய செயல்களைப் பற்றி நந்தனிடம் சொல்லி விடுவோம். கேட்பாயாக. உன்னையே நாங்கள் விரும்புகிறோம். எங்கள் வஸ்த்ரங்களை கொடுப்பாயாக - என்றனர். || 10

தாஸர்களால் அடையப்படக்கூடியவனான ஸ்ரீகிருஷ்ணன், அந்தப் பெண்களிடம் இவ்வாறு கூறுகிறான். நீங்கள் அனைவரும் சென்று இந்த ஊர் அரசனிடம் கூறுங்கள். அதனால் எனக்கு என்ன?. நீங்கள் என்னுடைய தாஸிகள் என்பது உண்மையென்றால், என்னிடம் இப்போது வாருங்கள். உங்களுடைய ஆடைகளை உங்களிடமே கொடுப்பேன். சீக்கிரம் வாருங்கள் - என்றான் ஸ்ரீகிருஷ்ணன். ||11

குளிரில் நடுங்கியவாறு, இரு கைகளையும் தேய்த்துக் கொண்டு, மன்மதனின் இருப்பிடங்களான தங்களின் தேக பாகங்களை கைகளால் மூடிக் கொண்டு, ஸ்ரீகிருஷ்ணனிடம் தோற்றுப் போய், வெட்கத்தை விட்டு, முகத்தில் காளிந்தி நதியின் நீர் வடிய, அவர்கள் அனைவரும் ஸ்ரீஹரி இருந்த இடத்திற்கு வந்தனர். || 12

தண்ணீரிலிருந்து எழுந்து வந்து, மரத்தின் அருகில் நின்ற அந்த அழகான பெண்களின் மனதினை அறிந்த ஸ்ரீகிருஷ்ணன், அந்த சந்த்ரனைப் போன்ற முகத்தைக் கொண்டவர்களான அவர்களின் ஆடைகளை, தன் தோள்களின் மேல் வைத்துக் கொண்டான், விஶ்வேஶ்வரன். || 13

அவர்களை மிகவும் நட்பு கொண்ட முகத்துடன் பார்த்தான். வஸ்த்ரங்களை இழந்தவர்களிடம் பேசினான். ஹே, மான்களைப் போன்ற கண்களைக் கொண்டவர்களே. கேளுங்கள். பார்வதி விரதத்தை செய்பவர்களான பெண்களே, கேளுங்கள். ||14

நிர்வாணமாக ஸ்னானம் செய்தது தவறு என்று சொல்லி, அதற்காக இரு கரங்களையும் தூக்கி, என்னிடம் மன்னிப்பு கேளுங்கள் என்றான். இவ்வாறு நீங்கள் விக்னேஶ்வரனின் தாயான பார்வதியை வேண்டிக் கொண்டால், உங்கள் ஆடைகளை நான் இப்போதே உங்களுக்கு தந்துவிடுவேன் - என்றான். || 15

இதனைக் கேட்ட சில பெண்கள், தங்களின் ஒரு கையை தூக்கி, ருத்ரதேவரின் மனைவியான பார்வதியை வேண்டினர். ஸ்ரீலோலனான ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை புறக்கணித்தான். இரு கைகளையும் தூக்கி வணங்குங்கள் - என்றான். || 16

இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணன் கூறியதைக் கேட்டு அவர்கள் வெட்கம் கொண்டனர். தங்கள் இரு கைகளையும் தலை மேல் தூக்கி வணங்கினர். பின், இந்திரேஶனான ஸ்ரீகிருஷ்ணனிடம் தங்களின் ஆடைகளை வேண்ட, அன்புடன், கருணைக் கடலான ஸ்ரீகிருஷ்ணன் அவர்களின் ஆடைகளை அவர்களிடமே தந்தான். ||17

தத்தம் ஆடைகளை அந்தப் பெண்கள் உடுத்திக் கொண்டனர். தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனிடம் தங்களின் பார்வையை வைத்தனர். அவனின் முகத்தை வெட்கத்துடன் பார்த்து, ஸ்ரீரமணனின் ஸங்கத்தை அவர்கள் விரும்பினர். ||18

இப்போது புதியதான (மாறுபட்ட) ஒரு பார்வையினால், கடைக்கண் பார்வையினால் அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனை பார்த்தனர். அவனது தாமரை போன்ற பாதங்களை தொட வேண்டும் என்று விரும்பினர். இவ்வாறாக விரதத்தில் இருந்த இந்த பெண்களை பார்த்து, ஸ்ரீகிருஷ்ணன் நவரஸங்களால் அவர்களை அருளினான். (நவரஸம் = லௌகிகமான நவரஸங்கள் மற்றும் நவ வித பக்தி என இரு அர்த்தங்களையும் இங்கு கொள்ளலாம். அதாவது அவர்கள் காட்டிய பக்திக்கு, தக்க பலன்களை அளிக்கிறேன் என்று ஸ்ரீகிருஷ்ணன் நிச்சயித்தான் என்று அர்த்தம்). ||19

வேதம் சொல்வது எப்படி எப்போதும் உண்மையோ, அதைப் போல ஸ்ரீகிருஷ்ணனும் தான் கூறியதற்கேற்ப, அந்தப் பெண்களுக்கு அவர்களின் காமத்தை அளித்தான். அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றினான். வேதேஶ்வரன். பூர்ண காமன். தன்னுடைய அர்ச்சனையானது அவர்களுக்கு தக்க பலன்களை கொடுத்திருக்கிறது. இப்போது செல்லுங்கள் என்றான் ஸ்ரீலோலன். ||20

நந்தகுமாரனான ஸ்ரீகிருஷ்ணனின் ஆணைப்படி, அந்தப் பெண்கள் அனைவரும் தத்தம் வீடுகளுக்கு திரும்பினர். அவர்கள் சந்த்ரன் போன்ற ஒளி கொண்ட முகத்தினைக் கொண்டவர்கள். அழகான, ப்ரஸன்ன வெங்கடேசனை நம்பி வணங்கி அந்தப் பெண்கள் தினமும் அவனையே வேண்டிக் கொண்டிருந்தனர். || 21

***

**34. ராக :ராமக்ரியா தாள :அட்ட**

**வர்ணிப கவிகளிந்த உகே ஸுகார்ணவ முந்தோருவுதுபேகே ॥ப॥**

**இந்திரெயரஸனு வ்ருந்தாவன உளிதொந்தி [துதி?] ந தூரைதிதனு கட**
**ஸண்தடிஸித தருவ்ருந்தவு சத்ரகளந்தாகலி ஹரி துதிப கட ॥1॥**

**கேளை ஸுபல விஶால ஸ்தோகபால ஸ்ரீதாம கோபால ருக்ஷா**
**கேளை ஸுரப்ரஸ்தாலதெ தருகளு காலகாலகதி உபகரிஸுதிவே ॥2॥**

**பாள பிஸிலு பிருகாளி ஸிடிலு மளெகாளகிச்சு சளிகாலவனு**
**தாளி மனுஷ்யர ஜாலகாஸ்ரயவாகி மேலே நம்மாப்தரந்திஹவஹுதே ॥3॥**

**பல குஸுமவு எளெதலிலிம் கனகந்த ஸலெ கந்தமூலத்வசெகளிந்த**
**பலு ப்ராணிகளனு ஸலஹுதலிவே ஹீகிளெயலி க்ருஹமேதிகளாகி ॥4॥**

**ஔசித கர்மதி யாசிஸிதர்தி யாசகர கரெது அர்சிஸுவ**
**ஆசாரான்விதரெ சதுர்வித முக்திகோசரரெ ப்ரியரு நமகே ॥5॥**

**ஸ்ருதிபளிகெளெவரு அதிதிகள் பஜகரு க்ஷிதிபூஷணர் பகவஜ்ஜனரு**
**ஸ்துதிகர்ஹரு பரஸதிதனவிரதரு ஸதத ஸத்பதகரு மத்ப்ரியரு ॥6॥**

**மத்கதாஸ்ரவண ஸம்கீர்தனெ ஸ்மரணெ மத்பதஸேவனெ நித்யார்சனெ**
**மத்தபிவந்தனெ தாஸ்யஸகத்வவு ஆத்மனிவேதனெ பக்தி முக்தி ॥7॥**

**எனகே ப்ரக்ருதி ஸ்த்ரீ வனஜோத்பவஸுத த்ரினயன விபாஹிப தனுஜஜரு**
**அனிமிஷபதி நப்த்ருவு ஸுரரிஷி ந்ருபஜ னஸேவகரெம்புவ முகுத ॥8॥**

**ஸ்ருஷ்ட்யாதிகாரண ஸிஷ்டஸம்ரக்ஷக துஷ்டஹரணனா துஷ்டிதனு**
**ஸ்ருஷ்ட மஹிம யதேஷ்ட நிகமவேத்ய விஷ்ணு க்ருஷ்ணனெம்பவ வைஷ்ணவனு ॥9॥**

**ஈ லஸத்ர்ம ப்ரதிகூலரெ அதமரு பூலலனெகே பாரகரவரு**
**ஹேளலேனவர ஜன்மாளிகள் தருலதெகீளிலு நிரயத பாலவரு ॥10॥**

**பல பூ கொஞ்சலிம் தலெபாகிஹ தருகள மத்ய யமுனா ஜலவீண்டி**
**தளுதுபவனதலி கெளெயரு ஹஸிது ஶ்ரீ பலப்ரஸன்வெங்கடகே பேடிதரு ॥11॥**

34
இத்தகைய பாகவத கதைகளை வர்ணிக்கும் கவிகளுக்கு (அறிஞர்களுக்கு) மங்களம் உண்டாகட்டும். அத்தகைய கவிஞர்கள் முன்வரும் எல்லா காலங்களிலும், சுக-கடலில் மூழ்கி இருக்கட்டும். (அவர்களுக்கு மோக்ஷமே கிடைக்கட்டும். ||ப

லக்ஷ்மிபதியான ஶ்ரீகிருஷ்ணன் (தன் தோழர்களுடன் சேர்ந்து கொண்டு) ஒரு நாள் வ்ருந்தாவனத்தை விட்டு, வெகு தூரமாக சென்றான். அங்கு வளர்ந்திருந்த மரம், செடிகள் ஆகியவை வானை முட்டும் அளவிற்கு வளர்ந்து, இவர்களுக்கு குடை போல வெயில் வராமல் காத்து வந்தன. அப்போது ஶ்ரீஹரி, இந்த மரங்களைப் பார்த்து ஸ்தோத்ரம் செய்தான். (அவற்றின் மகிமைகளைப் பற்றி கூறத் துவங்கினான்). || 1

ஹே ஸுபல, ஹே விஶால, ஸ்தோகபாலா, ஶ்ரீதாமா, கோபாலா, ருக்ஷா - கேட்பாயாக. இத்தகைய தேவலோக மரம், செடி, கொடிகள் ஆகியவை நமக்கு எல்லா காலங்களிலும் பற்பல உபகாரங்களை செய்கின்றன. || 2

அபாரமான வெயில், சூறாவளி, மின்னல், மழை, காட்டுத் தீ, குளிர் காலம் ஆகியவற்றிலிருந்து, மனிதர்களுக்கு பயங்கரமான சிரமம் உண்டாக, அந்த மனித குலத்திற்கே ஆஸ்ரயமாக, இந்த மரம் செடிகள், நம் மேல் நின்று, நமக்கு ஆப்தர்களைப் போல நின்று காக்கின்றன. || 3

பழம், பூ, இலை, சுகந்தமான சந்தனம், மூலிகைகள், மரப்பட்டை அகியவற்றால், பற்பல ப்ராணிகளை இவை காப்பாற்றுகின்றன. இவை இந்த பூமியில் க்ருஹஸ்தர்கள் எப்படி பிறருக்கு ஆஸ்ரயமாக இருக்கிறார்களோ, அவ்வாறு இந்த மரங்கள் நமக்கு ஆஸ்ரயமாக இருக்கின்றன. || 4

தமக்கு விதிக்கப்பட்ட (வர்ணாஸ்ரம தர்மங்களின்படியான) கர்மங்களை செய்து, தமக்கு உதவி வேண்டும் என்று வந்த யாசகர்களை அழைத்து மரியாதை செய்து உதவியும் செய்து, இவ்வாறான தக்க ஆசாரங்களை செய்து, சதுர்வித பல புருஷார்த்தங்களை விரும்புபவர்கள், மோக்ஷத்தை விரும்புபவர்களே எனக்கு மிகவும் ப்ரியமானவர்கள் - என்றான் ஶ்ரீகிருஷ்ணன். ||5

வேதங்களின் பால் அனைவரையும் இழுப்பவர்கள், வீட்டுக்கு வரும் அதிதிகளை மரியாதை செலுத்துபவர்கள், பூமியை அலங்கரிப்பவர்களான பகவத் பக்தர்கள், பிறர் மனைவி, செல்வங்களை விரும்பாதவர்கள், எப்போதும் நற்பாதையிலேயே செல்பவர்கள் - இவர்களே எனக்கு ப்ரியமானவர்கள். ||6

என்னுடைய கதைகளை ஸ்ரவணம், கீர்த்தனம், ஸ்மரணை, என்னுடைய பாத ஸேவனை, எனக்கு நித்ய அர்ச்சனை, வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதனம் ஆகிய நவ வித பக்தியால் என்னை வணங்குபவர்களுக்கு முக்தியே கிடைக்கிறது. ||7

எனக்கு மஹாலக்ஷ்மி மனைவி, சதுர்முக ப்ரஹ்மதேவர் மகன், முக்கண்ணனான ருத்ரதேவர், கருட, ஸேஷர்கள் ஆகியோர் எனக்கு பேரன்கள், இந்த்ரன் என்னுடைய கொள்ளுப் பேரன், தேவரிஷியான நாரதர், சக்ரவர்த்திகள், ஆகியோர் என்னுடைய சேவகர்கள் என்று யார் இவ்வாறெல்லாம் தாரதம்யத்தின்படி சரியாக அறிகிறார்களோ, அவர்கள் முக்தி யோக்யர்கள் ஆகிறார்கள். ||8

ஸ்ருஷ்ட்யாதி அஷ்ட கர்த்ருத்வங்களுக்கு காரணன், தன்னுடைய பக்தர்களை / ஸஜ்ஜனர்களை காப்பவன், துஷ்டர்களை, அஸுரர்களை அழிப்பவன், நித்ய த்ருப்தன், அவனுடைய மகிமை இந்த ப்ரபஞ்சத்தில் அனைத்து இடங்களிலும் பரவியிருக்கின்றன, அவன் ஆகமங்களால் மட்டுமே அறியப்படுபவன், அவனே விஷ்ணு, அவனே கிருஷ்ணன் என்று அறிபவனே வைஷ்ணவன் - என்றான் ஸ்ரீகிருஷ்ணன். ||9

இவ்வாறான ஒளிமயமான சிறந்ததான தர்மத்திற்கு எதிரானவர்கள் அதமர்கள். பூமாதேவிக்கு அத்தகையவர்கள் பாரமானவர்கள். இன்னும் அவர்களின் பிறவிகளைப் பற்றி சொல்வதற்கு என்ன இருக்கிறது?. அவர்கள் மரம், செடிகளை வெட்டி வீழ்த்துகிறார்கள். இத்தகையவர்களுக்கு நரகமே கிடைக்கிறது - என்றான் ஸ்ரீகிருஷ்ணன். ||10

பழம், பூ, ஆகியவை நிரம்பி வழிவதால், அதன் பாரத்தினால், தலை குனிந்து நிற்கும் மரம், செடிகளின் நடுவில் யமுனா நதிக்கரைக்கு வந்த ஸ்ரீகிருஷ்ணனின் தோழர்கள். இவ்வாறாக இருக்கும் காட்டின் நடுவில் வந்த தோழர்களுக்கு பசி, தாகம் எடுக்க, அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனான ஸ்ரீப்ரஸன்ன வெங்கடனை வேண்டிக் கொண்டனர். ||11

***

**35. ஸத்ரதிடிகெய ஊட**
**ராக :ஸௌராஷ்ட்ர தாள :ஏகதாள**

**மஹா பாஹுஶாலி கேளு ராமா ராம துஷ்ட**
**தாஹக [ர] ஸ்ரீ க்ருஷ்ண கேள் பூர்ணகாமா**
**பஹள பாதிதராதேவு க்ஷுதேயலீக நிரு-**
**வாஹ நிம்மிந்தலெந்தர் கோவராக ||1||**

**ஹிகெந்த விஜ்ஞாபனெய கேளி ஶௌரி தயா-**
**ஸாகர நிரூபிஸித துக்கஹாரி**
**யாகஶாலெயல்லி ஸத்ரவெந்து நீவு ஹோகி-**
**யாகிகளிகன்ன பேடி பேள்தெவாவு ||2||**

**யஜ்ஞபதியாஜ்ஞேயிந்த யஜ்ஞகைதி ருத்வி-**
**ஜர்கெ அன்னவ பேடிதர் ஸுவினயதி**
**ஸ்வர்காகார்மரவரு மத்தராகி பால-**
**கர்கெ கர்ஜிஸிதரு வினயவ நீகி ॥3॥**

**காலவல்லவெந்து நாஸிகரு நுடியலு கோ-**
**பாலகரு திருகி பந்து ஹரிகெ ஹேளலு**
**பாலெயர்கே பேடி புருஷரன்னு பேடதே யாக-**
**ஶாலெகைதி புனரபி அன்னபேடிதரந்தே ॥4॥**

**க்ருஷ்ணாஜ்ஞே கேளி பாலெரு ஹ்ருஷ்ட மனதலி ஶ்ரீ-**
**க்ருஷ்ணன்ன ஸந்தர்ஶனாஶெ மாள்பரதலி**
**ம்ருஷ்டோதன பக்ஷ்யபாயஸாஜ்ய க்ஷீரவு ய-**
**தேஷ்ட ஶாக பப்பட பளித்ய ததி வ்யஞ்சனவு ॥5॥**

**தண்ட தண்டத்ஹரிவாணகள சஷகதொளகெ தும்பி-**
**கொண்டு பந்தரிந்துவதனெர் ஹரியித்தெடெகெ**
**கண்டர மக்கள ஆப்தரெல்லர பிட்டு ஶ்ரீ-**
**புண்டரீக நயனன்ன்க்ரியல்லி சித்திட்டு ॥6॥**

**ப்ராஹ்மணேயரு ஷட்ரஸதன்னவ தந்து நமிஸலு பர-**
**ப்ரஹ்மனுண்ட கோபாலகர கூடி தயாளு**
**ப்ரஹ்மஜ்ஞநாரியர பக்திரஸவன்னுண்டனு அவர்கெ-**
**ப்ரஹ்ம நிர்வாணவனித்த புருஷஶௌண்டனு ॥7॥**

**மத்தொப்பளு பாஹன்னக கண்ட தருபலு ஆகே-**
**முக்கிபதிய நெனெது தன்ன ப்ராணபிட்டுளு**
**இத்த யஜ்ஞபத்னியரன்னவித்து க்ருஷ்ணன குண-**
**கீர்த்தனெ பாடி பரவஶதல்லித்தராதின ॥8॥**

**கோகோவர பெரஸி க்ருஷ்ண வ்ரஜகே தெரளலு ஈ-**
**நாககமனெயர்ஹெஜ்ஜெ முந்தக்கேளதிரலு**
**யோகித்யேய விஶ்வனாதனவர மன்னிஸி போக-**
**லாக நாரியர் தம்ம தம்ம வாட ஹொந்தலு ॥9॥**

**யஜ்ஞ தீக்ஷி முனிகளவர பாவவரிதரு தம்ம-**
**அஜ்ஞ வ்ருத்தியன்னு நெனெது கின்னராதரு**
**யஜ்ஞேஶ்வரரிகீஶ்வரனவஜ்ஞ மாடித ஆன-**
**பிஜ்ஞராவு நம்ம கர்ம திகதிகெந்தரு ॥10॥**

**தம்ம ஹெங்கள ஸுக்ருதக்கே ஒப்பிகொண்டரு இன்னு-**
**நம்ம ஜ்ஞானயோக தபவு ஸுடுஸுடெந்தரு**
**ப்ராஹ்மணரு பஶ்வாத்தாபராகி நுடிதரு பூர்ண-**
**ப்ரஹ்ம ப்ரஸன்வெங்கடக்ருஷ்ணன ஒலிஸிகொண்டரு ॥11॥**

ஹே பலசாலியே கேள். ஹே பலராமனே, ஹே ராமனே, துஷ்டர்களை அழிப்பவனான ஸ்ரீகிருஷ்ணனே கேள். பூர்ணகாமனே. நாங்கள் பசி, தாகத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறோம். இதனை நீயே பரிஹரிக்க வேண்டும் என்று அந்த கோவளர்கள் (கோபாலகர்கள்) ஸ்ரீகிருஷ்ணனிடம் வேண்டிக் கொண்டனர். || 1

இவ்வாறான தோழர்களின் வேண்டுகோளை கேட்டு, ஸ்ரீகிருஷ்ணன், கருணைக் கடல், தான் துக்கங்களை போக்குபவன் என்பதை நிரூபித்தான். அருகில் இருக்கும் யாகசாலையில் ஒரு நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் அங்கு போய், யாகம் செய்பவர்களிடம், அன்னம், தண்ணீர் ஆகியவற்றை கேளுங்கள் என்று அவர்களை அங்கு அனுப்பினான். ||2

யஜ்ஞபதியான ஸ்ரீகிருஷ்ணனின் ஆணையின் பேரில், தோழர்கள் அனைவரும் அந்த யாகம் நடக்கும் இடத்திற்குச் சென்று, யாகம் செய்பவர்களிடம், பசியை போக்கிக் கொள்வதற்காக, மிகவும் வினயத்துடன், அன்னம் வேண்டினர். ஆனால், அவர்களோ, (மோக்ஷத்தை விரும்பாமல்) ஸ்வர்க்கத்தை மட்டுமே விரும்பி அதன்படி செயல்களை செய்பவர்களான அவர்கள், தலைக்கு மதம் ஏறியவர்களாக, மரியாதையின்றி, அந்த சிறுவர்களிடம் (உணவு இல்லை) என்று கர்ஜித்தனர். ||3

உணவு அளிப்பதற்கான காலம் இது இல்லை என்று அந்த நாத்திகர்கள் கூறினர். அதைக் கேட்டு, கோபாலகர்கள் திரும்பி வந்து ஸ்ரீஹரியிடம் அதைக் கூறினர். ஸ்ரீகிருஷ்ணனோ, நீங்கள் மறுபடி அந்த யாகசாலைக்குச் செல்லுங்கள். இந்த முறை, புருஷர்களிடம் சென்று கேட்காமல், பெண்களிடம் சென்று அன்னம் கேளுங்கள் - என்றான். ||4

கிருஷ்ணனின் ஆணைப்படியே அவர்களும் சென்று பெண்களிடம் அன்னத்தைக் கேட்க, அந்தப் பெண்களோ, மகிழ்ச்சி நிறைந்த மனதுடன், ஸ்ரீகிருஷ்ணனை சந்திக்கும் ஆசையில், சுவையான அன்னம், பக்ஷ்ய, பாயஸ, நெய், தயிர், ஏராளமான காய்கறிகள், அப்பளம், கூட்டு, பால் மற்றும் அனைத்து வித உணவுகளையும்... ||5

வெவ்வேறு வகையான தட்டுகளில், பாத்திரங்களில் நிரப்பிக் கொண்டு, சந்த்ரனைப் போல ஒளிபொருந்திய முகம் கொண்ட அந்தப் பெண்கள், ஸ்ரீஹரி இருக்கும் இடத்திற்கு வந்தனர். தம் கணவர்கள், மக்கள், நண்பர்கள் என அனைவரையும் விட்டு, ஸ்ரீ புண்டரீகனின் கண்கள், பாதங்கள் ஆகியவற்றிலேயே தங்களின் மனதை வைத்தவர்களாக (அவர்கள் புறப்பட்டு வந்தனர்). ||6

ப்ராஹ்மண குல பெண்களான (ரிஷி பத்னியர்) அவர்கள், அறுசுவை நிறைந்த அந்த உணவினைக் கொண்டு வந்து கொடுத்து, ஸ்ரீகிருஷ்ணனை வணங்க, பரப்ரஹ்மனான ஸ்ரீகிருஷ்ணன், தன்னுடைய தோழர்களுடன் சேர்ந்து, அவற்றை உண்டான். அவன் கருணாளு. அந்த ப்ராஹ்மண பெண்களின் பக்தி ரஸத்தை அவன் ஏற்றுக் கொண்டான். அவர்களுக்கு, புருஷ ஸ்ரேஷ்டனான (புருஷோத்தமனான) ஸ்ரீகிருஷ்ணன், முக்தியையே கொடுத்தான். ||7.

இன்னொருவர் (ரிஷி பத்னி) வெளியே ஸ்ரீகிருஷ்ணனைப் பார்ப்பதற்கு அவளது கணவன் விடாததால், அவள், முக்திபதியான ஸ்ரீகிருஷ்ணனையே நினைத்தவாறு தன் ப்ராணனை விட்டாள். இங்கோ, யஜ்ஞ பத்னியர்கள், ஸ்ரீகிருஷ்ணனுக்கு அன்னம் அளித்து, ஸ்ரீகிருஷ்ணனின் குண கானங்களைப் பாடி, அந்த நாள் முழுக்க, பக்தி பரவசத்தில் இருந்தனர். ||8.

பிறகு, ஸ்ரீகிருஷ்ணன், பசுக்கள், கோபாலகர்கள் என அனைவரையும் அழைத்துக் கொண்டு மறுபடி தன் இருப்பிடத்திற்கு திரும்பி வர, இந்த ரிஷி பத்னியர்கள் அவனை விட்டு பிரிவதற்கு மனம் வராமல் இருந்தனர். யோகிகளால் அடையப்படுபவனான ஸ்ரீகிருஷ்ணன், விஸ்வநாதன், அவர்களுக்கு அருளி, திரும்பிப் போகுமாறு கூற, அந்தப் பெண்களும் தத்தம் வழிகளை பார்த்து கொண்டு, தங்களின் இருப்பிடத்திற்கு சென்றனர். ||9.

யஜ்ஞ தீக்ஷையை கொண்டிருந்த முனிவர்கள், அந்தப் பெண்களின் மனதினை அறிந்தனர். தமது அஜ்ஞான வ்ருத்தியை நினைத்து, துன்பப்பட்டனர். யஜ்ஞேஸ்வரனான ஈஸ்வரனுக்கு அவமானம் செய்த அறிவீலிகள் நாங்கள் செய்த கர்மங்களுக்கு திக்காரம் ஆகட்டும் என்றனர் (தங்கள் செயல்களை தாமே இகழ்ந்து கொண்டனர் / கண்டனம் தெரிவித்துக் கொண்டனர்). ||10

தம் மனைவியரின் ஸுக்ருதத்தினை (புண்யத்தினை) நினைத்து மகிழ்ந்தனர். இன்னும் நமது, ஜ்ஞான, யோக, தவம் இன்னும் அதிகரிக்க வேண்டும் என்றனர். அந்த ப்ராஹ்மணர்கள் தங்கள் செயல்களுக்கு பச்சாதாபம் கொண்டு, பூர்ண ப்ரஹ்மனான, ஸ்ரீப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணனை துதிக்கத் துவங்கினர். ||11.

***

**36. கோவர்தனநோத்தார**
**ராக :பந்தாரவ தாள :அட்ட**

**நித்யோத்ஸவ புண்யஸங்குல நந்தகோகுல நந்தபுத்ரன லீலா**
**ஸ்தோத்ரவ மாள்பர்கெ கடெயில்ல ஸேஷிகளவல்ல துஷ்டதைத்ய ஹ்ருத்யூல॥ப॥**

**ப்ருத்யதேவான்வயப்ரதிபால வேணுகோபால விக்ரமத்ரயஶீல**
**முக்தாமுக்தாமரஜனத்யேய முனிகுலகேய॥1॥**

**கோஷ்டத ஜனரெல்ல ஒந்தின தேவேந்த்ரன அப்ததுஷ்டிகுத்ஸவதி**
**ம்ருஷ்டான்னபான ஸித்தவ மாடெ இத்தத்தோட்யாடெ ஶ்ரீக்ருஷ்ண நிந்திஸித**
**இஷ்டார்த்தவீவ கோவர்தன கிரிவ்ருத்தனு ஈதகிஷ்டு பூஜெயனு**
**ஶிஷ்டரு மாட்யெந்தாஜ்ஞாபிஸித புத்திகலிஸித கிரிகிட்டு உணிஸித**
**முக்தாமுக்தாமரஜனத்யேய முனிகுலகேய॥2॥**

**பஹுகுணோபேதான்னவுண்டனு குடலிங்கனு ஆ மஹேந்த்ர பொக்கனு**
**மஹாவிஸ்வதத்வவ தோர்தனா ஜனார்தன கண்ட ஸஹஸ்ராக்ஷ இதனு**
**பஹுகோப தாள்வனு கனமொத்தகாஜ்ஞெயனித்த ஸப்தாஹ மளெகரெத**
**ஶ்ரீஹரியெ க்ருஷ்ணனெம்புது மரெத ஐஸ்வர்யோன்மத்த ப்ரளயதனினியிந்த**
**முக்தாமுக்தாமரஜனத்யேய முனிகுலகேய॥3॥**

**ஆக்ரந்திஸித ப்ராணிகளன்னெல்ல நோடி ஸிரினல்ல பராக்ரமஶீல**
**நக்கு ஸத்கரபல்லவதிந்த கிரியெத்தித சிக்க மக்களுசீலீந்த்ர**
**நக்கத்தாடுவந்தேள்தின மத்தஸூதன தன்ன ஒக்கலுளுஹித**
**அக்கரதி தீனவத்ஸல ஜிதகளஜால இந்த்ரனுக்கனு முரித**
**முக்தாமுக்தாமரஜனத்யேய முனிகுலகேய॥4॥**

**ஆரொந்தினிந்த்ர பர்மளெகரெத ஹரியெல்லர ஹொரெத நித்யபூர்யன்னபான**
**சாரு ஶய்யாஸனவித்தனு விஸ்வகர்தனு ஶ்ரீநாராயணனு**
**ஸாரித ஸஜ்ஜனரனு காவ பொம்மாத்யர தேவ ஸாஸிரனயனனு**
**ஶ்ரீரமணன மஹிமே நோடித மைய்யோடாடித இளெயஸாரி ஸ்துதிஸித**
**முக்தாமுக்தாமரஜனத்யேய முனிகுலகேய॥5॥**

**ப்ரியோக்திகள ரசனெயிந்த உபநிஷதிந்த ஸாதுப்ரியகோவிந்த**
**நாயேனனரியெ நின்னவனெந்த தன்ன ஸலஹெந்த விதிவாயு பவாத்யமர**
**நாயக ஜனகெல்ல குரு நீனு பாலக நானு ஜகன்னியாமகனு**
**நீயாகள காவ பகெ ஹேளோ மஹாதயாளோ என்னய தப்புதாளோ**
**முக்தாமுக்தாமரஜனத்யேய முனிகுலகேய॥6॥**

**வேதக்கெ நிலுகத குணவாரிதி விஸ்வக்கேகாதி வேதோதரஜனக**
**ஆதார போஷக ஶிக்ஷக மோக்ஷதாயக நின்ன ஸத்ருஶராரில்ல**
**அதிகர்காலத்ரயதல்லில்ல லக்ஷ்மிய நல்ல நின்ன ஹொரதாரில்ல**
**ஈ தத்த ஸிரியிந்த உக்கிதெ மதஸொக்கிதெ பந்து பாதக்கெரிகிதெ**
**முக்தாமுக்தாமரஜனத்யேய முனிகுலகேய॥7॥**

**க்ஷமிஸென்னவகுண தயமாடை க்ருபெயலி நோடை பாதகமலவா ஶ்யைஸிதே**
**குமதி நின்னவரனு கெடிஸிதே கேடனெணிஸிதேனெந்து அமரேந்த்ர துதிஸி**
**நமிஸி நமிஸி தா நுடியலு க்ருஷ்ண தயாளு தா க்ஷமிஸி நுடிதனு**
**அமரேஶ நின்னெர்ச்சனெ கெடிஸிதே மதவிளிஸிதே இன்னு ப்ரமெ பேடேச்சரவு**
**முக்தாமுக்தாமரஜனத்யேய முனிகுலகேய॥8॥**

**ஸுரபி பயோதர தொரெதளு மளெகரெதளு ஶ்ரீஹரிகபிஷேக**
**பரம பகுதியிந்தெரெதளு ஸ்துதி மாட்தளு நமிஸி ஸுரபதியொடனெ**
**ஸுரலோககைதிதள் மானியு ஹவிர்தானியு ஈ ஹருஷவாரிதியு வரகோகுலஸ்தர**
**ஸுகிஸிது நித்ய நலிஸிது ஶ்ரீபரஸன்வெங்கட தயதி**
**முக்தாமுக்தாமரஜனத்யேய முனிகுலகேய ll9ll**

நித்யோத்ஸவம் செய்து கொள்பவன். புண்யங்களின் இருப்பிடம். நந்த கோகுலத்தில் நந்தனின் புத்ரனான ஶ்ரீகிருஷ்ணனின் லீலைகளைக் குறித்து அவனை ஸ்தோத்ரம் செய்பவர்களுக்கு மரணம் இல்லை. புனர்ஜென்மம் இல்லை. ஆனால் துஷ்டர்களுக்கு, அவன் லீலைகளைக் கேட்டாலே, அவர்கள் மனதில் சூலம் கொண்டு குத்தியதைப் போல இருக்கிறது. அவனையே அனுசரித்துக் கொண்டிருக்கும் பக்தர்களை காப்பவன், வேணுகோபாலன், த்ரிவிக்ரம என்று பெயர் பெற்றவன், முக்தர்கள், அமுக்தர்கள், தேவர்கள் ஆகியோர்களால் வணங்கப்படுபவன், முனிவர்களால் அடையப்படுபவன். ||1

அந்த ஊர் மக்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரு நாள், தேவேந்த்ரனை மகிழ்விப்பதற்காக, அவனுடைய உத்ஸவத்திற்காக, சுவையான உணவுகள், பானங்கள் ஆகியவற்றை தயார் செய்து, பரபரப்பாக அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருக்க, ஶ்ரீகிருஷ்ணன் அவர்களை திட்டினான். நம் அனைத்து இஷ்டார்த்தங்களையும் அளிப்பது - கோவர்த்தன என்பதான இந்த மலையே ஆகும். இந்த அனைத்து பூஜையையும் நீங்கள் இவனுக்கே செய்யுங்கள் என்று ஆணையிட்டான். அவர்களுக்கு புத்தி புகட்டினான். அந்த உணவுகளை அந்த மலைக்கே சமர்ப்பணம் செய்து உண்ணச் செய்தான். அவனே, முக்தர்கள், அமுக்தர்கள், தேவர்கள் ஆகியோர்களால் வணங்கப்படுபவன், முனிவர்களால் அடையப்படுபவன். ||2

பல நற்குணங்களைக் கொண்டவனான ஶ்ரீகிருஷ்னன், அந்த அன்னத்தை உண்டான். அனைவரிலும் ரகசியமாக அந்தர்யாமியாக இருப்பவன். அவன் அந்த மலையின் அபிமானி தேவதையிலும் அவனே இருக்கிறான். மஹா விஸ்வத்தின் தத்வத்தை அவன் அனைவருக்கும் காட்டிக் கொடுக்கிறான். இத்தகைய செயல்களை, ஆயிரம் கண்களைக் கொண்ட அந்த தேவேந்த்ரன் பார்த்தான். வெகு கோபம் கொண்டான். பெரும் மழையை பெய்யுமாறு ஆணையிட்டான். ஒரு வாரம் வரை கடும் மழையை பெய்வித்தான். ஶ்ரீஹரியே ஶ்ரீகிருஷ்ணனான வந்திருக்கிறான் என்பதை மறந்தான். தன் செல்வங்களால் தன் நிலையை மறந்து கர்வம் கொண்டான். இதுவே ப்ரளய காலத்து மழை / வெள்ளம் என்றான். ஶ்ரீகிருஷ்ணனோ, முக்தர்கள், அமுக்தர்கள், தேவர்கள் ஆகியோர்களால் வணங்கப்படுபவன், முனிவர்களால் அடையப்படுபவன். ||3

கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அனைத்து ப்ராணிகளையும் ஶ்ரீதேவியின் தலைவன் ஶ்ரீகிருஷ்ணன் பார்த்தான். அவன் அபாரமான வீரம் கொண்டவன். இந்த்ரனின் இந்த செயலைக் கண்டு சிரித்தவாறு, தன்னுடைய கைகளால் அந்த மலையை தூக்கினான். சிறிய குழந்தைகள் நாய்க்குடையை அனாயாசமாக தூக்குவதைப் போல ஶ்ரீகிருஷ்ணன் மலையை தூக்கினான். சிரித்தவாறு, ஒரு விளையாட்டினைப் போல, மதுஸூதனன், தன்னுடைய மக்களை (தன்னை சேர்ந்தவர்களை) மழையிலிருந்து காப்பாற்றினான். பக்தர்களை காப்பவனான ஶ்ரீகிருஷ்ணன், அனைவரின் மேல் உள்ள அக்கறையினால், எதிரிகளை சுலபமாக வெல்பவன், இந்த்ரனின் கர்வத்தை முறித்தான். அவனே முக்தர்கள், அமுக்தர்கள், தேவர்கள் ஆகியோர்களால் வணங்கப்படுபவன், முனிவர்களால் அடையப்படுபவன். ||4

இவ்வாறு தொடர்ந்து ஏழு நாட்களுக்கு இந்த்ரன் கடும் மழையை பொழிந்தான். ஹரியோ அனைவரையும் அந்த மழையிலிருந்து காத்தான். தினமும் அனைவருக்கும் சிறந்த அன்ன, பானங்கள் வழங்கப்பட்டன. அழகான படுக்கை, ஆசனங்கள் ஆகியவற்றை வழங்கினான். அவனே விஸ்வ கர்தன். ஶ்ரீ நாராயணன். தன்னை சரணடைந்த மக்களை / ஸஜ்ஜனர்களை அவன் காக்கிறான். சதுர்முக ப்ரஹ்மதேவரே முதலான அனைவருக்கும் தேவன். ஆயிரம் கண்களைக் கொண்டவனான இந்த்ரன், இத்தகைய ஶ்ரீரமணனின் மகிமையைக் கண்டு உடல் நடுங்கினான். பூமியில் வந்து இறங்கி ஶ்ரீகிருஷ்ணனை துதித்தான். அவனே முக்தர்கள், அமுக்தர்கள், தேவர்கள் ஆகியோர்களால் வணங்கப்படுபவன், முனிவர்களால் அடையப்படுபவன். ||5

பகவந்தனுக்கு ப்ரியமான வார்த்தைகளை இந்த்ரன் பேசினான். உபநிஷத்தில் சொல்லப்பட்ட / புகழப்பட்ட ஸாதுக்களின் ப்ரியனான கோவிந்தனிடம் வந்து, நான் எதுவும் அறியேன். நான் உன்னுடையவன். என்னை காப்பாற்ற வேண்டும் என்றான் இந்த்ரன். ப்ரஹ்ம தேவர், வாயுதேவர், ருத்ராதி தேவர்கள் என அனைவருக்கும் நீயே குரு. நான் ஒரு பாலகன். இந்த உலகத்தையே காப்பவன் நீ. இந்த பசுக்களை / மக்களை காக்கும் விதத்தைப் பற்றி சொல்வாயாக. மஹாதயாளோ. என்னுடைய தவறினை மன்னித்து அருள்வாயாக. நீயே முக்தர்கள், அமுக்தர்கள், தேவர்கள் ஆகியோர்களால் வணங்கப்படுபவன், முனிவர்களால் அடையப்படுபவன். ||6

வேதங்களாலும் முழுமையாக வர்ணிக்க முடியாத, நற்குணங்களின் கடல். விஶ்வத்திற்கு நீயே ஆதியாக இருக்கிறாய். சதுர்முக ப்ரஹ்மதேவருக்கு நீயே தந்தை. அனைவருக்கும் நீயே ஆதாரமாக, போஷகனாக, தண்டனை அளிப்பவனாக, மோக்ஷத்தை அளிப்பவனாக இருக்கிறாய். உனக்கு சமம் என்றோ, உன்னை ஒப்பிட்டுக் கூறவும் வேறு யாரும் இல்லை. அப்படியானவர்கள் மூன்று காலங்களிலும் எப்போதும் இல்லை. லகுமிதேவியின் தலைவனே. உன்னைத் தவிர மேற்சொன்ன லக்ஷணங்களைக் கொண்டவர்கள் வேறு யாரும் இல்லை. நீயே எனக்கு அளித்த செல்வங்களால் நான் மயங்கினேன். கர்வம் கொண்டேன். இப்போது தவறை உணர்ந்து உன் பாதங்களில் வந்து விழுந்து வணங்குகிறேன். நீயே முக்தர்கள், அமுக்தர்கள், தேவர்கள் ஆகியோர்களால் வணங்கப்படுபவன், முனிவர்களால் அடையப்படுபவன். ||7

என்னுடைய அவகுணங்களை மன்னிப்பாயாக. கருணை காட்டுவாயாக. க்ருபா த்ருஷ்டியினால் என்னை பார்ப்பாயாக. உன்னுடைய பாத கமலங்களை நான் வணங்குகிறேன். என்னுடைய கெட்ட புத்தியினால், உன்னுடைய மக்களை நான் துன்புறுத்தினேன். அவர்களுக்கு கெட்டதையே நினைத்தேன் என்று தேவேந்த்ரன் ஶ்ரீகிருஷ்ணனை துதித்து, திரும்பத்திரும்ப வணங்கி, தான் இவ்வாறு கூறினான். அப்போது தயாளுவான ஶ்ரீகிருஷ்ணன், தான் அவனை மன்னித்து இவ்வாறு கூறுகிறான். தேவேந்த்ரனே. உன்னுடைய பூஜையை நான் கெடுத்தேன். உன்னுடைய கர்வத்தை நான் குறைத்தேன். இனி இந்த ப்ரமை உனக்கு வேண்டாம். எச்சரிக்கையுடன் இருக்கவும் என்றான். அவனே முக்தர்கள், அமுக்தர்கள், தேவர்கள் ஆகியோர்களால் வணங்கப்படுபவன், முனிவர்களால் அடையப்படுபவன். ||8

காமதேனு பசுவானது, பால் மழையை பொழிந்தாள். ஶ்ரீஹரிக்கு, பரம பக்தியினால் பால் அபிஷேகம் செய்தாள். ஸ்தோத்ரம் செய்தாள். தேவேந்த்ரனுடன் சேர்ந்து வணங்கினாள். பின் தேவலோகத்திற்கு திரும்பிச் சென்றாள். இந்த காமதேனுவிடமிருந்தே யக்ஞத்திற்குத் தேவையான அனைத்து பொருட்களும் உற்பத்தி ஆகின்றன. ஶ்ரீப்ரஸன்ன வெங்கடனின் கருணையால், இந்த மகிழ்ச்சிக் கடலானது, சிறந்ததான கோகுலத்தில் நிலைத்து, அனைவருக்கும் சுகத்தை அளித்தது. ஶ்ரீகிருஷ்ணனே, முக்தர்கள், அமுக்தர்கள், தேவர்கள் ஆகியோர்களால் வணங்கப்படுபவன், முனிவர்களால் அடையப்படுபவன். ||9

***

**37. வருணபாஶ பந்தமோசன**
**ராக :தோடி தாள :ஏகதாள**

**ஹரிப்ரவணரு கோபாலகரு ஶ்ரீ-**
**ஹரிகதாம்ருத வ்ரதஸ்துதிரதரு ॥ப ॥**

**காம்புது கேள்வுது கொம்புது கொடுவுது**
**ஸம்பாஷண ப்ராண நடெ ஶ்வாஸ**
**ஸம்ப்ரம மனோரதெல்ல்ய வ்யஸ்தாத்ரய**
**அம்புஜனாபனிர்கர்பிரு ॥1 ॥**

**கரணத்ரயவு ஸுக்ருத துஷ்க்ருத பந்தகவு**
**பரமபதவு ஸத்தாத்ரயவு**
**ஹரியாதீனவு ஸிரிஸரஸிஜபவ**
**ஹரஸுரர் ஹரிதாஸரெனுதிஹரு ॥2 ॥**

கோதோஹன ரவ்யுதய ததிமந்தன
மோதக்ருஹத க்ருத்யாதியலி
ஸ்ரீதர பலபத்ரரௌதார்ய விக்ரம
ஆதரதலி நித்ய பாடுவரு ॥3॥

ஹரிதின நிரஶன நிர்ஜலவ்ரததலி
ஹரிஜாகர மாடி வ்ரஜநாத
வர யமுனாஸ்நானவ மாடுதிரலு
வருணதூதரு கட்டிகொண்டொய்யலு ॥4॥

ஹே க்ருஷ்ண ராம எனுத கூகிதரு அ-
நேகார்த்த ஸ்வரதலி கோவளரு
ஸ்ரீக்ருஷ்ண கேளி வருணாலயக்கைதலு
ஸ்ரீகாந்தன கண்டு ப்ரணமிஸித ॥5॥

தவ பிதன்னரியதே தூதரு தந்தரு
பவஹர த்ராஹி த்ராஹி பாஹியெனுத
ஸ்யவஸித ஈ கன ஸவெயத தப்பு க்ஷமி-
ஸ்யவலோகிஸு நின்ன படனெந்த ॥6॥

இந்தென்ன ஜன்ம ஸபலவு ஸர்வஸித்தி
இந்திகே நின்ன பதவாரிஜவ
ஹொந்திதே நமிஸிதே மஹிமேயனரியதே
தந்தரு தந்தெய தந்தெ நமோ ॥7॥

பலு அபராதவ க்ஷமிஸு தயாநிதே
ஸலே நின்னய்யன க்ரஹிஸு ஹரே
ஸலஹென்னனு எந்து பஹள பகுதியிந்த
நளினபவேஶன பூஜிஸித ॥8॥

என்ன ஸம்சயவெல்ல தூரவு யதுபதே
தன்யனெனிஸிதெ தவார்ச்சனெயிம்
என்னுத புன:புன: ப்ரணமிஸி ரமேயர
ஸன்னுன ப்ரஸன்னீகரிஸிதனு ॥9॥

அப்பங்கெ தானபயவனித்து ஸ்ரீபதி
அப்பனிகா ஶ்சர்ய் தோர்தஹரி
ஒப்புவபந்து பளககெல்ல ஹேளித
தப்பதே நந்தவ்ரஜகெ பந்து ॥10॥

அத்யானந்ததி நுடிதரு நின்ன மக
முக்தாமுக்தவந்திதசரண
நித்யானந்தன ஈஶ்வரத்வவ நாவ்
ப்ரத்யக்ஷ நோடிதெவெந்தவரு ॥11॥

தன்னிஶ்வரத்வத பகெயனு திளியபே-
கென்னுவ நிஜபக்த கோவளர
பின்னஹவாலிஸி ப்ரஹ்ம ஹ்ருததொளு
சென்னாகி முளுகிஸி தோரிதனு ॥12॥

அவித்யாகாம்ய கர்மவ மாடி பலுபலு
ஹேவதிம் ஸ்வர்கபவக்கைதுதிஹ
ப்ராவ்ருத்தர்ஹளியுவ மௌனிஜனஸ்தள
தேவ தோரித அபவர்கவனு ॥13॥

**அனந்த சந்தஸ்ஸுகளிந்த ஸ்துத்யனனு**
**ஆனந்த ஜ்ஞானமய ரூபனனு**
**ஆ நந்தகோவரானந்ததி கண்டரு**
**ஆனந்த யோகமயனாஸ்ரிதரு ॥14॥**

**அத்யத்யுத மஹிமாதிஶயன க்ருஷ்ண**
**ஸத்யேஶ பவ விபாஹிபரிம் நுதனு**
**நித்யானந்த ப்ரஸன்வேங்கடக்ருஷ்ண-**
**பக்தரு ஜீவன்முக்தரவரு ॥15॥**

கோபாலகர்கள் ஹரிபக்தர்கள். ஸ்ரீஹரிகதாம்ருதம் என்னும் விரதத்தை ஸ்தோத்ரம் செய்கிறார்கள். ||ப

தாங்கள் காண்பது, கேட்பது, கொள்வது, கொடுப்பது, பேச்சு, மூச்சு, நடை, ஶ்வாஸ, ஸம்ப்ரம, விருப்பங்கள், என அவர்கள் தங்களின் மூன்று நிலைகளிலும் (ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி) செய்வதை ஸ்ரீஹரி பத்மனாபனுக்கே அர்ப்பணம் செய்கிறார்கள். || 1

மனோ, வாக், காய என்பதான மூன்று கரணங்களும் நம்மை புண்ய, பாவங்களில் சிக்கச் செய்கின்றன. ஸ்வரூப ஸத்தா, ப்ரவ்ருத்தி ஸத்தா, ப்ரமிதி ஸத்தா என்பதான மூன்று நிலைகளே பரமபதம் ஆகும். இவை அனைத்தும் ஸ்ரீஹரியின் அதீனமே. ஸ்ரீதேவி, ப்ரஹ்ம தேவர், ருத்ரதேவரே முதலான தேவர்கள் அனைவரும் ஸ்ரீஹரியின் தாஸர்கள் எனப்படுகிறார்கள். || 2

பால் கறக்கும்போது, ஸூர்ய உதய காலத்தில், தயிர் கடையும்போது, மகிழ்ச்சியுடன் வீட்டில் அனைத்து செயல்களையும் செய்யும்போதும், ஸ்ரீதரனின், பலபத்ரனின் கருணை, வீரம், ஆகியவற்றை மிகவும் பக்தியுடன் எப்போதும் பாடிக் கொண்டிருப்பார்கள். || 3

ஹரிதினமான ஏகாதசியன்று, நிர்ஜல வ்ரதங்களை செய்து, அன்றிரவு ஜாகரணை செய்து, நந்தகோகுலத்தின் தலைவனான நந்தகோபன், சிறந்ததான யமுனா ஸ்னானத்தை செய்து கொண்டிருக்கையில், வருண தூதர்கள் அவரை கட்டி இழுத்துச் சென்றார்கள். || 4

ஹே கிருஷ்ணா, ராமா என்றவாறு அவர் கூவினர். அனேக ஸ்வரங்களில் கோபாலகர்கள் கூச்சலிட்டனர். இதனை கேட்ட ஸ்ரீகிருஷ்ணன் வருணனின் இடத்திற்கு சென்றான். வருணனோ ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டு வணங்கினான். ||5

தங்களின் தந்தை என்று அறியாமல், தூதர்கள் அவரை இங்கு கொண்டு வந்தார்கள். ஸம்ஸார பந்தத்தை அறுப்பவனே, என்னை அருள்வாயாக. காப்பாற்றுவாயாக என்றவாறு வருணன் ஸ்ரீகிருஷ்ணனை வணங்கினான். இந்த பெரும் தவறினை மன்னித்து அருள்வாயாக. நான் உன்னுடைய சேவகன் - என்றான் வருணன். || 9

வருண லோகத்திற்கு இன்று நீ வந்ததால், என்னுடைய ஜென்மம் அர்த்தமுள்ளதாக ஆயிற்று. அனைத்து ஸித்தியும் எனக்கு ஆயிற்று. உன்னுடைய பாத கமலங்களை நான் இன்று வணங்கினேன். உன்னுடைய மகிமையை அறியாமல், தூதர்கள் உன் தந்தையை கொண்டு வந்தனர், என் தந்தையே, உனக்கு நமோ நமோ - என்றான். || 7

நாங்கள் செய்த மிகப்பெரிய தவறினை மன்னிப்பாயாக ஸ்ரீஹரியே. உன்னுடைய தந்தையை அழைத்துப் போவாயாக. என்னை அருள்வாயாக என்று மிகவும் பக்தியுடன், ப்ரஹ்ம தேவரின் தந்தையை வருணன் பூஜித்தான். ||8

என்னுடைய சந்தேகங்கள் அனைத்தும் தூர விலகின. யதுபதியே. உன்னை அர்ச்சனை செய்ததால், நான் தன்யன் ஆனேன். என்றவாறு திரும்பத்திரும்ப வருணன் ஸ்ரீகிருஷ்ணனை வணங்கி, ஸ்ரீரமாதேவியின் தலைவனான அவனை மகிழ்வித்தான். || 9

தன் தந்தைக்கு அபயம் அளித்து, ஸ்ரீபதியானவன் தன் தந்தைக்கு வியப்பினை அளித்தான். நடந்த விஷயங்களை நந்தகோகுலத்திற்கு வந்து, தன் உற்றார் உறவினர்கள் அனைவரிடம் கூறினான் நந்தகோபன். || 10

இதனைக் கேட்ட அனைவரும், மிகவும் மகிழ்ச்சியுடன் இவ்வாறு கூறினார்கள். உன்னுடைய மகன், முக்தர்கள், அமுக்தர்கள் என அனைவருமே வணங்குவதான பாதங்களைக் கொண்டவன். நித்யானந்தனின், ஈஸ்வர சக்தியினை நாம் இன்று ப்ரத்யக்ஷமாக பார்த்திருக்கிறோம் என்றனர். || 11

தன்னுடைய ஈஸ்வர சக்தியை நன்றாக அறிய வேண்டும் என்று நினைக்கும் அத்யந்த பக்தர்களின் விருப்பத்தை ஏற்று, ப்ரஹ்மனானவன் அந்த பக்தரின் ஹ்ருதயத்தில் நன்றாக தெரியுமாறு தன்னை காட்டிக் கொண்டான். || 12

தனக்கு இருக்கும் அவித்யாவினால், காம்ய கர்மங்களை செய்து, அதன் பலன்களால், திரும்பத் திரும்ப ஸ்வர்க்க மற்றும் ஸம்ஸாரத்திற்கு வந்து போய்க் கொண்டிருக்க, அத்தகையவர்களுக்கு, முனிவர்கள் இருக்கும் இடமான, அறிஞர்கள் இருக்கும் இடமான மோக்ஷத்தை, ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுக்கு காட்டினான். || 13

அனந்த விதமான சந்தஸ்களால் வணங்கியவர்களுக்கு, தன்னுடைய ஆனந்த, ஞானமய ரூபத்தை காட்டினான் ஸ்ரீகிருஷ்ணன். அதனை நந்தகோபாலகர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் கண்டனர். அவர்கள் அனைவரும் ஆனந்த யோகமயனை வணங்குபவர்களே ஆவர். (ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுக்கு வைகுண்ட லோகத்தையே காட்டிக் கொடுக்கிறான்). || 14

அத்யத்புதமான மஹிமோபேதனானவன் ஸ்ரீகிருஷ்ணன். சதுர்முக ப்ரஹ்மதேவர், கருட ஶேஷ ருத்ராதிகளால் வணங்கப்படுபவன். அவன் நித்யானந்தன். அத்தகைய ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணனின் பக்தர்கள் ஜீவன் முக்தர்களே ஆகிறார்கள். || 15

***

**38. ராஸக்ரீடே**
**ராக :கேதாரகோள தாள :ஏகதாள [தாதரா]**

**காமனய்யன காமினியர காமுக பக்தியே முக்தி**
**ஸோமகுலாப்தி ஸோம நேரதஶாமன ப்ரேமபாத்ரரு ॥ப॥**

**முக்தாங்கியள முகவனு ப்ரிய ஸ்நிக்த ஸுஹாஸதலி சும்பிஸுவந்தே**
**துர்காப்திய ஜாதனுதயதலி ப்ராக் த்விக்வது ஸங்கம மெரெயலு**
**ஸுக்கியாயிது கோபாலகர வதுவர்ககெயெல்ல கப்புபில்லினவன ஸு-**
**மார்கணக்கெ மருளுகொண்டராகவர் உக்கட வேணுநாதக்கே ॥1॥**

**குஸும தருலதாக்ய ஶிஶுகளெஸெவ கரஸ்பர்ஶதிந்தலி**
**ஶஶியூ பராம்ருஶவ மாடி ஸுஸுகவீவ தெரதலி**
**பஸரிஸிதனு ஶீதகிரணகள் பிஸஜஸகன தாபவடகே**
**ஶிஶிரருதுவின யஶஸு வனதி ஶஶிமுகியரதெகெ இஸிது ॥2॥**

ஸ்ரீகரன வா (ஆ?)ருண குங்குமதிந்த லக்ஷ்மி முகவு ஒப்புவ தெரதி
ஸுகலானிதிய பிம்பவ வனதி ஸ்ரீக்ருஷ்ண கண்டு வேணுவனு
பேகாத வாமத்ருஶெயரிகோஸுகனேக மஞ்சுள ராகங்கள நுடிஸித
ஆ காந்தயராக கேளிதரு மாரஸாயகதி உருசித்தவேகதி ॥3॥

நூகி லஜ்ஜெயனு நடெதரெல்லரு ஸ்ரீகாந்தன்னோடகூடலாகி மனெ-
ய கெலஸவனு பிட்டு மோஹிஸிதர் மக்களு ஸ்வகிய புருஷர
ஆகள கரெஸி வ்ருஷகெ முருவ ஹாகிஶிஶுகளாக்ரோஶவ கேளதே
தோகரெந்தளதீ மானவெத்திகொண்டு ராகாசந்த்ராஸ்யெயரு நடெதரு ॥4॥

கரெத ஹால பிஸுடு தம்மய தரளர்கே ஸ்வன பூர்ண கொடதே
பரிவேஷணவ மாடுத பிட்டரு ஹரிய கொளல த்வனிகேளி ॥5॥

கரவலயவ காலிகிட்டுகண்டு சரணபூஷண கைகெ ஸிக்ஷிஸி
கரணகுண்டல நாஸதளிட்டு பரிய முகுதி கிவிகிட்டு
கொரள மாலெயனெ கட்டிகெ ஸ்துதி கொரளிகெ காஞ்சீதாமவ ஹாகி
நெரெ நிவாரிஸுவரனு நூகி பரமபுருஷன்னெய்திதரு ||6

பவன தவன பிட்டு ஶிரிமாதவன பக்திநட்டு விரஹதா-
ஹவதி  நொந்து விஷ்ணு பாவுகெரவரு வேணுரவரஸ
ஸவிது ப்ரியவியோக துஸ்ஸஹ லவயுகவெந்து குணத்ரயங்கள
ஹவண முரிது ஜார பக்தி பாவதி அச்யுதன நெனெதரு ॥7॥

அவ்யக்தப்ரமேய குணணாப்தியு ஸுவ்யக்தமாடித காமினியர்கே ஸ்நேஹ
நவ்ய நவ்ய ஸுகவவர்க்கித்த நிர்லிப்த பாவ்யஜ்ஞானாத்ம மூருதிதேவ
திவ்ய ஜ்ஞானவு பக்திபரிதகோவர்கே திவ்ய ஜ்ஞானோபதேஶவனு மாடித
திவ்யஜனகுரு மோஹிஸிதனு காமவ்யதே உத்ரேகவாகுவந்தே ॥8॥

ஆ கோஷ்ட நாரியர நோடி முகுந்த ஈகாகமனவேகெந்த நிமகே
பேகராதா கோர ராத்ரிலி துஷ்டவிஹாரவு நாகாரிமத்யெயர்குசிதவல்ல
பேகதி நிம்மாப்தரு அரஸி காணதாகித்த கேத மாள்புதே அதர்மவு
ஸாகி பந்துதகே கண்டிரி நம்மனு பூகொஞ்சலு தருலதெகள ॥9॥

ரம்யவனவு பல்லவ ஶாகெ குஞ்ஜ தர்மாநுஜாவேக ஸௌந்தர்ய நோடி
நிம்ம முக பாலகார்ய தீபதலியெ நிம்மாள்வத்தே யாவ புருஷர
ஸம்மதவல்ல உபேக்ஷேயு ஸ்த்ரீயர ஜன்மக்கெ வர்யர ஸேவேயே முக்யவு
தர்மவல்லன்யபுருஷர ஸேவேயு ஸக்ய ஸம்பாஷண ஸஹவாஸவு ॥10॥

நன்னீக்ஷண ஸ்ரவண கீர்தனெ த்யானத புண்யவே அதிகவா மத் ஸேவகே
ஸன்னிகர்ஷண பலவதிகவல்ல இன்னைதிரெந்த்ஹரி நுடிதரே
கன்யெயரிகெ ஹ்ருத்தாபவடரிது இன்னேக்கீ ஜன்மவெனுதார்த்தஸ்வனதி
சின்மய ஹரே வ்யர்தவாயிது எந்து வாக் ஸன்னிரோதராகி தலேபாகி ॥11॥

கண்ணிலி அஸ்ரு தும்பி பந்து தாரிட்டவு பொன்கொடமொலெய கந்தானுலேபத
ஹொன்ன குப்பஸவ தோயிஸிதவிளெய கன்யேருங்குடதி லேகிஸுத்த
கன்யெராந்தகத நுடிய கேளிதரின்னேனு ப்ரியனப்ரியகர வாக்-
வன்னு நுடிதனெந்து ரோதிஸி ஶிஷ்டரு ஸன்னகத்கத நுடியலிந்தெந்தரு ॥12॥

இஷ்டவல்லைகளந்ருஶம்ஸர மாது கஷ்டதி  நொந்தெவு ஸமஸ்த விஷய
பிட்டு பந்திஹேவு நின்னங்க்ரிமூலாவ முட்டிபெ பூஜிபெவெந்தெம்ம மனவு
க்ருஷ்ண நின்னுளிது அன்யாஸ்ரய காணேவு ஶிஷ்டரார்தன்பந்தோ கேளோ முமுக்ஷுர்கே
நிஷ்டே நிம்மல்லித்து ஸ்திதியஸ்திதிய கெட்டாஸெயேகின்னவரிகெ ॥13॥

**ஸ்த்ரீயர்கே தம்மபதியே ஸுஹ்ருத்ஸ்நேஹ நீ ஈவது தர்மவு நினெந்துது ஸத்ய**
**ப்ரேயரு நின்ன ஸம்பர்கதிந்தெல்லரு ப்ரியனு ஸர்வரிந்தெந்தரஸுத**
**ஸ்ரீயங்க்ரிய ஸ்நேஹ தோடகி பந்தேவு ப்ரியோத்தம நம்ம ஆஸே வ்ருதாமாடோ**
**தீயதர்மவு நிமகே ஸல்லது ஹ்ருதயதாபவாரக கேளோ ஸ்ரீஹரே ॥14॥**

**நிம்ம ஸ்ரீ பாதாப்ஜ பிட்டேளலொல்லவு நம்ம கால்களு முந்தகே தவாதர**
**தம்மருதவன்னு ஸேசிஸுவ மந்தஸ்மிதேக்ஷணலக்ஷணாகி**
**ஸந்மார்க்க வேணுநாதவனு கேளிஸு ரம்மணியரர்த பூரயிஸோ முக்குந்த**
**நிம்மங்க்ரிபத்மத விரஹஜாக்னிய ஶம்மனவனு மாடு ஸ்ரீபதே ॥15॥**

**நின்ன க்ருபாம்புதிலிந்தெம்ம நந்திஸு இன்னெம்முபேக்ஷிபேயாதரே ப்ராணவ**
**சின்மயாங்க்ரிகொப்பிவேவு நீனெ ஸாக்ஷி கன்யெ லகுமி நிம்ம ஹ்ருன்மந்திர-**
**வன்னாஸ்ரயிஸித்து த்ருப்தி இல்லதே ஹொன்ன ஸ்ரீ துளஸியாதளு ஸ்ரீபாத-**
**வன்னு பிடளு நாவெந்து பிடுவேவு தன்யவு வரஜனப்ரபோ ॥16॥**

**இந்தெம்ம நீகரிஸுவுது தர்மவே இந்திரேயரஸ மூலோக ஸுந்தர**
**எந்தெந்து ஸரிமிகிலில்லதச்யுத பந்தேவு தபஸியிந்தீக**
**ஹொந்திஸு கைய நம்முரோஜகளிகெ இந்திவரேக்ஷண ப்ரஸன்னவதன**
**எந்து ப்ரார்திஸிதரபலேயரு தயாஸிந்து முகுந்த ஸலஹெந்தரு ॥17॥**

**அந்து யோகேஶ்வரேஶ்வர தயாம்புதி இந்து முகேர ரமிஸித ஸ்வரமண**
**மந்தஸ்மிதேக்ஷணரோசியிந்தச்யுத இந்து பாமேயர மத்யதலி**
**சந்தாத வைஜயந்தி கொரளிந்த கோபேர வ்ருந்ததி ராஜீவ நீலோத்பல குஸும**
**கந்த மாருதநெடெ கானகேளி குந்தரதனெயரு நந்ததிந்த ॥18॥**

**காளிந்திகூல ப்ராஜத்வானங்களலி ஆ லோலநேத்ரர க்ரீடிஸி அல்லல்லி**
**மெல்லெதெகார்த்திர தோளலி தோளிட்டு பாள நர்மோக்தியிந்தலொப்பி**
**ஸ்ரீலோல ஹாஸோக்திகளிந்த கூடி கராள க்ரீடெயிந்த வாஸவ ஜகுளிஸி**
**மேலிட்டெடெ மொலெயல்லி லேகிஸித ஸாலு கரஜாக்ரகளிந்தலி ॥19॥**

**காமாக்னியிம் தப்தராமேயரிகெ பூர்ணகாம மன்னிஸிதரே மத்தராதரு**
**ப்ரேமாவலோகன பாக்யவுதிஸிது ஸோமபூர்ண ஸுமுகியரிகெ**
**ஸ்ரீ மாதவ தம்ம வஶ்யேனெந்தரிது வாமத்ருஶெயரு திளிதராக்ஷண**
**ஈ மஹாபராதவ கண்டு தேவேஶ தா மத்தே அப்ரத்யக்ஷனாதனு ॥20॥**

**ஸ்ரீ பூ துர்காலோல லீலாவிஶாலனு த்ரிபுவனேஸ்வர த்ரிபுவனாதிப**
**பூப்ருத ஸம்ப்ருத ஸன்னுத ஸ்ரீபத்மனாபனந்தானந்த பானுபா**
**பூபார ஸம்ஹாரபாரக்ருபாகர ஸ்வபாவ வைபவ ஜ்ஞானாநந்ததர**
**ஸ்ரீப்ருத் ப்ரஸன்னவேங்கடக்ருஷ்ண ஸர்வேஷ்ட ஶோபிஸிதனு வ்ரஜதி ॥21॥**

காமனின் தந்தையான ஸ்ரீஹரியின் மேல் இருப்பதான, கோபிகையர்களின் காமம் என்பதான பக்தியே அவர்களுக்கு முக்தி. சந்த்ர குலத்தில் உதித்த சந்திரனின், நீல மேக ஶ்யாமனின் ப்ரேமத்திற்கு அவர்கள் பாத்ரர் ஆனார்கள். || ப

தனக்கு ப்ரியமானவளின் முகத்தை, ப்ரியமானவன் மிகவும் மகிழ்ச்சியுடன் முத்தம் கொடுப்பது போல, பாற்கடலில் உதிப்பவனான சந்த்ரனின் உதயத்தில், அந்த சந்த்ரனின் கிரணங்கள் சென்று அனைத்து திசைகளிலும் பரவியது. இதனால் அனைத்து கோபாலகர்களுக்கும் மிகவும் ஆனந்தம் உண்டாயிற்று. அவர்கள் அனைவரும் மன்மதனின் அம்பிற்கு அடிபட்டவர்களைப் போல, மயக்கம் கொண்டனர். இவை அனைத்தும் ஸ்ரீகிருஷ்ணனின் தெளிவான வேணு நாதத்தினால் நடந்தன. || 1

மரம், செடி, கொடிகள் என்பதான அனைத்து குழந்தைகளுக்கும், சந்த்ரனின் ஸ்பர்ஶத்தினால் சக்தி கிடைக்கிறது. சுகம் கிடைக்கிறது. சந்த்ரன் தன்னுடைய தண்மையான கிரணங்களை அனைத்து

திசைகளிலும் பரப்பினான். அதுவரைக்கும், சூரியனின் தாபத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த அவை அனைத்திற்கும், இந்த சந்த்ரனின் உதவியால் சக்தி கிடைத்தது. இவ்வாறாக, ஶிஶிர ருதுவின் புகழ் அந்த வனத்தில், சந்த்ரனைப் போல ஒளி முகம் கொண்ட பெண்களின் இதயத்தில் வந்து இறங்கியது. (அதாவது அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று). || 2

நன்கு சிவப்பாக இருக்கும் குங்கும வர்ணத்தினால், ஸ்ரீலக்ஷ்மி தேவியின் முகம் சிவப்பாக ஒளிர்வதைப் போல, சந்த்ரனின் ஒளியினால் அந்த வனமே ஒளிர்ந்தது. இந்தக் காட்சியைக் கண்டு ஸ்ரீகிருஷ்ணன் தன் புல்லாங்குழலை எடுத்து இசைக்க விரும்பினான். அழகான கண்களைக் கொண்ட அந்த பெண்களுக்காக, அழகான பல ராகங்களை தான் இசைத்தான். அந்தப் பெண்களும், அந்த இசையின் வேகம் வந்து அவர்களை தாக்கியதில், மன்மதனின் பாணத்தில் அடிபட்டவாறு, அந்த இசையை அவர்கள் கேட்டனர். || 3

அந்தப் பெண்கள் அனைவரும் தங்களின் வெட்கத்தை விட்டு, ஸ்ரீகாந்தனுடன் வந்து சேர்வதற்காக, தங்களின் வீட்டு வேலையை விட்டு, தாங்கள் விரும்பிய மக்கள், தம் புருஷர்கள், பசுக்கள் ஆகியவற்றை விட்டுச் சென்றனர். அழுது கொண்டிருந்த குழந்தைகளின் அழுகையை கேட்காமல், எதைப் பற்றியும் கவலைப்படாமல், அனைவரும் ஓடோடி ஸ்ரீகிருஷ்ணனிடம் சென்றனர். || 4

சிலர் கறந்து கொண்டிருந்த பாலினை அப்படியே விட்டுவிட்டு, ஸ்தன பானம் செய்து கொண்டிருந்தவர்கள் அதனை முழுவதுமாக செய்யாமல், சுற்றி சுற்றி ஓடினர். இவை அனைத்தும் ஸ்ரீஹரியின் குழல் ஓசையைக் கேட்டதும் நடந்தன. || 5

கை வளையல்களை காலில் சூட்டிக் கொண்டு, கால் ஆபரணங்களை கையில் தரித்துக் கொண்டு, காது குண்டலங்களை மூக்கில் அணிந்து கொண்டு, அழகான மூக்குத்தியை காதில் போட்டுக் கொண்டு, கழுத்தில் அணிய வேண்டிய மாலையை இடுப்பில் சுற்றிக் கொண்டு, கழுத்திற்கு இடுப்புத் துணியை அணிந்து கொண்டு, தங்களை தடுத்தவர்களையும் விட்டுவிட்டு, அனைவரும் பரமபுருஷனான ஸ்ரீகிருஷ்ணன் இருந்த இடத்திற்கு ஓடினர். ||6

வீடு, கணவன் ஆகியோரை விட்டு, ஸ்ரீமாதவன் மேல் பக்தியை வைத்து, விரஹ தாபத்தினால் கஷ்டப்பட்டவர்களாகி, அவர்கள் அனைவரும் விஷ்ணுவையே விரும்புபவர்கள் ஆயினர். அந்த புல்லாங்குழலின் நாதத்தின் சுவையினை சுவைத்தவாறு, தங்களின் ப்ரியனான ஸ்ரீகிருஷ்ணனின் பிரிவினை தாங்க முடியாமல், ஒவ்வொரு நொடியும் ஒரு யுகம் போல இருக்கிறது என்று புலம்பியவாறு, ஸத்வ ரஜஸ் தமஸ் என்னும் மூன்று குணங்களின் பந்தங்களை முறித்து (அதாவது அனைத்தையும் விட்டு), பகவந்தனே தம் கணவன் ஆக வேண்டும் என்று நினைத்து, அச்யுதனையே நினைத்தனர். || 7

இவ்வாறு தன்னை நோக்கி ஓடி வரும் அனைத்து பெண்களையும் பார்த்து, முகுந்தன் இவ்வாறு நீங்கள் இங்கு வந்தது எதற்காக என்றான். இவ்வாறான கடும் இருட்டு சூழ்ந்திருக்கும் இரவில், சிங்கத்தைப் போன்ற நடை கொண்டவர்களான நீங்கள் ஸஞ்சரிப்பது உங்களுக்கு உசிதமல்ல. உங்களுக்கு பிடித்தமானவர்கள் (கணவன், குழந்தைகள்) ஆகியோர் உங்களைக் காணாமல் துக்கம் கொள்கிறார்கள். அவர்களுக்கு துன்பத்தை தருவது என்பது அதர்மமே ஆகும். இவ்வாறாக அனைவரும் வந்ததற்கு, என்னை பார்த்து விட்டீர்கள். இந்த பூ, பழங்களை, செடி, கொடிகளை பார்த்து விட்டீர்கள். இப்போது வீட்டிற்கு திரும்பச் செல்லுங்கள் - என்றான் ஸ்ரீகிருஷ்ணன். || 9

அழகான வனம், மரங்கள், கிளைகள், தாமரை மலர்கள், தர்மராஜனின் சகோதரியான யமுனையின் வேகம், அழகு ஆகியவற்றை நீங்கள் பார்த்துவிட்டீர்கள். உங்கள் முகம், உதய சூரியன் போல

ஒளிர்கிறது. உங்கள் கணவன், அத்தை, மாமனார் ஆகியோரை புறக்கணித்து நீங்கள் இங்கு வந்திருப்பது சரியல்ல. அத்தகைய பூஜ்யர்களின் சேவையே உங்களுக்கு முக்கியம். அன்ய புருஷர்களுக்கு சேவை செய்வது என்பது பெண்களுக்கு உசிதமல்ல. அவர்களின் நட்பு, அவர்களுடன் பேச்சு, சஹவாஸம் ஆகியவை கூட பெண்களுக்கு அழகு சேர்ப்பதல்ல. || 10

என் தரிசனம், என்னைப் பற்றிய ஸ்ரவண, கீர்த்தனை, த்யானம் ஆகியவையே அதிகமான புண்ணியங்களை தருகின்றன. என்னுடைய சேவைக்கு என் அருகில் இருக்க வேண்டும் என்பது அதிக பலனை கொடுப்பது இல்லை. ஆகவே, நீங்கள் இங்கு புறப்படுங்கள் என்று ஸ்ரீஹரி கூறினால், அந்தப் பெண்கள் மனதில் கவலை கொண்டு, இனி இந்த ஜென்மம் எங்களுக்கு எதற்கு என்று கூறியவாறு, இந்த பிறவியே எங்களுக்கு வீண் ஆயிற்று என்று, தலை குனிந்து, பேசமுடியாமல் அமைதியாக நின்றனர். || 11

கண்களில் நீர் நிரப்பியவாறு நின்றனர். தங்கக் குடம் போன்ற முலைகள், பூசிக் கொண்டிருந்த சந்தனம், தங்கமயமான ரவிக்கைகள் ஆகியவற்றை அணிந்த அந்தப் பெண்கள், தங்கள் கால் கட்டை விரலால் மணலில் கோடு போட்டவாறு நின்றனர். இவ்வாறு நினைத்தனர். என்ன இது, ஸ்ரீகிருஷ்ணன் நம்மை அன்புடன்தானே அழைத்தான்?. இப்போது ப்ரியமில்லாத வார்த்தைகளை பேசுகிறானே?. என்று நினைத்து கஷ்டப்பட்டவாறு, அந்தப் பெண்கள் அனைவரும் பேச்சே வராதபோதும், பேசியே ஆகவேண்டுமே என்று எண்ணியவாறு இவ்வாறு பேசத் துவங்கினர். ||12

ஹே கிருஷ்ணனே, நீ இவ்வாறு கஷ்டத்தைத் தரும், கெட்ட பேச்சுகளைக் கேட்டு, நாங்கள் மனம் நொந்திருக்கிறோம். அனைத்து விஷயங்களையும் விட்டு நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். உன்னுடைய பாத மூலங்களை தொட்டு பூஜிக்க வேண்டும் என்பதே எங்கள் மனம் / விருப்பம். ஹே கிருஷ்ணா, உன்னைத் தவிர, வேறு யாரின் ஆஸ்ரயத்தையும் நாம் காண்பதில்லை / விரும்புவதில்லை. பக்தர்களின் கஷ்டங்களை போக்குபவனே. கேட்பாயாக. மோக்ஷத்தை விரும்புபவர்களுக்கு உன்னிலேயே ஆசை இருக்கிறது. அவர்களின் விருப்பு, வெறுப்பு, கெட்ட ஆசை என்று அவர்களுக்கு எதுவுமே இருப்பதில்லை - என்று கூறுகின்றனர். || 13

பெண்களுக்கு அவர்களின் கணவர்களே நலம் விரும்பி, நண்பன் என்று நீ கூறியது தர்மமே. நீ கூறியது உண்மையே. உன்னுடைய ஸம்பர்க்கத்தினாலேயே (நீ அவர்களின் உள் இருப்பதாலேயே) அவர்கள் நமக்கு ப்ரியர்கள் ஆகின்றனர். ஆனால், அனைவரை விட ப்ரியன் நீயே என்று கூறி, ஆகவே, உன்னுடைய பாதங்களை, அதன் நட்பினை விரும்பி நாங்கள் இங்கு வந்திருக்கிறோம் என்றனர். ப்ரியோத்தமனே. எங்களின் ஆசையை நிறைவேற்றுவாயாக. நீ கூறிய தர்மங்கள் எதுவும் உனக்கு பொருந்தாது (நீ அனைத்திற்கும் அப்பாற்பட்டவன்). ஆகவே, எங்களின் ஹ்ருதயத்தின் கஷ்டங்களை கேட்பாயாக, ஸ்ரீஹரியே - என்று வேண்டிக் கொண்டனர். || 14

உன்னுடைய மங்களகரமான பாத கமலங்களை விட்டு எங்களால் எழ முடியாது. எங்கள் கால்கள் முன்னே நகராது. உன்னுடைய உதட்டிலிருந்து வரும் புன்னகையை, அதன் தரிசனத்திற்காக நாங்கள் வந்திருக்கிறோம். உன்னுடைய அற்புதமான வேணு நாதம் என்னும் நல்மார்க்கத்தை (நல் வாக்கினை) வாசிப்பாயாக. எங்களின் விருப்பங்களை நிறைவேற்றுவாயாக. ஹே முகுந்தனே, உன்னுடைய பாத பத்மத்தின் பிரிவினால், நாங்கள் விரஹ தாபத்தில் தவிக்கிறோம். அந்த தாபத்தை நீ போக்குவாயாக, ஸ்ரீபதியே. || 15

உன்னுடைய கருணைப் பார்வையினால் எங்களுக்கு மகிழ்ச்சியை கொடுப்பாயாக. இனிமேலும் நீ எங்களை புறக்கணிக்கிறாய் என்றால், நாங்கள் எங்களுடைய ப்ராணனை, சின்மயனான உன்னுடைய பாதங்களிலேயே சமர்ப்பிக்கிறோம். இதற்கு நீயே ஸாக்ஷி. ஸ்ரீலக்ஷ்மிதேவியானவர்,

உன்னுடைய வக்ஷ ஸ்தளத்தை ஆஸ்ரயித்து இருப்பதுடன் த்ருப்தி அடையாமல், அவள், ஸ்ரீதுளஸி என்று ஆனாள். அவள் உன்னுடைய திருப்பாதங்களை விடுவதில்லை. இவ்வாறு இருக்கையில், நாங்கள் மட்டும் உன்னுடைய பாதங்களை எப்படி விடுவது?. இந்த நாட்டின் அதிபதியே, உன்னுடைய பாதங்களை அடைந்திருப்பதே தன்யம். || 16

இன்று எங்களை இவ்வாறு நீ அழைத்தது தர்மமா?. இந்திரெ அரஸனே, மூன்று உலகங்களிலும் ஸுந்தரன் என்றென்றும் நீயே. அச்யுதனே, உனக்கு சமம் என்றோ, அதிகம் என்றோ யாரும் இல்லை. இன்று இப்போது இங்கு வந்திருக்கிறோம். நம் ஊர் மக்களுக்கு, உன்னுடைய கைகளை கொடுப்பாயாக (அபயம் அளிப்பாயாக). தாமரைக் கண்ணனே, ப்ரஸன்ன வதனனே என்று அந்த அபலைப் பெண்கள் அனைவரும் ப்ரார்த்தனை செய்தனர். கருணைக் கடலே, முகுந்தனே, காப்பாற்றுவாயாக - என்றனர். || 17

அப்போது, யோகேஶ்வரனுக்கு (ருத்ர அல்லது முக்யப்ராணர்) ஈஶ்வரனான, கருணைக் கடலான ஸ்ரீகிருஷ்ணன், சந்த்ரனைப் போல முகம் கொண்டவர்களான அந்த பெண்களை மகிழ்வித்தான். அவன் ஸ்வ-ரமணன். அழகான புன்னகையுடன் கூடிய பார்வையுடன் அச்யுதன், அந்தப் பெண்களின் நடுவில் நின்று அனைவரையும் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் அழகான வைஜயந்தி மாலை சூடிய கழுத்துடன், அந்தப் பெண்களின் நடுவில் நின்றிருக்கிறான். தாமரை, நீலோத்பலம் போன்ற மலர்களிலிருந்து வருவதான நறுமணம் அங்கு பரவியது. அவனுடைய புல்லாங்குழல் இசையைக் கேட்டு, முக மலர்ச்சி கொண்டிருந்த அந்த பெண்கள் இதனால் மகிழ்ச்சி அடைந்தனர். || 18

காளிந்தி நதி இருக்கும் அந்த இடத்தில், அந்த யமுனா நதிக்கரையில், ஸ்ரீகிருஷ்ணன் தாமரைக் கண்களைக் கொண்ட அந்த பெண்களுடன் க்ரீடை செய்து, உப்பியிருக்கும் இதயத்தைக் கொண்டவர்களான அந்தப் பெண்களின் தோள்களில், அவ்வப்போது, தன் தோள் / கைகளை வைத்து, அவர்களுக்கு சிரிப்பு வரவழைப்பதான பேச்சுக்களை அவன் பேசினான். ஸ்ரீலோலனான ஸ்ரீகிருஷ்ணன், நகைச்சுவையுடன் பேசிக் கொண்டு, தன் கைகளை அவர்களின் இடை, முலைகளில் வைத்தவாறு விளையாடிக் கொண்டிருந்தான். || 19

காமாக்னியின் தாபத்தில் இருந்தவர்களுக்கு, பூர்ணகாமனான ஸ்ரீகிருஷ்ணன் வந்து மகிழ்ச்சி அளித்தான். இதனால் அவர்கள் அனைவருக்கும் கர்வம் வந்தது. அனைவருக்கும் அவனுடைய ப்ரேமம் (காதல்) என்னும் பாக்கியம் கிடைத்தது. சந்த்ரனைப் போல ஒளிர்ந்த அந்தப் பெண்களுக்கு மகிழ்ச்சி கிடைத்தது. ஸ்ரீமாதவன் இப்போது தங்கள் வசம் என்று அந்த ஒவ்வொரு பெண்ணும் நினைக்கத் துவங்கினர். இவ்வாறு அவர்கள் நினைக்கையில், அவர்கள் மிகப் பெரிய அபராதம் செய்தவர்களாக ஆயினர். ஆகவே, தேவேஶனான ஸ்ரீகிருஷ்ணன், உடனடியாக அங்கிருந்து, அவர்கள் பார்வையிலிருந்து மறைந்தான். || 20

ஸ்ரீ, பூ, துர்காதேவியரின் தலைவனான, அபாரமான லீலைகளை செய்பவனான, மூன்று உலகங்களின் தலைவனான, மூன்று உலகங்களின் அதிபதியான, பூமியின் அரஸனான, அனைவராலும் வணங்கப்படுபவனான, அனைவராலும் போற்றப்படுபவனான, ஸ்ரீபத்மனாபன். அவன் அனந்தானந்த சூரியர்களின் ஒளியைக் கொண்டவன். அவன் பூமியின் பாரத்தை குறைப்பவன். ஸம்ஹார கர்தன். கருணைக் கடல். இவை அனைத்தையும் தன் ஸ்வபாவமாகவே செய்பவன். ஜ்ஞானானந்தமயன். ஸ்ரீதேவியின் தலைவன். ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணன். அனைவருக்கும் இஷ்டமானவன். அனைவரின் இஷ்டங்களையும் அருள்பவன். இவ்வாறானவன், இந்த நந்தகோகுலத்தில் ஒளிர்ந்தான் / திகழ்ந்தான். ||21

***

**39. ராக :பேகடா தாள :அட்ட**

**ஶ்ரீக்ருஷ்ண ஒம்மிந்தோம்மிருளெ தன்னா க்ருதியடகிஸி மரளெ**
**கோகுலதரஸர்கே வ்யாகுலசித்தவு ஶோகஸமுத்ரவு முந்தோரே॥ப॥**

**ப்ரேஷ்டானுப்ரேஷ்டனந்தாகே குணோத்க்ருஷ்டவ பாடிதராகே**
**கஷ்ட ப்ராந்தியலி தருலதே நதியோளைதேஷ்ட நுடிய நுடிதராகே॥1॥**

**ஸ்ருஷ்டியோள் பரிபூர்ண ஹரிய கங்கெட்ட கேளுவதாஸ்சர்ய**
**வ்ருஷ்ணிகுலேஶனு பிட்டனு நமகேனு பட்டி ஹேளித ஹேளி த்வரிய॥2॥**

**பிப்பல ந்யக்ரோத பதரி நீப ஸம்பிகௌதும்பர ஹதரி**
**அப்புதப்புத ஹோத நாரேர நந்தஜ தப்பிஸைதிதனு கண்டிஹிரே॥3॥**

**குரவகஶோக கிம்ஶுகவே ஶ்ரீ ஹரிப்ரிய துலஸியதிகவே**
**ஸுரஹொன்னெ நாக புன்னாகவே பலானுஜனிரவல்லி கண்டில்லவே॥4॥**

**மருக மல்லிகே மாலதியே பக்கெ வரஜம்பு சூத ஸந்ததியே**
**ஸுரகி ஶாவந்திகே பகுள கோவிதார பரமபுருஷநெல்லி யேல்லே॥5॥**

**கண்டிரா மாதவனிந்தெ நதி தண்ட தண்டத மரத முந்தே**
**புண்டரீகாக்ஷன கரலவாம்ருதவனுண்டுண்ட பூபள்ளிய வ்ருந்தே॥6॥**

**ஹரிபாதஸ்பர்ஶ புண்யதாத்ரே ஶ்ரீ ஹரியஶஸ்ரஜ பாரிஜாதே**
**நெரெ நம்ம குலஸ்வாமி பரலில்லவே இல்லி பரமபுருஷ குண்டஜாதே॥7॥**

**இந்து தருலதெ ப்ரமரகள கேளி காந்தேரு விரஹாக்னிதிகிலகஶாந்ததில்லதே கண்டரு**
**புவியொளு ஶ்ரீகாந்தன்ஹெஜ்ஜெ ஹொந்திதவள॥8॥**

**பதிய கூடைதிதவள கண்டு ரதிபதிய மார்கணே தாகித்ஹிண்டு**
**பதி தன்னங்கனெயள ரதியிந்தப்பு வந்தே ஸதிய தோளிலி தோளிட்டிஹநந்து॥9॥**

**பரம ஸுக்ருதியவளெந்து துக்கபரிதராகி நடெதந்து**
**தரெய மேலவள்ஹெஜ்ஜெ அடிகித்தவல்லி ஶ்ரீ ஹரி ஹெஜ்ஜெ கண்டந்து நொந்து॥10॥**

**நுடிதரு ஹ்ருத்தாபதிந்த தன்ன மடதி பளலிதளுஹா ஹாயெந்து**
**ஹெடகனேரிஸிகொண்டு நளினனயன நிந்த அடிகளு ஜடிதவு இளெயல்லந்து॥11॥**

**லலனேரே நோடபன்யெனுத சஞ்சலதிந்த ஸுகிலடி இடுத**
**நளினஜ ஸுரிரிகெ ஹரியங்க்ரி ரஜாமோக ஈகௌதிகெ ஹெகலித்த நாத॥12॥**

**ஹெகலனேரிதவள கையிந்த ஹூவ தெகெஸிதனில்லி கோவிந்த**
**ஜகதீலவன பாதபத்ம ஒப்புதிவே மிகே த்வஜ சக்ராப்ஜதிந்த॥13॥**

**கேஶ ப்ரஸரணவ மாடி ஹூவ கேஶக்கீஶ முடிஸித நோடே**
**கேஶவனு பளிகபீஷ்டெ பூரையிஸித ஈஸௌக்ய நமகில்ல ப்ரௌடே॥14॥**

**ஹீகே ப்ரலாபிஸுவுத்னு தயதி ஶ்ரீ கோபிநாத திளிதனு**
**ஹிகவள மேலே தா ஸ்நேஹ மாடல்கெ பேக ஸொக்கிதவளவிவேகி॥15॥**

**நா கோபேரொளு செல்வெ திளிததா ஶ்ரீ கோபீநாதனவரனுளித**
**ஈகென்ன ஹொத்திஹனெம்பாகே மனஸொக்கு பேக துர்மதியெந்து நக்கு॥16॥**

**ஈகெய மதிதக்க ஶிக்ஷாயெந்து ஶ்ரீக்ருஷ்ணநாத அப்ரத்யக்ஷ**
**தா காந்தன காணதெ ஹா ஹரேயெந்து ஶோகிஸிதளு கடுநொந்து॥17॥**

**ஹே நந்தஜாத பளலிதே தயாநிதெ மொகதோரு முந்தே**
**அனந்த அபராதி நானு முராரே தீனவத்ஸல ஸுரதேனு ॥18॥**

**ஈ பரி பளலி பாஹவள கண்டு கோபேரு கேளிதரவள**
**கோபதி நந்தஜனெல்லிஹனே ஈக நீ பரமாப்தளின்னவகே॥19॥**

**மானினி ஹேளிதாளாகே தன்ன மானாபமானவரிகெ**
**ஆ நாரேராஸ்சர்யபட்டு ஹரேயெந்து நீ நம்ம கூடிதேயேந்து ॥20॥**

**பதியனரஸி பளலிதரு தாராபதியடகித பளிகவரு துதிஸிதர்கவியூதபதிரதிபதிபித**
**கதிமதி ததிதாதனெந்து ॥21॥**

**திருதிருகுத நிஶெயலி ஶ்ரீஹரிய மனஸ்கெயரல்லி**
**ஹரிகுண ஹொகளி ஸிரிகாளிந்தி மளலல்லி ஸிரிக்ருஷ்ண பாவுகெரல்லி ॥22॥**

**நெரெகொண்டு**
**குளிதாலாபிஸுத காத்ர ஸரஸோக்திவ்ராத ஸங்கீத**
**பரஸன்வேங்கடன பரஸந்நீகரிஸிதர் பரஸன்னமுகியரு ஸதத ॥23॥**

ஶ்ரீகிருஷ்ணன் அவ்வப்போது அனைவருக்கும் தரிசனம் அளித்து, சில சமயம், தன் உருவத்தை மறைத்து காணாமல் இருந்தான். கோகுலத்து மக்களுக்கு இந்த நடவடிக்கைகளைக் கண்டு கவலை வந்தது. சோகக் கடலில் அவர்கள் மூழ்கினர். || ப

தன் பக்தர்களிடம் ப்ரேமத்தை காண்பிப்பவனை, பின் தொடர்ந்து வந்த அந்தப் பெண்கள், அவனைக் காணாததால், துக்கம் கொண்டு, அவனின் நற்குணங்களைப் பற்றியதான ஸ்தோத்ரங்களை / பாடல்களை பாடினர். மனக் கஷ்டத்தினால், மயக்கம் கொண்டு, என்ன செய்வதென்று தெரியாமல், மரம், செடி, கொடிகள், நதிகள் ஆகியவற்றுடன் அதிகமாக தொடர்ச்சியாக ஶ்ரீகிருஷ்ணனைப் பற்றி பேசத் துவங்கினர். || 1

ஸ்ருஷ்டியே முதலான காரியங்களில் பரிபூர்ணன் ஆனவன் அவன். அத்தகைய ஶ்ரீஹரி நம் கண்களிலிருந்து மறைந்தான். இந்த வியப்பான விஷயத்தைப் பற்றி சொல்கிறோம், கேளுங்கள். வ்ருஷ்ணி குலத்தின் தலைவனான ஶ்ரீகிருஷ்ணன், நமக்கு ஏதாவது செய்தி சொல்லியிருக்கிறானா (ஏதாவது வழி காட்டியிருக்கிறானா?) என்று வேகமாக சொல்லுங்கள். || 2

பிப்பல (அரளெ), ஆல, பதரி ஆகிய மரங்கள், ஸம்பிகெ, அத்தி, கதரி (பாடலி மரம்) ஆகிய மரங்களைப் பார்த்து இவ்வாறு கூறினார்கள் - நந்தகோபனின் மகனான ஶ்ரீகிருஷ்ணன், நம் கண்களிலிருந்து மறைந்து போனான், எங்களிடமிருந்து தப்பித்துப் போயிருக்கிறான். நீங்கள் அவனை பார்த்தீர்களா?. || 3

குரவக (கொரடரி) மரம், கிம்ஷுக மரம், ஶ்ரீஹரிக்கு ப்ரியமான துளஸி மரமே, சிறந்ததான லவங்க, ஜாதிக்காய் மரங்களே, பலராமனின் தம்பியான ஶ்ரீகிருஷ்ணன் இருக்கும் இடத்தை நீங்கள் கண்டீர்களா? || 4

மரு, மல்லிகை, மாலதி, சிறந்ததான ஜம்பு (நாவல் மரம்), மா மரமே, சாமந்தி, பகுள மரங்களே / செடிகளே, அறிஞர்களின் ஆதாரமான பரமபுருஷன் எங்கு இருக்கிறான் என்று நீங்கள் அறிவீர்களா?. || 5

நதிக் கரையில், கரையில் இருக்கும் மரங்களின் முன்பாக ஆகிய இடங்களில் நின்று - நீங்கள் மாதவனை கண்டீர்களா? என்று கேட்டனர். புண்டரீகாக்ஷனின் கர ஸ்பர்ஶத்தினால், அந்த ஆனந்தத்தை உண்ட, அந்த பூ, மரம், செடிகளை இவ்வாறு கேட்டனர். || 6

ஶ்ரீஹரியின் பாத ஸ்பர்ஶத்தினைப் பெற்ற புண்யளே பூமியே, ஶ்ரீஹரியின் ப்ரீதிக்கு பாத்ரமான பாரிஜாதமே, நம் (வ்ருஷ்ணி / பக்த) குல ஸ்வாமி இங்கு வந்தானா?. அந்த பரமபுருஷன் இங்கு வந்தானா? - என்று கேட்டனர். || 7

இவ்வாறாக அந்தப் பெண்கள், மரம், செடி, கொடிகளை, தேனீக்களை கேட்டு, விரஹ அக்னியில் வெந்தனர். இவ்வாறாக அமைதி இல்லாமல் அந்தப் பெண்கள் வந்து கொண்டிருக்கையில், பூமியில், ஸ்ரீகாந்தனின், காலடித் தடங்களை அவர்கள் கண்டனர். || 8

அந்த பாத தடங்களைப் பார்த்து இவ்வாறு பேசிக் கொள்கின்றனர். இந்த கோபியானவள், தன் பதியான, ஸ்வாமியான ஸ்ரீகிருஷ்ணனுடனேயே இங்கு வந்திருக்கிறாள். அவள் ரதி பதியான மன்மதனின் காம பாணத்திற்கு ஆளாகியிருக்கிறாள். ஸ்வாமியும், தன்னுடன் இருப்பவளுடன் சேர்ந்து கொண்டு, தன் ஸதியின் தோளில் தோள்களை, கைகளை போட்டுக் கொண்டிருக்கிறான். || 9

அத்தகைய கோபி, மிகவும் புண்ணியம் செய்தவள் என்று நினைத்தவாறு, இந்த கோபிகைகள் தங்களுக்கு அத்தகைய வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று நினைத்து, துக்கம் கொண்டவாறு நடந்தனர். இதுவரை இருவரின் கால் தடங்கள் தெரிய வந்தது. ஆனால், இப்போது ஸ்ரீஹரியின் கால் தடங்கள் மட்டுமே தென்பட்டன. அதைக் கண்டும் இவர்கள் வருத்தப்பட்டனர். || 10

இதைக் கண்டு மேலும் ஹ்ருதயத்தில் தாபம் கொண்டு அந்த கோபிகைகள் ஹாஹா என்று புலம்பினர். தன் தோளில் அந்த கோபிகையை வைத்துக் கொண்டு, தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணன், தன் காலடிகளை பதித்தவாறு நடந்திருக்கிறான் - ஆகவே ஒரு காலடித் தடமே தெரிகிறது - என்றனர். || 11

இதைப் பார்த்து அந்த கோபி மற்றவர்களை அழைக்கிறாள். ஹே பெண்களே இங்கு வாருங்கள். இதை பாருங்கள். மெதுவாக நடந்து வாருங்கள். சதுர்முக ப்ரஹ்மதேவரே முதலான தேவர்களுக்கு தலைவனின் இத்தகைய பகவந்தனின் பாதத்தில் அமோகமாக இருக்கும் பாத தூளிகளை பாருங்கள். இத்தகைய பகவந்தன் இந்த கோபியை தன் தோளில் வைத்துக் கொண்டு நடந்திருக்கிறான் - என்றாள். || 12

தன் தோளில் ஏறியவளின் கைகளாலேயே அருகில் இருந்த மரங்களிலிருந்து பூக்களை கோவிந்தன் பறித்திருக்கிறான். அதனை அவன் சூடிக் கொண்டிருக்கிறான். இந்த மரங்களின் அருகில் இருப்பதான பாத தடங்கள் அவனுடையதே ஆகும். பாருங்கள், அதில் த்வஜ, சக்ராப்ஜ முதலான சின்னங்கள் இருக்கின்றன - என்றாள். || 13

கேஶவனான ஸ்ரீகிருஷ்ணன், அந்த கோபிகையின் கூந்தலை சீவி, அதில் இந்த பூக்களை சூட்டியிருக்கிறான் பாருங்கள். அந்த கோபிகைக்கு அவளுடைய அனைத்து விருப்பங்களையும் இந்த கேஶவன் நிறைவேற்றியிருக்கிறான். இத்தகைய ஸௌக்யம் நமக்கு வாய்க்கவில்லை பாருங்கள். || 14

இவ்வாறாக இந்த கோபிகையானவள் புலம்புவதை, ஸ்ரீகோபி நாதனான ஸ்ரீகிருஷ்ணன், மிகவும் கருணையுடன் தெரிந்து கொண்டான். அவள் மேல் தான் ஸ்னேகம் செய்வதற்காக வேகமாக சென்றான். அப்போது, ஸ்ரீகிருஷ்ணனுடன் இருந்த கோபியானவள் இவ்வாறு அவிவேகத்துடன் நினைத்துக் கொள்கிறாள். || 15

கோபிகைகளில் நானே அழகானவள். அதற்காகவே ஸ்ரீகிருஷ்ணன் என்னுடன் இருக்கிறான், மற்றவர்களை விட்டு விலகியிருக்கிறான் என்று நினைக்கிறாள். அதற்காகவே இவன் என்னை தூக்கிக் கொண்டிருக்கிறான் என்று மனதில் நினைக்கிறாள். இவளது இத்தகைய சிந்தனையை அறிந்த ஸ்ரீகிருஷ்ணன், இவளது துர்மதி எத்தகையதோ என்று நினைத்து சிரிக்கிறான். || 16

இவளது இத்தகைய துர்புத்திக்கான சரியான தண்டனை என்று நினைத்து, ஸ்ரீகிருஷ்ணன் உடனடியாக அங்கிருந்து மறைந்தான். இவளோ, தன்னுடைய ப்ரியமானவனைக் காணாமல், ஹா ஹரே என்று, மனம் நொந்தவாறு புலம்பத் துவங்கினாள். || 17

ஹே நந்தகுமாரனே, நான் வருத்தப்படுகிறேன். கருணைக் கடலே, உன்னுடைய முகத்தை எனக்குக் காட்டுவாயாக. நான் அனந்த அபராதங்களை செய்திருக்கிறேன். முராரியே. பக்தவத்ஸலனே. காமதேனுவே - என்று வேண்டுகிறாள். || 18

இவ்வாறாக அந்த கோபிகை புலம்பியவாறே வருபவளைக் கண்டு, மற்ற கோபியர்கள் இவ்வாறு கேட்டனர். கோபதியான நந்தகுமாரன் எங்கு இருக்கிறான்?. நீயே அவனுக்கு மிகவும் பிடித்தவளாக இருக்கிறாய் - என்றனர். || 19

அப்போது அவர்களிடம் இந்த கோபிகை இவ்வாறு சொல்கிறாள். தன் மனதை அறிந்த ஸ்ரீகிருஷ்ணன் தன்னை விட்டு விலகிய செய்தியை சொல்கிறாள். இதைக் கேட்டு, அந்தப் பெண்கள் மிகவும் வியப்படைந்து, ஸ்ரீஹரியே, நீயே எங்களை வந்து சேர்வாயாக, சேர வேண்டும் - என்று ப்ரார்த்தனை செய்கின்றனர். || 20

அனைவரும் தங்களின் ஸ்வாமியான ஸ்ரீகிருஷ்ணனை வேண்டி, அவன் தரிசனத்தை விரும்பினர். அப்போது சந்த்ரனானவன் மறையத் துவங்கினான். விடியத் துவங்கியது. அப்போதும் அந்த கோபிகையர் அனைவரும் அங்கேயே அமர்ந்திருந்து, ஸ்ரீகிருஷ்ணனையே துதித்துக் கொண்டிருந்தனர். சூரியன் உதிக்கத் துவங்கினான். மன்மதனின் தந்தையே நம் அனைவருக்கும் கதி, மதி, வழி என்று, அனைத்தும் ஆனவனைக் குறித்து அனைவரும் பக்தியுடன் ஸ்ரீகிருஷ்ணனை போற்றிப் பாடினர். || 21

இவ்வாறு அந்த இரவு வேளை முழுக்க அனைவரும் அனைத்து இடங்களிலும் சுற்றித் திரிந்தவாறு, ஸ்ரீஹரியிலேயே மனதை வைத்திருந்தனர். ஸ்ரீஹரியின் நற்குணங்களை போற்றிப் பாடியவாறு, ஸ்ரீகாளிந்தி நதி தீரத்தில் மணலில் அமர்ந்து, ஸ்ரீகிருஷ்ணனின் அனைத்து பக்தர்களும் அவனை பாடிக் கொண்டிருந்தனர். || 22

இவ்வாறு அனைவரும் சேர்ந்து அமர்ந்து, ஆலாபனையுடன் கூடி, நல்ல ஸ்வரத்துடன், சங்கீதம் பாடினர். ஸ்ரீப்ரஸன்ன வெங்கடனின் அருளை / தரிசனத்தை வேண்டிக் கொண்டனர். இவ்வாறாக தொடர்ச்சியாக அந்த மகிழ்ச்சியான முகத்தைக் கொண்ட அனைத்துப் பெண்களும், ஸ்ரீகிருஷ்ணனைக் குறித்து பாடிக் கொண்டிருந்தனர். || 23

***

**40. கோபிகீத**
**ராக :கோபிகீத தாடி**

**ஜயவ்ரஜகே நீ ஜன்மிஸதிகவு ஸ்ரீயள வாஸவு ஶாஶ்வதில்லியு**
**ப்ரியகெ ப்ராணவர்ப்பிஸி நோடுவ ப்ரியர த்ருஷ்டிகெ ப்ராப்தியாகதே ॥1॥**

**ஸ்வஜன விஸ்மயாஸ்மிததலளிதெயோ வ்ரஜத துக்கவனொத்த வீரனே**
**பஜிஸூ கிங்கரேர்பாஸகா ஹ°[ரேம்]° புஜஸமாஸ்யவ அக்கிகே தோர்வனே ॥2॥**

**ஶரத காலத ஸ்வப்ஜகர்ப்பத ஸிரிகெ போலுவாஸ்யேக்ஷேயொப்புவ**
**ஸூரத ஸ்வாமி நீம் ஶுல்கதாஸெரம் வரத காயதே விதியதாவுதை ॥3॥**

**விஷத நீர்தோரெ வ்யாளராக்ஷனிம் விஷமகாளி மளெ வைத்யுதாக்னியிம்**
**வ்ருஷப முக்யரிம் விஸ்வதுக்கதிம் வ்ருஷப நம்மனு ரக்ஷிஸிதேயோ நீ ॥4॥**

**அகிலஜீவ காந்தர்னியாமக கோகுலரக்ஷிகார்கெந்தெ பாலக**
**விகலஸார்த்தித ஸர்வகோபிகாஸக நீ புட்டதெ ஸாத்வவம்ஶதி ॥5॥**

**வரவரிஷ்டண வார்ஷ்ணிகாந்தனெ சரணு ஹொக்கர ஸம்ஸ்ருதிஹர**
**நெரெ கராப்ஜ்வனிட்டு ஸ்ரீர்ஷவாதரிஸூ ஸ்ரீகர தரிஸிதாகர ॥6॥**

**ப்ரணத ப்ராணிகள பாபகர்ஷகாவின பளிலிப்ப வைஷ்ணவார்சித**
**பணிய பெடெலிஹ பாதபத்மவ ஸ்தனகே ஹொந்திஸை தாபவாரிஸை ॥7॥**

**புதர மெச்சின புத்தி காரண மதுர மாதினபோஜ நேத்ரனெ**
**த்வதீய ஆஜ்ஞேய தப்பதிப்புர்கதர ஸோமவ ஊடு வீரனெ ॥8॥**

**நின்ன கதாம்ருதவு நீச ஜீவனம் முனிகளர்த்தவு மத்தே அகஹரம்**
**மனன பவ்யவு மஹாபாக்யவுனெனவ பக்தரு நித்யதாதரு ||9||**

**ப்ரிய நின்ஹாஸவு ப்ரேமனோடவு தயேய க்ரீடேயு த்யான ஶோபனவு**
**நயரஹஸ்யவு மனவு பேயிஸி நோயிஸுவ புத்திகைதவ ||10||**

**வ்ரஜவ பிட்டு அவன்னு மேஸுவாம்புஜவ ஹோாலுவா அங்க்ரிகொத்துவ**
**ரஜத்ருணாஸ்மவாலோசிஸி மனவு பஜிஸதை ஸுக பூபதே ஸகா ||11||**

**தனத தூளியிந்தோப்புவளகதிம் வனஜவக்த்ரவ வீக்ஷிஸி மன**
**நெனிஸி இச்சிபெவு நின்ன ரூபவ இனன அஸ்ததி வீர நித்யதி ||12||**

**பகுதரிச்சிப அப்ஜஜனர்சிப ப்ருதிவி பூஷிபாபத்து வாரிப**
**ஸுககே ஸ்ரேஷ்டவா ஸத்பதாப்ஜவ ஸுகுசதேல்லிடை ஸுவ்யதே ஸுடை ||13||**

**ஸுரத ஹுட்டுவ ஶோகவட்டுவ ஸ்வரிப வம்ஶவ ஸந்திசொப்பவா**
**நரர ராகவனட்டி மரெஸுவ அரஸ நின்னதராங்கித ஸுதா ||14||**

**ஹகல சரிஸுவி ஹோகி அடவி யுககே வெக்களவு ஒந்து த்ருடியது**
**மொகத ஸிரிகுருள்மெச்சி நோடலு மகுளெ ஜடதொளு மோஹிபெவீகளு ||15||**

**எளெயரினியர இஷ்டராப்தர பலவ மீருத பந்தேவச்யுத**
**லலித கீததாலாப மோஹதாபலெர நைஷகெ பிட்ட குஹக ||16||**

**முகுளனகே மொகவு மோஹ நோடவு முகுளகணெயனு மீடுவ கன**
**மிகிலு நிம்மதெ மாட கண்டெதெ பிகிது அப்பவெம்பெஸெவ மோஹவு ||17||**

**ஆகள காவராமங்களாஹர ப்ரகட நின்னது பாப போவது**
**ஸ்வகியராரார்தஹ ஸர்வரோகஹ நிகிளராஶெய நீ பூரயிஸய்ய ||18||**

**ப்ரஸன்னவேங்கடா பஶுப்ரபாலகா ஆஸியர்கிதவ அரிது மாதவ**
**ப்ரஸன்னவாகுவாபத்து ஹரிஸுவ ஶஶிமுகியரொளு ஸ்நேஹதப்பரா ||19||**

**இதி கோப்ய: ப்ரகாயந்த்ய: ப்ரலபந்த்யஶ்சி –**
**சித்ரதா ருருது: ஸுஸ்வரம் ராஜன் க்ருஷ்ணதர்ஶன லாலஸா: ||20||**

**தாஸாமாவிரபூச்செளரி: ஸ்மயமான முகாம்புஜ:**
**பீதாம்பரதர: ஸ்வக்வீ ஸாக்ஷான் மந்மதமன்மத: ||21||**

இந்த பூமியில் நீயே வந்து பிறந்து, அதிகமான ஸம்ருத்தியை கொடுத்திருக்கிறாய். உன்னால், ஶ்ரீலக்ஷ்மி தேவியின் இருப்பும் இங்கு நிரந்தரமாக இருக்கிறது. ப்ரியமுடன் உனக்கு எங்கள் ப்ராணனையே அர்ப்பணம் செய்ய வந்திருக்கிறோம். இத்தகைய ப்ரியர்களின் த்ருஷ்டிக்கு நீ ஏன் காண்பித்துக் கொள்ளவில்லை?. || 1

உன்னுடையவர்களே ஆன, உன்னையே மறந்த எங்களின் மனதினை, அதில் இருப்பதை நீ இப்போது தெரிந்து கொண்டாய். இந்த நந்தகோகுலத்தின் (உலகத்தின்) துக்கங்களை போக்கிய வீரனே. நாங்கள் அனைவரும் உன்னுடைய கிங்கரர்கள் (தாஸர்கள்). எங்களை நீ அருள வேண்டும். உன்னை துதிப்பவர்களின் கண்ணிற்கு நீயாகவே வந்து தெரிகிறாய். || 2

ஶரத் காலத்தில் மலர்ந்த தாமரையின் சிவப்பு நிற அழகானது, உன்னுடைய கண்களைப் போல இருக்கிறது. அனைவரிலும் அபாரமான கருணை கொண்ட ஸ்வாமி நீ. நிரந்தரமாக எப்போதும் உன்னுடைய தாஸர்கள் நாங்கள். ஹே வரதனே, எங்களை நீ காக்காமல் விடலாமா?. உடனடியாக வந்து எங்களை காப்பாயாக. || 3

விஷமான காளிந்தி நீரினை, அந்த அஸுரனை அப்புறப்படுத்தி நீ எங்களை காத்தாய். விஷமான காற்று (த்ருணாவர்த்த), விஷமான மழை (கோவர்த்தன கிரியை தூக்கியது), காட்டுத்தீ, வ்ருஷபனாக வந்தவனிடமிருந்து (அரிஷ்டாஸுர) போன்ற அஸுரர்களிடமிருந்து நீ எங்களை காத்தாய். இந்த உலகத்தில் இருக்கும் துக்கங்களிலிருந்து, ஹே வ்ருஷபனே, நீயே எங்களை காக்க வேண்டும். || 4

அனைத்து ஜீவர்களுக்கும் நீயே அந்தர்யாமி. கோகுலத்தை காப்பவன் நீயே. ஆனால் இங்கு பாலகனாக இருக்கிறாய். சதுர்முக ப்ரஹ்மதேவரே முதலான அனைவராலும் வணங்கப்படுபவன் நீயே. அனைத்து கோபிகைகளுக்கும் ஸகனாக (நண்பனாக) இருப்பவன் நீயே. நீ ஸாத்வ (என்னும் அரசன் வந்த) வம்சத்தில் பிறந்திருக்கிறாய். || 5

சிறந்தவர்களில் சிறந்தவனே. வார்ஷ்ணி குலத்தில் வந்த சிறந்தவனே. உன்னை சரணடைந்தவர்களை, ஸம்ஸார பந்தனத்தை அறுப்பவனே. உன்னுடைய அருள் தரும் கரங்களை என் தலை மேல் வைத்து, என்னை அருள்வாயாக. ஸ்ரீகரனே. ||6

உன்னை வணங்குபவர்களின் பாவங்களை நீ அழிக்கிறாய். வைஷ்ணவர்களால் (விஷ்ணு பக்தர்கள் அனைவராலும்) நீ பூஜிக்கப்படுகிறாய். காளிந்தியின் தலைமேல் கால் வைத்து உன்னுடைய கால் சின்னங்கள் அங்கு படுமாறு நடனமாடினாய். அத்தகைய பாதங்களை எடுத்து, நீ என் ஸ்தனத்தில் (ஹ்ருதயத்தில்) வைப்பாயாக. என்னுடைய தாபங்களை போக்குவாயாக. || 7

ஜ்ஞானிகளின் அபாரமான ஜ்ஞானத்திற்கு நீயே காரணம் (ஜ்ஞானமயனே). மதுரமான வாக்கினை உடையவனே. தாமரை போன்ற கண்களைக் கொண்டவனே. உன்னுடைய ஆணையை மீறுவதில்லை என்னும் ஸங்கல்பத்தை நாங்கள் கொண்டிருக்கிறோம். உன்னுடைய உதட்டின் அமிர்தத்தை எங்களுக்கு அளிப்பாயாக. || 8

உன்னுடைய கதாம்ருதத்தை பருகாததே, நீச ஜீவனம் ஆகும். (அதை பருகுவதே உத்தம ஜீவனம் ஆகும்). அந்த கதாம்ருதமே முனிவர்களுக்கு பிடித்தமானது. மற்றும் அனைவரின் துன்பங்களை (ஸம்ஸாரத்தை) போக்குவது. இதையே மனனம் செய்ய வேண்டியது. மஹா பாக்கியத்தைக் கொடுக்கத் தக்கது. என்று அறிந்த பக்தர்கள் எப்போதும் அனைத்து நலன்களையும் பெறக்கூடியவர்கள் ஆகிறார்கள். || 9

உன்னுடைய புன்னகையானது, உன்னுடைய ப்ரேமத்தினால் ஆன பார்வையானது எங்களுக்கு ப்ரியத்தை தரக்கூடியது. உன்னுடைய க்ரீடையினால் எங்களுக்கு கருணையை அருள்வாயாக. உன்னுடைய த்யானம் எங்களுக்கு நலன்களை தரக்கூடியது (நீ த்யானம் செய்யத் தக்கவன்). எங்களை அருள்வாயாக. இவற்றை விட்டு, நீ ஏன் எங்கள் மனதினை காயப்படுத்தி, நோகடிக்கிறாய், கிருஷ்ணா?. இந்த புத்தி உனக்கு எப்படி வந்தது? || 10

இந்த கோகுலத்தை விட்டு, பசுக்களை மேய்க்கும், தாமரைக்கு ஒப்பான உன்னுடைய பாதங்கள், அந்த பாத தூளிகளை யாராவது சிந்தித்து, அதனை நினைத்து பஜித்தால், அவர்களுக்கு அபாரமான சுகங்கள் கிடைக்கின்றன. ஹே பூபதியே, நண்பனே. || 11

பசுக்களை மேய்த்துக் கொண்டு நீ காட்டுக்குள் செல்கிறாய். அதிலிருந்து கிளம்புவதான தூசியால் உன் தேகம் இருக்கிறது. மாலை வேளையில் உன்னை பார்த்து, மனதில் நினைத்து, உன்னையே மீண்டும் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறோம். உன்னுடைய ரூபத்தை சூர்ய அஸ்தமன காலத்தில் வந்து எங்களுக்கு காட்டுவாயாக. நித்ய வீரனே. || 12

(உன்னுடைய பாதங்கள்) பக்தர்களால் விரும்பப்படுகின்றன. தாமரையில் பிறந்த சதுர்முக ப்ரஹ்மதேவர் அர்ச்சிக்கிறார். இந்த ப்ருதிவியில் பட்டு, அந்த ப்ருதிவியை அழகாக்குகிறது. அனைவருக்கும் வரக்கூடியதான ஆபத்துகளை பரிஹரிக்கிறது. நமக்கு சுகம் வேண்டுமெனில் அந்த பாதங்களை நினைப்பதே சிறந்தது. அத்தகைய பாதங்களை எடுத்து, நீ எங்களின் குசத்தில் (மார்பினில்) வைப்பாயாக. எங்களுடைய துன்பங்களை பொசுக்குவாயாக. ||13

(உன்னுடைய பாதங்கள்) மக்களுக்கு உன் மேல் பக்தியை உண்டு பண்ணுகின்றன. அவர்களின் சோகத்தை பரிஹரிக்கின்றன. நீ இந்த வம்சத்தில் பிறந்து, மக்கள் அனைவருக்கும் பாவனத்தை (பவித்ரத்தை) கொடுத்திருக்கிறாய். மக்களின் துன்பங்களை விலக்கி, அவற்றைப் போக்கி, அரஸனே, நீ அவர்களை இந்த உலகில் திகழச் செய்கிறாய். உன்னுடைய உதடுகளில் இருப்பதான அமிர்தத்தை நீ எங்களுக்கு பருகக் கொடுப்பாயாக. || 14

பகல் வேளைகளில் நீ காட்டிற்குச் சென்று பசுக்களை மேய்க்கிறாய். அந்த சமயத்தில் (உன்னைக் காணாமல்) எங்களுக்கு ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு யுகமாக கழிகிறது. உன் முகத்தில் வந்து விழும் உன் சுருள் முடிகளை பார்ப்பதற்கு, எங்கள் கண்களில், ஜடமாக இருக்கும் கண்-இரப்பைகள் நடுவில் வந்து தடுக்கின்றன. ||15

ஹே கிருஷ்ணனே, அனைவரையும் மயக்குபவனே. எங்கள் வீட்டு சிறுவர்கள், பிடித்தமானவர்கள், உற்றார் உறவினர் என யார் எங்களை தடுத்தும், அவர்களின் வலிமையை மீறி நாங்கள் உன்னைப் பார்க்க இங்கே வந்துள்ளோம், ஹே அச்யுதனே. உன்னுடைய இனிமையான சங்கீதத்தின் நாதத்தினை கேட்டு, அதில் மயங்கி, அபலையர்களான நாங்கள் இங்கு வந்தோம், நீ எங்களை விட்டு, எங்கே போனாய்?. || 16

புன்னகையுடன் கூடிய உன் முகம். உன்னுடைய மயக்கும் பார்வை ஆகியவற்றை எங்களுக்கு காட்டுவாயாக. உன்னுடைய அபாரமான பேச்சு / வாக்கு ஆகியவற்றை கேட்டு, உன்னை கட்டிப் பிடிக்க வேண்டும் என்று எங்களுக்கு ஆசை பொங்குகிறது, கிருஷ்ணா. || 17

பசுக்களை மேய்ப்பவர்களின் கஷ்டங்களை நீ போக்குகிறாய். உன்னைப் பார்த்தாலே எங்கள் பாவங்கள் அனைத்தும் போகின்றன. உன்னுடைய பக்தர்களை காப்பவனே. அனைத்து நோய்களையும் பரிஹரிப்பவனே. எங்களுடைய அனைத்து விருப்பங்களையும் நீ நிறைவேற்றுவாயாக. || 18

ஹே ப்ரஸன்ன வெங்கடனே, பசுக்களை காப்பவனே. அழகான பெண்களின் விருப்பங்களை அறிந்து அதனை நிறைவேற்றுவாயாக, ஹே மாதவனே. எங்களுக்கு வரக்கூடியதான ஆபத்துகளை தீர்த்து வைப்பவனே. சந்திரனைப் போன்ற ஒளி முகத்தைக் கொண்டவர்களில், உன்னுடைய நட்பினை விரும்புபவர்களுக்கு நீ அருள்வாயாக. || 19

(ஶுக மஹரிஷி, பரீக்ஷித் ராஜனிடம் இவ்வாறு சொல்கிறார்). ஹே அரசனே, இவ்வாறு அந்த கோபிகைகள், பாடியவாறு, தங்களின் மனதில் இருந்த அனைத்தையும் பல்வேறு அழகான விதங்களில் பேசியபிறகு, அவர்கள் சத்தம் போட்டு அழத் துவங்கினர். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனைப் பார்க்க மிகவும் ஆர்வமாக இருந்தனர். || 20

அப்போது ஸ்ரீகிருஷ்ணன், தன் தாமரை வதனத்தில் புன்னகையுடன், அந்த கோபியர்கள் முன் வந்து நின்றான். மாலையுடன், தங்கமயமான ஆடைகளை அணிந்து, மன்மதனைவிட அழகான மன்மதனான அந்த கிருஷ்ணன், நேரடியாக வந்து அந்த கோபியர்களுக்கு தரிசனம் அளித்தான். || 21.

**41. ராக :ஸாவேரி தாள :சூர்ணிகாவ்ருத்த**

**ஈ பரி கோபிசமூபரேலாபிஸெ தாபிஸெ**
**ஶ்ரீபதி பூபதி கோபதி தா பராத்பரனைஸெ**
**ஆபத்தாரக வ்யாபக ரூபக தா புனர்ப்யுதிஸெ**
**பாபதிவம்ஶப்ரதீபக கோபி ஸமீபகெ பரெ தளிதளிஸே ॥1॥**

**தினமணி கணமணி மௌளிமகரகுண்டலமண்டித கண்ட**
**வனஜனயன தண்கதினந்திருவ துண்ட**
**கனனீலனிபதனு கரிகராப தோர்தண்ட**
**மனோஜனஜனக சிரவனிதானனனவீன நீரஜ சண்ட ॥2॥**

**மினுகுவெளெனகெ மோஹன ப்ரூ நடனவிலாஸத ஶௌண்ட**
**வனஸ்ருக்வைஜயந்திதர கன கௌஸ்துபகேயூர சிரருசிராம்பரோத்தண்ட**
**க்வணத் கிங்கிணி கங்கணதாம ஸுனூபுர மண்டன மண்டித கண்டுகலி புண்டர**
**ஹிண்டின கண்ட**
**எனுதலி வனிதேரு ப்ரஸன்வெங்கடன கண்மனதணியெ கண்டரு தண்ட தண்ட ॥3॥**

இவ்வாறாக, அந்த கோபிகைகளின் சமூகம் ஸ்ரீகிருஷ்ணனிடம் வேண்டிக் கொள்ள, தாபத்தில் மூழ்கியிருக்க, ஸ்ரீபதியான, பூபதியான, கோபதியான, அந்த பராத்பரனான ஸ்ரீகிருஷ்ணன், ஆபத்துகளை பரிஹரிப்பவன், வ்யாபகன், ரூபகன் அவன், மறுபடி அங்கு அவர்கள் முன் தோன்றினான். சந்த்ர வம்சத்தில் பிறந்தவனான அந்த ஸ்ரீகிருஷ்ணன், ஒளிர்ந்தவாறு, அந்த கோபியர்கள் கூடியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். || 1

பற்பல சூரியர்கள் சேர்ந்தாற்போல ஒளி கொண்ட முகம். அதில் மகர, குண்டலங்கள் ஒளிர்ந்தன. தாமரை போன்ற கண்கள், அவை சந்திரனைப் போல தண்மையாக கருணையை பொழிந்தவாறு இருந்தன. கார்மேகத்தைப் போன்ற வண்ணம் கொண்ட தேகம், யானையின் தும்பிக்கை போன்ற தோள்கள் / கைகள். இவன் மன்மதனின் தந்தை. ஸ்ரீமஹாலக்ஷ்மியின் முகம் என்னும் தாமரையை இவன் மலரச் செய்கிறான். || 2

ஒளிர்வதான குறு நகை. அழகான வளைந்த புருவங்களால், இந்த ப்ரஹ்மாண்டமே அசைகிறது. வைஜயந்தி வன மாலையை அவன் தரித்திருந்தான். அபாரமான கௌஸ்துப, கேயூர ஆபரணங்களை அணிந்து, தங்கமயமான பீதாம்பரத்தை அணிந்திருந்தான். வயிற்றில் சிறிய சலங்கைகள் கட்டிய கிங்கிணி என்னும் ஆபரணம், கைகளில் கங்கணம், கால்களில் நூபுரங்கள் அழகான அலங்காரங்களால் ஆனதாக இருந்தது. இவனே தேவர்களின் குழுக்களின் தலைவன். இவ்வாறாக அவனது வீரமான ரூபம் இருந்தது. இவ்வாறாக அலங்காரங்களுடன் வந்து நின்ற அந்த ப்ரஸன்ன வெங்கடனை அந்த கோபிகையர்கள் அனைவரும் தங்களின் கண்கள், மனங்கள் நிறைய, திரும்பத்திரும்ப கண்டு களித்தனர். || 3

**42. ராக :கேதார தாள :அட்ட**

**தோரிதா தன்ன தோரிதா தன்ன ஸாரித நாரேர மோரே இதுரினல்லி ॥ப॥**
**ஸ்ரீக்ருஷ்ண ஸந்தருஶனதி கோபியரு அனேக ப்ரலாபிஸி ரோதிஸுதிஹரு**
**ஏக ஸுஸ்வரதி பாடுவ நிஷ்டெய நோடி தா கருணாம்புதி உதயமாடி ॥1॥**

**மந்தஸ்தானன மகரகுண்டலதி கந்தர்ப சந்திரகோடிகள தெரதி**
**ஸௌந்தர்யஸாரபலேரு மனோஹர குந்தத பீதாம்பர வனஸ்ரக்தர ॥2॥**

**ப்ரஸன்னவதன ப்ரஸன்னாலயபூர்ண ப்ரஸன்னபூஷண ப்ரஸன்ன மயலோசன**
**ப்ரஸன்னசரித்ர ப்ரஸன்னாப்தகாத்ர ப்ரஸன்வெங்கடக்ருஷ்ண ப்ரஸன்னவரிஷ்ட ॥3॥**

தன்னை விரும்பிய, தன்னைக் குறித்து பாடிய பெண்களின் முகத்தின் எதிரில் வந்து, ஸ்ரீகிருஷ்ணன் தன்னை காட்டிக் கொண்டான். || ப

ஸ்ரீகிருஷ்ணன் வந்து நின்றதும், அவனை பார்த்த கோபியர்கள், பல்வேறாக புலம்பியவாறு, அழுதனர். ஒரே ஸ்வரத்தில் அனைவரும் சேர்ந்து பாட, அவர்களது பக்தி நிஷ்டையைக் கண்ட ஸ்ரீகிருஷ்ணன், அந்த கருணைக் கடல், தான் அவர்களின் எதிரில் வந்து நின்றான். || 1

புன்னகை பூத்த முகத்துடன், மகர குண்டலங்களை தரித்தவாறு, மன்மதனின் தந்தை, கோடி சந்த்ரர்களின் ஒளியைப் போன்ற ஒளியுடன் கூடி வந்து நின்றான். அழகான அந்த பெண்களின் மனதைக் கவர்ந்தவனான, அந்த ஸ்ரீகிருஷ்ணன், பீதாம்பரம் மற்றும் வன மாலையை தரித்தவாறு வந்து நின்றான். || 2

ப்ரஸன்ன வதனத்துடன், ப்ரஸன்னனாகி அனைவரின் ஆலயத்திலும் (இதயத்திலும்) பூர்ணனாக இருப்பவன், ப்ரஸன்ன பூஷணன், ப்ரஸன்ன மனங்களைக் கொடுப்பவன், ப்ரஸன்ன சரித்ரங்களைக் கொண்டவன், ப்ரஸன்ன கார் மேகம் போன்ற தேகத்தைக் கொண்டவன், இவ்வாறான ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணன், அவனே ஸர்வோத்தமன். || 3

**43. ராக :கேதாரகோள தாள :அட்ட**

**நெரெதரு ஹரிய கௌதியரு ஸ்மரன ஶரதட்டுளிகெ நொந்த ஸுந்தரியரு ||ப ||**

**மங்கள மூர்திய கண்டு கொல்லவெங்களெயர ஹிண்டு ஹிண்டு**
**கங்கள ஹப்பவனுண்டு அந்தரங்கரஸ பந்தனெந்துகொண்டு ||1 ||**

**உதுருவ நயனாஸ்ருகளிம் கத்கத வாக்யத பாயிகளிம்**
**யதுவரனங்க்ரிகரிகிதரு விதுவதனெயர்ஶோக ஹருஷபூர்ணரு ||2 ||**

**கதப்ராணாகதரந்தே ஸுவிதரிகெ பததொரெதந்தெ**
**அதிதாரித்ர்யரிகாக ஸ்ரீபதி ப்ரஸன்வெங்கட நிதி பரலாக ||3 ||**

ஸ்ரீஹரியின் தோழிகள், அந்த கோபிகையர்கள் வந்து அவனிடம் நின்றனர். அந்த அழகிகள் அனைவரும் மன்மதனின் காம பாணத்திற்கு வயப்பட்டு நின்றனர். || ப

ஸ்ரீகிருஷ்ணனின் மங்கள மூர்த்தியைக் கண்டு, கோபாலர்களின் பெண்களின் குழுக்கள், கண்களால் அவனை பருகியவாறு, அவனைக் கொண்டாடி, தங்களின் அந்தரங்கத்தின் அரசன் வந்தான் என்று கூறிக் கொண்டனர். || 1

கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தவாறு, தழுதழுத்தவாறு வாயில் பேசிக் கொண்டு, யதுவரனான ஸ்ரீகிருஷ்ணனின் கால்களில் விழுந்து வணங்கினர். சந்த்ர வதனையர்களின் சோகத்தை விட்டு, ஆனந்தக் கடலில் மூழ்கினர். || 2

ஸ்ரீகிருஷ்ணனைப் பார்த்ததும் அவர்களுக்கு, போன உயிர் திரும்ப வந்ததைப் போல, புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு திரும்ப அழைப்பு வந்ததைப் போல, மிகவும் ஏழையானவர்களுக்கு ஸ்ரீபதியான ப்ரஸன்ன வெங்கடன் என்னும் நிதி அப்போது கிடைத்தது போல இருந்தது. || 3

***

**44. ராக :கேதாரகௌள தாள :ஜக்கணி**

**ஆ ஸகியர ஸுககெ ஸரியுண்டெ மாஸக பூர்ணஶஶாங்க**
**ஸ்ரீ ஸுரரிகெ ஸுதெ கைஸேரித பரி லேஸாயிது பௌதனக ||ப ||**

**ஸ்ரீ ஶௌரிய பாணிஸரஸிஜகள பா ஸக என்னுத ஒப்பள்ஹிடிதளு**
**பூஷித சந்தனதா ஸரள்ஹோள்கள பீஸி பிகிதப்பிதளொப்பளு**
**ஸ்ரீஶன தாம்பூலகாஸதி கையொட்டி ஹாஸதி மெத்தளொப்பளு**
**ஈஶன பதபத்ம லேஸாகி ஓர்வளு தா ஸ்தனதலி தரிஸிதளு ||1 ||**

**ப்ருகுடிகளனு கண்டிக்கி ஸ்நேஹனோடதி முகதிருஹிதளௌடுகச்சி**
**ஸகனாஸ்யவ எவெயிக்கதோர்வளு நோடி ஸுகிஸிதள் கண்மன மெச்சி**
**நிகிலாத்மன செலுவிகெயனு தேனிஸி ஸகியேளித்தளு அந்தக்ஹச்சி**
**விகஸிதமுகி நாஸிக துதியலி ப்ராணஸகநிட்டரெ கண்ணுமுச்சி ||2 ||**

**ஸம்ஸ்க்ருதி மோக்ஷத ஸம்ஶயில்லத பரமஹம்ஸர ஸ்திதியந்தவரு**
**கம்ஸாரிய ரூபாம்ஶவன்னெ நெனெதும் ஸந்தத பரவஶரு**
**ஹம்ஸவாஹன ஶீதாம்ஶுதரமரோத்தம்ஸார்ச்சிதனரஸியரு**
**ஹம்ஸகாமினியரு மாம்ஶாவேஷரு த்வம்ஸித வ்ருஜின ஶுசியரு ||3 ||**

வனஜாக்ஷன முகவனஜாம்ருதனுண்டு தணியவு அவரக்ஷிமதுப
வனஜனாபவன நாபிவனதிலி நலிதவு வனிதெயரக்ஷிமொனசலிப
முனிஜனதோலு தனுமனதனவொப்பிஸி நெனெதரு இனியன ரூப
ஸனகாதிவந்த்யன கன ஸௌந்தர்யாப்தியோள் முணுகிஸி பிட்டரு ஹ்ருத்தாப ॥4॥

விஜ்ஞானோதய ஸுக்கியு யோகி ஜனர்காகிரெ மனோஹர்ஷ
வெக்களிஸிது ஸ்ரேயாஜ்ஞேஶ்வரபதஸ்வர்கத லாபோத்கர்ஷ
ஒக்கூடித ஸ்த்ரீவர்க்கக்கெ தோர்வபவர்க்கவு ஈ பரிதோஷ
ஸ்வர்கிகரிவருபக்தாக்ரேயரு கோவேரு நிர்கதஶோகேரு ஸஹஸா || 5

குந்த மந்தாரவிந்தவ ஹொந்தித மந்தானில பரிமளவு
மாந்த்ய ஸுஷைலத்யவு அந்து விரஹிகளானந்தத வ்ருத்திகே கெலவு
மந்தகமனெ காளிந்திய கொலத ஸுந்தர புளினஸ்தளவு
அந்தொப்புவ ஶாரதேந்து பெளிகனலி நந்தஜனடணெகெ நலிவு ॥6॥

சிர ஜேங்கரிப ஷட்டரணமஞ்ஜுளகோஷ ஹரிணாக்ஷிர கவிகளிகெ
ஹரிய ஸந்தருஶன ஸ்வருஶனோல்லாஸதி ஸ்மரஶரதம்படள தாகே
வர ஶாஸ்த்ரார்த்தவு பரஸ்ருதி ஹொந்தித பரி யுவதியர்ஹொந்தலாகெ
பரகெ பராத்பர ஸிரிவர ஸுந்தர நெரெதனவரனு தா ப்யாகே ॥7॥

இந்தீவராக்ஷெரு கந்தர்பனய்யன முந்தகெளெதுகொண்டு தம்ம
த்வந்த்வனிபிடகுச ஹொந்தித உத்தரீயந்தெகெதரு ஸம்ப்ரம்ம
சந்தன குங்கும கந்த கஸ்தூரி புனகிந்தாத்மவு மனோரம்ம
சந்ததாஸன்து குந்தரதனெயர வ்ருந்தத்யோப்பித பரப்ரஹ்ம ॥8॥

ரமெயாத்மகவாத அம்ருத க்ஷேமாபய விமலாஸனத முகுந்த
அமம கோபேர குசபெவர்ஹொந்தித கந்த ரமணேயாம்பர ஸாகெந்த
ப்ரமத்ரய நீகித ஸுமுனிவரர ஹ்ருத் கமலாலய. கோவிந்த
யமுனெய புலிநதி ஸும்ருகஶாபாக்ஷிர காமுகபகுதி பேகெந்த ॥9॥

யோகேஶேஶ்வர ஹீகாஶ்சர்யத ஸாகரலீலெய தோர்த
ஆ கோபியரிகெ பொகணேயன கணெ வேகவ தா ப்ரேரிஸித
ஆக அவரு தபயோகாலம்பிஸி ஸ்ரீகோபதி நலவிந்த
ப்யாகவரிகெ ஸம்யோகத பயகெய ஸ்ரீகோப்தனு நியமிஸித ॥10॥

ப்ரூப்ரமணேக்ஷண ஶோபிப நகஸ்பர்ஷலோபவ வசனகளிந்த
த்ரிபவனேஶ்வர தா ப்யாகனெ ரதிலோபவ ஸுகவைதிஸித
ஸீபில்லன கணெகிம்பாதவு புல்லனாபன பலு ஒலுமிந்த
ஸ்ரீப்ருத உடுபகெ பாமெயரெந்தரு ஸ்தோப ப்ரயணகோபதிந்த ॥11॥

எலெ விபுவே ஒப்பொலிஸிதரொலிவனு ஒலியனு ஒப்பொலிஸிதரே
ஒளிஸதே ஒலிவனு இளெயொளு எரடனு திளியனு கேளு முராரே
திளுஹை ஈ ஸால்வரொளதாவனு கன எலே தயானிதெ ஸ்ரீஹரே
ஸலெ நிம்ங்க்ரியனளினகெரகுவேவு லலிதசரித்ர ஆகாரே ॥12॥

இந்து$^{3}$ முகி$^{2}$யர்ஹீகெ$^{3}$ந்த$^{3}$ரெ நுடி$^{3}$த$^{3}$னு மந்த$^{3}$ரத$^{4}$ர ஸிரினல்ல
ஹொந்த$^{3}$த$^{3}$ ப$^{3}$யகெய மந்த$^{3}$மதிக$^{3}$ள கூடி$^{3}$ந்து$^{3}$ ஸௌஹ்ருத$^{3}$ய த$^{4}$ர்மவல்ல
ஒந்தி$^{3}$னிதார்தவ எந்து$^{3}$ இச்சி$_{2}$ஸதி$^{3}$ஹ மந்தி$^{3}$கொ$^{3}$லிதெ$^{3}$ ஹுஸியல்ல
தந்தெ$^{3}$கெ$^{3}$ தன்னய கந்த$^{3}$க$^{3}$ளலி ஸ்னேஹ ப$^{3}$ந்த$^{3}$ந்திரெ கைவல்ய. ||13

நித்யசித்ததி3 ஸர்வாத்மராமகெ3 மனஹுத்தித்3த3 தீ4ரரிகொ3லிவெ.
புத்ரகலத்தஸன்மித்ரவித்தாதி4க மத்ப்ரியஹுரியெந்த3ர்கே3லிவெ
மத்தொந்து3 லாப4கெ எத்தெத்தெளஸத3 முக்திஸோத4கரிங்கொ3லிவெ
ப4க்தர' ஸுரபி4 விரக்தர ஸுரதரு ஹுத்தியவர ஹொந்தி3ருவெ. ||14

ஹோத3ர்தத3லி த4னாதி4பன சித்தகே2த3வு ப3ளலிஸித3ந்தெ
ரோதி3ஸி வனவன ஸோதி4ஸிதி3ரி பரமாத3ரத3லி நீவிந்தெ
மேதி3னிலி நிம்ம ருணபா3தெ4யு ஸாரிது நா தா3வ பரி தித்3த3ல்மத்தெ
ஜதெ3ரிகெ3ந்த3னு மாத4வ மோக்ஷத3 ஹாதி3ய மாதுக3ளந்தெ ||15

ஹரிமுக2 நிஸ்ருதோத்தரத3 ஸுதா4ரஸ கர்ணபடக3ளிந்த3 ஸவிது3
விரஹுதி3 ஜநிஸித3 ஜ்வரவட3கி3ரெ ஸுந்த3ரனங்க3ஸங்கி3யர்க3ந்து3
பரமபுருஷஹுரி 'ஸ்வரமண கோ3பேரொள் வரராஸக்ரீடெ3கெ3 ப3ந்து3
ஹரிணகுணகநேத்ரெர கரெத3னு ஸத் ஸரஸமண்ட3லத3லி நிந்து3 ||16

யோகே3ஸேஶ்வர நாக3க3மனெயர யோக3மண்ட3லத3 மத்4யத3லி
பேகி3ப்3பி3ப்3ப3ரிகா3கொ3ந்து3 ரூப தாநாகொ3ப்பித3 ஸ்வஸுக2த3லி
நாக3வேணியர பா3ஹுக3ளல்லி பா3ஹிட்டு கைக3ளிகிம்பு3 கண்ட2த3லி
போ4கி3ஸித3னு செந்நாகி3 கு3ணத்ரய நீகி3த3கொ3லிவந்த3த3லி ||17

ஸ்த்ரீ ரத்னங்க3ளொளாராஜித நீலநீரத3கா3த்ர ஹைமமணி
ஹாரத3 மத்4யதி3 சாரு நீலத3 மணி தோருவ தெரதி3 கு3ணமணி
பா4ரி நூபுர ஜணத்காரத3 வலயத3 நீரெயர கண்ட2மணி.
மேரெயில்லத3 ஸுக2வாரிதி4 நந்த3கிஸோர சித்3குணக3ணத3 க2ணி ||18

ஹொளெவ ஶங்குமண்ட3ல மத்4ய ஸ்தா2பிஸி கெ3ளதியரனு ஹொந்தி3 ஶௌரி
வலயாகாரதி3 நிலிஸித3 கோ3வெர ப3ளக3வநாக3 முராரி
கௌதெ3ர கா3த்ரமஞ்ஜுளமது4ர ஸ்வரக3ள கேளித3னு உதா3ரி
சலித பத3ந்யாஸக3ள பட2ணெக3ள கலிஸித3னபி4னய தோரி ||19

காம க்ரோத4வ கெ3த்3து3 நேமத3லித்3த3 ஸோமகுலகெ து3ர்லலப4வு
ஹோமவ மாட3யந்த்ய ஸோமரஸவனும்ப3 ஸ்தோமகத்யந்த து3ர்லப4வு
பூ4மண்ட3ல ஸுத்தி ஹைமபர்வததா3ன தா மாடி3த3ர்கெ3 து3ர்லப4வு
ஶ்ரீ மஹாலக்ஷ்மீயஸ்வாமி ஶ்ரீ க்ருஷ்ணன காமினேர்கீ3பா4க்3ய ஸுலப4வு ||20

ரங்க3ன மங்க3ள அங்க4ரியுக3ங்க3ள ஸங்க3தியம் கு3ருதிட்டு
ஹிங்க3த3பாங்க3த3 கங்க3ள ஸிங்க3ர அங்க3னெரிங்கி3தத3ஷ்டு
அங்க3ஜனம் கெ3ல்வனம் கு3ண ஸங்கீ3த ஸங்கி3ஸெ ஹெங்க3ளெரஷ்டு
துங்க3 விஹங்க3 துரங்க3 ப்ரஸன்வெங்கட ஸங்கெ3யர்கி3ஶுப4விஷ்டு ||21

அந்த கோபிகையர்கள் அடைந்த சுகத்திற்கு ஈடு இணை உண்டோ? (இல்லை). ஸ்ரீமஹாலக்ஷ்மியின் ஸகனான, பௌர்ணமி முழு நிலவைப் போல ஒளிர்பவனான ஸ்ரீகிருஷ்ணன் அவர்களின் அருகில் இருக்கையில். தேவ அஸுரர்களின் யுத்தத்தில், தேவர்களுக்கு அமிர்தம் கிடைத்தபோது அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு ஈடாக இவர்களின் ஆனந்தமும் இருந்தது. || ப

தாமரை போல சிவந்திருந்த ஸ்ரீகிருஷ்ணனின் கைகளை, ஹே கிருஷ்ணா வா, என்று கூறியவாறு ஒருத்தி பிடித்தாள். இன்னொருத்தி, அவனின் சந்தனம் தடவிய தோள்களை பிடித்தவாறு, அவனை இறுக்க கட்டிப் பிடித்தாள். ஸ்ரீஶன் தாம்பூலம் தரித்துக் கொண்டிருந்தால், இன்னொருத்தி, அதை தன் கையால் பிடுங்கி, மகிழ்ச்சியுடன் தான் அதனை மென்றாள். அந்த ஈஶனின் பாத பத்மங்களை மெதுவாக பிடித்து விட்டாள். அதனை தன் ஸ்தனத்தில் வைத்து வணங்கினாள் இன்னொருத்தி. || 1

தன் இரு புருவங்களையும் அருகில் கொண்டு வந்து, ஸ்னேஹ பாவத்துடன், தன் தாடைகளை இறுக்க வைத்துக் கொண்டு ஒருத்தி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். தன் நண்பனான ஸ்ரீகிருஷ்ணனை, இன்னொருத்தி, தன் கண்களை இமைக்காமல் அப்படியே பார்த்து, அதன் மூலமாகவே சுகம் அடைந்தாள். இதனால் அவள் கண்ணும், மனமும் மகிழ்ச்சி அடைந்தது. அனைத்து இடங்களிலும் வ்யாப்தனான ஸ்ரீகிருஷ்ணனின் அழகினை பருகியவாறு, அவனின் அழகினை தன் அந்தரங்கத்தில் வைத்தாள். மலர்ந்த முகத்துடன் அந்த கோபிகையானவள், , தன் ப்ராணனைவிட சிறந்தவனான நண்பனை, தன் மூக்கின் நுனியில் நினைத்து, (த்யானம் செய்து), கண் மூடி அமர்ந்திருந்தாள். || 2

இந்த கோபிகைகள் - ஸம்ஸாரத்தை விட்டவர்கள் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லாதவர்களான பரமஹம்ஸர்களைப் போல நிலையைக் கொண்டவர்கள் ஆனார்கள். (எந்த கவலையும் இன்றி இருந்தார்கள்). கம்ஸனைக் கொல்பவனின், மூல ரூபத்தின் ஒரு அம்சத்தையே (இந்த கிருஷ்ண ரூபத்தையே) திரும்பத் திரும்ப நினைத்து, பரவசம் அடைந்தார்கள். ஹம்ஸ வாஹனனான சதுர்முக ப்ரஹ்ம தேவர், சந்திரனை ஏந்திய ருத்ரதேவர், தேவர்களின் தலைவனான இந்த்ரன் ஆகியோரால் அர்ச்சிக்கப்படும் ஸ்ரீகிருஷ்ணனின் அரசியர்கள் இவர்கள். அன்னத்தைப் போல நடை கொண்டவர்கள். ஸ்ரீமஹாலக்ஷ்மிதேவியின் அம்சத்தை இவர்கள் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் இருந்த தோஷங்கள் அனைத்தும் விலகிப் போய், அவர்கள் பவித்ரமாக ஆயினர். || 3

தாமரைக் கண்ணனின், முகத் தாமரையிலிருந்து வந்த அமிர்தத்தை (அவனின் தரிசனத்தை அடைந்து) சுவைத்து, அந்த கோபிகையர்களின் கண்கள் என்னும் வண்டு த்ருப்தி அடையவில்லை. பத்மனாபனின் நாபி என்னும் குளத்தில், இந்த கோபிகைகளின் கண்கள் என்னும் மீன்கள் நீச்சல் அடித்துக் கொண்டிருந்தன. முனிவர்களைப் போல, இவர்களும் தங்களின் தேகம், மனம், செல்வம் ஆகிய அனைத்தையும் ஸ்ரீகிருஷ்ணனிடம் ஒப்படைத்து, தங்கள் மனதிற்கு பிடித்தவனின் ரூபத்தை நினைத்தனர். ஸனகாதி முனிவர்களால் வணங்கப்படுபவனின் அபாரமான அழகு என்பதான கடலில், தங்களின் ஹ்ருதயத்தின் தாபங்கள் அனைத்தையும் மூழ்கடித்தனர். (கவலைகளை மறந்தனர்). || 4

யோகிகளுக்கு விஜ்ஞானம் தோன்றி, சுகங்கள் வந்து, மனதில் மகிழ்ச்சி தோன்றியது. ஸ்ரீயஜ்ஞேஸ்வரனின் பதம் என்னும் ஸ்வர்க்கத்தின் (சுகத்தின்) சமீபம் கிடைத்து என்பதில் அவர்களுக்கு மகிழ்ச்சி பொங்கியது. அங்கு கூடியிருந்த அனைத்துப் பெண்களுக்கும், நாம் மோக்ஷத்திற்கு வந்து விட்டோமோ என்று தோன்றியது. இவர்கள் ஸ்வர்க்கத்தில் இருக்கும் பக்தர்களே ஆகிறார்கள். எப்போதும் மகிழ்ச்சியுடன், சோகத்தை விட்டவர்களாக இருந்தனர். || 5

குந்த, மந்தாரை, தாமரை போன்றதான மலர்களின் நறுமணத்தை தாங்கிய மென்மையாக வீசும் காற்று. கோவர்த்தன கிரியின் அருகில் இருந்த அந்த இடத்தில், விரஹ தாபத்தில், அதிகமான ஆனந்தத்தை அனுபவித்தவாறு, மெதுவாக பாயும் காளிந்தி நதியின் மணல் நிறைந்த கரையில்,

அந்த பவித்ரமான இடம் இருந்தது. அங்கு சந்திரனின் ஒளியில், நந்தகோபனின் மகனான ஸ்ரீகிருஷ்ணனின் ஆட்டம் / விளையாட்டானது மிகவும் அழகாக இருந்தது. ||6

ரீங்காரம் செய்து கொண்டிருக்கும், ஆறு கால்களைக் கொண்ட தேனீயின் இனிமையான சத்தமானது, மான் போன்ற விசாலமான கண்களைக் கொண்ட கோபிகையர்களின் காதுகளுக்கு இனிமையைக் கொடுத்தது. ஸ்ரீஹரியின் அருமையான தரிசனம், தொடுதல் ஆகியவற்றால் மகிழ்ச்சி கொண்ட அவர்கள், மன்மதனின் பாணத்திற்கு கட்டுப்பட்டவர்கள் போல ஆனார்கள். சிறந்ததான சாஸ்த்ரார்த்தம், ஸ்ருதி அர்த்தம் ஆகியவற்றை புரிந்து கொண்டதைப் போல அந்தப் பெண்கள் ஆனார்கள். (ஸ்ரீஹரியே சாஸ்த்ர அர்த்தமாக இருக்கிறான். அவனே வந்து அவர்களை அடைந்திருக்கிறான்). அவனே ஸர்வோத்தமன். ஸ்ரீயின் தலைவன். ஸுந்தரன். அவன் வேகமாக அவர்களிடம் போய் சேர்ந்தான். || 7

அழகான கண்களைக் கொண்ட அந்தப் பெண்கள், காமனின் தந்தையான அந்த ஸ்ரீகிருஷ்ணனை, தம் முன் இழுத்துக் கொண்டு, தம்முடைய இரு முலைகளை மூடியிருந்த உத்தரீயத்தினால் (மேலாடையினால்) அவனை இழுத்தனர். சந்தன, குங்கும, வாஸனையான கஸ்தூரி, புனகு ஆகியவற்றால் நன்றாக அலங்காரம் செய்யப்பட்டிருந்த அந்தப் பெண்களின் குழுவின் நடுவில் வந்து நின்றான், பரப்ரஹ்மன். || 8.

லக்ஷ்ம்யாத்மகமான (அப்ராக்ருதமான), நாசமில்லாததான, நலம் மிக்க, அபயம் அளிப்பதான, ஆஸனத்தில் முகுந்தன் அமர்ந்தான். கோபியர்களின், வியர்வை வாசம் நிறைந்ததான, அவர்களது முலை, மேலாடை ஆகியவை அவன் மேல் பட, அம்மம்மா, போதும் என்றான். (அவன் அந்த துர்கந்தத்தை பொருட்படுத்தவில்லை). அந்த ஸ்ரீகிருஷ்ணன், மூன்று விதமான ப்ரமைகளை நீக்கியவனான, முனிவர்களின் ஹ்ருத் கமலத்தில் வீற்றிருப்பவன். கோவிந்தன். யமுனா நதிக்கரையில், மான் போன்ற கண்களைக் கொண்டவர்களான கோபிகையர்களின், காமுக பக்தி தனக்கு வேண்டும் என்றான். || 9

யோகேஶ்வரனின் ஈஶ்வரன், இவ்வாறான ஆச்சர்யத்தினாலான பெரும் லீலையை காட்டினான். அந்த கோபியர்களுக்கு, காமனின் அம்பு வந்து வேகமாக தாக்குமாறு செய்தான். அப்போது அவர்கள் தபோ யோகம் வந்து சேர (அவர்களில் இருந்த பகவந்தனின் ப்ரேரணை ஆக), ஸ்ரீகிருஷ்ணன், தாமரைக் கண்ணன், அவர்களுக்கு வேகமாக ஸம்யோகத்தின் விருப்பத்தினை அருளினான். || 10

உயர்ந்த புருவங்களால் அழகாக இருந்த ஸ்ரீகிருஷ்ணனை, அவனுடைய நக ஸ்பர்ஶனத்தினால், அவனது பேச்சுக்களால், மூன்று உலகங்களுக்கும் அதிபதியான ஸ்ரீகிருஷ்ணன் தான் அவர்களுக்கு ரதி ஸங்கமத்தின் சுகத்தை அவர்களுக்கு அளித்தான். காமனின் வில்லின் தாக்கம், இந்த பத்மநாபனின் அதிகமான அருளால் அவர்களுக்கு ஆனது. அப்போது ஸ்ரீதேவியை தன் ஹ்ருதயத்தில் வைத்திருக்கும், சந்த்ரனைப் போல ஒளிர்பவனிடம், அந்தப் பெண்கள் அனைவரும் வந்து இவ்வாறு கோபத்தில் பேசத் துவங்கினர். || 11

ஹே தலைவனே, ஒருத்தி வந்து உன்னை அழைத்தால், நீ அவளை பார்க்கிறாய். ஒருத்தி உன்னை அழைத்தால், நீ அவளை பார்ப்பதில்லை. ஒருத்தி உன்னை அழைப்பதேயில்லை. நீ அவளை பார்க்கிறாய். ஒருத்தி உன்னை அழைப்பதேயில்லை. ஆகையால் நீ அவளை பார்ப்பதேயில்லை. உன்னை பார்க்க வேண்டுமா? பார்க்கக்கூடாதா? இரண்டுமே எனக்கு தெரியவில்லை. ஹே முராரியே, கேள். இந்த மேற்கூறிய நால்வரில் யார் சிறந்தவர்கள்?. ஹே தயாநிதியே. ஸ்ரீஹரியே.

உன்னுடைய பாத பத்மங்களில் நான் விழுந்து வணங்குவேன். சிறந்ததான சரித்ரங்களைக் கொண்டவனே. நம் துன்பங்கள் அனைத்தையும் களைபவனே. சொல்வாயாக. ||12

இந்து முகியர்கள் அனைவரும் இவ்வாறு கூறினால், மந்தரதரனான, ஸ்ரீதேவியின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு கூறினான். தமக்குப் பொருந்தாத விருப்பங்களைக் கொண்டிருக்கும் மந்த மதிகளைக் கொண்டவர்களுடன் சேர்ந்திருப்பது என்பது என்னுடைய தர்மம் அல்ல. ஒரேயொரு விருப்பங்களைக் கூட கொண்டிராத மனிதர்களுக்கு நான் தரிசனம் அளித்தேன். இது பொய் அல்ல. உண்மையே. ஒரு தந்தைக்கு தன் மக்கள் மேல் எப்படி நட்பு / பாசம் எப்போதும் இருக்கிறதோ, அவ்வாறே எனக்கு முக்தி யோக்யர்கள் மேல் எப்போதும் அன்பு இருக்கிறது. || 13

ஒரு மனதுடன் எப்போதும் ஸர்வோத்தமனை மனதில் வைத்திருப்பவர்களை, அத்தகைய ஜ்ஞானிகளை நான் அடைவேன். தன் மக்கள், கணவன்/மனைவி, உறவினர், நண்பர் என இவர்கள் அனைவரைவிடவும் அதிகமாக யார் என்னிடம் ப்ரியம் வைத்திருக்கிறார்களோ, நான் அவர்களை அடைவேன். வேறொரு ப்ரதி லாபத்தை எதிர்பார்த்து என்னை வேண்டாத (என்னிடம் எதையும் எதிர்பார்க்காமல் வேண்டுபவர்களை), முக்தியை விரும்புபவர்களை மட்டுமே நான் அடைவேன். பக்தர்களின் அமிர்தம். விரக்தர்களின் காமதேனு. அத்தகையவர்களை நான் எப்போதும் சென்று அடைவேன். || 14

இழந்து விட்ட செல்வத்தை எண்ணி, ஒரு செல்வந்தன் எவ்வாறு அவனது புத்தி கவலைப்படுமோ அதைப் போல நீங்களும் என்னை இழந்ததால் இன்று அழுதவாறு, என் மேல் அதிகமாக பக்தியை வைத்தவாறு, இந்த காட்டில் சுற்றி தேடித் திரிந்திருக்கிறீர்கள். இந்த பூமியில் நான் உங்களிடம் பட்ட கடனை எப்படி தீர்ப்பேன்?. என்று பஞ்ச பௌதிக சரீரம் கொண்டவர்களான அந்த கோபிகையர்களிடம் மாதவன் கூறினான். இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணன் பேசியதே, மோக்ஷத்திற்கான வழியின் பேச்சுக்கள் ஆகும். || 15

ஸ்ரீஹரியின் முகத்திலிருந்து வந்ததான இந்த அமிர்தத்தைப் போன்றதான, இந்த வாக்குகளை, தங்கள் காதுகளால் கேட்டு, விரக தாபத்தினால் வெந்த, அதனால் வந்த ஜுரத்தினை போக்கிக் கொண்டனர். அழகானவனான ஸ்ரீகிருஷ்ணனின் அங்கஸங்கத்தை விரும்பியவர்களுக்கு ஸ்ரீஹரியானவன், பரமபுருஷன், ஹரி, ஸ்வரமணன், அந்த கோபியர்களுக்கு, சிறந்ததான ராஸ க்ரீடைக்கு வந்து, மான் போன்ற விசாலமான கண்களை உடைய அந்த பெண்களை அழைத்தான். அவர்களின் அருகில் நின்றவாறு அவர்களை அழைத்தான். || 16

யோகேஶ்வரனுக்கு ஈஶ்வரன் ஆன ஸ்ரீகிருஷ்ணன், பாம்பினைப் போல நளினமாக நடக்கும் அந்த பெண்களின் மண்டலத்தில் (அருகில்) நடுவில் வந்து நின்று, இருவருக்கு ஒரு ரூபம் என்றவாறு தான் எடுத்தான். தனக்கு தானே சுகம் அனுபவிப்பவன் அவன். பாம்புகளைப் போல நீண்ட கூந்தல் கொண்டவர்களின் தோள்களில், தன் தோள்களை / கைகளை வைத்தான். தன் கைகளை அவர்களின் கழுத்தில் வைத்தான். நன்றாக போகம் கொண்டான். ஸத்வ, ரஜஸ், தமஸ் ஆகிய மூன்று குணங்களை விட்டவர்களுக்கு தரிசனம் அளித்ததைப் போல, இந்த கோபிகைகளுக்கும் ஸ்ரீகிருஷ்ணன் தரிசனம் அளித்தான். || 17

ஸ்த்ரீ ரத்னங்கள் நடுவில், ஸ்ரீகிருஷ்ணன் கார் மேகம் போல தேகம் கொண்டவன் எப்படி இருக்கிறான் என்றால், தங்க மணிகள் கோர்க்கப்பட்ட ஒரு மாலையில் நடுவில் அழகான நீல மணி இருப்பதைப் போல இது தெரிந்தது. இவன் குணங்களின் கடல். அந்த கோபிகையர்களின் கால்களில் அணிந்திருந்த கொலுசுகளின் சத்தம், அவர்களின் கைகளிலிருந்த ஆபரணங்கள், கழுத்தில் இருந்த ஆபரணங்களிலிருந்து அழகான சத்தம் வந்து கொண்டிருந்தன.

ஒப்புமையேயில்லாத சுகங்களின் கடல் நந்த கிஷோரன். அவனே அனந்த குணங்களின் இருப்பிடம் அவனே. || 18

ஒரு சங்கு மண்டலத்தை நடுவில் ஸ்தாபனம் செய்து, அந்த கோபிகையர்களை ஸ்ரீகிருஷ்ணனானவன் அடைந்து, அவர்களை அந்த மண்டலத்தைச் சுற்றி ஒரு வட்டமாக நிறுத்தினான். தானும் அவர்களுடன் அவர்களின் அருகில் நின்றான். அந்த கோபிகையர்களின் திடமான, இனிமையான, சுவையான ஸ்வரங்களின் பாடல்களை கருணைக்கடலான ஸ்ரீகிருஷ்ணன் கேட்டான். நடனம் ஆடுவதற்கான வழிகளை அவன் அவர்களுக்கு தானே ஆடியவாறு காண்பித்தான். || 19

காம, க்ரோதங்களை வென்று, மிக்க நியமத்துடன் அவற்றை பின்பற்றி வந்த சந்த்ர குலத்தவர்களுக்கே இது (ஸ்ரீகிருஷ்ணனின் கருணா த்ருஷ்டி) துர்லபம். பல ஹோமங்களை செய்து, ஹவிஸ்களை கொடுத்து, ஸோம ரஸங்களை உண்ணும் அந்த குழுவினருக்கு இது (ஸ்ரீகிருஷ்ணனின் கருணா த்ருஷ்டி) மிகவும் துர்லபம். இந்த பூமண்டலத்தை சுற்றி வந்து, இமாலய பர்வதத்தையே தானம் கொடுத்தவர்களுக்கேகூட இது (ஸ்ரீகிருஷ்ணனின் கருணா த்ருஷ்டி) மிகவும் துர்லபம். ஸ்ரீமஹாலக்ஷ்மியின் ஸ்வாமியான ஸ்ரீகிருஷ்ணனின் காமினிகளான இந்த கோபிகையர்களுக்கு இந்த பாக்கியம் என்பது மிகவும் சுலபமானதே ஆகும். || 20

ரங்கனின் மங்களமயமான பாத கமலங்களின் சங்கதிகளை (அவனது காலடித் தடங்களை) அடையாளம் கொண்டு, அவர்கள் அவனது ஒவ்வொரு இயக்கத்தையும் தங்களின் கண்களால் பார்க்கின்றனர். அது அவர்களின் கண்களுக்கு மிகவும் இதத்தைத் தந்தது. காமத்தை வென்றவனின், குணங்களைப் பற்றி பாடிய அந்தப் பெண்கள், அவற்றை அவனுக்கே அர்ப்பணம் செய்தனர். உத்தமோத்தமனான, ஆகாயத்தில் சுற்றித் திரிபவனான, ஸ்ரீ ப்ரஸன்ன வெங்கடன், அவனின் சங்கத்தைப் பெற்றவர்களுக்கு அபாரமான சுபம் (நலன்கள்) உண்டாயிற்று. || 21

**

**45. ஸ்ரக்3தரா வ்ருத்த**

**பாத3ந்யாஸங்க3ளிந்தா3 பு4ஜக3ள ஒளுபிம் ப்4ரூவிலாஸங்க3ளிந்தா3**
**மோத3 ஸ்மீதேக்ஷணயதி3ந்தா3 மணிவ நடு3வினிம் நர்திபா ஜவ்வனேரு**
**தே3தீ3ப்யப்ரொஜ்ரவாலே கத3பிலி ஹொளெயல் ஸோர்முடி3பீ3ட்ட்யலேயல்**
**ஸ்வேதா3ஸ்யாளேயரிந்தா3 ஹரிவது4 தடிதவு மிஞ்ச மேகா4ங்க3த3ல்லி ||1**

**ஸ்வரவனெத்தி பாடி3த3ர் ஸுகண்டெ3யர்மதா3ன்விதேர்**
**ஹரிஸ்பர்ஶோத்ஸவாகி3ரள் ஸுகா3யகேர்ஹரிப்ரியர் ||2**

**முகுந்த3கா3னகெ ஸம ஸுகுந்த3த3ந்திநியோர்வளு**
**ஸ்வகௌஶலவ தோர்த3ளு ஸுஸாது4 ஸாது4 என்னலு ||3**

**ஸ்வரங்க3ள ஸுஜாதிகெ3 ஹரியு மெச்சிதா3கெகெ3**
**பரம்ம மானவித்தனு பராத்பர ஸ்வப்ரியனு ||4**

**ப3ளலித3 நாரியொப்3ப3ள அலர்முடி3யு செல்லலு**
**ப3ளியலிரலு க3தா3த4ரனு அவள்கெ3 ஸ்கந்த4வித்தனு ||5**

**ஸுசந்தனோத்பலங்களிம் ஸுசிந்ஹிதா ஸுபாஹுகளிம்**
**சுஞ்சுபிஸ்யாக்ராணிஸிதளு ஶுசிவ்ரதெயு ஒப்பளு ॥6॥**

**பெமர்து ஸ்ராந்தகோவளேரமர்து அப்பி தோள்களிம்**
**ஸும்ருஷ்ட தாம்புலிச்சிஸல் ஸுமாரனய்ய நீடளு ॥7॥**

**கபோலதோள் கபோலவம் ஸுப்ரியளொப்பளிட்டளு**
**கோபாலகேஶனோஷ்டதொள் நிஜோஷ்ட ஒப்பளிட்டளு ॥8॥**

**ஸுகந்தவெத்த தம்புலவ ஸ்வநாத நீடே மெத்தளு**
**ஸுகீதவெத்தி பாடிதள் ஸுன்ருத்ய ஒப்பளாடிதள் ॥9॥**

**ஜணத்கரிப அந்துகெ கிணிக்கிணிப்ப கிங்கிணி**
**மணிய காஞ்சிதாமதிம் மணிவ மத்யேயொப்பளு ॥10॥**

**குணிது தணிது ஒப்பளு மனோஜனய்யனப்பலு**
**ஸ்தனத்வயங்களொள்ஹரிய பாணியனோத்திகொண்டளு ॥11॥**

**ஏகாந்தப்ரியனம்ஸதொளு ஸ்கந்தரொப்பளிட்டளு**
**ஸுகிளக்ரணியொப்பளு முகம் முகக்கே நீடலு ॥12॥**

**ப்ரஸன்னக்ருஷ்ணனங்கனெர் ப்ரஸன்னதெயொளித்தனு**
**ப்ரஸன்னவாத ஶுகுமுனி ப்ரஸன்ன வாக்யகீர்தனெ ॥13॥**

**ப்ரஸன்ன வேங்கடேஶன ப்ரஸன்ன வார்தேகேள்தனு**
**ப்ரஸன்னசித்த பூபதி ப்ரஸன்ன பாகவதனு ॥14॥**

கோபியர்கள் நடனம் ஆடும்போது, அவர்களின் பாதங்களின் அசைவுகளால், அந்த தோள்களால், ஒளிர்வதான அவர்களின் புருவங்களால், மகிழ்ச்சிகரமான அவர்களின் புன்னகையுடன், மெலிதான இடைகளுடன், நடனம் ஆடிக் கொண்டிருக்கும் அந்தப் பெண்கள், அவர்களின் காதில் போட்டிருந்த ஆபரணங்கள் அதன் ஒளி அவர்களின் கன்னத்தில் பளபளத்தது. அந்த நடனத்தினால் அவர்கள் கூந்தல் அவிழ்ந்து, அங்கும் இங்குமாக ஆடியது. அவர்களின் முகத்தில் வியர்வையும் பொங்கி வழிந்தது. ஹரி வதுகளான இந்த கோபியர்கள், மேகத்தில் காணப்படும் மின்னல் போல ஒளிர்ந்தனர். || 1

அவர்கள் நன்றாக குரல் எடுத்து பாடினர். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனின் குரலுடன் சேர்த்து பாடத் துவங்கினர். ஸ்ரீஹரியின் ஸ்பர்ஶனம் அவர்களுக்கு ஆனதால், அந்த பாடகிகள் அனைவரும் ஸ்ரீஹரியின் ப்ரியர்களே ஆயினர். || 2

முகுந்தனின் கானத்திற்கு சமமாக (அதே ஸ்வரத்துடன்) அவர்களும் பாட, இன்னொருவளும் அதே போல பாடத் துவங்கினாள். தன்னுடைய திறமையை இன்னொருத்தி காண்பிக்க, ஸ்ரீகிருஷ்ணன், ‘அற்புதம், அற்புதம்’ என்று அவர்களின் பாடல்களைப் போற்றி புகழ்ந்தான். || 3

அவர்கள் பாடிய ஸ்வரங்களுக்கு, பாடல்களுக்கு, ஸ்ரீஹரி அவர்கள் அனைவரையும் மெச்சினான். அவர்களை நன்றாக புகழ்ந்தான். அவன் பராத்பரன். ஸ்வப்ரியன். ||4

இவ்வாறாக பாடிக் கொண்டிருந்த ஒரு பெண், சோர்வடைந்தாள். அவளது கூந்தல் முடி அவிழ்ந்து விழ, இதைக் கண்ட ஸ்ரீகிருஷ்ணன், இவள் சோர்வு அடைந்திருக்கிறாள் என்று சொல்லி, அவளுக்கு தன் தோள்களைக் கொடுத்து, அதில் சிறிது நேரம் ஓய்வெடுக்கக் கூறினான். || 5

தூய்மையாக (பவித்ரமாக) விரதம் செய்பவளான ஒருத்தி, நன்றாக சந்தனம் பூசப்பட்ட ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட, சின்னங்கள் இருந்ததான தோள்களில் இருந்த சந்தன நறுமணத்தை அவள் முகர்ந்து பார்த்தாள். || 6

அழகாக இருந்த இன்னொருத்தி, ஸ்ரீகிருஷ்ணனின் தோள்களை அப்பிக் கொண்டு, நீ மென்று கொண்டிருக்கும் சுவையான தாம்பூலத்தை எனக்குக் கொடு என்று விரும்பிக் கேட்டாள். அதைக் கேட்ட, மன்மதனின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணனும், அதை அவளுக்கு அளித்தான். || 7

ஸ்ரீகிருஷ்ணனின் கன்னத்துடன் கன்னம் இழைத்து, ப்ரியமானவள் ஒருத்தி நின்றிருந்தாள். கோபாலகர்களின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணனின் உதட்டில் உதடு வைத்து ஒருத்தி இருந்தாள். || 8

நறுமணம் மிக்க தாம்பூலத்தை, ஸ்வநாதனான ஸ்ரீகிருஷ்ணன் கொடுக்க, ஒருத்தி அதை வாங்கி மென்றாள். ஒருத்தி நல்ல ஸ்வரம் எடுத்து பாடினாள். ஒருத்தி நல்ல நாட்டியம் ஆடினாள். || 9

ஜலஜலக்கும் சலங்கையில், கிணிகிணி என சத்தம் கொடுக்கும் மணிகள் ஆகியவற்றை அணிந்து கொண்டு, தங்கமயமான ஆடைகளை அணிந்து கொண்டு ஒருத்தி நின்றிருந்தாள். ||10

குதித்து, ஆடியவாறு ஒருத்தி, மன்மதனின் தந்தையை ஒருத்தி கட்டிக் கொண்டாள். இன்னொருத்தி தன்னுடைய இரு ஸ்தனங்களில், ஸ்ரீஹரியின் கைகளை எடுத்து ஒத்திக் கொண்டாள். ||11

ஏகாந்த ப்ரியனான ஸ்ரீகிருஷ்ணனின் தோள்களில், ஒருத்தி தன் தோள்களை சேர்த்து வைத்துக் கொண்டாள். தோழிகளில் தலைவியாக இருந்த ஒருத்தி, ஸ்ரீகிருஷ்ணனின் முகத்துடன் தன் முகத்தை சேர்த்துக் கொண்டாள். ||12

ப்ரஸன்ன கிருஷ்ணன், தன் தோழிகளுடன் (அந்தப் பெண்களுடன்) மகிழ்ச்சியாக இருந்தான். ப்ரஸன்னமான ஶுக முனிவர், இவ்வாறான நல் வாக்கினைக் கூறினார். || 13

ப்ரஸன்ன வெங்கடேஶனின், மகிழ்ச்சி தருவதான வார்த்தைகளை கேட்டான். மகிழ்ச்சியான சித்தத்தைக் கொண்டவனான பரீக்ஷித் அரஸன், அவன் ப்ரஸன்ன பாகவதன் (ஸ்ரீகிருஷ்ணனின் பக்தன்). || 14

**46. ராக: மோஹனகல்யாணி தாள : ஜக்கணி**

**ராஸ க்ரீடெயலாஸகர்கெ வாசுதேவன**
**லேஸினாட லேஶ தோர்து தோஷிஸி மன || ப**

**துருபு ஸடலி மோரெய மரெய குருளினஸியரு**
**கரத கங்கண நூபுர ஜணத்கரிப அபலேரு || 1**

**நெரெ பெமர்து மெரெவ வதன கிரியனகெயரு**
**ஹரிணாங்கன்ன பரித காந்திலி வரிஸூதித்துரு ॥2॥**

**முடியமாலிகே ஸடலிதுதகெ ஸிடிவ ரபஸதி**
**கடலஶயனனொடனெ ஸமவிடிதுல்லாஸதி ॥3॥**

**பிடதே லயவ ஜடிது நர்திஸே ம்ருட ஸுரேஶர**
**கடண தம்ம மடதியரனு ஹுடுகுதித்துரு ॥4॥**

கௌதியர மஞ்சுளகாயன நளினநயனன
களத ஸொபிகனொளகெ மெரெவ அளிகள ஸ்வன ॥5॥

லலிததொரெ நளினஸம்பவேஶருகளாத்யர
பளக மௌனதலி குளிதரு தலெபாகி அவர ॥6॥

ஹரிகராப்ஜதி ஸ்வருஶி கோவேர கரிகராபவ
ஸரள தோளுகளெரடனப்பித கருணரஸதிந்த ॥7॥

பரமபுருஷ பரமமுகுதரரஸ ஸிரிவர
நரவிடம்பன அருஹித கோவேயரிகெ மனோஹர ॥8॥

ஹஸிதவக்த்ர லஸத் ஸ்வதந்த்ர ஶஶிமுகியரொளு
அஸம க்ரீடாவிலாஸதி ஒப்பித ஸ்வமுகி தயாளு ॥9॥

காமார்திராத காமினியரிகெ காம பூரைஸிதா
ராமேரிகெ ஆத்மராம ஸங்கிஸித ப்ரேமாகுலேக்ஷணத ॥10॥

பிட்ட முடிகள கட்டலில்லவரு உட்டம்பர ஹொந்தரு
இட்டடி குசத பட்டிகெ காணரு கட்யாகி பெரதரு ॥11॥

இட்டிஹாலங்காரவஷ்டு மரெதரு தொட்ட கஞ்சுககள
புட்டவு பிட்டரெதிட்டியிம் நோடரு க்ருஷ்ண பாவுகெயரு ॥12॥

தேஹேந்த்ரிய ப்ராண ஶ்ரீஹரிகர்பிஸி பாஹ்யார்தவம் மரெத
ஸ்நேஹக்கெ மெச்சித ஆ ஹெங்களெளகத ஸாஹஸகொப்பித ॥13॥

ஈ ஸர்வவிஷயதா3ஸெய மரெத3 அஸம்ப்ரஜ்ஞாதரிகெ3
ஈஶனொலித3ந்தெ ஆ ஸதியரனுல்லாஸதி3 கூடி3தா3கெ3. ||14

ஸுரநாரியரு ஹரியக்ரீடெ3கெ3 பெ3ரெது ஸம்ப்4ரமிஸி
பெ2ரெத3ர் தம தம்மரஸர ஸ்மரஶரகெ மோஹிஸி ||15

ம்ருட3னஹிதன நிடு3ஸரளிக3ஞ்ஜி உடு3ப தன்னய
மட3தி3யரனு ஹூடு3கி வேக3தி3 கூடி3த3 நோடி3ரய்ய ||16

பா4வகெ மெச்சித3 ஶ்ரீவத்ஸலாஞ்ச2னா கோ3பேரனப்பித3னு
தே3வியரானந்த3 தீவித3 வார்தி4கெ3 ஶ்ரீவர சந்த்3ரமனு ||17

கோ3பேர ஸங்க்2யெகெ3 ஶ்ரீபதி ஸ்வகீய ரூபக3ள தோரித3
ஆபன்னரபீ4ஷ்ட தா பூர்ணமாடி3த3 ப்ரேமதி3 முகுந்த3 ||18

ஸதியரெல்லரு ரதிவிஹாரதி3 அதுள ஶ்ராந்தராகெ3.
ரதிபதிபிதாச்யுத ஹெங்க3ள்க3ளா ப்ரததி ஹொந்தி3 ஆகெ3 ||19

கமலாக்ஷியர ஶ்ரமெய பெ3மர ரமேஶ தெகெ3த3ரெ.
அமரனாரேரு ப்ரமிஸி லீலெகெ3 அமம எனுதிரெ. ||20

கப்3பு3பி3ல்லன கொப்3பு3 முரிதி3ஹ ஹப்3ப3னுண்ட3ஸியரு
ஹுப்போரெக3ணிலி உப்3பு3ப்3பி3 நோடி3த3ரப்3தீ3ஶனங்க3னேரு ||21

ஹொளெவ குண்ட3ல உலிவ குந்தள எளெனகெ3காந்திய
பௌகி3லொப்பவ நல்லன நோடி3 கங்க3ளவு த3ணியவை ||22

ஈஶன ஸூரதஹாஸ விலோகனகெ ஸதியரு மெச்சி
ஶ்ரீஶுப4கு3ணவ தோஷதி3 பாடி3த3ரு ஸுகா2ம்பு3தி4 ஹெச்சி ||23

தன்னங்க3ஸங்க3தி3 கி2ன்னாஸ்ய ப3ளலித3 கன்யேர குசத3லி
கி2ன்ன குங்கும க3ந்தா4னுலேபாங்க3வ நோடி3த3 த3யெயலி ||24

பீன பயோத4ரதா3 நாரியரிந்த3ஜ்ஞானானந்த3வாரிதி4
தா நீர பொக்க ஹெண்ணானெக3ள கூடி3 மத்3தா3னெயந்தெ ப4ரதி3 ||25

காளிந்தி மத்யதி காளாஹிவேணேர ம்யாளதி ஸ்நேஹதலி
ஶ்ரீலோல க்ரீடிஸெ பாலேரு ரங்கங்கே மேலே நீரு செல்லலு ॥26॥

க்ருஷ்ண மரளி யதேஷ்ட நீரு சல்லெ துஷ்டிஸி ஸகியரு
ஸ்ருஷ்டேஶன மேலே ஒட்டிதரு ஜலதொட்டிலு ஸுகுணேரு ॥27॥

ரங்கன ஆடகெ அங்கனேர் நோட்டகெ ப்ருங்ககள பாடகெ
ஜங்குளிகட்டி ஸுராங்கனேர்ஸுரரு ஸங்கீத ஹேளலிக்கே ॥28॥

வைமானிகரெல்ல ப்ரேமாப்திலோலாடி பூமளெகரெயலு
ராமேயரொளாத்மராம க்ரீடிஸித ஸோமாம்ஶுகாஶதலி ॥29॥

ஆமோதமயவாதா மந்தமாருத வாமத்ருஶோராவ்ருத
ராமானுஜனோடி யமுனெ கொல நிஸ்ஸீமவெந்தவனிதா ॥30॥

ஸர்வதர்மஜ்ஞனு ஸர்வகோப்த வ்யாப்த ஸர்வஸ்வதந்த்ர த்ருப்த
ஸர்வ விஶ்வேதர ஸர்வ ஸுரேஶ்வர ஸர்வார்தாத நாத ॥31॥

யாவ முகுந்தனங்க்ரிவரிஜரஸ ஸேவிப யோகிகள
பாவத்ருப்திய கண்டு வாஸுதேவகெ ஈ விஷயாஸெகள ॥32॥

யாவ ஹேளுவனேவெ தமோயோக்ய கோவிதரெ பல்லரு
அவன க்ரீடாகுண விஶிஷ்ட லீலெகெ விஸ்ராந்திகாணரு ॥33॥

நமோ நமோ நமோ நாரத ஸங்கேயா நமோ நமோ ஸ்வப்ரியா
நமோ நமோ நமோநந்த ஸத்குணாத்மா நமோ நமோந்த்ராத்ம ॥34॥

விஷ்ணுராதங்கே விஶிஷ்ட க்ருஷ்ணலீல ஶிஷ்ட ப்ரஹமரதனு
ஸ்பஷ்டாகி ஹேளலு துஷ்டிலி ந்ருபேஶனு இஷ்டிலி கேளிதனு ॥35॥

ஶ்ரீக்ருஷ்ணாஸ்ரித ஏகாந்திகளிகே வ்யாகுல சித்தவில்ல
ஶ்ரீக்ருஷ்ணக்ஹேளுவ போகதனுஞ்ஜரநீக ஸந்தேஹவில்ல ॥36॥

கோஷ்டத கோபேரிகிஷ்ட ஸுகவித்து ஸ்ருஷ்ட தா நிர்லிப்தனு
ஶிஷ்டர்கே மோஹவொந்திஷ்டு தோரதெந்து துஷ்டர மோஹநனு ॥37॥

**ஶ்ரீபதியாஜ்ஞேயிம் கோபேரு ஸார்தரு தாபபட்டாலயவ**
**ஸ்வபத்னிவியோக கோபர்கெ தோரது ப்ரேரிஸே மாதவ ॥38॥**

**ஶ்ரீதேவியோதன பாதாங்குலி நக ஆதரதிம் நோடுத**
**மோதிதிந்தொந்து குணாத்யந்த காணலு வேதோக்தானுக்தகாதா ॥39॥**

**ஸ்ருஷ்ட்யாதிகாரண ஶிஷ்டஸம்ரக்ஷண துஷ்டநாஶக மோஹன**
**கோஷ்டத நாரேந்திஷ்டானுஸார பேலேஷ்டதகதஹன ॥40॥**

**ஆபன்ன ஜனர தாபபாபஹர ஶ்ரீ பரப்ரஹ்ம க்ருஷ்ண**
**ஈ பரி ஹொரரெவனு ஶ்ரீப்ரஸன்வெங்கடாதிப வ்ருந்தாரகேஷ்ட ॥41॥**

ராஸ க்ரீடையில் ஈடுபட்ட அந்த பெண்களுக்கு வஸுதேவனின் அற்புதமான ஆட்டம், அவனுடைய லீலைகள், அவர்களின் மனதிற்கு மகிழ்ச்சியை தருகிறது. || ப

அந்தப் பெண்கள் நடனம் ஆடியதால், அவர்களின் கூந்தல் அவிழ்ந்து, அவர்களின் முகத்தை வந்து மறைத்தது. அவர்கள் தலைமுடி சுருள் சுருளாக இருந்தது. அவர்களின் கையில் இருந்த கங்கணம், கால் கொலுசு, ஆகிய அனைத்தும் ஜணஜண என்று சத்தம் செய்தன. || 1

இவ்வாறு நடனமாடியதால், முகம் நிறைய வியர்வையுடன் திகழ்ந்த புன்னகையுடன் கூடிய அந்த அழகான பெண்கள், மான் போன்ற விசாலமான கண்களைக் கொண்ட அந்த ஶ்ரீகிருஷ்ணனை, தங்களின் அழகினால் மயக்கிக் கொண்டிருந்தனர் (சேவை செய்து கொண்டிருந்தனர்). || 2

இந்தப் பெண்கள் அணிந்திருந்த மாலைகளிலிருந்து பூக்கள் கீழே உதிர்ந்து கொண்டிருந்தன. பாற்கடலில் படுத்திருப்பவனான ஶ்ரீகிருஷ்ணனுடன், இவர்கள் அவனுக்கேற்ப மகிழ்ச்சியுடன் நடனம் ஆடிக் கொண்டிருந்தனர். || 3

லயத்தினை விட்டுவிடாமல் இவர்கள் நடனம் ஆடிக் கொண்டிருக்க, ருத்ரதேவர், இந்த்ரனே முதலானவர்கள் தங்களின் மனைவியர்களுடன் வந்து இந்த அற்புத காட்சியை பார்ப்பதற்கு முயன்றனர். || 4

இந்தப் பெண்களின் இனிமையான பாடல்கள், மலர்ந்த கண்களைக் கொண்ட ஶ்ரீகிருஷ்ணனின் ஆட்டம் என்பதான இந்த சூழ்நிலையில், அங்கு பறந்து கொண்டிருந்த தும்பிகளின் ரீங்காரமும் இனிமையாக சேர்ந்து கொண்டிருந்தது. || 5

ஶ்ரீதேவியின் தலைவனான ஶ்ரீகிருஷ்ணன், இவ்வாறு தன் கோபிகையர்களுடன் நடனமாடும் காட்சியைக் காண வந்த சதுர்முக ப்ரஹ்மதேவர், ருத்ரதேவரே முதலான அனைத்து தேவர்களும், மௌனமாக தங்களின் தலை குனிந்தவாறு அங்கு அமர்ந்தனர். || 6

ஶ்ரீஹரியானவன், தன்னுடைய கைகளால், அந்த கோபிகையர்களின் அழகான தோள்களை, மிகவும் கருணா ரஸத்துடன் கூடியவனாகி, தொட்டான். || 7

பரமபுருஷனான, பரம முக்தர்கள் அனைவருக்கும் கதியாக இருப்பவன், ஶ்ரீதேவியின் தலைவன், மஹோஹரனான ஶ்ரீகிருஷ்ணன், தான் நரனாக வந்திருப்பதால், அதற்கேற்ப செயல்களை செய்து காட்டினான். || 8

புன்னகையுடன் கூடிய முகத்துடன், தானாகவே சந்த்ரனைப் போன்ற அழகினைக் கொண்டவர்கள் அந்தப் பெண்கள். இத்தகையவர்களுடன், தயாளுவான ஶ்ரீகிருஷ்ணன், தன்னுடைய க்ரீடா விலாஸத்தினால் அவர்களை சேர்ந்தான் (அவர்களுடன் விளையாடினான்). || 9

காம பாணத்தால் தாக்கப்பட்டவர்களான அந்த கோபிகையர்களுக்கு, ஶ்ரீகிருஷ்ணன் அவர்களின் காமத்தை (விருப்பத்தை) நிறைவேற்றினான். அத்தகைய காமத்தைக் கொண்ட பெண்களுக்கு, அதனை அளித்தான். அவர்களை மிகவும் காதலுடன் பார்த்தான். || 10

ஆடிய நடனத்தினால் அவிழ்ந்த கூந்தலை அவர்கள் திரும்ப எடுத்து கட்டவில்லை. உடுத்திய ஆடைகளைக் கூட கவனிக்கவில்லை. மேலாடை நகர்ந்ததையும் அவர்கள் பொருட்படுத்தவிலை. ஆனாலும், அவர்கள் இந்த எதையும் பொருட்படுத்தாமல், ஸ்ரீகிருஷ்ணனை கெட்டியாக பிடித்துக் கொண்டிருந்தனர். || 11

அணிந்திருந்த அலங்காரங்கள் அனைத்தையும் அவர்கள் மறந்தனர். அணிந்திருந்த ரவிக்கைகள், பட்டாடை ஆகியவற்றை அவர்கள் விட்டனர். அதை கவனிக்கவேயில்லை. ஸ்ரீகிருஷ்ணனை மட்டும் அந்த ப்ரியமானவர்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். || 12

தங்களின் தேக, இந்த்ரிய, ப்ராண (ஆத்மா) ஆகிய அனைத்தையும் ஸ்ரீஹரிக்கே அர்ப்பணம் செய்து, புற விஷயங்கள் அனைத்தையும் மறந்தார்கள். இத்தகையவர்களின் நட்பினை ஸ்ரீகிருஷ்ணன் மெச்சினான். அந்தப் பெண்களின் குழுவினரின் அன்பினை அவன் ஏற்றுக் கொண்டான். || 13

அனைத்து விஷயங்களின் மேல் இருக்கும் ஆசையை துறந்த அஸம்ப்ரஜ்ஞாத ஸமாதியில் இருப்பவர்களுக்கு ஸ்ரீஹரி மகிழ்ந்து தரிசனம் அளித்ததைப் போல, இந்தப் பெண்களையும் ஸ்ரீகிருஷ்ணனானவன் மிகவும் மகிழ்ச்சியுடன் சேர்ந்தான் / அவர்களின் சேவையை ஏற்றுக் கொண்டான். || 14

தேவலோகப் பெண்கள் இத்தகைய ஸ்ரீஹரியின் க்ரீடைக்கு மகிழ்ந்து, கொண்டாடி, அவர்களும் மன்மதனின் பாணத்திற்கு அடிபட்டு மயங்கியவர்களாக, தத்தம் கணவர்களுடன் சேர்ந்து நடனமாடத் துவங்கினர். || 15

மன்மதனின் பாணத்தில் வசப்பட்டு, உடுபனான சந்த்ரன், தன்னுடைய மனைவிகளான அனைத்து நக்ஷத்ரங்களை தேடி, அவர்களுடன் தான் சேர்ந்து கொண்டான், பாருங்கள். || 16

ஸ்ரீவத்ஸத்தை தன் மார்பில் கொண்டவனான ஸ்ரீகிருஷ்ணன், அந்த கோபியர்களின் பாவத்தினை மெச்சியவனாகி, அவர்களை கட்டிப் பிடித்துக் கொண்டான். ஸ்ரீவரனான, ஸர்வோத்தமனான் அவன், அந்த கோபியர்களின் ஆனந்தத்தை நிறைவேற்றி வைத்தான். || 17

கோபியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு, ஸ்ரீபதியான ஸ்ரீகிருஷ்ணன், தன்னுடைய ரூபங்களையும் அதிகரித்துக் காட்டினான். தன்னை நம்பி வந்த பக்தைகளின் விருப்பங்களை அந்த முகுந்தன், மிகவும் அன்புடன் நிறைவேற்றினான். || 18

அந்தப் பெண்கள் அனைவரும் ரதி விஹாரத்தில் ஈடுபட்டு மிகவும் த்ருப்தி அடைந்தார்கள். ரதியின் பதியான மன்மதனின் தந்தையான அச்யுதன் அவர்களுடன் விளையாடியதில், அவர்களுக்கு பின்னர் சிறிது சோர்வு ஏற்பட்டது. || 19

தாமரை போன்ற கண்களைக் கொண்ட அந்தப் பெண்களின் வியர்வையை ரமாதேவியின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணன் துடைத்து விட்டான். இதைக் கண்ட தேவலோகப் பெண்கள், மிகவும் வியப்படைந்தார்கள். இவனுடைய லீலைகளைப் பார்த்து அவர்கள் 'அம்மம்மா, இது என்ன லீலையோ' என்று கூறிக் கொண்டனர். || 20

மன்மதனின் அம்பினால் காமத்திற்கு உட்பட்ட அந்தப் பெண்களுக்கு அவர்களின் காமம் குறையத் துவங்கியது. அவர்கள் தங்களின் புருவங்களை ஏற்றி, அத்தகைய கண்களில் வியப்புடன் ஸ்ரீகிருஷ்ணனை பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனின் அங்க ஸங்கத்தைப் பெற்றவர்கள். || 21

ஸ்ரீகிருஷ்ணனின் ஒளிர்வதான குண்டலங்களை, அவனுடைய சுருள் முடிகளை, தாமரை போல ஒளிர்வதான அவனது தேகம், இவற்றுடன் ஒளிர்வதான அவனைப் பார்த்து, அந்தப் பெண்களின் கண்கள் த்ருப்தி அடையவில்லை (சோர்வு அடையவில்லை). || 22

அந்த ஈஶனை, அவனுடைய முகத்தை பார்த்தபின், மிகவும் மகிழ்ச்சியுடன் அந்தப் பெண்கள் அவனை மெச்சினர். அவனுடைய சுப குணங்களை மிகவும் மகிழ்ச்சியுடன் பாடினர். அனைவரும் ஆனந்தக் கடலில் மூழ்கினர். || 23

தன்னுடைய அங்க ஸங்கத்தால், மகிழ்ந்து சோர்வடைந்த அந்த பெண்களின் மார்புகளில், குங்குமம், சந்தனம் ஆகியவற்றை பூசிக் கொண்டிருந்தனர். அவற்றை ஶ்ரீகிருஷ்ணன் மிகவும் கருணையுடன் பார்த்தான். || 24

ஜ்ஞானானந்த கடலான ஶ்ரீகிருஷ்ணன், வெண்மையான வயிற்றினைக் கொண்ட அந்தப் பெண்களுடன், பெண் யானைகளுடன் சேர்ந்து ஆண் யானை எவ்வாறு மகிழ்ச்சியுடன் விளையாடுமோ, அதைப் போல ஶ்ரீகிருஷ்ணனும் அவர்களுடன் காளிந்தி நதியில் விளையாடினான். || 25

காளிந்தி நதியில் இறங்கி, நடுவில், கருமையான கூந்தல்களைக் கொண்ட அந்தப் பெண்களுடன் நட்புடன், ஶ்ரீலோலன் விளையாடினான். அந்தப் பெண்களும் ரங்கனின் மேல் தண்ணீர் ஊற்றி விளையாடினர். || 26

அதற்கு பதிலாக, ஶ்ரீகிருஷ்ணனும் மேலும் அதிகமாக தண்ணீரை எடுத்து அவர்கள் மேல் ஊற்ற, தோழிகள் மகிழ்ச்சியுடன் ஸ்ருஷ்டி செய்பவனின் மேல் மேலும் அதிகமாக தண்ணீரை எடுத்து ஊற்றினர். || 27

ரங்கனின் ஆட்டத்திற்கு, தோழிகளின் பார்வைக்கு, தேனீக்கள் செய்யும் ரீங்காரத்திற்கு ஏற்றவாறு, தேவலோகத்துப் பெண்கள் ஒரு கூட்டமாக நின்று, சங்கீதம் பாடத் துவங்கினர். || 28

தேவலோகத்தில் இருந்த தேவர்கள் அனைவரும் பக்திக் கடலில் மூழ்கியவாறு, மேலிருந்து பூமழையை பொழிந்தனர். இவ்வாறாக தன் தோழிகளுடன் சேர்ந்து கொண்டு, ஶ்ரீகிருஷ்ணன் அனைவருடனும் மிகவும் மகிழ்ச்சியுடன் விளையாடினான். || 29

அனைவருக்கும் மகிழ்ச்சியை தரக்கூடியதான, மலையிலிருந்து வருவதான காற்று, அனைவரையும் சூழ்ந்திருக்க, பலராமனின் தம்பியான ஶ்ரீகிருஷ்ணன் இருப்பதான அந்த யமுனை நதிக்கரையானது, அனைவருக்கும் எல்லையே இல்லாததாக தோன்றியது (அல்லது பகவந்தனின் கருணை எல்லையே இல்லாதது). || 30

அனைத்து தர்மங்களையும் அறிந்தவன், அனைத்து ரகசியங்களையும் அறிந்தவன், அனைத்து இடங்களிலும் வ்யாப்தன், ஸர்வ ஸ்வந்தந்த்ரன், த்ருப்தன், அனைத்து உலகங்களுக்கும் தலைவன், அனைத்து தேவர்களுக்கும் தலைவன், அனைத்து பலன்களையும் தருபவன், தலைவன். || 31

எந்த முகுந்தனின் பாத கமலங்களை வணங்கும் யோகிகளின் பாவ வ்ருத்தியை (மனதினை) கண்டு, (யாரொருவன் முகுந்தனின் பாத கமலங்களை வணங்குகிறானோ, அவன் யோகியே ஆகிறான்.) வாஸுதேவனுக்கு இந்த விஷயங்களின் மேல் (இவ்வாறு க்ரீடைகளை செய்வதில்) ஆசை இருக்கிறது என்று.. || 32

யார் சொல்கிறானோ, அவன் தமோ யோக்யன். இதன் உண்மையான அர்த்தங்களை அறிஞர்களே அறிவார்கள். அவனுடைய க்ரீடா குண விஸிஷ்டமான லீலைகளுக்கு யாரும் எல்லைகளே காண்பதில்லை. || 33

நமோ நமோ நமோ நாரதனால் எப்போதும் வணங்கப்படுபவனே. நமோ நமோ ஸ்வ-ப்ரியனே (தன்னை தானே விரும்புபவனே). நமோ நமோ நமோ அனந்த ஸத்குணங்கள் நிரம்பியவனே. நமோ நமோ அந்தராத்மனே. || 34

விஷ்ணுவின் பக்தனான பரீக்ஷித் ராஜன், இவ்வாறாக ஶ்ரீகிருஷ்ணனின் லீலையை சிறந்த ப்ரஹ்மனின் புத்ரரான ஶுக முனிவரிடமிருந்து கேட்டான். அவரும் இந்த கதைகளை மிகவும் தெளிவாக, விவரமாக கூற, மிகவும் மகிழ்ச்சியுடன் அரசனானவன் இஷ்டப்பட்டு கேட்டான். || 35

ஸ்ரீகிருஷ்ணனை பக்தியுடன் வரித்துக்கொண்ட பக்தர்களுக்கு, எப்போதும் சந்தேகம் (குழப்பங்கள்) கொண்ட மனம் இருப்பதில்லை. யார் ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஆரோபங்களை கூறுகிறார்களோ, அவர்களுக்கு நரகமே கிடைக்கிறது, இதில் சந்தேகமே இல்லை. || 36

கோகுலத்தில் கோபிகையர்களுக்கு அவர்கள் இஷ்டப்பட்ட சுகங்களை அளிக்கிறான். இவன் நிர்லிப்தன் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இதை அறிந்த பக்தர்களுக்கு எந்தவிதமான மயக்கங்களும் வருவதில்லை. ஆனால், இதனை சரியாக அறியாத துஷ்டர்களுக்கு எப்போதும் மயக்கங்களே (கெட்ட எண்ணங்களே / கெட்ட கதியே) கிடைக்கிறது. || 37

ஸ்ரீபதியின் ஆணையின்படி, அனைத்து கோபிகைகளுக்கும், தாங்கள் தங்கள் கணவர்களை, குழந்தைகளை விட்டு வந்திருக்கிறோம் என்னும் எண்ணமே வருவதில்லை. இவ்வாறு மாதவனான ஸ்ரீகிருஷ்ணன் ப்ரேரணை செய்திருக்கிறான். || 38

ஸ்ரீதேவியானவர், ஸ்ரீகிருஷ்ணனின் பாதத்தின் விரல்களின் நகத்தினை பக்தியுடன் பார்த்தவாறு, மிகவும் மகிழ்ச்சியுடன், அவனுடைய அனந்தமான குணங்களின் எல்லைகளை காண்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறாள். இது வேதமே சொல்லும் விஷயமாகும். || 39

ஸ்ருஷ்ட்யாதிகளுக்கு இவனே காரணன். பக்தர்களை காப்பவன். துஷ்டர்களை அழிப்பவன். மோஹனன். கோகுலத்தின் பெண்களின் அவர்களின் இஷ்டத்திற்கு ஏற்ப, அவர்களுக்கு அபாரமான பலன்களைக் கொடுப்பவன். அவர்களின் கஷ்டங்களை விலக்குபவன். || 40

தன்னை வணங்கும் மக்களின் கஷ்டங்களை, பாவங்களை அழிப்பவன், ஸ்ரீ பரப்ரஹ்மனான ஸ்ரீகிருஷ்ணன். இவ்வாறாக தன் க்ரீடைகளை நிறைவேற்றினான், அவனே ஸ்ரீப்ரஸன்ன வெங்கடன். ஸர்வோத்தமன். வ்ருந்தாவனத்தில் இருப்பவர்களுக்கு ப்ரியமானவன். || 41

**47. ராக :ம்லேச்சபௌளி தாள :அட்ட**

**கோஷ்டத ஜனகெல்ல ஸ்ருஷ்டிகோடிகெல்ல க்ருஷ்ணனெ போஷகனு**
**ம்ருஷ்டான்னபானத துஷ்டித முக்கித துஷ்டஜனார்தகனு ||ப||**

**ஒந்தினம்பிகெய ஜாத்ரே நெரெயலந்து பந்து நந்தகோபனு**
**பந்தா விப்ரானீக குடும்ப ஸஹவாகி மிந்து ஸரஸ்வதியனு**
**ஸ்கந்தம்மனிகே வந்திஸி பூஜிஸ்யானந்ததி போஜனவ**
**பந்த இஷ்டஜனரிந்த மாடிதனு சந்ததிந்த தானவ ||1||**

**வ்ரஜபதியனு நுங்கிது ஒந்து அத்புத ஆஜகரதல்லி பந்து**
**ஸுஜன கோவரு ராமக்ருஷ்ண ஹரே ஹரே பஜகரக்ஷ நீனெந்து**
**ரஜனியல்லி கொள்ளியவிடிதஞ்ஜுத அஜகரன்ன கொந்தரந்து**
**புஜகவஞ்ஜதே க்ரஸிஸெ கண்டநச்யுத அஜஸ்மரரய்யனந்து ||2||**

**தந்தெய நுங்குவ அஹியன்னு பாதாப்ஜ ஹொந்திஸி உத்தரிஸிதனு**
**தந்தஶோகதே திவ்யஶரீரவாக்ஷண தந்தித்த ஸர்வேஶனு**
**ஹிந்தெ வித்யாதர தானு முனிய ஶாபதிந்தஹியாகிரலு**
**இந்திரேயரஸன அங்க்ரியு ஸோங்கெ பந்தீ ஸ்தோத்ரவ மாடலு ||3||**

**வாணிகளெல்ல நின்னானந்தமய குணவனுஹொகள்வந்தெ மாடு**
**ஶ்ரீனய நின்ன கதாம்ருத ஸ்ரவணகெ பானத லாபவ நீடு**
**பாணிகளிம் நின்ன ஸத்கர்ம வ்யாஸங்கவு நின்ன ஸ்ரீபாதகே**
**தீனவத்ஸல நன்ன தலே வந்தனெகெ மாடு த்யானகெ மனமாடு ||4||**

**நின்ன மூர்திகளன்ன நேத்ர சித்ததளிட்டு நின்ன தாஸர ஸங்கவு**
**அனந்த ஜன்மக்கே தொரகலியெனுத விமான ஹத்தி நடெத**
**ஈ நாட்யவ நோடி நந்தாதி கோவரு ஆனந்தபரிதராகி**
**வினாஸ்சர்யவெந்தானந்தமய ப்ரஸன்வெங்கடன ஹொகளிதரு ||5||**

அந்த கோகுலத்தில் இருக்கும் மக்கள் அனைவருக்கும், ஸ்ருஷ்டியில் வந்திருக்கும் அனைவருக்கும் ஸ்ரீகிருஷ்ணனே போஷகன் (காப்பவன்). சுவையான அன்ன பானங்களை அளிப்பவன். முக்தியை அளிப்பவன். துஷ்டர்களை அழிப்பவன் இவனே. || ப

ஒரு நாள், அம்பிகா வனத்தில் ஒரு விழா (பூஜை) நடந்தது. அன்று நந்தகோபன் வந்து, பற்பல ப்ராஹ்மணர்கள், குடும்பத்தவர்களுடன் கூட வந்து, அதில் பங்கேற்று, சரஸ்வதி நதியில் ஸ்னானம் செய்து, ஸ்கந்தனின் தாயான பார்வதி தேவியை வணங்கி, மிகவும் மகிழ்ச்சியுடன் பூஜை செய்தான். அனைவரும் போஜனங்களை முடித்தனர். அங்கு வந்திருந்த இஷ்ட மக்களுடன் சேர்ந்து, மிகவும் மகிழ்ச்சியுடன், தானங்களையும் செய்தான். || 1

அப்போது அங்கு வந்த ஒரு பெரிய பாம்பு, அந்த அரசனை, நந்தகோபனை விழுங்கியது. இதைப் பார்த்து, அங்கிருந்த ஸஜ்ஜனர்கள் அனைவரும், ஹே ராம, ஹே கிருஷ்ணா, ஹரே ஹரே, வணங்குபவர்களை காப்பவனே - என்று கூறி ப்ரார்த்தனை செய்தனர். அந்த இரவில், தீப்பந்தங்களை பிடித்து, அனைவரும் அந்த பாம்பிற்கு பயந்தவாறு, அதனை அடிக்கத் துவங்கினர். ஆனால், அந்த பாம்போ, யாருக்கும் பயப்படாமல், நந்தகோபனை விடாமல் இருக்க, இந்த காட்சியை அச்யுத, சதுர்முக ப்ரஹ்ம தேவரின், மன்மதனின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணன் கண்டான். || 2

தன் தந்தையான நந்தகோபனை விழுங்கும் அந்த பாம்பினை, தன் கால் கட்டைவிரலால் அழுத்தி அதனை காத்தான். அந்த பாம்பு உடனடியாக ஒரு வித்யாதரன் வடிவில் (தந்தஶூக) வர, அவனுக்கு ஒரு திவ்ய சரீரத்தை அளித்தான் ஸர்வேஶன். அந்த வித்யாதரன், முன்னர் ஒரு முனிவரின் சாபத்தினால் இப்போது பாம்பாக பிறவி எடுத்திருந்தான். அவன் தற்போது அந்த சாபம் நீங்கியவனாக, இந்திரெயரஸனின் பாதங்களை விழுந்து வணங்கி, ஸ்ரீகிருஷ்ணனை ஸ்தோத்ரம் செய்தான். || 3

அனைவரின் அனைத்து வாக்குகளும், உன்னையே ஆனந்தமயன் என்று உன்னுடைய குணங்களையே பாடுமாறு செய்வாயாக. ஸ்ரீலக்ஷ்மி தேவியை ப்ரேரிப்பவனான உன்னுடைய கதாம்ருதத்தை கேட்பதற்கு எங்களுக்கு சக்தியைக் கொடு. கைகளால் உன்னுடைய ஸத்கர்மங்களை செய்வதற்கு, உன்னுடைய ஸ்ரீபாதங்களை விட்டு விலகாதிருக்க வரம் கொடு. தீனவத்ஸலனே. என் தலை உன்னையே எப்போதும் வணங்குமாறு செய்வாயாக. உன்னைப் பற்றிய த்யானத்தில் எப்போதும் ஈடுபடுமாறு செய்வாயாக - என்றான். || 4

உன் மூர்த்திகளிலேயே என்னுடைய சித்தத்தை வைத்து, உன்னுடைய தாஸர்களின் சங்கத்தையே எனக்கு கொடுப்பாயாக. இதுவே எனக்கு அனந்த பிறவிகளிலும் கிடைக்கட்டும் என்றவாறு, அந்த வித்யாதரன், விமானம் ஏறி தன்னிடத்திற்கு சென்றான். இத்தகைய நாடகத்தை / பகவந்தனின் லீலையை பார்த்து, நந்தகோபனே முதலான கோபாலகர்கள், மிகவும் மகிழ்ச்சி கொண்டு, இது என்ன ஆச்சரியம் என்றவாறு, ஆனந்தமயனான ஸ்ரீப்ரஸன்ன வெங்கடனை புகழ்ந்தனர் / போற்றினர். || 5

***

**48. ராக :ஸௌராஷ்ட்ர தாள :ஜக்கணி**

**அவரே ஸுகிகளு அவரே தன்யரு கோவிந்தனாஸ்ரிதரு**
**ஸவெயத பக்தி ஸ்தவனகேளிந்த பவவ கத்தவரு॥ப॥**

**ஆ வித்யாதரனு விமானவைதித விவரவரிதனு**
**கோவரிகொடெயன மகன மஹிமெய ஸ்தவிஸி நலிதனு**
**ஸவெயதாஸ்சர்ய கர்மவ மனுஜ திவிஜர்ஹொகளு**
**கோவ கோவேரிந்த வ்ரஜ பொக்கனு புவனதொடெயனு॥1॥**

**ஶ்ரீமனோஹர ஸகியர பெரஸி ராமஸஹ நிஶதி**
**தா மனோத்ஸவதி வனவன திருகே காமினேர் ஸுஸ்வரதி**
**ப்ரேம ஸுஹ்ருத்கான லாலிஸுதிரலு கௌமுதிய காஶதி**
**ஹேமாம்பரனுட்டு ஸ்ருக்கந்தலேபனதி மத்தளிகள தெரதி॥2॥**

**விஶ்வானந்தகரு ராகவ மாடலு விஷ்வகோபி ஜனரு**
**ஸுஸ்வர மூர்ச்செயொளு வஸ்த்ராபரண ஸ்வகீயவெந்த**
**ஸுஶ்வாஸோச்வாஸவ பிடுத முகுந்த ஶஶ்வதேகேஶனெந்து**
**ஸுஸ்வபாவ ஹொந்தி பூதாங்கேரு தாவு அஸ்வதந்த்ரியராதரந்து॥3॥**

**பொகோலனப்பர நிப்பரவாகிரெரே ஶ்ரீகோவிந்த காயிதனு**
**ஆகோப்ப களனு ஶங்கசூடனு ஈ கோபெரொய்யெபந்தனு**
**நாககமனெரு ஹரே க்ருஷ்ணராம நீ கதி காயெந்தரு**
**ஈகஞ்ஜபேட்யெந்து அக்ரஜன ஸஹ பேகதி பெம்பத்திதனு॥4॥**

**ராமாதோக்ஷஜரு சோரன பென்னட்டி ஶ்ரீமத்தாள ஹஸ்ததி**
**ஆமத்ததைத்யன மஸ்தகவிளுஹி ஸுமௌளிரத்னவ கித்தி**
**ராமங்கெ கொட்டனு வாமாக்ஷீர பிடிஸித மனோஹர ஹரி**
**காமனய்யன தாவ் மோரெஹொக்கரு ஸ்வாமி துஷ்டகுலஹரே॥5॥**

**ஹே க்ருஷ்ண அச்யுதா துக்கஹர்தா பக்தரகாமதேனு முகுந்த**
**ஹே கேஶிஸூதன பூதனாந்தக தேவ சக்ரவாதக்னானந்த**
**ஹே கஞ்ஜலோசன கோபிகாமனோஹர ஹே காளிந்திவிஹார**
**நாகேஶமதஹர கோவர்தனோத்தார லோகைக ஸத்ஸுந்தர॥6॥**

**காலியமதஹாஹிகாமினேர்ஸ்துதிப்ரய பூலலனா பயக்ன**
**பாலக லீலாவிஶால ஶ்ரீலோல பூலோல துர்காங்கனேஶா**
**மாலாலிதாங்க்ரி த்ரயாலய ஸுரமுனிலாலிதசரணாம்புஜ**
**த்ரிலோகஸ்ருஷ்ட்யாதிமூலகாரண குணஜால ஶ்ரீ நாராயண॥7॥**

**போக ஶங்க சூட பந்தெம்மனொய்யலு நீ காயிதெயெ தயாளு**
**ஸாகு நமோ நமோ நமோ நமோயெந்து அனேக ஸ்தோத்ரவ மாடலு**
**ஆ கன்யெர பக்திபாவகெ மெச்சித கோகுலதவரிகெல்ல**
**வைகுண்டவே பல மாடிட்ட ஶ்ரீக்ருஷ்ண ஆகளகாவ செல்வ॥8॥**

**ஈ க்ருஷ்ணசரித்ரெ ஏகாந்த பக்திலி லோகேஶ பரீக்ஷித**
**தா கேளித குரு ஶுகமுனிஶன வாக்யாம்ருத தத்வத:**
**ஆ கர்ணபுடதிந்துண்டு தேகலு லோகவெல்லபாவன**
**ஶ்ரீகாந்த ப்ரஸன்வெங்கடேசன லீலெயனெ கேளிதவ ஜாண॥9॥**

கோவிந்தனை சரணடைந்தவர்களே சுகிகள். அவர்களே தன்யர்கள். இடைவிடாத பக்தி, ஸ்தோத்ரங்களால் ஸம்ஸார பந்தனத்தையே வென்றவர்கள் அவர்களே. || ப

அந்த வித்யாதரன், விமானம் ஏறி தன் இடத்திற்கு சென்ற செய்தியை நந்தகோபன் கேட்டு அறிந்தான். தன்னுடைய மகனின் மகிமைகளை நினைத்து மகிழ்ந்தான். ஸ்ரீகிருஷ்ணன் செய்த ஆச்சரியம் நிறைந்ததான கர்மங்களை, மனிதர்கள், தேவர்கள் என அனைவரும் புகழ்ந்தனர். பிறகு, ஸ்ரீநந்தகோபன், அந்த கோபிகைகளுடன் கூடிக்கொண்டு, ஸ்ரீகிருஷ்ணன், இந்த புவனத்தின் தலைவன் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தான். ||1

ஸ்ரீமனோஹரனான ஸ்ரீகிருஷ்ணன், தன் தோழிகளுடன் கூடி, பலராமனுடன் சேர்ந்து, அந்த இரவில், தான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்க, அப்போது அந்த பெண்கள் மிகவும் இனிமையான ஸ்வரத்தில், ப்ரேமம் நிறைந்ததான இனிமையான கானத்தினை பாடினர். இவ்வாறு அவர்கள் பாடிக் கொண்டிருக்க, அந்த நிலவொளி மிக்க இரவில், தங்கமயமான பட்டாடைகளை உடுத்தி, நறுமணம் மிக்க சந்தனங்களை பூசிக் கொண்டு, இனிமையான வாத்தியங்களுடன் கூடி ஆடிக் கொண்டிருந்தான். |2

உலகிற்கு ஆனந்தத்தை தருபவன். இனிமையான ராகத்துடன் பாடத் துவங்க, அந்த கோகுலத்து மக்கள், அந்த இனிமையான ஸ்வரத்தினைக் கேட்டு, மயக்கம் கொண்டவாறு, தங்களின் ஆடை ஆபரணங்களையே (அவை அவிழ்வதையே) மறந்தனர். அவர்கள் அனைவரும், நன்றாக பெருமூச்சினை விட்டவாறு, முகுந்தனே எப்போதும் ஸர்வோத்தமன் என்று கூறியவாறு, நல்ல ஸ்வபாவத்தைக் கொண்டு, பவித்ரமான தேகத்தைக் கொண்டவர்கள், தாங்கள், அன்று, அவர்கள் அஸ்வதந்த்ரர் (அனைத்திற்கும் அவனே காரணம்) என ஆயினர். || 3

காமனின் விளையாட்டு அங்கு அனைவரின் மேலும் பாய்ந்திருக்க, ஸ்ரீகோவிந்தன் அவர்களை அனைவரையும் காத்துக் கொண்டிருந்தான். அப்போது அங்கு 'ஶங்கசூட' என்னும் ஒரு திருடன், இந்த கோபியர்களை கவர்ந்து சென்றான். அப்போது நாகத்தைப் போல மெதுவாக செல்லும் அந்த பெண்கள் அனைவரும் 'ஹரே கிருஷ்ணா, ராமா, நீயே கதி, எங்களை காப்பாற்று' என்று வேண்டினர். ஸ்ரீகிருஷ்ணனும், அவர்களிடம் பயப்படாதீர்கள் என்று கூறியவாறு, தன் அண்ணனுடன் வேகமாக அவர்களிடம் சென்றான். || 4

ராம, கிருஷ்ணர்கள் அந்த ஶங்கசூட என்னும் திருடனை துரத்திச் சென்று, தன் கைகளால், அந்த தைத்யனின் தலையை பிடித்து, அவனின் தலையில் இருந்த ரத்னத்தை பிடுங்கி, அதை பலராமனிடம் கொடுத்தான். அந்தப் பெண்களை அவனிடமிருந்து மனோஹரனான ஸ்ரீஹரி விடுவித்தான். அந்தப் பெண்களுடன் ஸ்ரீகிருஷ்ணனிடம் இவ்வாறு வேண்டிக் கொண்டனர் - ஸ்வாமி, துஷ்ட குலங்களை அழிப்பவனே - என்றனர். || 5

ஹே கிருஷ்ணா, அச்யுதா, துக்கங்களை போக்குபவனே. பக்தர்களின் காமதேனுவே. முகுந்தனே. ஹே கேஶி என்னும் தைத்யனை கொன்றவனே. பூதகியை கொன்றவனே. தேவனே. த்ரிணாவர்த்தனைக் கொன்றவனே. ஹே தாமரைக் கண்ணனே. கோபிகைகளுக்கு பிடித்தவனே. ஹே காளிந்தி நதியில் விஹாரம் செய்தவனே. காளிங்கனின் கர்வத்தை அடக்கியவனே. கோவர்த்தன மலையை தூக்கியவனே. உலகத்தில் அதி ஸுந்தரனே. || 6

காளிங்கனின் கர்வத்தை அடக்கியவனே. கோபிகைகளின் ஸ்துதிகளை விரும்புபவனே. பூதேவியை காத்தவனே. பயங்களை பரிஹரிப்பவனே. பாலகனாகி பற்பல லீலைகளை காட்டுபவனே. ஸ்ரீலோலனே. பூதேவி லோலனே. துர்க்கையின் தலைவனே. ஸ்ரீலக்ஷ்மி தேவி எப்போதும் பூஜை செய்யும் பாதங்களைக் கொண்டிருக்கிறாய். மூன்று தாமங்களில் வசிக்கிறாய். ஸுரர்கள், முனிவர்கள் வணங்குவதான பாத கமலங்களைக் கொண்டிருக்கிறாய். மூன்று

உலகங்களின் ஸ்ருஷ்டிக்கும் நீயே மூல காரணன். அனைத்து நற்குணங்களையும் கொண்டவனே. ஸ்ரீ நாராயணனே. || 7

ஶங்கசூட என்னும் திருடன் வந்து எம்மை கவர்ந்து செல்ல, தயாளுவே, நீ உடனடியாக வந்து எங்களை காத்தாய். நமோ நமோ நமோ என்று அனேக ஸ்தோத்ரங்களை நாங்கள் சொல்ல, வந்து எங்களை காத்தாய். அந்தப் பெண்களின் பக்தி பாவத்திற்கு ஸ்ரீகிருஷ்ணன் மெச்சினான். கோகுலத்து மக்கள் அனைவருக்கும் வைகுண்டமே பலன் என்று ஸ்ரீகிருஷ்ணன் கூறினான். அவன் பசுக்களை மேய்த்து வரும் அழகன். || 8

இந்த கிருஷ்ண சரித்திரத்தை, ஏகாந்தமான பக்தியில், அரசனான பரீக்ஷித் தான் கேட்டான். குருவான ஶுக முனிகளின் வாக்கியம் என்னும் அமிர்தத்தினை அப்படியே தன் காதுகளால் சுவைத்தான். உலகத்தையே பவித்ரம் ஆக்குவதான, ஸ்ரீகாந்தனின் ப்ரஸன்ன வெங்கடனின், லீலைகளை கேட்டவன் அறிவாளியே ஆகிறான். | 9

**49. வேணுகீத**
**ராக :தேஸ் தாள :அட்ட**

**ஜாணெ கோபேரொந்துகூடி வேணுகோபதிய திவ்ய**
**வேணுகீதெய ஹேளிதரே கானரஸதலி ||ப ||**

**ஜ்ஞானசர்யனந்தன்ன ராணி கேளிதளெந்து வ்யாஸ**
**ஸூனு பேள்த பூபதிகே ஆனந்ததலி ||அ.ப ||**

**நந்தனோத்யாநகதிகானந்தவித்த வனகளல்லி**
**பந்து க்ருஷ்ண சரிஸுவ கோவ்ருந்ததி நித்ய**
**இந்துமுகியரு ப்ரியன நோடி கந்தர்பன ஸாயகக்கெ**
**நொந்து வேணுவைசித்ர்யத சந்த ஹொகளுத ||1 ||**

**வாம பாஹ்விலிட்டு கோணு வாமகபோலவு பூ- ப்ரமண விலாஸார்ப்பித ஹேமவேணுவ**
**கோமலாங்குலிலி ராக நேமிஸே மஞ்ஜுளஸ்வனா- காமினேரு கேளுதலி காமபாணதி ||2 ||**

**வ்யாமோஹிபந்தெ மாடிதஶ்ரீ முகுந்தாம்பரதலிஹ**
**வைமானிக ஸித்தபத்னேர் ப்ரமெகொண்டரு**
**காமபாணனட்டு லஜ்ஜெய மரெது ஜகுளி பித்த**
**ஹேமாம்பராபரணகள நேமகாணரு || 3**

**கேளிரி ஸ்த்ரீஜனருகளிரா மாலெ மிஞ்சின செலுவ**
**நீலநீரத ஶாமலன லீலே வேணுவின**
**மேலு நாத கேளி மாத்ர பாலேரிகெ மோக்ஷானந்த**
**கால கால குணிஸுவ கோபாலனந்தன ||4 ||**

**ஆவ விசித்ர ராகவோ ஆவ மோஹன கரவோ**
**தேவ கயகியரெல்ல கோவிதராகி**
**கோவு ம்ருகாளிகளெல்ல பாவஶுத்தியிந்த கேளி**
**தேவேஶன பததி தம்மஜீவ நீடலு ||5 ||**

**ஹிண்டு கோவு ஹரிய க்ருதிய கண்டு த்யானதல்லி தந்து**
**துண்ட நெகஹி பாலவெத்திகொண்டு நிந்தவு**
**தண்ட தண்ட ஒப்பிதவு ஹண்டெ ஹவளெ ஹுல்லுகச்சி**
**கொண்டு நிந்தவல்லிகல்லி மண்டலித்தவு || 6**

கர்ணனில்லிஸி எவெயடதெ ஸ்வர்ணவேணுவின ரவ
மன்னிஸி முகுந்தனல்லி மனவனிட்டவு
கன்ன நித்ரெயாய்து பதிய தன்ன கருவ நோடலில்ல
பண்ணவிட்டு பரெத சித்ரவன்னு ஹோல்வவு ॥7॥

பூகொஞ்சலு பருஹி பர்ஹெ கோகோவர்கே கொட்டு முடிது
தா கைரிக லேகிஸிகொண்டாக எல்லரு
ஸோகனாந்து ஒப்பிதரு பொகணேரந்ததேஜ
யோகிஜனஹ்ருதயனிலயாமோக ஸுந்தர ॥8॥

ப்ரேமதிந்த கரெவனாவ கோமக்களஸந்தொஹதி
ராமனொடனெ வேணுஸ்வரதி ஸ்வாமி அச்யுத
ஹைமவம்ஶனாதஸுதெகெ ஆ மஹானதிகளெல்ல
தா முந்தக்கே ப்ரவஹதோரவு வ்யாமோஹிஸுத ॥9॥

தா மத்தே ஹிந்தக்கே பந்து ஸோமகுலபனங்க்ரிகளனு
ஆ மஹா பஜோர்மிகளலி காமிஸ்யோப்பிதுவு
ஈ மஹிமெ நோடி ஸுரஸஸ்தோம ஸித்தகந்தர்வரு
வ்யோம மண்டலதி நமோ நமோ எந்தரு ॥10॥

ஆதிபுருஷ ஸ்திரைஸ்சர்யனாத தேவவனகிரியலி
ஊதித ஷட்ரஸத வேணு கோதனத ரக்ஷ
வேதானந்தாவேத்ய க்ருஷ்ண மாதவ முக்தார்தி தா ஶ்ரீ
பாதபத்மாமோத ப்ரமோத ஸுபக்ஷ ॥11॥

அபவர்கதிந்த ஸ்தோத்ர ஶ்ரீபதி மாடிஸிகொம்ப
கோபர ஸ்தோத்ரகொப்பித ஶ்ரீபரப்ரஹ்ம
ஶ்ரீப்ரக்ருதி இவன குண ரூபலாவண்யக்கெ ஸோத
ளீ பெண்ணளிகெ வஶவிடம்பன தோர்பனம்மம்ம ॥12॥

ஈ வனத தருலதெயு ஶ்ரீவிஷ்ணுவஶவாதவெம்ப
பாவதோரி நமிஸிதவு பூவு பலதிந்த
தீவித தோஷதி வேணுராவரஸவனுண்டு கொப்பி
தாவு தலெதூகிதவு கோவிதரந்தெ ॥13॥

ப்ரேம ஹருஷதஸ்ருதார ஆ மரங்கள்விடபஸார
பூமிகிளிவாஸ்சர்ய நோடி காமினேரெல்ல
ஶ்ரீமனோஹரன்ன கீர்தி தீமந்த ஜனரெ ஸ்பூர்தி
பாமரரேனு பல்லரு ஈ மஹாலீலே ॥14॥

கௌதி கேளி கந்த நிலோத்பலதாமோதமயத வக்ஷா
நிலவனுண்டு ஸொக்கி சரிப அளிவிண்டுகளு
ஆலகுகான கேளி முகுந்த தலெதூகலு ரம்ஹஸதி
நளினாக்ஷன பளிகெ பரலு ஸாரஸஹம்ஸகளு ॥15॥

லலிதவேணுஸுதெயனுண்டு கலவேரி கொலதெ மௌனதி
பளியல்லரெகண்ண முச்சி நளினனயனன
செலுவிகெ த்யானோபாஸனெகளலி பரமஹம்ஸரந்தெ
நலிவ ஸாரஸ ஹம்ஸகள பளகவனுதின ॥16॥

அண்ணகோவரிந்த கூடி சின்மயாதரதி வேணு- வன்னோதுவ ஹெஸருகொண்டு கன்யெ கோயெயர
தன்னானந்ததி தா பூர்ண ஜனர விடம்ப நடனெ
யன்னு தோர்வ அஞ்ஜர மோஹன்ன ஸுந்தர ॥17॥

கன மஞ்ஜுள ரவதி கோவர்தன கிரியு ஶப்திஸலு
கனகஞ்ஜி மெல்ல மெல்லனெ ஸ்வனிவாஸைதிதவு
கனஶாமல நமகெ பந்து தனுமனதி அவகெ ஸ்தோத்ர- வனு மாடுவேவெம்ப பயதி
ஹெணகெ நிந்துவு ॥18॥

மஹததிக்ரமணகஞ்ஜி மஹபூஜேயலி ஒளிஸுவந்ததி
அஹஸ்ஸிநல்லிபுஷ்பவ்ருஷ்டி பஹளகரெதுவு
மஹியொளகே ஹரிய ஆஜ்ஞே மஹிஸிதவனிகேவெ முக்தி
மஹிஸதவனெ த்ரோஹியவகே ஸஹஜாந்தந்தமவு ॥19॥

ஶஶிவதனெ நின்ன ஸூனு குஶலவர்ய கோவரளு
அஸமவேணுவிந்த ஸத்ரஸதி காயனவ
ஹொஸ ஹொஸ ஸுமதுர கீத எஸெவ பிம்பாதரதி இட்டு
ஶிஶுகெளெயர ஶிக்ஷிப வம்ஶகாயனவ ॥20॥

திவியலி நெரெத ஸரஸிஜோத்பவ பவேந்த்ர முக்யராத
கவிகளானத கந்தரதி கிவியகொட்டரு
கவிது மோஹவிஸ்மிததலி ஸவெயத ஸ்ரீஹரியலீலே
ஸவிரஸவ ஸவிதானந்த பவனவிடிதரு ॥21॥

கோகுரார்தித கோஷ்டபூமி ஸ்ரீகஞ்ஜாங்குஶவஜ்ரத்வஜ
ரேகாங்கித ஸ்ரீ பாதாப்ஜ ஸோங்கி ஒப்பலு
நாகதவரு வ்ரஜவாஸ பேகெந்து பயஸிதரல்லி
ஸ்ரீக்ருஷ்ணங்க்ரியாஸ்ரிதர்கெவைகுண்டவ்யாகே ॥22॥

ஸ்ரீரமண ஸௌந்தர்யஸாரன்ன மார்கதி கண்டு
ஸாரங்காக்ஷீர விலாஸகெ மேரெதோரது
ஸ்வர வேணுரஸாயனக்கெ நாரேரிச்செ ஹப்பலாகெ
மாரன மார்கணராஶி தோருத்தித்துவு ॥23॥

தனு மனெய மரெதரவரு கனகபாதம்பர ஜகுளிரே
இனிது இச்சரில்லவர்கெ முனிகளந்ததலி
மணிதர கோவு மேஸுதொம்மெ கெணெயரம்ஸதி ஸ்கந்தவிட்டு
க்வணித வேணு நுடிஸி மோஹிப வனதி வனமாலி ॥24॥

க்ருஷ்ணஸாரஸதியர்தம்ம புட்ட மரிகள மனெய பிட்டு
கொட்டச்யுதன ரூபவன்னு திட்டிஸிதவு
க்ருஷ்ணன்ன லாவண்யாம்ருதவ குட்டுகரிஸி கங்களிந்த
கோஷ்டநாரியரன்னு போல்து துஷ்டிஸிதவு ॥25॥

குந்த குஸுமமாலெ துளஸிகந்த நிலோத்பலகாத்ர
வ்ருந்த கோதனரக்ஷகநந்த நின்ன புத்ர
அந்து மலயஜானிலவ ஹொந்தித யமுனா தீரதல்லி
மந்தமந்தகதிய மாள்ப ஸுந்தர நேத்ர ॥26॥

மலயஜமாருதனகந்தஸுகிவேல்லிபாதகருபந்து
லலிதகாத்ரத காயகரு செலுவ நிந்தித்த
பளியலி நிந்து பக்தியிந்த பலுஸ்தோத்ரவ மாடுதிரலு
பலன தம்ம பஜகரகவ களெத முக்திதா ॥27॥

பஜகாகாத புருஷஸார வ்ரஜகெ பாஹ ஸமயதல்லி
ஸுஜனரிந்த ஸேவிதனாத நிஜஸுகாம்புதி
ஸ்வஜனகோவிப்ரவத்ஸலாம்புஜஸகன்ன அஸ்மயத்ய-
க்ரஜன கூடி பஹனு கோரஜத லக்னதி ॥28॥

**கோகுரோத்பவத தூளி ஶ்ரீகராங்கதல்லி தாளி**
**ஶ்ரீக்ருஷ்ண கொளலனூதுத ஆகளொடனெ**
**கோகுலவ ஹொந்தலாகெ நாகஜனரு ஸஸுஹ்ருஜ்ஜனவா-**
**நேக ஸ்தோத்ரமாடுவரு ஸாகென்னதலெ ॥29॥**

**கோவு கோவர தாபவ நிவாரிஸுதிஹ ஜவதி**
**தேவகீஜடராப்திசந்த்ர தேவகணேந்த்ர**
**பூவிலாஸபாங்கதிந்த கோவளேரிகமிதானந்த-**
**வீவுதித்த நிருததல்லி பாவனகுணஸாந்த்ர ॥30॥**

**பதரபாண்டுரபிம்பவதன குண்டலகபோல**
**பதுமராக வஜ்ரநீல நவரத்னாபரண**
**யதுபதி யாமினியல்லி விதுவின பௌதிங்களல்லி**
**ஸுததியர க்ரீடெயலிப்ப மதகஜாபனு ॥31॥**

**கோமதி கோவளரு திவதி வ்யோமக்ராந்தன தாபஹொந்தெ**
**ஸோமகுலஜ பரிஹரிஸித ஶ்யாமஸுந்தர**
**காமினேர ஸன்முகதி ஸ்வாமி தோருதிஹ ஸதத**
**பாமெயர பக்திபாவகெ மனோஹர ॥32॥**

**வ்ரஜத கோபேரு க்ருஷ்ணன்ன த்ரிஜகாஶ்சர்யதலி லீலெ**
**நிஜபக்தியலி பாடி ஸுகிஸி பஜிஸுத்தித்தரு**
**ஸுஜனரு தன்மனஸ்கெயரு கஜராஜகாமினியரு**
**த்விஜராஜவதனெயரு த்விஜதேவப்ரியரு ||33**

**ஈ வேணுகீதாம்ருதவ தாவ ப்ராணிகள்ஹேளுவரு**
**பாவஶுத்திலி கேளுவரு கோவிதரவரு**
**பாவன க்ருஷ்ணசரித்ரெ ஶ்ரீவ்யாஸ முனீந்த்ரதனய**
**ஶ்ரீவிஷ்ணுராதங்கெ ஹேளெ ஸேவிஸிதனு || 34**

**ஶ்ரீவர ப்ரஸன்ன வெங்கடதேவதேவனு நமகிஷ்டவ**
**நீவனு ஸந்தேஹவில்ல தேவஸுரதரு**
**ஆவ காலகாலதல்லி ஸத்ஸேவகவத்ஸல ஸத்ய**
**பாவுகரு ஹரிவ்யாஸங்கத ஜீவன்முக்தரு || 35**

அறிவாளிகளான கோபியர்கள் அனைவரும் ஒன்று கூடி, வேணுகோபாலனின் திவ்யமான வேணு கீதையை அற்புதமான கானத்தின் வடிவில் கூறினர். || ப

நந்தனின் ராணியான யசோதை, கோபியர்களிடம் ஸ்ரீகிருஷ்ணன் என்ன செய்தான் என்று கேட்டாள், என்று வ்யாஸரின் புத்ரரான ஶுக முனிவர், அரசனான பரீக்ஷித் ராஜனிடம் மிகவும் மகிழ்ச்சியுடன் இவ்வாறு கூறத் துவங்கினார். || அப

ஸ்வர்க்கத்தில் இருப்பதான வனங்களைவிட அதிகமான ஆனந்தத்தை தரக்கூடியதான இந்த வ்ருந்தாவனங்களில், ஸ்ரீகிருஷ்ணன் வந்து தான் பசுக்களை மேய்த்து வந்தான். சந்த்ரனைப் போல முகத்தைக் கொண்டவர்களான அந்தப் பெண்கள் வந்து, தம் ப்ரியனை பார்த்து, அவன் பசுக்களை மேய்க்க செல்கிறானே என்று மனம் வருந்தியவாறு, அவனின் குழலின் நாதத்தின் அழகினைப் புகழத் துவங்கினர். || 1

ஸ்ரீகிருஷ்ணன் அந்த குழலை தன் இடது தோளில் வைத்து, அவனது இடது கன்னத்தை அந்த தோளில் சாய்த்து, தன் புருவத்தை வளைத்தவாறு, தங்கமயமான அந்த வேணுவை, அவன்

தன்னுடைய மிருதுவான விரல்களால், ராகத்துடன் இசைக்க, அழகான அந்தப் பெண்கள் காம பாணத்தில் தாக்கப்பட்டவாறு, அதனை கேட்டுக் கொண்டிருந்தனர். || 2

அவன் அனைவரையும் அந்த இசையில் மயங்கிடுமாறு செய்தான் அந்த ஸ்ரீமுகுந்தன். வானில் இருந்த விமானத்தில் தங்கள் கணவர்களுடன் சென்று கொண்டிருந்த ஸித்தர்களின் மனைவியர்கள், இந்த இசையைக் கேட்டு வியந்தனர். அவர்களும் காம பாணத்தால் அடிபட்டு, வெட்கத்தை விட்டு, தங்களின் தேகத்திலிருந்து சரிந்து விழுந்த தங்கமயமான ஆபரணங்களைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. || 3

ஹே பெண்களே, அனைவரும் கேளுங்கள். மின்னலைவிட அழகான, கார்வண்ண தேகத்தைக் கொண்ட ஸ்ரீகிருஷ்ணனின் குழலின் லீலைகளை கேளுங்கள். அந்த நாதத்தைக் கேட்டு, அந்தப் பெண்களுக்கு மோக்ஷமே கிடைத்தது போன்ற ஆனந்தம் கிடைத்தது. அந்த கோபால நந்தனின் இசையைக் கேட்டு அவர்கள் மயங்கி குதிக்கத் துவங்கினர். || 4

இது என்ன விசித்ரமான ராகமோ, அந்த குழலை மீட்டும் அவனது என்ன மயக்கும் கைகளோ, தேவலோகத்து பாடகிகள் அனைவரும் இதனை மயங்கியவாறு கேட்டனர். பசுக்கள் மற்றும் மற்ற மிருகங்கள் அனைத்தும் மிகவும் அமைதியாக இந்த நாதத்தை கேட்டு, தேவர்களின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணனின் பாதங்களில் வந்து தாம் வணங்கின. || 5

பசுக்களின் கூட்டம், ஸ்ரீஹரியின் நாதத்தை / இசையை கேட்டு, த்யானத்தில் மயங்கி நின்றவாறு, முகத்தை அசைக்காமல், வாலினை தூக்கிக் கொண்டு நின்றிருந்தான. கூட்டம் கூட்டமாக இவ்வாறு மயங்கி நின்று, அங்கங்கு இருந்த புல்லினை தின்றவாறு, அந்த பசுக் கூட்டங்கள் அங்கங்கு நின்றிருந்தன. || 6

தங்கள் காதுகளை ஆட்டாமல் நிறுத்து, காலடிகளை வைக்காமல், தங்கமயமான / அருமையான வேணுவின் நாதத்தினை சுவைத்தவாறு, முகுந்தனில் அந்த பசுக்கள் தங்கள் மனதினை வைத்தன. ஆழ்ந்த தூக்கத்தில் இருந்ததைப் போல அவை இருந்தன. அருகில் இருந்த தங்களின் கன்றுகளை அவை பார்க்கவில்லை. வண்ணம் கொண்டு வரைந்த வரைபடங்களைப் போல அவைகள் ஆடாமல் நின்றிருந்தன. || 7

பூக்களை பறித்து அவற்றை கொத்தாக ஆக்கி, ஸ்ரீகிருஷ்ணன் அங்கிருந்த கோபியர்களுக்கு கொடுத்தான், தானும் தன் தலையில் முடித்துக் கொண்டான். தான் ஒரு குச்சியினால் திலகம் வைத்துக் கொண்டபோது, அனைவரும் அவனின் அழகில் மயங்கினர். அனந்த தேஜோமயனான ஸ்ரீகிருஷ்ணன், யோகி ஜனர்களின் ஹ்ருதய நிலையத்தில் வசிப்பவனாக இருக்கிறான். அவன் அழகன். || 8

மிகவும் ப்ரேமத்துடன் அனைவரையும், அந்த பசுக்களை, தன் தோழர்களை தன்னருகில் அழைத்து, பலராமனுடன் கூடி, நல்ல ஸ்வரத்துடன், ஸ்வாமியான அச்யுதன், சந்த்ர வம்சத்தில் வந்த ஸ்ரீகிருஷ்ணன் குழல் இசைத்தான். இந்த இசைக்கு அந்த மஹா நதிகள் அனைத்தும்கூட தான் முன்னே சென்று பாயாமல், அப்படியே மயங்கி நின்றன. || 9

அந்த நதிகள் மறுபடி பின்னே பாய்ந்து வந்து, சந்த்ர குலத்தில் வந்தவனின் பாத கமலங்களை, அந்த பெரிய நதிகள் தங்களின் அலைகளால், நனைத்து அவனிடம் சரணடைந்தன. இத்தகைய ஸ்ரீகிருஷ்ணனின் மகிமையை பார்த்து, தேவர்களின் குழுவானது, ஸித்த கந்தர்வர்களின் கூட்டம், மேலே வானில் நின்று, நமோ நமோ என்றனர். || 10

ஆதி புருஷனான, நிரந்தரமான ஐஸ்வர்யத்தைக் கொண்டவனான ஸ்ரீகிருஷ்ணன், இந்த நந்தவனங்களில், மலைகளில், அறுசுவை கொண்ட வேணு இசையை இசைத்தான். பசுக்களை காப்பவன். அனந்த வேதங்களால் வேத்யன் இவனே. கிருஷ்ணன். மாதவன். முக்தர்களால் வணங்கப்படுபவன். அவனுடைய பாத பத்மங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றன. (மோத என்றால் விஷய ஸம்பந்தமான சுக விஸேஷம். ப்ரமோத என்றால் பரலோக சுகம். மேலதிக விவரங்களுக்கு : ஹரிகதாம்ருதஸார பிம்போபாஸன ஸந்தி 18-25ம் பத்யம் பார்க்கவும்). ||11

முக்தர்களிடமிருந்து ஸ்ரீபதி, ஸ்தோத்ரத்தினை ஏற்றுக் கொள்கிறான். இந்த கோபியர்களிடன் ஸ்தோத்திரத்தினை ஏற்றுக் கொள்ளும் இந்த பரப்ரஹ்மன், ஸ்ரீப்ரக்ருதியான ஸ்ரீமஹாலக்ஷ்மி, இந்த ஸ்ரீகிருஷ்ணனின் ரூபத்திற்கு, அழகிற்கு தானே தோற்கிறாள். நந்தகோகுலத்தில் இருந்த பெண்கள் அனைவருக்கும் தாங்கள் அவனின் அழகிற்கு ஈடு இல்லை என்பதை அவன் காட்டிக் கொடுக்கிறான். || 12

இந்த வனத்தில் இருந்த மரம், செடி, கொடிகள் என அனைத்தும், தாங்கள் விஷ்ணு வசமே ஆகிவிட்டோம் என்பதாக காட்டிக் கொண்டு, அவனை வணங்கின. பூக்கள், பழங்கள் ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் பூத்தன / காய்த்தன. அந்த ஸ்ரீகிருஷ்ணனின் புல்லாங்குழலின் இனிமையான இசையை சுவைத்துக் கொண்டு, மகிழ்ச்சியில் அவை கற்றறிந்த அறிஞர்களைப் போல தலை தூக்கி நின்றன. || 13

அந்த மரங்கள், இந்த வேணு நாதத்தினை கேட்டு, ஆனந்தக் கண்ணீர் வடித்தன. அந்த கண்ணீர் பூமியில் வந்து விழுந்ததை அந்தப் பெண்கள் மிகவும் வியப்புடன் பார்த்தவாறு, ஸ்ரீமனோஹரனின் கீர்த்தியினை புகழ்ந்தனர். அவற்றை அனுபவித்த (அறிந்த) மக்களே தன்யர். இத்தகைய லீலைகளைக் காணாத (அறியாத) பாமரர்கள், வேறு எதைதான் அறிவார்கள்? (அவர்கள் எதையும் அறிய மாட்டார்கள்). || 14

ஹே கோபியே கேள். சந்தனம், நீலோத்பல மாலைகளை தாங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனின் வக்ஷ ஸ்தளத்தினை பார்த்து மயங்கி, பறந்து கொண்டிருக்கும் தும்பிகள், அந்த மலர்களிலிருந்து தேன் எடுக்க முயன்றன. அந்த தும்பிகளின் ரீங்காரத்தைக் கேட்டு முகுந்தனும் தலை தூக்கி பார்த்தான். அப்போது, தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்த ஹம்ஸ பறவைகள் அவனின் இசைக்கு மயங்கி வந்தன. || 15

அழகான வேணு நாதம் என்னும் அமிர்தத்தை உண்டு, மயக்கத்துடன், மௌனத்துடன், அவன் அருகில் வந்து அரை கண் மூடியவாறு, தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனின் அழகில் மயங்கி, த்யானம் செய்யும் பரமஹம்ஸரைப் போல, அந்த அன்னங்கள் இருந்தன. இவ்வாறே அவை தினமும் செய்து வந்தன. || 16

தன் அண்ணனான பலராமன் மற்றும் கோபிகையர்களுடன் கூடி, சின்மயனான ஸ்ரீகிருஷ்ணன் தினமும் தன் வேணுவினை ஊதுகிறான். இரவு வேளைகளில் அந்த கோபியர்களுக்கு, ஆனந்தபூர்ணனான ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுக்கு பல்வேறு விதமான நடவடிக்கைகளால் மகிழ்ச்சியை அருள்கிறான். இவன் மோஹனான அழகன். || 17

ஸ்ரீகிருஷ்ணன், அற்புதமான தன் இசை நாதத்துடன், கோவர்த்தன மலையின் அருகில் சென்றான். அந்த இனிமையான நாதத்திற்கு பயந்து வேறு சில மிருகங்கள் மெதுவாக தம் இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்றன. ஒரு வேளை நாம் ஸ்ரீகிருஷ்ணனை பார்த்துவிட்டால், கார்மேக வண்ணம்

கொண்ட ஸ்ரீகிருஷ்ணன் நம் உறவினன். நம் உடல் மற்றும் மனதினால் நாம் அவனை ஸ்தோத்ரம் செய்துவிடுவோமோ என்று பயத்துடன் அவை தலைகுனிந்து நின்றன. || 18

இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணனின் மஹா பராக்ரமத்திற்கு பயந்து, அவனுக்கு மஹா பூஜையை செய்யும்படியாக, அந்த மலையில் வசித்த மிருகங்கள் ஸ்ரீகிருஷ்ணன் மேல் புஷ்ப வ்ருஷ்டி செய்தன. இந்த பூமியில் ஸ்ரீஹரியின் ஆணையை ஏற்று, அவன் சொல்படி நடப்பவனுக்கே முக்தி கிடைக்கிறது. அவ்வாறு அவன் சொல்படி கேட்காத துரோகிகளுக்கு, அந்தம் தமஸ்ஸே கிடைக்கிறது. || 19

கோபியர்கள் வந்து யசோதையிடம் கூறுகின்றனர். உன்னுடைய மகன் எதையும் அறியாதவன். கோபாலகர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு, தன்னுடைய அற்புதமான வேணுவினால் இனிமையாக பாடல்களை தன்னுடைய ஒளிர்வதான இதழில் புல்லாங்குழலை வைத்து, புதிய புதிய இனிமையான கீதங்களை பாடுகிறான். அங்கு தன்னுடன் இருக்கும் சிறுவர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு இதன் மூலம் பாடங்களை, பாடல்களை சொல்லிக் கொடுக்கிறான். || 20

வானத்தில் வந்து நின்ற சதுர்முக ப்ரஹ்ம தேவர், ருத்ரதேவர், இந்த்ரனே முதலான தேவர்கள், அவனுடைய இனிமையான இசையில், தம்முடைய காதுகளை கொடுத்து அதனை கேட்டனர். அந்த இசையை கேட்டு, அதன் இனிமையில் மெய் மறந்து, ஸ்ரீஹரியின் இசையை சுவைத்து, மிகவும் மகிழ்ச்சியுடன் திரும்ப தங்கள் இருப்பிடத்திற்கு சென்றனர் (அல்லது அங்கேயே அவர்களுக்கு எல்லையற்ற ஆனந்தம் உண்டாயிற்று). || 21

பசுக் கூட்டங்கள் நிறைந்திருந்ததான அந்த பூமியானது (அந்த பூமியில்), தாமரை, அங்குஶ, வஜ்ர த்வஜ ஆகிய சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ள ஸ்ரீகிருஷ்ணனின் பாத கமலங்கள் பதிந்து, அந்த பூமியே பவித்ரமானது. இதைக் கண்டு ஸ்வர்க்கவாசிகள் (தேவலோகத்தினர்) கூட, நாமும் இந்த நந்தவனத்தில் போய் இருந்துவிடுவோம் என்று விரும்பினர். இத்தகைய மகிமைகள் பொருந்திய ஸ்ரீகிருஷ்ணனின் பாத கமலங்களை ஆஸ்ரயம் செய்தவர்களுக்கு வைகுண்டம் எதற்கு? (நாமும் அங்கேயே போய் விடுவோம்). || 22

ஸ்ரீரமணனான அழகானவனான ஸ்ரீகிருஷ்ணன், தன் குழல் இசையை முடித்து திரும்பி வரும் வழியில், அந்தப் பெண்கள், வில் போன்றதான வளைந்த அவன் புருவத்தை (முகத்தை) பார்ப்பதற்காக அவர்கள் அங்கேயே இருந்தனர். அவனுடைய இனிமையான வேணுவின் ஸ்வரத்திற்கு மயங்கி, அந்தப் பெண்கள் அங்கேயே காத்திருந்தனர். அவர்களுக்கு மன்மதனின் அம்புகளின் கூட்டம் வந்து தாக்கிக் கொண்டிருந்தது. || 23

அந்தப் பெண்கள், தங்களின் உடல், வீடு ஆகியவற்றை மறந்தனர். தங்கமயமான அவர்களின் மேலாடைகள் விலகின. ஆனாலும், அவர்களுக்கு தங்கள் உடல் மேல் எச்சரிக்கை இருந்திருக்கவில்லை. முற்றும் துறந்த முனிவர்களைப் போல அவர்கள் இருந்தனர். ஸ்ரீகிருஷ்ணனோ, பசுக்களை மேய்த்தவாறு, தன் தோழர்களுடன், அவர்களின் தோள் மேல் தோள் வைத்தவாறு, தன்னுடைய குழலை இசைத்தவாறு, வனமாலியானவன், வனத்தில் அனைவரையும் மகிழ்வித்தான். || 24

கிருஷ்ணனின் ப்ரியமான இந்தப் பெண்கள், தம்முடைய சிறிய குழந்தைகள் மற்றும் வீட்டினை விட்டு, அச்யுதனின் ரூபத்தை மட்டுமே பார்த்துக் கொண்டிருந்தனர். ஸ்ரீகிருஷ்ணனின் லாவண்ய அமிர்தத்தை கூர்ந்து பார்த்தவாறு, தம் கண்களால் அவனை ரசித்துக் கொண்டிருந்தனர். அந்த ஸ்ரீகிருஷ்ணனின் குழல் இசை, அந்த வனத்தில் இருந்த அனைத்து பெண்களையும் மகிழ்வித்தது. || 25

பவித்ரமான நறுமணம் மிக்க மாலை, துளஸி, சந்தனம் ஆகியவற்றை பூசிக் கொண்டு / அணிந்து கொண்டு, நீலோத்பல மலரின் வண்ணம் போன்ற அவனது தேகம் - ஆகியவற்றுடன் பசுக்களை காய்பவனான அந்த ஶ்ரீகிருஷ்ணன், ஹே நந்தனே, உன்னுடைய புத்திரன், மலைகளிலிருந்து தென்றல் காற்று வீசிக் கொண்டிருக்க, அங்கே இருக்கும் யமுனா தீரத்தில், இவனும், தன் குழலை வைத்துக் கொண்டு, மெதுவாக வாசித்துக் கொண்டிருந்தான். அவன் அழகான கண்களைக் கொண்டிருந்தான். || 26

மலையில் இருக்கும் மரங்களின் மேல் பட்டு வந்ததான நறுமணம் மிக்க காற்றானது வந்து இவர்களை தாக்கியது. அழகான தேகம் கொண்ட பாடகர்கள், ஶ்ரீகிருஷ்ணனின் அழகினை பார்த்தவாறு நின்றிருந்தனர். பக்தியுடன் ஶ்ரீகிருஷ்ணனை அவர்கள் பல ஸ்தோத்ரங்களை செய்து கொண்டிருந்தனர். பலராமனின் தம்பியான ஶ்ரீகிருஷ்ணன், தன்னை பஜிப்பவர்களின் துன்பங்களை களைந்து, முக்தியைக் கொடுப்பவனாக இருக்கிறான். || 27

பஜிப்பவர்களின் துன்பங்களைப் போக்குபவனான ஶ்ரீகிருஷ்ணன், மாலை வேளையில், தன்னுடைய இருப்பிடத்திற்கு திரும்பி வரும் சமயத்தில், ஸஜ்ஜனர்களால் வணங்கப்படுபவனான, யதார்த்தமான (துக்க ராஹித்யமான) சுகங்களின் கடலான, தன் மக்கள், பசுக்கள், அறிஞர்கள் ஆகியோரை காப்பவன், தாமரையின் நண்பனான ஸூரியனின் அஸ்தமனம் ஆகியிருக்கிறது என்று தன் அண்ணனுடன் சேர்ந்து, தன்னுடைய இருப்பிடத்திற்கு திரும்பினான், அந்த வேளையில். || 28

பசுக்களின் கூட்டத்தின் காலடிகளால் பறந்த தூசியானது, ஶ்ரீகரனின் அங்கங்களில் பட்டுக் கொண்டிருந்தது. ஶ்ரீகிருஷ்ணன், தன் புல்லாங்குழலை ஊதியவாறு, அந்த பசுக்களுடன் கோகுலத்தை வந்து அடைந்தான். அப்போது அந்த ஊர் மக்கள், நல் மனம் கொண்ட அந்த மக்கள், போதும் போதும் என்று சொல்லாமல் (த்ருப்தி அடையாமல்) அவனை பல்வேறு விதங்களாக ஸ்தோத்ரம் செய்தனர். || 29

பசுக்கள் மற்றும் கோபாலகர்களின் தாபத்தை (துன்பங்களை) ஶ்ரீகிருஷ்ணன் விரைவில் / உடனடியாக தீர்த்து வைத்துக் கொண்டிருந்தான். தேவகியின் வயிற்றில் உதித்தவனான சந்த்ரன், தேவ கணங்களுக்கெல்லாம் இவனே தலைவன், அவன் அவனுடைய புருவத்தின் அசைவினாலேயே, அந்த கோபாலகர்களுக்கு அற்புதமான ஆனந்தத்தை விரைவில் அளித்துக் கொண்டிருந்தான். அவன் பவித்ரமான, நற்குணங்களின் கடல் ஆகிறான். || 30

வெண்மையான சந்த்ரனைப் போன்ற வதனம், குண்டலங்கள் ஆடுவதான கன்னங்கள், பத்மராக, வஜ்ர, நீல, நவரத்னங்கள் ஆகியவை இழைத்த ஆபரணங்கள் ஆகியவற்றுடன், யதிபதியான ஶ்ரீகிருஷ்ணன், இந்த கோபிகையர்களுக்கு சந்த்ரன் பூர்ணமாக ஒளிர்ந்து கொண்டிருக்கையில், அவர்களுடன் க்ரீடைகள் பல செய்து அவர்களை மகிழ்வித்தான். மதம் பிடித்த யானையைக் கொன்றவன் இவன். || 31

பசுக்களை மேய்க்கும் அந்த இடத்தில், கோபாலகர்கள் தினமும், இவ்வாறு ஆகாயம் போன்ற அனைத்து இடங்களிலும் வ்யாப்தனான ஶ்ரீகிருஷ்ணனின் பிரிவினை தாங்க முடியாமல் தாபம் கொண்டனர். சந்த்ர குலத்தில் பிறந்தவனான ஶ்ரீகிருஷ்ணன், ஶ்யாம ஸுந்தரன், அவற்றை உடனடியாக பரிஹரித்தான். அந்த கோபிகையர்களின் எதிரில் / சமீபத்தில், ஸ்வாமியானவன் எப்போதும் தரிசனம் அளித்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண்களின் பக்தி பாவத்திற்கு, மனோஹரனானவன் மிகவும் மெச்சினான். || 32

அந்த கோகுலத்தின் கோபிகையர்கள், மற்றும் மூன்று உலகங்களில் இருப்பவர்களும், ஸ்ரீகிருஷ்ணனின் லீலைகளை, தாங்கள் உண்மையான பக்தியுடன் பாடி, சுகம் கொண்டு இவ்வாறு பஜித்துக் கொண்டிருந்தார்கள். ஸஜ்ஜனர்கள், அவனிலேயே மனம் வைத்தவர்கள், யானையைப் போல நடை கொண்டவர்கள், சந்த்ரனைப் போல ஒளி முகம் கொண்டவர்கள், தேவர்களின் தேவனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு ப்ரியமானவர்கள் (அவனை பலவாறு போற்றிப் பாடிக் கொண்டிருந்தனர்). || 33

இவ்வாறான வேணு கீதையின் அமிர்தத்தை, யாரொருவர் மற்றொருவருக்கு எடுத்துச் சொல்கின்றனரோ, யாரொவர் இதனை மிகவும் பக்தியுடன் கேட்கிறார்களோ, அவர்களே அறிஞர்கள். பவித்ரமான ஸ்ரீகிருஷ்ணனின் சரித்ரமானது, ஸ்ரீவேதவ்யாஸரின் மகனான முனிவரான ஸ்ரீஶுக மஹரிஷிகள், ஸ்ரீபரீக்ஷித் ராஜனுக்கு கூறினார். அவனும் அதனை பக்தியுடன் கேட்டுக் கொண்டான். || 34

ஸ்ரீவர ப்ரஸன்ன வெங்கட தேவதேவன், நம் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுகிறான். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவன் கல்பவ்ருக்ஷன். தன்னை சேவை செய்பவர்களின் விருப்பங்களை, அந்தந்த காலங்களில் (உடனடியாக) நிறைவேற்றுபவன். அவனுடைய புகழ்களை நல்பக்தியுடன் பாடுபவர்களே, ஜீவன் முக்தர்களே ஆகிறார்கள். || 35

***

**50 ராக : [ஜம்ஜூடி] தாள : [ஆதிதாள]**

**க்ருஷ்ணாஸ்ரித ஶிஷ்டரெல்லரு துஷ்டிலிரலு அரிஷ்டனெம்பவ**
**துஷ்டகம்ஸன இஷ்டகார்யகெ கோஷ்டகைதந்த**
**வார்ஷ்ணிபலரனு நஷ்ட மாடுவ ப்ரஷ்ட்வ்ருஷபனு கஷ்டபடிஸித**
**புஷ்ட ககுதிய கம்பிஸிதனு மஹியனதிகோர ॥1॥**

**காலகெதருத பால நிகுரிஸி ஶீளிதனு மேககள கோடிலி**
**மேலே மேல் மலமூத்ர பிடுதலி ஆலி கம்படரே**
**பாலகர பாலெயர கோகள மேளவஞ்ஜிஸி துருகிஹாகுத**
**ஸ்தூலபீகர கர்பிணியர பஸிர கெடஹிதனு ॥2॥**

**கூளநுபடள தாளலாரதெ கோளிடுத ஓடிதரு ஸகலரு**
**பாலிஸை கோவிந்தராமாயெனுத மொரெயிடுவ**
**பாலெயர அர்த்தஸ்வரங்கள கேளி அஞ்ஜதிரெனுத அபயவ**
**ஹேளி களனொலு மாதனாடித ஶ்ரீலலனெயரஸ ॥3॥**

**எலே துராத்மாரிஷ்டவ்ருஷபனெ எளெயரனு கோவத்ஸகோவர**
**லலனெயரனஞ்ஜிஸுவ வீரனெ பாரோ நீ நம்ம**
**பளியே ஶீக்ரதி பலவனீவேவு இளெகே பாரக துஷ்டஹர்தரு**
**பலமுரார்தரு திளியலில்லவே ம்ருத்யு நினகெந்து ॥4॥**

**வீரத்வனியிம் கரெதனச்யுத க்ஷோரஸ்ருங்கனு கோணதக்கிஸி**
**தாருணிய கெதருத்த ஶூரபன கரத வஜ்ரமேலு**
**வீரவேகதி பந்து தகுலித ஶௌரி கெளெயர பெகலினலி நளி-**
**தோளஹேரியே நகுத நோடித துஷ்டசேஷ்டேயனு ॥5॥**

**ஸகரனுளிதச்யுசுதனு பருதிஹ ககுதியனு கெடஹிதனு தரெயலி**
**ப்ரகர புனரபி எத்து கோபதி கெணிகிதனு ஹரிய**
**நிகிளரொடனெயனவனவிஷாணவ ஶுகரபல்லவத்ஹிடிது கெடவித**
**குகளன்ஹிங்கால்விடிது திருகிஸி அப்பளிசிதிளெகெ || 6**

**மர்திஸித முங்காலினிந்தலி அர்த்ரவஸ்த்ரவ ஹிண்டிதோல் கள**
**மர்தகெத்தித கோடெரடரலி சூர்ணிஸித பளிக**
**கார்த ரக்தவ கங்கஉளரடு உதிர்துவவ ம்ருதனாத யமபுர**
**ஸார்வ ஸுரரம்பரதி துதிசிதர்போவளெயகரெது || 7**

**ஸுரமுனிகளொக்கூடி துதிஸிதர் ஹருஷதலி அக்ரஜகெளெயரிம்**
**வரகோமதிகள ஹிண்டினிம் முரஹர வ்ரஜவ போகலு**
**சிரமஹிமனத்புத ஸுகர்மவ பரமமதி கோவளரு துதிஸலு**
**கருணபீயூஷ கருணாத்ருட்யாநந்ததலி ஹொரெத ॥8॥**

**தன்ன நம்பித ஜீவரிகெ மத்தன்யரிம் பாதெயு லவாதரெ**
**தன்ன பிருதிகெ ஹானிகாம்புவ தீனவத்ஸலனு**
**தன்யரனு மாடிதனு வ்ரஜ பாவன்னவனு மாடிதனு யஸோதே நம்-**
**தன்ன புண்யத பலவு ஶ்ரிப்ரஸன்னவேங்கடேஶ ॥9॥**

கிருஷ்ணனை ஆஸ்ரயித்துக் கொண்டிருந்த அவனது பக்தர்கள் (கோபிகையர்கள், கோபாலகர்கள்) அனைவரும், மிகவும் மகிழ்ச்சியாக இருக்கையில், அரிஷ்ட அஸுரன் என்பவன், துஷ்டனான கம்ஸன் விரும்பிய (ஸ்ரீகிருஷ்ணனை கொல்ல வேண்டும் என்னும்) காரியத்திற்கு, நந்தகோகுலத்திற்கு வந்தான். ஸ்ரீகிருஷ்ணன் மற்றும் பலராமன் இருவரையும் கொல்ல வேண்டும் என்னும் எண்ணத்தில் அந்த கெட்ட அஸுரன் எருதின் வடிவில் வந்து அவர்களை கஷ்டப்படுத்தினான். அபாரமாக இருந்த அந்த எருதானது, இந்த பூமியே நடுங்குமாறு பயங்கரமாக கர்ஜித்தது. || 1

அந்த அஸுரன், தன் கால்களால் பூமியை தோண்டியவாறு, வாலினை தூக்கியவாறு, மேகங்கள் ஒன்றுக்கொன்றூ இடித்ததைப் போல உறுமினான். அவ்வப்போது மல, மூத்ரங்களை விஸர்ஜனம் செய்தவாறு, பாலகர்களின், பாலையர்களின் கூட்டம், பசுக்களின் குழுக்கள் இவனைக் கண்டு பயந்தன/ பயந்தனர். அணைக்கரைகளை அடித்து உடைத்தவாறு வந்த இந்த அஸுரனைக் கண்டு கர்ப்பணிகளின் வயிற்றில் இருந்த கருக்கள் கலைந்தன. || 2

இந்த அஸுரனின் தொந்தரவுகளை தாங்க முடியாமல், அனைவரும் தலை தெறிக்க ஓடினர். ஹே கோவிந்தா, ராமா, எங்களை காப்பாற்று என்று வேண்டியவாறு வந்தனர். இத்தகைய பாலையர்களின் அபலக் குரல்களைக் கேட்டு, ‘பயப்படாதீர்கள்’ என்று அவர்களுக்கு அபயம் அளித்து, அந்த அஸுரனின் இவ்வாறு பேசத் துவங்கினான் - ஸ்ரீலக்ஷ்மிதேவியின் தலைவன். || 3

‘ஹே துராத்மனே. கெட்ட வ்ருஷபனே. சிறியவர்களை, பசுக்களை, கன்றுகளை, கோபாலகர்களை, பெண்களை பயமுறுத்தும் வீரனே, நீ எங்களிடம் வருவாயாக. விரைவில் உனக்கு தக்க பலன்களைக் கொடுக்கிறோம். பூமியின் பாரத்தை குறைப்பவர்கள் நாங்கள். கெட்டவர்களை அழிப்பவர்கள். நாங்கள் பலராமன் மற்றும் முராரி. தெரியவில்லையா உனக்கு?. உனக்கு மரணமே கிடைக்கப் போகிறது’ என்றனர். || 4

இவ்வாறாக வீர த்வனியுடன் அச்யுதன் அந்த அஸுரனை அழைத்தான். கூர்மையான கொம்புகளைக் கொண்ட அந்த அஸுரன், மிகவும் கோபத்துடன், பூமியைக் கிழித்தவாறு, ஸ்ரீகிருஷ்ணன் அழைத்த இடத்திற்கு வேகமாக வந்து சேர்ந்தான். ஸ்ரீகிருஷ்ணனோ, தன் நண்பர்களின் தோளின் மேல், சிரித்தவாறு, தன் கைகளைப் போட்டவாறு, அந்த துஷ்டனைப் பார்த்தான். || 5

தன் தோழர்களை சிறிது பின்னுக்குச் செல்லவும் என்று கூறி, அச்யுதன் அங்கு வந்த அந்த எருதினை பூமியில் போட்டு அடக்கினான். அந்த வீரனான துஷ்டன், மறுபடி எழுந்து மிகவும் கோபத்துடன் உறுமினான். ஸ்ரீஹரி, அனைத்து ஜகங்களுக்கும் தலைவன், அவன் அந்த எருதியின் கொம்பினை, தன் கைகளால் பிடித்து, மறுபடி கீழே தள்ளினான். அந்த அஸுரனின் பின்னங்கால்களை பிடித்துத் தள்ளி அவனை பூமியில் அடித்து நொறுக்கினான். || 6

அந்த அஸுரனின் முன்னங்கால்களைப் பிடித்து, ஈரமான துணியை உலர்த்துவதைப் போல, அந்த அஸுரனை பிடித்து தூக்கி, பின் மறுபடி கீழே அடித்து அவனை பொடிப்பொடி ஆக்கினான். பிறகு, தன் இரு கண்களிலிருந்தும் ரத்தத்தை விட்டவாறு, அந்த அஸுரன் இறந்தான். யமபுரத்தை அடைந்தான். தேவர்கள் வானிலிருந்து ஸ்ரீகிருஷ்ணனை துதித்தனர். பூமழை பொழிந்தனர். || 7

தேவர்கள், முனிவர்கள் என அனைவரும் ஒன்றுகூறி ஸ்ரீகிருஷ்ணனை மிகவும் மகிழ்ச்சியுடன் துதித்தனர். தன் அண்ணனுடன், நண்பர்களுடன், பசு, கன்றுகளின் கூட்டங்களுடன், ஸ்ரீகிருஷ்ணன் நந்தகோகுலத்திற்கு செல்கிறான். அபார மஹிமைகளைக் கொண்ட ஸ்ரீகிருஷ்ணனின் அற்புதமான நற்காரியத்தைக் கண்ட அந்த நல்மதி படைத்த கோபாலகர்கள் அவனை துதித்தனர். கருணைக் கடலான, தன் கருணை நிறைந்த பார்வையால் அனைவரையும் பார்த்தான். || 8

தன்னை நம்பிய பக்தர்களுக்கு, வேறு யாரிடமிருந்து தொந்தரவு சிறிதேனும் ஏற்பட்டால், தீனவத்ஸல என்னும் தன்னுடைய பெயருக்கு நஷ்டம் வருகிறது என்று, அவர்களை காக்கிறான். அந்த கிராமத்தையே பவித்ரமாக ஆக்கினான். இது ஸ்ரீப்ரஸன்ன வெங்கடேசனின், யசோதை நந்தனின் புண்ணியத்தின் பலனே ஆகும். || 9

***

**51. ராக :கன்னட காம்போதி தாள :ஏகதாள**

**க்ருஷ்ணாஸ்ரிதரிக்யெதேஷ்ட ஜயவு ஸ்ரீ விஷ்ணு வைஷ்ணவத்ரோஹிகளிகெ**
**கஷ்டத தமஸு விஸிஷ்ட துக்காலய துஷ்டரிகபஜயவாகே॥ப॥**

**ஜாத: கம்ஸவதார்தனு ஹரியெம்ப நீதஜ்ஞனு முனிப்ரஹ்ம- ராதனு ஸ்ரீதருணி ப்ரீதிகெ**
**பந்தனு ஆதுரதல்லி ஸம்ப்ரம்ம**
**பாதகி கம்ஸகே பாதக [புத்திய] ரீதிய போதிஸித்ஹீகெ**
**தாதனு நந்தனு மாதெ யஸோதெயு காதிஸிகொளத கன்யெளிகே॥1॥**

**தேவகிஜடரஜனா வாஸுதேவனு தேவி ரோஹிணிஸுத பலனு**
**தேவி யமுனெ தாடி கோவபள்ளிலி வஸுதேவனிட்டா கன்யெயளனு**
**தேவகிகித்தனு ஈ வித கார்ய ந்ருதேவ எச்சரவ ஹேளுவேனு**
**ஆ வீரரிப்பரு பெளெதரு வ்ரஜதலி காவரு தேவக்களன்னு॥2॥**

**நந்தனு ஸௌரிகெ பந்து ஸ்நேஹித பலு கந்த வீரரு உபயதரு**
**கொந்தரு நின்ன மந்திய போஜப ஸந்தேஹவில்லவஹிதரு**
**எந்தனெ உக்ரதி செந்தனு ஸாணிய ஹொந்தித்த கத்தியவிடித**
**இந்தே அனகதுந்துபிஸ்த்ரீஸஹ கொந்தெனெனுத களனுடித॥3॥**

**நாரத முனியு நிவாரிஸிதனு முந்தே காரண உண்டுளுஹெனலு**
**மொரதெ ஆஜ்ஞேய ஸௌரிய ஸதி ஸஹ காராக்ருஹதி பந்திஸலு**
**க்ரூரனு லோஹத காருகரிகெ ஹேளி நாராயண ஸ்மரணெயிந்த**
**ஹாரித ககனகே மாரக கேஸிகெ தாருணீபதி நேமிஸிதா॥4॥**

எலெ கேஶியே கோவளர பள்ளிகெஹோகு அலஸதே க்ருஷ்ணபலரனு
கோலு கஹனரவர் பௌதரு நந்தன நிலயதி மத்தவரன்னு
ஸலே சாணூர கௌஸல முஷ்டிகாமாத்ய ஹலஹஸ்திபரனு கரெஸித
பலவாஸுதேவர கொலுவ உபாயவ கலிகம்ஸனு நேமிஸித ॥5॥

கேளிரோ நம்மாப்தாளுகளிரா  நீவு கேளி பல்லிரி நந்தவ்ரஜதி
காலரூபரு ஶௌரி பாலகரிப்பரு பால அச்யுத பலரிஹரு
ஹேளேனெம்மய மேலாளுகள கோபாலகரு ஸவரிதரு
நாளெகெ கரெஸுவே மேலவரர்தவ ஆலோகிஸல்யாதவரு ॥6॥

ராமக்ருஷ்ணரு பலு கோமலரென்னதெ நேமிஸி மல்லலீலேயலி
ஆ மஹாகளர நிர்னாமவ மாடிரி ஸ்வாமித்ரோஹிகள ஶீக்ரதலி
ஹேமமஞ்சகள மஹாமல்லர ரங்க க்ராமதவரு நோடுவலி
ஹே மஹாமாத்யனெதீமந்தனு நீ நேமித கார்ய மாடுவலி ॥7॥

குவலயபீட3ன கவாடதி3 நிலிஸிரி அவரிப்3ப3ரு ப3ரலாகெ3
தவகதி3 கொலிஸுவ ஹவணத3லிரி நிம்மவரெல்லரு ஒந்தா3கி3.
அவனிப ஹீகெ3னலவரெந்த3ரு ஹே ப்ரபோ4 தவ ப4கி3னீஸுதரவரு
குவரர கொந்த3ரெ பு4வியலி அபவாத3வு ப3ஹுதெ3ந்து3 நுடி3த3ரு ||8

ஈ பரி நுடி3யலு பூ4பதியெந்த3னு நா புத்ரனல்லுக3ஸேனகெ3
நா புட்டிதெ3 க3ந்த4ர்வகெ3 ராஜன ரூபதி3 தோரித3 தாய்கெ3
ஆ பதிவ்ரதெ ருதுரூப்யாகி3த்3த3ளு பூ4பதியெந்து3 கூடி3த3ளு
காபட்யவரியதெ3 தா பஶ்சாத் ஸந்தாபதி3 ப3லு ப3ளலித3ளு ||9

த்3ருமிள க3ந்த4ர்வன குவரனு நா போ4ஜ சமு ஸம்ப3ந்த4வின்னேனு
குமதி து3ராத்மனெ மமக்ஷேத்ரதி3 நீ ப்ரமத்த பீ3ஜாரோபிஸிதெ3
ரமிஸித3 பாபகெ ஸுரமண ப்ராயஸ்சித்த அமலகாயவ தோ3ஷிஸிதெ3 ||10

எனெ நுடி3த3னு நாவநிமிஷரு நீ மனுஜளு நிம்ம பா4க்3யக்கெணெயெ
எனலு கோபிஸித3ளவநிஜலானிலவாயு க4ன தி3க்பதிக3ளு ஹொணெயெ
இனஶஶிக3ள மீரினிது பாபவ நா மன:பூர்வக மாடி3த3ரெ.
இனஜனு ஶிக்ஷிஸலெனகெ3ந்த3ளு நம்ம ஜனனி ரோதி3ஸித3ளு ஹெத3ரெ ||11

மத3கரி நளினிய கத3டி3 கீகெ))டி3ஸித3 ந்த3தி3 கஶ்மல நின்ன ஸ்பருஶ
ப3து3கென்ன பாதிவ்ரத்ய கத3லிது நின்னனு மது4ஹர ஸதெ3வ ஸர்வேஶ
ஹெத3ரித3னவ ஶாபத3 ப4யவிடி3த3னு வதி3ஸித3 ப3லுவினயத3லி
மதி3ய பீஜதி3 ஸுதனுதி3ஸுவ ப3லவாரிதி4 ப3லு ஶூரனெனுதலி ||12

அந்ருத நுடி3யெ நா வனஜநயனெ கேளெனலு ஜனனி ஸந்தைஸி
நின பீ3ஜ து3ஷ்டவு அநிமிஷஜனரிபு பி4ன்னவ்ருதவு ஹரித்3வேஷி
இனிது கருணஶூன்யன நிர்க்ரணி க்ரூர க4னகு3ருஜனத்3விஜத்3ரோஹி
அனுதி3ன உன்மார்க3னு கண்டகனு ஸ்வஜனஜனரிகெ3 காளாஹி ||13

ஜனனிய நுடி3கே3ள்தனு க3ந்த4ர்வனு க4னஶாபகஞ்ஜ்யோடி3த3னு
நனகெ3 ஸ்பஜனவில்ல ஜனனி ப3ஸிரஹொந்தி3 ஜநிஸித3 மொத3லாகி3ன்னு ||14

அனிமிஷமுனி ஹேளிதனு உபதேஶவ கனகுருநுடி புஸியல்ல
எனகாப்தரு நீவு மனஸின கார்யவ அனுமானில்லதெ மாடியெல்ல
ஜனகுக்ரஸேனனு கனதுர்புத்ததேவகனு நனகாப்த விருத்த
ஆனகதுந்துபி கிதவனு மத்தேனு நன்ன பித கந்தர்ப ஸித்த॥15॥

பலபத்ர அச்யுதரலஸதே கொல்லிரி பலுலேஸக நிமகில்ல
கொலலு கலிஸி குவலயபீடனிகே எளெயலு லகுதரரல்லா
லலனெ கௌரீஶன பலு பஜிஸிரி முந்தே கெலவு பாக்யோதயவக்கு
பல குஸுமாவளியலி நரமேதத பலிகவரர்பிஸபேகு॥16॥

கலுவஸுதேவனு குலீனெயு தேவகி ஸலே உக்ரஸேன கோவளரு
பலு யாதவசமு லலிதோத்ஸவவனு குளிது நோடலி நலிதவரு
எளெமக்கள வதெகள நோடலி கங்கள தும்ப ஜரடரு நெரெது
கெலவு ஜனபதவு பிலு ஹப்பத பகெகள நோடுவரிகெ அரிது॥17॥

ஹே மஹாமாத்யனெ ஈ மஹாகார்யவ நீ மாடு நினகெ மங்களவே
ஆ மத்த வாரணோத்தாமவ நில்லிஸு ஹையமரங்கத்வார நடுவே
ராமன நெரத ஶாமன ஸீளிஸு நேமிஸு சதுர்தஶி திவஸ
ப்ரேமத பிலுஹப்ப ஸோமதரன ப்ரீதி ஈ மேத பஶுத்வய ஹிம்ஸ॥18॥

அக்ரூர மந்த்ரிய கரவிடிது ஹுஸினக்கு ஹேளித போஜபனு
ஸொக்கித ஶௌரிய மக்கள வ்ரஜதலி ஆ க்ருஷ்ணராமரிப்பரனு
கக்கனெ தனுர்யாகக்கெ கரெது தா ஈ கார்யகௌரவ நினகே
நீ க்ஷுத்ரநல்லெமகெ கேவலாப்தனு ஆ க்ருஷ்ணனிந்த்ரகொலிதந்தே॥19॥

நந்தவ்ரஜகே போகொந்திஷ்டு காயதெ நந்தனரிப்பர கூடி
ஸ்யந்தனவேரிஸி மந்தமதியெனிப நந்தகோபன ஒடகூடி
எந்திகே கொடுவ கரதெகுதுகொண்டு மந்திய ஸஹ உத்ஸவகெ
நிந்திரதெ பாயெந்தனு மத்தே மதாந்தனு நிஜமரணக்கே॥20॥

கேளலெ தானவபதி லக்ஷ்மீஶன ஆளுகளென்ன வைரிகளு
காலகல்பேபன கைலி கொலிஸுவேனு மேலே சாணூரமல்ல ஸிடிலு
பீளலு உளிவரே பாலக்கிதவரு கூளகிதவ வஸுதேவ
ஸாலு யாதவரு ஹ்ருச்போலரு வ்ருஷ்ணிபோஜ பாளய குகுர தாஶார்ஹ॥21॥

ந்ருபப்ராதா ஆஹுக கபடியு தேவகாத்யபகாரிகள கொலிஸுவெ
ஸுப்ருதிவியாளுவெ ந்ருபமாகத குருக்ருபெயுண்டெனகெ ஒலிஸுவெ
ஆ பரஶிவனு நமகபர்மித மித்ரனு ரிபுஹர பாண ஶம்பரரு
குபித விவித பௌமி உபகாரிகளு நமகெ பரமஹிதரு ஸம்மதரு || 22

ஸுரபக்ஷதவர தரிவெ ஸாம்ராஜ்யவ பரம ஸுகதி மாடுவெனு
ஹரிபலரிப்பர உரு ஶீக்ரதி நீனு தரெதந்தரெ வதிஸுவெனு
அரஸன நுடிகுத்தரவனு கொட்டனு அரியெ நா தைவவ கதிய
அரிதெனு நின்ன மனத்ஹருஷவ சித்யஸிதைரடு ஸமானத மதிய || 23

புருஷகெ மஹத்பல பரெ மாதேனோ நின்ன நிரூபதி வ்ரஜகைதுவெனு
பரம மனோரத தொரெகொம்புது பலு அரிதெனுதலி தெரளிதனு
துருளரு உச்சபதகெ கரவிக்கலு ஹரியு ஸஹாயனாகுவனெ
ஸுரஸம்பத ஸ்திரஸுரர சிரியு உரி நெரெ ஹொந்ததிஹுது நிதான || 24

ஸிரி ப்ரஸன்வெங்கட கிரிபதிக்ருஷ்ணன தருஶன ஸுக்ருதத பலவு
தொரகெ நம்மய குருஹிரியர தபவெந்து சிரவெந்து க்ருஹகைதிபரலு
ஹருஷ துக்ககெ ஶ்ரீஹரி ப்ரேரகனெந்து இருளொந்து ஹரிஸ்மரணிந்த
பரமபாகவதக்ரூரனித்தனு தன்னவர மந்திரதலி சந்த || 25

ஸ்ரீகிருஷ்ணனை அடைந்தவர்களுக்கு / வணங்குபவர்களுக்கு அபாரமான வெற்றி கிடைக்கிறது. ஆனால், ஸ்ரீவிஷ்ணு மற்றும் வைஷ்ணவ த்ரோஹிகளுக்கு, கஷ்டமான தமஸ்ஸே கிடைக்கிறது. அபாரமான துக்கம் சேர்கிறது. அத்தகைய துஷ்டர்களுக்கு தோல்வியும் உண்டாகிறது. || ப

கம்ஸனைக் கொல்வதற்காக அவதாரம் எடுத்த ஸ்ரீகிருஷ்ணனே ஸ்ரீஹரி என்று அறிய வேண்டும். அவன், முனிவர்கள் / ப்ரஹ்மர்களால் வணங்கப்பட்டு, ஸ்ரீபூமாதேவியின் வேண்டுகோளுக்கு ஏற்ப இந்த அவதாரத்தில், மகிழ்ச்சியுடன் வந்தான். கெட்டவனான கம்ஸனுக்கு, அவனுடைய கெட்ட புத்தியை திருத்துவதற்காக, நந்தகோபனை தந்தையாகவும், யசோதையை தாயாகவும் ஆக்கிக் கொண்டு வந்தான். தன்னை (கம்ஸன் அடித்துக் கொல்ல முயன்றபோது) காத்துக் கொண்ட துர்காதேவியானவள் (கம்ஸனிடம் இவ்வாறு கூறுகிறாள்)... || 1

தேவகியின் வயிற்றில் பிறந்த இவன் பெயர் வாஸுதேவன். ரோஹிணி தேவியின் புத்ரனான பலராமன். தேவியான யமுனாதேவியை தாண்டி, ஸ்ரீகிருஷ்ணனை கோகுலத்தில் சென்று வைத்தான்வஸுதேவன். அங்கிருந்த கன்யையை, தேவகியிடம் கொண்டு வந்து கொடுத்தான். இவ்வாறான செயல்கள் நடந்திருக்கின்றன என்று, அரஸனே கம்ஸனே, நான் உனக்கு சொல்கிறேன். அந்த வீரர்கள் இருவரும் (கிருஷ்ண பலராமர்கள்) நந்தகோகுலத்தில் வளர்ந்தனர். அவர்கள் தேவர்களையே காக்கின்றனர். || 2

துவக்கத்தில், நந்தகோபன் வந்து வஸுதேவனை சந்தித்தான். அப்போது நண்பன் கூறுகிறான். இரு சிறுவர்களும் அபாரமான வீரர்கள். போஜ அரஸனான கம்ஸனை இவர்கள் கொல்வார்கள். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இதே விஷயத்தை பிறகு, துர்காதேவியும், பின்னர் நாரதரும் கம்ஸனிடம் கூறியபோது, கம்ஸன் மிகவும் கோபத்துடன், தன் வாளினை ஏந்தியவாறு, இன்றே அந்த வஸுதேவனை, தேவகியுடன் சேர்த்து கொன்று விடுகிறேன் என்று அந்த அஸுரன் கம்ஸன் கூறுகிறான். || 3

அப்போது நாரதர் கம்ஸனை சமாதானம் செய்கிறான். பிறகு தக்க காரணம் வரவிருக்கிறது. இப்போது அவர்களை கொல்ல வேண்டாம் என்கிறான். அவருடைய ஆணையை மீறாமல், கம்ஸன், வஸுதேவனை, அவரது மனைவியான தேவகியுடன் சேர்த்து சிறைச்சாலையில் அடைக்கிறான். அந்த சிறைச்சாலையின் காவலாளிகளுக்குக் கூறி அவர்களை கவனித்து வருமாறு கூறுகிறான். பிறகு, நாரதர், நாராயண ஸ்மரணையுடன் வானில் பறந்து சென்றார். பிறகு, கம்ஸன், கேஶி அஸுரனிடம், நீ உடனே கோகுலத்திற்கு சென்று, கிருஷ்ண பலராமர்களை கொன்று வா - என்று நியமித்தான். || 4

ஹே கேஶியே, கோபாலகர்கள் இருக்கும் ஊருக்குச் செல். அங்கிருக்கும் கிருஷ்ண பலராமர்களை தாமதம் இன்றி கொல்வாயாக என்றான். ஆனால், அவர்களை யாராலும் கொல்ல முடியாமல் போனது. அந்த கிருஷ்ண பலராமர்கள் நந்தனின் வீட்டிலேயே நன்றாக வளர்ந்து நின்றனர். பிறகு கம்ஸன், கிருஷ்ண பலராமர்களை மதுராவிற்கு அழைத்தபோது, அங்கு சாணூர என்னும் மல்யுத்த வீரனுடன் போர் புரியச் செய்தும், குவலயாபீட என்னும் யானையின் காலில் மிதித்தும், ஸ்ரீகிருஷ்ணனை கொல்கிறேன் என்ற எண்ணத்தில், கலி கம்ஸன், சாணூரனை நியமித்தான். || 5

நமக்கு ஆப்தர்களானவர்களே கேளுங்கள். நீங்கள் இந்த விஷயத்தை கேட்டிருப்பீர்கள். நந்தகோகுலத்தில் கிருஷ்ண, பலராமன் என்னும் இரு சிறுவர்கள், நந்தகோபனின் வீட்டில் இருக்கிறார்கள். இதுவரை அங்கு சென்ற என்னுடைய சேவகர்களை (பூதனி, ஶகடாஸுரன் முதலானவர்களை) அந்த கோபாலகர்கள் கொன்று விட்டார்கள். ஆகவே, நான் அவர்களை நாளை இங்கு வரச்செய்வேன். அவர்களுடைய சாமர்த்தியம் என்ன என்பதை யாதவர்கள் அறியட்டும் - என்றான் கம்ஸன். || 6

ராம, கிருஷ்ணர்கள் மிகவும் மிருதுவானவர்கள் என்பதை பொருட்படுத்தாமல், அவர்களை மல்யுத்தத்தில் நியமனம் செய்து, அந்த மஹா துஷ்டனின் (ஸ்ரீகிருஷ்ணனின்) மரணத்தை ஏற்பாடு செய்யுங்கள். ஸ்வாமியான என்னுடைய (கம்ஸனுடைய) த்ரோஹிகளை (ராம கிருஷ்ணர்களை) உடனடியாக கொல்லுங்கள். தங்கமயமான இருக்கைகளுடன் கூடிய ஒரு பெரிய அரங்கத்தை நிர்மாணம் செய்து, அங்கு அனைத்து க்ராம மக்களும் பார்க்குமாறு, ஹே

மஹா வீரனே (சாணூரனே), நீ, நான் கூறிய வேலையை (ஸ்ரீகிருஷ்ணனை கொல்வது) உடனடியாக செய்ய வேண்டும், என்றான் கம்ஸன். || 7

குவலயாபீட யானையை வாயிலிலேயே நிறுத்துங்கள். அந்த ராம கிருஷ்ணர்கள் வரும்போதே, உடனடியாக இந்த யானை அவர்களை கொல்ல வேண்டும் என்னும் எண்ணத்தில் இருங்கள். நீங்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து அவனை கொல்லுங்கள் - என்றான். கம்ஸன் இவ்வாறு கூற, அவர்கள் அனைவரும் கூறுகின்றனர். - ஹே ப்ரபோ, அவர்கள் இருவரும் உன்னுடைய சகோதரியின் மக்கள். சிறுவர்களைக் கொன்றால், இந்த பூமியில் எங்களுக்கு அபவாதம் (கெட்ட பெயர்) வந்துவிடும் - என்றனர். || 8

அவர்கள் இவ்வாறு கூற, அரசனான கம்ஸன் பதில் அளிக்கிறான். நான் உக்ரஸேனனுக்கு மகனே அல்ல. நான் ஒரு கந்தர்வனுக்கு பிறந்தேன். உக்ரஸேனனுடன் சேர வேண்டும் என்ற விருப்பத்தில் இருந்த என் தாய்க்கு, அந்த கந்தர்வன் அரஸனின் ரூபத்தைப் போலவே தோன்றினான். அவனுடன் சேர்ந்தவளுக்கு நான் பிறந்தேன். அந்த பதிவிரதை, ருது ரூபவதியாக இருந்தாள். அரஸனே வந்திருக்கிறான் என்று எண்ணி அந்த கந்தர்வனுடன் சேர்ந்தாள். அவனுடைய கபட வேடத்தை அறியாமல், அவனுடன் சேர்ந்து, பிறகு உண்மை நிலை அறிந்து மிகவும் கவலைப்பட்டாள். || 9

ஆகவே, நான் அந்த த்ருமிள என்னும் கந்தர்வனின் மகன். போஜ பரம்பரையின் சம்பந்தம் எனக்கு இல்லை. அந்த கந்தர்வனைப் பார்த்து, என் தாயானவள் - புத்தி அற்றவனே, துராத்மனே. என்னுடைய இடத்தில் நீ உன்னுடைய பீஜத்தை விட்டுவிட்டாய். என்னை கூடிய பாவத்திற்கு நீ ப்ராயச்சித்தம் செய்ய வேண்டும். பவித்ரமான என்னுடைய தேகத்தை நீ களங்கம் செய்துவிட்டாய் - என்கிறாள். || 10

அப்போது அந்த கந்தர்வன் இவ்வாறு கூறுகிறான். நீ ஒரு மனித குலத்தை சேர்ந்தவள். நீ என்னுடைய பாக்கியத்திற்கு இணை ஆகுமா? (உன்னால் எனக்குதான் தோஷம் வந்திருக்கிறது). இதைக் கேட்ட அந்தத் தாய் கோபம் கொள்கிறாள். இந்த பூமி, தண்ணீர், நெருப்பு, வாயு, திசைகள் (ஆகாயம்), சூர்ய, சந்த்ரர்கள் ஆகியோரே நீ செய்ததற்கு சாக்ஷி. இந்த பாவத்தை நான் என்னுடைய மனப்பூர்வகமாக செய்திருந்தால், இந்த சூரியனின் மகனான யமதேவர், என்னை தண்டிக்கட்டும் என்று கூறி, என்னுடைய தாய், அழத் துவங்கினாள். || 11

மேலும், என் தாய் அந்த கந்தர்வனிடம் இவ்வாறு கூறுகிறாள். அழகான தாமரைகளுடன் கூடிய ஒரு தடாகத்தை, அழித்தது போல, உன்னுடைய ஸ்பர்ஶத்தால் என்னுடைய தேகம் கெட்டுப் போயிருக்கிறது. என்னுடைய வாழ்க்கை, பாவித்ர்யம் ஆகிய அனைத்தும் கெட்டுப் போய்விட்டது. ஸர்வேஶனான, மதுஸூதனன் உன்னை கொல்வான் - என்றாள். இதைக் கேட்ட அந்த கந்தர்வன் மிகவும் பயந்தான். அவள் சாபம் கொடுத்து விடுவாளோ என்று நினைத்தான். மிகவும் வினயத்துடன் இவ்வாறு கூறுகிறான். நான் உன்னில் வைத்த பீஜத்தினால், வலிமையின் கடலாக, மிகவும் வீரத்துடன் ஒரு மகன் உனக்கு பிறப்பான் - என்கிறான். || 12

நான் பொய் பேசுவதில்லை. ஹே தாமரை போன்ற கண்களைக் கொண்டவளே கேள் - என்று அந்த கந்தர்வன் கூற, இதைக் கேட்ட என்னுடைய தாய் பேசுகிறாள். உன்னுடைய பீஜம் கெட்டது. (அந்த பீஜத்தில் பிறக்கும் குழந்தையானது) தேவதைகளுக்கு அது எதிரி. அவன் தவறான நடவடிக்கையில் இருப்பான். அவன் ஹரி த்வேஷி. கருணை இல்லாதவன். தயை இல்லாதவன். க்ரூரன். குரு மற்றும் தேவதைகளின் த்ரோகி. தினமும் கெட்ட வழியிலேயே நடப்பவன். அனைவரையும் கொல்பவன். தன்னுடைய மக்களுக்கே அவன் எதிரி - என்கிறாள். || 13

இவ்வாறான என்னுடைய தாயின் பேச்சினைக் கேட்டு அந்த கந்தர்வன், அவளுடைய சாபத்திற்கு பயந்து ஓடிப் போனான். பிறகு என் தாய் கர்ப்பவதி ஆனாள். பிறந்த நாளிலிருந்தே, என் சொந்த மக்கள் என்று எனக்கு யாருமே இல்லை - என்கிறான் கம்ஸன். || 14

கம்ஸன் மேலும் தொடர்கிறான். தேவதைகளின் முனிவரான நாரதர் முன்னர் இவ்வாறு என்னிடம் கூறினார். அந்த குரு கூறிய நுடிகள், உபதேசங்கள் எதுவும் பொய் இல்லை. நீங்களே என்னுடைய ஆப்தர்கள். நலம் விரும்பிகள். நீங்கள் என்னுடைய மனதில் நினைத்த காரியங்களை தாமதம் இன்றி செய்யுங்கள். துர்புத்தியைக் கொண்ட, தேவகியின் தந்தையான

உக்ரஸேனன் கூட என ஆப்தன் இல்லை. எனக்கு எதிரியே. இதில் அந்த வஸுதேவன் என்ன?. (எனக்கு எதுவுமே இல்லை). என்னுடைய தந்தை கந்தர்வனே ஆகிறான் என்பது ஸித்தமே (நிச்சயமான விஷயமே). || 15

ஆகவே, பலராமன், அச்யுதன் இருவரையும் தாமதம் இன்றி கொல்லுங்கள். இதில் சிறிதளவு கூட உங்களுக்கு தோஷம் (கெட்ட பெயர்) என்பது இல்லை. குவலயபீட யானைக்கு, அவர்களை எப்படி கொல்வது என்பதை சொல்லிக் கொடுங்கள். அவர்கள் சிறுவர்களே. ஆனால் சுலபத்தில் வெல்லப்படுபவர்கள் அல்லர். வலிமைக்காக கௌரியின் தலைவனான ருத்ரதேவரை நன்கு வணங்குங்கள். முன்னர் உங்களுக்கே வெற்றியின் பாக்கியம் கிடைக்கும். பூ, பழங்கள் ஆகியவற்றால் நகரில் அனைத்து இடங்களிலும் அலங்காரங்கள் செய்யுங்கள். நரர்களைக் கொல்லப்போகும் சந்தர்ப்பம் இது. அவர்களைக் கொன்று பலி சமர்ப்பிக்க வேண்டும். || 16

கலியான வஸுதேவன், கெட்டவளான தேவகி வரட்டும். பிறகு, உக்ரஸேனன் மற்றும் கோபாலகர்கள், மற்றும் அனைத்து யாதவ குலத்தவர்களும் வந்து இந்த அற்புதமான உற்சவத்தை அமர்ந்து பார்க்கட்டும். இந்த சிறுவர்களின் வதையை (கொல்லப்படுவதை) பார்க்கட்டும். இவ்வாறு கண்களில் கோபத்தை காட்டியவாறு கம்ஸன் கூறுகிறான். இவ்வாறாக ஊர் மக்கள் அனைவரும், இந்த வில் விழாவினை ரசித்துப் பார்க்கட்டும் - என்றான். || 17

ஹே தளபதியே. இந்த மிகப்பெரிய செயலை நீ செய்வாயாக. உனக்கு மங்களமே உண்டாகும். தங்கமயமான த்வாரத்தின் நடுவில், அந்த மதம் பிடித்த யானையான குவலயாபீடத்தை நிறுத்துவாயாக. பலராமனை, கார்மேகம் போன்ற ஸ்ரீகிருஷ்ணனை நீ கொல்வாயாக. இந்த வில் விழா நடக்கும் 14ம் நாளன்று, இந்த சண்டையை (விளையாட்டை) நடத்துவாயாக. இந்த இரு சிறுவர்களை கொல்வதால், அந்த ஸோமதரனான ஸ்ரீருத்ரதேவருக்கு ப்ரீதி ஆகட்டும். || 18

மந்த்ரியான அக்ரூரரின் கைகளைப் பிடித்து மெதுவாக அவனிடம் கம்ஸன் இவ்வாறு கூறுகிறான். நந்தகோபனின் ஊரான வ்ருந்தாவனத்திற்கு சென்று, அந்த கிருஷ்ண, ராமர் இருவரையும் உடனடியாக இங்கு நடக்கவிருக்கும் தனுர் யாகத்திற்கு அழைத்துக் கொண்டு வருவாயாக. இந்த காரியம் சரியாக நடந்தால் உனக்கு பெருமை கிடைக்கும். நீ என்னுடைய எதிரி இல்லை. பெரும் ஆப்தன் (நலம் விரும்பி / நண்பன்). அந்த கிருஷ்ணன், இந்த்ரனுக்கு மகிழ்ந்து உதவியைப் போல, நீ எனக்கு உதவி செய்வாயாக. || 19

சிறிதும் தாமதம் செய்யாமல், நீ உடனடியாக, நந்தனின் வ்ருந்தாவனத்திற்கு செய்வாயாக. அவனின் மக்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு, தேரில் ஏற்றிக் கொண்டு, மந்தமதியான நந்தகோபனுடன் சேர்ந்து, நமக்கு அவர்கள் கொடுக்க வேண்டிய வரிகள் அனைத்தும் பெற்றுக் கொண்டு, அவர்களுடன் பேசிக் கொண்டு இருக்காமல், உடனடியாக திரும்பி வா என்றான். கர்வத்தினால் கண் கெட்டுப் போன கம்ஸன் தன்னுடைய மரணத்தை அவனே அழைத்தது போல இவ்வாறு கூறினான். || 20

ஹே தளபதியே கேள். ஸ்ரீலக்ஷ்மிதேவியின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணனின் ஆட்கள், என்னுடைய எதிரிகளே ஆவர். அவர்கள் அனைவரையும் யமனின் கையில் கொடுத்து கொல்லச் செய்வேன். அவர்கள் மேல் சாணூர என்னும் மல்லனின் அடியானது, இடி போல விழுந்தால், அவர்கள் தாங்குவார்களோ? (உயிருடன் இருப்பார்களோ?). பாலகர்கள் ஆன அந்த கெட்டவர்கள், அந்த கெட்டவர்களில் தலைவன் வஸுதேவன், ஒரு பெரிய குழுவாக இருக்கும் யாதவர்கள், வ்ருஷ்ணி மற்றும் போஜ வம்சத்து (ஊரின்) மக்கள், இவர்களில் ஒருவனான தன் கிருஷ்ணன் - என அனைவரும் கெட்டவர்களே - என்கிறான் கம்ஸன். || 21

வஸுதேவனின் சகோதரனான நந்தகோபன் ஒரு கபடி (மோசக்காரன்). தேவகியின் மக்களை அபகரித்துக் கொண்ட அவர்களை நான் கொல்லச் செய்வேன். இந்த பெரிய பூமியை நானே ஆள்வேன். மகத நாட்டு அரசனான ஜராசந்தனின் அருள் எனக்கு எப்போதும் இருக்கிறது. ருத்ரதேவரோ எனக்கு மிகவும் ஆப்த மித்ரன். எதிரிகளைக் கொல்வதான பாணாஸுரன், ஶம்பராஸுரன் என்னும் எதிரிகளைக் கொல்லும் இருவரும் என்னுடைய நண்பர்கள். இவ்வாறு இந்த பூமியில் கோபம் கொண்டு உக்ரமாக இருக்கும் பலரும் நமக்கு உதவி செய்பவர்களே. அனைவரும் நமக்கு பரம ஹிதர்கள். என் சிந்தனையை ஒப்புக் கொள்பவர்களே. || 22

தேவர்களின் பக்ஷித்தவர்களை நான் கொல்வேன். இந்த ஸாம்ராஜ்யத்தை பரம சுகத்துடன் நான் ஆள்வேன். ஸ்ரீகிருஷ்ணன், பலராமன் என இருவரையும் நீ மிகவும் சீக்கிரமாக இங்கு அழைத்து வந்தால், நான் அவர்கள் கொல்வேன் என்று கம்ஸன் அக்ரூரரிடம் கூறுகிறான். அரஸனின் இத்தகைய பேச்சினைக் கேட்டு, அக்ரூரர் பதில் அளிக்கிறான். தெய்வத்தின் சித்தம் என்ன என்பதை நான் அறியேன். உன்னுடைய மனதில் என்ன இருக்கிறது என்றும் நான் அறியேன். ஒரு காரியத்தால் ஸித்தி ஆகுமா, அஸித்தி ஆகுமா என்பதை எண்ணாமல், சமானமான மனதினைக் கொண்டே நான் அனைத்து காரியங்களையும் செய்கிறேன் - என்கிறார் அக்ரூரர். || 23

வெறும் பேச்சினால் புருஷர்களுக்கு மிகப்பெரிய பலன் கிடைக்குமோ? (கிடைக்காது). ஆகவே, நீ கூறியபடி நான் வ்ருந்தாவனத்திற்கு செல்கிறேன். இதனால் எனக்கு (ஸ்ரீகிருஷ்ணனைப் பார்க்க வேண்டும் என்னும்) மிகப்பெரிய மனோரதம் (விருப்பம்) நிறைவேறுகிறது என்பதை நான் அறிகிறேன் என்றவாறு, அக்ரூரர் அங்கிருந்து புறப்படுகிறார். கெட்டவர்கள் மிகப்பெரிய (அனர்த்த) செயலை செய்தால், ஸ்ரீஹரி அதற்கு / அவர்களுக்கு உதவி செய்வானோ? (செய்ய மாட்டான்). தேவர்களின் அருள் என்பது எப்போதும் நிரந்தரமானது. ஜீவர்களின் கர்மங்களுக்கு ஏற்பவே அவர்களுக்கு அருள் கிடைக்கும் என்பதால், அவரவர்களின் பலன் அவர்களுக்கு கிடைக்காமல் இருக்காது - என்றெல்லாம் நினைத்தவாறு அக்ரூரர் அங்கிருந்து புறப்படுகிறார். || 24

ஸ்ரீப்ரஸன்ன வெங்கட கோவர்த்தன கிரியின் தலைவனான ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனத்தின் பலன் கிடைத்தால், அது நம்முடைய குரு மற்றும் முன்னோர்களின் ஆசிர்வாதம் / தவம், அந்த ஆசிர்வாதம் தன் மேல் எப்போதும் இருக்கட்டும் என்று நினைத்தவாறு, அக்ரூரர் தன் வீட்டுக்குச் செல்கிறார். மகிழ்ச்சி, துக்கம் இரண்டிற்கும் ஸ்ரீஹரியே ப்ரேரகன் என்று நினைத்தவாறு, அந்த இரவு முழுக்க பரம பாகவதரான அக்ரூரர் ஸ்ரீஹரி ஸ்மரணையிலேயே தன்னுடைய இருப்பிடத்தில் இருந்தார். ||25

***

**52. ராக: ஸாவேரி. தாள: ஜக்கணி**

**ஹரிய பாதாப்ஜ ஹொக்கவரிகெ துரிதத**
**ஸ்பருஶவில்ல ஹரிபலரனு மருள கரெஸித || ப**

**தானவபதிய கரஸி கம்ஸ ஹீனகேஶிகெ**
**தா நிரூபிஸிதனு தன்ன ஹானி பயகெகெ**
**நீனு ஹோகு வ்ரஜகெ ஶௌரி யுக்மர**
**ப்ராணஹரண மாடில்லிகெ பா நீ ஸத்வர || 1**

**எனலு பதித வ்ரஜகெ பந்தாக்ருணி ஹயாதனு**
**கனஸடாங்க விமானாவளியாக்ஷண கெடஹிதனு**
**கொனெ கரதலி கெதரி கெதரி அவனி ஸீளி தா-**
**வினய ஜங்குளி ஹொக்கனு ஹிங்காலினல்லி ஒதெயுத ॥2॥**

**ஹேஷாரவதி முககோடரதி போஷிஸி பெதரிஸி**
**தோஷாக்னி நேத்ர ஜ்வலிஸி ஹிள்ளிஸி நாஸிகத்யப்பரிஸி**
**த்ராஸிஸிதா களகோஷதி ஜீவர பீஸி புச்சாக்ரதலி**
**காஸிஸி மேகங்களோடிஸிதனு கேஶி பூகம்பிஸி ॥3॥**

**கொப்பின களனு தன்ன ஸமானரனொப்பர காணதாத**
**அப்திஶயன ஹயன த்ராணத அப்பர நோடித**
**ஹெப்பாதெரெது ஆகாஶனுங்குவ கொப்பிலி ஒடிபந்த**
**அப்திஶயனகெ அபிமுகனாகி ஶப்தவ மாடித ॥4॥**

**ஹிங்கால ஹாரிஸி ஹரியனொத்தரெ ரங்க வஞ்சிஸிதனு**
**மம்களமூருதி மருளி களன அங்க்ரிய ஹிடிதனு**
**துங்க விக்ரம துரங்கவ ப்ரமிஸி விஹங்கப புஜங்கனனு**
**பங்கிஸிதந்தெ நூருபில்ல ப்ரமாண ஹிங்கதெ ஒகெதனு ॥5॥**

**மத்தவனெத்தனு அப்த ஸங்ஞுதலி ஸத்வர காதி பந்த**
**தைத்யாரி தன்ன தோளோந்தனு களன வக்ரதி ஹொகிஸித**
**ஹுூத்தினொளுரக ஹோகுவ தெரதி ஹஸ்தவ வர்திஸித**
**பித்தரிஸ்யவன காத்ரவ காதுக்கின தெரதி ஹிஸித || 6**

**பதுமனாபன புஜஸ்பர்ஶாக்னிலி உதுரெ தந்தகளு**
**ஸ்வேதாங்கனாகி தேலுகண்ணிலி பிட்டனு மேதினிலங்க்ரி சாசி**
**சேதிசித கர்கடகி பலதந்தெ ஆதனு மையு பிச்சி || 7**

**யமஸதனக்கே ஹோதனு துஷ்டனு அமரரம்பரதி**
**ரமெயரஸன ஸ்தோத்ரதி பூமளெகரெதரு முததி**
**கோமதிகோமக்களொடனெ ஹொக்கனு ஸ்ரீமாதவாவ்ரஜவ**
**அமரமுனி நாரதனு பந்தனு ஹேளலு ரஹஸ்யவ ॥8॥**

**ஸ்வகீய கர்தவ்ய மாடுவேனெனுத அக்லிஷ்டகர்மனிகெ**
**ஏகாந்தஸேவெகே பாகவதோத்தம பேகாகி பந்தனாகெ**
**லோகேஸ்வரேஸ்வர பந்த நாரதகெ பேகார்ஹண மாடிதனு**
**போக கம்ஸன குசேஷ்ணெய ஹேளித த்ரிகாலஜ்ஞானி தானு ॥9॥**

**அஶுபஹர ஸதா ஶுபதாயக தோஷதூர முகுந்த**
**வாஸுதேவாச்யுதாஸேஷகல்யாண குணாஸ்ரய ஸ்ரீ கோவிந்த**
**பாஸுர வைகுண்டவாஸ ஸ்ரீநிவாஸ கேஶவ விஸ்வகர்த**
**ப்ரஸன்வெங்கடாத்ரீ ஶ ஸர்வேஸ்வர பூஸதிபாரஹர ॥10॥**

ஸ்ரீஹரியின் பாத கமலங்கள் (& அதன் தரிசனம்) கிடைத்தவர்களுக்கு எந்தவிதமான கஷ்டங்களின் ஸ்பர்ஶமும் ஆவதில்லை. (இதைப் பற்றி அறியாமல், கம்ஸன்) ஸ்ரீஹரி மற்றும் பலராமர்களை ஊருக்கு வரச்செய்கிறான். ||ப

தானவபதியான அக்ரூரரை கம்ஸன் வ்ருந்தாவனத்திற்கு அனுப்பிவிட்டு, ஹீனனான கேஶியை அழைக்கிறான். அவனிடம் இவ்வாறு விவரமாக கூறுகிறான். தன்னுடைய அழிவிற்கு தானே விருப்பப்பட்டவாறு - நீ உடனே வ்ருந்தாவனத்திற்குச் செல்வாயாக. அரசனின் மகன்களான கிருஷ்ண பலராமர்கள் இருவரையும் கொன்றுவிட்டு, நீ உடனடியாக இங்கு திரும்பி வா - என்கிறான். || 1

என்று கம்ஸன் அவனிடம் கூற, அந்த கேஶியும், வ்ருந்தாவனத்திற்கு வருகிறான். குதிரை வடிவில் அந்த அபாரமான உருவம் கொண்ட அஸுரன், வானில் தேவர்களின் விமானங்களை தள்ளியவாறு பறந்து வருகிறான். பூமியில் இறங்கிய அவன், பூமியை கிழித்து, மரியாதை (வினயம்) அற்ற அந்த அஸுரன் தன் பின்னங்கால்களை உதைத்தவாறு வருகிறான். || 2

பயங்கரமாக இருக்கும் அந்த அஸுரன், தன் முகத்தினால் அபாரமாக கர்ஜனை செய்து, அனைவரையும் பயமுறுத்துகிறான். நெருப்பினைப் பொழியும் கண்களால் ஜ்வலித்துக் கொண்டு, மூக்கினால் பெருமூச்சு விட்டு, அந்த அஸுரன் அந்த பெருமூச்சினை அனைத்து ஜீவர்களின் மேல் வீசி அவர்களை துன்பப்படுத்துகிறான். தன் வால் நுனியால் அனைவரையும் அடித்து, மேகங்களை துரத்துகிறான் அந்த கேஶி அஸுரன். தன் நடவடிக்கைகளால் பூமியையே நடுங்கச் செய்கிறான். || 3

கர்வம் கொண்ட அந்த அஸுரன், தன் சக்திக்கு சமானமான யாரையும் அங்கு காணவில்லை. பாற்கடலில் படுத்திருப்பவனான ஶ்ரீஹரி, இந்த அஸுரனின் இந்த கெட்ட நடவடிக்கைகளை பார்க்கிறான். கேஶியும் ஶ்ரீகிருஷ்ணனைப் பார்த்ததும், தன் பெரிய வாயினை திறந்தவாறு, அந்த ஆகாயத்தையே விழுங்கிவிடுவதைப் போல கோபத்துடன் / கர்வத்துடன் ஓடி வந்தான். ஶ்ரீகிருஷ்ணனின் எதிரில் நின்று பயங்கர கர்ஜனை செய்தான். || 4

தன் பின்னங்கால்களை தூக்கி, அந்த கேஶி, ஶ்ரீஹரியை உதைக்க வந்தால், ரங்கன் அவனை ஏமாற்றினான். மங்களமூர்த்தி திரும்பி அந்த அஸுரனின் கால்களை பிடித்தான். யாராலும் வெல்லப்பட முடியாதவன், அந்த குதிரையை தூக்கி, கருடன் எப்படி ஒரு பாம்பினை தூக்கி எறிவானோ, அதைப் போல, நூறு வில்லின் தூரத்திற்கு இவனை தூக்கி எறிந்தான். || 5

அந்த அஸுரனோ திரும்பி எழுந்து ஶ்ரீகிருஷ்ணனை கொல்ல வந்தான். தைத்யர்களைக் கொல்பவனான ஶ்ரீஹரி, தன் தோள்களால் (கைகளால்) அந்த அஸுரனின் வாயில் அடித்தான். ஒரு புற்றில் பாம்பு செல்வதைப் போல, தன் கைகளை குதிரையில் வாயில் நுழைத்தான். பின் அந்த அஸுரனின் தேகத்தில், ஶ்ரீஹரியின் கைகள் விரிந்து பரவின. || 6

பத்மனாபனின் தோள்களின் (கைகளின்) ஸ்பர்ஶம் ஆனவுடன், அந்த குதிரையின் பற்கள் உதிர்ந்தன. உடம்பு முழுக்க கெட்ட நோய் வந்ததைப் போல தோற்றம் கொண்டான். வியர்வை வழிய கண்ணிலிருந்து கண்ணீர் வழிய, பூமியில் தேகத்தைப் போட்டு கீழே விழுந்தான். தர்பூஸ் பழம் கீழே விழுந்து நொறுங்குவதைப் போல, அஸுரனும் தன் தேகத்தை கீழே போட்டு விழுந்தான். || 7

அந்த கேஶி தைத்யன் துஷ்டன், யமபுரத்திற்குச் சென்றான். தேவர்கள் வானில் வந்து நின்று, ரமாதேவியின் தலைவனை ஸ்தோத்ரங்கள் பாடி, மகிழ்ச்சியுடன் பூமழை பொழிந்தனர். ஶ்ரீகிருஷ்ணன், அந்த ஊர் மக்கள் அனைவருடன் வ்ருந்தாவனத்தை சென்று அடைய, தேவரிஷி நாரதர் ஒரு ரகசியத்தைக் கூறுவதற்காக அங்கு வந்தார். || 8

தன்னுடைய விதிக்கப்பட்ட கடமைகளை செய்வேன் என்றவாறு, தோஷங்கள் அற்ற கர்மங்களைக் கொண்ட ஶ்ரீகிருஷ்ணனின் ஏகாந்த சேவைக்காக, பாகவதோத்தமரான நாரதர் அங்கு வந்தார். லோகேஶ்வரனின் ஈஶ்வரனான ஶ்ரீகிருஷ்ணன், வந்திருந்த நாரதரை உபசாரங்களை செய்து வரவேற்றான். மூன்று காலங்களையும் அறிந்தவரான நாரதர், கெட்டவனான கம்ஸனின் கெட்ட நடவடிக்கைகளைப் பற்றி ஶ்ரீகிருஷ்ணனிடம் கூறினார். || 9

அஶுபங்களை போக்குபவன். எப்போதும் நலன்களையே கொடுப்பவன். தோஷங்கள் அற்றவன். முகுந்தன். வாஸுதேவன். அச்யுதன். எல்லையில்லாத கல்யாண குணங்களைக் கொண்டவன். ஶ்ரீகோவிந்தன். ஒளிர்பவன். வைகுண்டத்தில் வசிப்பவன். ஶ்ரீனிவாஸன். கேசவன். உலகத்தை படைத்தவன். ப்ரஸன்ன வெங்கட என்று மலையில் வசிப்பவன். ஸர்வேஶ்வரன். பூமாதேவியின் பாரத்தை இறக்குபவன். || 10

***

**53. ராக :கன்னட காம்போதி தாள :ஜம்பெ**

**ஸுஜ்ஞாரத த்ரிகாலஜ்ஞ ஹேளிதனு ஸர்வஜ்ஞ ஸர்வோத்ம ஶ்ரீஹரிகெ**
**அஜ்ஞ தைத்யர தரிவபிஜ்ஞ புதரனு ஹொரெவ ஜிஜ்ஞாஸே முந்தாகே ப்யாகெ ॥ப॥**

**ஹே க்ருஷ்ண க்ருஷ்ண பகவானப்ரமேய த்ரைலோகேஶ யோகிஜனபூஜ்ய**
**நாகஜன நாகப பினாகி விப பணிப விதி லோகமாதார்சிதபதாப்ஜா**
**ஶ்ரீகாந்த ஸ்வஸுகார்ணபூர்ண ஜ்ஞானைஸ்வர்யதாககரனெ ஸ்வேச்சலீலெயலி**
**லோககே ஸ்ருஷ்டார பாதார ஹந்தார ஏக நியந்தார பலதி ॥1॥**

**தர்மரக்ஷணெகவதரிஸி நீ புவியல்ல தர்மகுலநாஶக ஸத்வீக்ஷ**
**தர்மவித ஸத்யஸங்கல்ப கோபூஸுரர தர்மஸுரக்ஷக தக்ஷ**
**தர்மகெ விரோதி தைத்யர குலகெ எணிகில்ல மர்மஜ்ஞதுஷ்டர மதிஸுவே**
**பர்மெ மஹா ஶங்காரிதாரகாச்யுத ஹரே கர்மிகள வதிஸி நடுகிஸுவே ॥2॥**

**திஷ்ட ஹந்தனாத ஹயகாயமதஸொக்கி வ்ருஷ்ணிபதே நின்ன கையிந்த**
**துஷ்டன ஹேஷத்காரகே அஞ்ஜி ஸுரரோடி கஷ்டிஸுதித்தரெல்ல கோவிந்த**
**துஷ்டி படிஸிதெயவர சாணூரமல்ல ஸலே முஷ்டிகாக்யரனு மர்திஸுவே**
**ப்ரஷ்ட ஹஸ்திப கம்ஸன வதிஸி அவனனுஜரஷ்டரனு பலக்ஹேளி கொல்லிஸுவே ॥3॥**

**நாளெ நாடிது ஹோகிஸ்வாமி நீ மதுரெகெ கூளகம்ஸன பில்ல முரிவே**
**மேலே கம்ஸன மித்ரஜால குஜ ஶங்க முரரேளிகே தரிவெ நிஜர ஹொரெவே**
**பாலே ஸத்யாதேவிகமர[தரு] தருவெ தம்போளிய அஹங்கார கண்டிஸுவே**
**ஹேளலேன் கண்ணாரே காம்பே நா நின்ன ஶுபலீலெயனு வீணேவிடித்ஹேளுவே ॥4॥**

**நீ ஸத்யபாமேய ஸ்யமந்தக ஸஹதி கெல்வெ லேஸாகி த்வாரகெயனாளுவே**
**பூஸுரகெ ஸத்த மகன்னித்து பௌண்ட்ரக பாபி த்வேஷியனு ஹொடெய்வெஶஸு படெவெ**
**காந்தியனு தீபிஸுவே டொங்கித்ஹல்லனு ஸீள்வெ நீ ஶீக்ர ஜைத்யன மதிஸுவெ**
**லேஸீவே பார்த்தரிகெ ராஜஸூயயஜ்ஞதலி ஏஸொந்து விக்ரம ப்ரகடிஸுவெ || 5**

**த்வாரகெய நகரதலி பூரி அத்புத கர்ம தோரிஸுவே யாதவரஹொரெவெ**
**நாராயண எந்து காம்பெ கண்ணாரே தவ சாரு சரித்ரேய கீர்திஸுவே**
**ஶ்ரீரமண நிம்மகுண வைகுண்டப்ரியகே ஸாருவவு கவன ஜ்ஞானவனு**
**க்ரூர தைத்யரிகெல்ல காலரூபனு புவிய பாரகாக்ஷோஹிணிகளனு ॥6॥**

**ரணமுகதி ஸம்ஹரிஸுவே அர்ஜுனன ரதேவேரி அனிமிஷர கார்யகத்யக்ஷ**
**கனஶுத்த விஜ்ஞான ஸம்ருத்த விக்ரஹ குணத்ரய ப்ரவாஹகாப்ஜாக்ஷ**
**வனிதே மாயியு வஶவாகி ஆஶ்ரயிஸிஹளு குணவ்யதிகரவ மாடுவளு**
**நின ப்ரேரணெயலி வர்திபளு நீனெ க்ரீடேயனு மாள்பெ மானிஸ ஜனரொளு ॥7॥**

**நமோ நமோ யது வ்ருஷ்ணி ஸாத்வதர தூர்யனெ நமோ நமோ விஶ்வகே வர்யனெ**
**நமோ நமோ நிர்ஜரக்ஷேம காரண க்ருஷ்ணா நமோ நமோ எந்த முனி ஶ்ரேஷ்ட**
**ரமெயரஸனம் பஹள துதிஸி வந்திஸி நடெத அமரமுனி ஹரியாஜ்ஞெயிந்த**
**அமிதோத்ஸவவு ஹரிய தருஶனலாபதிம் ஸுமஹதி வீணெய நுடிஸித ॥8॥**

**தமோயோக்ய மடித ஸுகவார்தியலி பாள ஸம்ப்ரமகே ஸரியில்ல கோகுலதி**
**கமலனயன முகுந்த கோவிந்தக்ருபெயிந்த கோமதி கோபரு ஹருஷஹொந்தி**
**விமலசரித ஶ்ரீப்ரஸன்வெங்கட க்ருஷ்ண கமனீய குணகதன ஹேளி**
**அமராவதிய ஜனர ஸமனாகி ஸுகிபரு ஶ்ரீமத்ஹரிய படருகேளி ॥9॥**

நல்மதி படைத்த, மூன்று காலங்களையும் அறிந்தவரான நாரதர், ஸர்வஜ்ஞனான ஸர்வோத்தமனான ஶ்ரீஹரிக்கு இவ்வாறு கூறினார். அஜ்ஞானிகளான தைத்யர்களை அழிக்கும், கற்றறிந்த அறிஞர்களை காக்கும், ஜிஜ்ஞாஸை செய்பவர்களை காப்பவனான ஶ்ரீஹரியிடம் இவ்வாறு கூறினார். || ப

ஹே கிருஷ்ணா கிருஷ்ணா. பகவானே. அப்ரமேயனே. மூன்று உலகங்களின் தலைவனே. யோகி ஜனர்களால் பூஜ்யனே. ஸ்வர்க்கத்தில் வசிப்பவர்கள், ஸ்வர்க்க அதிபதி இந்த்ரன், ருத்ர தேவர், கருட, ஸேஷ, ப்ரஹ்ம தேவர், லோகமாதாவான ஸ்ரீமஹாலக்ஷ்மி ஆகியோரால் அர்ச்சனை செய்யப்படும் பாத பத்மங்களைக் கொண்டவன். ஸ்ரீகாந்தனே. தனக்கு தானே சுகத்தை அனுபவிக்கும் பூர்ணனே. ஞான, ஐஸ்வர்யத்தை தானே பூர்ணமாக கொண்டவனே. உன்னுடைய சொந்த லீலையினால், உலகிற்கு ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய, நியமன ஆகியவற்றை தானே தன் சொந்த பலத்தினால் செய்பவனே. || 1

தர்மத்தினை காப்பதற்காக நீ அவதாரம் செய்திருக்கிறாய். இந்த பூமியில் உள்ள அதர்ம குலத்தை நாசம் செய்ய வந்திருக்கிறாய். இத்தகைய நல்ல தீக்ஷையை கொண்டிருக்கிறாய். தர்மத்தை காப்பவன். ஸத்ய ஸங்கல்பன். ப்ராஹ்மணர்கள், பசுக்கள், தேவர்கள் ஆகியோரின் தர்மத்தினை காப்பவன். தக்ஷன். தர்மத்திற்கு விரோதியான தைத்யர்களின் குலத்திற்கு, அத்தகைய துஷ்டர்களை நீ கொல்கிறாய். மிகச்சிறந்த பெருமையைக் கொண்டவனே. சங்கு, சக்ரம் ஆகியற்றை தாரணம் செய்த அச்யுதனே. கெட்டவர்களை கொன்று, அவர்களை பயமுறுத்துகிறாய். || 2

கெட்டவனான, குதிரை வடிவில் வந்த கேஶி அஸுரனை, வ்ருஷ்ணி குலத்தில் வந்தவனே, நீ உன் கைகளால் கொன்றாய். அந்த துஷ்டனின் கெட்ட நடவடிக்கைகளுக்கு பயந்தவாறு, தேவர்களின் குழுக்கள் அனைவரும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள், ஹே கோவிந்தனே. அவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தாய். அடுத்து நீ சாணூர, முஷ்டிகாஸுர முதலான மல்யுத்த வீரர்களையும், மல்யுத்தப் போட்டியில் நீ கொல்லப் போகிறாய். கெட்டவர்களின் தலைவனான கம்ஸனைக் கொன்று, அவனின் சகோதரர்களான எட்டு பேரையும் நீ கொல்லப் போகிறாய். ||3

நாளை இந்த நாட்டினை விட்டு நீ மதுரைக்குச் சென்று, ஸ்வாமியே, நீ அந்த கெட்ட கம்ஸனின் வில்லினை முறிக்கிறாய். அடுத்து கம்ஸனை, அவனுடன் இருப்பவர்களான அவனின் நண்பர்கள் குழுவினை, கெட்டவர்களான முர முதலான அஸுரர்களை நீ கொல்கிறாய். பக்தர்களை காக்கிறாய். பாலையான ஸத்யபாமைக்கு நீ தேவலோகத்திலிருந்து கல்பவ்ருக்ஷத்தைக் கொண்டு வந்து தருவாய். இந்த்ரனின் கர்வத்தை அடக்குவாய். இனி சொல்ல என்ன இருக்கிறது?. அனைத்தையும் நான் கண்ணால் காண்பேன். உன்னுடைய ஶுப லீலைகளை நான் என்னுடைய வீணையை ஏந்தி, நான் அனைவரிடமும் சென்று சொல்வேன். || 4

நீ ஸத்யபாமையின் ஸ்யமந்தக மணிக்காக போரிட்டு வெல்வாய். நீ மிகவும் அற்புதமாக த்வாரகையை ஆள்வாய். ப்ராஹ்மணருக்கு அவருடைய இறந்துவிட்ட மகனை திரும்பக் கொண்டு வந்து காட்டுவாய். பாபியான பௌண்ட்ரக வாஸுதேவனை கொல்வாய். பெரும் புகழை நீ அடைகிறாய். சிசுபால, தந்தவக்ர ஆகிய துஷ்டர்களை நீ கொல்கிறாய். பாண்டவர்களுக்கு அவர்கள் செய்யும் ராஜஸூய யாகத்தில் உதவிகளை செய்து, உன்னுடைய அபாரமான வீரத்தை நீ வெளிப்படுத்துகிறாய். || 5

த்வாரகை நகரத்தில் உன்னுடைய அற்புதமான லீலைகளை செய்து காட்டுகிறாய். யாதவ குலத்தினை காக்கிறாய். நான் உன்னை நாராயண நாராயண என்றவாறு என் கண்ணாரக் காண்பேன். உன்னுடைய தோஷமற்ற சரித்திரத்தை நான் புகழ்ந்து பாடுவேன். ஸ்ரீரமணனே. உங்களுடைய குணங்கள், அத்தகைய பாடல்கள், முக்தியை விரும்புபவர்களுக்கு / உன்னுடைய பக்தர்களுக்கு மிகவும் பிடிக்கும். க்ரூர தைத்யர்களுக்கு நீ கால ரூபனாக இருந்து பயத்தை கொடுக்கிறாய். பூமியின் பாரத்தினை நீ குறைக்கிறாய். || 6

போர்க்களத்தில், அர்ஜுனனின் ரதத்தில் ஸாரதியாக ஏறி, துஷ்டர்களை கொல்கிறாய். தேவர்களின் காரியத்திற்கு நீயே தலைவனாக இருந்து அவற்றை செய்கிறாய். தோஷங்கள் அற்ற, பவித்ரமான விஜ்ஞானத்தை அபாரமாக கொண்டவனே. குண த்ரயங்களுக்கு அப்பாற்பட்டவனே. தாமரைக் கண்ணனே. ஸ்ரீமஹாலக்ஷ்மியானவள் உன் வசமாக இருந்து, உன்னையே ஆஸ்ரயம் கொண்டிருக்கிறாள். மூன்று குணங்களை கலவையாக்கி உன்னுடைய ப்ரேரணையிலேயே அவள் ஸ்ருஷ்டி முதலான செயல்களை செய்கிறாள். உன்னை வணங்கும் பக்தர்களில் இருந்து கொண்டு, நீயே க்ரீடைகளை செய்கிறாய். || 7

நமோ நமோ யது, வ்ருஷ்ணி, ஸாத்வ குலத்தின் தலைவனே / அந்த குலத்தில் சிறந்தவனே. நமோ நமோ உலகத்தின் நாயகனே. நமோ நமோ உன் பக்தர்களின் நலனுக்கு காரணமானவனே. கிருஷ்ணா. நமோ நமோ என்றார் முனிவர்களில் ஸ்ரேஷ்டரான நாரதர். இவ்வாறாக அவர், ரமாதேவியின் தலைவனை நன்றாக துதித்து, வணங்கி, பின்னர் ஸ்ரீஹரியின் ஆணையின் பேரில் அங்கிருந்து கிளம்பிச் சென்றார். ஸ்ரீஹரியின் தரிசனத்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்து, மஹதி என்னும் வீணையை நன்றாக நுடித்தவாறு அவர் கிளம்பிச் சென்றார். || 8

தமஸ்ஸிற்கு யோக்யமான கம்ஸன் மடிந்தான். இந்த செய்தியைக் கேட்டு, கோகுலத்தில் சுகம் என்னும் கடலில் அனைவரும் மூழ்கினர். அவர்களின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. தாமரைக் கண்ணன். முகுந்தன். கோவிந்தனின் கருணையால் வ்ருந்தாவனத்தின் கோபாலகர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைந்து, தோஷங்கள் அற்றதான ஸ்ரீப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணனின் அற்புதமான குணங்களைப் பற்றிய கதைகளை சொல்லி, அவர்கள் அனைவரும் ஸ்வர்க்கத்தில் இருக்கும் மக்களுக்கு சமமாக சுகத்தை அடைந்தனர். இதை ஸ்ரீஹரியின் பக்தர்களே, நன்றாக கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். || 9

***

**54. ராக :சங்கராபரண தாள :ஏகதாள**

**வாஸுதேவன அடிதாவரெய ஆஶ்ரித கோவளரு**
**த்வேஷிகளாதம வ்யோமாஸுரன காஸிய தாடிதரு ॥ப ॥**

**ஒந்தின கோவர்தன கிரி தப்பல ஹொந்திலி கோகளனு**
**இந்திரேயரஸனு சரிஸுத கோவர வ்ருந்தஸஹித தானு**
**சந்ததிந்தலி நிலயன க்ரீடெய ஸுந்தரராடிதரு**
**அந்ததி பாலரு கெலவரு சோரரு எந்து ஸொல்லிஸிதரு ॥1 ॥**

**பாலகரனு மேஷாயதர மாடி ஸுலீலெய மண்டிஸலி**
**கூள வ்யோமாஸுர பந்தனு கூட கோபாலர வேஷதலி**
**பாலரனெல்லரனோய்யிட்டனு மஹச்சைலத த்ரோணியலி**
**தோளன தெரனவ மாடலு அஞ்ஜுத நாலுவருளிதிரலி ॥2 ॥**

**பெலதொளு ஸிக்கித கோவளரெல்லரு பலு பயவைதிதரு**
**நளினயன கோவிந்தாயென்னுத ஸலெ துக்க ஹொந்திதரு**
**எளெயர ஆர்தஸ்வரவனு கேளித களன ஸ்திதியனிரித**
**திளியதந்தெ ஸர்வஜ்ஞஶிகாமணி பளியலி நிந்தித்த ॥3 ॥**

**க்ரூரமயாத்மனு வ்யோமாஸுர பலு தூரதி நிந்திரலு**
**ஸ்ரீரமணனு கண்டனு அவனாக்ருதி ஹாரி ஹிடித த்ருடியொளு**
**வீரஸிம்ஹனு தோளன ஜக்கித ஹாக்ஹார்யாஜிஸிதனாதகெ**
**தோரிது அவனங்கவு பர்வததொலு தோரவு அதிப்யாகே ॥4 ॥**

**அனந்தபலாத்மக ஹிடிதஞ்சலு அவ நானா யத்னதலி**
**தானவரிகெ ஶக்திஸாலது ஸ்ரீஹரி அனாயாஸதலி**
**ஹீனன கொந்தோடாடித ஸுரரு ப்ரஸூன ஸுரிதரல்லி**
**ஆனந்ததலி குஹஸ்தர தெகெதனு ஸ்ரீநாராயணனு ॥5 ॥**

**ஸுஜனரு ஸுமுனினிகரவு ஸ்துதிஸலீ பஜகஜனப்ரியனு**
**வ்ரஜதலி கமிஸித நித்யானந்தனு ஸ்வஜனானந்தனு**
**நிஜஸுகதாயக நிர்ஜரதாயக குஜனிகரஹரனு**
**த்விஜகோரக்ஷக தாமோதர க்ஷீரஜலதிமந்திரனு ॥6 ॥**

**ப்ரஸன்னசரித ஸுப்ரஸன்னலோசன நித்ய ப்ரஸன்னவராபயவ**
**ப்ரஸன்னகுணாகர ப்ரஸன்னஸன்மந்திர ப்ரஸன்ன ஸௌந்தர்யஸார**
**ப்ரஸன்னவதனஸ்மித ப்ரஸன்னரதன ஸ்ரீப்ரஸன்ன வேங்கடக்ருஷ்ண**
**ப்ரஸன்ன ஸ்ரீபத ப்ரஸன்னீகரிஸிதவரிகெ ப்ரஸன்ன ஜனவரிஷ்ட॥7॥**

வாஸுதேவனின் பாத கமலங்களை ஆஸ்ரயம் செய்து கொண்ட கோபாலகர்கள், ஹரி த்வேஷியான அஸுரன், அதமன். வ்யோமாஸுரனால் ஏற்பட்ட துன்பங்களையும் அவர்கள் தாண்டினர். || ப

ஒரு நாள், கோவர்த்தன கிரியின் அடிவாரத்தில், கோவளனான ஸ்ரீகிருஷ்ணன், தன் நண்பர்களுடன் அங்கு சுற்றிக் கொண்டிருந்தான். மிகவும் மகிழ்ச்சியுடன் அவர்கள் அனைவரும் அங்கு விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் சிலர் மேய்ப்பவர்கள், சிலர் திருடர்கள் என சொல்லி, விளையாடிக் கொண்டிருந்தனர். ||1

சிறுவர்களை மேய்ப்பவர்களாக ஆக்கி, ஸ்ரீகிருஷ்ணன் தன் லீலையை காட்டுவதற்காக அங்கு இருந்தான். அப்போது துஷ்டனான வ்யோமாஸுரன் அங்கு வந்தான். கோபாலகர் வேடம் பூண்டு அவன் வந்தான். பாலகர்கள் அனைவரையும் அவன் கடத்திச் சென்று, அந்த பெரிய மலையின் அடிவாரத்தில் அவர்களை மறைத்து வைத்தான். அந்த அஸுரன் இவ்வாறாக செய்ய, கடைசியில் நான்கு ஐந்து சிறுவர்கள் மட்டுமே இங்கு மீதம் இருந்தனர் (விளையாடிக் கொண்டிருந்தனர்). || 2

மலையில் குகைக்குள் அடைப்பட்ட சிறுவர்கள் அனைவரும் மிகவும் பயம் கொண்டனர். தாமரைக் கண்ணனே, கோவிந்தா என்றவாறு, அதிகமான துக்கம் கொண்டனர். தன் நண்பர்களின் அபய குரலைக் கேட்ட ஸ்ரீகிருஷ்ணனின், அந்த அஸுரனின் நிலையை (திட்டத்தை) அறிந்தான். ஆனாலும், இது எதுவும் தெரியாததைப் போல, ஸர்வஜ்ஞர்களில் சிறந்தவனான ஸ்ரீகிருஷ்ணன் அங்கேயே நின்றிருந்தான். || 3

க்ரூரமே வடிவமான வ்யோமாஸுரன், வெகு தூரத்தில் நின்றிருந்தான். ஸ்ரீரமணன் அவனுடைய உருவத்தை இங்கிருந்து கண்டு, பாய்ந்து ஒரு நொடியில் அவனை பிடித்தான். வீரஸிம்ஹனான ஸ்ரீகிருஷ்ணன், அவனைப் பிடித்து கீழே தள்ளி, அவனை அழுத்தினான். அப்போது அந்த அஸுரனின் தேகம், மிகவும் விரைவாக, ஒரு பெரிய மலையைப் போல உருமாறியது. || 4

அபாரமான வலிமையைக் கொண்டவன் அந்த அஸுரனை பிடித்து அழுத்த, அவன் அதிலிருந்து தப்பிக்க பல்வேறு முயற்சிகளை செய்தான். ஆனால், அந்த அஸுரனுக்கு அவ்வளவு வலிமை இருந்திருக்கவில்லை. ஸ்ரீஹரி மிகவும் சுலபமாக அந்த ஹீனனை கொன்று போட்டான். தேவர்கள் அனைவரும் வானில் வந்து நின்று மகிழ்ச்சியுடன் பூமழை பொழிந்தனர். ஸ்ரீ நாராயணன், பின்னர் குகையில் அடைபட்டிருந்த தன்னுடைய நண்பர்களை மீட்டு எடுத்தான். || 5

ஸஜ்ஜனர்கள், முனிவர்களின் குழுக்கள் அனைத்தும் ஸ்ரீகிருஷ்ணனை துதித்தன. வணங்கும் மக்களின் ப்ரியனான ஸ்ரீகிருஷ்ணன், வ்ருந்தாவனத்தில் இவ்வாறு திகழ்ந்தான். நித்யானந்தன். தன் மக்களால் வணங்கப்படுபவன். உண்மையான சுகமான மோக்ஷத்தை அளிப்பவன். தேவர்களின் தலைவன். துஷ்டர்களின் குழுக்களை அழிப்பவன். ப்ராஹ்மணர்கள், பசுக்களை காப்பவன். தாமோதரன். பாற்கடலே வீடாகக் கொண்டிருப்பவன். || 6

களங்கமற்ற சரிதத்தைக் கொண்டவன். அழகான கண்களைக் கொண்டவன். எப்போதும் ப்ரஸன்ன வர, அபய ஹஸ்தங்களைக் கொண்டவன். ஸத் குணங்களின் கடல். அனைவரின் ஹ்ருதய குகைக்குள் இருப்பவன். அழகே வடிவானவன். புன்னகையுடன் கூடிய முகம் கொண்டவன்.

பக்தர்களின் செல்வம். ஸ்ரீப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணன். ஸ்ரீப்ரஸன்னனின் பாதங்களை வணங்குபவர்களுக்கு வரங்களை அளிப்பவன். பக்தர்களின் இஷ்டமானவன். || 7.

***

**55. ராக :தோடி தாள :ஏகதாள**

**ஹரிபடரிகெ லவ பயவில்ல ஸ்ரீ ஹரிஸ்மரணகே ஸம தர்மவில்ல**
**ஹரிகருணெகே பாத்ரனெ ஸுஜ்ஞ ஸ்ரீ ஹரியொப்பதவனெ பஹு பஶுக்ன ॥ப॥**

**வ்ரஜகெ தெரளித கம்ஸன மததி ஒந்து ரஜனியொளித்த க்ரூரக்ருஹஹொந்தி**
**ஸுஜனேஸ்வர ஸ்ரீக்ருஷ்ணபாத ஸன்னிஜத்யாஸதி ஸ்மரணெயலித்த ॥1॥**

**ரவிகர்க்யத கர்மவ மாடி ஶுப ஹவிர்காஹுதி விதியலி நீடி**
**ஜவதி ரதகே ஹயகளு ஹூடி மாதவ தருஶனகெ ஶகுன நோடி ॥2॥**

**பந்தவிடிது அம்புஜாம்பகன குணசிந்தனெயலி மாடுவ த்யான**
**எந்த ஸுக்ருத எனகுதிஸிதோ பூகாந்த கம்ஸகெ புத்தி ப்ரகடிஸிதோ ॥3॥**

**விஷயாஸக்திய ஶூத்ரனு ஹ்யாகெ ஸ்ருதிவிஷயனல்லவு புவியலி ஹாகே**
**விஷம விஷய பயஸுவ நனகே ஸ்ரீ பிஸஜாக்ஷ க்ருபெயாயிது எனகே ॥4॥**

**கோகுலகெ ஹோகுவெ நானிந்தெ மனோவ்யாகுலவனு ஹரிக்ருபெயிந்தெ**
**நூகுவ பாக்யவு பந்தெனகெ ஹரி ஸ்ரீகரசரணவப்புவே ப்யாகே ॥5॥**

**என்ன ஜன்மக்கே பல தோருதிதே நா தன்யனாகுவே தருஷனதிம்தெ**
**சின்மயாத்மன மூர்தி தோரதலி கண்டு ஸன்னமிஸுவெ கனஹருஷதலி ॥6॥**

காலனதிய தாடுவெ ஹரிய அங்க்ரி மூலவந்நாஶ்ரயிஸி த்வரியா
பாலகடலொடெயன க்ருபெயிந்த ஸ்ருதி ஜாலபலெய தாடுவெனெந்த || **7**

முநிஜனனுத பாதாம்புஜவ வந்தனெய மாட்யப்புவெ கனதேவ
மனஸின பயகெ பூரிஸிகொம்பெ இந்து அநிமிஷ பூஜ்யனாக்ருதி காம்பெ ||**8**

ஸ்ரீ பகவன் களமதன ஹரே இந்தெ பந்தெ களகம்ஸனட்டிதரெ
ஈ பாக்ய மந்தாதிகாரிகெ ஆ லாபவு ஸுலப தொரெயிதெனகெ || **9**

பூர்வேதரரு அம்புஜபவ விப ஶர்வேந்த்ராத்யரு நகமண்டலவ
ஸர்வதா அர்சிஸுவரு பிடதெ க்ருஷ்ண ஸர்வேஶ்வரன ஹொந்திதெயிந்தெ ||**10**

கோகள காய்வ கோவர பெரஸி ஸலெ ஈ கோபெர ரஜகந்தவ தரிஸி
ஈகொப்புதிதெ தவோரு ஹரெ பந்தீக காம்பெனு நின்ன கண்ணாரெ ||**11**

ஹொளெவ கபோல நாஸ ப்ரூலதா ஶுப எளெனகெ அருணாம்புஜ நேத்ர
லலித குடாளகயுதவக்த்ர பலுசெலுவ நோடுவவென்னய நேத்ர ||**12**

ம்ருககண ப்ரதக்ஷிணெயாகுதிவெ முந்தெ பகெபகெ ஶகுநாகுதிவெ
ஜகதொல்லபன காம்புவெ பவ்ய பதயுகளதூளிகளல்லி லண்டிஸுவெ ||**13**

வந்திஸி புன: புன: ஸ்துதிஸுவெ நா வஸுந்தரெலி மாநிஸரொல் தோருவன
வ்ருந்தாரகரிபுகுலஹரன ஆனந்த ஸ்வேச்சைக லீலாவதாரன ||**14**

ஆனந்தலாவண்யவாரிதியு ஈகெ மானவபதி தோருவ பகெயு
நா நோடுவ புண்யத பலவு இந்தீநந்தன ஸுதன தருஶனவு ||15

க்ருஷ்ண கருணாவலோகனவு ஶீக்ர நஷ்டாகுவதுக்ரகரதமவு
க்ருஷ்ண ஸ்வதந்த்ர ஸ்வமாயெயலி விஶ்வ ஹுட்டிஸி ஸகல தத்வகளல்லி ||16

ப்ராணாத்யமரர ஸஹ போகுவ தானானந்த ஜந்து ஜடதொளிருவ
ஆனந்த விசித்ர ரூபதலிருவ ஹரி தானெ நியந்தனு ஹொரெவ ||17

பக்ஷிம்ருககள திவோயச்சரவு கமலாக்ஷன தர்ஶன ஸூசிபவு
ஈ க்ஷோணி பவித்ர கர்மகுண நாம ஸம்ரக்ஷிப தர்மபூரணகாம ||18

தேவாதி ஜீவெளகவு ஹரிய சித்பாவதி கீர்த்னே மாடுத த்வரிய
பாவனவாகுவதனவரத ஆ தேவனெ ஸாத்வ ப்ராதுர்பூத ॥19॥

ஈதனெ கோஷ்டவ ஹொந்திஹனு மத்தீதனெ தர்மகோப்தாரனிஹனு
ஈத நிர்ஜரரிகெ ஸுகதாத ஜகன்னாத மங்கள குணவிக்யாத ॥20॥

ஈதன குண ஸுரர் பாடுவரு அஜ வாதருத்ரேந்த்ராதிகபுதரு
ஈதன நித்ய ஸ்தானவு த்ரயவு மத்தே நாதரில்லவு ஸ்ருதியனுபவவு ॥21॥

மஹோத்ஸவ என்னக்ஷிகே இந்து முந்தே மஹச்சேயிந்தீப்ஸிதவாகிஹுது
மஹத் ஸ்வப்ரகாஶாங்கித ரூபனனீ ஹொத்தெ காம்பெ பகவத்ஸ்வரூப ॥22॥

ஶ்ரீபாதகமலகளிகெரகுவெனெ நம்ம ஶ்ரீபதி கை தலெமேலிடுவனெ
பா ப்ரியனெந்தென்ன மன்னிஸுவனெ ஸுதாபஸர்கிவாபயகரவீவனெ ॥23॥

மாயாஶ்ரித கால ரம்ஹஸந்தக ஹரி ஸுயோகிஜனகபயதாயக
ஶ்ரீயம்பெகிம்பாகிஹ தோளுகளிம் இத்தெ பாயெந்தப்புவனோ மன்னணெயிம் ॥24॥
ஸமர்ஹணாம்பர பலிய நீடுவ மனோரமவாக்யதிந்தென்ன தோஷிஸுவ
ரமெய ஸம்ஸ்பர்ஶ ஸௌரப்யபுஜதிந்த நித்ய மம ஸ்வாமியப்புவ ப்ரேம புஞ்ஜதிம் ॥25॥

கம்ஸனவனெந்தென்னுதாஸிபனெ பரமஹம்ஸேஶ்வர க்ருபெய மாடுவனெ
தாம் ஸர்வகோப்தாந்தர்பஹிர்வ்யாப்த இந்து ஸம்ஶயில்ல காம்பெ யதார்த்த ॥26॥

தன்னங்க்ரிமலகெ வந்திஸலு இவ நன்னவனெந்தொலிவ க்ருபாளு
தன்னஸ்மிதேக்ஷணதலி ஹொரெவ ஸச்சின்மய மூர்தி முந்தகே கரெவ ॥27॥

அனாதி த்வஸ்தகில்பிஷதேவ தானானந்த கௌடும்பி நன்ன காவ
அனன்ய தைவாத்மீய ஜனகெ ஹரிதானெ ஸர்வோத்தமோத்தம ஸுககே ॥28॥

பீன புஜங்களிந்தப்புவனு முன்னேனு புண்யவனு மாடிதேனு
ஏனுர்ஜித கால ஸந்திஸிதோ ஶ்ரீ மானாதன ரூப தொரெயிதோ ॥29॥

அஞ்ஜலி புடதி ஸன்னமிஸுவெனெ ஶ்ரீ கஞ்ஜாக்ஷ க்ருதார்தி பாயெம்புவனெ
அஞ்ஜத அக்ருதாத்மனு துஷ்டகளபஞ்ஜக ஸ்வஜனேஷ்டனு க்ருஷ்ண ॥30॥

புண்யாமரதெய்வ பத்மனேத்ர இந்தென்னப்பிதரெ காத்ர பவித்ர
இன்னு ஸம்ஸ்க்ருதி பயவெனகில்ல என்ன தன்யன மாடித ஸிரினல்ல || 31

பந்தெ பா அக்ரூரனெனெஜன்ம ஹுட்டி பந்துதக்கெ ஸார்த்தக தர்ம
இந்திரேஶோருஶ்ரவன பாத மொரெ ஹொந்திதமேலெ இல்லவு கேத || 32

ஸ்னிக்தாளகாப்தாயத நேத்ர வேதவாக்தேவி ப்ரியாம்புதகாத்ர
ஸ்ருக்கந்தலேபித நோடதிஹ ஜன்ம திக்திக் மானிஸரோளவனதம || 33

ஸுஹ்ருத் தமோபேக்ஷெ த்வேஷகளு இல்ல ஸ்ரீஹரிகெ கல்பதருவினொலு
ஸுர ந்ருப நர யோக்யதெயொளு பலகெவுது ஹாகெ அதரொலு || 34

ஔஷதி வனஸ்பதிகள சந்த்ர நித்ய தோஷிபந்தெ யதுகுலசந்த்ர
தோஷபனோ தோஷிஸனோ ஸ்ரீபால உதாஸீன மாடலு ஜ்ஞானகுஶல ||35

தன்ன ஹஸ்ததிந்தென கைவிடிது ஹரிமன்னிஸி மனெஹோகுவனெ இந்து
உன்மத்த கம்ஸன கர்மவனு கிருஷ்ண செனாகி கேள்வனெ ப்ரஶ்னெயனு || 36

ஸ்ரீகாந்தனங்க்ரிய ரேணுகளு ஸர்வ லோகேஶர்மௌளிகாபரணகலு
ஈ கௌதுக நோடி பூஸதிகெ அனேகாபரண ஹெஜ்ஜெகளிகெ || 37

அங்குஶாம்புஜயவத்வஜ வஜ்ரரேகாங்கிதவாகிஹ புவி வ்ரஜ
பங்கஜஸம்பவபவர ஶிரகளு ஸோங்கிதவெந்தனக்ரூரெ || 38

அஹோ முகுந்தாங்க்ரி பாம்ஸுவெந்து தா மஹிகெ பித்தானந்தாஶ்ருபிந்து
பஹுப்ரேமபரித தானபதி பித்து ஹொரளித பக்தியலி ஸுமதி || 39

மஹாத்மா ராமாச்யுதர கண்ட கோதாஹன காலதி பக்த ஶௌண்ட
ஸுஹேமாம்பர நீலாம்பரத ஸ்மித ஸ்னேஹாபாங்காம்புஜாம்பகர || 40

அபிச ஶ்யாமல ஶ்வேதாங்கர யுக்ம ஸுபீன புஜவுள்ள ஸுந்தரர
தீபிதாமோக சந்த்ரோபமர பால த்விபபா பூர்ணகுளாயுதர || 41

ஸௌகந்தமால்யோருராஜீதர ஸர்வ போககனகெ ஸுந்தரவரர
யோகைஶ்வர்ய லீலாபரர அமோகௌதார்ய குணாகரர || 42

வஜ்ராங்குஶாம்புஜ த்வஜசின்ஹித சுப ஹெஜ்ஜிட்டு பூபாவனவ மாடுத
ஸஜ்ஜீவிகள ப்ரதிபாலரனு களதுர்ஜிவதைத்யர வதி[4]பரனு ॥43॥

தயார்த்ர நேத்ர ஸ்மிதவதனரனு லேஶ பயாதிரிக்கர சிதாத்மரனு
ஶ்ரீயாஞ்சித வனஸ்ம்ருக்தரர ஸர்வ ப்ரியதமோத்தம ஹரிபலர ॥44॥

ஸ்னாதர ஶுசிவஸ்த்ரா பரணாங்கர நித்ய பூத ப்ரதான புருஷோத்தமர
ஈ த்ரிஜகத்ஹேதுகள ஹர அதிப்ரீதிலி கண்டனக்ரூர சதுர ॥45॥

ஆனந்தபாஷ்பதொளீக்ஷிஸித ஸஹஸ்ரானன ஶுக்லகேஶாவேஶன
ஆனங்கதுந்துபிய ஜேஷ்டஸுத ஸ்ரீவேணுகோபால ஸாக்ஷாதச்யுத ॥46॥

நீல ஶ்வேத கிரியந்தொப்புதிஹர கண்ட மேலே ஹாரித த்யஜிஸுத தேர
ஸ்ரீலோலபலரிகெ ப்ரணாமவனு மாடி ஏளலொன்னனு அஶ்ருதும்பி அவனு || 47

நீலாங்கபலரிகெ தண்டப்ரணாமமாடி காலமேலிட்ட தன மஸ்தகவ ப்ரேம
ஆலங்கிஸி சும்பிஸிதனு பதவ தானேளலொல்லனு ப்ரேம தும்பிதவ || 48

மேலக்கெ ஏளலாரனு முகவ தன்ன நாலிகெளெது கத்கதாகிருவ
ஹேளுதானந்தபாஷ்டவு தும்பி கண்ண ஆலிகளொரதெயிட்டவு உப்பி || 49

**நா நன்ன தெம்பெச்சர மரெத நைஜானந்தவனு மனதலி கரெத**
**ஜ்ஞானாங்கருஹ உப்பிதவாக தானேனுத்தர கொடத்ஹோதாக ||50**

**அக்ரூரன பக்திகொப்பிதனு ஶ்ரீ சக்ரதரகரனப்பிதனு**
**ஆக்ரந்திஸிதெ அக்ரூர பாயெந்த ஸ்மரஶக்ரேஶார்ச்சித ஶ்ரீபாத ॥51॥**

**கையிந்த கைவிடிது முக்குந்த தன்ன கேஹகக்ரஜன கூடி பந்த**
**ப்ரியோக்தி பீயூஷவனுணிஸித பா நீயென்ன தாதன ஸரியெந்த ॥52॥**

**ஆஸனவித்தனு ஸ்வாகதவ கேளி வாஸுதேவ ஸர்வஜ்ஞதேவ**
**மீஸலஜலதொளங்க்ரிய தொளெத ஆர்யா ஸங்கருஷண ஸஹார்சிஸித ॥53॥**

**பஹுகுணோபேதான்னவ ரசிஸி அதிமஹிம ப்ரியோக்தியிந்தலி உணிஸி**
**பஹுக்ருதார்த்தனாதனக்ரூரனு ஶ்ரீஅஹிஶயனன்னு ஹொகளிதனு ॥54॥**

**ஸ்ருகந்த மால்யாம்பராஸ்யவாஸத திவ்ய நாகவல்லிதளவ ஸேவிஸித**
**ஶ்ரீகோவிந்த ஸோங்கித பவித்ரகாத்ர பாகவதோத்தம அக்ரூர பாத்ர ॥55॥**

55
ஶ்ரீஹரியின் பக்தர்களுக்கு சிறிதளவும் பயம் இல்லை. ஶ்ரீஹரி ஸ்மரணைக்கு சமமான தர்மமே இல்லை. ஶ்ரீஹரியின் கருணைக்கு பாத்ரன் ஆனவனே ஸஜ்ஜனன் / அனைத்தையும் அறிந்தவன். ஶ்ரீஹரி ஒப்புக் கொள்ளாதவனே, அஜ்ஞன் / எதுவும் அறியாதவன். || ப

வ்ருந்தாவனத்திற்கு வந்த கம்ஸனின் ஆளான அக்ரூரர், ஒரு வீட்டினை அடைந்து அங்கு ஓரிரவு தங்கினார். ஸஜ்ஜனர்களின் தலைவனான ஶ்ரீகிருஷ்ணனின் பாத பத்மங்களின் த்யானத்தில், அதன் ஸ்மரணையில் தான் ஈடுபட்டிருந்தார். || 1

சூர்ய அர்க்யமே முதலான காரியங்களை செய்து, பவித்ரமான ஹவிஸ் ஆஹுதிகளை விதிப்படி அளித்து, விடியலில் உடனடியாக ரதத்தில் குதிரைகளை பூட்டியபோது, மாதவனின் தரிசனத்திற்கு ஏற்ற நல்ல சகுனங்கள் தென்பட்டன.. || 2

தாமரைக் கண்களைக் கொண்ட ஶ்ரீகிருஷ்ணனின் வீட்டின் பாதையை பிடித்து, அவனுடைய குணங்களின் சிந்தனையில் த்யானம் செய்து கொண்டிருந்தான். எனக்கு எத்தகைய பாக்கியம் கிடைத்ததோ, பூமியின் அரசனான கம்ஸனுக்கு (என்னை இங்கு அனுப்ப வேண்டும் என்னும்) புத்தி எப்படி தோன்றியதோ? - என்று அக்ரூரர் நினைத்தார். || 3

இதுவரை, நான் எப்போதும் உலக விஷயங்களிலேயே ஈடுபாடு கொண்டிருந்தேன். நான்காம் வர்ணத்தவர்களைப் போல இருந்தேன். ஸ்ருதியில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களைப் பற்றி நான் எதையும் அறியேன். இவ்வாறு இந்த பூமியில் கெட்ட விஷயங்களைப் பற்றியே, அவற்றையே விரும்பிக் கொண்டிருக்கும் எனக்கு, தாமரைக் கண்ணனான ஶ்ரீகிருஷ்ணனின் கருணை ஆயிற்று - என்று அக்ரூரர் நினைத்தார். || 4

அடுத்து நான் கோகுலத்திற்கு செல்வேன். என்னுடைய மனக் கஷ்டங்களை ஶ்ரீஹரியின் கருணையால் போக்கிக் கொள்ளும் பாக்கியம் எனக்கு வந்திருக்கிறது. ஶ்ரீஹரியின் ஶ்ரீகரங்கள், சரணங்களை நான் வேகமாக சென்று அடைவேன் / வணங்குவேன் - என்று அக்ரூரர் நினைத்தார். || 5

என்னுடைய பிறவிக்கு இன்று எனக்கு பலன் கிடைத்தது. நான் ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனத்தால் தன்யன் ஆகிறேன். சின்மயாத்மனின் மூர்த்தியை நான் தூரத்திலேயே கண்டு, மிகவும் மகிழ்ச்சியுடன் நான் அவனை வணங்குவேன். || 6

காலம் (ஸம்ஸாரம்) என்னும் நதியை நான் தாண்டுவேன். ஸ்ரீஹரியின் பாதமூலத்தை நான் ஆஸ்ரயித்து, உடனடியாக அந்த பாற்கடலில் படுத்திருப்பவனின் அருளால், ஸம்ஸாரம் என்னும் மயக்கமான வலையிலிருந்து நான் தாண்டுவேன் என்றான் அக்ரூரன். || 7

முனிவர்களால் வணங்கப்படும் பாத கமலங்களை வணங்குவேன். அபாரமான குணங்களைக் கொண்ட தேவனிடம் என்னுடைய மனதின் விருப்பங்களைக் கூறி இன்று அவற்றை நிறைவேற்றிக் கொள்வேன். தேவர்களால் வணங்கப்படும் பூஜ்யனின் தேகத்தை நான் இன்று காண்பேன். || 8

ஸ்ரீபகவான். துஷ்டர்களை அழிப்பவன். ஹரே. இன்றே நான் உன்னை பார்ப்பதற்கு வந்திருக்கிறேன். துஷ்டனான கம்ஸன் அனுப்பியதால், இந்த பாக்கியம், மந்தாதிகாரியான எனக்கு, இந்த லாபம், மிகவும் சுலபமாக எனக்கு கிடைத்திருக்கிறது. || 9

சதுர்முக ப்ரஹ்மதேவர், ருத்ர, கருட, ஸேஷர், இந்த்ராதி அனைத்து தேவர்களும், எப்போதும் விடாமல் ஸ்ரீகிருஷ்ணனின் நக-மண்டலத்தையே அர்ச்சித்துக் கொண்டே இருக்கின்றனர். அத்தகைய ஸர்வேஸ்வரனை நான் இன்று வந்து அடைந்தேன். ||10

பசுக்களை காக்கிறான். கோபாலகர்களுடன் வேலை செய்கிறான் / விளையாடுகிறான். கோபிகைகள் கொடுத்த நறுமணம் மிக்க சந்தனத்தை தரிக்கிறான். அதுவே இப்போது உன்னுடைய தேகத்தில் பூசப்பட்டிருக்கிறது. ஹரியே. நான் இப்போது வந்து உன்னை என் கண்ணாரக் காண்பேன். || 11

ஒளிர்வதான கன்னங்கள். மூக்கு. புருவங்கள். நலன்களை தருவதான புன்னகை. தாமரை மலர் போன்ற கண்கள். நல்ல மடிப்புகள் கொண்ட ஆடை ஆகியவற்றுடன் அழகாக இருப்பவனை நான் இன்று என்னுடைய கண்களால் நான் காண்பேன். || 12

மிருக கணங்கள் ப்ரதக்ஷிணை செய்து கொண்டிருக்கின்றன. (இதைப் போன்ற) மேலும் பல நல்ல சகுனங்கள் எனக்கு ஆகிக் கொண்டிருக்கின்றன. ஜகத்தின் தலைவனை நான் காண்பேன். பவ்யமான அவனுடைய பாதங்களின் தூளிகளில் நான் விழுந்து புரள்வேன். || 13

அவனை திரும்பத் திரும்ப வணங்கி துதிப்பேன். இந்த பூமியில் மனிதர்களைப் போல அவர்களின் நடுவில் தெரிபவனை, வ்ருந்தாவனத்தில் இருப்பவர்களின் எதிரிகளை அழிப்பவனை, தன்னுடைய சொந்த ஆனந்தத்தின், விருப்பத்தினாலேயே தன்னுடைய லீலைகளை அவதாரங்களை செய்பவனை - நான் இன்று காண்பேன். || 14

இவ்வாறு மானவபதியான அக்ரூரர் தனக்கு ஏற்படும் மகிழ்ச்சிக் கடலைக் காட்டிக் கொள்கிறார். நான் இதுவரை செய்த புண்ணியத்தின் பலனே, இன்று எனக்கு கிடைக்கப் போகும் நந்தகுமாரனின் தரிசனம் ஆகும். || 15

ஸ்ரீகிருஷ்ணனின் கருணைப் பார்வையானது என் மேல் விழுந்தால், என்னுடைய உக்ரமான தமஸ் என்னும் குணம் விரைவில் நஷ்டமாகி விடும். ஸ்வதந்த்ரனான ஸ்ரீகிருஷ்ணன், தன்னுடைய மாயையினால் (இச்சையினால்) இந்த உலகினை படைத்து, அனைத்து தத்வங்களில்... || 16

முக்யப்ராணரே முதலான அனைத்து தத்வாபிமானி தேவதைகளுடன் கூட சேர்ந்து அவனும் செல்கிறான். தான் அனந்த ஜீவ, ஜடர்களில் இருப்பான். தான் அவற்றில் விசித்ர ரூபங்களில் இருப்பான். ஸ்ரீஹரியே அனைத்தையும் நியந்த்ரணம் செய்பவன். அவனே அனைவரையும் காப்பவன். || 17

எதிரில் தெரியும் பறவை, மிருகங்களின் குரல்கள், அந்த தாமரைக் கண்ணனின் தரிசனம் எனக்கு விரைவில் கிடைக்கப்போகிறது என்பதையே குறிக்கிறது. இந்த பூமியில் வந்திருப்பவனின் கர்மங்கள், குணங்கள், நாமங்கள் ஆகிய அனைத்தும் பவித்ரமே. அவனே தர்மங்களை காப்பவன். அவன் பூர்ண காமன். || 18

தேவர்கள், ஜீவர்களின் கூட்டங்கள் ஆகியோர் ஸ்ரீஹரியை அத்யந்த பக்தியுடன் தொடர்ந்து கீர்த்தனைகள் செய்து கொண்டே இருக்கிறார்கள். அவனை புகழ்ந்தால் பவித்ரமே ஆகிறது (ஆகிறோம்). எப்போதும் இருப்பவனான அந்த தேவனே, ஸ்வாதந்த்ர்யன். அந்த ஸ்ரீமன் நாராயணனே, ஸ்ரீகிருஷ்ணனாக அவதாரம் செய்திருக்கிறான். || 19

இவனே இப்போது இந்த நந்தகோகுலத்தை அடைந்திருக்கிறான். இவனே தர்மத்தை காப்பவனாக இருக்கிறான். இவன் தன் பக்தர்களுக்கு சுகத்தை அருள்பவன். ஜகத்தின் தலைவன். மங்களகரமான குணங்களைக் கொண்டவன். புகழ் பெற்றவன். || 20

இவனுடைய நற்குணங்களை தேவர்கள் பாடுகிறார்கள். ப்ரஹ்ம தேவர், ருத்ர, இந்த்ராதி தேவர்கள், இவனுடைய புகழ் பாடுகின்றனர். இவன் எப்போதும் வசிப்பதான இடங்கள் மூன்று (ஶ்வேதத்வீப, அனந்தாஸன, வைகுண்ட). இவனுக்கு தலைவன் என்று யாரும் இல்லை. இது ஸ்ருதிகள் சொல்லும் விஷயமாகும். || 21

இன்று என் கண்களுக்கு சரியான விருந்து இருக்கிறது. அபாரமான செல்வத்தினை என் கண்கள் பார்க்கப் போகின்றன. ஸ்வப்ரகாஶனான மஹத் ரூபத்தையே, அந்த பகவத் ரூபத்தையே நான் இப்போதே பார்க்கப் போகிறேன். || 22

அந்த ஸ்ரீகிருஷ்ணனின் பாத கமலங்களுக்கு நான் விழுந்து வணங்குவேன். நம் ஸ்ரீபதியானவன், தன் கைகளை என் தலை மேல் வைத்து ஆசி வழங்குவான். வா ப்ரியமானவனே, என்று சொல்லி, என்னை வரவேற்பான். என் கஷ்டங்கள் அனைத்தையும் போக்கி, தன்னுடைய அபய கரங்களை எனக்குக் கொடுப்பான். || 23

தன் இஷ்டத்தினாலேயே, கெட்டவர்களை அழிப்பவன் இவனே. ஸ்ரீஹரி, ஸுயோகிகளின் தந்தை. துஷ்டர்களுக்கு பயத்தை கொடுப்பவன். ஸ்ரீமஹாலக்ஷ்மியை கட்டிக் கொள்ளும் தோள்களைக் கொண்டவனான ஸ்ரீகிருஷ்ணன், அதே தோள்களால் என்னையும் கட்டிக் கொள்வானோ? என்னை மரியாதையுடன் அருகில் அழைப்பானோ?. || 24

அனைவராலும் பூஜிக்கப்படுபவன் எனக்கு பரிசுகளை அளிப்பான். மனதிற்கு பிடித்தமான வாக்கியங்களால் என்னை மகிழ்ச்சிப் படுத்துவான். ஸ்ரீரமாதேவியின் ஸ்பர்ஶம் கொண்டிருக்கும் தோள்களால், எப்போதும் என்னுடைய ஸ்வாமியான அந்த ஸ்ரீகிருஷ்ணன், அபாரமான ப்ரேமத்தினால் என்னை கட்டிக் கொள்வான். || 25

நான் கம்ஸனுடைய சேவகன் என்று என்னை உதாஸீனம் செய்வானோ?. பரமஹம்ஸர்களுக்கு தலைவன். என் மேல் தன்னுடைய கருணையை காட்டுவானோ?. அனைத்து ஜீவர்களில்,

அசேதனர்களில் உள்ளே மற்றும் வெளியே வ்யாப்தனானவன். அத்தகையவனை நான் இன்று சந்தேகமின்றி, யதார்த்தமாக நேரில் பார்க்கப் போகிறேன். || 26

நான் சென்று அவனுடைய பாத கமலங்களை விழுந்து வணங்க, அந்த கருணாளு, இவன் என்னுடையவன் என்று என்னை அருள்வான். தன்னுடைய ஒளிர்வதான பார்வையால் என்னை காப்பான். ஸச்சிதானந்த மூர்த்தி என்னை முன்னே வருமாறு அழைப்பான். || 27

அனாதியானவன். தோஷங்கள் அற்றவன். விஶ்வ குடும்பி. அவனே என்னை காப்பான். எப்போதும் தொடர்ந்து தன்னுடைய பக்தர்களுக்கு சுகத்தை அளிப்பவன் அவனே. அவனே ஸர்வோத்தமோத்தமன். || 28

தன்னுடைய அபாரமான வலிமையான தோள்களால் என்னை கட்டிக் கொள்வான். இந்த பேறு கிடைக்க, நான் முன்னர் என்ன புண்ணியம்தான் செய்தேனோ?. இது என்ன என்னுடைய சிறப்பான (அதிர்ஷ்டமான) நேரம் வந்திருக்கிறதோ?. ஸ்ரீதேவியின் தலைவனின் ரூபம் எனக்கு கிடைக்கப் போகிறதோ?. || 29

கைகளை குவித்தவாறு நான் அவனை வணங்குவேன். தாமரைக் கண்ணன். ஸர்வோத்தமன் என்னை அருகில் வா என்று அழைப்பானோ?. யாருக்கும் பயப்படாதவன், உற்பத்தி இல்லாதவன், துஷ்டர்களின் குலத்தையே அழிப்பவன். தன் பக்தர்களை விரும்புபவன் / காப்பவன். அந்த கிருஷ்ணன். || 30

தேவர்களின் தேவன். தாமரைக் கண்னன். இன்று என்னை கட்டிக் கொண்டால், அது என்னுடைய புண்ணியம். பவித்ரமான சரித்ரத்தைக் கொண்டவன் என்னை கட்டிக் கொண்டால், அடுத்து எனக்கு ஸம்ஸாரம் என்பது இல்லை. ஸ்ரீதேவியின் தலைவன் என்னை தன்யன் என்று ஆக்குகிறான். || 31

அக்ரூரன் என்று நான் இந்தப் பிறவியை எடுத்து வந்தேன். அப்படி வந்ததற்கு ஸார்த்தகம் ஆயிற்று. இந்த்ரேஶனின் சிறந்ததான பாதத்தினை நான் விழுந்து வணங்கியபிறகு, எனக்கு எவ்வித துன்பங்களும் இல்லை. || 32

கருணைக் கடலான அவனின் கண்கள், வேதவாக்தேவியான ஸ்ரீலக்ஷ்மி தேவிக்கு ப்ரியமான தேகம், நறுமணம் மிக்க சந்தனம் பூசிய தேகம். இவ்வாறான காட்சியை காணாத பிறவி என்ன பிறவியோ? *சீச்சீ*. அத்தகையவன், மனிதர்களில் அதமன். || 33

அவன் நல் இதயம் கொண்டவன். ஸ்ரீஹரியிடம் தமஸ்ஸிற்கு யோக்யதையான த்வேஷங்கள் இல்லை. அவன் கல்பதரு. தேவர்கள், மானுஷோத்தமர்கள், நரர்கள் ஆகியோருக்கு அவரவர்களின் யோக்யதைக்கேற்ப பலன்கள் கிடைக்கின்றன. || 34

செடி, மூலிகைகள் ஆகியவற்றை சந்த்ரன் தினமும் ஒளிர்ந்து காப்பதைப் போல, யதுகுல சந்த்ரனான ஸ்ரீகிருஷ்ணன் என்னை காப்பானோ? காக்காமல் விடுவனோ?. ஸ்ரீலக்ஷ்மிதேவியின் தலைவன் என்னை உதாஸீனம் செய்ய மாட்டான். அவன் ஸர்வஜ்ஞன். || 35

தன் கைகளால் என்னை கை பிடித்து வரவேற்று, ஸ்ரீஹரி தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வான். அந்த கர்வம் பிடித்த கம்ஸனின் கர்மங்களைப் பற்றி என்னிடம் பல கேள்விகளை கிருஷ்ணன் நன்றாக கேட்பான். || 36

ஸ்ரீகாந்தனின் பாத தூளிகள், ஸர்வ தேவர்களின் கிரீடங்களின் ஆபரணமாக இருக்கின்றன. ஸ்ரீகிருஷ்ணனின் காலடித் தடங்கள், அவனுடைய காலில் அணிந்த கொலுசுகள், கோகுலத்தில் அனேக இடங்களில் பட்டிருக்கின்றன. அவை அனைத்தும் பூதேவிக்கு ஆபரணங்களாக இருக்கின்றன. || 37

அங்குஶ, தாமரை, த்வஜ, வஜ்ர ஆகிய சின்னங்களால் இந்த பூமி அலங்கரிக்கப்பட்டுள்ளது. ப்ரஹ்ம தேவர், ருத்ர தேவரே முதலான தேவர்களின் தலைகள், அந்த காலடி தடங்களின் மேல் குனிந்து வணங்குகின்றன - என்றார் அக்ரூரர். || 28

ஆஹா. இது முகுந்தனின் பாதங்களின் தூளிகள் என்று அக்ரூரர் அந்த பூமியில் விழுந்து, ஆனந்தக்கண்ணீர் வடித்து, மிகவும் அன்பு அதிகமாகி, அதிகமான பக்தியில் புரண்டார். அக்ரூரர் நன்மதி படைத்தவர். || 39

மஹாத்மனான அக்ரூரர், ராம, கிருஷ்ணர்களை, பசுக்களுக்கு பால் கறக்கும் காலத்தில் கண்டார். இவர் பக்தர்களில் சிறந்தவர். தங்கமயமான, நீலாம்பர ஆடையை உடுத்தி, புன்னகையுடன், தாமரைக் கண்ணனை அக்ரூரர் கண்டார். || 40

மேலும், ஶ்யாமல மற்றும் ஶ்வேத அங்கங்களைக் கொண்ட கிருஷ்ண, ராமர்களை, விரிந்த தோள்களைக் கொண்ட அழகானவர்களை, ஒளிர்வதான சந்த்ரனுக்கு ஒப்பானவர்களை, பால சூரியன் போல ஒளிர்பவர்களை, முழு நிலவைப் போல ஒளிர்பவரை - அக்ரூரர் கண்டார். || 41

ஸௌகந்திகா மாலையை மார்பில் அணிந்தவர்களை, ஸர்வ பூமி, தேவ லோகங்களில் அழகானவர்களை, யோக, ஐஸ்வர்யங்களை தங்களின் லீலையாக கொண்டிருப்பவர்களை, அபாரமான காருண்யம் முதலான குணங்களை கொண்டவர்களை - அக்ரூரர் கண்டார். || 42

வஜ்ர, அங்குஶ, தாமரை, த்வஜ ஆகிய சின்னங்களை தரித்த சுபங்களை தரக்கூடிய பாதங்களை வைத்து, பூமியை பவித்ரமாக ஆக்கியவாறு, ஸஜ்ஜனர்களை ப்ரதிபாலனம் செய்பவர்களை, துஷ்டர்களை, துர்ஜீவி தைத்யர்களை அவன் ஸ்ரீகிருஷ்ணன் கொல்கிறான். || 43

கருணை பொழிவதான கண்கள், புன்னகை பூத்த முகம், எப்போதும் பயம் என்பது சிறிதும் இல்லாதவன். ஆனந்த ஸ்வருபன். லக்ஷ்மி ஸ்வரூபமான வனமாலையை அவன் தரித்திருக்கிறான். அனைவருக்கும் ப்ரியதமோத்தமன். இவ்வாறான ஸ்ரீகிருஷ்ணன் மற்றும் பலராமர்களை அக்ரூரர் பார்க்கிறார். || 44

ஸ்னானம் செய்து, தூய்மையான ஆடைகளை உடுத்தி, ஆபரணங்களால் அலங்காரம் செய்யப்பட்டவர்கள், நித்யனான, ப்ரதான புருஷோத்தமனை, இந்த மூன்று உலகங்களுக்கும் காரணமானவனை, அந்த உலகங்களை அழிப்பவனை, மிகவும் அதிகமான அன்புடன் அறிவாளியான அக்ரூரர் கண்டார். || 45

ஆனந்தக் கண்ணீர் வடித்தவாறு அந்த ஆயிரம் முகங்களைக் கொண்ட ஸ்ரீகிருஷ்ணனையும், ஶுக்ல கேஶனான பலராமனையும் அக்ரூரர் பார்க்கிறார். வஸுதேவனின் மூத்த மகனான ஸ்ரீவேணுகோபாலனே ஸாக்ஷாத் அச்யுதன். || 46

கார்மேகம் போல, வெண்மையாக ஒளிர்பவர்களை அக்ரூரர் பார்க்கிறார். உடனே தன்னுடைய தேரிலிருந்து கீழே பாய்கிறார். ஸ்ரீலோலன் மற்றும் பலராமருக்கு நமஸ்காரங்களை செய்து, ஆனந்தக் கண்ணீர் விட்டவாறு, திரும்ப எழ முடியாதவாறு இருக்கிறார். || 47

நீல தேகம் கொண்டவனுக்கு மற்றும் பலராமனுக்கு சாஷ்டாங்கமாக ப்ரணாமங்களை செய்து, அவர்களின் கால் மேல் தன் தலையை மிகவும் பக்தியுடன் வைத்தார். அவர்களின் பாதங்களை கட்டிக் கொண்டு முத்தம் கொடுக்கிறார். பக்திப் பெருக்கு எடுத்தவாறு, அவர், திரும்ப எழ முடியாதவராக இருக்கிறார். || 48

அக்ரூரர் திரும்ப மேலே எழுவதில்லை. நாக்கு முகத்தின் உள்ளே இழுத்துக் கொண்டு, தழுதழுத்துப் பேசுகிறார். ஆனந்தக் கண்ணீர் விடுகிறார். நன்கு அழுததால், கண்களின் இரப்பைகள் உப்பி இருக்கின்றன. || 49

நான், என்னுடையது என்னும் சிந்தனையை மறந்தார். மனதில் உண்மையான ஆனந்தத்தை அடைந்தார். ஸ்ரீகிருஷ்ண பலராமருக்கு அக்ரூரர் எதுவும் பதில் கூறாதபோது, ஜ்ஞானானந்தமயனான ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு கூறுகிறான். || 50

அக்ரூரனின் பக்திக்கு மெச்சி, ஸ்ரீசக்ரதரனான ஸ்ரீகிருஷ்ணன் அவனை கட்டிக் கொண்டான். அழுது கொண்டிருந்த அக்ரூரரைப் பார்த்து, இங்கு வா - என்கிறான். காமன், இந்த்ரன் ஆகியோர் அர்ச்சனை செய்யப்படும் பாதங்களைக் கொண்ட ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு கூறுகிறான். || 51

முகுந்தன், தன் கைகளால், அக்ரூரரின் கைகளை பிடித்து, தன் அண்ணனுடன் சேர்ந்து அங்கு வந்தான். அமிர்தம் போன்றதான தன்னுடைய ப்ரிய வார்த்தைகளை ஸ்ரீகிருஷ்ணன் பேசினான். இங்கு வா, நீ என்னுடைய தந்தையைப் போன்றவர் - என்றான். || 52

அக்ரூரரை வரவேற்று ஆசனம் அளித்தான் வாஸுதேவன். அவன் ஸர்வஜ்ஞன். தேவன். அக்ரூரரின் பாதங்களை கழுவினான். ஸ்ரீகிருஷ்ணன், பலராமனுடன் சேர்ந்து அவரை அர்ச்சனை செய்தான். || 53

பற்பல குணங்களைப் பெற்றவனான ஸ்ரீகிருஷ்ணன், தான் அக்ரூரருக்கு அன்னம் படைத்து, மிகவும் சிறந்ததான ப்ரிய வசனங்களைப் பேசி அவருக்கு அன்னம் உண்வித்தான். அக்ரூரர், தானே மிகவும் தன்யன் என்று கூறிக் கொண்டார். பாம்புப் படுக்கையில் படுத்திருப்பவனை அக்ரூரர் நன்றாக புகழ்ந்தார். || 54

நறுமணம் மிக்க சந்தனம், மாலைகளை அணிந்தவனை, நாகவல்லி தளத்தினை சூடியவனை அக்ரூரர் வணங்கினார். ஸ்ரீகோவிந்த, பவித்ர தேகத்தைக் கொண்டவன், பாகவதோத்தமனான அக்ரூரரின் பக்தியை நன்கு மெச்சினான். || 55

தனக்கு அளிக்கப்பட்ட அனைத்து போகங்களையும் ஹரே, ஸ்ரீகிருஷ்ணார்ப்பணம் என்றார் அக்ரூரர். இவ்வாறு ஶுக முனிவர் பரீக்ஷித் அரசனுக்கு, ஸ்ரீகிருஷ்ண கதாம்ருதத்தை கூறினார். || 56

இவ்வாறு இந்த ஸ்ரீகிருஷ்ணனின் கதாம்ருதத்தை பக்தியுடன் கூறி, கேட்பவர்களுக்கு பக்தி, முக்தி ஆகியவற்றை ஸ்ரீஹரி விரைவில் வழங்குகிறான். பக்தவத்ஸலன். ப்ரஸன்ன வெங்கடபதி. அவன் மேல் பக்தி உள்ளவனே எப்போதும் தன்யன். || 57

**

**56. ராக :வஸந்த தாள : ஜம்ப**

**ஶ்ரீயரமண ஶ்ரீக்ருஷ்ணனாத தானபதி**
**ஜயவு ஹரிதாஸரிகெ பய த்வேஷிகளிகெ || ப**

**ஜகத அத்யந்தவெல்ல பல்ல லக்ஷ்மீகாந்த**
**மகுளெ கேளிதனு போஜபன வ்ருத்தாந்த**
**விகட க்ருத்யவ ஹேளத்னக்ரூர விஸ்த்ருத**
**முகுளுனகெயலி கேள்த ஜகதேக ஶாஸ்த்ர ॥1॥**

**ஸுகதி மலகித தாந்தமஞ்சதலி அக்ரூர**
**ஸகல லப்யவு ஹரிய பாதாஶ்ரிதரிகெ**
**பகுதி பாக்யவு ஒந்து பேடரின்னொந்தர்த்த**
**முகுதிகதிகெம்ப ஹரிபகுதனிகுரும்ப ॥2॥**

**வைரானுபந்த யதுவம்ஶ தல்லித்தவன**
**ஶௌரியனு கொல்லுவ விசாரதல்லித்தவன**
**நாரதன முகதி தன்ன ஜன்மவனு கேள்தவன**
**ஶௌர்யோக்திகளனு கேள்தனு ஸுப்ரஸன்ன ॥3॥**

**ராஜாஜ்ஞே ஹேளிதனு நந்தனிகெ அக்ரூர**
**கோஜீவனாத க்ருதபாலுததி பாண்டகள**
**ராஜிஸுவ ஶகடகள தும்பி ஹேரிஸிதனு**
**ராஜீவஸகனுதயகெ கோவரிந்த ॥4॥**

**நாவீகுபாயனவனொய்து போஜேஶ்வரகெ**
**ஈவ மதுரெயலி உத்ஸவனீக்ஷிஸுவ**
**ஆவாவ தேஶதிம் ப்ரேக்ஷகரு பந்திஹரு**
**நாவு போஜபனாப்த பந்துகளு எந்த ॥5॥**

**ஏவம்வித போஷிஸலு கோகுலதி ஶீக்ரதலி**
**கோபியரு வ்யதிஸிதரு சித்தவ்யக்ரதலி**
**கோவிந்தராமரனு மதுரெகொய்யுவேனெந்து**
**தாவ அக்ரூர கோஷ்டகெ பந்தனெந்து ॥6॥**

**ஏதெகெ வ்யதெ தாகி முககாந்தி ஆ க்ஷண ஹோகி**
**ஸதன துகூலவ நீகி ஸாகி துஶ்சிதராகி**
**பதிய ஜனரனு காணதே பிச்சித துருபு நோடதே**
**ஸுததேரகிளரெல்ல ஸோல்மரெதரெல்ல ||7**

**விஷய பயகெய பிட்டு க்ருஷ்ணத்யானவு நட்டு**
**பிஸஜயனன அஸ்ய ஸ்நேஹஸ்மிதஹாஸ்ய**
**ஶஶிமுகியர் நெனெனெது நேத்ரபாஷ்பவ தந்து**
**அஸம விரஹாக்னியலி பெந்து ப்ராந்தரந்து ॥8॥**

**ஹரிய நர்மோக்தி ஸௌந்தர்ய ஸக்யவு ப்ரீதி**
**வரோத்தாம சரிதெயனு ஸலெ ஸ்மரிஸி**
**ஸரஸாக்ஷியோளுஶ்ருகரெது ம்ருகஶாவாக்ஷிர்**
**மரெது தனுவன்னு ஶோசிஸி அந்து நோந்து ॥9॥**

**எலே விதியே இது ஸல்ல நின்னல்லி கருணில்ல**
**கெளெய ஹரி ஸம்யோக மாடிஸி வியோக**
**இளெயெளெயர தெரதி சேஷ்டிஸுவெ நீனிந்தெ ஸலெ**
**நினகே உசிதெ நம்ம ஶோக நினகொளிதெ ॥10॥**

குருளு குடிலாவ்ருதத வக்த்ர அம்புஜனேத்ர
தருணியர ஹ்ருத்தாப பரிஹரிப ஶ்ரீபா
புருஷோத்தமனு ஹோகெ ப்ராணனீகுவேவீகெ
ஸரஸிருஹபவ நினகெ புண்யாக்ரகண்ய ॥11॥

அகட க்ரூரஹ்ருதய நினகக்ரூராபிதவேகெ
ஸுகதி நம்மய கண்கெ கோசரன நந்தஜன
அகருணியே நினோய்வெ ப்ராணாதன ஸேவே
நிகிள ஸகியரிகெல்ல துர்லபாய்தல்ல ||12

ஸ்ருஜன ஸதனவனு கண்டரு மக்களார்யரனு
த்யஜிஸி மதுஹரன தாஸியராகி இஹேவு
வ்ரஜபனணுகன அஸ்ய லேஶ ஸௌந்தர்யஹாஸ
ரஜனியலி ஸகியரிகெ துஷ்டியஹுதாகெ ॥13॥

ஹரிய ஸுஹ்ருத்யங்க க்ஷணமாத்ர தாளதிஹ
தருணியரு பளலுதிரெ தோருவ முராரி
பரமகருணாபாங்க நோடதெம்முந்தரங்க
ஹருஷஸுதெயொளகத்தி ஹொரெவனு தயாப்தி ॥14॥

நகரதபலெயரு ஹாஸாஸ்யலஜ்ஜாங்கிதரு
ஜகத்பதிய கண்டு ஸௌந்தர்யஸுதெயுண்டு
மிகிலு ஹஸிதிஹ நேத்ரக்ஹப்பவப்புது ஸத்ய
ஸுகுணேரிகெ முகுந்தாபாங்கதிந்தொலித ॥15॥

மடதியர ப்ரூவிலாஸகெ மெச்சி நோடத ஹாஸ
கடலொடெய காம்ப வஶவனு மாடிகொம்ப
பிடரு ம்ருகனேத்ரெயரு க்ருஷ்ண பாவுகெயரு
படவரு நம்மெடெகேகெ பஹனெம்ப பயகெ ॥16॥

மஹோத்ஸவவாகிஹுது மதுராபுரத மார்கதலி
பஹனு முனிஜனத்யேய ப்ரஹ்மஸ்மரய்ய
பஹுஜனரு நோடுவரு பூண்யபலகெணெயில்ல
ஶ்ரீஹரியு நமகெ தூராத ஸிரினல்ல ॥17॥

தாஶார்ஹ வ்ருஷ்ணி ஸாத்வதாந்தக போஜஜாதியரு
ஏஸேஸு ஜன்மஜன்மகள புண்யபலகூடி
ஈஶனனு காம்புவரு இந்து நிஜ ஸ்நேஹதலி
ஈ ஸசிவனேகே நமக்வைர்யாத ஸுகெ || 18

ஈ க்ரூர கர்மவனு மாடிதனு கட நம்ம
சக்ரிய வியோகிஸிதனீக அத்யதர்ம
அக்ரந்திஸிதவனிகெ அஜ்ஞலோகவு கரெது
தக்ரூரனெம்ப வாகு ஸாகு பலு போகு ॥19॥

ப்ரீயாத் ப்ரீயன அகலிஸிதவனிகதி பாப
தயார்த்ர ஹ்ருதய ஶூன்யனிகெ பாப
ஸ்த்ரீயர ஸுதுக்கவனு நோடுவவனிகெ பாப
ஆயாஸபடிஸே பாஹோதவகே பாப ॥20॥

பண்டியனு ஹுடுவரு கோவளரு துர்மதரு
உண்டுட்டு ஸொக்கிஹரு ஸசிவனில்லி பரலு
ஹிண்டு ஹிரியரு உபேக்ஷிபரு தெய்வப்ரதிகூல
புண்டரீகாக்ஷன ஒலுமெ கொரதெயனரிது ॥21॥

நடெயிரஸியரிர நிவாரிஸுவ அச்யுதன
ஸடியேனு ஜனதஞ்ஜிகேகெ வ்ருத்தரது
கடலொடெயனடிகளல்லி த்ருடபக்தியிரகவிரெ
பிடனு வேணுகோபால மடதியரனெல்ல ॥22॥

நிமிஷ க்ருஷ்ணாச்யுதன வியோக ஸ்மரவேக
ரமெயரஸநுக்ரஹவு குந்தாயிதெமகெ
தமோவைரி ஆஸ்தங்கிரிகெ ஸாகெ கோபால
சமகூடி கோதூளிலிப்தகுந்தளனு || 23

கமனியவக்த்ர தேனுகள மத்யதி தோர்வ
கமளலோசன வேணுவன்னு நாடிஸுவ
ரமணீயபாங்கதிம் ருசிரஸ்மிதஹாஸதிம்
ரமணீயர மனோரதவ பூரெயிப யதுப ॥24॥

சித்தஜனய்யன மகுகுளு நகெ ஸுகடாக்ஷ
நேத்ர ம்ருதவனுணதெ இஹுதாவ பக்ஷி
ஹெத்தவர மரெதெவாதன ஸ்நேஹதிம்பினலி
நித்யக்ஷணகள நாவு களெவ பகே ஹேகே ॥25॥

ஹீகெந்து கோவியரு விரஹதலி காதரரு
யோகேஶ்வரீஶ்வரங்க்ரிகமலமதுபரு
நீகிதரு லஜ்ஜெயனு மௌனினிகரதவோலு
ஶ்ரீகோபதி புவனனாதன ஸதியரு || 26

ரோதிஸிதர் தீனஸ்வரரஸதலர்திதராகி
மாதுரிகெ ப்ரியதமனு போகலாகி
ஶ்ரீதாம தாமஸக கிருஷ்ண கோபதியெந்து
ஈதேஹ ப்ராணேந்த்ரியவு நின்னதெந்து || 27

கெலதெயரிகெ துக்கராத்ரி ஹோயிது அனக
நளினனகஸுதய க்ரியெயக்ரூர முகிஸி
அலஸதெ ரதகெ தேஜிய ஹூடெ நந்த பண்டி
களிகெ அனுடுஹகளன்னு ஹூடி ஹோரிஸி || 28

அரஸகெ உபாயனவ கொடுவ கவ்யாம்ருதவ
தரிஸி கொடகள்னு தும்பிஸித ஶகடகள
ஹருஷமிகிலாகி கோபளெரு ஹேரிதரு ஸலெ
பிரிது துக்கிதராதரபலேரம்மிதரு || 29

முகத களெகுந்தெய்தி பந்து நிந்தரு ப்ராண
ஸக நம்ம கரெதொய்வனெம்பாஸெவிடிது
ஸகியரதி ரோதிஸலு ஸந்தெயிஸிதனு வார்ஷ்ணி
துக்கிஸதிரி ஶீக்ர பஹெனெந்தனு முகுந்த || 30

ரதத்வஜவு கணெ தோர்வனகபலெயரு மத்தெ
ரதரஜவு காம்பனக ஹோகி ஹிந்திருகி
ரதிபதியபிதனாஶெ நைராஶ்ய நமகெந்து
அதிக்லேஶதலி அந்து பந்தர் மனனொந்து || 31

ரதசரணதரன  லாவண்யரூப த்யான
மதிகெ நிலுகிஸுத கண்ணீர மளெகெரெவுத
வ்யதித ஹ்ருதயரு திருகி பந்தரு வ்ரஜக்காகி
ஸதத ப்ரியன சேஷ்டெ ஸலெ ஸுகுண கோஷ்டி || 32

அதி மஞ்ஜுள ஸ்வரதி பாடுவரு நோடுவரு
ஸதியரு தம்ம ஹ்ருதயகமலதல்லிட்டு
இதர விஷய மரெது ஜரிது அஹம்பாவ
அதிக்ரமிஸி முகுதர ஸ்வபாவதபலெயரு ॥33॥

ஒப்பிதரு ஜீவன்முக்த ஹரிபக்தரு
இப்பரல்யனவரத ஹரியகுண சிந்தனெய
தப்பரரெகளிகெ பகவஜ்ஜனரு ஸஜ்ஜனரு
ஸ்ரீப்ரியன ப்ரியரு நெனெவரகஹரரு || 34

ரதவ தூவாளிஸித வாயுவேகத்யக்ரூர
மதிவந்த ஹரிபலர ஸஹ யமுனெகெய்தி
ரத நிலிஸி தருமூலதிளிதரச்யுத பலரு
ஆதுள நிர்மலஜல ஸேவிஸி குளிதரு || 35

ரததீ உபயதரிரலு ஸ்நானகெய்தித பேக
அதி அகமர்ஷண மாடலதுபுதவ
ஸதத நோடுவ ப்ரஹ்ம ஸனாதனப்யாஸதலி
மதிகெ ஹரி ஹலி தோர்தராஸ்சர்யதலி || 36

ஹொரகெ ரததல்லித்தரெந்து தோரிதரில்லி
பரம கௌதுகவெந்து மேலெ நோடிதனு
ஹரிபலர்யதாஸ்திதிய கண்டு ஸலெ முளுகெ அக
மருஷணதி தோரிதரு பரம பாவனரு || 37

ஸுரோரகரு ஸித்தசாரணரு கை முகிது தம்ம
ஶிரவ பாகிஸி பஹள ஸ்தோத்ர மாள்பதனு
ஶிரஸகணஸஹஸ்ர ஶ்வேதஶ்ருங்காபமணி
கிரீட குண்டல கர்ண நீலாம்பரன்ன || 38

ஶரீரதாஸனதல்லி குளிதிர்த்த ஸ்யாமலன
வரபீதாம்பர சதுர்புஜ அப்ஜாம்பகன
சிரருசிர நகெமொகன ப்ரஸன்னாவலோகனன
அருணாதர ஸுகபோல ஸத்கர்ணயுகன ||39||

வரபூவிலாஸன்ன கம்புகண்டாந்விதன
ஸிரி த்ரிவளிநாபிய கபீர ப்ருஹத்புஜன
பரிதபுவநோதர விஸ்தரவக்ஷ ஸுநிதம்ப
கரபோரு த்வயஜாநுஜங்காந்விதன ||40||

அருண நகாங்குலி தீப்த சரணவாரிஜயுகள
ஸரஸிஜாகுஶவஜ்ரத்வஜயவாங்கிதத
பரமபததளன பாவநகர ஜகத்ரயன
ஸுரமௌனி ஹ்ருதயபீடதலி ராஜீவன ||41||

கிரீட குண்டல கடக வரகேயூராமோக பதக
சிரரத்னகடிஸூத்ர கௌஸ்துப ப்ரஹ்மஸூத்ர
ஸிரிவத்ஸ வைஜயந்திஹார நூபுர மாலா-
தரன அரெ(ரி?)ஶங்ககதாம்புஜகர ஸ்வஸுந்தரன ||42||

அஜவிவாஹிபஸுரப பூஜீப பதாப்ஜ ஜய
விஜய நந்தஸுனந்த பார்ஷதான்விதன
த்விஜ முனிஸுராத்ய ப்ரஹ்லாத நாரதராதி
ஸுஜனமோஹர ஸேவ்யநஹன குணகஹன ||43||

**ஸ்வயஶோவசன கீர்த்னெ மாடுவன மன்னிஸுவ**
**ஶ்ரீயு புஷ்டி ஶாந்தி மொதலாத ஶக்தியரு**
**பய பக்தியந்திஹரு ஆபன்ன பாவுகரு**
**ஶ்ரீயபதிய மஹிமையனு கண்டநக்ரூர ||44||**

**அபரிமித மஹிமையனு நோடி விஸ்மிதனாத**
**ஸுப்ரேமலோசனதி பாஷ்பவன தந்த**
**தா பரவஶதி அங்கருஹபுளகிதநாகி**
**ஶ்ரீவரப்ரஹ்மன மஹத்வவனு திளித ||45||**

**அத்யந்த பக்தியலி கத்கதோச்சாரதலி**
**வ்யக்தவாகது ஸ்தோத்ர மாடுவெனென்னலு**
**சித்தத்ரவதலி நமிஸி தைர்யவனு மாடி ஹரி-**
**ஸ்தோத்ர மாடித அஞ்ஜலிபுடதி நிந்து ||46||**

**தினதினத ஸ்நானதலி ஆஹிபதிய காம்பனிம்-**
**தினதினதி அனந்தாஸனன கண்டா**
**கனஹருஷதலி ஸ்தோத்ர மாடலனுவாத சித்**
**குணவார்தி ஆஶ்ரிதர ஸுரபூருஹன்ன ||47||**

**பரதேவதெய கொல்லிஸுவெநெந்து கரெஸிதனு**
**பரமபாபாத்ம போஜப ஸசிவனட்டி**
**பரம பாகவதரிகதர்மவே தர்மவெந்து**
**வர தானபதிகொலிது ஹரிதோர்த்தனு தன்ன ||48||**

**ப்ரஸன்னவெங்கடபதிய பாதாஶ்ரிதக்ரூர**
**விஷம ப்ரதிகம்ஸன ஆஜ்ஞெயலி வ்ரஜகெ**
**பிஸஜநாபன தருஶனக்கெ பந்து கண்ட கட**
**அஸமமஹிமெயனு பாகவத ஶிரோரத்ன ||49||**

ஶ்ரீரமணன், ஶ்ரீகிருஷ்ணனுக்கு தானபதியான அக்ரூரர் ப்ரியன் ஆனார். ஹரிதாஸர்களுக்கு எப்போதும் வெற்றியே கிடைக்கிறது. ஶ்ரீஹரி த்வேஷிகளுக்கு பயமே உண்டாகிறது. || ப

ஜகத்தின் ஆதி, அந்தம் ஆகிய அனைத்தையும் அறிந்தவன் லக்ஷ்மிகாந்தன். ஆனாலும், கம்ஸனின் கதைகளை அக்ரூரரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டான். அக்ரூரர் மிகவும் விஸ்தாரமாக அந்த துஷ்டனின் செயல்களை கூறினார். உலகிற்கு தலைவனான, முதல்வனான, ஶ்ரீகிருஷ்ணன் அவற்றை புன்னகை கூடிய முகத்துடன் கேட்டு தெரிந்து கொண்டான். || 1

பிறகு, அக்ரூரர், தனக்கு கொடுக்கப்பட்ட அழகான மஞ்சத்தில் படுத்து சுகமாக உறங்கினார். ஶ்ரீஹரியின் பாதங்களை அடைந்தவர்களுக்கு அனைத்தும் கிடைக்கின்றன. பக்தி பாக்கியத்தைத் தவிர அவர்கள் வேறு எதையும் வேண்டாதவர்கள். ஹரிபக்தர்கள் என்னும் குழுவானது, முக்தி ஒன்றையே கதி என்று வேண்டுபவர்கள். || 2

கம்ஸன், யது வம்சத்தில் வந்தவர்கள் அனைவருடனும் எதிரி பாவத்தைக் கொண்டிருக்கிறான். ஶ்ரீகிருஷ்ணனைக் கொல்லும் சிந்தனையில் இருக்கிறான். நாரதர் மூலமாக தன்னுடைய பிறவி ரகசியத்தைக் கேட்டவன் என்று அக்ரூரர் கம்ஸனைப் பற்றி கூறிய அனைத்தையும், ஸுப்ரஸன்னனாக இருப்பவனான ஶ்ரீகிருஷ்ணன் கேட்டான். || 3

அரசனான கம்ஸனின் ஆணையைப் பற்றி அக்ரூரர் நந்தனிடம் கூறினான். பசுக்கள் மற்றும் ஜீவர்களின் தலைவனான ஶ்ரீகிருஷ்ணன், தாமரையின் நண்பனான ஸூர்ய உதய காலத்தில்,

நெய், பால், தண்ணீர் ஆகியவை நிரம்பிய பாத்திரங்களை, கோபாலகர்கள் மூலமாக, ஒளிர்வதான வண்டிகள் முழுக்க ஏற்றி விட்டான். || 4

நாம் இந்த பரிசுகளை கொண்டு போய், மதுரையில் இருக்கும் போஜ ராஜாவான கம்ஸனுக்கு கொடுப்போம். அந்த வில் விழாவைப் பார்ப்பதற்கு, பல்வேறு தேசங்களிலிருந்து பல பேர் வந்திருக்கின்றனர். நாமும் போஜனின் ஆப்தர்களே ஆகையால், நாமும் அங்கு போவோம் - என்றார் அக்ரூரர். || 5

இவ்வாறாக, விரைவில் ஸ்ரீகிருஷ்ணன் மதுரைக்கு புறப்படுகிறான் என்ற செய்தியைக் கேட்டு, கோபியர்கள் கவலைப்பட்டனர். மனம் கலங்கினர். ஸ்ரீகிருஷ்ணன், பலராமன் இருவரையும் மதுரைக்கு அழைத்துச் செல்வேன் என்று இந்த அக்ரூரர் ஏன் தான் வந்தாரோ? - என்றனர். || 6

அவர்களது மனம் கலங்கி, அந்த நொடியிலேயே முகத்தில் களையை இழந்து, வீடு, குடும்பம் ஆகியற்றை விட்டு, சித்தம் கலங்கியவர்களாக, அருகில் யாரையும் காணாமல், அவிழ்ந்த ஆடைகளை கவனிக்காமல், அந்த கோபியர்கள் அனைவரும் தங்களின் பேச்சுக்களையே மறந்தனர். || 7

விஷயங்களின் மேல் இருந்த ஆசைகளை விட்டு, கிருஷ்ணனிலேயே த்யானத்தை வைத்து, ப்ரஹ்ம தேவரின் தந்தையின் நட்பு, அவனின் புன்னகை பூத்த முகம் ஆகியவற்றை சந்த்ரமுகியர்களான கோபிகைகள் நினைத்தனர். கண்களில் கண்ணீர் விட்டவாறு, இணையற்றதான விரக தாபத்தில் வெந்து, ப்ராந்தர்கள் ஆயினர். || 8

ஸ்ரீஹரியின் அர்ச்சனை, அழகு, நட்பு, பாசம், அந்த வரங்களைக் கொடுப்பவனின் சரித்திரம் ஆகியவற்றை திரும்பத்திரும்ப நினைத்தவாறு, அழகான தன் கண்களிலிருந்து கண்ணீர் விட்டவாறு, மான் போன்ற கண்களைக் கொண்டவர்கள், தம்மையே தாம் மறந்து, அனைவரும் தம்மையே தாம் நொந்து கொண்டனர். || 9

ஹே விதியே (ப்ரஹ்ம தேவரே), இது சரியல்ல. உன்னிடம் கருணையே இல்லை. நண்பனான ஸ்ரீஹரியுடன் ஸம்யோகம் செய்வித்து, இப்போது வியோகமும் செய்திருக்கிறாய். சிறு குழந்தைகளைப் போல இத்தகைய சிறு செயல்களை நீ செய்கிறாய். இது உனக்கு சரியா?. நம் சோகம் உனக்கு புரிகிறதா?. || 10

துக்கத்தில் மடிந்து மெலிந்த தேகம். தாமரைக் கண்கள். இத்தகைய பெண்களின் மனதின் கஷ்டங்களை பரிகரிப்பவனான ஸ்ரீஹரி புருஷோத்தமன் எம்மை விட்டுச் சென்றால், நாம் ப்ராணனையே விட்டுவிடுவோம். தாமரையில் பிறந்தவரான ப்ரஹ்மதேவரே, புண்ணியங்களை செய்தவர்களின் சிறந்தவரே. || 11

துன்பம் தரக்கூடிய க்ரூர ஹ்ருதயம் கொண்ட உனக்கு, அக்ரூரர் என்ற பெயர் எதற்கு?. சுகமாக நம் கண்களுக்கு தெரிந்து கொண்டிருந்தவனான நந்தகுமாரனை, கருணை இல்லாதவனே, நீ அழைத்துச் செல்கிறாய். நம் ப்ராண நாதனின் சேவை, இப்போது இங்குள்ள தோழிகள் அனைவருக்கும் கிடைக்காமல் போகிறதே?. || 12

சொந்த மக்கள், வீடு, கணவர், மக்கள், மூத்தவர்கள் ஆகிய அனைவரையும் விட்டு, மது அஸுரனை கொன்றவனின் தாஸியர்களாக நாம் இருக்கிறோம். ஸ்ரீகிருஷ்ணன், பலராமன் இவர்களின் அழகான முகம், அதில் தெரிவதான புன்னகை, ஆகியவை இந்த பூமியில் நம் தோழியர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்து வந்தது. || 13

ஸ்ரீஹரியின் அழகான ஹ்ருதயம் (முகத்தினை) ஒரு நொடிகூட விட்டுப் பிரிவதை தாங்காத பெண்கள் நாம். ஆகவே, முராரி தன்னுடைய முகத்தை எங்களுக்கு காட்டிக் கொண்டிருந்தான். அவன் பரம கருணைக்கடல். அவன் தன்னுடைய பார்வையால், எம்முடைய அந்தரங்கத்தினை மகிழ்ச்சிக் கடலில் மூழ்கடித்தான். அவனே கருணைக் கடல். || 14

இந்த ஊர் பெண்கள், புன்னகை கொண்ட முகம், வெட்கத்தைக் கொண்டவர்கள். ஜகத்பதியைக் கண்டு அவனுடைய அழகு என்னும் அமிர்தத்தை பருகியவாறு இருப்போம். அதுவே நமக்கு மிகவும் அதிகமான மகிழ்ச்சி. எம் கண்களுக்கு பண்டிகை. இது சத்தியம். அந்த முகுந்தன், நம் நற்குணத்தைப் படைத்த பெண்களுக்கு, மிகவும் கருணையுடன் வந்து தரிசனம் அளித்தான். || 15

இந்த பெண்களின் புருவ அழகிற்கு (முக அழகிற்கு) மெச்சியவாறு, பாற்கடலில் படுத்திருப்பவன், தன் பார்வையை நம் மேல் வீசுவான். நம்மை அவன் வசம் ஆக்கிக் கொள்வான். மான் போன்ற கண்களை உடைய அந்தப் பெண்கள், கிருஷ்ண பக்தி கொண்டவர்கள், அவனை விட மாட்டார்கள். ஏழைகளான நம் அருகில் அவன் ஏன் வரப்போகிறான்? என்று இப்போது நினைக்கிறார்கள். || 16

மதுரைக்குச் செல்லும் வழியில் மிகப்பெரிய திருவிழாவாக இருக்கப் போகிறது. முனிவர்களால் வணங்கப்படுபவனான, ப்ரஹ்ம, ருத்ரர்களால் வணங்கப்படுபவனான ஸ்ரீகிருஷ்ணன் வருகிறான் என்று. பற்பல பேர் பார்ப்பார்கள். அவர்களின் புண்ய பலன்களுக்கு இணையே இல்லை. ஸ்ரீஹரி, ஸ்ரீதேவியின் தலைவன், நம்மை விட்டு தூரம் செல்லப் போகிறான். || 17

வ்ருஷ்ணி, ஸாத்வ குலத்தில் வந்தவனான, துஷ்டர்களை கொல்பவனான ஸ்ரீகிருஷ்ணன். போஜ நாட்டு மக்கள், தங்களின் பற்பல ஜென்மங்களில் செய்த புண்ய பலன்களால், இந்த ஈமனை, உண்மையான நட்பில் (பக்தியில்) காண்பார்கள். இந்த தலைவன் (அக்ரூரர்) ஏன் நம்முடைய சுகத்திற்கு இன்று எதிரி என்று ஆனார்?. || 18

அக்ரூரர் இன்று இந்த க்ரூர கர்மத்தை செய்திருக்கிறான், பார். நம் சக்ரியை (சக்ரத்தை பிடித்தவனை) நம்மிடமிருந்து பிரித்திருக்கிறான். இது தர்மம் அல்ல. இவ்வாறு நம்மை அழ வைத்தவனை, கீழ் லோகங்களே அழைக்கின்றன. உனக்கு அக்ரூரன் என்னும் பெயர் போதும். அது உனக்கு இருப்பது வீண். || 19

நம் அனைவரிலும் மிகவும் ப்ரியமாக இருப்பவனை, நம்மிடமிருந்து பிரித்தவனுக்கு, அதி பாவம், தாரித்ர்யமே வரும். இதயமே இல்லாதவனுக்கு பாவம் வரும். பெண்களின் இத்தகைய சுக, துக்கங்களை கவனிக்காதவனுக்கு பாவம் வரும். சோர்வடைந்தவர்களுக்கு தோள் கொடுக்காதவனுக்கு பாவமே வரும். || 20

கோபாலகர்கள், கர்வம் அற்றவர்கள், தங்களின் வண்டிகளில் புறப்பட்டு விடுவார்கள். கம்ஸனின் ஆட்கள், இப்போது உண்டுவிட்டு மயக்கத்தில் இருக்கிறார்கள். அக்ரூரர் இங்கு வரும்போது, இங்கிருக்கும் மூத்தவர்கள் அனைவரையும் புறக்கணித்துவிட்டு அவர்கள் புறப்பட்டு விடுவார்கள். இத்தகைய தெய்வத்திற்கு எதிரான ப்ரதிகூலங்கள் (கஷ்டங்கள்), நமக்கு ஏன் ஆகிறது என்றால், நமக்கு தாமரைக் கண்ணனின் அருள் தமக்கு குறைந்திருக்கிறது என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். || 21

ஹே பெண்களே, நடங்கள். அச்யுதனின் விலகலால் (இன்மையால்) உங்களுக்கு என்ன துன்பம் நேர்கிறதோ, அதனை அவனே பரிகரிப்பான் என்று பெரியவர்கள் கூறினார்கள். பாற்கடலில்

படுத்திருப்பவனின் பாதங்களில், த்ருட பக்தியை வைத்திருந்தால், அவன் நம்மை விடமாட்டான். வேணுகோபாலன் - என்று அங்கிருந்த பெண்கள் அனைவருக்கும் கூறினார்கள். || 22

கிருஷ்ண அச்யுதனின் பிரிவு என்பது ஒரேயொரு நிமிடம் ஆனாலும், அவர்களில் இருந்த காமனின் வேகம் அவர்களை தாக்கியது. ரமாதேவியின் தலைவனின் அருள் இப்போது எங்களுக்கு குறைந்திருக்கிறது. தமஸ்ஸிற்கு வைரியான, பசுக்களின் தூசிகள் தன் தேகத்தில் அப்பியிருக்கும் கோபாலன், கம்ஸனின் ஊருக்கு செல்கிறான். || 23

அழகான தேகம், அவன் எப்போதும் பசுக்களின் நடுவிலேயே இருப்பான். தாமரைக் கண்ணன். வேணுவை எப்போதும் ஊதுவான். மிகவும் அழகாக, ஒளிர்வதான, புன்னகையுடன், பெண்களின் மனோரதங்களை அந்த யது குலத் தலைவன் எப்போதும் நிறைவேற்றுவான். || 24

மன்மதனின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணனின் இளம் குறுநகை, அவனுடைய கடாக்ஷம் நிறைந்த பார்வை என்னும் அமிர்தத்தை உண்ணாமல் இருந்த சமயங்களில், நான் என் பெற்றவர்களையே மறந்தேன். அவனுடைய ஸ்னேஹத்தின் இனிமையில் (அருகாமையில்) நாங்கள் தினமும், ஒவ்வொரு நொடியும் கழித்திருந்தோம் - இந்த அழகினை நான் எப்படி சொல்வேன்?. ||25

இவ்வாறாக, கோபியர்கள் விரஹ தாபத்தில் துன்பப்பட்டனர். யோகேஶ்வரர்களின் ஈஶ்வரனின் பாதகமலங்களை தேனீ போல சுற்றிக் கொண்டிருந்தனர் அவர்கள். அவர்கள் தம் வெட்கத்தை விட்டனர். முனிவர்களின் கூட்டத்தினைப் போல இவர்கள் ஸ்ரீகிருஷ்ணனையே சுற்றி வந்தனர். இவர்கள் ஸ்ரீகோபதியான ஜகன்னாதனின் ஸதியர்கள். || 26

தீனமான ஸ்வரத்துடன் இவர்கள் அழுகின்றனர். தமக்கு பிடித்தமானவன் மதுரைக்கு செல்கிறான். ஸ்ரீகிருஷ்ணனே, நமது நண்பனே, கிருஷ்ணனே, கோபதியே என்று அழுகின்றனர். இந்த தேகம், ப்ராண இந்த்ரியங்கள் அனைத்தும் உன்னுடையது என்று அழுகின்றனர். || 27

சிலருக்கு துக்கத்திலேயே இரவு கழிந்தது. தாமரையின் நண்பனான சூரியனின் உதயத்தில், தன் காலை க்ரியையைகளை முடித்து அக்ரூரர், உடனடியாக தன் ரதத்திற்கு குதிரைகளை பூட்டினார். அப்போது நந்தகோபனும், எருதுகளை வண்டிகளுக்கு பூட்டுகிறார். || 28

அரஸனான கம்சனுக்கு பரிசுகளை கொடுப்பதற்காக பால் பொருட்களை வரவழைத்து அவற்றை குடங்களில் நிரப்பினான். அவற்றை வண்டிகளில் ஏற்றினான். கோபாலகர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வண்டிகளை கட்ட, அபலையர்களான கோபிகைகள் மிகவும் துக்கம் கொண்டு அழத் துவங்கினர். || 29

முகத்தில் களை இழந்து அந்தப் பெண்கள் வந்து நின்றனர். ப்ராண ஸகனான ஸ்ரீகிருஷ்ணன், நம்மை அழைப்பான் என்ற நப்பாசையில் வந்து நின்றனர். கோபிகைகள் அழ, வார்ஷ்ணி குலத்தில் வந்தவனான ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை சமாதானம் செய்தான். முகுந்தன், அவர்களிடம் கவலைப்படாதீர்கள். விரைவில் நான் திரும்பி வந்துவிடுவேன் - என்றான். || 30

ரதத்தின் த்வஜம் தெரியும்வரை அந்தப் பெண்கள் அதையே பார்த்துக் கொண்டிருந்தனர். மறுபடி ரதத்தின் காலடிகளை (தடங்களை) சென்று பார்த்துவிட்டு திரும்பி வந்து, ரதியின் பதியான மன்மதனின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணன் மேல் தாங்கள் வைத்திருந்த ஆசை, இப்படி நிராசையானதே என்று மிகவும் கவலைப்பட்டு, அன்று மிகவும் மனம் நொந்தவாறு பேசிக் கொண்டிருந்தனர். || 31

சக்ரதரனான ஸ்ரீகிருஷ்ணனின் ரூப லாவண்யத்தினை த்யானத்தை மனதில் நிறுத்தியவாறு, கண்ணீர் மழை பொழிந்தவாறு, கவலைப்பட்ட ஹ்ருதயம் கொண்ட அந்தப் பெண்கள் தம் க்ராமத்திற்கு திரும்பி வந்தனர். எப்போதும் தமது ப்ரியனான ஸ்ரீகிருஷ்ணனின் செயல்களை நினைத்தவாறு, அந்த நற்குணங்களைக் கொண்ட பெண்களின் கோஷ்டி இருந்தது. || 32

மிகவும் இனிமையான ஸ்வரத்தில் பாடுகிறார்கள். ஸ்ரீகிருஷ்ணனை அந்தப் பெண்கள் தம் இதய கமலத்தில் வைத்து பார்க்கிறார்கள். மற்ற அனைத்து விஷயங்களையும் மறந்து, அஹம் (நான்) என்னும் கர்வத்தை மறந்தனர். அந்தப் பெண்கள், முக்தர்களின் ஸ்வபாவத்தையே மீறியவர்களாக இருந்தனர். ||33

அந்த ஹரிபக்தர்கள், ஜீவன் முக்தர்கள் எனப்பட்டு, எப்போதும் ஸ்ரீஹரியின் குண சிந்தனையை செய்தவாறு அங்கேயே இருந்தனர். அரை நொடிகூட விடாமல் அவன் சிந்தனையை செய்தனர். அவர்கள் பகவத் ஜனர்கள். ஸஜ்ஜனர்கள். ஸ்ரீதேவியின் ப்ரியனின் ப்ரியர்கள். தங்கள் துன்பத்தினை விட்டவாறு, அவனையே நினைத்துக் கொண்டிருந்தனர். || 34

அக்ரூரர் ரதத்தினை வாயு வேகத்தில் ஓட்டிச் செல்கிறார். மதிவந்தர்களான ஸ்ரீஹரி மற்றும் பலராமர்களுடன் தான், யமுனைக்குச் சென்று, ரதத்தை நிறுத்தி, ஒரு மரத்தடியில், அச்யுத மற்றும் பலராமர்கள் இருவரும் இறங்கி, மிகவும் பவித்ரமான, தூய்மையான அந்த நதி நீரை வணங்கி மறுபடி தேரில் அமர்ந்தனர். || 35

ரதத்தில் இந்த இருவரும் இருக்கையில், அக்ரூரர் ஸ்னானத்திற்காக நதியில் இறங்கினார். தண்ணீரில் மூழ்கி அகமர்ஷண ஸூக்தத்தை அவர் கூறுகையில், அங்கு ஒரு அற்புதத்தை அவர் காண்கிறார். தினமும் செய்யும் பயிற்சியில் அக்ரூரரின் மதிக்கு அன்று ஸ்ரீஹரி, பலராமன் என்று இருவரும் தெரிந்தனர். அவர் மிகவும் வியப்படைந்தார். || 36

வெளியே ரதத்தில் இருந்த ஸ்ரீகிருஷ்ண பலராமர்கள் இங்கு தண்ணீரில் தெரிந்தனர். என்ன இது வியப்பு? என்று நினைத்து, அக்ரூரர் தண்ணீரிலிருந்து வெளியே வந்து மேலே பார்க்கிறார். அங்கு ரதத்தில் ஹரி பலர்கள் இருவரும் அமர்ந்திருப்பதைக் கண்டு, மறுபடி மூழ்கி பார்த்தால், அந்த பரம பவித்ரமானவர்கள், அங்கும் (தண்ணீரிலும்) மறுபடி தெரிந்தனர். || 37

தேவர்கள், ஸித்த சாரணர்கள் ஆகியோர் அங்கு கைகளை குவித்தவாறு, தம் தலையை வணங்கி, மிகவும் பக்தியுடன் ஸ்தோத்ரம் செய்வதை பார்க்கிறார். அங்கு ஆயிரம் தலைகளைக் கொண்ட, தங்கமயமான சிகரங்கள் உள்ள ரஜத பர்வதத்தைப் போல ஒளிர்ந்து கொண்டிருக்கும் ஆதிஸேஷனின் சரீரத்தில், கிரீட, குண்டலங்களைக் கொண்ட காதுகளுடன், பீதாம்பரத்தை உடுத்தியவாறு படுத்திருந்த கிருஷ்ண மூர்த்தியை அக்ரூரர் கண்டார். || 38

இவ்வாறு ஆதிஸேஷனின் சரீரம் என்னும் ஆஸனத்தில் அமர்ந்திருந்த கார்மேகக் கண்ணனை, பீதாம்பரம் உடுத்தியவனை, சதுர்புஜங்கள். தாமரைக் கண்கள். அழகாக ஒளிர்வதான குறுநகை. மிகவும் மகிழ்ச்சியுடன் பார்ப்பவன். சிவந்த முகம். தோஷங்கள் அற்ற கன்னங்கள். இரு அழகான காதுகள் கொண்டவனை அக்ரூரர் பார்த்தார். || 29

சிறந்த புருவங்களை கொண்டவன். சங்கு கழுத்து. மூன்று ரேகைகளைக் கொண்ட நாபி. கம்பீரமான பரந்த தோள்கள். உலகத்தையே அடக்குவதான பெரிய வயிறு. விஸ்தாரமான கண்கள். தோஷங்கள் அற்ற பின்புறம். சிறு குன்றினைப் போல கைகள். இரு அழகான கால்களைக் கொண்டவனை அக்ரூரர் பார்த்தார். || 40

ஒளிர்வதான நகக் கண்கள். தாமரை போன்ற சிவந்ததான இரு சரணங்கள். தாமரை, அங்குஶ, வஜ்ர, த்வஜ, யவ (அன்னத்தைக் குறிப்பதான ஒரு ரேகையின் பெயர்) ஆகிய சின்னங்களைக் கொண்ட பாதங்கள். மூன்று உலகங்களையும் பவித்ரம் ஆக்குபவன். தேவர்கள், முனிவர்கள் ஆகியோரின் ஹ்ருதய பீடத்தில் வீற்றிருப்பவனை - அக்ரூரர் பார்த்தார். || 41

கிரீடம், குண்டலம், கங்கணம், ஒளிர்வதான கேயூரங்களைக் கொண்ட பதக்கம், தங்கமயமான ரத்னங்களால் கோர்க்கப்பட்ட அரைஞாண் கயிறு, கௌஸ்துபம், ப்ரஹ்ம ஸூத்ர, ஸ்ரீவத்ஸ, வைஜயந்திமாலை ஆகியற்றை தரித்திருக்கிறான். நூபுரங்களை அணிந்து, மாலைகளை தரித்தவனை, சக்ர, சங்கினை தரித்த தோள்களைக் கொண்டவனை, தானே தனக்கு அழகானவனை, அக்ரூரர் பார்க்கிறார். || 42

ப்ரஹ்ம தேவர், ருத்ர, ஸேஷ, இந்த்ரன் ஆகியோர் பூஜிக்கும் பாத கமலங்கள். ஜய, விஜய, நந்த, ஸுனந்த ஆகிய த்வாரபாலகர்கள் அருகில் நிற்கிறார்கள். ப்ராஹ்மண, முனிவர்கள், தேவர்கள், ப்ரஹ்லாதன், நாரதர் ஆகிய ஸஜ்ஜனர்களின் குழுக்களால் வணங்கப்படுபவன். அனந்த நற்குணங்களைக் கொண்டவன். || 43

பகவந்தனைப் பற்றி வசனங்கள், கீர்த்தனைகளை பாடுபவர்களை அருள்கிறான். அவர்களுக்கு செல்வம், ஆரோக்யம், அமைதி ஆகிய சக்திகளை அருள்கிறான். அவர்கள் பயபக்தியுடன் ஸ்ரீஹரியின் பக்தர்களாக இருக்கின்றனர். இவ்வாறான ஸ்ரீபதியின் மகிமைகளை அக்ரூரர் பார்க்கிறார். || 44

இவ்வாறான அபரிமிதமான ஸ்ரீஹரியின் மகிமைகளைப் பார்த்து, மெய்மறந்த, அன்பு நிறைந்த பார்வையுடன் ஆனந்தக் கண்ணீர் விடுகிறார் அக்ரூரர். பரவசம் கொண்டு, புளகாங்கிதம் கொள்கிறார். ஸ்ரீபரப்ரஹ்மனின் அபாரமான மகிமைகளைப் பற்றி அறிகிறார் அக்ரூரர். || 45

அத்யந்த பக்தியுடன் தழுதழுத்த குரலுடன் இருக்கையில், அவரது வாயிலிருந்து ஸ்தோத்ரங்கள் வெளிவரவில்லை. நான் என்ன செய்வது? என்று, மனதிலேயே ஸ்ரீஹரியை வணங்கி, மன தைரியத்தைக் கொண்டு, ஸ்ரீஹரியின் ஸ்தோத்ரங்களை, கைகளை குவித்தவாறு நின்று செய்யத் துவங்கினார் அக்ரூரர். || 46

இதுவரை தினம்தோறும் ஸ்னானம் செய்யும்போது, ஸேஷதேவரை மட்டுமே கண்டு வந்தார். ஆனால் இன்றோ மகிழ்ச்சியுடன் அதில் வீற்றிருந்த ஸ்ரீகிருஷ்ணனையும் கண்டார். அந்த அபாரமான மகிழ்ச்சியில் அவனைக் குறித்து ஸ்தோத்ரம் செய்யத் துவங்கினார். அந்த ஸ்ரீகிருஷ்ணன், சித் ஸ்வரூபன். குணங்களின் கடல். தன் பக்தர்களை, தேவர்களை காப்பவன். || 47

இவ்வாறு கம்ஸன், பரதேவதையான ஸ்ரீகிருஷ்ணனை கொல்வேன் என்று அவரை வரவழைத்தான். அவன் பரம பாபாத்மாவான போஜ அரஸன் கம்ஸன். இதற்காக ஸ்ரீகிருஷ்ணனை அழைக்க வந்தவரான, பரம பாகவதருக்கு, அக்ரூரருக்கு இது (இவ்வாறு அழைக்க வருவது) தர்மமா?. ஆம். தர்மமே என்று கூறி, அந்த தானபதியான அக்ரூரருக்கு ஸ்ரீஹரியானவன் தன்னையே காட்டிக் கொண்டான். || 48

ப்ரஸன்ன வெங்கடபதியின் பாதங்களில் வணங்கியவரான அக்ரூரர், விஷமனான கெட்டவனான கம்ஸனின் ஆணையின் பேரில், நந்தகோகுலத்திற்கு, பத்மனாபனின் தரிசனத்திற்கு வந்து அவரைக் கண்டார். அந்த ஸ்ரீகிருஷ்ணனை, பாகவதர்களின் கிரீடமான, இணையற்ற அவனது மகிமைகளை, அக்ரூரர் கண்டார். || 49

***

**57. ராக : ஸூரடி தாள : ரூபக**

ஹிரிதுஸூக பூர்ண ஹரிய மஹிமெ நர-
ஹரிய தாஸரிகெ ஹரிய ஒலுமெ
பரமபாகவதனக்ரூர அக-
மருஷணதி ஸ்துதிமாள்ப விவர ||1||

கண்டனாஸ்சர்யவ நீரினலி பக்த
மௌண்ட கரவெரடஞ்ஜலியலி
மண்டெயனு பாகி பக்தியலி ஶ்ரீ-
புண்டரீகாக்ஷநெதிரலி ||2||

ஹே அம்புஜாக்ஷ நமோ நமஸ்தே நமோ
ஈ எரெடேளுபுவன ப்ரபோ தெ
ஶ்ரீயாதி லக்ஷ்மிநாராயண தவனா
பிய பத்மதலி பெத்த்யஜன ||3||

நீநீக பொம்மனொளு போகுவெ நா-
நானந்த ஜகவ புட்டிஸூவெ
அநாதி ஜீவர கர்மவனு நோடி
நீனெ குணத்ரயதி பந்திஸூவெ ||3||

ஸர்வேந்த்ரியார்ததிகார கொட்டே [தீர]
ஓர்வமுக்ய ப்ராணனிகெ
ஸர்வ ஸூரர தன்னிச்ச்யெலி இட்டே
ஸர்வேஸ்வர நின்ன ஆஜ்ஞெயலி ||4||

நீ நியாமக லகுமியனல்ல நின்னா
ஜ்ஞானுஸார ப்ரவர்தகரு எல்ல
ஏனேனு ஸ்வாதந்த்ர்ய ஸூரர்கில்ல ஜ்ஞா-
னானந்த ஸ்வேச்சைகலீல ||5||

நீனெல்லர ஹ்ருத்குஹதல்லிருவெ நின்ன
காணதெல்லரு ஜகத்குருவெ
நீ நின்ன மாயதி மோஹிஸூவெ ஹரி
நீனே அஜ்ஞாந கவிஸூவெ ||6||

ஶூத்தாத்மயோகிகள் யோகதலி அநி-
ருத்த காம்பரு ப்ரஸாததலி
அத்யாத்ம பூத தெய்வதலி கெலரு
வித்யோன்னதி விவித யஜ்ஞதலி ||7||

இத்து நின்னனு பூஜிஸூவரு நின-
காத்யந்த கர்மவனர்பிஸூவரு
ஶூத்தஜ்ஞானிகளு ஜ்ஞானதலி யஜ்ஞ-
பத்ததி விதியலர்ச்சிபரு ||8||

நீநேகரூப பஹுரூப திளிது
நாநா ப்ரகாரதி பஜிப
ஜ்ஞானிகளு பேதாபேததலி அர்ச்சிஸூவரு
நாநாசார மார்கதலி ||9||

**வாசாதி கர்ணகளிந்த வேத**
**வாச்யனு பராத்பர முகுந்த**
**யோசனெகெ நிலுகதானந்த எந்து**
**ஸூசிபவு உபனிஷத்வ்ருந்த || 10**

**ஹரி நின்ன பெஸர ஸுரர்கிட்டெ ஸர்வ**
**ஸுரர யோக்யதெ பதவி கொட்டெ**
**கிரிஜ நதிகளம்புதி பெரெவ பரி**
**ஸுரரிஷி பித்ருகள் தர்பணவ || 11**

**நினகோஸுக ஜ்ஞானிகளர்ப்பிபரு நின்ன**
**வினா அர்ச்சனெ அவிதியெம்புவரு**
**அனிமிஷரு நின்ன ஸேவகரு தம்ம**
**கனதெயொல்லரு பயான்விதரு || 12**

**ஸத்வ ரஜஸ்தம மூரு குணவு ஜகவ**
**விஸ்தரிஸி ஒத்யாளுதிஹவு**
**எத்தெத்தலோதப்ரோதாகி ஆ ப்ர**
**ஹ்மஸ்தம்ப பரியந்தவாகி || 13**

**நீ நியந்தார ஜககெல்ல இல்ல**
**தேனு காரண விஶ்வகில்ல**
**நினந்தர்ப்பாஹ்ய ஸ்வதந்த்ர ஆ**
**தீனவு நின்னதே தந்த்ர || 14**

**நீனக்னி முகதிந்த படெதெ நீ ப்ருத்வி**
**யனு அங்க்ரியிந்த படெதெ**
**நீனினன நேத்ரதிம் பெத்தெ நாபி**
**யிந்த அந்தரிக்ஷ ஹொத்தெ || 15**

**ரக்ஷிஸிதெ திவி தலெலிட்டு ஸஹ**
**ஸ்ராக்ஷ்யாத்யர தொளிம்பிலிட்டு**
**திக்ஷுகள ஸ்ரோத்ரதி ஸ்ருஜிஸிதெ நின்ன**
**குக்ஷியொளப்பிகள தாள்தெ || 16**

**ஹே மாருதன ப்ராணதிந்த அங்க**
**ரோமகளலி வ்ருக்ஷவ்ருந்த**
**நீமுத்தமாங்கருஹகளலி கன**
**ஸ்தோமவனு படெதெ கருணதலி || 17**

**நகபங்க்தியிந்தத்ரிகளனு பக்ஷ்ம**
**நிகரதிந்தஹஸ்ஸு ராத்ரிகளனு**
**ப்ரகடிஸி தக்ஷாத்யர ஶிஶ்னதலி வ்ருஷ்ணி**
**வ்யகுத மாடிதெ வீர்யதலி || 18**

**மர்த்ய ஜனகாப்யயனவெந்து ஏவம்**
**ரீத்யா ஸ்ருஜிஸிதாப்த பந்தோ**
**நித்யாவ்யயாத்ம புருஷோத்ம ஜீவ**
**ருத்பத்தி பாலன பராத்ம || 19**

**ஜலஜந்துகள லயவு ஜலதி அத்தி**
**கலத்ஹுளகெ லயவதே பலதி**
**நளினாக்ஷ நின்னலி ஹுட்டி ஹு**
**த்தளிது ஹோஹுது ஸர்வஸ்ருஷ்டி || 20**

அனந்த பொம்மரனு படெவெ ம
த்தானந்தாஜாண்டவ ஹுட்டிஸுவெ
நீனெ பாலிபெ ஸம்ஹரிஸுவெ நின
கானந்ததாடவிது ப்ரபுவெ || 21

அனந்த ஜடசேதனக்கெல்ல முக்ய
நீனல்லதன்யாஸ்ரயில்ல
நீனேக அனந்தரூப ஜீ
வானீககெ தூரனு ஸமீப || 22

நின்னர்ச்சகரிகித்தெ முக்தி ஸலெ
நின்ன த்வேஷிகளிகெ தமவித்தெ
நின்னமோககுணகீர்த்னெ ஸுரரு ஹொாகளி
தன்யரஹரு மஹாத்தமரு || 23

லயஜலதிகாமோக மீன ஶ்ரீ-
ஹயவதன மதுகைடபமதன
பயோநிதி மந்தககூபார ஸுரனி
சயஸுகத மந்தரோத்தார ||24

ஸுயஜ்ஞ பவ்ய வரஹாத்ம ஹேம
நயநஹர த்ருதபூதலாத்ம
பயதூர நரம்ருகஸ்வரூப லோக-
த்ரய கீர்தித ஸுப்ரதாப ||25

வ்யாப லோகத்வய ஸச்சரண பலி
கோப்த யாசிதஸத்விதரண
தீப்திகர பரஶு தனுர்தர மத
த்ருப்த ந்ருபகுலகுஜகுடார ||26

தஶரதாத்மஜ ஸீதாரமண மத்த
தஶஶிரார்த ஹனுமத்ஸ கமன
ப்ரஸீத நமோ நமோ வாஸுதேவ ஸங்க-
ருஷண ஶ்ரீ ப்ரத்யும்ந தேவ ||27

ப்ரஸீத நமோ நமோ அநிருத்த ஸு-
ப்ரஸீத ஸாத்வத குலஸுவ்ருத்த
ப்ரஸீத ஶஶிவம்ஶ ஸுபவித்ர ஸு-
ப்ரஸீத ஸச்சிதானந்த காத்ர ||28

நமோ நமோ ஸத்ஸுபுத்தி புத்த
நமோ நமோ தனுஜமோஹன ப்ரஸித்த
நமோ நமோ துஷ்டகுலதஹன புன-
ர்நமோ நமோ கஹநாத்ப்ரஹன ||29

நைச் செலாள்வெ ஸுரவ்ருந்த நா
நா ஜீவர தவ நாமதிந்த
தா ஜீவிஸி மோஹிஸி வர்திபுது மஹா
ஸோஜிகத லீலெ தீநபந்து ||30

**ஸதிஸுதரு க்ருஹஸஜ்ஜன க்ஷேத்ர அர்த்த**
**ததிப்ராந்தி பிடதிஹெ அஸ்வதந்த்ர**
**மதிஹீனனாகி ஸ்வப்னஸம ஈ**
**ஸ்ருதியெந்து திளியெ நானதம ||31**

**நீநித்தஸுகதுக்கவின்னு திளியதெ**
**நானு காரணனெம்புவெனு**
**நாநாகி ஸுத்தி பஹெ பவவ ஹரி**
**நீநேவெ மாடனுக்ரஹவ ||32**

**துக்கான்வயவனு ஸுககண்டெ ப்ராந்தி**
**லெக்கதோரது மரெஹுகொண்டெ**
**மூர்க விபரீதமதி பெரெவெ தவ**
**ஸுக்யவனு மரெவெ ஜகத்குருவெ ||33**

**நின்னஶ்ரயதி பதியலிருவெ நா**
**நன்யராராதனெய மாடுவெ**
**ஸந்நீர ஜரிது பிஸிலதொரெகெ ஓடி**
**பன்ன படுவெ பவாடவியொளகெ ||34**

**காம்யகர்மதலி உத்ஸாஹவு விஷ்ணு**
**தர்மதலி நநகின்னு மரெவு**
**க்ராம்ய ஸுகதனுபவகளிந்த நித்ய**
**நிம்மங்க்ரியனு மரெதெ முகுந்த ||35**

**க்ருபண புத்தியலி நா கெட்டெ பவ-**
**விபிநாடணெகெ ஓடம்பட்டெ**
**கபட க்ருஹக்ஷேத்ர ஹொந்திஹெனு நித்ய**
**த்ருபுத தவஜனகெ தூரஹெனு ||36**

**இந்த்ரியகளிகெ ஸஹாயவாகி மன**
**நிந்திரது தவ சரணகெரகி**
**இந்துகபடிஸுவ துர்விஷய தூ**
**ர்வந்ததி கடெஹாயிஸு ஜீய ||37**

**நன்ன ப்ரயத்னதி நின்ன காணெ ஹரியெ**
**நின்னனுக்ரஹவாதரின்னெ**
**தன்ய நாநஹெநு ஸுப்ரஸன்ன ஸிரி-**
**ஸன்னுத ஸுஜனர ஜீவன்ன ||38**

**மஹானுபாவர்கெ ஶ்ரீசரண ஸாத்ய**
**மஹது துர்லபவு கருணார்ண**
**ஈ ஹொத்து அனுக்ரஹ ப்ரஸாதவாகி**
**பாஹ்யாந்தர கண்டேனு முகுந்த || 39**

**ஆரொடெயரில்ல நின்ன பிட்டு பா**
**தாரவிந்த ப்ரதத்யன்னிட்டு**
**தாரிஸு பவாப்தியனு கிருஷ்ண நின்ன**
**ஸாரிதெனு வ்ருஷ்ணிஜவரிஷ்ட || 40**

**நமோ நமோ அனந்த ஶக்த நமோ**
**நமோ விஜ்ஞானந்தகாத்ர**
**நமோ ப்ரதான பும்ஸேஶ ஶ்ரீஶ நமோ**
**நமோ நமோ வாஸுதேவ பரேஶ || 41**

**நமோ நமோ பூபாரஹரண நமோ**
**நமோ ப்ரஸன்ன ஜனரிகாபரண**
**நமோ நமோ ப்ரமத்த களமதன**
**நமோ நமோ புண்யானந்த குணகதன || 42**

**அகமருஷணதலி அக்ரூர கண்ட**
**நிகமனுதானந்தன தீர**
**ஜகதேக ப்ரஸன்ன வெங்கடபன லீலெ**
**ஸொகஸாகி பேளுவதே புண்ய || 43**

ஸ்ரீஹரியின் மகிமைகளை புகழ்ந்து பாடுபவர்களுக்கே மிகச்சிறந்த சுகம் (மோக்ஷமும்) கிடைக்கும். அத்தகைய நரஹரியின் தாஸர்களுக்கு, ஸ்ரீஹரியின் தரிசனம் கிடைக்கும். பரம பாகவதனான அக்ரூரர், அகமர்ஷண ஸ்துதியினால் ஸ்ரீஹரியை புகழ்ந்து பாடியதன் விவரத்தை இங்கு பார்க்கலாம். || ப

ஸ்னானம் செய்யும்போது, அக்ரூரர், பக்தர்களில் சிறந்தவர், தண்ணீருக்குள் அந்த வியப்பான காட்சியை கண்டார். இரு கைகளையும் குவித்தவாறு, தலை குனிந்து, பக்தியுடன், தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனின் எதிரில் அவர் நின்றார். || 1

ஹே தாமரைக் கண்ணனே நமோ நமஸ்தே. ஈரேழு பதினான்கு உலகங்களின் தலைவனே. ஸ்ரீதேவியின் தலைவனான லக்ஷ்மி நாராயணனே. உன்னுடைய நாபியில் பத்மத்தில், சதுர்முக ப்ரஹமதேவரை பெற்றவனே. || 2

நீயே இப்போது அந்த ப்ரஹ்மனில் இருந்து கொண்டு, பற்பல அனந்தமான ஜகத்தினை ஸ்ருஷ்டி செய்கிறாய். அனாதி ஜீவர்களின் கர்மங்களைப் பார்த்து, அவரவர்களின் யோக்யதைக்கேற்ப நீயே அவர்களை, ஸத்வ ரஜோ தமோ என்பதான மூன்று குணங்களில் அவர்களை கட்டிப் போடுகிறாய் (ஸம்சாரத்தில் அவர்களை தள்ளுகிறாய்). || 3

ஸர்வ இந்த்ரியங்களின் (அதனை வழிநடத்தும்) அதிகாரத்தை நீ முக்ய ப்ராணருக்கு கொடுத்தாய். அனைத்து தேவர்களையும் உன் விருப்பப்படியே படைத்தாய். ஸர்வேஶ்வரனே, உன்னுடைய ஆணைப்படியே அனைவரும் நடக்கிறார்கள் (செயல்களை செய்கிறார்கள்). || 4

ஸ்ரீலக்ஷ்மிதேவியின் தலைவனே, நீயே அனைத்திற்கும் / அனைவருக்கும் நியாமகன். உன்னுடைய ஆணைக்கேற்ப, அனைவரும் அனைத்து செயல்களிலும் ஈடுபடுகிறார்கள். தேவர்களுக்கு எந்தவொரு ஸ்வாதந்த்ர்யமும் இல்லை. ஜ்ஞானானந்தனே. இது அனைத்தும் உன்னுடைய சொந்த இச்சையினால், லீலையினால் நீ செய்கிறாய். || 5

நீயே அனைவரின் ஹ்ருத் குகையில் இருக்கிறாய். ஆனால் யாரும் உன்னை காண்பதில்லை. ஜகத்குருவே, நீ உன்னுடைய மாயையினால் (விருப்பத்தினால்) அவர்களை (மற்றவர்களை) விரும்பச் செய்வாய். ஹரியே, நீயே அனைவருக்கும் அஜ்ஞானம் வருமாறு செய்கிறாய். || 6

மனத் தூய்மையைக் கொண்ட யோகிகள், தம் யோகத்தில் (த்யானத்தில்) அனிருத்தனை காண்பார்கள். ப்ரஸாதத்தில், அத்யாத்மத்தில் (தம் ஹ்ருதயத்தில்), கற்றறிந்தவர்கள், பற்பல யஜ்ஞத்தில் (காரியங்களில்) இறைவனை காண்பார்கள். || 7

அங்கெல்லாம் உன்னையே அவர்கள் பூஜை செய்வார்கள். ஒவ்வொரு கர்மத்தை துவக்கும்போதும், முடிக்கும்போதும் அவற்றை உனக்கே அர்ப்பணம் செய்வார்கள். அத்தகைய ஜ்ஞானிகள், ஜ்ஞானத்தில் (த்யானத்தில்), அந்தந்த கர்மங்களை பத்ததியின்படி, விதிப்படி, செய்து உன்னை அர்ச்சிப்பார்கள். || 8

உன்னுடைய ஏக ரூப, பஹு ரூபங்களை அறிந்து, பற்பல விதங்களாக உன்னை வணங்கும் ஜ்ஞானிகள் பேத-அபேதத்தில் ((அ).பேத = ஜீவர்களிடமிருந்தும், ஜடத்திலிருந்தும் பேதமாகவும் அறிந்து (ஆ) உன் ஒவ்வொரு ஆவேஶ, அவதாரத்தையும் உன்னிடமிருந்து அபேதமாகவும் அறிந்து) அர்ச்சனை செய்வார்கள். பற்பல விதமாக ஆசார வழிகளில் இவ்வாறு உன்னை அவர்கள் பூஜிப்பார்கள். || 9

மனஸ், தேகம், வாக்கு ஆகிய கரணங்களால் வேதங்களால் போற்றப்படுபவனான, பராத்பரனான, முகுந்தன், அவன் யாருடைய சிந்தனைக்கும் உட்படாத ஆனந்தத்தைக் கொண்டவன் என்று உபநிஷத்கள் அனைத்தும் உன்னைப் பற்றி குறிப்பிடுகின்றன. || 10

ஶ்ரீஹரியே, உன்னுடைய பெயரை நீ தேவதைகளுக்குக் கொடுத்தாய். அனைத்து தேவதைகளுக்கும் அவரவர்களின் யோக்யதைக்கேற்ப பதவியை கொடுத்தாய். மலையில் பிறந்த நதிகள், கடைசியில் கடலில் சென்று கலப்பதைப் போல, தேவ, ரிஷி, பித்ரு தர்ப்பணங்கள் ஆகியவை (ஆகியவற்றை)… || 11

ஜ்ஞானிகள் உனக்காக அர்ப்பணம் செய்வார்கள். உனக்கு சமர்ப்பணம் செய்யாத அர்ச்சனை, அவிதி (விதிக்கு உட்படாதது) என்பார்கள். தேவதைகள் அனைவரும் உன்னுடைய சேவகர்களே ஆவார்கள். தமக்கு எந்தப் புகழும் வேண்டாதவர்கள் (அனைத்தும் ஶ்ரீஹரியுடையதே என்கிறார்கள்). (தவறுகள் எதுவும் செய்துவிடக்கூடாதே / விதிப்படி நடக்கவேண்டுமே என்று) பயம் கொண்டவர்கள். ||12

ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் மூன்றும் உலகில் அனைவரிலும் பரவி, அனைவரையும் ஆண்டு கொண்டிருக்கிறது. அந்த மூன்று குணங்கள் அனைவரிலும் குறுக்கும் நெடுக்குமாக (அதாவது அனைத்து இடங்களிலும்) பரவியிருக்கிறது. த்ருண ஜீவர் முதல் ப்ரஹ்மதேவர் வரைக்கும் அந்த குணங்கள் இருக்கின்றன. || 13

இந்த உலகங்கள் அனைத்தையும் நீயே நியந்த்ரணம் செய்பவன். நீ இல்லையேல் வேறு காரணம் எதுவுமே இந்த உலகிற்கு இல்லை. அகத்திலும், புறத்திலும் நீயே ஸ்வதந்த்ரன். அனைவரும் உன்னுடைய அதீனமாகவே இருக்கின்றனர். || 14

அக்னி முகமாக (அனைவரும் சமர்ப்பணம் செய்வதை) நீ பெற்றுக் கொள்கிறாய். உன்னுடைய காலடிகளால் (வாமன ரூபமாக வந்து) ப்ருத்வியை பெற்றாய். நீ சூரியனை உன்னுடைய கண்களிலிருந்து பெற்றாய். உன்னுடைய நாபியிலிருந்து அந்தரிக்ஷத்தை தாங்கினாய். || 15

இந்த பூமியை உன் தலை மேல் வைத்து காத்தாய். க்ஷத்ரியர்களை உன்னுடைய தோள்களிலிருந்து படைத்தாய். ஆகாஶத்தை (திசைகளை அல்லது சந்த்ரனை) உன்னுடைய காதுகளிலிருந்து படைத்தாய் (ஶப்தம் ஆகாஶத்தின் குணம்). உன்னுடைய வயிற்றில், இந்த கடல்களை (ப்ரஹ்மாண்டத்தையே) தாங்கினாய். || 16

ப்ராண தேவரின் சேஷ்டைகளால், நீ ஜீவர்களின் தேகத்தில் ப்ராணனை கொடுத்து வ்யாபித்தாய். உன்னுடைய தலைக் கூந்தலிலிருந்து அபாரமான கிருஷ்ண அவதாரத்தை மிகவும் கருணையுடன் பெற்றாய். || 17.

உன்னுடைய நகக்கண்களிலிருந்து மலைகளை படைத்தாய். உன்னுடைய கண் இமைகளிலிருந்து பகல், இரவுகளை படைத்தாய். ப்ரஜாபதியை உன்னுடைய உறுப்புகளிலிருந்து படைத்தாய். வ்ருஷ்ணியே, நீ அனைவரின் வீர்யத்தில் இருந்து அனைவருக்கும் அவரவர்களின் சக்தியை கொடுத்தாய். || 18

ஸ்ருஷ்டிக்கு வரும் ஜீவர்களுக்கு த்ருப்தியை அளிக்கும் விதமாக இவ்வாறாக (அவர்களுக்கு அவயவங்களை அளித்து) ஸ்ருஷ்டி காரியத்தை நீ செய்தாய். ஆப்த மித்ரனே. எப்போதும் அவ்யயனாக (மாற்றங்கள் இல்லாதவனே) இருப்பவனே. புருஷோத்தமனே. ஜீவர்களின் உற்பத்தி, காத்தல் ஆகியவற்றை செய்பவனே. பராத்மனே. || 19

தண்ணீரில் வசிக்கும் ப்ராணிகளின் லயம் தண்ணீரிலேயே நடக்கிறது. அத்தி பழத்தில் இருப்பதான ஒரு கிருமி, அதே பழத்தில் லயம் அடைகிறது. தாமரைக் கண்ணனே, அனைத்து ஸ்ருஷ்டிகளும், உன்னிலேயே பிறந்து கடைசியில் அனைத்தும் உன்னிலேயே லயம் அடைகின்றன. || 20

அனந்த சதுர்முக ப்ரஹ்மாதிகளை நீ படைக்கிறாய். மேலும், பற்பல ப்ரஹ்மாண்டத்தை நீ படைக்கிறாய். நீயே அனைத்தையும் காக்கிறாய். ஸம்ஹாரம் செய்கிறாய். இந்த அனைத்தும் உன்னுடைய ஆனந்தமான ஆட்டமே (லீலையே) ஆகும், ப்ரபுவே. || 21

அனந்தமான ஜட சேதனர்கள் அனைவருக்கும், நீயே முக்ய ஆஸ்ரயன். நீயின்றி வேறு யாரும் இல்லை. நீ ஒருவனே அனந்த ரூபத்தை எடுத்திருக்கிறாய். ஜீவர்களுக்கு நீ மிகவும் தூரனாக (கிடைக்காதவனாக / பேதமாக) இருக்கிறாய். அதே சமயம், அவர்களின் அருகிலேயே (உள்ளும் புறமுமாக) வ்யாபித்திருக்கிறாய். || 22

உன்னை வணங்குபவர்களுக்கு நீ முக்தியை அளிக்கிறாய். போலவே உன்னுடைய த்வேஷிகளுக்கு தமஸ் உலகத்தை அளிக்கிறாய். உன்னுடைய அபாரமான குணங்களின் கீர்த்தனைகளை போற்றியவாறு, மஹாத்மரான தேவர்கள் தன்யர்கள் ஆகின்றனர். || 23

ப்ரளய ஜலத்தில் நீ மிகப்பெரிய மீனாக வந்தாய் (மத்ஸ்ய அவதாரம்). ஸ்ரீஹயவதனனாக வந்து, நீ மது கைடபர்களை ஸம்ஹாரம் செய்தாய். பாற்கடலை தேவ அஸுரர்கள் கடையும் சமயத்தில், நீ கூர்மனாக வந்து, மந்தார மலையை தாங்கி, தேவர்களின் கூட்டத்திற்கு சுகத்தைக் கொடுத்தாய். || 14

யஜ்ஞ ரூபத்தில் நீ வந்தாய். பின், வராஹ அவதாரம் எடுத்தாய். அடுத்து, ஹிரண்யாக்ஷனை கொல்வதான அவதாரம் எடுத்தாய். பூமண்டலத்தின் பயத்தினை பரிஹாரம் செய்தாய். நர மற்றும் மிருக ஸ்வரூபமாக வந்து மூன்று உலகங்களிலும் புகழினை பெற்றாய். || 25

பலி சக்ரவர்த்தியிடம் வாமனனாக வந்து, முதலில் இரு காலடிகளால் இரு உலகங்களையும் வ்யாபித்துவிட்டு, பின்னர் மூன்றாவது அடியாக அவன் தலையிலேயே கால் வைத்தாய். ஒளிர்வதான பரஶு (கோடலி) மற்றும் வில் ஆகியவற்றை பிடித்துக் கொண்டு கர்வம் கொண்ட கெட்ட க்ஷத்ரியர்கள் அனைவரையும் நீ அழித்தாய். || 26

தசரதனின் மகனாக, ஸ்ரீஸீதாதேவியின் தலைவனாக, ஸ்ரீராமனாக வந்து, பத்து தலை கொண்ட ராவணனை நீ கொன்றாய். ஹனுமனிடம் அவனின் சேவையை நீ பெற்றுக் கொண்டாய். ஸ்ரீராமனே உனக்கு நமோ நமோ. வாஸுதேவ, ஸங்கர்ஷண, ஸ்ரீ ப்ரத்யும்ன தேவனே. || 27

அனிருத்தனே உனக்கு நமோ நமோ. நீ த்ருப்தி அடைவாயாக. நிரந்தரமானவனே, குலங்களை காப்பவனே உனக்கு நமோ நமோ. நீ த்ருப்தி அடைவாயாக. சந்த்ர வம்சத்தில் வந்த பவித்ரமானவனே, ஸச்சிதானந்த தேகம் கொண்டவனே, உனக்கு நமோ நமோ. நீ த்ருப்தி அடைவாயாக. || 28

நற்போதனைகளை செய்த புத்தனே. உனக்கு நமோ நமோ. அஸுரர்களின் மோஹனத்தை செய்தவனே. துஷ்ட குலங்களை அழித்தவனே. ஆழமான (பவித்ரமான) தத்வ ஜ்ஞானத்தை காத்தாய். (இவ்வாறாக பற்பல அற்புத அவதாரங்களை எடுத்தாய்). உனக்கு நமோ நமோ. || 29

உன் இஷ்டப்படியே நீ இந்த உலகத்தை ஆள்கிறாய். உன்னுடைய நாமத்தினால், நீ தேவர்களின் கூட்டத்தையும், ஜீவர்களையும் நன்றாக காக்கிறாய். அவர்கள் அனைவரும் உன் நாமங்களைக் கூறியே, அவை அனைத்தும் தங்கள் நாமங்களே என்று நினைத்தவாறு வாழ்கிறார்கள். உன்னுடைய லீலைகள் அனைத்தும் எம்மை மெய்மறக்கச் செய்கின்றன. பக்தர்களை காப்பவனே. || 30

மனைவி, மக்கள், வீடு, உறவினர், க்ஷேத்ரம் (வீடு), செல்வம் ஆகிய அனைத்தும் என்னுடையது என்பதான ப்ராந்தி (அது ப்ராந்தி என்று தெரிந்தாலும்) அவற்றை விடாமல், நான் அஸ்வதந்த்ரன் என்பது புரியாமல், புத்தி கெட்டுப் போய், இவை அனைத்தும் ஸ்வப்னத்திற்கு சமமானவை (தற்காலிகமானவை). இந்த ஸம்ஸாரம் என்பது தற்காலிகம் என்பதை புரிந்து கொள்ளாமல் இருக்கிறேன். நான் அதமனே ஆகிறேன். || 31

சுக, துக்கங்கள் அனைத்தையும் நீயே கொடுக்கிறாய் என்பதை அறியாமல், நானே அனைத்திற்கும் காரணம் என்று சொல்லிக் கொள்கிறேன். நானாக இந்த ஸம்ஸாரத்தில் திரும்பத் திரும்ப வந்து போகிறேன். ஸ்ரீஹரியே, நீயே எனக்கு அருள் புரிய வேண்டும். || 32

துக்கத்திற்கு சமமான (துக்கத்தை தரக்கூடிய) பொருட்களை, அவற்றில் சுகத்தையே நான் கண்டேன். இவ்வாறான ப்ராந்தியை நான் பற்பல முறை கொண்டிருக்கிறேன். புத்தி கெட்டுப் போனேன். நானே மூர்க்கன். விபரீத மதியைக் கொண்டிருந்தேன். ஜகத்குருவே, நான் உன்னுடைய நட்பினை / அருகாமையை நான் மறந்தேன். || 33

உன்னுடைய ஆஸ்ரயத்திலேயே, உன் அருகிலேயே நான் இருக்க வேண்டும். ஆனால், நானோ உன்னை விட்டு, மற்றவர்களின் ஆராதனையையே எப்போதும் செய்கிறேன். குடிப்பதற்கு சுவையான தண்ணீர் கிடைத்திருக்கும்போது, அதனை விட்டு, வெயிலில் ஓடிப் போகிறேன். இந்த ஸம்ஸார ஸாகரத்தில் திரும்பத் திரும்ப வந்து விழுந்து, கஷ்டப்படுகிறேன். || 34

காம்ய கர்மங்களிலேயே எனக்கு இன்னும் உற்சாகம் இருக்கிறது. விஷ்ணு தர்மங்களிலோ மறதியே இருக்கிறது. தற்காலிக சுகங்களின் அனுபவத்தினால், நித்யமான உங்களின் பாத கமலங்களை நான் மறந்தேன், முகுந்தனே. || 35

கெட்ட (குறுக்கு) புத்தியினால் நான் கெட்டுப் போனேன். ஸம்ஸாரத்தின் சுழற்சியின் ஆட்டத்திற்கு நான் ஆளானேன். கபடமான இந்த இடத்தை (வீடு / பிறவி / ஸம்ஸாரம்) வந்து அடைந்திருக்கிறேன். நித்ய த்ருப்தர்கள் வசிக்கும் இடமான மோக்ஷத்தை விட்டு நான் மிகவும் தூரமாக இருக்கிறேன். || 36

இந்த்ரியங்களுக்கு உறுதுணையாக மனமானது ஓரிடத்தில், உன் பாத கமலங்களில் அது நிற்பதில்லை. கெட்டதான தூர விஷயங்களிலிருந்து என் மனதினை நீ தூரமாக விலக்குவாயாக, தலைவனே. || 37

என்னுடைய முயற்சியினால் மட்டுமே நான் உன்னை காண்பதில்லை. ஸ்ரீஹரியே. உன்னுடைய அருள் இருந்தாலே, நான் தன்யன் என்று ஆகிறேன். ஸஜ்ஜனர்களின் வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக ஆக்குபவன் நீயே. || 38

மஹானுபாவர்களுக்கே உன்னுடைய திருப்பாதங்கள் கிடைப்பது ஸாத்தியம். மற்றவர்களுக்கு அது கிடைப்பது மிகவும் துர்லபம். கருணைக் கடலே. இப்போதே, உன்னுடைய அருள் ப்ரஸாதம் எனக்கு கிடைத்திருக்க, நான் உன்னை உள்ளும், புறமுமாக (தண்ணீரில் உள்ளே, வெளியே என்று) பார்த்தேன், முகுந்தனே. || 39

உன்னை விட்டு வேறு யாரும் தலைவர் எனக்கு இல்லை. உன்னுடைய பாதாரவிந்தங்களில் சரணடைந்திருக்கிறேன். என்னை இந்த ஸம்ஸாரக் கடலிலிருந்து தாண்டச் செய்வாயாக. ஹே கிருஷ்ணா, நான் உன்னையே அடைந்திருக்கிறேன். வ்ருஷ்ணி குலத்தில் பிறந்தவனே. || 40

அனந்த சக்தி கொண்டவனே, விஜ்ஞானந்த தேகம் கொண்டவனே, ப்ரதான புருஷோத்தமனே. ஸ்ரீதேவியின் தலைவனே. வாஸுதேவனே. தேவர்களின் தலைவனே. உனக்கு நமோ நமோ. || 41

பூமியின் பாரத்தைக் குறைக்க வந்திருப்பவனே. மக்களுக்கு ஆபரணமாக இருப்பவனே. கர்வம் கொண்ட கெட்டவர்களை அழிப்பவனே. அனந்த புண்யங்களைக் கொண்ட, அனந்த நற்குணங்களைக் கொண்டவனே உனக்கு நமோ நமோ. || 42

அகமருஷண ஸூக்ததை சொல்லியவாறு அக்ரூரர், நிகமங்களால் புகழப்படுபவனான ஸ்ரீகிருஷ்ணனைக் கண்டார். உலகத்தின் நாயகனான ப்ரஸன்ன வெங்கடனின் லீலைகளைப் பற்றி எடுத்துச் சொல்வதே அனைவருக்கும் புண்ணியத்தை தரக்கூடியது. || 43

***

**58. ராக : கல்யாணி. தாள : ஏக**

**ஸ்ரீகிருஷ்ணபாத ஸரோருஹ ஹொந்தித**
**ஏகாந்தஜன விஷயகள**
**பேகெனரு பக்தி ஸாகெனரு ஜ்ஞா**
**நாகரர்ப்பவவிரஹிதரு || ப**

**தானேஶ்வரனிகெ நீரியொளகெ பகவான்னிஜதருஶனவித்து**
**மானதல்யவன ஸுதிதிய கேள்யொலிதந்தர்த்தானவனைதித கர்து || 1**

**தீரதி குளிது நித்ய ஸத்க்ரியெ முகிஸித ஸ்ரீஹ்ருஷிகேஶ கிருஷ்ணப்ரிய**
**நீரனுளிது நடெதந்தனு தன்னய தேரினெடெகெ காந்தினேய || 2**

**நாராயணரிப்பரிகெ நமஸ்கார மாடித ஸாஷ்டாங்க**
**பூரி ப்ரேமதி நயனதி ஸுகபாஷ்பத வாரிய ரோமபுளகாங்க 3**

**கரவெரடு முகிது நிந்திரெ கேளிதனொந்துபரிதோருபுதுனின்னவதன**
**அரிதேன நீ கண்டெ அத்புதவன்னு நீரினொளகெ பேள்ஹதன || 4**

**தரெயலி கண்டந்தாஶ்சர்யபடுவெ விஸ்தரிஸெனெ நுடிதனா நசிவ**
**ஹரி நின்ன மஹிமெயகாதவு விஶ்வாந்தரிய நமோ நமோ தேவா || 5**

**ஸ்வாமி க்ருபாநிதெ அகமர்ஷணதி மஹாமஹியெனு தோரிஸிதெ**
**பூமிலி கண்டந்தெ ஜ்ஞானானந்தமய ஸ்ரீமூர்த்திய ப்ரகடிஸிதெ || 6**

**ஸ்ரீமாயாஸதி அஜபவஸுரமுனிஸ்தோமஸன்னுத விஶ்வாத்ம**
**நா மனுஜனு கண்மனதணி கண்டெனு பக்தகாமதேனுவெ அந்தராத்ம || 7**

**ஹீகெந்து நடெஸித ரதவனு மதுரெகெ பேகச்யுத ஹலியொடனெ**
**ஆ குணநிதி வஸுதேவன தனயன ஆகமனவனு கண்டொடனெ || 8**

**ஆகதரு க்ராமக்ராமதவரு பந்து பாகி தலெ ஸ்தோத்ரமாடி**
**ஸாகிதர்னகரகெ உபவனதலி நில்லலாகி ஜனர பராண்ய நோடி || 9**

**நந்தாத்யர நிலிஸிதனு முகுந்தனு காந்தினேயன கையவிடித**
**மந்தஹாஸதி நுடிதனு கனப்ரேமதி இந்திரெயஸ கோவிந்த || 10**

**முந்தெ நீ மனெகெய்து ரதஸஹ பட்டணத செந்தவ நோடுத்த பஹெவு**
**எந்து மாதிகெ நுடிதனு அக்ரூரனு தந்தெ அதோக்ஷஜா நீவு || 11**

**இந்தென்ன பிடதிரி நிம்ம பதாப்ஜவ ஹொந்திதெ என்ன ஜீவன்ன**
**முந்தெ நா நகரகெ மனெகெய்தி மாடுவ தந்துகவேனு ப்ரஸன்ன || 12**

**பந்து நன்னாலய பவித்ரமாடு கோபவ்ருந்ததொடனெ பக்தபந்தோ**
**வ்ருந்தாரக ரிஷி பித்ரு ந்ருபகுலகங்க்ரித்வந்த்வ துர்லப குணஸிந்தோ || 13**

**நின்னங்க்ரிரஜ க்ருஹமேதிகள்கெ துர்லப நின்னங்க்ரி ஶௌரி பித்ரு ஸூரர**
**தன்யர மாள்புது பலியவனியு எல்ல நின்னங்க்ரி ஶ்லாகிஸிது தீர || 14**

**நின்னங்க்ரி ஸோங்கித பலிகுன்னத பாக்ய நின்னங்க்ரியுங்குஷ்டஜல**
**பன்னகபூஷண தரிஸித  மூஜகவன்னு பாவன்ன மாள்பவள || 15**

**ஶ்ரீ தேவதேவ ஜகத்பதெ புண்யகீர்த்னெ யாதவகுலமௌளிரத்ன**
**ஆதி நாராயண லக்ஷ்மிரமண நின்ன பாதாம்போருஹதாஶ்ரீதன்ன ||16**

**ஆதரிஸிதரலனாத நனகெ டஹரு ஆதாரவில்ல தயாப்தே**
**நா தன்யனஹெனு பா மனெகென்னுத்த பாதகொந்திஸெ ஸ்துதியிந்த || 17**

**காந்திகேயன ஸ்தோத்ரவ கேளி யதுபதி மந்தஹாஸதி ஸூரமௌளி**
**எந்தனு த்வத்க்ருஹதலி பூஜெயகொம்பெ கொந்து கம்ஸன நாளினலி || 18**

**பந்து நிம்மலும்பெ யாதவான்வயத்ரோஹியெந்து யமபுரகட்டுவெனு**
**இந்துவம்ஶத ஸுஹ்ருத்பந்துனிகரகானந்தாம்ருதவனுணிஸிவெனு || 19**

**திவிஜ பூதிவிஜர கண்டக தெகெவெனு பூவிய பாரவ களெயவெனு**
**ஸவெயத ஸுகதலி ஸஜ்ஜனரலெந்து புவன ஆதார நுடிதனு || 20**

**ப்ரவசனகேளி ஶ்வகல்கியு கிஞ்சித்து அவிமனோபம தெரளிதனு**
**தவகதி நமிஸி புரவ பொக்கு கிருஷ்ணராமரு பந்திஹ வார்தெ புரதலி || 22**

**ஸந்தணிஸிது சதுர்வீதிலி ஜனபத கந்துகொரளன தனுர்யாக**
**ஹொந்திலர்த்தியோ நோடுதலித்தரு மந்தரதர பலராக || 23**

**ஈ பாகவத தஶமஸ்கந்தத கதெ ஶோபித ப்ராக்ருத பதவ**
**ஶ்ரீ பகவஜ்ஜன பொகளலு இஹபர போக பயகெ கிருஷ்ணனீவ || 24**

**த்ரைபுவனேஶ்வர ப்ரஸன்னவெங்கட பத்மனாபன ஜ்ஞானவைராக்ய**
**லாபவு பகுதிய பாக்யவு பருவுது ஶோபன ஆயுராரோக்ய || 25**

ஶ்ரீகிருஷ்ணனின் பாத கமலங்களை அடைந்த ஏகாந்த பக்தர்கள், உலகத்தில் இருக்கும் மற்ற விஷயங்களை வேண்டும் என்று சொல்ல மாட்டார்கள். ஶ்ரீகிருஷ்ணனிடம் பக்தியே போதும் என்கிறார்கள். இந்த ஜ்ஞானம் குறைவான ஸம்ஸாரத்திலிருந்து அவர்கள் விலகியே இருக்கிறார்கள். || ப

தானபதியான அக்ரூரருக்கு ஶ்ரீகிருஷ்ணன், தண்ணீரில் தன்னுடைய தரிசனத்தை அளித்து, மிகவும் மகிழ்ச்சியுடன் அவரின் ஸ்துதிகளை கேட்டு, பின் அங்கிருந்து மறைந்தான். அவனே அனைத்திற்கும் கர்த்ரு. || 1

அந்த நதிக்கரையில் அமர்ந்து, தன்னுடைய நித்ய கர்மானுஷ்டானங்களை செய்தார், ஶ்ரீஹ்ருஷிகேஷ கிருஷ்ணனின் ப்ரியரான அக்ரூரர். பிறகு அங்கிருந்து வந்து, தன்னுடைய தேரை நோக்கி நடந்தார். || 2

ஶ்ரீகிருஷ்ணன், பலராமன் என இருவருக்கும் ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார். அபாரமான ப்ரேமத்தில், தன்னுடைய இரு கண்களிலிருந்தும் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தவாறு, மெய் புளகாங்கிதமடைந்து அவர்களை வணங்கினார் அக்ரூரர். || 3

இரு கைகளை குவித்து வணங்கி அக்ரூரர் நின்றிருக்க, ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு கேட்கிறான். ஏன் உன் முகம் இவ்வாறு ஒரு மாதிரியாக தெரிகிறது?. தண்ணீரில் நீ கண்ட அற்புதக் காட்சியை நான் அறியவில்லை. அதனை எனக்குச் சொல் - என்றான். || 4

அக்ரூரர் சொல்கிறார். தரையில் நான் கண்டு வியக்கும் காட்சி அது. அதனை நான் விளக்கிக் கூறுகிறேன். ஸ்ரீஹரியே, உன்னுடைய மகிமை அபாரமானது. அதனை உலகமே அறிந்திருக்கிறது - உனக்கு என்னுடைய நமஸ்காரங்கள், தேவனே. || 5

ஸ்வாமியே, க்ருபாநிதியே, என் கஷ்டங்களை விலக்குவதான அபாரமான மகிமையை நீ காட்டியிருக்கிறாய். பூமியில் நான் பார்க்கும்படியான உன்னுடைய க்ஞானானந்தமயமான ஸ்ரீமூர்த்தியையே (தண்ணீருக்குள்ளும் நீ) காட்டியிருக்கிறாய். || 6

ஸ்ரீதேவி, மாயாதேவி, ப்ரஹ்ம தேவர், தேவர்கள், முனிவர்களின் குழுக்கள் என அனைவரும் ஸ்தோத்ரம் செய்யும் விஸ்வாத்மனே. நான் சாதாரண மனிதன். என் கண், மனம் குளிரும் வகையில் அதனை கண்டேன். ஹே, பக்தர்களின் காமதேனுவே, அந்தராத்மனே. || 7

இவ்வாறு அக்ரூரர் கூறியவாறு, ஸ்ரீஹரி, பலராமர் அமர்ந்திருந்த தேரினை, மதுரையை நோக்கி வேகமாக செலுத்தினார். குண நிதியான வஸுதேவனின் மகனின் வருகையை கண்டவுடன்.. || 8

அங்கு காத்திருந்தவர்கள், பற்பல க்ராமங்களிலிருந்து வந்தவர்கள் வந்து, இவர்களுக்கு தலை குனிந்து வணங்கினர். ஸ்தோத்ரம் செய்தனர். பின்னர் அங்கிருந்த தோட்டங்களில் நின்றிருந்த மக்களின் கூட்டங்களைக் கண்டு, அவர்கள் நகரங்களுக்கு விரைந்தனர். || 9

அக்ரூரர் தேரினை நிறுத்தினார். முகுந்தன் அக்ரூரரின் கைகளைப் பிடித்தான். புன்னகையுடன், அபாரமான ப்ரேமத்துடன், இந்திரேயரஸனான கோவிந்தன் இவ்வாறு கூறினான். ||10

அடுத்து, நீ ரதத்துடன் உன்னுடைய வீட்டிற்குச் செல். நகரத்தின் அழகினை பார்த்தவாறு நாங்கள் வருகிறோம் என்றான். அதற்கு அக்ரூரர், தேவனே, அதோக்ஷஜனே... || 11

இன்று நீங்கள் என்னை விட்டுவிட வேண்டாம். உங்கள் பாத கமலங்களை நான் பிடித்திருக்கிறேன். இனி என் வாழ்க்கையில், நகரத்திற்கு, என் வீட்டிற்குச் சென்று நான் என்னதான் செய்வது?.. || 12

ஹே ப்ரஸன்னனே, நீ என் வீட்டுற்கு வந்து, என் வீட்டினை பவித்ரமாக்குவாயாக. உன்னுடைய கோபர்களின் குழுவுடன் வருவாயாக. பக்தர்களின் பந்துவே. தேவதைகள், ரிஷி, பித்ரு, சக்ரவர்த்தி இவர்களுக்கே உன்னுடைய பாதங்கள் கிடைப்பது கஷ்டம். குணங்களின் கடலே - என்றான். || 13

உன்னுடைய பாதங்கள் என்பது, பூ-சக்ரவர்த்திகளுக்கு கிடைப்பது கஷ்டம். உன்னுடைய பாதங்களானது, அரசர்கள், பித்ரு, தேவர்கள் ஆகியோரை தன்யர் ஆக்குகிறது. இந்த அனைத்து உலகங்களுமே உன்னுடைய பாதங்களை போற்றி பாடுகின்றனர், தீரனே || 14

உன்னுடைய பாதங்களை விழுந்து வணங்கிய பலிச் சக்ரவர்த்திக்கு உன்னத பாக்யம் கிடைத்தது. உன் பாதங்களைக் கழுவிய தண்ணீரானது, பாம்புகளை ஆபரணங்களாக அணிந்திருக்கும் ருத்ரதேவர் தரித்திருக்கும் இந்த மூன்று உலகங்களையும் பவித்ரம் ஆக்கவல்லது. || 15

ஸ்ரீதேவதேவனே, ஜகத்பதியே, புண்யகீர்த்தியே, யாதவ குலத்தின் கிரீடத்தில் இருக்கும் ரத்னமே, ஆதி நாராயணனே, லக்ஷ்மி ரமணனே, உன்னுடைய பாதங்களை சரணடைந்தவனான என்னை || 16

நீ அன்புடன் அருளினாய். தலைவனே, எனக்கு யாரும் ஆதாரம் இல்லை. கருணைக்கடலே. என் வீட்டிற்கு வருவாயாக. நான் தன்யன் ஆகிறேன். நான் ஸ்தோத்ரம் செய்தவாறு உன் பாதங்களை வணங்குகிறேன். || 17

இவ்வாறாக அக்ரூரரின் ஸ்தோத்ரத்தைக் கேட்டு, யதுபதியான ஸ்ரீகிருஷ்ணன், தேவர்களின் தேவன், புன்னகையுடன் இவ்வாறு கூறினான். நான் கம்ஸனைக் கொன்ற அந்த நாளன்று, உன்னுடைய வீட்டிற்கு வந்து, உன்னுடைய பூஜையை நான் ஏற்றுக் கொள்வேன். ||18

நான் உன் வீட்டிற்கு வந்து உணவு உண்பேன். யாதவ குலத்தின் எதிரியான கம்ஸனை நான் போரிட்டு யமபுரத்திற்கு அனுப்புவேன். சந்த்ர வம்சத்தின், எனக்கு மிகவும் பிடித்தவர்களான உற்றார் உறவினர் கூட்டத்தினருக்கு, ஆனந்த அமிர்தத்தை நான் புகட்டுவேன். || 19

இந்த பூமியில் உள்ள அரசர்களின் துன்பங்களை நான் போக்குவேன். பூமியின் பாரத்தை நான் குறைப்பேன். குறையாத சுகத்தில் ஸஜ்ஜனர்கள் இருக்கட்டும் என்று, இந்த பூமிக்கு ஆதாரனான ஸ்ரீகிருஷ்ணன் கூறினான். || 20

இவ்வாறான ஸ்ரீகிருஷ்ணனின் ப்ரவசனத்தைக் கேட்டு, ஶ்வபல்ய (ஶ்வபல்க) என்னும் அரசனின் மகனான அக்ரூரர் மனம் தெளிந்தார். பக்தியுடன் ஸ்ரீகிருஷ்ணனை வணங்கி, நகரத்தில் சென்று, ஸ்ரீகிருஷ்ணன் வந்திருக்கும் செய்தியை கம்ஸனிடம் கூறி, பின் தன்னுடைய வீட்டிற்குச் சென்றான். || 21

பின், ஸ்ரீகிருஷ்ண பலராமர்கள் நகரத்தில் வந்தனர். மேள தாள குழுவினருடன். நந்தகோபனின் மக்களான கிருஷ்ண ராமர்கள் நகரத்தில் வந்திருக்கின்றனர் என்ற செய்தியானது... || 22

பலவிதமாக பரவியது. மக்கள் அனைவரும் அசுர குல தலைவனான கம்ஸன் நடத்தும் தனுர்யாகத்தை பார்க்க திரண்டனர். அப்போது அங்கு மந்தரதரனான ஸ்ரீகிருஷ்ணன் வருகிறான். || 23

இந்த பாகவத 10ம் ஸ்கந்தத்தின் கதையை விளக்குவதான ப்ராக்ருத (கன்னட) பதத்தினை, ஸ்ரீ பகவத் பக்தர்கள் படிக்க, கேட்க, அவர்களது இஹ, பர போகங்களை, விருப்பங்களை ஸ்ரீகிருஷ்ணன் நிறைவேற்றுவான். || 24

அப்படி படிப்பவர்களுக்கு, கேட்பவர்களுக்கு, மூன்று உலகங்களின் ஈஸ்வரன், ப்ரஸன்ன வெங்கடன், பத்மனாபனின், க்ஞான வைராக்யம் கிடைக்கும். பக்தி பாக்யம் அதிகரிக்கும். ஆயுள், ஆரோக்யம் பெருகும். || 25

***

**59. ராக : ஸாரங்க தாள : ஏக**

**பில்லஹப்பவ நோடுதைதலு ராமக்ருஷ்ணருல்லாஸதி மதுரையொளு ||ப||**

**கொல்லகெளெயர மேளதல்லி செல்வ அபராஹ்னதல்லி**
**எல்ல ஜனரு ஸந்தணிஸெ மெல்லனெ நிவராஸெ ||அ.ப||**

ஸ்பாடிக ஸத்கோபுராவளி ஹேமகவாட ஆருபுட தாம்ரதலி
பாடிஸி கபீர பரிக கோடெ கொத்தளகளிந்த
நோடகர்கெ ஆஶ்சர்ய விடப உபவனகளு ||1||

பாடிப த்விஜாளிரவகளு அல்லிகல்லி ஹாடக தோரண ஸாலுகளு
நீடாத ஹர்ம்யகளு ஶ்ருங்காடக பவன பித்தி
கோடி க்ருத்ரிம விஹங்க நாட்யகளிந்தொப்புவ ||2||

ப்ரபெயலிப்ப வஜ்ர வைடூர்ய நீலரத்ன நிபிடாருண வித்ருமாவளிய
ஸுபருஜ்ஹி ஶுகபிகௌக ஶுபரவ ஸ்ரவணகள்கெ
விபவ ஸௌக்ய பீருதிப்ப ஸபெகளிந்த ராஜிப ||3||

நர்திப மராளகுலவு அவிரள ஸுசித்ர பதாகாகேதுகளு
சத்ர மெரெவ ஸீகுரு ஒத்திடித வீதி கந்த-
ஸிக்த ஆபணங்களலி மொத்தகுஸுமராஶிய ||4||

அங்குர ஶ்ராவிகளு ததி ஜல கதளு பூர்ணாங்க கும்ப தெங்கு தண்டுல
ஜேங்கரிப மதுபதாமாலங்க்ருதத ரம்பாபூகா
த்யங்கித சத்வாரிகளு ஶங்க ஸீர பாணிகளு ||5||

ஆமோதமயவாகிரு தூபவு கந்த குஸும தாம அபரிமித தீபவு
ஹேம மணிமந்திரஸௌதாமுத சிங்கரத த்வார
ஸுமனோஹரவாகிரெ ராமாச்யுதரு தோஷதி ||6||

வஸுதேவ குமாரரிப்பரு பந்தரெந்து ஶஶிமுகெர்கேளி மனெயொளு
அஶனவ பிட்டு க்ருஷ்ணனெஸெவ ஸௌந்தர்யக்கெ மெச்சி
மிஸுனி ப்ராஸாதாக்ரஹதி ஸந்தஸதி நோடுத்தித்தரு || 7

க்ருஹாபத்ய பிட்டு பந்தரு பூஷணகள தேஹக்கெ ஹொந்ததெ பந்தரு
பாஹுபந்தியொந்தெவலய ஸுஹேமகுண்டலவந்தெ
ஆ ஹெங்களு தரிஸி கிருஷ்ண ஸ்னேஹகொதகி பந்தரு || 8

ஒந்தெ கண்கெ கஜ்ஜலிட்டரு ஹார பதக பந்திஸி மத்யகெ பந்தரு
ஹொந்தாமகளங்க்ரிகிட்டு ஒந்தெ ஸ்ருதிகெ மூகுதிட்டு
இந்துமுகியரெரகொளுத நிந்து நகுத பந்தரு || 9

ஶிஶுகள்கம்மியனீயதெ தொட்டிலொளு ரோதிஸுவ மக்களனு துகதெ
பிஸஜனேத்ரனு சித்தவபஹாரிஸலு ஓடிபந்தரு
குஸுமஶரனட்டுளிய ஸைரிஸதெ ஸாரங்காக்ஷேரு || 10

ப்ரமிஸி காமினியர தண்டவனு வாஸுதேவ கமனீயரூப தோர்தனு
ரமணியரு கர்ம்யாக்ரதல்லி ரமெயரஸன க்ருதிகெ மெச்சி
ஸுமனனானன நட்டு மௌனி சமுதொலு மை மரெதரு || 11

ஹஸிதவதனாபாங்கதிந்தலி நோடிதனு ஶஶிமுகேர மதனனய்யனு
குஸுமாபாணனம்புகளு ஆஸியரெதெகெ நாண்டுதிரலு
நஸுனகெய ஸுதெயனூடி அஸமஸுகவனித்தனு || 12

தர்ப்பகன தர்ப்பனில்லிஸி ஹர்ம்யாக்ரதூளிப்ப நாரியர மன்னிஸி
ஒப்பித த்விபேந்த்ரனந்தெ ஸர்ப்பதல்ப ஸங்கர்ஷணரு
ஸர்ப்பவேணியர்கானந்தானல்பவார்த்திலிட்டரு || 13

குஸுமனேத்ரெயர்ஹரிபலர மேலெ மளெகரெது குஸும லாஜாக்ஷதெகளிந்தலெ
வஸுதெஸுரரு கந்தாக்ஷதெ வஸன ஸ்ருக்கந்தோபாயனதி
அஸுரஹரன பூஜிஸிதரு அஸம பக்தியந்தலி || 14

ஸந்ததிகோபியர்மன்னமாடித தபத பலவு பதுமனாபன வதனாம்ருதவனு
உதயாஸ்ததலி ஸேவிபரெந்த்வதிபனக்கா ராமகிருஷ்ணர
இரவிகெ பந்தஹங்கார மதஸொக்கித ரஜகனு || 15

மதுரெயரஸு தோடுவ அம்பரவ ஹேரிகொண்டுபதிகெ பந்திரெ பேடிதகிருஷ்ண
ஹோதிகெ தாரை உத்தமோத்தம ம்ருதுதரத்வென்னலவனு
வதிஸிதனு கதிகக்ரஜனிகெ மதவேரித மூடனு || 16

பணகுப்ருத்யரிகெ ந்ருபதியு உடுப வஸ்த்ர கனஸினொளகரெ ஸல்வவெ
வனசரரு ஸொக்கிதிரி அனுபாலிஶர்மரண பயஸி
நெனெதிரீ மாதன்னு ராஜனனுகர்னிம்ம கொல்லுவரு || 17

த்ருப்தனுடியனாடபேடிரோ பதுகி ஹோகி கோப்தரில்ல நிமகெ எந்தனு
ஸப்தத்வய புவனேஶ்வரனு மத்தவன தலெயிளுஹிதனு
ஹஸ்ததிந்த க்ஷிப்ரத்யவன ப்ருத்யரோடி ஹோதரு || 18

அவனிபன வஸ்த்ரவஷ்டனு க்ருஹிதரு ஸுவஸனவனுட்டு தொட்டரு
ஸவெயதஷ்டு ஸூரெபிட்டு கோவரிகெல்ல கொட்டரு
அவனிக்ஹாஸி பிட்டு நகுத புவனேஶ்வரரு நடெதரு || 19

முந்தெ பரலு வேஷகாரனு யாவகனொப்ப பந்து அங்க்ரித்வயகெரகிதனு
இந்திரேஶ ராமரிகெ ஸுந்தராவரண ஹோதிஸெ
கந்தர்ப்ப கோடிலாவண்யரு ஹொந்திதரு சித்ரவ || 20

அவரங்கத ஸேவெ மாடித யாவகனு ஸவெயதிஹானந்த களிஸித
இவன ப்ரபெயு தும்பிதல்லி யாவ பாலேபதந்தித்தரு
நவனீல ஶ்வேதாத்ரியந்தெ அவனியல்லி தோர்தரு || 21

முந்தெ தாமகர்த ஸுதாம ராமகிருஷ்ணரிக்வந்திஸித ஸாஷ்டாங்கப்ரணாம
ஒந்தெ நிஷ்டெயிந்த ஸ்தோத்ரனந்ததிந்த மாள்பன
ஸன்மந்திரதி பூஜெகொண்டு ஸுந்தரரு ஒப்பிதரு || 22

**இந்தென ஜன்மவெ ஸபலவு ஸ்ரீநாத நீவு பந்திரி நூரொந்து குலவு**
**ஹொந்திதரு முக்தினகர ஸந்தேஹவில்லவு பாம்ஸு**
**ஹொந்தலாகி க்ருஹபவித்ர மதானந்தகர்கில்லவு || 23**

**நீவிப்பரு விஸ்வகாரணரு ப்ரபுகளு ஜகத்பாவனரு அவதாரிகரு**
**தேவத்விஜகோவு ரக்ஷிஸுவ தர்மதீக்ஷெயிந்த**
**தேவாரிகளன்னு ஸவரி பூவிபார களெதிரி || 24**

**நிம்மிந்தெ தர்மக்கெ க்ஷேமவு ஸர்வரிகெ கர்மானுஸாரத பலவு**
**நிமகெ ஶத்ரு மித்ரரு ஸமானரு புவன ஜீவர்**
**தம தம்ம யோக்யதெயந்தெ கர்மவ மாட்யம்பரு || 25**

**நிம்ம ப்ருத்ய ப்ருத்ய ப்ருத்யர பரிசாரக நா ஸன்மார்க்கதி ஸிக்கிஸென்னனு**
**நிம்ம வைஷ்ணவஜனர ஶுத்தோத்தமர ஸேவெயலென்னிட்டு**
**துர்மதிய பிடிஸய்ய ஸ்ரீரம்மெயள ரமணனெ || 26**

**பாஹி பாஹி ப்ரஸன்னேஸ்வர முக்தாமுக்த தேஹிகளிகெ நீ நியந்தார**
**பாஹி பாஹி நிர்ஜரர ஸமூஹவன்த்யானந்திஸிந்தோ**
**பாஹி பாஹி தேஹிக ஸந்தோஹாமரபூருஹ || 27**

**ராமாச்யுதர ஸ்தோத்ர மாடித பக்தியலி ஸுதாம கந்தாக்ஷதெ வஸ்த்ரதி**
**பூமாலெயிம் பூஜிஸித் ரீமத்ரமாரமண முக்தி**
**தாமதல்லி அவன தன்ன தாமகர்தன மாடித || 28**

**ப்ரஸனவெங்கட கிருஷ்ண பக்தரு ஸம்ஸ்ருதிய கஸணெகஞ்ஜதிஹ தீரரு**
**தஶப்ரமதிய மதவர்த்திகளு தஶம ஸ்கந்தம்ருதவார்த்திலி**
**நிஶிதின ஸ்னானபானமாடி எஸெவ முக்திகெய்துவரு || 29**

வில் விழாவைப் பார்ப்பதற்காக, ராம கிருஷ்ணர்கள் மகிழ்ச்சியுடன் மதுரைக்கு வந்தனர். || ப

தங்களின் கொல்லர்களின் குழுவினருடன், அழகான மாலை நேரத்தில், அனைத்து மக்களும் நிறைந்திருக்கையில், இவர்கள் மெல்ல நடந்து வந்தனர். || அப

ஸ்படிகங்களால் ஆன கோபுரங்களின் வரிசைகள், பெரிய கதவுகள் தாமிரங்களால் ஆயின, தங்க, தாமிரங்களால் கோட்டை கொத்தளங்கள் செதுக்கப்பட்டிருந்தன. பார்ப்பவர்களுக்கு வியப்பினை கொடுப்பதான, மர வரிசைகளைக் கொண்டதான தோட்டங்கள் அங்கிருந்தன. || 1

இனிமையாக கூவும் பறவைகளின் சத்தங்கள் கேட்டன. வரிசையாக கட்டப்பட்டிருந்த மாட மாளிகைகள். அவற்றில் அலங்கரிகப்பட்ட தோரண வரிசைகள். அழகான அரண்மனைகள், அலங்கரிக்கப்பட்ட பவனங்கள், அதில் செயற்கையான அலங்காரங்கள். ||2

ஒளிர்வதான வஜ்ர, வைடூர்ய, நீல, ரத்ன, தங்கமயமான பவழங்களின் வரிசைகளால் பளபளக்கும் அலங்காரங்கள், கிளிகள், மயில்கள் ஆகியவற்றின் கூக்குரல்கள் ஆகியவை கேட்பதற்கே மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தன. இவ்வாறான ஒரு இனிமையான சூழ்நிலையை அவர்கள் அங்கு கண்டனர். || 3

குதித்து நடனமாடும் அன்னப்பறவைகள், ஏராளமான மங்களகரமான பதாகைகள், அலங்காரங்கள் ஆகியவை கட்டப்பட்ட வீதிகள், சந்தன மணம் சூழ்ந்திருப்பதான வீடுகள் அங்கிருந்தன. || 4

முளைகள் கட்டப்பட்ட, தயிர், தண்ணீர் இரண்டையும் நன்கு கலந்த பூர்ண கும்பம், அதில் தேங்காய், அரிசி, ரீங்காரம் இடும் தேனீக்கள் சூழ்ந்த பூக்களால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. இரு பக்கமும் வாழை மரம் கட்டப்பட்டிருந்த நிலைப்படிகளில், அந்த மக்கள், கைகளை குவித்தவாறு, இவர்களை வரவேற்க காத்திருந்தனர். || 5

மகிழ்ச்சியில் அந்த மக்கள் தூபம், சந்தனம், நறுமணம் மிக்க மலர்கள், அபாரமான தீபங்கள், தங்கமயமான, ஒளிர்வதான அலங்கரிக்கப்பட்ட வாயில்கள் என அனைத்தும் மிகவும் அழகாக இருந்தன. இதைக் கண்ட ராம, கிருஷ்ணர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வந்து கொண்டிருந்தனர். || 6

வஸுதேவனின் மக்கள் இருவரும் வந்திருக்கிறார்கள் என்று, சந்த்ரனைப் போன்ற முகத்தைக் கொண்டவர்கள் கூறுவதைக் கேட்டதும், வீட்டில் உண்டு கொண்டிருந்த உணவினை விட்டு அனைவரும் வெளியே ஓடோடி வந்தனர். ஸ்ரீகிருஷ்ணனின் ஒளிர்வதான அழகினைப் பார்த்து மகிழ்ந்து, அவர்களின் வீட்டு மாடிகளில் நின்று அனைவரும் மகிழ்ச்சியுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர். || 7

வீடு, குழந்தைகள் ஆகியோரை விட்டு வந்தனர். தேகத்தில் ஆபரணங்களை அணியாமல் வந்தனர். தோள் ஆபரணம் ஒன்றினை அணிந்திருக்கின்றனர். ஒன்று இல்லை; ஒளிர்வதான குண்டலங்கள் ஒன்று இருக்கிறது. இன்னொன்று இல்லை. இவ்வாறாக அணிந்த அந்தப் பெண்கள், ஸ்ரீகிருஷ்ணனின் நட்பினை விரும்பியவாறு அவனை பார்க்க வந்தனர். || 8

ஒரு கண்ணில் மட்டும் மை தடவினர். மாலைகள், பதக்கங்களை கழுத்தில் அணியாமல் இடுப்பில் அணிந்தனர். கை / இடுப்பில் அணிய வேண்டியதை, காலில் அணிந்தனர். ஒரே மூக்கில் மூக்குத்தி அணிந்து, இவ்வாறாக சந்த்ரனைப் போல ஒளி பொருந்திய முகம் கொண்டவர்கள் சிரித்தவாறு நின்று ஸ்ரீகிருஷ்ணனைப் பார்க்க வந்தனர். ||9

குழந்தைகளுக்கு முலைப் பால் கொடுக்காமல், தொட்டிலில் அழுது கொண்டிருக்கும் குழந்தைகளை தூக்கிக் கொள்ளாமல், தாமரைக் கண்ணன் அவர்களின் சித்தத்தை அபகரிக்க, அவர்கள் வெளியே ஓடி வந்தனர். மன்மதனின் பாணங்களை தாங்கிக் கொள்ள முடியாமல், மான் போன்ற விழிகளைக் கொண்ட அந்தப் பெண்கள் வந்தனர். || 10

இவ்வாறு ஓடி வந்த பெண்களின் குழுவினைப் பார்த்து, ப்ரமித்து, தன்னுடைய அழகான ரூபத்தை ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுக்கு காட்டினான். அந்தப் பெண்கள், மகிழ்ச்சியுடன், ரமாதேவியின் தலைவனின் தேகத்தைப் பார்த்து மெச்சி, தங்கள் மனம், முகம் ஆகியவற்றை அவனிலேயே வைத்து, வாய் பேச முடியாமல், தங்களை தாங்களே மறந்தனர். || 11

மலர்ந்த முகத்தின் அழகினால் ஸ்ரீகிருஷ்ணன் அவர்களை பார்த்தான். மன்மதனின் காம பாணங்கள், அந்த சந்த்ரமுகிகளின் ஹ்ருதயத்தை தாக்கின. இதனால் ஸ்ரீகிருஷ்ணன் தன் முகத்திலிருந்து புன்னகை என்பதான அமிர்தத்தை அவர்களுக்கு வழங்கினான். அபாரமான சுகத்தை அவர்களுக்கு வழங்கினான். || 12

காமனின் தாக்குதலை நிறுத்தி, தன்னைப் பார்க்க வந்த பெண்களை அருளி, கஜராஜனைப் போல, பாம்பின் மேல் படுப்பவனான ஸங்கர்ஷணன், பாம்பு போல நீளமான கூந்தலை உடைய அந்தப் பெண்களை ஆனந்தக் கடலில் மூழ்கடிக்கச் செய்தான். || 13

மலர்ந்த கண்களை உடைய பெண்கள், ராம கிருஷ்ணர்கள் இருவர் மேலும் பூ, லாஜா, அக்ஷதை ஆகியவற்றின் மழை பொழிந்தனர். ப்ராஹ்மணர்கள் சந்தனம், அக்ஷதை, நறுமணம் மிக்க மாலைகள் ஆகியவற்றைக் கொண்டு அஸுரனைக் கொல்பவனை பூஜித்தனர். அவன் மேல் அவர்கள் அபாரமான பக்தியைக் கொண்டிருந்தனர். || 14

இந்த கோபிகையர்கள் தாங்கள் முன்னர் செய்த தவத்தின் பலனாக, இப்போது பத்மனாபனின் வதனாம்ருதம் அவர்களுக்கு கிடைத்தது. ஸூர்ய உதய மற்றும் அஸ்தமனத்தில் இவர்கள் ராம, கிருஷ்ணர்களையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அந்த வண்ணான், தன் தலைக்கேறிய கர்வத்தினால் கூறினான். || 15

மதுரை அரஸன் உடுத்திக் கொள்ளும் ஆடைகளை அணிந்து கொண்டு, ஸ்ரீகிருஷ்ணன் அவனிடம் மறுபடி கேட்கிறான். மேலே போர்த்திக் கொள்வதற்கு ஒரு மிகச் சிறந்ததான, மிருதுவான மேலாடை ஒன்றை கேட்கிறான். அந்த வண்ணான் கர்வம் கொண்ட ஒரு மூடனாக இருந்தான். || 16

வனத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் உங்களுக்கு, அரஸன் உடுத்தும் வஸ்த்ரம் கனவிலும் கூட கிடைக்காது. சிறியவர்களான நீங்கள் மரணத்தையே விரும்பி இருக்கிறீர்கள். இந்த விஷயத்தை அரஸன் கேட்டால், அவன் உடனடியாக உங்களை கொல்வான் - என்றான் அந்த வண்ணான். || 17

பைத்தியக்காரத்தனமாக பேசாதீர்கள். பிழைத்துப் போங்கள். உங்களை காப்பவர்கள் யாரும் இல்லை - என்றான். ஈரேழு உலகங்களுக்கும் தலைவனான ஸ்ரீகிருஷ்ணன், தன் கைகளால் அந்த வண்ணானின் தலையை பிடித்து இழுத்து கீழே தள்ளினான். இந்த சண்டைக் காட்சியைப் பார்த்த மற்ற வேலையாட்கள் அங்கிருந்து ஓடிப் போயினர். || 18

ராமகிருஷ்ணர்கள், கம்ஸ அரசனின் அனைத்து ஆடைகளையும் கவர்ந்தனர். அதில் இருந்த நல்லதான ஒரு ஆடையை எடுத்து அணிந்தனர். அந்த மூட்டைகளில் இருந்த அனைத்து ஆடைகளையும் எடுத்து, மற்ற கோபாலகர்களுக்குக் கொடுத்தனர். அப்படியும் மீதம் இருந்த ஆடைகளை பூமியில் கீழே போட்டுவிட்டு, ஸ்ரீகிருஷ்ணன் சிரித்தவாறு அங்கிருந்து நடந்தான். || 19

ஸ்ரீகிருஷ்ணன் மேலும் முன்னேறிச் செல்ல, அங்கு ஒரு வேஷக்காரன் (ஆடைகளை வடிவமைப்பவர்) வந்து, ஸ்ரீகிருஷ்ணனின் பாத த்வயங்களில் விழுந்து வணங்கினான். ஸ்ரீகிருஷ்ண பலராமர்களுக்கு, ஒரு அழகான மேலாடையை போர்த்தினான். கோடி சூர்யர்களைவிட ஒளி பொருந்தியதான, மன்மதனின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணன் மற்றும் பலராமன் இருவரும் இவ்வாறாக அவனிடமிருந்து ஒரு மேலாடையைப் பெற்றனர். || 20

இவ்வாறாக இவர்களின் அங்கத்திற்கு சேவை செய்த அந்த வேஷக்காரன், அபாரமான என்றும் குறையாத மகிழ்ச்சியைக் கொண்டான். ஒளி பொருந்திய இவர்கள், உதய சூரியன் போல தெரிந்தனர். சிறந்ததான இரு பர்வதங்களைப் போல இவர்கள் இந்த பூமியில் தெரிந்தனர். || 21

அடுத்து, மாலையை செய்பவரான ஸுதாமன் என்பவர் வந்து இவர்கள் இருவரையும் வணங்கினான். ஸாஷ்டாங்க ப்ரணாமங்களை செய்தான். மிகவும் பக்தி, ஸ்ரத்தையுடன், மகிழ்ச்சியுடன் ஸ்தோத்ரம் செய்பவனின் பக்தியை, பூஜையை ஏற்றுக் கொண்டு, அழகான இந்த இருவர் முன்னே நடந்தனர். || 22

ஸுதாமன் கூறுகிறான். இன்று என்னுடைய பிறவியே தன்யம் ஆயிற்று. ஸ்ரீநாதனே நீங்களே இங்கு வந்திருக்கிறீர்கள். என்னுடைய 101 குலமும் முக்தியை அடைந்தனர். இதில் எந்தவித சந்தேகமும் இல்லை. ஸ்ரீகிருஷ்ணனின் பாத தூளிகளை, அதனை வணங்கியவர்களுக்கு, அவர்களின் வீடு பவித்ரம் ஆகிறது. இவ்வாறு செய்யாமல், மதம் கொண்டவர்களுக்கு இத்தகைய நற்பலன்கள் இல்லை. || 23

நீங்கள் இருவரும் இந்த உலகிற்கே காரணர்கள். தலைவர்கள். உலகத்தையே பவித்ரம் ஆக்குபவர்கள். அவதாரம் எடுத்தவர்கள். தேவர்களை, ப்ராஹ்மணர்களை, பசுக்களை காப்பதான தர்ம தீக்ஷையைக் கொண்டு, தேவர்களின் எதிரிகளை கொன்று, பூமியின் பாரத்தை குறைக்கிறீர்கள். || 24

உங்களாலேயே தர்மம் காக்கப்படுகிறது. அனைவருக்கும் அவரவர்களின் கர்மத்திற்கு ஏற்ப பலன்கள் கிடைக்கின்றன. உங்களுக்கு எதிரி, நண்பர் இருவரும் ஸமானரே (உங்களிடம் பாரபக்ஷம் இல்லை என்று அர்த்தம்). இந்த உலகத்தில் இருக்கும் ஜீவர்கள், தத்தம் யோக்யதைக்கேற்ப கர்மங்களை செய்யுங்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். || 25

உங்களின் சேவகனின், சேவகனின், சேவகனின் சேவகன் நான். என்னை நல்மார்க்கத்தில் இருக்கச் செய்து, உங்களின் வைஷ்ணவ மக்களின் (பகவத் பக்தர்களின்), பவித்ரமான உத்தமமான மக்களின், சேவையில் வைத்து, என்னுடைய துர்மதியை விடுவிக்க வேண்டும். ஹே ரமாதேவியின் தலைவனே. || 26

ப்ரஸன்னேஶ்வரனே, பாஹி பாஹி. முக்த, அமுக்தர்களை நீயே நியந்த்ரணம் செய்பவன். மூப்பு (முதுமை) இல்லாத தேவர்களின் குழுக்களால் வணங்கப்படுபவன். ஆனந்தமயனே. ஜீவர்களின், தேவர்களின் கல்பவ்ருக்ஷம் நீயே. || 27

இவ்வாறான ஸுதாமன், ராம, அச்யுதர்களின் ஸ்தோத்ரத்தை மிகவும் பக்தியுடன் செய்தான். கந்த, அக்ஷதை, வஸ்த்ரம், பூமாலைகள் ஆகியவற்றைக் கொண்டு அவர்களை பூஜித்தான். ரமாரமணனான ஸ்ரீகிருஷ்ணன், தன்னுடைய முக்தி தாமத்தில், அந்த ஸுதாமனை, தாமகர்தனாக (பூமாலை சூட்டுபவனாக) ஆக்கினான்.|| 28

ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ண பக்தர்கள், ஸம்ஸார ஸாகரத்திற்கு பயப்படாத வீரர்கள். அவர்கள் தஶப்ரமதியான ஸ்ரீமதானந்த தீர்த்தரின் மதத்தை பின்பற்றுபவர்கள் அவர்கள். பாகவத தஶம ஸ்கந்த அமிர்தத்தின் கடலில், இரவும் பகலுமாக தொடர்ந்து நீந்தி (அதனை குடித்து), பின்னர் முக்தியை சென்று அடைவார்கள். || 29

***

**60. ராக: மத்யமாவதி  தாள : ஜக்கணி**

**பாக்யவனெணிஸிதரெணிகில்ல குப்ஜெ யோக்யதெ வாஸுதேவ தானெ பல்ல || ப**

**போஜேந்த்ரனங்கலேப ஸௌரபிகந்த பாஜனதொளு தும்பிகொண்டு பந்து**
**ராஜமார்க்கதி நிந்த த்ரிவக்ரெயள நோடி ராஜீவலோசன நகுத கேளிதனு || 1**

**ஆரு நீ நின்ன பதியாரு ஈ திவ்ய ஸௌரபிகந்த யாரிகெ ஒய்யுவெ**
**தாரெ நம்மங்ககுத்தமகந்த இதரிந்த மேரெயில்லத ஸுகபடுவெ நீயெந்த || 2**

ஸௌந்தர்யஸார தவஸம்மத தாஸி நா இந்தென்ன நாம த்ரிவக்ரெயெந்து
கந்தானுலேபகர்த்ரியு நானு கம்ஸகெ கந்தர்ப்ப நின்னிந்தாரு ப்ரியரெந்தளு || 3

சித்ரூப மதுர பைஶல உக்தியிம் பலபத்ரகெ தனகெ பேடலு ப்யாகெ
பத்ராங்கெயித்தளு பக்திபரிதெயாகி ஸத்ரூப லேபனதெஸெவ கோவிந்த || 4

குங்கும கேஶர கஸ்தூரி கந்தவ ஸங்கருஷ்ண தானு கொட்யங்கக்கெ
அங்கிதராகி ஒப்பிதரு குப்யெஜ மூருடொங்க தித்திதனு முரார்த முகுந்த || 5

பங்கஜனாபன ப்ரஸன்னதெ யாரிகெ ஶங்கெயில்லதெ ஸௌக்யவவரிகெ
டொங்க தித்திமதேனச்சரியல்லா வித்யெய ஶங்கெ நீகிஸுவ ஸர்வேஶஸர்வேஶ || 6

ஸந்தருஶன ஸ்பர்ஶன தாரிகுண்டவரெந்திகெ முகுதிகெய்துவரு ஸத்ய
இந்திரேயரஸன பாதாப்ஜாஸ்ரிதரிகெ துந்துகத பயவேகெ சிந்த்யாகெ || 7

த்ரிவகெ ருசிரவக்த்ரெய கால்களல்லி ஸ்ரீ த்ரிவிக்ரம பதவனொத்தி இட்டு
தேவேஶத்வ்யங்குலி பரிமிதவெத்தித தேவிய சுபுகவெத்தித கைலி || 8

வக்ரவுருஜுமாயிதபலெகெ ஆக்ஷண ஶக்ராங்கனெயந்தெ தோர்த்தளாகெ
கக்கஸகுசபார க்ருஶமத்யதிந்தொப்பி சக்ரிய பளியெ நிந்தளு லஜ்ஜெயிந்த || 9

ஸ்ரீ கிருஷ்ணஸ்பர்ஶதிஹ்ருச்ச்ரீய வர்திஸெ ஆ காந்தெ ஹரிய உத்தரீய வஸ்த்ரவ
ஆகாங்க்ஷெயிந்த ஜக்கிதள் மாதாடிதள் ஹே காந்த வீரதொரெயெ பா மனெகெந்து || 10

குணரூபபூர்ண நீ கேளு ப்ரார்த்தனெ தீனஜனதயானிதெயென்ன மனெகெ பந்து
இனிகோலனம்ப ப்ரேரிஸிதெ நீ பரிஹாரவனு மாடு பிட்டிரலாகெ நின்னிந்தளு || 11

மானினி ஹிகெந்தரண்ணன முகநோடி ஸாமக கோவர நகுத நோடி
ஆ நாரிகெந்த மந்தஸ்மிதேக்ஷணதி சந்த்ரானனெ ப்ருதுஶ்ரோணி மாத கேளெந்த || 12

வ்ருந்தாரகர மனோவ்யதெய பிடிஸி நின்ன மந்திரகெ பஹெ நடெயென்னுத
ஹொந்திதம்ருத்வாக்யதிந்த மன்னிஸி கோவவ்ருந்த ஸஹித அண்ண நோடனெய்தெ முததி || 13

தேவேஶ்வரர பூஜிஸிதரு ஸுஜனரு பாவக்ஞரு ஸ்தோத்ரவந்தனெயிம்
வபுரஜனரிகெ கேளிதனு தனுஷஸ்தல தாவுதென்னுத ஸர்வக்ஞரு நரரந்தெ || 14

இவர லாவண்யாம்ருதவுண்டு புதரக்ஷிவயெயிக்கதலெ கவிது நோடுத
ஸவெயத ஸுகபடுத்தித்தருப்ரஸன் வெங்கட ரௌஹிணீயரு கண்டரு பவன தனுவ || 15

குப்ஜையின் (த்ரிவக்ரை) பாக்கியத்தை எண்ணத் துவங்கினால், அதற்கு எல்லையே இல்லை. அவளின் யோக்யதையை வாஸுதேவன் ஒருவனே அறிகிறான். || ப

போஜ அரஸனான கம்ஸனின் தேகத்திற்கு பூசுவதான, நறுமணம் மிக்க சந்தனத்தை ஒரு பாத்திரத்தில் நிரப்பிக் கொண்டு வந்து, ராஜ மார்க்கத்தில் நின்றிருந்த த்ரிவக்ரையை பார்த்து, தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணன், சிரித்தவாறு இவ்வாறு கேட்டான். || 1

நீ யார்?. உன்னுடைய பதி யார்?. இந்த திவ்யமான நறுமணம் மிக்க சந்தனத்தை யாருக்காக கொண்டு செல்கிறாய்?. நம் அங்கங்களுக்கு இது மிகவும் உத்தமமான சந்தனம். இதனை எனக்குக் கொடுத்தால், ஒப்புமை இல்லாததான சுகத்தை நீ பெறுவாய் - என்றான் ஸ்ரீகிருஷ்ணன். || 2

அழகே வடிவானனே, நான் உன்னுடைய தாஸி. என்னுடைய பெயர் த்ரிவக்ரை. நான் கம்ஸனுக்கு சந்தனம் அரைத்துக் கொடுப்பவள். கந்தர்ப்பனே, உன்னை யார்தான் விரும்பமாட்டார்கள்? - என்றாள். || 3

சித்ரூபனான ஸ்ரீகிருஷ்ணன், மதுரமான, தெளிவான உக்தியினால், பலபத்ரனுகாக, தனக்காக அந்த சந்தனத்தை கேட்க, த்ரிவக்ரை விரைவில், பக்தியுடன் அந்த சந்தனத்தை கொடுக்க, கோவிந்தன் அந்த சந்தனத்தை வாங்கிக் கொண்டான். || 4

குங்குமம், கேசரி, கஸ்தூரி கலந்து தயாரிக்கப்பட்டதான அந்த சந்தனத்தை ஸங்கர்ஷணன் தான் தன் அங்கத்தில் பூசிக் கொண்டான். அந்த குப்ஜையின் மூன்று வக்ரத்தை முகுந்தன், முர என்னும் அஸுரனைக் கொன்றவன், திருத்தினான் (சரி செய்தான்). || 5

பத்மனாபனின் மகிழ்ச்சி (அனுக்ரஹம்) என்பது யாருக்கு என்றால், அவன் மேல் எவ்வித சந்தேகமும் இன்றி (யதார்த்த ஞானம்) இருப்பவர்களுக்கு. அத்தகையவர்களுக்கு ஸௌக்யமே வருகிறது. அப்படிப்பட்டவனுக்கு, த்ரிவக்ரையின் வக்ரத்தை சரி செய்வதில் என்ன வியப்பு?. அனைத்து வித்யையின் சந்தேகத்தையும், ஸர்வேஶனான ஸ்ரீகிருஷ்ணனே தீர்த்து வைக்கிறான். || 6

அத்தகைய ஸ்ரீகிருஷ்ணனின் தரிசனம், ஸ்பர்ஶம் என்பது யாருக்கு கிடைக்கிறதோ, அவர்கள் முக்திக்கு செல்கிறார்கள். இது ஸத்யம். இந்திரெ அரஸனின் பாத கமலங்களை அடைந்தவர்களுக்கு, ஸம்ஸாரத்தின் பயம் என்பது எதற்கு?. கவலை எதற்கு?. || 7

த்ரிவிக்ரை என்னும் அழகான முகம் கொண்டவளின் கால்களில், ஸ்ரீ த்ரிவிக்ரமன் தன் பாதத்தை வைத்து அழுத்தி, தேவேஶன், அவளுடைய கன்னத்தைப் பிடித்து, இரண்டு அங்குல அளவிக்கு அவளது முகத்தை தூக்கினான். || 8

முகம் மிகவும் அழகாக மாறியது அந்த அபலைக்கு. அந்த நொடியே அவள் இந்த்ரனின் மனைவியோ என்று சொல்லும் அளவிற்கு அழகாக மாறினாள். முலைகளின் எடைகளை தாங்க முடியாததாகவும், மெலிதான இடையுடனும் மாறியவளான த்ரிவக்ரை, சக்ரதாரியான ஸ்ரீகிருஷ்ணனின் அருகிலேயே வெட்கத்துடன் நின்றிருந்தாள். || 9

ஸ்ரீகிருஷ்ணனின் ஸ்பர்ஶனத்தால் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவளாகி, அந்தப் பெண் ஸ்ரீஹரியின் உத்தரீயத்தை (மேலாடையை) பிடித்து இழுத்தாள். இவ்வாறு பேசினாள். ஹே காந்தனே. வீரனே. தலைவனே. வா என் வீட்டிற்கு - என்றாள். || 10

குண, ரூபங்களில் நீயே பூர்ணன். கேள் என்னுடைய ப்ரார்த்தனையை. பக்தர்களுக்கு கருணைக் கடலாக இருப்பவனே. என் வீட்டிற்கு வருவாயாக. மன்மதனின் பாணத்தை என் மேல் விட்டிருக்கிறாய். அதற்கு நீயே பரிஹாரம் செய்ய வேண்டும். உன்னை நான் இனி விட்டு இருக்க மாட்டேன் என்றாள். || 11

த்ரிவக்ரை இவ்வாறு கூற, ஸ்ரீகிருஷ்ணன், தன் அண்ணனின் முகத்தைப் பார்த்து, தன்னைப் பின் தொடர்ந்து வந்து சிரித்தவாறு நின்றிருக்கும் இதர கோபாலகர்களைப் பார்த்து, பின் அந்தப் பெண்ணிடம் புன்னகையுடன் இவ்வாறு கூறினான். சந்த்ரனைப் போல ஒளி பொருந்தியவளே. அபாரமான இடுப்பு, அவயவங்களைக் கொண்டவளே, நான் சொல்வதைக் கேள் - என்றான். || 12

கோபாலகர்களின் மனதின் கஷ்டங்களை விடுவித்து (கம்ஸனை கொன்ற பிறகு), பின் உன் வீட்டிற்கு நான் வருவேன் - என்றான். இவ்வாறு இனிமையாக பேசி அவளை அருளியவாறு, தன் கோபாலகர்களின் குழுவுடன், தன் அண்ணனுடன், மகிழ்ச்சியுடன் ஸ்ரீகிருஷ்ணன் புறப்பட்டான். || 13

ஸஜ்ஜனர்கள் தேவேஶ்வரனை பூஜித்தனர். மிகவும் பக்தியுடன், ஸ்தோத்ரங்களை, வந்தனைகளை செய்தனர். அப்போது ஸ்ரீகிருஷ்ணன் அந்த ஊர் மக்களிடம் இவ்வாறு கேட்டான். தனுர் யாகம் நடக்கும் இடம் எது? என்று ஸர்வஜ்ஞனான ஸ்ரீகிருஷ்ணன், சாதாரண (எதுவும் தெரியாத) மனிதர்களைப் போல கேட்டான். || 14

ராம, கிருஷ்ணர்களின் அழகினை பருகியவாறு, ஜ்ஞானிகளின் கண்கள் சிறிதும் நகராமல் அவனையே பார்த்தவாறு, அபாரமான (சிறிதும் குறையாத) சுகத்தினை அவர்கள் அனைவரும் அனுபவித்தனர். அப்போது ப்ரஸன்ன வெங்கடன் மற்றும் ரோஹிணியின் மகனான பலராமன் இருவரும், அந்த தனுஸ் வைத்திருக்கும் பவனத்தைக் கண்டனர். || 15

***

**61. முக்கண்ணன வரதனுவனு கம்ஸனு ஸொக்கின பக்திலி பூஜெகிட்டு**
**ரக்கஸாந்தக கிருஷ்ணராமர கரெஸிரெ லெக்கவெ ஹுல்லு பில்லனு முரிவாட || ப**

**இந்த்ரசாபோபம விசித்ரதனுவனு பந்து கண்டரு ராமகிருஷ்ணராகெ**
**கந்த மால்யாம்பர தூபதீப பலியிந்தர்ச்சனெகொண்டு ரஞ்ஜிஸலு |1**

**த்வரியதி பருதிரெ ஹரிராமரிப்பரனு தருவிதர் மார்க்கதி பரிசாரரு**
**நோரஜுகளிகெ அஞ்ஜி உரி ஹிந்தகாக்வதெ ஹரி ஹிடிதனு எடகெய்யலி பில்ல || 2**

**ஹெதெயேரிஸிதனு விஶ்வைக ஶாஸ்தார மதகஜேக்ஷுதண்டவ பிடிதந்தெ**
**பதிய காவலினவர்ஹெதரி பேடெனுதிரெ பதுமாக்ஷ மக்கள லீலெயந்தெ || 3**

**ஸஜ்ஜிஸிதனு ஸகலரு ஈக்ஷிஸுதிரெ பஜ்ஜிஸிதனு எரடு துண்டுமாடி**
**கர்ஜிஸிது சட் சட் ஸிடிலுகளபோலு நிர்ஜீவரந்தெ ஜனகராந்திஹோகெ || 4**

**கர்ஜனெயாகாஶ மண்டல தும்பிது திக்ஜாலவெல்லவர வ்யாபிஸிது**
**பெஜ்ஜரவடெதனு கம்ஸன மூர்ச்செயொள் ஜர்ஜரிதாதனு தைர்யகுந்தி || 5**

**காவலித்தவரு கோபதி ராமகிருஷ்ணர நீவு கட்டி தாவு கட்டியெம்ப**
**ஸேவக துர்மதிகளனு தனுஶ்யகலத்வயவன்ஹிடிது குட்டிதர் லீலெயலி || 6**

**ஒரளிகிக்கித தான்யதந்தெ ஹிட்டு ஹிட்டு கரட்டத்ஹாகெ மாடிதராக்ஷண**
**துருள கம்ஸனு மத்தெ களுஹித பலவனு தரிதுதிருகுதித்தர் புரதொளகெ || 7**

**ராஜிஸுத்தித்தரு புரத ஸம்பத நோடி ராஜவீதிலி கோவளரொளு நகுத**
**ப்ராஜத்பராக்ரமவனு கண்டு ஸுஜனரு ஈ ஜகத்பாவனரிவரெந்தரு || 8**

**மூஜகதொள் தேவதனுஜரொள் காணெவீஸோஜிகத பராக்ரமர ஸம**
**நைஜமானவரல்ல அஜபவஸுரவந்த்ய ஈ ஜகதலி ஒப்புதிஹரெந்து ||9**

**கோவக்களஸுக்ருதவ நோடி ஆவாக ஜீவன்முக்தரந்தெ ஸுகிகளாகி**
**ஸ்ரீவாஸுதேவன ஸமாஸ்ரிதராதரு தேவாம்ஶர் நரரல்ல இவரெந்தரு || 10**

**ஆவேளெயலி பானு அஸ்தமயவ நோடி ஸ்ரீவாஸுதேவ பலகோவளரு**
**தாவு ஹோதரு தம்ம ஶகடவித்தல்லி ஜயவந்தர் தார்மிகர் தயவந்தரு || 11**

**தொளெது பாதாப்ஜவனுண்டு க்ஷீரோதன களெதனிபவனு கம்ஸனமுத்திய**
**திளிது பலமுரஹரரு ஸௌக்யதலாராத்ரி லலித ஸ்வாபவ மாடிதரு ராமாச்யுதரு || 12**

**ஸத்யஸங்கல்ப ஸ்ரீகிருஷ்ணாஶ்ரித ப்ருத்யஜனார்த்தபூரண காரண**
**நித்ய நிர்தோஷ ஸச்சாரித்ராம்புஜனேத்ர தைத்யாந்தக ப்ரஸன்வெங்கடாத்ரீஶ || 13**

முக்கண்ணரான ருத்ர தேவரின் அருளால் பெற்றதான அந்த தனுஸ்ஸினை, கம்ஸன் அபாரமான பக்தியுடன் வைத்து பூஜை செய்து வந்தான். அஸுரர்களைக் கொல்பவர்களான கிருஷ்ண ராமர்களை உடனே அழையுங்கள். ஒரு சிறிய புல்லினைப் போல, அவன் (ஸ்ரீகிருஷ்ணன்) அந்த வில்லினை எடுத்து முறித்து விடுவான். || ப

வானவில் போல வளைந்திருந்ததான அந்த தனுஸ்ஸினை, ஸ்ரீகிருஷ்ணன் மற்றும் பலராமன் இருவரும் வந்து கண்டனர். வரும் வழியில் அங்கிருந்த வணிகர்கள் மூலமாக அவர்கள், சந்தனம், மாலைகள், ஆடைகள், தூப, தீப, பலி, அர்ச்சனை ஆகியவற்றை பெற்று ஒளிர்ந்தவாறு, அலங்காரம் செய்து கொண்டு வந்திருந்தனர். ||1

ஹரி, ராமர்கள் இருவரும் வேகமாக தனுஸ்ஸிடம் வந்தனர். வேலையாட்கள் இவர்களை இந்த தனுஸ் இருக்கும் இடத்திற்கு அழைத்து வந்தனர். கொசு / பூச்சிகளுக்கு பயந்து, எரியும் தீப்பந்தத்தை யாரும் அணைப்பாரோ?. அதைப்போல, ஸ்ரீஹரி, தன் இடது கையில் அனாயாசமாக அந்த வில்லினை பிடித்தான். || 2

மதம் பிடித்த யானையானது, கரும்பினை பிடித்ததைப் போல, ஸ்ரீகிருஷ்ணன், உலகத்தின் ஒரே தலைவன், அஸுரர்களைக் கொல்பவன், அந்த வில்லின் நாணினை ஏற்றான். அருகில் இருந்த காவலாளிகள் பயந்து, வேண்டாம் வேண்டாம் என்று கூறினர். ஆனால், தாமரைக் கண்ணனோ, சிறு குழந்தைகளின் விளையாட்டினைப் போல, அந்த தனுஸ்ஸினை எடுத்தான். || 3

அனைவரும் அந்த காட்சியையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, ஸ்ரீகிருஷ்ணன் அந்த வில்லினை இரு துண்டாக உடைத்தான். சட் சட் என மின்னல் போல அந்த தனுஸ் கர்ஜித்தது. இதைக் கண்ட அங்கிருந்த மக்களுக்கு, ஜீவனே விட்டு விலகியதைப் போல, அவர்கள் முகத்தில் இருந்த களை அகன்றது. || 4

அந்த தனுஸ் உடைந்த சப்தம், கர்ஜனை, ஆகாய மண்டலம் வரை பாய்ந்தது. திசைகளின் எல்லை அனைவரையும் சூழ்ந்து கொண்டது (அதாவது அனைவரும் வியப்படைந்தனர்). இதைக் கேட்டு கம்ஸன் கவலை கொண்டான். மூர்ச்சை அடைந்தான். தன் தைரியத்தை இழந்து, வலிமை இழந்தான். || 5

அந்த தனுஸ்ஸிற்கு காவலாக இருந்த காவலாளிகள் இதனால் கோபம் கொண்டனர். இவர்களை நீ கட்டு, நான் கட்டுகிறேன் - என்று கூறியவாறு அவர்கள் ராம, கிருஷ்ணர்கள் மேல் பாய்ந்தனர். துர்மதி கொண்ட இத்தகைய சேவகர்களை, இரு துண்டாக ஆகியிருந்த தனுஸ்ஸினை பிடித்து, ராம கிருஷ்ணர்கள், மிகவும் லீலையுடன் அவர்களை அடித்தனர். || 6

உரலில் சிக்கிய தானியமானது மாவு என வெளியில் வருவதைப் போல, ராம கிருஷ்ணர்கள் அந்த காவலாளிகளை பலமாக அடித்து அனுப்பினர். அப்போது துஷ்டனான கம்ஸன் மேலும் அதிகமாக அனுப்பிய சேனைகளை, அடித்து திருப்பி ஊருக்குள் அனுப்பினார்கள் ராம கிருஷ்ணர்கள். || 7

அந்த ஊரின் செல்வச் செழிப்பினைக் கண்டு வியந்தனர். ராஜவீதியில் சக கோபாலகர்களுடன் சிரித்தவாறு நடந்தனர். அண்ணன், தம்பிகளின் வீரத்தைக் கண்ட ஸஜ்ஜனர்கள், இவர்கள் இந்த உலகத்தை பவித்ரமாக்க வந்தவர்கள் - என்றனர். || 8

மூன்று உலகத்திலும், தேவ தானவர்களில், இத்தகைய அற்புதத்தை, இவர்களின் வீரத்திற்கு ஈடாக, நாம் இதுவரை எங்கும் கண்டதில்லை. இவர்கள் சாதாரணமான மனிதர்கள் இல்லை. ப்ரஹ்ம தேவர், ருத்ரதேவர் மற்றும் தேவர்களால் வணங்கப்படுபவர்களே, இப்போது இந்த நகரத்தில் வந்து கொண்டிருக்கின்றனர் - என்றனர். || 9

ராமகிருஷ்ணர்களை சூழ்ந்திருந்த அந்த கோபாலகர்களைப் பாருங்கள். அவர்கள் ஜீவன் முக்தர்களைப் போல சுகமாக இருந்தனர். ஸ்ரீவாஸுதேவனின் ஆஸ்ரயத்தில் இருந்தனர். அந்த ராம கிருஷ்ணர்கள், தெய்வ அம்சம் கொண்டவர்களே, சாதாரண நரர்கள் அல்லர் - என்றனர். || 10

அந்த சமயத்தில் சூர்ய அஸ்தமனம் ஆயிற்று. ஸ்ரீவாஸுதேவன் மற்றும் கோபாலகர்கள் அனைவரும் தங்கள் வண்டிகள் இருந்த இடத்திற்கு திரும்பிச் சென்றனர். அவர்கள் அனைவரும் ஜயவந்தர்கள். தார்மிகர்கள், கருணை கொண்டவர்கள். || 11

பாத கமலங்களைக் கழுவிக் கொண்டனர். பால் அன்னத்தை உண்டனர். இவ்வாறு இரவினை கழித்தனர். அடுத்து கம்ஸன் என்ன செய்யப்போகிறான் என்பதை அறிந்திருந்தனர். அப்படியிருந்தும், ராம கிருஷ்ணர்கள் அந்த இரவினை சுகமாக கழித்தனர். சுகமாக தூங்கினர். || 12

ஸ்ரீகிருஷ்ணன் ஸத்ய ஸங்கல்பன். தன்னை நம்பிய பக்தர்களின் துன்பங்களை போக்குபவன். பூரணன். அனைத்திற்கும் காரணன். நித்யன். நிர்தோஷன். நல்ல பவித்ரமான சரித்திரத்தைக் கொண்டவன். தாமரைக் கண்ணன். தைத்யர்களைக் கொல்பவன். அவனே ப்ரஸன்ன வெங்கடாத்ரீஶன். || 13

***

62. ராக : பந்துவராளி தாள : அட்ட

ராமகிருஷ்ணர த்ரோஹதபல தத்கால ஒதகிது
தாமஸாத்ம கம்ஸனிகுத்பாத தோரிது || ப

மனதி யோசிஸிதனு பிடத்யாமினி ஸமக்ரவ
தனுவு முரித க்லேஶ தன்ன ஜனர ஹிம்ஸெய
நெனெது நெனெது ராமகிருஷ்ணர கனவிக்ரமவனு
எணிஸி துர்மதி பீதிவிடிது அனிமிஷனவனு || 1

தனுவினல்லி தலெயுதோரது கன்னடியொளகெ
தினபமண்டலவெரடு தோரிதவனிதரொளகெ
மனஸ்ஸினல்லி நொந்து குளிது நோடுதிரலிக்கெ
கன துர்னிமித்த கண்டஞ்ஜுதித்தனு க்ஷணகெ க்ஷணகெ || 2

தேஹத நெளலு சித்ரசித்ராகிரெ அஹர்னிஶ கிவியலி
இஹந்த ப்ராணகோஷவடகி பஹள பயதலி
மஹிஜவெல்ல ஸுவர்ணவாகி இஹுது கண்டனு
மஹாமதாந்த தன்ன ஹெஜ்ஜெகள மஹியலி காணனு || 3

பவணிகஞ்ஜெ பெதர்வ ப்ராந்தவிவஶனாகுவ
ஜவன திக்கிகெ கனஸினல்லி கரவனேரைதுவ
ஶவவனப்புத ஹோகுவ கணிகல் ஹூவின மாலெயனு
க்ரீவதொளாந்து ஹூஸி திகம்பர ஸவிவ பிஸவனு || 4

ஈவிதவுத்பாத ஜாக்ரதெ ஸ்வப்னவிவர கண்டனு
காவலில்லத ம்ருத்யுவ நிஸ்சயிஸி அவனு அஞ்ஜிதனு
லவயுகாகி ராத்ரெய நூகித ஸவெயத கஷ்டதலி
ரவியு உதிதனாத பளிகுத்ஸவவு மனதலி || 5

ஹவணிஸிதனு மல்லர க்ரீடெகெ லவலவிகெயலி
அவனிபதியு ரங்கவ மண்டிஸி நவமஞ்சகளலி
டவியரசிஸி துதூரி பேரி வாத்யவ கோஷிஸித
டவடவிஸுவ துங்கமண்டப ஸிங்கரிஸித || 6

ஸுத்தலு பூமாலெ பதாகெ தோரண சித்ர விசித்ரகளு
அத்யந்தாலங்கரிஸித மஞ்சகளு எத்தெத்த ராஜிஸலு
அர்த்திலி தித்ருக்ஷுளு பௌரஜன ப்ருத்வீஸுரர் ஸமூஹ
ஸத்வர் பந்து பந்து தம்ம ஆஸன ஹத்தி நோடுதலிஹ || 7

தேதீப்ய துங்க மஞ்சதலி போஜேந்த்ரனைதி குளித ஹொந்தி
ப்ரதானரமாத்யரொடனெ ஒப்பித பூதர மண்டலதி
ஹோத தேஜாக்னியந்தித்தனு ராஜேந்த்ர ஶ்ரீதரன த்ரோஹதி
கைது தகலிதந்ததெதெதிகிலினலி நாதித துஸ்சித்ததி || 8

**ரங்ககைதந்தரு த்ருப்ததி மல்லரு ஸிங்கரிஸி தம்மனு
ஸங்கரதனுகரு ஆப்தருபாத்யேரு ஜங்குளிகட்டெல்லரு
ஸங்கீத துத்தூரி தாள ஜாகடி சிருதங்கள சாணூர முஷ்டிக
ஹிங்கதெ ஶல தோஸல கூடாத்யரஸங்கடிஸி பளிக || 9**

**பந்திரெ வாத்யத கோஷதலி துஷ்டஸந்தோஹ ஒப்பிதல்லி
நந்தகோபாத்யருபாயனவ தத்கொண்டு பந்தரு ராஜனல்லி
முந்தெ தந்திட்டரு நடபகெ நமிஸி தாவு ஹொந்திதர் மஞ்சகள
சந்ததிந்துத்ஸாவவ நோடுத குளிதரு பந்து கோவளர்மேள || 10**

**ஸ்ரீகிருஷ்ண கிருஷ்ண ஸுகார்ணவ நிர்ஜரானீகப்ரதிபாலக
கோகுலரக்ஷ கோவிந்த நிர்தோஷ குணாகர துஷ்டார்த்தக
வைகுண்டமந்திர ஸுந்தர வர புவனைக வ்யாபக முராரெ
ஸ்ரீகாந்த பூகாந்த ஏகாந்தபக்த க்ருபாகரானந்த ஹரே || 11**

**பூபாரஹரண நிர்ஜரக்ஷேமகாரண ஶோபன ஸத்குணார்ணவ
த்ரைபுவனாதார பரம தர்மோத்தர பாபரஹித உதார
கோபூஸுரார்த்திஹன்கோபவேஷதர ஸ்ரீப்ருத ஸகலார்த்தத
பூபுஜார்ச்சிதபத பக்தவத்ஸல ஹரே ஸ்ரீ பகவஜ்ஜன தாதார || 12**

**ஈ கதாம்ருதவனும்புவ ஜாணர்பாக்யவு பேகெந்து பயஸுவரு
நாகஜனர் முகினளு நித்யவிரக்தரு லௌகிகேஷணரிக்தரு
ஸ்ரீகர ப்ரஸன்வெங்கட கிருஷ்ணனோலுமெயலி வைகுண்டலாபவக்கு
ஏகாந்தஜனரொளு வாஸபேகாதரெ அனேக ஸாதனவின்யாகெ || 13**

ராமகிருஷ்ணர்களுக்கு செய்த துரோகத்தின் பலன் கம்ஸனுக்கு இப்போதே தெரிய வந்தது. தாமஸ ஆத்மனான கம்ஸனுக்கு கெட்ட சகுனங்கள் தோன்றின. || ப

இரவு முழுக்க விழித்திருந்து கம்ஸன் தன் மனதில் இவ்வாறு சிந்தித்தான். தனுஸ் முறிந்ததின் துன்பம், தன் மக்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் ஆகியவற்றை நினைத்து, ராம கிருஷ்ணர்களின் அபாரமான வீரத்தை, துர்மதியான கம்ஸன் நினைத்து, ஒரு நொடி கூட கண் இமைக்காமல், பயம் கொண்டிருந்தான். || 1

கண்ணாடியில் பார்க்கும்போது, அவனின் தேகத்தில் தலை இருப்பதே தெரியவில்லை. சந்த்ர மண்டலம் உடைந்து இரண்டாக தெரிகிறது. கம்ஸன் தன் மனதில் நொந்து, அமர்ந்து, பார்த்துக் கொண்டிருக்கையில், இவ்வாறு கெட்ட சகுனங்கள் தெரிய, இவற்றினால் ஒவ்வொரு நொடியும் அவன் பயம் கொண்டான். || 2

தன் நிழல் சரியாக தெரியாமல் துண்டு துண்டாக தெரிகிறது. காதில் எப்போதும் (ஒரு விரல் கொண்டு காதினை மூடியபோது) கேட்டுக் கொண்டிருக்கும் காற்று சத்தம், இப்போது கேட்பதில்லை. இவற்றை அனுபவித்து, மிகவும் பயம் கொள்கிறான். மரங்கள் அனைத்தும் தங்கமாக தெரிகிறது. மிகவும் கர்வம் கொண்டவனான கம்ஸன், தன் காலடித் தடங்களை தெரியாமல் போவதைக் கண்டு மிகவும் பயம் கொள்கிறான். || 3

மயக்கம் / தலை சுற்றுதல் போல தோன்றுகிறது. இதற்காக பயப்படுகிறான். ப்ராந்தன் ஆகிறான். கழுதையில் ஏறி தெற்கு திசை நோக்கி செல்வது போல கனவு காண்கிறான். ஒரு பிணத்தை தொடர்ந்து போகிறான். கணிகல் (அலரி அல்லது செவ்வரளி) பூமாலையை கழுத்தில் போட்டுக் கொண்டு செல்வதைப் போல கனவு காண்கிறான். நிறைய தண்ணீர் குடிக்கிறான். || 4

இவ்வாறான கஷ்டங்களை தன்னுடைய ஜாக்ரத், ஸ்வப்ன அவஸ்தையில் கம்ஸன் காண்கிறான். தனக்கு ம்ருத்யு உடனடியாக வரப்போகிறது என்பதை அறிந்து கொண்டு, அவன் பயம் கொண்டான். தாங்க முடியாத கஷ்டத்தில், ஒவ்வொரு நொடியையும் ஒவ்வொரு யுகமாக அந்த இரவினை கழித்தான். அடுத்த நாள் காலையில் சூரியன் உதயம் ஆனான். மனதில் சிறிது தெம்பு வந்தது. || 5

மல்லர்களின் க்ரீடைக்கு (சண்டைக்கு) மிகவும் ஆர்வத்துடன் ஏற்பாடு செய்தான். கம்ஸன் ஒரு பெரிய அரங்கத்தை தயார் செய்து, அதில் அமர்வதற்கு பல நாற்காலிகளை வைத்து, ததூரி, பேரி போன்ற வாத்தியங்களை வாசிக்கச் செய்தான். பளபளப்பதான தங்கமயமான அந்த அரங்கத்தை அலங்காரம் செய்தான். || 6

அரங்கத்தைச் சுற்றிலும், பூமாலை, பதாகை, தோரணங்களை சித்ர விசித்ரமாக கட்டினான். அழகாக அலங்காரம் செய்யப்பட்ட இருக்கைகள் என அனைத்து இடங்களும் ஒளிர்ந்தன. மிகவும் மகிழ்ச்சியுடன், அந்த போட்டியை பார்க்க விரும்புபவர்கள், அதில் கலந்து கொள்ள விருப்பம் கொண்டவர்கள், ஊர் மக்கள், அரஸர்கள் ஆகியோரின் கூட்டம் உடனடியாக வந்து, தம்முடைய ஆசனங்களில் அமர்ந்து போட்டியை பார்த்துக் கொண்டிருந்தனர். || 7

ஒளிர்வதான தங்கமயமான மஞ்சத்தில், போஜ அரஸனான கம்ஸன் ஏறி அமர்ந்தான். அரஸன் தன்னுடைய முக்கியமான அமைச்சர்களுடன் அங்கு வந்திருந்தான். அவன் சக்தி வாய்ந்த அக்னியைப் போல இருந்தான். ராஜேந்த்ரனான கம்ஸன் ஸ்ரீகிருஷ்ணனை ஏமாற்றி அங்கு அழைத்து வந்திருந்தான். மனதில் பயம் கொண்டு, தீய எண்ணத்துடன் / கவலை தோய்ந்த மனதுடன் கம்ஸன் அங்கு அமர்ந்திருந்தான். ||8

வீரம் கொண்ட மல்லர்கள் தம்மை அலங்காரம் செய்து கொண்டு, யுத்தம் நடக்கும் அந்த அரங்கத்திற்கு வந்தனர். சண்டையில் விருப்பம் உள்ளவர்கள், நண்பர்கள், மல்லர்களின் ஆசிரியர்கள் என அனைவரின் கூட்டமும் அங்கு வந்திருந்தன. சங்கீதம், தத்தூரி வாத்தியம், தாளம், ஜாங்கட ஆகியவற்றை வாசிப்பவர்கள் அங்கு இருந்தனர். சாணூர, முஷ்டிக, ஷல, தோஸல ஆகிய மல்லர்கள் தம் பிற மல்லர்களுடன் அங்கு வந்திருந்தனர். || 9

வாத்திய கோஷ்டிகளின் சத்தத்தில், துஷ்டர்களின் கூட்டம் வந்து அங்கு நிறைந்தது. நந்தகோபனின் மக்கள், தாங்கள் கொண்டு வந்த பரிசுகளை எடுத்துக் கொண்டு, அரசனிடம் வந்தனர். அவற்றை அவன் முன் வைத்தனர். அவனை வணங்கி, தாம் தம் இருக்கைக்குச் சென்றனர். தம்முடன் வந்த கோபாலகர்களுடன் சேர்ந்து, ராம கிருஷ்ணர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் இந்த நிகழ்ச்சியை பார்த்தவாறு அமர்ந்தனர். ||10

ஸ்ரீகிருஷ்ண கிருஷ்ணா, சுகங்களின் கடல். மூப்பு / முதுமை இல்லாத தேவதைகளின் குழுவினை பாதுகாவலன். கோகுல ரக்ஷகன். கோவிந்தன். நிர்தோஷன். குணங்களின் கடல். துஷ்டர்களைக் கொல்பவன். வைகுண்டத்தில் வசிப்பவன். ஸுந்தரன். வரம் அளிப்பவன். புவனம் முழுவதும் வ்யாபித்திருப்பவன். முர அஸுரனைக் கொன்றவன். ஸ்ரீகாந்தன். பூகாந்தன். ஏகாந்த பக்தர்களை காப்பவன். ஹரி. || 11

பூமியின் பாரத்தை குறைப்பவன். தேவதைகளின் நலனுக்கு காரணமானவன். ஸத் குணங்களின் கடல். மூன்று உலகங்களுக்கும் ஆதாரமானவன். பரம தர்மங்களை தாங்கிப் பிடிப்பவன். எவ்வித பலன்களையும் எதிர்பாராதவன். கருணை கொண்டவன். பசுக்கள், ப்ராஹ்மணர்கள் ஆகியோரை காப்பவன். கோபாலனாக வேடம் பூண்டவன். ஸ்ரீதேவியே முதலான அனைவராலும் வணங்கப்படும் பாதங்களைக் கொண்டவன். பக்தவத்ஸலன். ஹரி. பகவத் பக்தர்களின் ஆதாரமானவன். || 12

இந்த கதாம்ருதத்தை உண்ணும் பாக்கியம் வேண்டும் என்று அறிஞர்கள் விரும்புகிறார்கள். தேவதைகள், முனிவர்கள், நித்ய விரக்தர்கள், லௌகிக ஆசைகளை விட்டவர்கள் இவர்கள் அனைவரும் - ஸ்ரீகர ப்ரஸன்ன வெங்கடனான கிருஷ்ணனின் தரிசனத்தால் வைகுண்ட லாபத்தை அடைந்து, ஏகாந்த ஜனர்களான முக்தர்களுடன் வசிக்க வேண்டுமெனில், அனேக வெவ்வேறு சாதனங்கள் எதற்கு?. (இந்த கதாம்ருதத்தை சுவைத்தால் மட்டுமே போதும் - என்று அர்த்தம்). || 13

***

**63. ராக : ஸாரங்க தாள : ஜம்பெ**

**கஜபால அஷ்டதிக்கஜபால கஜவதனஜனகபால**
**கஜரிபுவதன ஹரிகெ குவலயபீடகனொப்ப**
**கஜதமன கனவெயவகெ || ப**

**பாஹ்யோபவனதி ஶகடகள பளி ஹரிபலரு அஹஸ்கரோதயதலெத்து**
**ஸஹஸ்த ஶௌச மாள்பனகெ கேளதிரு மத்தமல்லர பஹள துந்துபிகோஷவ**
**அஹன்னீக முகிஸி நடெதரு ஶீக்ர போஜபன கேஹ ரங்கத்வாரதெடெகெ**
**மஹாஶைலதந்தெ தம்ம நிவேஶகெ அட்ட நிந்திஹுது அம்பஷ்டனிலிஸெ || 1**

**கண்டு ஸ்ரீ கிருஷ்ண பரிகரவ மத்யகெ ஸுத்திகொண்டு அளகவ கட்டித**
**ஶுண்டாலவம் தெகெயெஶீக்ர அலஸதலெ உத்தண்டதனவனு தோரத**
**திண்டுகெடஹுவ நின்ன ஹஸ்தி ஸஹ களுஹுவெனு தண்டபாணிய நகரகெ**
**லெண்டதன பேட நின்னய பக்ஷபாத பஹ ஹிண்டுவீரர ஸதெவெனு || 2**

**ஹீகெனலு கோபதலி மாவடிக கஜவன்னு யோகிஸித கிருஷ்ணோபரி**
**வேகதைதிது ப்ரளயகால காலனரூப ஹோகி ஶுண்டிலலி ஜக்கி**
**யோகேஶ்வராச்யுதன ஹிடிதரெ ஜகுளி பேக அதமன வஞ்சிஸி**
**அகடகுதிரலங்க்ரி மெட்டுகள தப்பிஸலு மூகிலாக்ராணிஸி கஜ ||3**

**மேகுமேக்யதன்ன மாடலு துஷ்டஶாஸ்தார பேக புஷ்கர தப்பிஸி**
**ஆக புச்சத ஹிடிது ஜக்கெளெத பூமிமேல் லாகவதிப்பத்தைது தனுவ**
**நாகாரி அஹிய லீலெயலொய்து திரு திருஹித்ஹாகெ அப்ரதிமல்லனு அ**
**மோகவிக்ரம ஸவ்யதக்ஷிணகெ பிகிதாடெனாக ப்ராந்தியனைதிது || 4**

**ப்ராமணவ மாடிதனு பாலகருவத்ஸவனு பூமியலி வஞ்சிபந்தெ**
**ஸ்ரீ மனோஹர ஹஸ்தி முகதிதிரு நிந்தனு மஹாம்ருகாதிபன தெரதி**
**ஆ மத்தகஜடவ படிதனு கைலி புவன நியாமகனு சென்னாடதி**
**தா மத்தெ முட்டி முட்யோடிதனு ஹிந்தெ கஜ முந்தெ முந்தாக கிருஷ்ண || 5**

நிந்து நிந்தோடுவனு தோர்வனடகுவனொம்மெ தந்திகரகெ ஸிலுகிதொல்
ப்ராந்தி படிஸுவ ஹஸ்தி ஹஸ்திபகெ க்ஷண க்ஷணாசிந்த்யாத்புதகர்மனு
ஸந்தர மனகெ கேத தோருவுது ஹரிகெ ஜய சிந்திபரு பக்தராக
நந்தஶக்த்யாத்மன லீலெயம் கண்டுஸுரதிந்திணியு ஜயஜயவெனெ || 6

ஆயாஸாதந்தெ பித்தெத்து ஓடி தேவமாயவு தனகெ திளியதெ
தாயைதிதாகஜவு தந்ததலி இளெகிரிது ஹோயிதெல்ல விக்ரமவு
ஶ்ரீயிஶன காணதெ மஹாமாத்ர க்ரோதாயமானதி பெம்பத்தி
நோயிஸுவெனெந்து ஓடிஸித ஹரி பென்ஹத்தி வாயுவேகதி ஹஸ்திப || 7

ஶ்ரீமத்ரமாரமண நிந்தனு கரிய முந்தெ பா முந்தகெந்து ஹிடிது
ப்ராமிஸுத ஶுண்டாலவிடிதப்பளிஸெ தீவ்ர பூமிதளதல்லி நகுத
வைமானிகரு ஜயஜய எனெ கரிய மெட்டி ஶ்ரீ மன்ன்ருஸிம்ஹனந்தெ
ஆ மத்தகஜத தந்தகளெரடு கித்தி மஹாமாத்ரனம் ஜடிதனு || 8

தந்தி தந்திபரளிது பிஸுடு நடெதனு ஒந்து தந்தவம்ஸதலி தரிஸி
தந்தவொந்தனு அக்ரஜகெ கொட்டு துஷ்டஹரானந்தஶக்த்யாத்ம கிருஷ்ண
காந்தியிந்தொப்பிதரு ராமாச்யுதரு மதத தந்திரக்தபிந்து ஸிடிது
எந்து நீலாத்ரி ரஜதாத்ரி ராஜிஸுதிஹவு அந்தெ தோரிதரு கண்கெ || 9

ஸ்வேதாங்கிதாஸ்யாப்ஜதத்யந்த ஸுந்தரரு மோதஸ்மிதேக்ஷணதவரு
ஐதிதரு ரங்கவனு ஆராரா யோக்யதெய பேததந்தலி தோர்தரு
காதுரிவ ஸிடிலந்தெ மல்லரிகெ தோரிதரு மேதினிபரந்தெ நரர்கெ
ஐதம்ப ஸ்த்ரீயரிகெ ஆப்த கோபாலரிகெ பூதரர்கெ ஶாஸ்தாரனோல் || 10

ஜனனிஜனகர்கெ அர்ப்பகர்ஹாகெ ம்ருத்யு கம்ஸனிகெ வ்ருஷ்ணிகள கண்கெ
கனவர்யரந்தெ பராத்பரரந்தெ தோரிதரு மனு நிஜ்னகெ ரங்கதல்லி || 11

ஸவெயதஹங்காரவனு பாஹ்யதலி தோருதிஹ பவணிகாணனு முந்தண
லவலவிகெ மாடுதிஹ வ்யர்த்த உன்மத்த நீகிவர ஸாஹஸகெ குதிதனு
பீவரபுஜபலாட்யரு விசித்ரவேஷ ஸுவஸனதாபரணரு
தேவோத்தமரு ரங்கதலி ஸஞ்சரிஸுதிஹரு பாவன த்ருடக்ருதியலி || 12

நோடுவர கண்மனகெ ஸுதெய ரஸ தும்பி ஸுப்ரௌடஜன ஹரிய ஸௌந்தர்ய
நோடி சக்ஷுபுடகளிம் பீயூஷபானவனு மாடுவரு மனதணியதெ
நீடி நாலிகெயிந்த லாவண்யலேஹனவ மாடுவந்திஹ ஸுஜனரு
காட ப்ராணிஸுதிஹரு ப்ராணதிந்தாமோத காடாலிங்கிபர் பாஹுகளிம் || 13

பாஹ்யாந்தர பூர்ணானனாப்ஜவனு நோடி ஜனமஹதாஸ்சர்யபடுதலி
ஸ்னேஹதலி மாதாடிதரு தம்ம தம்மொளகெ இஹ மஞ்சத தாணதி
பஹள விக்ரமவனு கண்டரு ப்ரத்யக்ஷதலி ஆ ஹிந்தெ கேளிதந்தெ
ரூஹ சாதுர்ய ஔதார்ய மாதுர்ய ஸலெ கஹன காம்பீர்யவந்து || 14

**ஆதி நாராயணனம்ஶரு ஈகலீ யாதவ குலதலி ஜனிஸி**
**ஈ தேவகி ஶௌரி பூர்வதலி மாடித புண்யோதயவு மக்களெனிஸி**
**மேதினிய பாரிளுகபேகெந்து வ்ரஜதலி தினே தினே க்ரீடெமாடி**
**மோதவித்தரு ஜனகெ சாரு சாரித்ர்யரிவராதரதி ஸூரரிகெ ஜய || 15**

**மூடாத்மவரு நந்தன கேஹதலி பௌது மாடிதரு துஷ்டஹரண**
**பீடெ பூதனி சக்ரவாத கேஶியு குஹ்யக ஜோடார்ஜுனாத்யரன்னு**
**காடினொளு கிச்சனுங்கித கிருஷ்ண அஹிமத விபாடிஸித ஸூத்ராமன**
**கேடின மளெகெ கிரியனேளு தின கைலி எத்யாடிதுளுஹித வ்ரஜவனு || 16**

**கிருஷ்ணவதனாப்ஜ ஸுதெபானவனு இருள்ஹகலு த்ருஷ்டிந்த மாள்பபலெர**
**நிஷ்டெ ஜ்ஞானவனு கவிகளு ஜிஹ்வெயிந்தெ இன்னெஷ்டு ஹேளலு தீரது**
**ஶிஷ்டர ஶ்ரவணகம்ருதஸார முந்தகெ ஸுவிஶிஷ்ட ஸுகபோஜன கட**
**கிருஷ்ணசாரித்ர்யவ விசித்ரவனு பேள்வ பரமேஷ்ட்யாதி விபுத ஸமூஹ || 17**

**கோபாலரொடகூடி கோவுகள சரிஸுவ ஸ்ரீபதியு கிரிவனதலி**
**கோபியர மன்னிஸுவ வேணுநாதத ரஸதி வ்யாபிஸுவ ஸூரர ஸ்ருதிகெ**
**ஈ பரப்ரஹ்ம ஹரிராம ஸாமான்யரே கோபரே லோகேஶரு**
**ஆ ப்ரலம்பன மர்திஸித ராம தடெயதெ மஹாபராக்ரமி துஷ்டர || 18**

**ஈ வித கீர்னெயனு மாடுவரு ஸூரரெல்ல நாவேனு பல்லெவெனுத**
**ஈ வாக்ய நுடிவனக பேரி துர்துரிகோஷ தீவிது பிரிது மல்லர**
**ஸ்ரீவர ப்ரஸன்னவெங்கட கிருஷ்ண பலராம ராஜீவனேத்ரரு வீரரு**
**கோவிதரு ஒப்பிதரு ஜகதட்டிகள கண்டு பாவுகரிகாஹ்லதவு || 19**

கஜபால = யானைகளை / ஜ்ஞானிகளை காப்பவனே, அஷ்டதிக்கஜபால = அனைத்து திசைகளிலும் இருக்கும் யானைகளை / ஜ்ஞானிகளை காப்பவனே; கஜவதனஜனகபால = கஜவதனனான விக்னேஶ்வரனின் தந்தையான ருத்ரதேவரை காப்பவனே; கஜரிபுவதன = யானையின் எதிரியான ஸிம்ஹத்தின் வதனம் கொண்டவனே (ந்ருஸிம்ஹனே); ஹரிகெ = ஹரிக்கு; குவலயபீடகனொப்ப = குவலயபீட என்னும் ஒரு யானை; கஜதமன கனவெயவகெ = யானையானது ஒரு பெரிய விஷயமா?. (இல்லை என்று அர்த்தம்). ||ப

அங்கிருந்த தோட்டத்தில் இருந்த வண்டிகளின் அருகில் இருந்த ஹரி பலராமர்கள் இருவரும், சூரிய உதய காலத்தில் எழுந்து, தங்கள் கை கால்களை கழுவிக் கொண்டு, ஶௌசங்களை முடித்தனர். அப்போது அவர்கள் அங்கு சேர்ந்திருந்த மல்லர்களின் துந்துபி கோஷங்களை கேட்டனர். உடனே இவர்கள் தங்களின் ஆன்ஹிகங்களை முடித்து விரைவில் போஜபனான கம்ஸனின அரண்மனையின் ரங்கத்வார (வாயில்) புறமாக நடந்தனர். அப்போது அங்கு மிகப்பெரிய மலை போல, தம் பாதையின் நடுவே ஒரு யானை நின்றிருந்தது. || 1

இவ்வாறாக ஒரு யானை நின்றிருப்பதைக் கண்டு, ஸ்ரீகிருஷ்ணன் தன்னுடைய மேலாடையை எடுத்து, இடுப்பில் சுற்றிக் கொண்டான். போருக்கு தயார் ஆவது போல நின்றான். இந்த உன்னுடைய யானையை சீக்கிரம் வழியிலிருந்து எடுக்கிறாயா என்று அந்த பாகனை கேட்கிறான். (அவனோ முடியாது என்று கூற), ஆணவத்துடன் பேசும் உன்னையும் இந்த யானையுடன் சேர்த்து, யமபுரத்திற்கு அனுப்புவேன் என்றான். இவ்வாறு கர்வம் வேண்டாம். உன்னை பாரபக்ஷம் பார்க்காமல், உன்னை காப்பாற்ற வரும் வீரர்களையும் நான் கொல்வேன் - என்றான். || 2

இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணன் கூற, அந்த யானைப் பாகன் மிகவும் கோபத்துடன் அந்த யானையை கிருஷ்ணன் மேல் வேகமாக பாயச் செய்தான். ப்ரளய காலத்தின் காலனைப் போல அந்த யானை சென்று யோகேஶ்வரனான ஸ்ரீகிருஷ்ணனை தன் தும்பிக்கையில் பிடிக்க முயன்றது. அவனோ, குனிந்து யானையின் கால்களுக்கு நடுவில் சென்று, அந்த யானையை ஏமாற்றி, அந்த யானை எங்கு கால்களை வைக்கிறதோ, அதனை திரும்பத்திரும்ப ஏமாற்றினான். அந்த யானையோ தன்னுடைய தும்பிக்கையினால்... || 3

அவனை பிடிக்க முயல்கிறது. துஷ்டர்களைக் கொல்பவனான ஸ்ரீகிருஷ்ணன், அந்த யானையிடமிருந்து தப்பி, அதன் வாலினைப் பிடித்து, 25 அம்புகளின் தூரத்திற்கு சுலபமாக இழுக்கிறான். நாகத்திற்கு எதிரியான கருடன், தன்னுடைய சக்தியினால் பாம்பினை தூக்கிச் செல்லுமோ, அதைப் போல, யாருக்கும் இணையில்லாத சக்தியைக் கண்ட ஸ்ரீகிருஷ்ணன், அபாரமான வீரன், அந்த யானையை தூக்கி இடது, வலமாக தூக்கி அடிக்கிறான். இதைக் கண்ட அந்த யானை, மனம் கலங்குகிறது. || 4

யானை இடது வலது புறமாக திரும்ப, ஸ்ரீகிருஷ்ணனோ அதற்கு எதிர் திசையில் சென்று, ஒரு சிறுவன் ஒரு கன்றுக்குட்டியை எப்படி வால் பிடித்து இழுப்பானோ, அப்படி யானையில் வால் பிடித்து ஸ்ரீகிருஷ்ணன் இழுக்கிறான். பின், அந்த யானையின் எதிரில் நிற்கிறான். மிருகங்களின் அதிபனான சிங்கத்தைப் போல, அந்த மதம் பிடித்த யானையின் தலையில் பலமாக அடிக்கிறான். அவன் உலகங்களை நியமனம் செய்பவன். தான் தன் தலையை யானையின் தலையுடன் திரும்பத்திரும்ப முட்டுகிறான். ஸ்ரீகிருஷ்ணன் முன்னேறிச் செல்ல, யானையோ பின்னோக்கிச் செல்கிறது. || 5

ஸ்ரீகிருஷ்ணன் நின்று நின்று ஓடுகிறான். ஒரு முறை தான் யானையின் தும்பிக்கையில் சிக்குவதைப் போல சிக்கி, யானைக்கு அடங்குவதைப் போல காட்டுகிறான். இவ்வாறு யானைக்கு அவ்வப்போது மயக்கம் (ப்ரமை) ஏற்படுத்துகிறான். அவன் எண்ண முடியாத அற்புதங்களை செய்பவன். இதைக் கண்ட ஸஜ்ஜனர்களின் மனதிற்கு கவலை பிறக்கிறது. ஸ்ரீஹரி பக்தர்கள் அனைவரும் அவனின் வெற்றியைக் குறித்து கவலை கொள்கின்றனர். அனந்த சக்தியைக் கொண்டவனான ஸ்ரீகிருஷ்ணன், தன் லீலையைக் கண்டு, தேவர்கள் குழுவானது ஜயஜய என்று வானில் நின்று கோஷம் செய்கின்றனர். || 6

தான் சோர்வு கொண்டவனைப் போல, விழுந்து எழுந்து ஓடுகிறான் ஸ்ரீகிருஷ்ணன். தேவ மாயையானது தனக்குத் தெரியாததான அந்த யானை, தன் தும்பிக்கையினால் அவனை திரும்பத் திரும்ப இழுக்க முயற்சி செய்தது. இதனால் அதனுடைய சக்தி குறைந்தது. பிறகு, ஸ்ரீகிருஷ்ணனைக் காணாமல் அந்த யானையானது, பயங்கர கோபம் கொண்டு, இவனைக் கொல்வேன் என்று ஸ்ரீஹரியை துரத்துக் கொண்டு ஓடுமாறு, அந்த யானையை, யானைப்பாகன் வாயு வேகத்தில் செலுத்துகிறான். || 7

ஸ்ரீமத் ரமாரமணன், அந்த யானையின் முன் வந்து நிற்கிறான். வா என் முன்னே என்கிறான். அந்த யானையின் தும்பிக்கையைப் பிடித்து அதனை தூக்கி அடிக்கிறான். தேவர்கள் வானில் நின்று மகிழ்ச்சியுடன், ஜயஜய என்று கூறுகின்றனர். ஸ்ரீகிருஷ்ணன் அந்த யானையை மிதித்து, ஸ்ரீமன் ந்ருஸிம்ஹனைப் போல, அந்த மதம் பிடித்த யானையின் இரு தந்தங்களையும் பிடுங்கி, அதனாலேயே அந்த யானையையும், அதன் பாகனையும் கொன்றான். ||8

ஸ்ரீகிருஷ்ணன், அந்த யானை, பாகன் இருவரையும் கொன்று, அதன் ஒரு தந்தத்தை தன் தோளில் ஏந்தி நடந்தான். ஒரு தந்தத்தை தன் அண்ணனிடம் கொடுத்தான். துஷ்டர்களைக் கொல்பவனான, அபாரமான சக்தியைக் கொண்டவன் ஸ்ரீகிருஷ்ணன். ராம கிருஷ்ணர்கள் இருவரும் அபாரமான காந்தியினால் ஒளிர்ந்தனர். அந்த மதம் பிடித்த யானையின் தந்தத்திலிருந்து ரத்தம் சொட்ட, இவர்கள் இருவரும் நீலாத்ரி, ரஜதாத்ரி என்பதாக ஒளிர்வதாக - பார்ப்பவர்கள் கண்களுக்குத் தெரிந்தது. || 9

சிவந்ததான தாமரையைப் போல மிகவும் அழகானவர்கள். மகிழ்ச்சியைக் கொடுப்பதான புன்னகையைக் கொண்டவர்கள். மல்யுத்தம் நடக்கும் அரங்கத்தை அடைந்து அதில் ஏறினர். பார்ப்பவர்களின் யோக்யதைக்கேற்ப ராமகிருஷ்ணர்கள் தங்களை காட்டிக் கொண்டனர். மல்லர்களுக்கு ஒளிரும் மின்னல் போல தோன்றினர். மனிதர்களுக்கு அரசர்களைப் போல தெரிந்தனர். பெண்களுக்கு மன்மதனைப் போல தோன்றினர். அவர்களின் நண்பர்களான கோபாலகர்களுக்கு உறவினர் போல தெரிந்தனர். அரசர்களுக்கு தண்டிப்பவர்களைப் போல தோன்றினர். ||10

பெற்றோருக்கு தங்கள் மகன்களைப் போலவும், கம்ஸனுக்கு ம்ருத்யுவைப் போலவும், வ்ருஷ்ணிகளின் கண்களுக்கு மிகச்சிறந்த வீரனைப் போலவும், முனிவர்களின் கூட்டத்திற்கு - ஸர்வோத்தமனான வணங்கக்கூடிய தெய்வத்தைப் போல, ராமகிருஷ்ணர்கள் தெரிந்தனர். என இவ்வாறாக பல்வேறு மக்களுக்கு ராம கிருஷ்ணர்கள் பல்வேறு விதங்களாக தென்பட்டனர். || 11

(ராம கிருஷ்ணர்கள்) குறையாத கர்வம் கொண்டவர்கள் போல தங்களை புறத்தில் காட்டிக் கொண்டு, அங்கும் இங்குமாக அலைந்தவாறு, மிகவும் உற்சாகத்துடன், வீணான அகந்தையைத் தரும் காரியங்களில் ஈடுபட்டான். திரண்ட வலிமையான தோள்களைக் கொண்ட வீரர்கள், இவ்வாறான விசித்ர வேஷத்துடன், தூய்மையான ஆடைகளையுடன், ஆபரணங்களை தரித்தவாறு, தேவோத்தமர்கள் (ஸ்ரீகிருஷ்ண பலராமர்கள்) அந்த அரங்கத்தில் ஸஞ்சாரம் செய்தனர். அவர்கள் பவித்ரமான திடமான தேகத்தைக் கொண்டவர்களாக இருந்தனர். || 12

பார்ப்பவர்களின் கண் மற்றும் மனதிற்கு அமிர்தத்தின் ரஸத்தினை நிரப்பி, அந்த நகரத்து மக்கள் ஸ்ரீஹரியின் அழகினைப் பார்த்து, தங்களின் கண்களால் அந்த அமிர்தத்தைப் பருகி அவர்கள் பவித்ரம் ஆயினர். அப்படியும் மனம் த்ருப்தி அடையாமல், திரும்பத்திரும்ப அவர்களை பார்த்தனர். ஸஜ்ஜனர்கள் அவர்களின் அழகினை தங்கள் நாக்குகளால் சுவைப்பது போல, சப்புக் கொட்டினர். தங்கள் மூக்குகளால் அவர்களின் ஸு-வாஸனையை நுகர்ந்து மகிழ்ந்தனர். தங்கள் தோள்களால் / கரங்களால் ஸ்ரீஹரி பலராமரை அவர்கள் கட்டித் தழுவிக் கொண்டனர். || 13

அகத்திலும், புறத்திலும் பூர்ணமானவன். அவனுடைய தாமரை போன்ற மலர்ந்திருந்த முகத்தைப் பார்த்து, மக்கள் மிகவும் ஆச்சரியம் அடைந்தனர். அனைவரும் அவர்களுக்குள் மிகவும் நட்புடன் பேசிக் கொண்டனர். இங்கு மல்யுத்தம் நடந்த இடத்தில், அவனுடைய அபாரமான வீரத்தை நேரடியாகக் கண்டனர். முன்னரே கேள்விப்பட்டதைப் போல, அவனுடைய சாதுர்யம், காருண்யம், அழகு, காம்பீர்யம் ஆகியவற்றை அனைவரும் திரும்பத்திரும்ப கண்டனர். || 14

ஆதி நாராயணனின் அம்ஶத்தைக் கொண்டவர்கள், இப்போது யாதவ குலத்தில் பிறந்தனர். இந்த தேவகி தன்னுடைய பூர்வ ஜென்மத்தில் செய்த புண்ணியத்தில் பலனாக அவளிடம் மக்களாக பிறந்தனர். பூமியின் பாரத்தைக் குறைக்க வேண்டுமென்று, நந்தகோகுலத்தில் தினம்தோறும் பல க்ரீடைகளை செய்து, அங்கிருந்த மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தனர். இவர்கள் பவித்ரமான சாரித்ர்யத்தைக் கொண்டவர்கள். தேவர்களுக்கு வெற்றியை தேடிக் கொடுத்தனர். || 15

இவ்வாறு அம்ஶ, அவதாரத்தைக் கொண்டவர்கள், நந்தனின் வீட்டில் வளர்ந்து, துஷ்டர்களைக் கொல்லும் செயலை செய்து வந்தனர். கெட்டவளான பூதனி, ஶகடாஸுர, கேஶி ஆகியோரைக் கொன்றான். யக்ஷர்களான நளகூபர் - மணிக்ரீவர், இரண்டு அர்ஜுன மரங்களாக நின்றிருந்தவர்களுக்கு சாப விமோசனம் செய்தான். காட்டில் காட்டுத் தீயினை விழுங்கினான். கிருஷ்ணன், காளிங்கனின் கர்வத்தைப் போக்கினான். இந்த்ரனின் செயலால் தொடர்ந்து ஏழு நாட்கள் பெய்த மழையை, தன் கையால் கோவர்த்தன கிரியை தூக்கி, அந்த ஊர் மக்களை காத்தான். || 16

ஸ்ரீகிருஷ்ணனின் முகம் என்னும் தாமரையின் அமிர்தத்தை, தொடர்ந்து இரவும் பகலுமாக தம்முடைய கண்களால் சுவைத்துக் கொண்டிருந்த அந்த பெண்களின் நிஷ்டை, ஜ்ஞானத்தை, கவிஞர்கள் தம்முடைய வாக்கினால், எவ்வளவுதான் வர்ணித்தாலும் போதாது. பக்தர்கள் ஸ்ரீஹரியின் அமிர்தஸாரத்தை கேட்பது என்பது, அவர்களுக்கு சிறப்பான சுவையான உணவு உண்டதைப் போலவே ஆகிறது. ஸ்ரீகிருஷ்ண சாரித்ர்யத்தின் விசித்ரத்தை (மகிமையை) பரமேஷ்டியே (சதுர்முக ப்ரஹ்மதேவர்) முதலான தேவர்களின் கூட்டம் திரும்பத்திரும்ப கூறியது. ||17

கோபாலகர்களுடன் கூடி, ஸ்ரீபதியான ஸ்ரீகிருஷ்ணன், நந்தவனத்தில் பசுக்களை மேய்க்கிறான். கோபியர்களை வேணு நாதத்தின் இசையால் அருள்கிறான். இந்த பரப்ரஹ்மன், தேவர்களின் ஸ்ருதிக்கு ஏற்ப, அனைத்து இடங்களிலும் வ்யாபித்திருக்கிறான். இந்த ஹரி ராமர்கள் சாமான்யர்களா?. பசுக்களை மேய்ப்பவர்களா?. இவர்கள் லோகேஶர்கள். அந்த ப்ரலம்பாஸுரனைக் கொன்ற பலராமன், துஷ்டர்களைக் கொல்வதில் மஹா வீரனே ஆகிறான். || 18

இவ்வாறான கீர்த்தனையை தேவர்கள் அனைவரும், நான் என்ன அறிவேன்? (அறிந்தது கொஞ்சமே) என்றவாறு செய்கிறார்கள். இவ்வாறான வாக்கியங்களை (மகிமைகளை) சொல்வதற்குள், அங்கு பேரி, தத்தூரி போன்ற வாத்தியங்களின் கோஷம் எழுப்பப்பட்டது. மல்லர்களை வென்ற ஸ்ரீவர ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ண பலராமர்கள் தாமரைக் கண் கொண்டவர்கள். வீரர்கள். அறிஞர்கள் இதனை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த அபாரமான வீரர்களைக் கண்டு பக்தர்கள் அனைவருக்கும் மனதில் மகிழ்ச்சியே தோன்றியது. || 19

***

**64 ராக : முகாரி தாள : ஜக்கணி**

**மதுகைடபமர்தகனொளு சாணூர மதஸொக்கி காதுவெனெந்து**
**வரிஸித ரங்கதி ரங்கனொடனெ தா பதுகபல்லனெ ஹேளிந்து || ப**

**எலெ பலராமாச்யுத நந்தகோபன எளெயரிரா நீவிந்து**
**இளெயொளு வீரஸம்மதருத்தடரு பலு யுத்தகௌஶலரெந்து**
**களிகெகளிகெகெ கேளுதலித்த போஜப லலித உத்ஸவனோள்ப வ்யாஜெ**
**யலி கரெஸிதனு இப்பரனெந்தனு கள கல சாணூர பாபபாஜ || 1**

தேஶஸ்தரெல்லரு நெரெதிஹரில்யவனீஶரு ந்ருபப்ரீதிகாகி
லேஸு ஸ்ரேயஸு உண்டு நிமகின்னு ந்ருபதிய தோஷபடிஸி ஸுகியாகி
மேஸுதலிருதிரெ வத்ஸவ வனதலி ஆ ஸக கோவர கூடி ஸ
தா ஸர்வதா மல்லயுத்தவ மாடிதிரீ ஸமயகெ அஞ்ஜபேடி || 2

ப்ரீதி படிஸி ராஜேந்த்ரன நம்மொளு நீதியுத்தவ மாடி தோரி
க்யாதராகிரி தோரிததெ நோடலெல்லரு சாதுர்ய தோர்பவு மீறி
பூத ப்ரஸாதிஸுதேவெ பூஜபதாதன ஆஜ்ஞெயவஹிஸி
பூதப்ரபு ப்ருத்வீனாதனு எந்தனு மாதிலி சாணூர ரதிஸி || 3

சாணூரன கதனவ கேளுத கிருஷ்ண தா நுடிதனு ஸ்மிதவதன
தேனுசாரகரு நாவேனு பஹல்லெவு வ்ரஜகானனசரபாலர்கதன
நீனனுக்ரஹவ மாடிதரேவெ யுத்த ப்ரமாணதி மாடி நின்னொளு
பூனாதன ப்ரீதிய படெவெவு பலஹீனரு அதிபாலருகளு || 4

பலவந்தர் நீவு யதோசித யுத்தவ இளெயரஸகெ தோர்ப்பெவாவு
ஸலெ அதிக்ரமிஸிதரேவெ அதர்மவு திளியை நாவு ஹேளுவெவு
பலனனுஜனு ஹீகெந்தரெ சாணூர நளனாக்ஷகெ தானெந்த
எலெ பலராமாச்யுதரிரா நீவின்னெளெகிஶோரரு ஹ்யாகெந்த || 5

நலுவிந்த லீலெயலி குவலயபீடன அளிதிரி மதனொக்கியிஹுது
கெலவுண்டெ காதிதவரிகெந்திகெ கேளி இளெதிவியலி ஸடெயிந்த
பலனிகெ முஷ்டிகனொடனீக யுத்தவு ஸலெ ஸமர்ப்பக நின்னொளெனகெ
பலவந்த மல்லரனேகரு நீனேக கெலபேகெந்த களனாகெ || 6

ஈ நேமவ சாணூர மாடலு பல பா நீனெந்து முஷ்டிகன
பாணிகெ பாணி பாதகெ பாத ஹச்சுத தானொத்யாடித ஜாண
ஜானுவிகெ ஜானு நெத்திகெ நெத்தி அராத்னிகெ அன்யோன்ய கெலுவ இச்செயலி
மான பரிப்ரமணவு விக்ஷேபண நானா பரிரம்பதல்லி ||7

ஒம்மொம்மெ பீளகெடஹ்யாடுவ ஸௌரம்ப ஒய்யுத்ஸர்ப்பணாபஸர்ப்பண
ஒம்யுத்தபான ஸ்தாபன சாலனவ மாடி ஹம்மிலி கெலுவெவெம்ப் ஹவண
தம்மொளு கெலுவிச்செயலி பரஸ்பர ஹிம்மெட்டதலெ ஒத்யாடிதரு
ஹெம்மத்தானெய தெரதலி யுத்தத ஸொம்மின ஒல்லிதரவரு || 8

ஜனரெந்தரு பாலகரிகெ பல்லிதரனு ஸரி நோடுவ கர்ம
கன அன்யாயவு எந்தரு ஸ்னேஹதீ ஜனபதிகிது ஈகதர்ம
நெனெவரெ பாபத ஸபெயிது இல்லி ஸஜ்ஜனரிகெ ஸல்ல நிவாஸ
தனுரிகிக்ஹோலுவ மல்லரு வஜ்ரரு அணு கைஶோரரு தோஷ ||9

அப்ராப்தத யௌவனரிவர் ந்ருபதியு அப்ரஜ்ஞனதிகாதுகனு
ஈ ப்ரகார் க்ல்பிஷ ஹொந்தித ஸபெயனுஸுப்ரஜ்ஞர் பிடபேகிதனு
ஸுப்ரமத்த மல்லரு ஹரிபலர் பாலரு ஸுப்ரேக்ஷஜனகெ மோக்ஷதரு
ஈ ப்ரத்யக்ஷதி நோடுவர் கண்களிகெ அப்ரௌட கம்ஸகெ ஹிதரு || 10

கிருஷ்ணாஸ்யாப்ஜவ நோடுவரக்ஷிகெ ஹ்ருஷ்டவு பாபகெ லயவு
ஸிட்டிலி சாணூரன கிருஷ்ண யுத்தகெ கரெவஷ்டரொளு பலனிகெ கெலவு
ஹ்ருஷ்டவில்லத ஹாஸ்யவதனதி ஈ பல முஷ்டிகனொளு காதுதிஹ
ஜட்டிகரரஸன த்ருஷ்டி தாம்ராகிவெ ஶிஷ்டரு நோடியெனுதிஹ || 11

ராமாச்யுதர வஸதி கோகுலத பூமிய புண்யவு மொத்த
கோமதிகள ஸாஹசரிபரு வனவன ஸ்வாமி புவனத்ரயனாத
ஈ மனுஷ்யாக்ருதி கூடரு ஈஸ்வரரு மனுஜர மோஹிபரு
ஶ்ரீமந்தரு ஸகல புவனவ்யாப்தரு வைமானிகர பாலகரு || 12

பௌராணபுருஷரு ஶ்ரீமனமாலாராஜிபரு ஸுந்தரரு
நாராயண நரரிவரு யமுனெயதீரவனாந்ததலிஹரு
கோரக்ஷகரொடனெ கோகள ஸஞ்சாரிஸுவரு தினதினதி
ஸௌரப குஞ்ஜதி வேணுனாதிஸுவரு நாரிகோபியர ஸக்யதி || 13

கோபீஜனர்தபவெந்தோ பூர்வத கோபவேஷத ஶ்ரீவரன
ஆபாதனகத ஸௌந்தர்யாம்ருதவ பான மாடுவர் நிஸிதின
அபவர்கத ஸுகவனும்பரு மௌனிஜனோபமரு ஶுசிவ்ரதரு || 14

வைகுண்டதாமன கீர்த்திய விஸ்தார விக்யாதிய ஹேளுவரு
ஆகளகரெஸுத தூகுத தொட்டில தோகர நித்ரயகெய்ஸுவரு
கோகன்னிகெயர ஸுக்ருதவின்னெந்தோ ஸகலாதாதிமதனதல்லி
ஶ்ரீகிருஷ்ணன குணகர்மனாமங்களனேகஸ்வரதி பாடுதலி || 15

நைகேதன ஸம்மார்ஜன காலதி த்ரைகால மஜ்ஜனதல்லி
ஏகாந்த ஜனப்ரியனங்க்ரிகமலகளாலௌகிக கீர்த்னெ ஹேளுவரு
ஶ்ரீகர புண்யவ்ரஜத ஸ்த்ரீயர ஸுகவு கவிகள கவனக்கெ
ஸாகென்னது மதி நிலுகது ஸ்தோத்ரக்கெ ஶ்ரீகிருஷ்ணன ஶுபலீலெ || 16

தன்யரு பெண்களு க்ரமவிக்ரமன சின்மய குணசிந்தனெய
கணெவெயிக்கதெ கதலத பக்தியிம் தன்மனஸ்கெயரு ஸதியரு
இன்னொந்தவரிகெ ஸாதனவேதகெ மான்யரு ஸுரலோகக்கெ
சென்னர செலுவெ யஶோதெய மொலெயுண்ட சின்னன தயவிரலிக்கெ || 17

காயத்ரிகள பெரஸி ப்ராத:காலதி ஶ்ரீயதுபதி ஹோகுவனு
ஸாயந்தனியலி வேணுநாதிஸுதலி ப்ரியாத் ப்ரியனைதி பஹனு
ஸ்த்ரீயரு நாதகெ மோஹிஸி பஹரு ஶ்ரீயரஸன துதிஸலிக்கெ
தயார்த்ர த்ருஷ்டியலி நோடுவ ஹரி மாயாதீதனு ஜககெ || 18

ப்ரீயோக்தியனாடுவனு முகுளுனகெ பீயூஷவனுணிஸுவனு
தோயஜ நேத்ர விபுவ நாரியரிகச்சரிய தோரிஸி மோஹிபனு
ஈயனுஸந்தானதி ஸபெயலி ஸாத்வியரு பாஷிஸலாகெ
ஶ்ரீயதுபதி களனனு ஸம்ஹரிப உபாய மாடிதனாக || 19

ஆகச்யுதனிகெ கலி சாணூரனொளு யோகிஸிது மஹாயுத்த
நேகிலகையகெ முஷ்டிககெ யுத்தாகலு ரங்கத மத்ய
பாககனஸ்தரிகச்சரியுமதனாகங்கள யுத்ததந்தெ
யோகேஶேஸ்வர சாணூரன மை தாகிதனு ஸிடலந்தெ || 20

வஜ்ரோபமஸ்த்ரீயச்யுதகாத்ரதி ஜஜ்ஜிஸிகொண்ட சாணூர
கர்ஜிஸி கோபதி ககனகெ ஹாரிபந்தப்ஜாக்ஷனைதிதனிதிர
துர்ஜயஸேனன தெரதலி முஷ்டியிம்பஜ்ஜிஸெ ரோஷதி களனு
நிர்ஜரரொடெயகெ நோவாகுவதுண்டெ நிர்ஜிவகுல்லனு அவனு || 21

ஹரியு ஸ்ருஜாஹத கரியந்தொப்புத துருளன தோள்கள ஹிடித
கிரிகிரி திருகிஸி தரெகப்பளிஸித ஸுரரிபுஹர கோவிந்த
ஸுரவர சாபதொல் கெடெதனு சாணூர த்வரியதி ஸொக்கித மந்த
எரடனெ முஷ்டிக மொதலெ பலன கட்டிஸிரலு பலனு கோபதிந்த || 22

கரதலி படிதனு கோபதிம் முஷ்டிக அருணஜலவ காருதலி
ஹரணவ நீகித உருளித புவிஹொந்தி தருகாளி படிதந்ததலி
மரளி தூகாட்யனு பரலு படித வாமகரதிந்த பாலலீலேயலி
உருபல தோஸல காஸல சலரனு சரணதி கெடஹி ஶிரகள || 23

தரித கத்தரிஸித கரதலி த்ருடியொளு முர பீடாந்தக ஶௌரி
ஒரகலு நால்வரு ப்ரமுகரு மல்லரு நூரஜுமல்லரு ஓடிதரு
ஹரி கோவளரொளுத்ஸவதலி க்ரீடிஸெ சரணனூபுர ஜணத்கரிஸெ
உரு நடிஸித துத்துரி தாளத ரவபரி லயவனு அனுகரிஸி || 24

ஶிஷ்டரு கண்டரக்லிஷ்டர கர்மகெ துஷ்டிஸி ஸாது ஸாது எனுத
துஷ்டகம்ஸன ஸம்பந்திகளெல்லரு கஷ்டிஸிதரு பளலுத
த்ருஷ்டியலி நோடித போஜப மல்லர நஷ்டராதரு ஓடிதரு
ஹ்ருஷ்டிகளெது நில்லிஸித வாத்யங்களனஷ்டி கேதிஸி சித்தபீரு || 25

நரஹரித்வேஷிகளிகெ ஜய ஸ்வப்னவு துருவ்ருத்தனு போஜபனு
ஹரித்வேஷத பலவொதகிது எதெ திகில்கரெது நிட்டிஸிர பிடுவனு
பரெ திட்டதனதலி துர்புத்தியல்லிஹ ஸரிது ஹோகிஹுதாயுஷ்யவு
நெரெ உத்தடதன பிடனு பாபாத்மனு மருளிட்டு மருகுத மனவு || 26

ஈ திவ்யாம்ருத பாகவத தஶம பாதராயணி பேளிதனு
ஆதரதலி ஸமித் பாணியு பரீக்ஷித போதகெ தலெதூகிதனு
ஶ்ரீதவ பரஸன்னவெங்கட கிருஷ்ணகாத லீலான்வய ஸ்ரவண
போதகரிகெ போதிஸிகொண்டவரிகெ போதாப்தி ஸ்னான பான || 27

சாணூரன் அபாரமான தன்னுடைய கர்வத்தினால் மயங்கி, மதுகைடப அஸுரர்களைக் கொன்றவனை, நான் கொல்வேன் என்றான். அந்த போர் நடக்கும் அரங்கத்தில், ரங்கனுடன் இந்த சாணூரன் போரிடுவதற்காக குதித்தான். இவன் உயிர் பிழைப்பானா, சொல்?. || ப

ஹே பலராம, அச்யுதர்களே. நந்தகோபனின் மக்களே. நீங்கள் இன்று இந்த பூமியில் வீரர்கள் என்று அறியப்படுகிறீர்கள். அபாரமாக போர் புரிகிறீர்கள் என்று சொல்லப்படுகிறீர்கள். இதையே

திரும்பத்திரும்ப கேட்டுக் கொண்டிருந்த கம்ஸன், இந்த வில் விழாவை நடத்தும் சாக்கில், உங்கள் இருவரையும் அழைத்தான் என்றான், துஷ்டனான சாணூரன். அவன் பாவங்களுக்கு உரியவன் / பாவங்களை செய்தவன். || 1

நாட்டு மக்கள் அனைவரும் இங்கு வந்து நிறைந்திருக்கின்றனர். அரசன் கம்ஸனின் ப்ரீதிக்காக, அனைத்து அரசர்களும் வந்திருக்கின்றனர். அத்தகைய கம்ஸனை மகிழ்ச்சிப்படுத்தினால், உங்களுக்கு நிறைய புகழ் கிடைக்கும். சுகமாகவும் இருக்கலாம். நீங்கள் பிற கோபாலகர்களுடன் கூடி, வனத்தில், பசுக்களை, கன்றுகளை மேய்த்துக் கொண்டிருந்தீர்கள். நீங்கள் எப்போது மல்யுத்தத்தை செய்தீர்கள்?. இப்போது போரிடுவதற்கு பயப்படாதீர்கள்? - என்றான். || 2

ராஜேந்த்ரனை மகிழ்வித்து, எங்களுடன் சரியான போரினை செய்து காட்டி, சிறுவர்களான நீங்கள் பெரிய மல்லர்களுடன் போரிடுகிறீர்கள் என்ற புகழினைப் பெறுங்கள். உங்கள் வலிமையை பார்க்க அனைவரும் வந்திருக்கின்றனர். உங்களுக்கு இதனால் நல்ல ப்ரஸாதம் (அருள்) கிடைக்கிறது. போஜபனான கம்ஸனின் ஆணையின் பேரில் நான் போரிடுவோம். இந்த பூமியின் தலைவன், ப்ருத்வியின் தலைவன் அவனே - என்றான் அந்த சாணூரன். || 3

இவ்வாறு கூறிய சாணூரனின் பேச்சினைக் கேட்டவாறு, கிருஷ்ணன், புன்னகை கூடிய முகத்துடன் தான் இவ்வாறு கூறினான். நாங்கள் பசுக்களை மேய்ப்பவர்கள், நாங்கள் (இந்த சண்டையைப் பற்றி) என்ன அறிவோம்?. நாங்கள் கோகுலத்தில், வனத்தில், சுற்றித் திரியும் சிறுவர்கள். நீ அனுக்ரஹம் செய்தால் மட்டுமே, நாங்கள் இந்த போரினை செய்ய முடியும். உன்னால், அந்த அரசனின் ப்ரீதியை நாங்கள் பெறுவோம். நாங்கள் வலிமை அற்றவர்கள். மிகவும் சிறுவர்கள் - என்றான். || 4

நீங்கள் பலசாலிகள். நாங்களோ சிறுவர்கள். எங்களுக்குத் தெரிந்தாற்போல யுத்தம் செய்து, அரஸனுக்கு காட்டுவோம். நாங்கள் செய்வதில் ஏதேனும் அதர்மம் அதிகரித்துத் தெரிந்தால், உடனே சொல்லி விடுகிறோம். என்று பலராமனின் தம்பியான ஸ்ரீகிருஷ்ணன் கூற, சாணூரன், தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனுக்கு இவ்வாறு கூறுகிறான். ஹே பலராம, அச்யுதர்களே. இப்படியெல்லாம் பேசும் நீங்கள் இன்னும் சிறுவர்களா? இல்லை - என்றான். || 5

சக்தி இல்லாமல், ஏதோ லீலைகள் செய்து, குவலயாபீடத்தை நீங்கள் கொன்றீர்கள். ஆகையால், உங்களுக்கு கர்வம் வந்திருக்கிறது. ஆனால், இன்றோ மல்யுத்தம் செய்பவர்களுக்கே (நமக்கே) வெற்றி வரப்போகிறது, கேளுங்கள். இந்த மல்யுத்த வீரர்களுக்கு (நமக்கு) இந்த பூமியில் சரிசமம் என்று யாராவது இருக்கிறார்களா? (இல்லை). பலராமனுக்கு முஷ்டிகனுடன் யுத்தம் நடக்கிறது. உன்னுடன் (ஸ்ரீகிருஷ்ணனுடன்) எனக்கு யுத்தம் நடக்கவிருக்கிறது. வலிமையான வீரர்கள் பலர் இருக்க, நீ எப்படி வெற்றி பெறுகிறாய் என்பதை பார்க்கலாம் - என்றான் அந்த சாணூரன் அப்போது. || 6

இவ்வாறாக சண்டையின் விதியை சாணூரன் கூறினான். முஷ்டிகனோ - பலராமா, நீ சண்டைக்கு வா என்றான். தன் கைகளால் கைகளை தட்டியும், கால்களால் கால்களை மிதித்தும், தான் பலராமனுடன் சண்டை புரிந்தான். முட்டிக்கு முட்டி, நெற்றிக்கு நெற்றி, தான் அவனுடன் போரிட்டு வெற்றி புரியும் விருப்பத்தில் கையில் (தன் கைகளால்) அடிக்கிறான், அவன் சுற்றி வருகிறான், தூக்கி எறிகிறான் - என பல வகைகளை கையாள்கிறான். || 7

சில நேரங்களில் ஒருவரையொருவர் கீழே தள்ளி, முன்னோக்கியும் பின்னோக்கியும் வேகமாக நகர்ந்து, ஏறியும் இறங்கியும், பணியாமல் அலைந்தும், நாங்களே வெல்வோம் என்று கர்வம் காட்டி, வெற்றியடைய வேண்டும் என்ற ஆசையில் ஒருவருக்கொருவர் புறம் கொடுக்காமல், கோபத்தோடு ஒருவரையொருவர் தள்ளியவாறு, மதயானைகளைப் போல மல்யுத்தப்போரில் வல்லவர்களான அவர் போரிட்டனர். ||8

மக்கள் இவ்வாறு கூறினார்கள். 'சிறிய வயது கொண்ட சிறுவர்களுக்கும், பலமிக்க மல்யுத்த வீரர்களுக்கும் சமமாகப் போர் நடப்பது மிகப்பெரிய அநீதியாகும். அரசனுக்கு இது தர்மமன்று. இது பாவிகள் நிறைந்த சபை. இங்கே நல்லவர்கள் இருக்கத் தகுதியில்லை. வைரம் போன்ற உடலமைப்புக் கொண்ட மல்யுத்த வீரர்கள் எங்கே, மென்மையான சிறு பிள்ளைகள் எங்கே?'. ||9

இவர்கள் இன்னும் இளமைப் பருவத்தைக் கூட அடையாத சிறுவர்கள். இங்கிருக்கும் மன்னனோ (கம்சன்) அறிவில்லாத மூடனாகவும், மிகவும் கொடூரமானவனாகவும் இருக்கிறான். இப்படிப்பட்ட பாவம் நிறைந்த சபையை நல்லறிஞர்கள், உடனே விட்டு வெளியேற வேண்டும். மதங்கொண்ட மல்யுத்த வீரர்களின் முன்னே சிறுவர்களான ஹரியும் பலராமனும் நிற்பதைப் பார்ப்பது கண்கள் செய்த பாவமாகும். இவ்வாறாக நேரடியாக பார்ப்பது, முதிர்ச்சியற்ற கம்ஸனுக்கு மட்டுமே மகிழ்ச்சியைத் தரும்.|| 10

ஸ்ரீகிருஷ்ணனின் தாமரை போன்ற முகத்தையும், கண்களையும் காண்பவர்களின் கண்களுக்குப் பேரானந்தமும், அவர்களின் பாவங்களுக்கு அழிவும் உண்டாகிறது. சாணூரன் கோபத்தோடு கிருஷ்ணனைப் போருக்கு அழைப்பதற்குள், பலராமனுக்கு வெற்றி கிடைக்கிறது. எந்தவிதப் பதற்றமும் இல்லாமல், புன்னகை கூடிய முகத்தோடு, பலராமன் முஷ்டிகனோடு போரிடுகிறான். தலைக்கூந்தல் வைத்த அரஸன் கம்சனின் கண்கள் கோபத்தால் தாமிர நிறமாகச் சிவந்திருக்க, நல்லோர்கள் இதைப் பார்த்து வியந்து பேசுகின்றனர். || 11

பலராமனும் ஸ்ரீகிருஷ்ணனும் வசிப்பதால் கோகுலம் அபாரமான புண்ணியம் பெற்றது. பசுக்களை மேய்க்கும் சிறுவர்களின் நண்பர்களாக காடெல்லாம் சுற்றித் திரியும் இவர்கள், மூன்று உலகங்களுக்கும் அதிபதியான பரம்பொருளே ஆவர். மனித உருவில் இருக்கும் இவர்கள் ஈஸ்வரனே ஆவர்; உலக மக்களைத் தம் அழகால் மயக்குபவர்கள். சகல செல்வங்களும் நிறைந்தவர்கள், அகிலமெங்கும் நிறைந்திருப்பவர்கள், தேவர்களையும் காப்பவர்கள். || 12

பழமையான புராண புருஷர்களான இவர்கள், அழகிய வனமாலையை அணிந்து, பேரழகோடு விளங்குகிறார்கள். நாரயண-நரராக (ஸ்ரீமன் நாராயணனின் அம்சமாக) இருக்கும் இவர்கள், யமுனை நதிக்கரையிலேயே வசிக்கிறார்கள். பசுக்களைக் காக்கும் கோபாலகர்களோடு, தினமும் பசுக்களை மேய்க்கச் செல்கிறார்கள். நறுமணம் வீசும் தோட்டங்களில், கோபியர்களின் அருகில் நின்றுகொண்டு இனிமையாகப் புல்லாங்குழல் வாசிக்கிறார்கள். || 13

கோபியர்களின் மனதைக் குளிர்க்க எழுந்த, அபூர்வமான ஆயர் வேடத்தில் விளங்கும் ஸ்ரீலக்ஷ்மிபதியான ஸ்ரீகிருஷ்ணனின் முகத்தில் பொங்கும் பேரழகெனும் அமுதத்தை இரவும் பகலுமாக தொடர்ந்து பருகிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அளப்பரிய ஆனந்தத்தை அனுபவிக்கும் முனிவர்களுக்கு இணையானவர்களும், பவித்ரமான நற்சரித்திரம் படைத்தவர்களும் ஆவர். || 14

வைகுண்டத்தில் வசிப்பவனான ஸ்ரீகிருஷ்ணனின் புகழை, அதன் பெருமையை பரப்பிப் பாடுகிறார்கள். பசுக்களிடம் பால் கறக்கும்போதும், தொட்டிலில் குழந்தைகளைத் தாலாட்டித் தூங்க வைக்கும்போதும். இத்தகைய கோபியர்களின் பாக்கியம்தான் என்னே!. தயிர் கடையும் நேரம் முழுவதிலும் ஸ்ரீகிருஷ்ணனின் திவ்ய குணங்களையும், லீலைகளையும், திருநாமங்களையும் ஒன்றிணைந்து இனிமையாகப் பாடிக்கொண்டிருக்கிறார்கள். || 15

வீட்டைப் பெருக்கித் தூய்மை செய்யும்போதும், முக்காலமும் நீராடும்போதும், மனதிற்கு மிகவும் பிரியமான ஸ்ரீகிருஷ்ணனின் தாமரைத் திருவடிகளின் திவ்யப் புகழைப் பாடுகிறார்கள். மங்களங்கள் நிறைந்த ஆயர்பாடியின் பெண்கள் அடையும் இந்த ஆனந்தத்தை எந்தக் கவிஞரின் கவிதையாலும் முழுமையாக விவரிக்க முடியாது. அவர்களின் புத்திக்கும் இது எட்டாது. ஸ்ரீகிருஷ்ணனின் மங்கள லீலைகள் எந்த ஸ்தோத்ர வடிவமான வரிகளுக்கும் அடங்காதவை. || 16

அபார பராக்ரமம் கொண்ட ஸ்ரீகிருஷ்ணனின் அழகிய நற்குணங்களைச் சிந்தித்து, கண்ணிமைக்காமல், அசையாத பக்தியோடு, அவனையே நோக்கும் இந்த ஆயர்பாடியின் பெண்களும், மனைவிகளும் மிகவும் பாக்கியசாலிகள். அழகர்களுக்கெல்லாம் அழகனாக, யசோதையின் பாலை உண்ட செல்லக் கிருஷ்ணனின் திருவருள் இருக்கும்போது, இவர்களுக்கு வேறு என்னதான் தேவை?. இவர்கள் தேவலோகத்திலும் பெரும் மதிப்பு பெறத் தகுதியானவர்கள். ||17

அதிகாலையில் யதுபதியான ஸ்ரீகிருஷ்ணன் பசுக்கூட்டங்களுடன் காட்டிற்குச் செல்வான். மாலையில் புல்லாங்குழல் வாசித்தபடியே தனக்கு மிகவும் ப்ரியமான கோபியர்களின் அருகில் திரும்பி வருவான். அந்த இனிய குழலோசையில் மயங்கி, பெண்கள் அனைவரும் அந்த லக்ஷ்மிபதியைத் துதிப்பதற்காக ஓடி வருவார்கள். இந்த உலகத்தின் மாயைகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஸ்ரீஹரி, அவர்களை கருணை பொங்கும் தன் பார்வையால் நோக்கி அருள்வான். || 18

ஸ்ரீகிருஷ்ணன் அன்பான வார்த்தைகளைப் பேசுகிறான். தன் புன்னகையால் அமுதத்தை ஊட்டுகிறான். தாமரைக் கண்ணனான அவன், தேவலோகப் பெண்களுக்கும் ஆச்சரியத்தைக் காட்டி மயக்குகிறான். கற்புக்கரசிகளான இந்தக் கோபியர்கள் கம்சனின் சபையில் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கும்போதே, யதுபதியான ஸ்ரீகிருஷ்ணன் கொடூரனான கம்சனை வதம் செய்வதற்கான உபாயத்தைச் (திட்டத்தைச்) செய்யத் தொடங்கினான். ||19

அப்போது, அச்சுதனுக்கும், கலியான சாணூரனுக்கும் இடையே பெரிய போர் மூண்டது. கலப்பையை ஏந்திய பலராமனுக்கும் முஷ்டிகனுக்கும் இடையே அரங்கத்தின் நடுவில் போர் நடந்தது. விண்ணோரும் மண்ணோரும் வியக்கும் வண்ணம், மதயானைகளின் போரைப் போல் அது அமைந்தது. யோகேஶ்வரன் (கிருஷ்ணன்), மின்னலைப் போல சாணூரன் மீது பாய்ந்து தாக்கினான். ||20

வஜ்ரம் போன்றதான ஸ்ரீகிருஷ்ணனின் தேகத்தில் மோதி காயம்பட்ட சாணூரன், கோபத்தால் கர்ஜித்து வானளவுக்கு எழும்பி, தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணனின் முன்னே வந்து நின்றான். அந்த துஷ்டன் யாராலும் வெல்ல முடியாத படை போல் ஆவேசத்துடன் தன் கைகளால் ஸ்ரீகிருஷ்ணனின் மார்பில் அடித்தான். ஆனால், தேவர்களின் தலைவனான பரமாத்மாவிற்கு இதனால் வலி ஏற்படுவது உண்டோ?. (இல்லை). அவனோ (சாணூரனோ) ஜீவனற்ற வெறும் மல்யுத்த வீரன். || 21

ஸ்ரீஹரி, மதயானையைப் போல கம்பீரமாக எழுந்து அந்த துஷ்ட சாணூரனின் தோள்களைப் பற்றினான். தேவர்களின் பகைவர்களை அழிக்கும் கோவிந்தன், அவனை வட்டமாகச் சுழற்றித்

தரையில் அடித்து வீழ்த்தினான். வானவில் முறிந்து விழுவது போல, கர்வம் கொண்ட சாணூரன் தரையில் விழுந்து உடனே மடிந்தான். அடுத்த மல்யுத்த வீரனான முஷ்டிகன் பலராமனை ஆவேசத்துடன் தாக்க வர, பலராமன் பெரும் கோபமடைந்தான். || 22

முஷ்டிகன் கோபத்துடன் பலராமனைத் தன் கையால் அடித்தான். ஆனால், பலத்த காற்றில் முறிந்து விழும் மரத்தைப் போல, வாயிலிருந்து ரத்தத்தைக் கக்கியவாறு, முஷ்டிகன், உயிர் விட்டு தரையில் சரிந்தான். அடுத்து 'கூடாக்யன்' (கூடன்) என்பவன் போருக்கு வர, பலராமன் தன் இடது கையால் ஒரு சிறுவனின் விளையாட்டுப் போல எளிதாக அவனை அடித்து வீழ்த்தினான். அவர்களின் பெரும் பலத்தையும் அகந்தையையும் அடக்கி, சண்டையிட வந்த மற்ற மல்யுத்த வீரர்களின் தலைகளையும் தன் திருவடிகளால் உதைத்துச் சாய்த்தான். || 23

முரனை அழித்த ஶௌரியான ஸ்ரீகிருஷ்ணன், தன் கரங்களினாலும் உதட்டினாலும் (கடித்துத்) துண்டித்து, அந்த முக்கிய 4 பெரும் மல்யுத்த வீரர்களையும் கொன்று வீழ்த்தினான். இதைப் பார்த்த மற்ற கொசு போன்ற சாதாரண மல்யுத்த வீரர்கள் பயந்து நாலாபுறமும் ஓடினார்கள். ஸ்ரீஹரி அங்குள்ள கோபாலர்களுடன் மகிழ்ச்சியுடன் விளையாடத் தொடங்கினான். அவனுடைய கால் சிலம்புகள் 'ஜண்-ஜண்' என ஒலிக்க, தாரை தப்பட்டை மற்றும் தாள ஓசையின் லயத்திற்கு ஏற்ப அழகாக நடனமாடினான். ||24

சான்றோர்கள் இந்தப் போரைக் கண்டு, ஸ்ரீகிருஷ்ண-பலராமர்களின் வீரியச் செயலை எண்ணி மகிழ்ந்து அற்புதம்! அற்புதம்! என்று போற்றினார்கள். ஆனால் துஷ்டனான கம்சனின் உறவினர்கள் அனைவரும் பெரும் துயரமும் கவலையும் அடைந்தார்கள். போஜ மன்னனான கம்சன் தான் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அவனுடைய முக்கியமான மல்யுத்த வீரர்கள் அனைவரும் மடிந்தனர். மற்றவர்கள் பயந்து ஓடினர். கம்சன் மனதளவில் பெரும் பயமும் சோகமும் அடைந்து, அங்கே ஒலித்துக் கொண்டிருந்த அனைத்து மங்கள வாத்தியங்களையும் உடனே நிறுத்துமாறு கட்டளையிட்டான். || 25

ஸ்ரீஹரியைப் பகைக்கும் துஷ்டர்களுக்கு வெற்றி என்பது கனவிலும் சாத்தியமில்லை. துர்நடத்தை கொண்ட போஜராஜனான கம்சனுக்கு, ஸ்ரீஹரியைப் பகைத்துக் கொண்டதின், தீய பலன் என்னவென்று இப்போது புரிந்தது. அவனது நெஞ்சம் பயத்தால் திக்கென்று கலங்க, அவன் பயத்தில் பெருமூச்சு விட்டான். வீண் பிடிவாதத்திலும் துர்மதியிலும் அவனுடைய ஆயுள் முடிந்து போய்விட்டது. ஆயினும் இந்த பாபாத்மா தன் திமிரை இன்னும் விடாமல், பயத்தால் மனம் மயங்கித் தவிக்கிறான். || 26

ஸ்ரீவேதவ்யாஸரின் புத்ரரான ஶுக மஹரிஷிகள், இந்த திவ்ய அமுதமான ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாவது ஸ்கந்தத்தை உபதேசம் செய்தார். பரீக்ஷித் மகாராஜா, தன் கைகளில் சமித்தை ஏந்தியபடி, குருவின் இந்த உபதேசத்தைக் கேட்டுப் பரவசப்பட்டுத் தலையாட்டி ஏற்றுக்கொண்டான். ஸ்ரீலக்ஷ்மிபதியான ஸ்ரீப்ரசன்ன வெங்கட கிருஷ்ணனின் அற்புதமான திவ்ய லீலைகளைக் கேட்பவர்களுக்கும், அதனை உபதேசிப்பவர்களுக்கும், அதனைக் கேட்டு உணர்பவர்களுக்கும் பேரானந்தக் கடலில் நீராடி அமிர்தத்தைப் பருகும் பெரும் பாக்கியம் கிடைக்கும். || 27

***

65. ராக: ஸௌராஷ்ட்ர தாள: ஏகதாள

ஜாத: கம்ஸவதார்த்தானு பாதகஹர ஸமர்த்த
பூத சாரித்ர லக்ஷ்மிய நாத
காதிஸித கௌதுகதி மாதுளன ப்ரூதரொடனெ
ஆததாயிய ப்ராத்ருஸஹநாத || 1

போஜபதி தன்ன ஸேவகஜனகெ ஆஜ்ஞெயித்த
கோஜங்குளிய காவ அர்ப்பகரீ
ராஜதானியிந்த நூகிரோ ஸத்வர || 2

நந்தகோபன கட்டி பந்திஸிரி துர்மதியனு
எந்தகம்ஸ பாபியு துராத்ம
தந்தெ உக்ரஸேனனவன பந்து ஸஹ கோபால பக்ஷ
ஹொந்திதவரனெந்தனு பாபாத்ம || 3

கொந்து பிஸுடி அஹிதரனு எந்து கம்ஸ கத்திஸெ
இந்திரேஶ கேளிதவ்யயாத்ம
நிந்த ரங்கவ பிட்டுஹார்த மந்தமதி போஜபனு
ஹொந்தித மஞ்சகெ பரமாத்ம || 4

ம்ருத்யு பளிகெ பந்திதெந்து கத்திவிடிது சர்மஸஹ
ஸத்வரதி காதலனுவாத
அத்த இத்த எடபலகெ ஸுத்தாடித கிடகனந்து
ந்மத்தன தெக்கியலி ஹரி ஹிடித || 5

நாகன்ன கொண்டோடுவ கருடன்ஹாகெ கேஶவன லீலெ
ஆகெ கைலி அவசி அவனிய மேலெ
பேகுருளுகெடஹிதனு யோகி நாத அவன முகுட
நீகிஸிதனு கபரிவிடிதனு கிருஷ்ண || 6

மஞ்சதிந்த ரங்கபூமிகிஞ்சித கேஸரியு மத
அஞ்சித கரியனு கெடஹிதந்தெ
முன்சிஸித கம்ஸனஸுவ பஞ்சபாணனய்ய கிருஷ்ண
பஞ்சமஹாபாதகியந்தெ || 7

அஸுரஹரன பாரவவகெ விஶ்வத ஷ்டு பாரவாகெ
அஸுவ நீகிதனு ஶிக்ஷெஹொந்தி
வஸுதெயல்லி பித்தவன பிஸஜனேத்ர கட்டி எளெஸி
பிஸுடிஸித லோகவர்ய ஜவதி || 8

களனு கெடெத பளிக ஜனத களகளவு ஹெச்சி ஹாஹா
இளெய கண்டகவு ஹோயிதெந்து
கெலுமுகவு ஸுஜனரிகெ அளுமுகவு துர்ஜனரிகெ
களகம்ஸகெ ஹரிபய ஹீகெந்து || 9

நளினாக்ஷன பயத த்யாஸ பலிதிஹுது இருளு ஹகலு
ஜலபானதி உணுத உடுத நிலுத
மலகி ஸ்வப்னதல்லி மாதுகளன்னு ஆடுவல்லி சக்ர
ஜலஜதரன முந்தெ காம்ப நிருத || 10

பலுபடுதராப்யாஸத பலதிந்த ப்ருகுமுனீந்த்ர
லலிதகதிகைதித மஹாத்மா
ஸலெ ஹரிய வைரபாவ பலித பாபி காலனேமி
நிலதெ தமஸகைதித துராத்ம || 11

அவனிபதி பீளலிக்கெ அவன பந்துகளெண்டு மந்தி
ஜவதி பரலு பலனு கையிந்த
ஜவன மனெகெ கொந்தட்டித லவதொளகெ பரிகதிந்த
ஸவரிஸித உளித களரவ்ருந்த || 12

பஶுகளனு ஸிம்ஹ கொந்து எஸெவந்தெ ந்யக்ரோதகங்க
ரஸுவ களெயெ ஸுரரு அம்பரதி
குஸுமவ்ருஷ்டி கரெதராக அஸமான துஷ்டியஹொந்தி
லஸத துந்துபி கோஷிஸிதர் முததி || 13

அஜபவேந்த்ராத்யகிளரு அம்புஜனாபன ஸ்தோத்ர மாடி
ஸுஜனரு தோஷாப்தி யலோலாடெ
த்ரிஜகாதார முராரி குஜன காந்தார குடாரி
பஜகரபீஷ்டெய பூரண மாடெ || 14

கம்ஸனங்கனேரு மத்தெ த்வம்ஸித களாங்கனேரு
ஹிம்ஸித பதிகள பளிகெ பந்து
பாம்ஸுகள தம்மதலெகெ ஹூஸி ஹொய்துகொண்டு மருகி
ஶம்ஸகர மேலெ ஹொரளி நொந்து || 15

நெத்திகள புவிகெ கட்டிஸுத்த பஹுஶோகதிந்த
ஸத்தவரனு அப்பி கோளிடுத
அத்தரு ஸவெயதஸ்ரு ஒத்திபருத கங்களிந்த
ஸத்தெவு கெட்டிவெந்து ஹொரளாடுத || 16

பிரிதாகி ஸாதியரெல்ல உரவ ஜடர படிதுகொண்டு
தொரெயெ மரளி மரளி துக்கரவ மரளெ
கருணவில்லவெ நம்மல்லி அரஸெ ஸும்மனேகிருவெ
தெரெது கண்ண மாதனாடு த்வரிய || 17

ஹா பதெ ப்ரியோத்தமனே கோபவேகெ தவ வியோக
தீபராவு பர்த்ருஹீனராகி
தீபிஸுதிதெ அவனிபதெ தர்மஜ்ஞப்ரபோ
ஈ பரியவஜ்ஞெ நமகேகெ || 18

அபராதவில்லதர்கெ தாபவித்து பாதிஸிதுதகெ
ஈ பலவனுண்டெ கையமேலெ
பாபபுத்தியிந்த காலன பட்டணகெ ஐதிஹோதெ
பூபனாகி ப்ராணிகள மேலெ || 19

தயவிரலு பேகு நீ நிர்தயனாகி மடிதெயலா நி
ஶ்சயவை ஜனன மரண தேஹிகள்கெ
அய்யோ வ்யர்த்த ஸத்தெயலா த்வதீய ஜன்மபூதத்ரோஹ
மையுண்டு ஹோதெயெலோ நரககீக || 20

ஜனககெ துக்கவித்த ந்ருபகெ கனஸினலி தோரது ஶுக
வெனுத ரோதிஸலு ஸ்ரீகிருஷ்ண
கன க்ருபெய நுடிகளிந்த வனிதெயர் ஶோக நிலிஸிதனு
ஜனகஜனனியர் பந்த மோசிஸித || 21

தினகெ ஹிரியரிகெ நமிஸி வினயவாக்யாம்ருதவனுணிஸெ
ஜனனி ஜனக ஜனரெல்ல திளிதரு
தனயரிவரு புவனேஶரு மனுஜரல்ல நம்ம மக்க
ளெனுவ ஸ்னேஹவன்னெ மரெதரு || 22

தனயரன்னு அப்பிதரு மனதி பயவ ஹிடிது ஜக
ஜ்ஜனகரெந்து திளிது மாதனாடெ
ஸனகாதீட்ய தன்ன மாயவனு தளெது மோஹிஸித
வினயமதியு வாக்யதல்லி ஹுச்சுமாடி || 23

ஜனவிடம்ப விஶ்வபிம்ப தனயரெம்ப ஹம்பலித்த
கனஸ்னேஹவ தோர்தனு முராரி்த
ஜனக ஜனனிய த்யானவு ஜனிஸெ நீவு நொந்திரல்ல
ஜனிஸிதந்திகிந்திகெந்த தயார்த்ர || 24

வந்திஸித பலன கூடி தந்தெ தாயிகளடிகளிகெ
ஹொந்தி வினயவாந்த ஸாத்வதேஶ
நந்தஜோத்பவேந்துமௌளிவீந்த்ராஹீந்த்ர இந்த்ரஸ்மர
ரிந்த முக்தாமுக்தர்கீஶ || 25

அம்ப தாத எந்து தன்ன ஹம்பலவ ஹச்சி கிருஷ்ண
கும்பினிய லோகக்கெல்ல தேவ
லம்பிஸித ஶுக்ஞனிகுரும்பகெ தோரிது ஈ வி
டம்பு அம்புஜனேத்ரன பாவ || 26

கஷ்டிஸிதிரல்ல நாவு ஹுட்டிதந்திந்தீகெ நீவு
துஷ்டகம்ஸ நஷ்டவாகி ஹோத
கஷ்டபடிஸிதனு நிம்மதிஷ்ட்ய ஹதனாத நம்ம
புட்ட மௌகண்ட கைஶரதனதி || 27

லீலெய நோடுவ பாக்ய வேளெ வேளெ தந்தெதாயிகெ
மூல ஸுக்ருதத பலவெல்ல
பாலர்னாவு பராதீனதி காலகளெதெவு வனதல்லி
லாலிஸிகொம்புவ பாக்யவில்ல || **28**

ஸ்வர்க்கஸுகவு ஜனனிஜனகர்கெ மக்களாட நோடி
ஹிக்குவுது பூர்வபுண்யபலவு
அக்ரஜன்னகூடி வனதி ஆனர்க்ய ஆடவாடிதெவு
த்ருக்களிந்த காணலில்ல நீவு || **29**

பாலு பெண்ணெ இக்கி ஆபரணகளன்னிட்டு பருவந்தம்பெ
காலிக்கிஸி வல்குவாக்ய கேளி
லாலாங்கித வதனரதனஸாலு நோடி முத்துகொடுவ
பாலெ தன்யளு புண்யஸுஶீலெ || **30**

இந்த தாயிதந்தெகளிகெ அந்த்யகால வார்த்யக்யதி
ஸந்தோஷதல்லிட்டவனெ புத்ர
ஸந்தமஹந்தரொளத்யந்த பூஜ்யனஹனவனு
சிந்திஸிதர் நாவு ஹுட்டி வ்யர்த்த ||**31**

பெத்தவர்கெ பஹு ஸுகவித்தவனெ ஜீவன்முக்த
சித்த கேத மாள்ப ஜீவத்ப்ரேத
ஹத்தெண்டு ஸாவிரவருஷ துத்திட்டு ஸ்வமாம்ஸவனும்ப
ஓத்தேளுத நிரயதல்லி தம்ப || **32**

வ்ருத்தாப்யகாலதி பேத்த வ்ருத்தரன்னு குருகளன்னு
ஸாத்விபத்னி ஶிஶுகள விப்ரரன்னு
இத்தஷ்டு ப்ரபன்னரன்னு ஹொத்திதவர ஸாகதிப்ப
புத்திஹீன ஸேருவனு நரகவனு || **33**

போஜபனுபத்ரவகெ பூஜெஸலில்ல நிம்மனு
ஈ ஜன்ம வ்யர்த்தவாயிதய்ய
ஆ ஜனனி ஜனகரிகெ தேஜோமய க்ஷமிஸிரெந்து
ராஜீவஜஜனக முகித கைய || **34**

நிம்ம ஶுஶ்ரூஷணவ மாடி ஒம்மெ துஷ்டிபடிஸலில்ல
நம்ம ஸ்வாந்த்ர்யவில்லதெ அந்து
நம்மதர்ம க்ஷமிஸிரெந்து அம்ம தேவகி வஸுதேவனிகெ
நம்மிஸித கிருஷ்ண அக்ரஜனிந்த || **35**

விதிபவேஶ விஶ்வாந்தர்ய வதிஸித மனுஷ்யஜனரு
வதிஸிதந்தெ தாயிதந்தெகளிகெ
ஸதமல மாயதளெது மோஹிஸித தேவகிகெ
முதவித்தங்கதல்லி குளித ப்யாகெ || **36**

**தோஷாப்தியலி முளுகிதரு ஶைஶவலீலெய மக்களப்பி**
**மூஸி நோடிதரு மஸ்தகவனு**
**ஸூஸிதரு அஶ்ருஸ்னேஹபாஶதிந்த பாஷ்பகண்ட**
**பாஷெ கத்கததந்தெ மோஹிஸிதரு || 37**

**அஶ்ருதாரெ ஸிஞ்சிஸுத்த ஆ ஶௌரி தேவகிதேவி**
**ஶாஶ்வத மக்களெந்து திளிதரு**
**வாஸுதேவ பலராமரு கூஸுகளந்தொந்திஸிதரு**
**விஶ்வவந்த்யர் விஶ்வக்கெ மோஹகரு || 38**

**துஷ்டமதன புண்யகதன ஶிஷ்டபால ஶ்ரீபூலோல**
**கிருஷ்ணபலரு உக்ரஸேனனிகெ**
**துஷ்டியிந்த வந்திஸலு அஷ்டு ஜனகாஶ்சர்ய**
**த்ருஷ்டிகாகெ ஸ்ருஷ்டிகர்தராகெ || 39**

**ஈ ஸத்கதெய பேளிதனு வ்யாஸஸூனு ந்ருபவரகெ**
**ஶ்ரீஶனொலுமெ ஆஶுலாபவாகெ**
**ப்ரஸன்வெங்கடதாஸரிகெ லேஸு லேஸு லேஸு ஸர்வ**
**தா ஸுகவு ஹேளி கேளிதவரிகெ || 40**

கம்ஸனைக் கொன்றவன். கெட்டவர்களை அழிக்க ஸமர்த்தன். புனிதமான சாரித்ர்யம் கொண்டவன். லக்ஷ்மியின் தலைவன். தன் சகோதரனுடன் சேர்ந்து, தன் எதிரியான மாமனை அடித்துக் கொன்றான். || 1

போஜபதியான கம்ஸன் தன் சேவகர்களுக்கு இவ்வாறு ஆணையிட்டான். பசுக் கூட்டங்களை காப்பவர்களான இந்த சிறுவர்களை நம் ராஜதானியிலிருந்து அப்புறப்படுத்துங்கள் - என்றான். || 2

நந்தகோபனை கட்டி அந்த துர்மதியை சிறையில் இடுங்கள் என்றான் கம்ஸன். அவன் பாபி. துராத்மா. தன்னுடைய தந்தையான உக்ரஸேனனின் உறவினன் அவன். அவனுடன் சேர்த்து கோபாலகர்களின் பக்ஷத்தை எடுத்தவர்கள் அனைவரையும் சிறையில் இடுங்கள் என்றான் பாபாத்மனான கம்ஸன். || 3

இவர்கள் அனைவரையும் கொன்று வீசுங்கள் என்று கம்ஸன் கூறுகிறான். இந்திரேஶன் இதனை கேட்கிறான். அவன் அவ்யயன். தான் இருந்த இடத்தை விட்டு பாய்கிறான். மந்தமதியான கம்ஸன் இருந்த இடத்தை நோக்கி பரமாத்மன் பாய்கிறான். || 4

தனக்கு மரணம் அருகில் வந்திருக்கிறது என்று கையில் வாள், கேடயங்களைப் பிடித்து, உடனடியாக சண்டை போடத் தயாரானான். கம்ஸன், அங்கும் இங்குமாக, இடது வலதாக, சுற்றினான். ஓடினான். மரத்தை சுற்றி ஓடும் பைத்தியத்தைப் போல ஓடியவனை ஸ்ரீஹரி பிடித்தான். || 5

நாகத்தை தூக்கிப் பறக்கும் கருடனைப் போல, கேசவனின் லீலை இருந்தது. கம்ஸனை கையில் பிடித்து, பூமியின் மேல் தள்ளி படுக்கச் செய்தான். யோகிகளின் தலைவன், கம்ஸனின் கிரீடத்தை தள்ளினான். அவனுடைய கூந்தலை ஸ்ரீகிருஷ்ணன் பிடித்தான். || 6

மஞ்சத்திலிருந்து பூமிக்கு தாவினான் ஸ்ரீகிருஷ்ணன். சிங்கமானது யானையை தள்ளியதைப் போல (கொல்வதைப் போல), மன்மதனின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணன், கம்ஸனின் உயிரை பறித்தான். பஞ்ச மஹா பாதகத்தை செய்த கம்ஸனின் உயிரை ஸ்ரீகிருஷ்ணன் பறித்தான். || 7

அஸுரனைக் கொல்பவனின் பாரம் என்பது கம்ஸனுக்கு உலகம் போல மிகப்பெரிய பாரமாக ஆகிறது. கம்ஸன் தன் உயிரை விட்டான். தண்டனை பெற்று, பூமியில் விழுந்தவனை தாமரைக் கண்ணனான ஸ்ரீகிருஷ்ணன், உலகத்தின் தலைவன், உடனடியாக, கட்டி இழுத்துப் போட்டான். || 8

துஷ்டன் இறந்த பின்னர், மக்களுக்கு மகிழ்ச்சி அதிகரித்தது. ஹாஹா, பூமியின் துன்பம் / கஷ்டம் நீங்கியது என்றனர். ஸஜ்ஜனர்களுக்கு வெற்றி / மகிழ்ச்சி முகம். துர்ஜனருக்கு தோல்வி / கவலை முகம். துஷ்டனான கம்ஸனுக்கு ஹரியின் மேல் பயம் இருந்தது என்று கூறினர். || 9

தாமரைக் கண்ணன் மேல் இருந்த பயம் அவனுக்கு தொடர்ந்து இரவும் பகலுமாக, தண்ணீர் குடிக்கும்போது, உண்ணும்போது, ஆடை உடுத்தும்போது, நிற்கும்போது, படுத்தபோது, கனவில், மற்றவர்களுடன் பேசும்போது, சக்ரம் மற்றும் தாமரையை பிடித்தவனை, ஸ்ரீகிருஷ்ணனை எப்போதும் எதிரில் நிற்பதுபோலவே அவன் நினைத்தான். || 10

பலவிதமான பயிற்சியினால் வந்த வலிமையால், ப்ருகு முனியானவர், முக்தியை அடைந்தார். அவர் மஹாத்மா. எப்போதும் ஸ்ரீஹரியின் மேல் வைரி பாவத்தைக் கொண்ட பாபி, காலநேமியான கம்ஸன், தமஸ் உலகை அடைந்தான். அவன் துராத்மா. || 11

அரசனான கம்ஸன் இறந்தபின், அவனது சகோதரர்களான எட்டு பேர் உடனடியாக வர, ஸ்ரீகிருஷ்ணன் தனது கைகளால் அவர்களை உடனடியாக யமபுரத்திற்கு அனுப்பி வைத்தான். போரிட வந்த மற்ற துஷ்ட குலத்திற்கும் அதே கதி ஏற்பட்டது. || 12

சிங்கம் பசுக்களைக் கொன்று வீசுவதைப் போல, கீழ் நோக்கி பாயும் மரத்தைப் போல தெரிய வருவதாக, தேவர்கள் வானிலிருந்து பூமழையை பொழிந்தனர். ஈடு இணையற்ற மகிழ்ச்சியை அடைந்து, துந்துபி கோஷங்களை அவர்கள் மகிழ்ச்சியுடன் இசைத்தனர். || 13

ப்ரஹ்ம தேவர், ருத்ரதேவர், இந்த்ராதி அனைத்து தேவர்களும், பத்மனாபனை ஸ்தோத்ரம் செய்தனர். ஸஜ்ஜனர்கள் மகிழ்ச்சிக் கடலில் விழுந்தனர். மூன்று உலகங்களுக்கும் ஆதாரமானவன், முராரி, கெட்டவர்களை கொல்பவன், தன்னை பஜிப்பவர்களின் அபீஷ்டங்களை (கம்ஸனைக் கொன்று) முழுமையாக நிறைவேற்றினான். || 14

கம்ஸனின் மனைவிகள் மற்றும் கொல்லப்பட்ட மற்ற துஷ்டர்களின் மனைவியர், தம்முடைய கணவர்களின் அருகில் வந்து, தம் கூந்தலை இறுக்கி கட்டிக் கொண்டு, அவரவர் கணவர்கள் மேல் விழுந்து புரண்டு அழுதனர். || 15

தமது நெற்றிகளை பூமியில் இடித்தவாறு, மிகவும் சோகத்துடன், இறந்தவர்களை கட்டிக் கொண்டு அழுதனர். கண்களிலிருந்து கண்ணீர் பாய்ந்து வர, நாங்களும் இறந்தோம், கெட்டோம் என்று புரண்டனர். || 16

அந்த மனைவியர் அனைவரும் தங்களின் மார்பில் அடித்துக் கொண்டு, தலைவனே, என்று திரும்பத்திரும்ப துக்கத்தில் விழுந்து அழுதனர். நம் மேல் கருணை இல்லையா அரசனே. நீ ஏன் அமைதியாக இருக்கிறாய்?. உன் கண்களைத் திறந்து உடனடியாக பேசுவாயாக - என்று அழுதனர். || 17

ஹே கணவனே. எங்கள் மேல் அதிக ப்ரியம் கொண்டவனே. ஏன் எங்கள் மேல் உனக்கு கோபம்?. நாங்கள் கணவர்களை நீங்கி, உன்னுடைய பிரிவால் வாடுகிறோம். பூமியின் அரசனே. தர்மத்தை காத்தவனே. இவ்வாறான துன்பங்கள் நமக்கு எதற்கு? - என்று அழுதனர். || 18

தவறு செய்யாதவர்களுக்கு துன்பத்தை கொடுத்து கஷ்டப்படுத்தியவர்களுக்கு, அதற்கான பலன் கை மேல் கிடைக்கும். உன்னுடைய பாப புத்தியினால், நீ யம பட்டணத்திற்கு பயணம் செய்துவிட்டாய். அரசனாக இருந்தால், ப்ராணிகளின் (மக்களின்) மேல்... || 19

கருணை இருக்க வேண்டும். நீயோ கருணையே இல்லாமல், இவ்வாறு இறந்து விட்டாயே?. ஜனனம் மரணம் என்பது அனைவருக்கும் நிச்சயமே. அய்யோ. நீ வீணாக இவ்வாறு இறந்துவிட்டாயே?. நீ இந்த பிறவியில் செய்த த்ரோகங்கள் உன்னுடைய உடலையே தின்று விட்டது (உன் உடலிலேயே நிறைந்துள்ளது). நரகத்திற்கு இப்போது சென்று விட்டாயே? - என்று அழுதனர். || 20

தன் தந்தைக்கு (உக்ரஸேனனுக்கு அல்லது வஸுதேவ / நந்தகோபனுக்கு) துக்கம் அளித்த அரஸன் கம்ஸனுக்கு கனவிலும் சுகம் கிடைக்காது என்றவாறு, ஸ்ரீகிருஷ்ணன் தன்னுடைய அபாரமான க்ருபையுடனான வாக்குகளால், அந்தப் பெண்களின் சோகத்தை நிறுத்தினான். அரசனின் மனைவியர்களின் பந்தத்தை (அரசன் உடனான) நிறுத்தினான். || 21

மூத்தவர்களை வணங்கி, அவர்களுக்கு வினயத்துடனான வாக்கிய அமிர்தத்தை அளித்தான். தாய், தந்தை, மக்கள் என அனைவரும், தம் மக்களான இவர்கள் உலக நாயகர்கள். நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள் அல்ல. தம் மக்களே இவர்கள் என்பதான ஸ்னேஹ பாவத்தையே அனைவரும் மறந்தார்கள். || 22

தங்கள் மக்களை அவர்கள் அணைத்துக் கொண்டனர். மனதில் பயம் கொண்டு, அவர்கள் உலக நாயகர்கள் என்பதை அறிந்து பேசத் துவங்கினார்கள். ஸனகாதிகளால் வணங்கப்படுபவனான ஸ்ரீகிருஷ்ணன், தன்னுடைய மாயையை விட்டு, அனைவரையும் மயக்கினான். தன்னுடைய வாக்குகளால் அனைவரையும் பைத்தியம் ஆக்கினான் (மயக்கினான்). || 23

(இப்போது ஸ்ரீகிருஷ்ணன், தான் ஒரு அவதாரம் என்பதை அனைவருக்கும் மறக்கச் செய்தான். வஸுதேவ தேவகியரின் மகன் என்பதையே அவர்களுக்கு புரிய வைத்தான்). சாதாரண மக்கள் போல தெரிகிறான். அவன் உலகின் பிம்பன். தம் மக்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு அபாரமான ஸ்னேகத்தை காட்டினான். முர என்னும் அஸுரனைக் கொன்றவன். தாய், தந்தையரின் சிந்தனை வர, அவர்களிடம் - நான் பிறந்த நாளிலிருந்து இன்று வரை நீங்கள் கஷ்டமே பட்டிருக்கிறீர்கள் - என்றான், கருணைக்கடலான ஸ்ரீகிருஷ்ணன். || 24

பலராமனுடன் சேர்ந்து தந்தை, தாய்களின் பாதங்களில் மிகவும் மரியாதையுடன், ஸாத்வ வம்சத்தைக் சேர்ந்த ஸ்ரீகிருஷ்ணன் விழுந்து வணங்கினான். அவன் நந்தகோபனிடம் பிறந்தவன். சந்த்ர குலத்தின் கிரீடம். கருட, ஸேஷ, இந்த்ர, மன்மதனே முதலானவர்களால், முக்த, அமுக்த ஆகியோரின் தலைவன் / அவர்களால் வணங்கப்படுபவன். || 25

அம்மா, அப்பா என்று சொல்லி, ஸ்ரீகிருஷ்ணன் உலகத்து மனிதர்கள் அனைவருக்கும், தன் விருப்பத்தை தெரிவித்தான். ஸுஜ்ஞானம் கொண்டவர்களான தேவர்களின் கூட்டத்திற்கு, தாமரைக் கண்ணனின் இந்த செயல், அவனது பாவமே இப்படியானது என்பதை புரிய வைத்தது. || 26

(ஸ்ரீகிருஷ்ணன், வஸுதேவ தேவகியரிடம் சொல்வது) : நாம் பிறந்ததிலிருந்து இன்று வரை நீங்கள் கஷ்டப்பட்டிருக்கிறீர்கள். இப்போது, துஷ்டனான கம்ஸன் இறந்திருக்கிறான். உங்களை கஷ்டப்படுத்தியவன் இப்போது, நம்முடைய சிறு வயது கைகளால் (கம்ஸனைக் கொல்லும்போது ஸ்ரீகிருஷ்ணனுக்கு 11 வயது), அதன் வீரத்தால் அடிபட்டு இறந்திருக்கிறான். || 27

தந்தை தாய்களுக்கு தங்கள் குழந்தைகள் செய்யும் லீலைகளை பார்க்கும் பாக்கியம் கிடைப்பது என்பது அவர்களுடைய முற்பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பலன்களே. நாங்கள் சிறுவர்கள். பிறரை சார்ந்திருந்து வனங்களில் காலத்தை கழித்தோம். பெற்றோரிடம் கொஞ்சிக் கொள்ளும் பாக்கியம் எங்களுக்கு (கிருஷ்ண பலராமர்களுக்கு) இருந்திருக்கவில்லை. || 28

தந்தை தாய்களுக்கு, தம் மக்களின் விளையாட்டுகளை / குறும்புகளை பார்த்தே ஸ்வர்க்கத்தின் சுகம் கிடைக்கிறது. அதைப் பார்த்து மகிழ்வது அவர்களுடைய முற்பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பலன்களே. நம் அண்ணனுடன் சேர்ந்து கொண்டு, வனங்களில் ஏராளமாக ஆட்டங்களை ஆடினோம். அதை நீங்கள் உங்கள் கண்களால் பார்க்கவில்லை. || 29

பால், வெண்ணெய் ஆகியவற்றைக் கொடுத்து, ஆபரணங்களை அளித்து, குழந்தை தன் பிஞ்சுக் கால்களை வைத்து நடப்பதை பார்த்து மகிழ்ந்து, மழலைப் பேச்சுக்களைக் கேட்டு, குழந்தையின் முகத்தை திரும்பத் திரும்ப பார்த்து, கொஞ்சி முத்தம் கொடுக்கும் பெண்ணே (தாயே) தன்யள். அவளே அதிகம் புண்ணியம் செய்தவள். || 30

இத்தகைய தாய் தந்தையர்க்கு முதுமையால் இறுதிக் காலம் வர, அவர்களை மகிழ்ச்சியுடன் வைத்திருப்பவனே புத்திரன். அப்படிப்பட்ட மகனே, அறிஞர்கள், பூஜ்யர்கள் ஆகியோரால் போற்றப்படுபவன் ஆகிறான். ஆனால், நாம் அப்படிச் செய்யவில்லை. யோசித்து பார்த்தால், நாம் பிறந்ததே வீண். || 31

பெற்றவர்களுக்கு அதிக சுகத்தைக் கொடுத்தவனே ஜீவன் முக்தன். அவர்களின் சித்தத்திற்கு துன்பம் கொடுப்பவன் - உயிருடன் இருந்தாலும் அவன் பிணமே. 18,000 ஆண்டுகள் வரைக்கும், அவன் தன்னுடைய மாமிசத்தை தானே உண்பான். அவன் நித்ய நரகத்திலேயே வீழ்வான். || 32

பெற்றவர்களை, குருகளை அவர்களது வயதான காலத்தில், ஸாத்வியான பத்னியை, குழந்தைகளை, அறிஞர்களை, தன்னை சார்ந்தவர்களை, காக்காமல் கைவிட்ட புத்தி ஹீனன், கடைசியில் நரகத்தையே சென்று அடைவான். || 33

போஜ அரஸனான கம்ஸனின் தொந்தரவுக்கு பயந்தே, நாங்கள் உங்களை பூஜிக்கவில்லை. இப்படியாக எங்களின் இந்தப் பிறவியே வீண் ஆயிற்றே?. தேஜோமயனான ஸ்ரீகிருஷ்ணன், தன் தாய் தந்தையரிடம் தங்களை மன்னிக்குமாறு, ப்ரஹ்ம தேவரின் தந்தையான ஸ்ரீகிருஷ்ணன், தன் கைகளை குவித்து கேட்டுக் கொண்டான். || 34

உங்களின் சேவைகளை செய்து, ஒரு முறையும் நாங்கள் உங்களை மகிழ்ச்சிப்படுத்தவில்லை. கம்ஸனின் ப்ரச்னைகளால் எங்களுக்கு ஸ்வாதந்த்ர்யமே இல்லாமல் போய்விட்டது. (எதையும் செய்ய முடியவில்லை). எங்கள் தர்மத்தை செய்ய முடியவில்லை. எங்களை மன்னித்து விடுங்கள் என்று பெற்றோரான தேவகி, வஸுதேவனுக்கு கிருஷ்ண, பலராமர்கள் வணங்கி கேட்டுக் கொண்டார்கள். || 35

ப்ரஹ்ம தேவர், ருத்ர தேவர் ஆகியோரின் தலைவன், உலகத்தில் அனைவரிலும் அந்தர்யாமியாக இருப்பவன், இவ்வாறு கூறினான். தன் தாய் தந்தையரிடம் ஒரு சாதாரண மனிதன் பேசுவதைப்

போல பேசினான். தன்னுடைய பவித்ரமான மாயையினால் அனைவரையும் மயக்கினான். தேவகிக்கு மகிழ்ச்சியைத் தருமாறு, அவளின் மடியில் சென்று அமர்ந்தான். || 36

பெற்றோர் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர். சிறுவர்களின் லீலைகளைப் பார்த்து அவர்களை கட்டிக் கொண்டு, அவர்களின் தலையை இழுத்து வாசம் பார்த்தனர் பெற்றோர். அபாரமான ஸ்னேஹ, பாசத்தினால் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். குரல் தழுதழுத்தது. பேச்சு வரவில்லை. மக்களை கொஞ்சினர். || 37

கண்ணீரை பொழிந்தவாறு, தேவகி தேவி, அந்த ஸ்ரீகிருஷ்ணன், தன்னுடைய மக்களே (அவதாரம் அல்ல) என்று நினைத்தனர். வாஸுதேவன் மற்றும் பலராமர் இருவரும் குழந்தைகள் என்று நினைத்து கொஞ்சினர். அவர்கள் உலகத்தில் அனைவராலும் வணங்கப்படுபவர்கள். உலகத்தையே மயக்குபவர்கள். || 38

துஷ்டர்களை கொல்பவன். புண்ய சரித்ரத்தைக் கொண்டவன். பக்தர்களை காப்பவன். ஸ்ரீதேவி, பூதேவிகளின் தலைவன். கிருஷ்ண பலராமர்கள் உக்ரஸேனனை மகிழ்ச்சியுடன் வணங்கினர். இதைப் பார்த்த அனைத்து மக்களுக்கும் மிகவும் வியப்பு. ஸ்ருஷ்டி கர்தனான ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு செய்கிறானே என்று அனைவரும் வியப்புடன் பார்த்தனர். || 39

இத்தகைய நற்கதையை ஸ்ரீவ்யாஸரின் மகனான ஶுக முனிவர், பரீக்ஷித் அரஸனுக்கு கூறினார். ஸ்ரீஶனின் பெருமைகளை அவனுக்கு உடனடி பலன்கள் கிடைப்பதற்காக கூறினார். ஸ்ரீப்ரஸன்ன வெங்கடனின் தாஸர்களுக்கு , இந்த கதையை கேட்பவர்களுக்கு, சொல்பவர்களுக்கு, அபாரமான சுகம் எப்போதும் நிரந்தரமாக கிடைக்கிறது. || 40

***

**66. ராக : சங்கராபரணம் தாள : அட்ட**

**அம்மம்மச்சரிய விசித்ர சரித்ர**
**தர்மரக்ஷக பக்தஸமூஹமித்ர || ப**

**ப்ரஹ்மருத்ரேந்த்ராதி ஸும்மனஸரிகெல்ல உம்மய பதவீவ ரம்மேஶனம்**
**தம்ம முத்தய்யகெ ஹெம்மெயனித்தனு தா மத்தெ தௌத்யத கர்மவஹிஸித || 1**

**உர்விமண்டலகரஸன மாடி பட்டவித்தூர்விபாலகரு கப்பவனீவந்தெ**
**ஸர்வேஸ்வர கிருஷ்ண ஸார்வரிகாஜ்ஞாபிஸித கர்வ கண்டிஸிதனு கர்வத களர || 2**

**பூர்வதி யயாதிய ஶாபதிம் யதுவம்ஶகர்ஹதெயில்லரஸுதனகெந்து**
**ஸர்வஜ்ஞத்வ வ்யக்த மாடித முரஹர நிர்வசனீய ஸமர்த்த பரார்த்த ||3**

**ஹீகெ நேமிஸி பவனங்கெ யோகிஸி ஶதமாககெ ஆஜ்ஞெ நிரூபிஸுத**
**பேகனெ தரிஸித ஸுதர்ம ஸபெய நியோகிஸி ந்ருபஶாஸனவித்தஜ்ஞனிகெ || 4**

**பாதகி கம்ஸன பயந்திதோடிஹோத பூஜதஜீவர யாதவரன்னெல்ல**
**ஆதுரதி கரெஸித தினவத்ஸல கிருஷ்ண ப்ரீதியலி ஸ்வஸ்தானதல்லிட்டனவர || 5**

**தாஶார்ஹ வ்ருஷ்ணி அந்தக மது குக்குரரு ஸாத்வதரு குலபந்துகளு**
**தேஶாந்தரதி பளலெ கரெஸி தந்தவர வாஸுதேவ ஸௌக்யஹ்டல்லிட்ட பஹுள ||6**

**ஸ்ரீமன நேமதி ஸௌக்யவ கண்டு ஶய்யாஸன ம்ருஷ்டான்ன பானதலி**
**ஈஶனாஸ்யாப்ஜபீயூஷவ தாவாக ஆஸ்வாதிஸிதரு ஜீவன்முக்தரவரு ||7**

**ஸம்ஸ்க்ருதி பயவேகெ த்வேஷிகளாதங்க லேஶ காணலில்ல ஸ்வப்னதல்லி**
**தோஷவெக்கள தினதினதலி கிருஷ்ண ஸம்பாஷணெ ஸஹவாஸ அபவர்கவாஸ || 8**

**அனந்தகுணனாம பூர்ணனு முக்தேஶ தா நாலிகெயலி நிந்து நுடிஸிதனு**
**ப்ராணேஷ ப்ரேரணெய ப்ராக்ருதபத க்ஞானிகளிகெ ஸம்மத களிகல்ல || 9**

**ஈ தஶம ஸ்கந்த பாகவத பூர்வார்த்தவு மேதினியலி ஹேளிகேளிதர்கெ**
**யாதவகுலரத்ன ஸர்வபுருஷார்த்தவ ஸாதிஸிகொடுவ ஸத்யவு நித்ய ||10**

**ப்ரஸன்னசாரித்ர ப்ரஸன்னஶோபனவக்த்ர ப்ரஸன்னாபாங்க நேத்ர ப்ரஸன்னகாத்ர**
**ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ண ப்ரஸன்ன நாதரேனித்ய ப்ரஸன்ன தரோக்தி பாஹவு பக்த ஜனகெ || 11**

அம்மம்மா! ஸ்ரீகிருஷ்ணனின் சரித்திரம் மிகவும் அற்புதம் / விசித்திரம். அவன் தர்மத்தை காப்பவன். பக்தர்களின் கூட்டத்திற்கு நண்பன். || ப

ப்ரஹ்ம தேவர், ருத்ரதேவரே முதலான அனைத்து தேவர்களுக்கு, சிறந்ததான பதவியை ரமாதேவியின் தலைவன் அளிக்கிறான். போஜ ராஜனாக இருந்த உக்ரஸேனருக்கு திரும்ப அந்த பதவியை பெற்றுத் தந்தான். தான் மறுபடி பாண்டவர்களுக்காக தூது சென்றான். || 1

உக்ரஸேனரை பூமியின் அரஸனாக ஆக்கி, அவருக்கு பட்டம் கட்டினான். மற்ற அரசர்கள் இவருக்கு கப்பம் கட்டுமாறு ஆணையிட்டான். ஸர்வேஶ்வரனான ஸ்ரீகிருஷ்ணன் அனைவரின் கர்வத்தையும் பங்கம் செய்தான் (அழித்தான்). || 2

முன்னர் யயாதியின் சாபத்தினால் யது குலமானது அரசாள்வதற்கு அருகதை இல்லாமல் இருந்தது. அதனை ஸர்வஜ்ஞனான ஸ்ரீகிருஷ்ணன் வந்து சரிசெய்து கொடுத்தான். அவன் முர நாமக அஸுரனைக் கொன்றவன். அவனுடைய பெருமைகளை முழுவதுமாக சொல்லி முடிக்க முடியாதவன். ஸமர்த்தன். எந்த வித பலன்களையும் எதிர்பாராதவன். || 3

ஸ்ரீகிருஷ்ணனே பவன ஸுதனான பீமஸேன தேவரை நியமித்து, ஶத யாகம் (நூறு கௌரவர்களை கொல்லும் யாகம்) செய்யுமாறு ஆணையிட்டான். த்வாரகையில் 'ஸுதர்ம சபையினை' நிர்மாணம் செய்வித்து, அதில் தன் தாத்தாவான உக்ரஸேனரை ஆட்சி செய்யுமாறு கூறினான். || 4

துஷ்டனான கம்ஸன் மேல் இருந்த பயத்தினால், நகரத்திலிருந்து ஓடிப் போயிருந்த, பயம் கொண்டிருந்த யாதவர்கள் அனைவரையும், மறுபடி வருமாறு அழைத்தான். அவன் பக்தர்களை அருள்பவன். அவர்களை அழைத்து திரும்ப அவர்களின் இடத்திலேயே இருக்கச் செய்தான். || 5

வ்ருஷ்ணி குலத்தை சேர்ந்தவனான ஸ்ரீகிருஷ்ணன், மது மற்றும் அந்தக அஸுரனைக் கொன்றவன். வேறு குலத்தை சேர்ந்தவர்கள், ஸாத்வத வம்சத்தை சேர்ந்தவர்கள், மற்றும் அந்த குலத்தின் நண்பர்கள் என பலரும் (கம்ஸனின் மேல் இருந்த பயத்தினால்) வெவ்வேறு தேசங்களில் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களை திரும்ப அழைத்து வந்து, வாஸுதேவன் அவர்களை ஸௌக்யமாக த்வாரகையில் இருக்குமாறு செய்தான். || 6

ஸ்ரீமனின் காரணத்தால் அவர்கள் அனைவரும் திரும்ப ஸௌக்யத்தைப் பெற்று, படுக்கை, ஆஸனம், சுவையான உணவு, பானம் ஆகியவற்றை பெற்றனர். ஈமனின் தாமரைக் கண்களிலிருந்து வந்த அமிர்தம் போன்ற பார்வையினை, எப்போதும் சுவைத்துக் கொண்டேயிருந்த அவர்களே ஜீவன் முக்தர்கள். || 7

இத்தகையவர்களுக்கு இந்த ஸம்ஸாரத்தின் பயம் எதற்கு?. த்வேஷிகளைக் கொல்பவனான ஸ்ரீகிருஷ்ணனை, கனவில் சிறிது கண்டால் கூட ஸம்ஸாரம் இல்லை என்றபோது, இவர்கள் தினம்தோறும் அந்த ஸ்ரீகிருஷ்ணனுடன் பேச்சு, ஸஹவாஸம், அவன் அருகிலேயே வசிப்பது - ஆகியவற்றை செய்கின்றனர். || 8

ஸ்ரீகிருஷ்ணன் அனந்த குணங்களை, நாமங்களைக் கொண்டவன். பூர்ணன். முக்தர்களின் தலைவன். அவனே என்னுடைய நாக்கினில் நின்று நுடித்திருக்கிறான். ப்ராணேமனின் ப்ரேரணையினால் வந்ததான இந்த ப்ராக்ருத பதம், ஜ்ஞானிகளுக்கு சம்மதமே ஆகிறது. துஷ்டர்களுக்கு அல்ல. || 9

இந்த பாகவத தமம ஸ்கந்த பாகவத பூர்வார்த்தத்தை பூமியில் கூறுபவர்களுக்கு, கேட்பவர்களுக்கு, யாதவ குல ரத்னனான ஸ்ரீகிருஷ்ணன், ஸர்வ புருஷார்த்தங்களையும் அருள்கிறான். இது நித்யமான ஸத்யமே ஆகும். || 10

ப்ரஸன்ன சரித்ரத்தை கொண்டவன், ப்ரஸன்ன அழகான முகம், ப்ரஸன்ன தாமரைக் கண்கள். ப்ரஸன்ன தேகம், ப்ரஸன்ன வெங்கட கிருஷ்ணன், ப்ரஸன்னனானால், அவனின் பக்தர்களுக்கு எப்போதும் ப்ரஸன்னமான உக்திகளே (வாக்குகளே) கிடைக்கின்றன (இனிமையான வாக்குகளே அவர்கள் பேசுகின்றனர்). || 11

***

**67. ராக : மாளவ ஸ்ரீ தாள : அட்ட**

**ஜயஜய ரங்ககெ ஜய தேவோத்துங்ககெ**
**ஜய யதுபுங்கவகெ ஜய ஸ்ரீஸங்ககெ || ப**

**ஹொத்தி யதுகுல ஸார்து கோகுல மூத்ததாயிமொலெ மெத்த**
**பீர்த பகியனு பித்த மகடன உத்தடனிலன மர்த**
**முத்துவதனதி தோர்த புனவ ஸித்த கோரஸ கத்த**
**வர்த்திஸித பலபத்ரனொடனெ அல்லித்த நித்ய ப்ரவ்ருத்த || 1**

**கோபியமோதெகெ கோபனந்தகெ மஹாபரமலீலெ தோர்ப**
**கோபஜனரிகெ கோபிகெயரிகெ ஸ்ரீபதி ஸகனு அப்ப**
**மாபதலி தருரூபராத தனதபுத்ரர உத்தரிப**
**ஸுபவித்ர ரோமகூபதி வ்ருக்ஷசமூபவம் பெத்தாதிப || 2**

**வ்ருந்தாவனதலி நந்தராஜன பந்துகள ஸஹ நிந்த**
**சந்ததலி வத்ஸவ்ருந்த காயித பந்த வத்ஸபககொந்த**
**மந்த தேனுகன சிந்திஸித ஸகரிந்த தாள்பண்ணு திந்த**
**அந்ததலி கோவர் தந்த பர்ஹபூகளிந்த பூஜிதகந்த || 3**

ஸ்ரீஶ நரனடவேஷ கோகணபோஷகானந்தகோஶ
ஆஶீவிஷனதிக்லேஶபடிஸி ஸந்தோஷவித்த கதாயஸ
வஶனாததந்ததி யோஷிஜ்ஜனர மோஹிஸி காமஜ்ஜனரனாஶ
க்ராஸமாடி ஹுதாஶனன கோபகோஸமூஹ ரக்ஷகேஶ ||4

லண்ட ப்ரலம்பன தண்டிஸிதபுர மண்டலேட்ய யதுஶௌண்ட
ஹிண்டு கோவர்ஸஹ உண்டு யாஜிகள ஹெண்டிரனு தண்ட தண்ட
சண்டிகார்சக மிண்டெர் வஸனெத்திகொண்டு மரவேர்த புண்ட
கண்டலன மத கண்டிஸித கிரிசண்டு மாடித ப்ரசண்ட || 5

இந்திரேஶ ஸுதாஸந்த்ர வேணுஸ்வனதிந்த கோவேரெல்லர தந்த
சந்த்ரனுதயதி சந்த்ரமுகியரு கந்தர்ப்பன ஶரதிந்த
நொந்து மோஹிஸலந்து ராஸக்ரீடெ ஹொந்திஸித பூர்ணானந்த
எந்திகெந்திகெ ஹொந்த ஸ்ம்ருஹ ஸ்ரீமுகுந்த ஸச்சிதானந்த || 6

தந்தெயனு நுங்கபந்த ஜகரகெ நந்தவித்த கோவிந்த
சந்த்ரிகெயொளு மதாந்த ஶங்கசூட இந்துமுகியரொய்பந்த
அந்தவ ஸீளி மந்தரமனெர சந்தத வேணுகீதெயிந்த
நந்திஸித சிதானந்த கேஶிவ்யோமர் சிந்திஸித ஸுகஸாந்த்ர || 7

நாரதேட்யனக்ரூர மததலி தேரனேரி மதுரா
புரகைதித தீர தாம மனோஹர த்ரிவக்ரோத்தார
கோர தனுஷவிதார கஜசாணூரமல்லஸம்ஹார
க்ரூர கம்ஸகுதார வஸுடஹபாரஹர யதுவீர ||8

ஹெத்தவர ஆபத்துஹர தன்ன முத்தனிகெ பதவித்த
மத்தெ யாதவ மொத்தகதிஸுகதாத கனஸமர்த்த
இத்த நந்தன ஹட்டிகட்டித உத்தமோத்தவகர்த
பார்த்த குஶலகெ ஹஸ்தினகரகெ அத்தக்ரூரகாஜ்ஞெயனித்த || 9

க்ரூரயவனஸம்ஹார முசுகுந்தோத்தார த்வாரகமந்திர
தாருணிய ந்ருபவீரனு கெத்து பூரித்ரவ்யாபஹார
நாரக முராதி சோரர படித்ஹொந்தகாரி நிஜர்குபகாரி
மேரித்வ்யஷ்ட ஸாஸிர நூரெண்டு நாரேரோள்த கம்பீர || 10

பாரிஜாத ஸத்யாரமணிகித்து பூரினேத்ரமதஹர
கோர ந்ருகபாபஹார ஸ்யமந்தமக்ரூரகித்த உதார
ஹாருவரிகெ குமாரரனு கொட்ட காருணிக ஸுகஸார
வாரிஜோத்பவ கௌரவரஹர மாராத்யகிளாதார || 11

தந்தவக்ர பௌண்ட்ரகாந்தக களத்வாந்த பானு ப்ரகாஶாந்த
குந்திபுத்ரரத்யந்த ஸம்ரக்ஷகசிந்த்ய ஶக்த்யானந்த
காந்த ராஜஸூயாந்தபூஜ்ய ஸ்வதந்த்ர மோக்ஷ ஸுபந்த
ப்ராந்த சைத்ய நிக்ருந்த ஸந்ததகாந்த விஶ்வனியந்த || 12

**ஹீனகௌரவ க்ஷீணகாரண க்ஷோணிபாரக்ன ப்ரவீண**
**ஜ்ஞானானந்த பலான்யூன அனாத்யஸமானவர்த்தித தீன**
**மௌனிஜனப்ரிய த்யானப்ரிய ஸத்கானப்ரிய பூரண**
**தேனுகிரிபதி வேணுகோப ப்ரஸன்ன வெங்கட காரண || 13**

ரங்கனுக்கு, தேவோத்துங்கனுக்கு வெற்றி உண்டாகட்டும். யுது குலத்தில் வந்தவனுக்கு, ஸ்ரீலக்ஷ்மி தேவியுடனேயே இருப்பவனுக்கு வெற்றி உண்டாகட்டும். || ப

யது குலத்தில் பிறந்து, கோகுலத்தை அடைந்து, தன்னுடைய தாயின் முலையில் பால் குடித்து, பகாசுரன், ஶகடாசுரன், த்ருணாவர்த்தன் ஆகியோரைக் கொன்று லீலைகளை புரிந்தான். எப்போதும் புன்னகை பூத்த முகத்துடன் இருந்தான். மக்களின் மனதினை கவர்ந்தான். அனைவரின் வீட்டிலும் சென்று பால், வெண்ணைகளை திருடினான். பலராமன் மற்றும் தோழர்களுடன் திரிந்தான். ||1

கோபி யசோதைக்கு, கோப நந்தனுக்கு, தன்னுடைய அபாரமான மஹா லீலையை காட்டுகிறான். கோபர்களுக்கு, கோபிகையர்களுக்கு நம் ஸ்ரீபதியானவன், நண்பனாக இருக்கிறான். சாபத்தினால் மரமாக நின்றிருந்த, குபேரனின் மக்களை அந்த சாபத்திலிருந்து விமோசனம் அளித்தான். தன்னுடைய பவித்ரமான ரோம கூபத்தினால் மரங்களின் கூட்டத்தையே பெறக்கூடியவன் இவன் (ஸ்ரீஹரியின் அனந்த, விஸ்வரூபங்கள் இவற்றை குறிக்கின்றன). || 2

ஸ்ரீகிருஷ்ணன், வ்ருந்தாவனத்தில் நந்தராஜனின் உறவினர்களுடன் கூடி இருந்தான். மிகவும் மகிழ்ச்சியுடன் பசுக்களை, கன்றுகளை காத்து வந்தான். அப்போது, ஒரு வத்ஸத்தின் உருவத்தில் வந்த வத்ஸாஸுரனைக் கொன்றான். பின்னர் அங்கு வந்த தேனுகாஸுரனைக் கொன்றான். பின் அந்த தால்வ வனத்தில் இருந்த பழங்களை நண்பர்களுடன் கூடி தின்றான். கோபாலகர்கள் கொண்டு வந்த இலைக்கொத்து, பூ, சந்தனம் ஆகியவற்றால் ஸ்ரீகிருஷ்ணன் அவர்கள் அளித்த பூஜையினை ஏற்றுக் கொண்டான். || 3

ஸ்ரீஶன், நரனாக வேடம் போட்டு வந்திருக்கிறான். கோ கணங்களை காக்கிறான். ஆனந்தமயன். காளிங்க பாம்பினால் வந்த விஷம் என்னும் துன்பத்தை போக்கி, அனைவருக்கும் மகிழ்ச்சியை அளித்தான். தான் கோபிகையர்களுகு வசம் ஆனதைப் போல நாடகம் ஆடி, அவர்களுக்கு மோஹத்தை அளித்து, பின் அவர்களுக்கு வந்த காம ஜ்வரத்தை நாசம் செய்தான். காட்டுத்தீயினை நாசம் செய்து, பசுக்கள், கோபாலகர்களை காத்தான். || 4

இடையனாக வந்த ப்ரலம்பாஸுரனைக் கொன்றான். யது குலத்தின் தலைவன். கோபாலகர்களின் குழுவுடன் உண்டான். தன்னை வணங்கிய பெண்கள் கூட்டத்தினை காத்தான். நதியில் குளித்த பெண்களின் ஆடைகளை எடுத்துக் கொண்டு இவன் மரத்தில் ஏறினான். இந்திரனின் கர்வத்தை அழித்தான். கோவர்த்தன மலையை குடையாக தூக்கிப் பிடித்தான். || 5

இந்திரேஶன், அனைவருக்கும் அமிர்தத்தை வழங்குபவன். தன்னுடைய குழல் இசையால் கோபாலகர்கள் அனைவரையும் ஈர்த்தவன். சந்த்ரன் உதயம் ஆகும் காலத்தில், சந்த்ரமுகியர்கள், காமனின் அம்பினால் வசப்பட்டு, நொந்து, ஸ்ரீகிருஷ்ணனை மோஹித்தபோது, அவன் அவர்களுடன் ராஸக்ரீடை ஆடினான். பூர்ணானந்தன். எதன் மேலும் விருப்பம் இல்லாதவன். ஸ்ரீமுகுந்தன். ஸச்சிதானந்தன். || 6

தன் தந்தையான நந்தகோபனை விழுங்க வந்த பாம்பிற்கு, கோவிந்தன், ஒரு புதிய தேகத்தைக் கொடுத்தான். கர்வம் கொண்ட ஶங்கசூட என்னும் திருடன், இரவு நேரத்தில், சந்த்ரமுகியர்களை கடத்திச் சென்றான். அவனுடைய தலையைப் பிடித்து அவனைக் கொன்றான். மெதுவாக நடந்து செல்லும் பெண்களை, தன்னுடைய வேணுகீதையினால் மகிழ்ச்சி அளித்தான். சிதானந்தன். கேஶி மற்றும் வ்யோம என்னும் அஸுரர்களை கொன்றான். சுகங்களின் கடல் அவனே. || 7

நாரதரால் வணங்கப்படுபவன். அக்ரூரர் கூறியபடி, தேரில் ஏறி மதுரா புரத்தினை அடைந்தான் வீரன். மஹோஹரன். த்ரிவக்ரையை உத்தாரம் செய்தான். பெரியதான தனுஸ்ஸினை உடைத்தான். குவலயாபீட யானையை ஸம்ஹாரம் செய்தான். சாணூர மல்லர்களை கொன்றான். க்ரூரனான கம்ஸனைக் கொன்றான். பூமியின் பாரத்தை குறைத்தான். யது குலத்தின் வீரன். ||8

தன்னைப் பெற்றவர்களுக்கு வந்த ஆபத்துகளை பரிஹாரம் செய்தான். தன்னுடைய தாத்தாவான உக்ரஸேனனுக்கு அரச பதவியை கொடுத்தான். யாதவ குலத்திற்கு மிகப்பெரிய மகிழ்ச்சியைக் கொடுத்தான். அபாரமான ஸமர்த்தன். இங்கு நந்தகோபனுக்கு நலன்களை அளித்தான். உத்தவனுக்கு உதவி செய்தான். பார்த்தனை ஹஸ்தினாபுரத்திற்கு அனுப்பினான். அங்கு அக்ரூரருக்கு தக்கதான ஆணைகளை பிறப்பித்தான். || 9

க்ரூரனான யவனனை ஸம்ஹாரம் செய்தான். முசுகுந்தனை உத்தாரம் செய்தான். த்வாரகையில் வசித்தான். பூதேவியின் மகனான நரகாஸுரனை வென்று, அவனிடமிருந்த த்ரவ்யங்களை கவர்ந்தான். முர முதலான அஸுரர்களைக் கொன்றான். பக்தர்களுக்கு உதவி செய்பவன். 16,108க்கும் அதிகமான பெண்களை திருமணம் செய்த கம்பீரன். || 10

தன் மனைவியான ஸத்யபாமைக்கு பாரிஜாத மரத்தினை அளித்தான். கருணை கொண்ட கண்களைக் கொண்டவன். கர்வத்தை அழிப்பவன். கோரமான பாவங்களை அழிப்பவன். ஸ்யமந்தக மணியை அக்ரூரருக்கு அளித்த உதாரன். அந்தணருக்கு/ ப்ராஹ்மணருக்கு அவரது மகனைக் கொடுத்தான். கருணாளு. சுகங்களின் கடல். பத்மனாபன். கௌரவர்களைக் கொன்றவன். மன்மதனே முதலான அனைவருக்கும் ஆதாரன். || 11

தந்தவக்ர, பௌண்ட்ரக வாஸுதேவன் ஆகியோரை கொன்றான். அஸுரர்களைக் கொல்பவன். கோடி சூரியர்களின் ஒளியைக் கொண்டவன். குந்தி புத்ரர்களை (பாண்டவர்களை) காப்பவன். எண்ண முடியாத அபாரமான சக்தியைக் கொண்டவன். தலைவன். ராஜஸூய யாகத்தில் பூஜிக்கப்பட்டவன். ஸ்வதந்த்ரன். மோக்ஷத்தை அளிப்பவன். ப்ராந்தனான சைத்யனைக் (ஶிஶுபாலனை) கொன்றவன். எப்போதும் புலன்களை அடக்கியவன். உலகத்தை நியந்த்ரணம் செய்பவன். || 12

ஹீனர்களான கௌரவர்களின் அழிவிற்குக் காரணமானவன். பூமியின் பாரத்தைக் குறைத்தவன். ஸர்வஜ்ஞன். ஜ்ஞான, ஆனந்த, வலிமை இவற்றில் குறைவு இல்லாதவன் (முழுமையானவன்). அனாதி காலத்திலிருந்து சமானர் (சமம்) என யாரும் இல்லாதவன். பக்தர்களான முனிவர்களுக்கு ப்ரியன். த்யான ப்ரியன். இனிமையான கானப்ரியன். பூரணன். கோவர்த்தன கிரியின் தலைவன். வேணுகோபாலன். ப்ரஸன்ன வெங்கடன். அனைத்திற்கும் இவனே காரணன். || 13

**இதி ஶ்ரீ ப்ரஸன்ன வெங்கட தாஸர**
**பாகவத தஶம ஸ்கந்த பூர்வார்த்த ஸமாப்தி ||**

**ஶ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து**

***